உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தசூளாமணி

மூலமுமுரையும்.

இம்மூலம்,
உத்தரமீமாஞ்சையிலுள்ள பிரமகாண்டத்திற்கு
வியாசபகவானாற்செய்யப்பட்ட சூத்திரத்தின்வ
டமொழியின்பொருட்படி தென்மொழியினால்
துறைமங்கலம்-
சிவப்பிரகாசசுவாமிகளருளிச்செய்தது.

இவ்வுரை,
இராமநாதபுரம் - ம-ள-ள-ஸ்ரீ
முத்துவிஜயரகுநாதசேதுபதி
மகாராஜவின்கோரிக்கையின்படி.
திருத்துருத்தியின் கண்ணெழுந்தருளி விளங்கிய
ஸ்ரீ-அகிலாண்டகோடிபிர்ம்மாண்டநாயகராகிய
இந்த்பீடங்கரபாத்திரசுவாமிகளாதீனத்திற்குரிய
திருநாகை-அருணாசலசுவாமிகள்மாணாக்கராகிய
பிறைசை
அருணாசலசுவாமிகள்
அருளிச்செய்தது.

இவை-
ஷை - சுவாமிகள்மாணாக்கராகிய
பாரிப்பாக்கம்
முனியப்பமுதலியாரது
மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன,
துர்மதி ஹூ தனுர்மீ.

இதன்விலை ரூ-௩.

1861.

Registered Copy Right.

# பிரசித்தபத்திரிகை

இந்நூலுரை நிறைமேவுறும்படி தன் சுதந்திர செலவில் செய்வித்து அச்சியற்றித்தன்பேரால் - ரிஜிஸ்டர் பெற்றிருக்கும் இராமநாதபுரம் - ம-ள-ள-ஸ்ரீ - முத்துவிஜயரகுநாதசேதுபதி - மகாராஜாவினது புத்தகங்களை வாங்கவேண்டிய விருப்பமுள்ளவர்கள் அவர்களன்பாக நேமித்திருக்கின்ற சென்னபட்டணத்தைச் சேர்ந்த சூளையில் - அவதானம் - பாப்லையர் வீதியிலிருக்கும் - மெய்ஞ்ஞானவிளக்க அச்சுக்கூடம் ம-ள-ள - பாரிப்பாக்கம் - முனிசப்பமுதலியாரிடத்தும், புதுவையில் - வெள்ளைமுத்துமுதலியார்குமாரர் - ம-ள-ள - பொன்னியா முதலியாரிடத்தும், வளவனூரில் - ம-ள-ள - கிருஷ்ணப்ப செட்டியாரிடத்தும், தரங்கம்பாடியைச்சேர்ந்த - ஒழுகமங்கலம் - ஈச்சங்காட்டுத்தெருவில் - பிள்ளையார் கோவிலுக்கடுத்தவீட்டிலிருக்கும் - ம-ள-ள - சாந்தலிங்கமுதலியாரிடத்தும், முகதாவிலாவது, தபால் மார்க்கமாயாவது பெற்றுக் கொள்ளலாம் - தபால் சிலவு - புத்தகம்வாங்குகிறவர்களொத்துக்கொள்ளவேண்டும்.

உ

சிவமயம்.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

## நேரிசையாசிரியப்பா.

இஃது.

இந்நூலுரையாசிரியர் மாணாக்கராகிய

பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியாரியற்றியது.

மணிவளருததிசூழ் மாநிலமதனி - லணிபெறவிளங்குநல் லான்மகோடிகடம் - முருவினைமறந்தறி யாமையோருரு வாய் - மருளினிற்சுழன் றுவருந்திடுங்காலையிற் - றன்னைமற வாத்தன்மை யான்மாயையின் - மன்னியோனருளான் மகி ழ்வுடனூக்கிக் - காலமாதியதத் துவங்களு மிலகு - ஞாலமா ர்புவனபோகமு நல்கித் - தனுகரணங் களுந் தந்தனுபவிக் கு - மினைப்பகுத் ததனு விதந்தனை யுணர்வித் - துன்னும் போதநீ திறசுகத்திக்க - நன்னூ றுமதனைவிவுறுமவத்தை- நீக்குவான்கருதி நெறியுணர்ந்துய்ய - வாக்கமாய்முனமேயு ளதாமோத்திற் - சிலவெடுத்திருக்கா தியபதிநான்கா - நில விடவைத்த நிமலமாய்வித்தையுட் - சிறந்த மீமாஞ்சையுட் செப்புமுத்தரத்தி - னுறைந்திடும்பிரமகாண்டத்து ளோது ம் - பொருளதுவிளங்கப்புத்தேள்வியாத - னருளொடு சூ த்திர ரூபமாயமைப்ப - விளங்குறுஞ்சாமவேதத்துச் சியி ற் - றுளங்குமாவாக்கியத் தாய்மையினமைந்த - பிரம கூட த்தரின் பேதந்தினமெய் - யுரமேதயுண்மையென்றோர்த் துலகுய்யச் - சங்கராசாரியசாமிதன்னருளாற் - றங்கமா நு வலுமத்துவிதபாடியமே - யுண்மைப்பொருளென வுணர் வுடையோர்க - ளெண்ணுறா மீஃதை யாவருந லுகக் - கரு திறுரியமொழி கற்றுவல்லவர்க்கே - புரியதாமேனையோர்க் குரியதன்முதலிற் - சிவப்பிரகாச தேசிகன்மகிழ்ந்தே - இ

லத்தினுக்கார்வமாந் தென்மொழியதனி - லுணர்த்தவேதாந்
தருணாமணியெனுங்கவிக் - குணாவிரித்துலகோ ருய்யத்தரு
மெனுஞ் - சுப்பிரமணியனுந் தொல்கடன்மூழ்கி - யற்புத
மாத்திரா விடவமுதனைத்தும் - வாரிவழங்கிய மாமுனியு
றையுங் - காருலாம்பொதியைக் கணமளாவிய - சிகரத்தினி
னின்றுஞ் சீருலவுப்பப் - பரந்திழிந்தானதி பாரினிற்போ
த்த - சந்தனமாதியதருக்களின்குழுவுஞ் - சுந்தரமாதவம
ணிகளுந்தொடரத் - தலைகளைநோக்கிச் சார்ந்திடுமவையைகு
ழ் - நிலமகடிலகமாய் நிலவிடுங்கன்னி - நாட்டிற்சிறந்த மெ
ன்னநற்சைதமாநகரிற் - பாட்டிற் புகழ்தருபல்வளம் பெருகு
ம் - பூதியன்றெருவின் மேவுதனஞ்செனத் - தாவிலன்னு
பூவணக் கூடமுத்தமனிடஞ் - சேர்த்துவன்பூவினைப் பார்த்
துத்திருத்தி - நீர்த்தடையின்றிப் பூர்த்தியாய்ப் பாட்சிச-
ய்சந்தெனுமிக்குவின் கன்னல் சீர்க்கமூகாய் - மன்னியக
மூகுநற்றென்னை நற்றருவெனச் - செல்லுறு சோலையுமி
ல்லுறைவோனாயு - நல்லுறவைக்கொடு புல்லுறவைத்தவிர்-
த்தவிபுநல்குர வுதுபவர்யானாயு - மறத்துடன்வளர்க்குஞ்
சிறப்பினம் மறவர்கோன் - முத்துச்சாமி வேளுந்தமதவத்
திற் - சித்தியாதான்முகன் புத்தியினுதித்த - செய்யாமுனி
வரினையாச்சாமிமால் - வையகப்புகழுங் கடம்பவனத்திர
ன் - வடிவேன்முத்துவயிரவக்குரிசின் - மூடியெனவந்தோ
ர்க்கடியெனுமிளவல் - தேவுலகத்திற்சிறுடாஅ - பூவுலகத்
திற்பொற்புறவிளங்கு - மேருவின்றென்பால் விளங்கு நன்
னதிகளிற் - சிருபாகங்கையிற் சிறந்தவிற்கோடியு - மத்தி
சைதனி லுள்ளநற்றலங்களின் - முத்தித்தலம் வாராணசிந
னின்முதிர் - முராரியர்ச்சித்துமுற்பவந்தொலைத்த - விரா
மீச்சுரமெனுமிருஞ் சிவதலமும் - பாங்காக்கும் பண்பினு
யர்ந்த - சேதுபதியெனுஞ் சீர்த்திசையுடையோன் - மன்ன
ஞ்செய்தான்கருதிமான்முதலமரர் - கனைப்பரவரவக்கயிலை
நாமுமதா - சமஞ்செயக்கதமுனிதனித்துவீற்றிருக்கு - நி
மலனு[illegible]ளிசைத்திலெனநிற்கும் - புதுமலர்வாசப்பொதிய
மால்வலையோன் - ஐந்தமலர்க்குருந்தினற் றுபனவருனா-
மதுரவாரியின்வாய் மடுத்தருள்பொழிய - முதியமாணிக்க

வாசகன்றுயர்முனிய - வருகுமெய்யன்பிற்கொளித்த மாந
தியைப் - பெருகவிடுக்கப்படிமிசைபெருகி - யன்பிற்றே
கமாதியகலாக்க - வின்புருவாய்வருமியல்பெனமுத்தின் -
குழுவையுந்துப்பின் கொடியையு மீர்த்து - வழுவறச்செல்
லும்வையைமாநதியோன் - பனையொடுமலயத்துவசனேற்
றுல்வருந் - தனையளங்கயற்கணி தணிமுடிகவித்துப் - பூ
வேந்தனைவரும்போற் றரியணைமிசைத் - தேவேந்தாகித்திக
ழ்வதைவாரேரூர் - செற்றெழுங்கன்னலுமரம்பையுந்தெங்
கு - மன்றுசோபானமாய்வந்தடிபணியும் - பைந்தமிழ்வி
ளங்கும் பாண்டிநன்னாடன் - மைந்துறுமெய்யிது மாசுண
முடிமேற் - றங்கு நீரகழுந்தனித்தனிசூழத் - திங்கள்வந்து
லவுந்த சேணுயர்மேடையின் - பளிக்கினாலமைந்த பலகணி
வாயி - னொளித்துநோக்கியமின்னொளிய முகபல - ரா
டவாரந்தமருக்கணுப் மலரக் - கூடியானந்தங்குளித்தகற் பி
ணர்வா - பூராவணைத்துயில்வோனருள்பெறுபதியா - மிரா
மநாதபுரமென்னு நகரோ - னறிவின்மையாமிருட்கதி வெ
லுங்கதிரோன் - செறிவுற்றனைத்தைச் செயித்துநிற்பதுபோ
ற் - பகைவர்வல்லமையைப் பாறிடத்துரத்துந் - தகையுள
ன்றனவத்தாம மாலிகையான் - மனமெனும் புரவியான்மா
யாபுரத்தைத் - தனிபனுய்த்தாண்டுஞ்சதி ரினைப்போலக்-
கருதலரரணைக்கடந்தனனகளை - மருவிடச்செய்யுமாதேசி
யுடையா - னனகமாமுணர்வையடைந்திடுநிமித்த - மூனம
கமெனவுளா மூன்றின்முதன்மையாம் - பரமாங்காரமாப்ப
கர்மதக்களிற்றி - னுரமுறப்பவப்பகை போட்டுரத்தலி-
னிகலவர்கலிகெடவெவ்வெத்திசையுந் - தகவுறநடாத்துந்த
ந்தாவளத்தான் - றன்னைத்தான்காண்பதுவேசத்தியம் - பின்
னமாக்காண்பதுபெட்டென்றெங்கு - மவனியோர்காணவே
தங்களதிர்த்தலி - னிவனேமன்னவ னென்பதுமெய்பென-
மூன்றிவிலென்று முழங்குமாமுரசோன் - மன்றில்வாழ்சிற்
றம்பலவ னென்மனமே - கோயிலாக்கொண்டான் கொடிய
காமங்கள் - வாயில்விட்டோடினவகையுலகறியக் - காவிதரீ
த்தகருத்தைக்காட்டலின் - பூவிற்காசுபொருந்தினனிவற்கு
வந்திறைகொடுத்து வளமைபெற்றிருக்கச் - சந்ததங்கூவுந்

தாளாண்மையினைக் - காணவாடுங்காவிக்கொடியோன் - பே
றுசத்தியபிரம பதம்பெறச் - சிவனைச்செலுத்துஞ் சிட்
டைசரட்சைகளாற் - பாவபுண்ணியவினைப் பற்றறவிளங்கு-
நடுநிலையாகநடிக்குமீசனைப்போற் - குடிமுழுதாளுங்கொ
ள்கையாலிவரிற் - றுட்டரைக்காய்ந்து சிட்டரைத்தாங்கை
யிற்-றட்டறக்காத்தாத்தானவைசாரா - மனுநெறியதலைவழா
து நடாத்துங் - கனமுறவுலகைக்காத்தசெங்கோலான் - சக்
கரவாளத்தன்மையாற்காக்கு - மிக்கசத்துவமதி வெண்கொ
ற்றக்குடையான் - கட்டுத்தவருக்கவரிபோன் மனுவின் - சு
ட்டத்தவருத்தன்மையானஃதின் - சிகழிகையாயிருபுறஞ் செ
ல்வியரிரட்டும் - புகழ்தருகவரிபுடைபொலிவுடையான்-மு
டியானடியேமுடியானதனாற் - படியீதெயவர்க்கும்பணியா
முடியான் - திரிபுண்டர நீற்றழகுந்திலகமும் - மருவிவிளங்
குமதிமுகநுதலான் - ஞாலமாருயிர்களியாவையு நயப்புற
ச் - சீலமார்தன்போற்றேர்கருணைக்கணன் - வச்சிரத்தோடு
மரகதத்தொங்கலு - மொச்சமதாயொளிரும்பலவணியுந் - த
வமெலாமுதிர்ந்தசற்குருமொழியே - நவநவமாகக்கேட்கு
நற்செவியான் - சதுமறைமுடிவின்றற்பரப்பொருளை - ம
னமாயடைந்துமெய் வழங்குநாவாக்கோன் - மணிமுத்தா
ரமு மகரகண்டிகையு - மணிபரமேசனருட் கண்ணாரமு - நா
தாதீதமாய்நவிற்றரும்பொருளை - நாதமாக்காண நவில்கண்ட
த்தா - னங்கதங்கடகமாழிகண்முதலாந் - துங்கமாநவமணி
குயின்றபல்லணியுமார் - மாயவனாவை மணமலைநாலுந்-
தாயமேருவினைத்துணை யெனுந்தோளான் - திருவுங்கவுத்து
வமுஞ்சேர்ந்துவிளங்கலி - னருளுமதாணியுமாரமாதிகளு - மி
ருபுறஞ்சாரா வேகமாமூர்த்தி - யொருபுறஞ்சாராவுளமுமா
முடையா - னுலகமனைத்தையு முதாரத்தில்வைத்து - நல்முற
க்காக்குநாரணன்றனைப்போற் - றனதரசிற்குட்சாருயிரனை
த்தையுங்-கனமுறக்காக்குங் கருப்பமுடையான் - கிட்டாள
னவருமாமுடன்றிகழவுந் - துட்டாடங்குனைத்தூரப்போ
கவு - மன்னவர்யாவரு மகிழ்ந்துதி சயிக்கவு - நன்னலமொ
லிக்குநற்கழலணிபடியா - னரசருக்குறிகுறி யாகுமாகத்தா-
னுரந்தனைக்காட்டாவொளி பெறும்பொறியா - னுக்கமழி

யாதருளொடும்விளங்க - ஆக்கமார்ந்திரசிசெல்லாளிர் பிரானைத்
தாஞ் - றனக்கொருசலனுஞ் சாராநெறியின் - கனத்தசிவச்
செயற்கருதிடுமனத்தான் - றன்மணிணிறைந்தசத்து வகுணை
த்தான் - மன்னரிக்வீமனை மதித்திடும்வலியா - னிதியிற்சங்
கம்பதுமந்தீள்வாரேனோர் - பதியிற்கற்பகபாதபங்காம - சே
னுவுஞ்சிந்தாமணி யினுஞ்சிறந்து - நானிலந்தன்னின் னா
னுசிரியன் - றன்னைக்கொடுத்தல்போற் றரும் பெருங்கொ
டையான் - பன்னிபவருளுமன்புப்பாச - வொழிவும் பிரம
த்துன்னமையுணர்தலும் - வழாதுநிறைந்தமன் னுணர்வுடை
யான் - சுருதிநடாத்துத்தொல்லதினைப்போன் - மிருதிந
டாத்தும் விருப்புளதீதியான் - சமயமனைத்துந்தற்பரன்ற
னையே - யமர்தரத்துதிக்குமன்பினின்றுலக - மனைத்துமகி
ழ்வுறவாதரிப்பதனுன் - மனத்துறத்துதிக்கு மன்னியபுகழா
ன் - ஸ்ரீமதிரணியகருப்பயாஜி - யெமரவிகுல முத்துவிஜய-
ரகுநாத ராமசாமிசேதுபதிக்கு - மிகுமுளோர்புகழுமிரா
ணிசேதுபதி - பருவதவர்த்தனிப் பங்கயாசனிக்குந் - திரு
வெனுப்புத்திரியாகுமிராணி - சேதுபதித்துரையிராஜநாச்
சியார் - காதலன்முத்து விஜயரகுநாத - சேதுபதித்துரைசி
ற்சுகமாமனு - பூவிளங்கப் புகன்றனனுக - சைபகிரியிற்
றங்கியதமிழ்முனி - செய்பகமண்டலத் திருந்தசெல்விகைய
முனிந் - தற்றிமுகக்கொடி சாய்க்கதிருருவாய்ச் - சந்தலஞ்
சங்கந்தரளத்தமனிய - மாதியவிசமலையொடுபாந்து - தீதி
யாஞ்செந்நென்முதலியபைங்கூழ் - பலமுதலாகிய சோலை
கள்படரப் - புலப்படக்காக்கும் பொன்னிநாடதனிற் - சந்
திராத்தகடுசாந்தந்தோய் - சித்திரமாகவின்மேடாய்ந்து
யர்மாளிகை - மலிதிருத்துருத்தி மாதகர்தனில்வா - ழிலகு
முத்தாவேதீச்சுரன்சந்நிதி - தன்னின்மறையவர்சதுமறை
யறைய - மன்னருமபெருமாபுடனோத - ருத்திரர்க்கப்
பொருடேய்மையாய்விளங்கப் - பார்த்திருந்தவர்க்கெலாம்ப
வப்பிணிபகலச் - சமயிகனெறியெலாந்தட்டழிந்திரிய - வ
மையும்வன்றுச்சிர மங்களகலத் - துவிதவிசிட்டாத்துவித
ம்விட்டோடத் - துவிதமின்றியபொருடேய்மையாய்க்காண
ச்-சங்கராசாரியசாமிகளமைத்த - துங்கமாரிற்றிரபீடத்தொ

ருமுதற்-கரபாத்திரனெனக்கானுஞ் சதாசிவப் - பிரமேந்
திரயோகி வரியர்பெருமான் - முத்தியுலகிற்கரசனாய் முடி
வில் - பத்தியுளோர்க்கருள்பண்பினனாகி - யரியாசனத்திரு
ந்தாக்கினைசக்கர - மரியாப்பிறவாமாண்புயிரொய்த - நடா
த்துநாளினாட்டும் பதத்தை - விடாதுபற்றும் விமலதத்தா
ச்ரய - சேதனர்க்கருளவச்செம்மல்செங்கமலபொற் - பாத
ர்க்கருளவப் பான்மைபோலுனைவாழ் - மறைபவாரசர்வசி
யர்குத்திராருக் - கறைதரும்பொருளெலாமாராய்த்ததனின்.
களங்கமனைத்தையுங்கரு வொடுகளைந்து - வளம்பெறநிறை
ந்தமாசிலாமணிபோற் - றிகழ்தருபிரமமேசேடமென் றுண
ர்த்தும்-புகழருணைசலப்புங்கவர்க்கருளத் - திங்கள்வந்துலவு
ஞ்சேணுயர்மாளிகை - தூங்கமார்துவசத்தோகைவிளிக்க-வ
ரம்பைகள்வரலிவ் வரண்பணைமாதர் - பரிந்துபசரித்துப்ப
ஸ்புடன்றிருவெண - வுலவுமேன்மேடையுமொளிர் மணிவி
ளக்கும் - பலமணித்தோரணம் பைந்தாரரம்பையும் - பூர
ணகும்பமும்புட்பமாலிகையுந்-தோரணதிராயிரத் துலங்
குமாவணமு- மாதியவளமலியமலிவாழ்பிறைசை - யூதியவு
யிர்கட்குளமகிழ்வெய்த- வெமக்கன்பாகியவித்துவநதியுஞ்-
சமப்படவிளங்குந் தன்மையானமக்குச் - சிரமெனத்தமனி
யத்திருமதில்சூழப் - பருப்பதமென்னப்பரந்தகோபுரமு
ஞ் - சூழுநற்காயிலேதொல்லை மாக்கயிலையின் - வாழுதற்
கிடமெனவளர் விசாலாட்சி - தன்னுடன்மகிழ்விசுவேசன்
றனமர் - பொன்னுறைபிறையாற்றின்வளர்புங்கவன் - றன
க்கவனருளத்தானனுபவிக்கத் - தினங்குருபரன்மொழிசிந்
தித்ததற்கோர் - சான்றுவிளங்குஞ்சதுமறைமுடிவை - யூன்
றிவிசாரித்தொளிர்மாவாக்கியத் - தருநீயாயினெனும் பத
ப்பொருளைக் - கருவுதலதனாற்கண்டகூடத்தன் - பிரமமாய
துவும்பேரானந்த- வுருவமாயாவுமுணர்ந்ததுவதுவா - யில
ங்குமனுபவத்தியற்கையுந்தழீஇப் - பலநூற்பொருளின்பா
ன்மையுந்தழீஇக்- குருவாக்கொருமொழிகொண்டதனிலத
ழீஇ - யருமையாத்தர்கண்மொழியனுபவமுந்தழீஇ - யனு
பவரத்தினாகரமெனுநாமம் - புனைந்தருளினன்முற புகலு
மாநகரி - னருளிறைநாமமமைந்த - பொருவருமருணசல
புங்கவனே.

உரைச்சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

## காஞ்சிபுரம் - இராமசாமிநாயகரியற்றியது.

திருவளர்கமலமருமலர்த்தாட்பட் - டபலமர்ந்தற நெறியி
யலுறநடாத்தி - மூச்சகங்காக்கு முழுமுடிமன்னர்கை - ம
ச்சவிரேகைகளை மாற்றுந்திருத்தகு - தண்டுறைவாவிசூழ்தரு
துறைமங்கலத் - தெண்டிசைபழிச்சவிறைகொளுந்தவத்தோ
ன் - பவப்பிணிப்புற்றுப்பரிதவித்துழலு - முயிர்கட்கிரங்
கியவ்வுண்மைப்பொருளின் - நிறமறைதெளிதிற்றெள்ளிதி
ற்றெளிக்கு-மல்லமதேவனைமலலீலை- தேர்ந்துணர்பொருட்
சித்தாந்தசிகாமணி - யாதியநூல்களலகில்வருளினோன்- ப
வப்பிரகாசப்பற்றறுத்திலகுஞ் - சிவப்பிரகாசதேசிகப்பெ
யரோன்-மறைப்பொருண்முழுதுந்திறப்படச்செறித்துட்-
பெருமைசேர்நாமம்பிறங்குவேதாந்த - சூடாமணியெனத்
தோற்றியோர்முழுநூ - லாடாப்புனைத்துநலமுறநல்கின-
னையதுமிகுதெருளாளர்க்கன்றி - மற்றையர்க் கெண்மை
யின்மதிதகவுணர்த - லொல்லாதாகலிற் றெக்கலோர் நூல்வ
ழிப் - புனைதபவொளிருமுனையொன்றியற்றி - யளித்திடு
கென்றெவணியிசைபூமடவார் - புனல்குடைந்தாடிவரும்கள
ரேக்கா-மென்னடைக்கஞ்சியபொன்சிறையெகினஞ் - செ
ந்திப்பாயுஞ்செயலினைப்பொருவ - வொளிவிரிகமலத்துக
ளவெரீஇ - வாட்டசட்ட கட்டிளவாளைகள் கொடிபோய்ப்-
பைந்தாற்றுக்கமுகின் பழுக்குலையுகுத்து - மின்மணிபெ
றுமவ்வெங்கதிர்ச்செல்வ - னிரதத்தார்த்தெழுமரகதமரு
ட்டி - மீண்டுறுந்தடநிரை மீண்டியபணைசூழ் - நலநிறையி
ராமநாதபுரத்திற் - கோதுபதிந்திடாச்சேதுபதிமரபில் -வ
ருபுகழ்ப்பொருப்பதவர்த்தனிநாச்சியா - ரெனும்பெயர்வள
ப்புரிதருந்திருமுத்துறழ் - அனராஜநாச்சியார் துணையெ
னவந்தோன் - பவக்கடலுவர்க்கடல்பரவாதருக்கிய - தவக்
கட்டுளைதிருச்சந்தமால்வரையா - னிணைதொறுமமணர்த
தெஞ்சுபறைகொட்ட - வனதிசைகொழிக்கும் வையையமர்
ந்தியா - னருமறைப்பொருள்விளையாடல்பயின்ற - பரவ
ருஞ்சிறப்பமைபாண்டிநன்னாட்டா - னமராவதித்துணைபரி
ததனலரிதெனச் - சமையுமென்னந்தைதத்தனிறைகருடையா.
னைத்தவித்தடங்கிய வாற்றல்சான்முனிவரர் - சொல்லின்வி
ளாத்அசெல்லுவாம்பரியான் - குலங்கெழுதிசைக்கயங்கூடி
யுருத்தெனை - விலங்குவெண்மருப்பினைமூபர்களிற்றுன்-
வருமாதுலர்க்குக்கையாவள்ளல்பா- லொருவரப்பாண்செ

ய்தூதுவண்டினங்கட் - கிருந்தேனளிக்கும்பெருந்தளவமா
லையா - ணுறுபருவத்துமகலாதார்த்து - வீறுமெழிலியுளதெ
னிறைருவா - ருயிணையெனவதிர்சேமமுமுரசா - ணொங்க
ணையாளியிசருந்தவர்ருதியெறுக் - கண்டேமனம்மொரு உங்
காவிப்பதாதையா - ணுவலந்தீவெனநற்பெயர்மருவி - மே
வுறுமிடனெலாமேவுறுமாணையா - ணிக்குடையோன்கவிகை
க்கிருங்கதிர்தரு - மக்கதிர்திகர்காவிக்குடையாளன் - கருதலர்
வணங்கிக்காய்ப்புறுதானான் - மருவளர்கமல மாதுறைமேதா
ளா - ணுண்மையுடையானும்பரானன்ன - வண்மையுடை
யான்மதன்றிகைத்தேங்கு - முருவுடையானிறை திருவுடை
யானுறு - பொறையுடையான்மிகுநிறையுடையானுயர் - வெ
ற்றியார்முத்துவிஜயரகுநாதன் - சொற்றனருகமுற்று நன்
காராய்ந் - தவதாரிகைமுதலாமுறுப்பமைத்துச் - சொல்வ
ளப்பொருள்வளஞ் சுவைவளமின்னன - பல்வளந்தழுவிப்
பயிலவருத்தன - னிலகுருநாமயிடமெனுமூன்று - மேவா
ப்பொருளவைமேவிவந்தென்ன - மூவாப்பொழில்சூழ்மு
துதிருத்துருத்தியில் - வந்துற்பவித்தவிந்திரபீடத் - தெந்
தையாங்கரபாத்திரன்மாபோங்க - வீண்டவதரித்தவாண்ட
கைதறுஞ்செந் - தாதிவரம்புயப்போதுதண்புனலிடை - வை
குதன்மங்கையர்வாண்முகமதனை - நேரமேவார் தாளினின்ற
ருந்தவம்புரி - தன்மைபாமென்னத்தழைதருபாசடைப் - ப
ன்மலர்த்துளைததடம்பலப்பலசலவிய - பிறைசைவாழ்வுவந்தபி
டுறுபெரியோ - னமலராமாயணமாதிய நூல்கட் - கமரரும்
வியப்பவரும்பொருள்விரித்தோன் - காயடைதின்றுமைந்
தியிடைதின்றும் - வாயுமறிந்தும்போய்முழைபுக்கும் - ப
ற்பலருந்தவம்பயின்றுமறிந்திடாச் - செம்பொருடன்னை
ச்செறியுளங்கையி - னகத்தாமலகமதாமெனவறிந்தோன் -
றுக்கமுஞ்சுகமுமொக்கநாடற்குச் - சான்றெனச்சந்திரனுந்
தழலினுமீரடி - வதிதரவைத்திவ்வையம்புரந்த - மதிமிகு
சனகமன்னவனென்ன - வில்லறந்தாங்கியிருந்துந்துறவெ
னும் - வல்லறந்தாங்கிபோர்வழுத்தவீற்றிருப்போன் - றன்
னடைத்தோரைத் தகப்பரிசித்தன் - மூன்றுதமேருக்கலென்
மூவகைத்திக்கையாற் - றவலருமலத்தையுந்தப் போதத்தை
யு - மவலமுறக்கெடுத்தனிலமுலவாத - விடத்துக் கறங்காவின
த்தமுந்தினாதீர் - நடத்துப்புனலுந்தகைபெறக்கோட்டிய -
சித்திரமும்விசைதீர்த்தபம்பரமு - மொத்திட[illegible]வட்போன்
மெய்த்தவர்விழையு - மருணசலதேசி[illegible]னை - வொருநாம
[illegible]

இஃது.

வாருதிபுரம் வேலுசுவாமிகளியற்றியது.

அருள்வடிவாயிலகுசிவப்பிரகாசதேசிகனருளிகன்மத், திரு
ள்வடிவநீங்கிமருள் வடிவிலுழலுயிர்களோவடிவ மெய்தத்,
தெருள்வடிவாய்ப்புகன்றருள் வேதாந்தசூளாமணிக்கின்னு
ரைசெய்தான்மெய்ப், பொருள்வடிவாம்பிறைசையருணா
லசற்குருராயன்புலவனாமே........ .. ......... .......*

இஃது.

சேலஞ்ஜில்லா சிவில்கோர்ட்டு-வக்கீல்.

ம-ள-ள - அப்பாசுவாமிபிள்ளையவர்களியற்றியது.

மூவடிவாய்முழுதுமாயல்லவாகு-முழுமுதலாஞ்சிவத்தியல்
புமுழுதுந்தேர்ந்திங், கோவடிவாஞ்சிவப்பிரகா சையன்
சொல்வே-தாந்தசூளாமணிக்கின் னுரைபுகன்றான், கோவடி
வாயெழுந்தருளியன்பர்க்கெல்லாங்-குலவுமொருநொடியி
லபரஞானமோனச், சேவடிவாய்த்திடவளிக்கும் பிறைசை
மேவுஞ் - செம்மலருணாசலதேசிகனெங்கோனே..........*

—————

இஃது.

இந்நூலுரையாசிரியர்மாணாக்கராகிய

கரூர்-சனைக்கு சச்சிதாநந்தப்பிள்ளையியற்றியது.

சந்தனவெற்புறைமுனிவன் றனைநிகருஞ்சிவப்பிரகா சைய
னேனுஞ், செந்தமிழ்வேதாந்தசூளாமணிக்கின் னுரைபுகன்
றான்சிறியனேனுட், பந்தமற வீட்டிமலர்ப் பதஞ்சூட்டி
யொருமொழிப்பாலூட்டியாண்ட, நந்தலில்சீர்க்குருபரன
ற்பிறைசையருணாசலமெய்ஞ்ஞானவேந்தே ..................*

இஃது.

இந்நூலுரையாசிரியர்மாணாக்கரும் ஆயுள்வேதபண்டி

தருமாகிய-செ-வெங்கடாசலமுதலியாரியற்றியது.

மட்டறுவிதழியிளமதிமௌலியோனென மதிக்குஞ் சிவ
ப்பிரகாச, வள்ளறிருவாய்விண்ட வேதாந்தசூளா மணிக்கு
நவநவமதாக, விட்டுரைச்சொன்னயம்பொருணயம்விளங்கி
ட விரித்துரைசெய்தச்சிவிட்டான், வினையோட்டியடியினை
யென் [illegible]கூட்டிமலவிருளை வீட்டியுயர் தொம்பதத்தின்,

மூட்டறுப்பற்சமற் றருளாதன்முடிவென்று முன்னருந்த
த்பதந்தன், முன்னிட்டானமா முதலென்றமைபெறுதன்
முதலியத்தங்கமாதல், சிட்டமுமுடிவென்று மாகமஞ்சரு
த்யுப நிடதமோவாக்கியத்தாற், றெருட்டியெய்த்கருள்செய்பி
றையாற்றினருணசல சிவாதித்தனன்புகூர்ந்தே... ....*

இஃது.

புரசை-முருகப்பவுபாத்தியாரியற்றியது

அருண்மலிதில்லைப் பொதுச்சுடரொளிர்வ தாந்தசூளாமணி
யதற்கோர், பொருண்மலியுரைசெய்தெழுதருமச்சிற் பொ
லிவுறப்பதித்தனன்புதிதா, யிருண்மலிமலமேபாய் மும்மூ
தலொன்றியியற் பிறையாற்றினின்றிலகுந், தெருண்மலிய
ருணசலனெனு ஞானதேசிகன் கருணையினுமால .........*

இஃது-தென்பயறு.

இராமசுவாமிநாயகரியற்றியது.

அருமைசேர்நான்காஞ்சாதனத்தோர்கட்கனைமத்தசிற் சுகந்த
ரும்வாழ்வின், மருவிடவியற்றும் வேதாந்தசூளாமணிக்கரு
ம்பதமநுபவமுந், தரவுரைபுனைந்தானிந்திர பீடத்தனிமா
பினிவருநாகைக், குருபரனன்புகொண்டெழிற்பிறைசை
த்திலவருணசலகுருவே................................*

இஃது.

வளவநல்லூர்குமாரபுரி

நீலம்-வீராசுவாமிப்பிள்ளையியற்றியது.

வெண்பா.

ஆசாபாசங்களைனத் துமறவே கெடுக்குந் ....................*
தேசார்சுகங்கொடுக்குந்-தென்பிறைசை-நேசனு........*
பூதியருணசலநற்புனிதனித்த நூலதனுக்...................*
கோதியமாதன்காருணை........................................*

இஃது.

விக்கிரபாண்டி

காளத்திசெட்டியாரியற்றியது.

நலந்திகழுங்க வின்றுறைமங்கலத்தின்மேவு ஞானசிவப்பிர
காசநாதனெங்கோ,னிலந்திகழவருமிருந்தசல்விஞானநிறை

வதிஞருணாசிமாஞ்சைதன்னைப், பொலந்திகழத்தமிழ்ப்பா
வார்புகன்றுனிந்தப்புதிதநூலரும்பொருளைப் புவியிலியா
ரும், வலந்திகழக்கொண்டுணரவுணாயிட்டானல் வளமலிதெ
ன்பிறைசையின்கண்வருமெங்கோனே ..................*

இஃது.

வளவநல்லூர்க்குமராபுரி

செங்காடு-இருசீணப்பசெட்டியாரியற்றியது.

திருமலியிந்திரபீடநன்மரபிற்றிகழ் காபாத்திரதேசிகன்ற
ன், மேதசருள்பெற்றநாகையின் மருவுந்தெளி [illegible]
ந்திரன்றன், றருமலிபுனைபேரருளினைப்பெற்ற தண்பொ
ழிற்சூழுநற்பிறைசை, தன்கணேறுமருணாசலசிவசொருபன்
றகுந்துறைமங்கலத்துறையும், ஏமலிவீரசைவமெய்ஞ்ஞா
ன வாழ்வருள்சிவப்பிரகாசன், வருந்தமிழ்மாஞ்சையுத்தரபா
கமருவதிவாஞ்சிந்தாமணிக்குக், காமலிநெல்லியங்கனிபோ
லக்கருதுலகுயிர்பரமுமையும், கானலின்னீராய்க்கண்டுலகுய்
யக்கணபொருளதைவிரித்தனனே ..................*

இஃது.

ஷையூர்

கஞ்சம்-சீனிவாசவுபாத்தியாயரியற்றியது.

உலகுபுகழ்துறைமங்கலத்தில்வரு மெய்ஞ்ஞான வுருவுகொ
ண்டினிதெழுந்த, வுபர்சிவப்பிரகாசதேசிகனுரைத்தவேதா
ந்தசூளாமணிக்கிங், கலகில்சொன் முடிபுபொருண் முடிபு
தம்மதநயவ மதிற்றோன்றவேவைத்தது, னரியபொருளில்
வுபண்டிதப்ரமாணுணர்த்தானந்தமருவிவாழ்க, விலகுமவ
தாரிகை பதப்பொருட் பதசாரமென்னனரியதாத்பரியமை
த், திலக்கணமொடநிவிசேடமதாகவருள் சுரந் தினிதனைல்
இனையருளினு, மலமலிசெய்மலர்வாவிபூம்பொழில்சூலாவு
வளநன்னுபிறைசையின்மருவுமெய்ஞ், ஞானவருளேவடி
வமானவருணசலதேசிகருநாதனே ..................*

இஃது.

ஷையூர்-பொய்கைப்பாக்கம்-

அப்பாசுவாமியுபாத்தியாயரியற்றியது.

மலமறப்பேரருட்டரும்வேதாந்தசூளா மணியெனவேபொ

னிசிறந்தமாகினூற்கு, நலமுறுமெய்ஞ்ஞானியர் சுவானுபூ
திதன்னைவு மென்போலியருணசையற்றின்பட், பலமுறைவு
முறைவிரித்தனமரர்யாரும்பரவுமித்திராவிடமாபின்காத்த,
பொலமுறுநற் பிறைநசையின்கணருளார்ஞான போதவரு
ணாசலமெய்ப்புனிதன்மாதோ ..................... *

இஃது.

புதுவை-செந்தமிழ்ப்புலவர்

வெ-பொன்னியாரியற்றியது.

வேதவேதாந்தங் கடமைவிளக்கும் வியாதனெனவிமல ஞா
ன, போதமுலகடைத்துய்ய வுத்தரமீ மாஞ்சையி னென்ன
பொருளையோர்ந்தே, யேதமிலசீர்ச் சிவப்பிரகாசன் புகல்
சூளாமணியினிபல்கட்டோன்ற, வாதரவாற் பிறைநசையருணா
சலன்செய்யுரைக்கிணைவேறதையற்பாற்றே ......... *

இஃது.

வளவனூர்சின்னுதுசெட்டியார் - குமாரரும்

செங்காடு-கிருஷ்ணப்பசெட்டியார்-மாணாக்கருமாகிய

வீரபத்திரசெட்டியாரியற்றியது.

மன்புவியோரெளிதுணர்ந்துபவதீங்கிமெய்பதிவிக்மையமா
கேவல்ன, மின்புறுவேதாந்தசூளாமணியினுரை தெளியா
யெடுத்துரைத்தா, னின்மலமாம் பரப்பிரமவுருவொளிர்ப
படிவமெனதேர்ந்துவந்த, சொன்மறையோர் மகிழ்வளர்க்
கும் பிறைநசையருணாசலதேசிகத்தாயோனே ......... *

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

ஓம்.

சிவமயம்.

# வேதாந்தசூளாமணி

மூலமுமுரையும்.

சிவமெனத்துதிசெயப் ...........*
பவம்பொடிபடுமே ...........*

## தற்சிறப்புப்பாயிரம்.

### விநாயகஸ்துதி.

விருத்தம்.

நாதாந்தப்பேரொளியாய்நவையற்றோங்கு ...............*
நண்ணுபரிபூரணமாய்நடுவாய்நின்ற ...............*
போதாந்தம்பெற்றவருண்மதத்தைவீசும் ...............*
பொற்களிற்றினடிவழுத்திப்புலன்கடம்பின் ...............*
பேதாந்தமகற்றிநிரதிசயாநந்தப் ...............*
பேற்றியுலகடைந்துய்யப்பெருமையோங்கும் ...............*
வேதாந்தமரபினிலைவிளக்குமொண்வே ...............*
தாந்தசூளாமணியைவிரித்தல்செய்வாம். ...............*

இதுவுமது-வேறு.

மோனபூர்ணவாரியின்மூழ்குமெய்ஞ் ...............*
ஞானயோகியருள்ளமுந்தில்லையு ...............*
மானகூடபகத்தனைபதாம்புயத் ...............*
தேனையுண்டுளாசெப்புதுமொப்பவே ...............*

### சபாபதிதுதி-கட்டளைக்கலித்துறை.

திருவளர்தில்லைச்சிற்றம்பலமேவியசிற்சுடரை ...............*
மருவளராநந்தமஞ்சரிசூட்டிவணங்குதுமால் ...............*
கருவளர்துன்பங்கடக்கவேதாந்தசூளாமணிக்கட் ...............*
டெருள்வளரப்பொருள்பூரித்துலகுய்யச்செப்புதற்கே. ...............*

## இதுவுமது.

பொன்னம்பலவனங்கமுகங்கண்முகம்புண்டரிகப் ..... *
பொன்னம்பலவனமாயமைந்தானெனப்பொங்குதில்லைப்.*
பொன்னம்பலவனமோடுசடாடவிப்பொற்புமிகும் ......*
பொன்னம்பலவனென்றன்னுளமாயுறைபூரிப்பமினை......*

## அருளிறைவணக்கம்.

### விருத்தம்.

சத்தியவிந்திரபீடத்தலைமையாங்கரபாத்திரசத்தாமாத்திரை
வித்தகமூதினமாரியினிலருமழுக்கடமைவிடாதமோன ... *
சித்தருணைசிவோகம்பத்திருநாகைப்பதியுளெழு சிவக்குன்
றய, நித்தியவருணாசலதேசிகனையுளத்திருத்தியுணாதிறுத்து
வாமால் ........................................... *

## அவையடக்கம்.

வேதமுபநிடதமுதலாகவருதொன்னூலின்விளங்குஞான-*
ந்தமாபுணரவேதாந்தருளாமணிக்குதிலைநின்றோங்க .....*
வோதுமுலாநவமணியைக்குறவர்புனையிலுமெள்ளாதுலகி
ன்வேந்தர், சோதிமுடிக்கணிவதற்காசிப்பதுபோற் றொ
ல்லறிஞர்கொள்வாரால் ........................................*

திருச்சிற்றம்பலம்.

முற்றுப்பெற்றது.

உ

ஓம்.

சிவமயம்.

ஸ்ரீசற்குருவேநமா.

# வேதாந்தசூளாமணி.

## மூலமுமுரையும்.

## தற்சிறப்புப்பாயிரம்.

(அவதாரிகை.)

வடமொழியிலமைந்தாழ்ந்திலங்கிய மாட்சிமையானவேதங்களின்முடியினுள்ள மகாவாக்கியார்த்தங்களைவிசாரித் ததனாலான்மாக்களுக்குத்தன்னானந்தபோதம்வெளிப்படு நிமித்தம் பரிபூரணமேயோர்வடிவம்போலு மவதாரமாய்வேதார்த்தங்களைப்பூரியிட்டவியாசபகவானாலுத்தரமீமாஞ்சையினுள்ள பிரமகாண்டத்திலமைந்திருக்கின்றபரமான்மவயிக்கமானவத்துவிதஸ்வரூபத்தைச் சூத்திரரூபத்தினால் வெளியிடப்பட்டு மிங்ஙனம் வெளியிடப்பட்ட வஃதுங்கற்றுவல்ல பண்டிதர்க்கேயன்றி யேனையோர்க்கின்மையினக்கருணையேயோர் திருமேனிபோலுஞ் சங்கராசாரியஸ்வாமிகளென்னுமபிதானங்கொண்டெழுந்தருளிவிளங்கிய ஞுரவனாலச்சூத்திரார்த்தமெளிதிற்றோன்ற வருளிச்செய்தவத்துவிதபாஷியமு மதினருத்தம் வெளிப்படச்செய்த விவரணவியாக்கியானமுமாம் - இஃதுமத்தியபதஞ்செய்யு மாரியமுளோர்க்கேயன்றி - யங்ஙனங்கூடாத செந்தமிழுளோர்க்கின்மையி னவ்வருளேமானிடச்சட்டை சாத்திச்சிவப்பிரகாசஸ்வாமிகளென்னுநாமதேயத்தோடுமுதித் தப்பாஷியார்த்தந்தோன்றக் கூறிய விவேகசிந்தாமணியினபிப்பிராயமானவேதாந்தப் பரிச்சேதத்தினுள்ள வடமொழிகளைப் பெயர்த்துத்தென்மொழியிற்பாவினத்திற்றிருக்குத்திரிஸ்யமென்னு மிரண்டுவிவே

கமாகக்கூறத்தொடங்கிய வேதாந்தசூளாமணி யென்கின்ற விந்நூலினிதுமுடிதற் பொருட்டிதனந்தரங்கமானதிருக்குலஸ்வரூபத்தைவிநாயகமூர்த்தியாகத்துதிக்கின்றார்.

(கவி.)

தருணமாதுமைமுகத்தாமரைக்கெழு............ *
மருணனுமெனவுதித்தடியர்பாற்புரி...... ... ......*
கருணைமாமதமெனக்காட்டுமாமுகன்........ ... ...*
சரணவாரிசமலர்தலையிற்கொள்ளுவாம்...............*

(இதனதுபதப்பொருள்.)

தருணமாது - சிவத்தைவிட்டுநீங்காமற்சதாயுவதியாக, விளங்குகின்ற - உமை - பார்வதியினது - முகத்தாமரைக்கு - ஆநநமாம் போருகம் விகசிதமாதற்கு - எழும் - மரைமலர்தற்கெழாநின்ற - அருணனுமென - சூரியனுமென்றியம் பும்படி - உதித்து - உதயமாய் - அடியர்பாற்புரி - அடியார்களிடத்தில்வைக்கும் - கருணை - அருளேயே - மாமதமென - மாட்சிமையானமதமென்ன - காட்டும - காட்டாநின்ற - மாமுகன் - கஜாநநமுடையவிநாயகமூர்த்தியினது - சரணவாரிசமலர் - பாதாம்புயங்களை - தலையிற்கொள்ளுவாம் - எமதுசிரத்திலணிவாம் — என்றவாறு.

முகத்தைத்தாமரையாகவுருவகித்தலும் விநாயகனைச் சூரியனாகவுவமித்தலுமாம்.

சத்தி - சத்தனைத்தவிரவின்மையாற் சிவத்தையும் - சூரியனென்றமையால் - விகசிக்குந்தன்மையையுமரையையும் - தலையிற்கொள்ளுவாமென்றமையால் - ஊமதையும் வருவிக்கப்பட்டன.

(பதசாரம்.)

பிரமசுபாவமானசிற்சத்தியென்று மொருதன்மையாகவிளங்குகின்றதென்பார் - தருணமாதெனவும் - அச்சித்துப்பிரமப்பிரகாசமாய் விளங்குதற்காநநம்போதயமாயிற் றென்பார் - உமைமுகத்தாமரைக் கெழுமருணனுமெனவுதித் தெனவும் - தனதுஸ்வரூபமானவாநந்தசாகரத்திற்றதும் புங்கருணாமிர்தத்தையேயடியவர்க் கூட்டுவிக்கும்வழி வமுள்ளதென்பார் - அடியர்பாற் புரிகருணைமாமதமெனக்காட்டுமாமுகனெனவு

ம் - அவ்வாநந்தானுபவமறிவினிடத் தமைந்திருக்க வேண்டு மென்பார் - சரணவாரிசமலர்தலையிற் கொள்ளுவா மெனவுங் கூறினார்.

மாமுகனென்பது - நிர்த்தேசம் - சரணவாரிச மென்பது - வாழ்த்து - தலையிற்கொள்ளுவா மென்பது - வணக்கம் - எனவேயிம் மூன்றிலக்கணங்களையுடைய மங்களாசரணையா யிற்று - இவற்றைவட நூலார் மங்களாசரணையெனவுந் - தென்னூலார்கடவுள்வாழ்த்தெனவுங்கூறுவர் - இங்ஙனம்வணங்குதனூலாசிரியரியாவர்க்குமுரித்தென்பதைப் பலநூல்களாற்காண்க - சிவம் - சத்தி - கணேசனென்றதனாற் சச்சிதாநந்தஸ்வரூபமெனவனுபவமாயிற்று.

வினா. இந்நூலினவிப்பிராயமத்துவிதமாய்விளங்கத் - துவிதமாகத்துதித்ததென்னையெனின்.

விடை. துவிதமாகத்தோற்றிய ஜீவேஸ்வரர்களைக்காண்பித்ததினிறைந்திருக்குங்கூடஸ்தப்பிரமமாயிக்கமே யாத்மவஸ்துவெனக்கண் டவ்விரண்டையுநீக்கலே யத்துவிதமாதலாலென்க.

(இதனது-தாற்பரியம்.)

சச்சிதாநந்தசுபாவமானவாத்மஸ்வரூபத்தை விநாயகமூர்த்தியாகவுருவகித்ததனோடிரண்டறக்கலக்கு நட்டத்திரிகரணசுத்தியாகவணங்கினதாம். (௧)

# சிறப்புப்பாயிரம்

(அவதாரிகை.)

மூற்கடவுள்வணக்கங்கூறி மேற்சிறப்புப்பாயிரங் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளிற் சிவப்பிரகாசத்தாற் றுனியற்றிய நூலினதுபெயரு மதன்வரலாற்றையு முணர்த்துகின்றது.

(கலி.)

சீர்கொண்டவருமறையின் முடிமணியைத்தெய்வ... ...*
சிகாமணியையடியவர்தங் கண்மணியைமாயைப் ... *
பேர்கொண்டவிருளிரிக்குந்தினமணியைமுக்கட்... ......*
பெருமணியையகத்தினுக்கோர் விளக்காகவிருத்தி ... *

ஏர்கொண்டவிவேகசிந்தாமணியெனு நூலதனு...... ...*
ளெடுத்தியம்பும்வேதாந்தப் பரிச்சேதப்பொருளை... *
நேர்கொண்டதமிழ்விருத்த யாப்பதனாற்றெரிய...... ...*
நிகழ்த்துவன்வேதாந்தசூளாமணியென்றொன்றே ...... *

(இதனதுபதப்பொருள்.)

சீர்கொண்ட-புகழ்நிறைந்த- அருமறையின் - அறிதற்கரிய வேதங்களின் - முடிமணியை - சிரத்தின்விளங்குமிரத்தினத்தை - தெய்வசிகாமணியை - மூவர்முதலியதேவர்கட்குமுடியாக விளங்குமிரத்தினத்தை - அடியவர்தங்கண்மணியை- அடியார்களினகக்கண்மணியாக விளங்குமிரத்தினத்தை-மாயைப்பேர்கொண்டவிருள் - மாயையெனநாமந்தரித்தவஞ்ஞானாந்தகாரத்தை - இரிக்கும் - கெடுக்கும் - தினமணியை- ஞானசூரியனாகவிளங்குமிரத்தினத்தை - முக்கட்பெருமணியை - மூன்றுகண்களுடன் மாட்சிமையாகவிளங்குஞ்சிவரத்தினத்தை - அகத்தினுக்கு - எனதுளத்திற்கு - ஓர்விளக்காக விருத்தி - ஒப்பற்றதீபமாகவைத்து - ஏர்கொண்ட - மெய்யழகுவிளங்கிய - விவேகசிந்தாமணியெனும் - விவேகசிந்தாமணியென்கின்ற - நூலதனுள் - பலசருக்கங்களோடுங்கூடியநூலின்கண் - எடுத்தியம்பும் - சாரமாகவெடுத்துக்கூறும் - வேதாந்தப்பரிச்சேதப்பொருளை-வேதாந்தப்பரிச்சேதமென்னுஞ்சருக்கத்தினருத்தத்தை - நேர்கொண்ட - நுட்பமுள்ளமுறையாக - தமிழ் - தமிழ்மொழியின் - விருத்த யாப்பதனால் - விருத்தப்பாவினால் - தெரிய - யாவருக்குமெளிதின்விளங்க - வேதாந்தசூளாமணியென்றொன்று- வேதாந்தசூளாமணியென்றொருநாமந்தரித்து - நிகழ்த்துவன் - யானியம்புவன் — எ-று.

ஏகாரம் - ஈற்றசை - மணியென்றதுருவகம் - சூடாமணியென்னுமாரியமொழி - டகர - ளகர - வேற்றுமையின்றிச் - சூளாமணியெனவந்தது - சூடை - சிகை - எனவேசூடாமணி - சிகாமணியெனக்கொள்க - வேதாந்த சூளாமணியெனவேநான்கு வேதங்களின்முடியினுள்ள மகாவாக்கியத்தின்கண்விளங்கு மத்துவித சுயப்பிரகாச ஸ்வரூப மெனக்கொள்க - மாயையிருளென்றமையின்ஞானசூரியனையும்-தான்கிடத்துமணியென்றமையிற் சூரியனைமணியெனவும்- வருவிக்கப்பட்டன.

(பதசாரம்.)

பரமாத்மாயிக்கியவத்துவித ஸ்வரூபம் - வேதமுடியினுள்ள மகாவாக்கியத்திற்சொப்பிரகாசமாகவிளங்குகின்றதென்பார் - சீர்கொண்டவருமறையின் முடிமணியெனவும் - இஃதே தேவுக்கெல்லாமகாதேவாகிய சின்மாத்திரமாய் விளங்குகின்றதென்பார் - தெய்வ சிகாமணியெனவும் - இஃதெவ்விடத்தும் பூரணமாயிருந்து மடியார்களிடத்தில் விசேடமாகவிளங்குகின்றதென்பார் - அடியவர்தங்கண்மணியெனவும் - இஃதென்றுமறியாமையின்றியறிவாகவேவிளங்குகின்றதென்பார் - மாயைப்பேர்கொண்டவிருளிரிக்குந்தினமணி யெனவும் - இஃதே சச்சிதாநந்தாகாரமான சிவமாய்விளங்குகின்றதென்பார் - முக்கட்பெருமணியெனவும் - இவைகளென்றுந்தானாகவிளங்கியவாநந்தப்பிரகாசமென்பார் - அகத்தினுக்கோர்விளக்காகவிருத்தியெனவும் - இவ்வனுபவங்கரதலாமலகம்போலவிளங்குமகாவாக்கியார்த் தங்களை வெளிப்படையாகத்தெரிவிப்பேனென்பார் - வேதாந்தப்பரிச்சேதப் பொருளைத்தெரியநிகழ்த்துவனெனவுங்கூறினார்.

(இதற்குதாரணம்) சசிவர்ணபோதம் - மெய்ம்மையறிவல்லதமில்வேறறிவதெல்லாந் - தம்மையறியும்மறிவதேயறிவுதானே - என்பதிற்காண்க - (அருமறையின்முடிமணியென்றதற்குதாரணம்) (பகவற்கீதை.) உன்னுநான்மறை மால்வரையுச்சியின் - மன்னுமேகமுழக்கியவாக்கினைப் - பன்னுசீர்ப்பரமார்த்ததெரிசன - மென்னுநாமத்திதனையியம்புவாமெனவும் (இன்னும்) (சிதம்பரபுராணம்) ஆரணங்கள்முடிந்தபதத்தாநந்தவொளியெனவும் - (இன்னும்) மறைமுடியதனில் விளங்கிடுமொளியெனவும் (அருமறையின்சிரப்பொருளெனவும்) (இன்னும்பலநூல்களினுங்காண்க) தெய்வசிகாமணியென்றதற்குதாரணம்.) (ஞானவாசிட்டம்) தீவினையெலாமறுத்துமங்கலமெலாமுதவுந்தேவபூசை - யாவதெனக்கேட்டவும்மையருள்செய்வானிறைவந்தானியா தென்றேறிற் - கேவலமேயரியல்லவரனல்லப்பூதவுடல்கிடைத்ததல்ல - வோவுமனமன்றடியுமுடியுமிலாச் செயப்படாவுணர்வே தெய்வமெனவும் - (இன்னும்பலநூல்களினுங்காண்க) அடியவ

ர்தங்கள்மணியென்றதற்குதாரணம்) (ஞானவாசிட்டம்) மு ழுசத்தியுமாய்ப் பூரணமாயென்றுமுடிவறு பிரமமாவது தான் - பழுதின்ஞானிகடம்மனமலாதில்லைப் பரமமாமிதின்வி வாதில்லையெனவும்) மோகவதைப்பரணி) (அகமுளரிதனிலு தயமகிலவுயிரகமுளரியகமெனவும்) (திருவாசகம்) உடையா ளுன்றன்னடுவிருக்குமுடை யாணடுவுணீயிருத்தி - யடியே னடுவுளிருவீருமிருப்பதானாலெனவும்) இன்னும்பல நூல் களினுங்காண்க) மாயையிருளிரிக்குந் தினமணியென்ற தற்குதாரணம்) (ஞானவாசிட்டம்) மோகவர்ச்சனுபிக்கொடி முளைத்தெழுமூலஞ் - சோகமாசுணமிருந்த சாள்வதோர் சூழ - லாகமேமுதலியாவெனைக்காணுமஞ்ஞான - மேகமாகி யபராபரத்தோன்றிறலிறக்குமெனவும்.) இன்னும்பல நூல் களினுங்காண்க முக்கட்பெருமணியென்றதற்குதாரணம் (ஞானவாசிட்டம்) அயனொடுமால் சங்கரனுஞ்சதாசிவனுமி ந்திரனுமருக்கன்றானும் - வியனிலுபசாந்தராய் வேலையினி லுபாதியெலாம்விட்டுநீங்கிப் - பயனில்சகமென்கின்றபற்ற கன்று சின்மயமாம் பரமரூப - மூயர்விகற்பமிலா வறிவா யெங்குநிறைசிவமாகியொன்றாய்நிற்குமெனவும்) (முச்சுட ராகியொன்றாய்முடிந்ததோர் சோதிபாதமெனவும்) (இன் னும்பலநூல்களினுங்காண்க.

வி௫. சாட்சியானவெனதறிவைக்கொண்டறிவிக்கின்றேனெ ன்றது - சான்றுசாக்கிய ரகிதமானவவாங்மனோகோசர சுத்த சைதன்னியசுயம்பிர காசத்தைக்கொண்டறிவிப்பேனெ ன்றதென்னையெனின்.

விடை, உலகத்திலுள்ளவோர் பொருளைத் தெரிவிப்பதற்கு நட்சத்திரம் - சந்திரன் - அக்கினி - சூரியன் - இவைக ளொன்றுக்கொன்றுவிசேடமாயினு - மஃதுங்கண்ணொ ளியுங்கூடியொருமையால பிரகாசமெங்ஙன முண்மை யைத்தெரிவிக்குமோ - அங்ஙனங் கூடஸ்தப்பிரமாயிக் கியாத்துவித சொப்பிரகாசமேயுண்மையைத் தெரிவிக்கு மாதலினென்க

(இதனதாற்பரியம்)

இந்நூலுபக்கிரமத்திற்றானே வஸ்துநிச்சயமு மஃதேதா

னென்பதூந்தானேயாவு மென்பதுந்தோன்றக்குறிப்பாகவி க்கவியினாலறிவித்ததாம். (உ)

(அவதாரிகை.)

முற்கூறியவேதாந்தமிஃதெனத்தெரிவிப்பான் கருதியிருக் குமுதற் பதினான்குவித்தைகளி லொன்றான மீமாஞ்சையிற் பூருவ முத்தரமென்னுமங்கங்களுக்குச் சைமினிவியாசபக வானாற் சூத்திரரூபமாகக் கூறியகருமகாண்டந் தேவதாகா ண்டம் - பிரமகாண்டமென்றவைகட்குவியாக்கியானிவியாக் கியானங்களை மரபோடுகூறத்தொடங்கியிச்செய்யுளில் வேத முதலியவற்றினுமமூங் கன்மகாண்டப் பிரதிபாதிகளையுமு ணர்த்துகின்றது.

[கவி.]

வேதமொருநான்குமாறங்கமுநன்னியாய ......... *
மீமாஞ்சையொடுமிருதிபுராணமுமீரேழா ......... *
வோதலுறும்வித்தைகளாமிவற்றுண்மீமாஞ்சை ......... *
யுயர்ந்ததாமையந்நான்கத்தியாயமாயருத்த ......... *
பேதமுறவிருகூறுமவற்றுண்முதற்கூறே ......... *
பிறங்குமருட்சைமினிசூத்திரரூபமாகிப் ......... *
பேதுமீராறத்தியாயமாய்க்கருமப் ......... *
பொருளுணர்த்திப்பூருவமீமாஞ்சையெனப்படுமால் ...*

(இதனதுபதப்பொருள்.)

வேதமொருநான்கும் - நான்குவேதங்களும் - ஆறங்கமும் ஆறங்கங்களும் - நன்னியாயம் - நல்லநியாயமும் - மீமாஞ் சையொடு - மீமாஞ்சையுடன் - மிருதி - பத்தொன்பதுஸ் மிருதிகளும் - புராணமும்- பதினெண்புராணங்களுமென - ஈரேழா - பதினான்காக - ஓதலுறும்வித்தைகளாம் - சொல்ல ப்படும்வித்தைகளாகும் - இவற்றுள் - இவைகளுக்குள்ளே- மீமாஞ்சை - மீமாஞ்சையென்னும்வித்தையானது - உயர்ந் ததாய் - பொருளாண்மேம்பாடுள்ளதாய்- ஐந்நான்கத்தியாய மாய் - இருபதத்தியாயமாகி - அருத்தபேதமுற - பொருட் பேதமடைதலினால் - இருகூறும் - இரண்டுவிதமாகச்சொல் லப்படும் - அவற்றுள் - அவைகளுக்குள்ளே - முதற்கூறே-

முதற்பங்கே - பிறங்குமருள் - கிருபைவிளங்கிய-சைமினி-சைமினியிருஷிசெய்த - சூத்திர ரூபமாகிப்போதரும் - சூத்திரவடிவமாகிவருகின்ற - ஈராறத்தியாயமாய் - பன்னிரண்டத்தியாயமாய் - கருமப்பொருளுணர்த்தி - யாகமுதலியகருமார்த்தங்களைத் தெரிவித்து - பூருவமீமாஞ்சையெனப்படும் (லோகவேதாதிகரணமுதலானசகஸ்திர நியாயத்தையுடைய)- பூருவமீமாஞ்சையெனப்பெயர்கொள்ளும்—எ-று;

ஆல்- அசை - நான்குவேதங்களாவன-ஸ்வாயம்புவெனவு மீசுரராலுண்டானதெனவுஞ் சொல்லாநின்ற - இருக்கு- யசுர் - சாமம் - அதர்வணமென்பனவாம்-இவைகள் - விதிவாதம் அர்த்தவாதம் மந்திரவாதம் நாமதேயமென்கின்ற நான்குவிதமாய்ச் சமஸ்ததன்மங்களையும் போதிக்கும்.

இவற்றுள்-இராசாக்கினையைப்போலப் புருஷனை நிஷேதகன்மங்களைச்செய்யாமற் சற்கன்மமேசெய்ய விதிப்பதே விதிவாதமெனவும் - பட்டுக்களைப்போல வேதார்த்தத்தின் மகிமையைத்துதிப்பதே - அர்த்தவாதமெனவும் - ஆசிரியனைப்போலச் செய்யத்தக்கதிது வெனக்காண்பிப்பதே- மந்திரவாதமெனவும் - ஜெநநீஜெநகனைப்போல - யாகாதிகளுக்குப்பெயரிடுகிறதே நாமதேயமெனவுஞ் சொல்லும்- இந்நான்குங்கன்மகாண்டப்பிரதிபாதிகமாம்.

மேல் - ஸ்ரீ ருத்திரம் பிரசதாரண்ணியம் சுவேதாசுவதரம் கைவல்லியம் காலாக்கினி கடம்வல்லி காத்தியாயனம்பிரமம் நாராடணம் அங்கிசம் பரமாங்கிசம் பாஸ்கரம் பிரமபிந்து ஆருணி அமிர்தபிந்து பருவபஞ்சம் பிரமசாபாலம் தேசோபிந்து - வாரஸ்பாநீயம் போதாயநீயம் ஆஸ்வலாயநீயம் சாங்கியாயநீயம் வாஸ்ராயநீயம் சௌனகியம் சிவசங்கற்பம் சிரவணம் புராரகம் கிம்புரோடிபம் மாண்டூகம் முண்டிரம் மௌண்டிரம் தைத்திரியமெனச் சொல்லுமிம்முப்பத்திரண்டுபநிஷித்துக்களும் ஞானங்கமான பஸ்மவுருத்திராக்ஷாதிகளும் -ஞான காண்டப் பிரதிபாதிகமாம்.

உபவேதங்களாவன - ஆயுர்வேதம் அர்த்தவேதம் தனுர்வேதம் காந்தர்வ வேதமென நான்காம் - இவற்றுள் -வியாதிநிதானமும் வியாதிச்சின்னமு மறிந்து மந்திராவுஷதாதியானசிகிச்சையினலாயுராரோக்கியாதிகளைச்சொல்லுவதே-

ஆயுர் வேதமும் - தெட்சணை ஆச்சிய சரு உபகாராதிகளோதிணையம்பண்ணுவித்துத்தருமாதிசதுர்வித புருஷார்த்தத்திற்குஞ்சாதனமாயிருப்பதே - அர்த்தவேதமும் - சத்துருஜெயார்த்தமாகிய மந்திராதிப்பிரயோகங்களைச் சொல்லுவதேதனுர்வேதமும் - சாமவேதாதிகளால் - ச - ரி - க - ம - ப - த - நி - யென்னுஞ்சத்த சுரகீதப் பிரயந்தங்களை விவரிப்பதே - காந்தர்வவேதமுமாம்.

ஆறங்கங்களாவன - இவ்வேதங்கட்கு - பாத அஸ்த முக ஆக்கிராண நேத்திர சுரோத்திரங்களென்கின்ற - சந்தசு கற்ப வியாகரண சிட்சை சோதிஷ நிருத்தமென்பவைகளாம் - இவற்றுள் மந்திராதிகளுக்குச்சிருட்டிமுதலான வட்சரகணிதங்கள் சொல்லுவதே - சந்தசும் - ஆஸ்வலாயநீய போதாயநீய ஆபஸ்தம்பநீயாதி சூத்திரரூபத்தி லெஞ்ஞப்பிரயோகாதிகளுக்குக் கிரமஞ்சொல்லுவதே கற்பமும் - வைதீக சப்தார்த்தசித்திசமர்ப்பிப்பதே வியாகரணமும் - உதாத்த அனுதாத்த சுவரிதபிரசயங்களென்னுஞ் - சதுர்விதஸ்வரகரணபூருவமானபதக்கிரம வேதாத்தியாயஞுதிகள் சொல்லுவதே - சிட்சையும் - லக்கினம் திதி நட்சத்திரம் யோகம் கரணம் : இவைகளினால் வைதீககன்மங்களுக்குக்காலந் தெளிவித்துக் கொண்டிருப்பதே - சோதிஷமும் - வைதீக சத்தத்திற்குநிர்வசன நேமிப்பதேநிருத்தமுமாம் - இனிமீமாஞ்சை நியாய புராண ஸ்மிருதிகளென்பவை நான்குவேதங்களினுபாங்கங்களாம்.

இவற்றுள் - நியாயமென்பது - பிரமாண பிரமேய சம்சய பிரயோசன திஷ்டாந்த சித்தாந்த வைதர்க்க நிரணய வாத செற்ப விதண்டை எத்துவாபாச்சல் சாதி நிக்கிரகஸ்தானங்க ளென்னுஞ் சோடசபதார்த்தங்களுஞ் சொல்லப்பட்டுப் பிரபஞ்சத்திற் கீசுரனே கருத்தத்துவ மென்று நிச்சயஞ் செய்வதே தர்க்கமாம் - இனி மீமாஞ்சையென்பது - உபக்கிரம முதலான ஷடுவிதலிங்க தாற்பரியத்தில் வேதவாக்கிய விசாரபூருவகமாகச் சோதிஷ்டோமயாகாதிகம் - விதியுத்தமாகச் சொல்லப்படுவதே பூருவமீமாஞ்சை யெனவும் இனியிந் நூலுட் சொல்லப்படுவதுத்தரமீமாஞ்சை யெனவுமாம் - இனிஸ்மிருதிகளென்பது - அஷ்டாதசமாம்.

அவையாவன - அத்திரி அவரிதம் விஷ்ணு யாக்கியவர்க்கியம் உசனசு ஆங்கிரசு யமம் ஆபஸ்தம்பம் சம்வர்த்தம் காத்தியாயநம் பிரகஸ்பதி பராசரம் வியாசம் சங்கிலிதம் தட்சம் கௌதமம் சாதாதபம் வசிட்டமென்னும் ஸ்மிருதிகளுக்குக்காரணமான - மனுஸ்மிருதியுடனந்தந்த நாமதேயமுள்ளவராற் சொல்லப்பட்ட - பத்தொன்பது தருமசாத்திரங்களாம்.

இவற்றுள் - கிரேதாயுகத்தில் மனுஸ்மிருதிதருமமுந்திரேதாயுகத்திற் கௌதம ஸ்மிருதி தருமமுந் துவாபரயுகத்திற்சங்கிலிதஸ்மிருதிதருமமுங் கலியுகத்திற் பராசர ஸ்மிருதிதருமமுமே முக்கியமாயிருக்கும் - இனியிந்த ஸ்மிருதிகள் மூன்று காண்டமாகச் சொல்லும் - அவையாவன சாதிவருணச் சிரமமுதலிய வைகளைச் சொல்லுங் கர்ம காண்டமும் - வழக்கு - வொழுக்கந்தண்டந்தாயாதிவியாகமுதலியபதினெண்பேதங்களைச்சொல்லும் விவகார காண்டமும் - பிரம்மஹத்தி பஞ்சமாபாதகமுதலிய மகாபாதகங்களுக்குச்சிட்சைசொல்லுவதே - பிராயச்சித்தகாண்டமுமாம்.

இவற்றுட் சாதியாவன - கம்மிய கன்னட ஆந்திர திராவிடமென நான்காம் - வருணமாவன - பிரம - க்ஷத்திரியவைசிய சூத்திரரென நான்காம் - இவற்றுள் - கர்ப்பாதானம் பும்சவனம் சீமந்தம் உன்னயநம் சாதகன்மம் நாமகரணம் உபநிஷ்காமனம் அன்னப்பிராசனம் சவுளம் உபநயனம் மகாநாமியம் மகாவிரதம் உபநிஷத்து சோபனம் உத்துவாகனம் பிருகதியென்னும் ஷோடசகன்மங்களுடனே -யசனயாசன அத்தியயன அத்தியாபக தான பிரதிக்கிரக மென்னுஞ் சட்கருமங்களுஞ்சிவபத்தியாதிசற் குணங்களுடனே கூடினவனேபிராமணனும் பிரசாபாலன யஜன அத்தியயன அர்ச்சன துஷ்ட மிருக பட்சி சத்துருசங்காரமும் அன்னதான வஸ்திரதான பூதான கன்னிகாதான இரணியதான கோதான உபயமுகிகோதான மகிஷிதான வருஷைதான அசுவதான சுவேதாசுவதான கஜதான காளாமுகிதான மஹாமேருதான கற்பகவிருட்சதான வித்தியாதானமாதியசோடசமகாதானங்களும் - தேசகாலபாத்திரபரிட்சை விஷ்ணுபத்தியாதிகன்ம யுத்தனனவனே க்ஷத்திரியனும் பிரதமஸ்தான துவிதஸ்தான திரிதியஸ்தான சதுர்த்தஸ்தான பஞ்சமஸ்தா

ணமென்றிங்ஙனே - முப்பத்தாறு ஸ்தானபரியந்தக்கிரமத்
தில் அதற்கேயக்க தச சத சகத்திர தசசகத்திர லட்ச தசலட்
ச கோடி தசகோடி சதகோடி அற்புத நிற்பத கர்வ மகாகர்
வ பற்ப மகாபற்ப குரோணி மகாகுரோணி சங்க மகாசங்
க க்ஷிதி மகாக்ஷிதி சோப மகாசோப நிதி மகாநிதி சாகர ம
காசாகர அரி மஹாவரி சங்கை மகாசங்கை பணி மகாபணி
கிருது மகாகிருது வென்றிந்தவெலக்கங்கள்.

பின்னும் யக்க ஏகரூபு பூமிசவுஞை சந்திரசவுஞை யிறு
முதலானவொன்றிற்கும் - துவா தொந்துவா துவித துதீய
யுக்கும் யுகள யுக உபய வாகு பாத பட்ச நயன விந்தலக்
கமெல்லாமிரண்டிற்கும் - திரி திரய திரிதய - அரநயனஅ
க்கினி புர வரரத்தினதி முதலானவெலக்கமேமூன்றிற்கும்சவு
சதுர்த்தி - கஷாய - வேத - வருண - ஆசிரம - சமுத்திர-ச
வுஞைமுதலானதேநான்கிற்கும் - பஞ்ச - ஆரவகதிர - வி
ரத - இந்திரிய - பாண - விஷய - பாண்டவ - பூதாதிக
ளே - ஐந்திற்கும் - சடு - திரவிய - ருது-ரச - கந்தமுக-வே
தாங்க - கர்ம - வர்ண - தரிசன - அர்த்தாதிகளே ஆறிற்கும்
சத்த - முனி - கிரி - ராச்சியாங்க - துரக - தாது - சபாங்க-சு
ர-சாகர-சவுஞை - முதலானதேழிற்கும்-அஷ்டவசு-திக்-கஜ-
மறத-கர்ம-முதலானவைகளேயெட்டிற்கும் - நவ-ரந்திர-
நிதி-ரச-கிரக - ரத்தின- பரவாதிகளேயொன்பதிற்கும் விந்
து-சூனிய-நாஸ்தி - அநுசார-ககன - சவுஞை - முதலான
தேபத்திற்கும் பெயராம் - சகல சங்கை - சவுஞையறிந்து-
அதிகமானதுநீக்கிக் கணிதாதிகளெண்ணிக்கிறமுகாதி-சமஸ்
தவஸ்துக்களைப் பிரமாணித்திலக்கஞ் செய்து - நிறைய- வ
ட்டி - வட்டம் - சின்னத்தின் வண்ணம் - பவளத்தின் களஞ்சு
மணிகளின்சவ்வு - ரத்தினத்தின் சூத்திரபரீட்சை - வச்சிரத்
தின்மஞ்சாடி - பச்சையின் ரதி முதலானது வேறுவேறி
லக்கஞ்செய்து - பின்னும் - பத்துப்பணத்து நிறைய - க
ளஞ்சு களஞ்சு நாலுகூடினதொருகருஷம் - கருஷநாலுகூ
டினதொருபலம் - பலமிருபது கூடினதொரு வீசை - வீ
சை யஞ்சுகூடின தொரு துலாம் - துலாமிருபது கூடின
தொரு பாரம் - பாரம் பத்துக்கூடினதசிதமாமென்றும்-க
ற்பூராதி தூக்கிலக்கம் பிரமாணித்துப் பின்னுமொருசிட்டி
யே-நிகுஞ்சம்- இதுநாலுகூடினதொருசுமேவய் - இதுநாலு

கூடினதொரு-பிரஸ்தம்-இதுவிரண்டுகூடினதொருவர்க்கம்-இதுவிரண்டுகூடினதொருவாடகம்-இதுநாலுகூடினதொருதுரோணம்இதுவைந்துகூடினதொருகாரியாகுமென்று-தானியாதிகளளந்தறிந்து செய்கிறவாணிபம் - கிரிஷி - கோபாலிசஞ் சூரியாதிபத்தி கன்மயுத்தனுனவனை வைசியனெனவும் பிராமணுதிவருணத்திரய சேவைசெத்திராட்சா சகலதேவதாபத்தியாதி கன்மயுத்தனுனவனே சூத்திரனெனவுமாம்— ஆஸ்ரமமாவது-பிரமசாரி- கிரகஸ்தன் - வானப்பிரஸ்தன்_சந்நியாசி - யெவ்வொன்றிற்குநான்காகச் சோடசமுமாகிய விவையேகருமகாண்டமாம் - ஏனையகாண்டமிரண்டும் விரிவாகலின் அந்நூலிற்காண்க - புராணமாவன - சிவப்பிரசாதத்தினுல - வியாசபகவான்சொன்ன - வேத- நிஷ்டசாகார்த்தப்பிரதியாதிகளும் - சர்க்க - பிரதிசர்க்க - வம்ச - மன்வந்தர - வம்சானுசரித்திரங்களென்னும் பஞ்சலட்சணங்களையுஞ் சமஸ்த- வைதிகதாந்திரிககர்மங்களையுந்-தேவதாதார தம்மியங்களையுஞ்சொல்லாநின்ற நாலுலட்சங்கிரந்தஞ்சங்கையுள்ளபதினெண்மூலபுராணங்களாம் - இவற்றுள் - சைவம் - ஸ்காந்தம் - இலிங்கம் , கூர்மம் - வாமனம் - வராகம் - பௌஷிகம் - மச்சியம் - மார்க்கண்டேயம் - பிரமாண்ட மென்னுமிவைபத்துஞ்சிவபுராணமும் - நாரதியம் - பாகவதம்- காருடம் - வைஷ்ணவ மென்னுமிவை நான்கும் விஷ்ணுபுராணமும் - பிரமம் - பதுமமென்னுமிவையிரண்டும் பிரமபுராணமும் - பிரமகைவர்த்த 'மென்னுஞ் சூரியபுராணமும்-ஆக்கினேயமென்னு மக்கினிபுராணமுமாம் - அன்றியுமுபபுராணமஷ்டாதசமாம்.

அவையாவன - சனற்குமாரம் - உசனம் - நாரசிங்கம் நந்தி - சிவதன்மம் - துருவாசம் - நாரதியம் - கபிலம் - மானவம் - ஆங்கிரம் - வாருணம் - காளி - வாசிட்டலிங்கம்- சாம்பவம் - சவுரம் - பராசரம் - மாரீசம் - பார்க்கவமென்னுமந்தந்தநாமதேயமுள்ளவரானிருமித்ததாம் - இனிவியாசபகவான் வான்மீகரானிருமிதமான சத்துவாதிகுணபேதங்களுந் தேவத்திரய லட்சணங்களும் - தேவதானவாதிகள்ஜெநநக்கிரமங்களும் - யுதிஷ்டிர - ராமச்சந்திராதி ராஜாக்கள் சரித்திரங் களும்- வைதீகாதி தன்மங்களுங் -குரோடிகரித்துச்சொல்லும் பாரதராமாயணங்களென்னுமிதிகாசங்களாம்.

இனிமற்றுமுள்ள சகலசமயங்களும் - அவற்றினிலக்கணங்களு மவற்றின்பேதங்களு மவற்றால்வரும் பதமுத்திகளுந் தெரிவித்திருக்கும் விவேகசிந்தாமணி யென்றுங்கிரந்தப்படிமேற் சிலதெரிவிக்கப்படும் (௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய சைமினிசூத்திரத்திற்கு மூன்றுவியாக்கியானி வியாக்கியானங்களி னுமங்களுணாத்துகின்றது:

(கவி.)

சாற்றியவச்சைமினி சூத்திரத்திற்கு மிக்கச்……………*
சாபரமென்றொரு பாடியம்புரியப்பட்ட …………*
தூற்றமீமாஞ்சைக்கு மதம்பாட்டமென்ன …………*
வொன்றுபட்டா சாரியருறைத்திடவந்தென்றும் ….*
போற்றுமவன் சீடனாகிய பிரபாகரனால்…………*
புகழ்பிரபாகரமெனவோர்மதாந்தரந் கமைய… …*
வாற்றியவச்சாபரபாடிய மதற்குவிளங்க …………*
வாக்கப்பட்டுலகமெலா மறிந்திடநின்றதுவே ………*

(இதனதுபதப்பொருள்)

சாற்றிய - முற்கூறிய - அச்சைமினி சூத்திரத்திற்கு - அந்தச்சைமினி சூத்திரமான பூருவமீமாஞ்சைக்கு - மிக்க - மேலான - சாபரமென்று - சாபர மென்னப்பட்ட - ஒருபாடியம் - ஒருவியாக்கியானம் - புரியப்பட்டது - சாபரராற் செய்யப்பட்டது - ஊற்றம் - அறிஞராற்புகழாநின்ற - மீமாஞ்சைக்கு - அம்மீமாஞ் சைக்கே - மதம் பாட்டமென்னவொன்று - பாட்டமென்றொருமதாந்தரம் - பட்டாசாரியனால் - பட்டாசாரியரால் - உரைத்திடவந்து - செய்யப்பட்டு - என்றும்போற்றும் -எப்போதும்புகழ்பெற்றிருக்கும் - அவன்சீடனாகிய - அப்பட்டாசாரியாதுமாணாக்கனாகிய - பிரபாகரனால் - பிரபாகர முனிவனால் - புகழ் பிரபாகரமென - புகழ்பெற்றபிரபாகர மென்று சொல்லப்பட்ட - ஓர்மதாந்தரம் - ஒருமதமானது - நன்கமைய - நன்றாயமையும்படி - ஆற்றிய - செய்த - அச்சாபர பாடியமதற்கு - அந்தச்சாப

ரவியாக்கியானத்திற்கு - விளங்க வாக்கப்பட்டு - பொருள் விளங்கச்செய்யப்பட்டு - உலகமெலாம் - உயர்த்தோரியாவரும் - அறிந்திட - அறிதற்பொருட்டு - நின்றது - நிலைபெற்றது—எ-று ஏ - அசை.

இவ்விரண்டுகவியினுதாற்பரியம்.

பூருவமீமாஞ்சையிற் சைமினிசூத்திர ரூபமாகக் கூறியகருமப்பொருள் வெளிப்படச்சாபரமும் - அம் மீமாஞ்சைக் கேபாட்டமும் - அச்சாபரம் விளங்கப் பிரப காமு முண்டாயினு மொன்றிற் கொன்று தந்திரங்களின் விருத்தம் போலத் தோன்றி யந்தரங்கத்திலவிருத்தமாகவிளங்குமென்பதாம். (௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வியாசசூத்திரமான வுத்தரமீமாஞ்சையின் முற்பாலதாகியதேவத காண்டத்தினுள்ள தேவவிலக்கணத்தை விளக்குவிக்கும் வியாக்கியானி வியாக்கியானங்களினுமமுணர்த்துகின்றது.

(கவி.)

உரைத்தவிரண்டாங்கூறுபிரமமுரைப்பதனு.............. *
னுத்தரமீமாஞ்சையெனப் பட்டருள்கூர்வியாதன் ... *
றெரித்தசூத்திரவடிவ மாகியிருநான்கத்.................... *
தியாயமாமவற்றுண் முதனான்கத்தியாயம்.............. *
விரித்தவுறுதேவதாகாண்டமெனப்பட்டு.................... *
விளங்குறுதெய்வதவிலக்கணம்பலபத்திரனு............. *
னிரைத்துரைசெய்யப்படுமேனான்கத்தியாய............... *
நிகழ்பிரமகாண்டமெனவேநிகழ்த்தப்படுமால.......... *

(இதனதுபதப்பொருள்.)

உரைத்த-முற்கூறிய மீமாஞ்சையினுள் - இரண்டாங்கூறு-இரண்டாம்பங்கானது - பிரமமுரைப்பதனல் - பிரமத்தைச் சொல்லுவதனல் - உத்தரமீமாஞ்சையெனப்பட்டு - உத்தரமீமாஞ்சை யென்றுநாமந் தரித்து - அருள்கூர்வியாதன்-கிருபைமிகுந்தவியாசமுனியினுல் - தெரித்தசூத்திரவடிவமாகி-சொல்லியசூத்திரரூபமாகி - இருநான்கத்தியாயமாம் - எ

ட்டத்தியாயங்களாகும் - அவற்றுள் - அவைகளுக்குள்ளே - மு
தலன்கத்தியாயம் - முற்பாலதாகிய நான்கத்தியாயங்களும் - வி
ரித்துவுரு - விரிவாகச்சொல்லும் - தேவதாகாண்ட மெனப்
பட்டு - தேவதாகாண்டமெனப்பெயர்பெற்று - விளங்குரு
ம் - விளங்குகின்ற - தெய்வதவிலக்கணம் - மந்திரவாதத்தைப்
போலமைந்திருக்கின்றதேவவிலக்கணங்களை - பலபத்திரனு
ல் - பலபத்திரராமனால் - நிரைத்து - நிரலே - உரைசெய்யப்ப
டும் - சொல்லப்படும் - மேலன்கத்தியாயம் - பிற்பாலதாகிய
நான்கத்தியாயங்களை - நிகழ் - விளங்காநின்ற - பிரமகாண்ட
மென - பிரமகாண்டமென்னு நாமந்தரித்து - நிகழ்த்தப்
படும் - சொல்லப்படும் — எ — று. ஏ - ஆல - அசை.

இவைக்கு (ஞானவாசிட்டம்) உதாரணம் - தேகமுதற்பி
ரிவுகளாகுஞ்சிறியனவாம் பொருள்களிலத் தெய்வமுண்டோ,
பாகமறப்பணதிபறவடிமுடிவற்றுளவுணர்வேபரமபோத,
மாகவினுலது தெய்வமருச்சிதற்குரித்தாகுமதிவில்லாத, மூ
கருக்குவடிவுபலவருச் சனையியல்பென்று மொழியுமன்
றேயென்பதனுற்காண்க.

வினு - பிரமப்பொருளுணர்த்து முத்தரமீமாஞ்சையிற்றே
வதாவிலக்கணங்கூறியதென்னையெனின்.

விடை. மாயாசம்பந்தத்தினுலாரோபிதமாய்ப்பிரமம்போல
த்தோற்றுந்தெய்வங்களை யிஃதெனக்காட்டியிஃது பிரம
மன்றென நீக்குவித்தற்கென்க. (௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியவுத்தர மீமாஞ்சையிற் பிற்பங்கா
ய பிரமகாண்டத்திற் சீவபரவயிக்கியப்போதிக்குமகாவாக்கி
யார்த்தத்தை விளக்குவிக்கும் வியாக்கியான வியாக்கியானிக
ளிருவருமுணர்த்துகின்றது.

(கவி.)

அப்பிரமகாண்டத்துட்சீவமொடுயிரயிக்க ...... ....... *
மறைதலாற்சங்கராசாரியனுங்குருவா.................. *
லொப்பரியபாடியமென்றொன்றுரைக்கப்பட்ட .. .. ... *
துரைத்ததற்குவிவரணுசாரியனென்பவனுற் ..... ..... *

செப்பரியவிவரணமாக்கூறப்பட்டதுவே.................. *
தெரியின்வேதாந்த நூலென் றுரைக்கப்படுமா ........ *
விப்பெரியவேதாந்த நூற்பொருளினகல .................. *
மெங்ஙனமென்றிடி னுரைத் துமியம்பிய நான்முறையே *

(இதனதுபதப்பொருள்.)

அப்பிரமகாண்டத்துள் - முற்கூறியபிரமகாண்டத்தின்கண் - சிவமொடுயிரயிக்கம் - மகாவாக்கியார்த்தமான பரமாத்மாயிக்கத்தை - அறைதலால் - சொற்றலால் - சங்கராசாரியனுங்குருவால் - சங்கராசாரியனென்னுமாசிரியரால் - ஒப்பரிய - சமானமின்றிய - பாடியமென்று - அத்துவிதபாஷியமென - ஒன்றுளாக்கப்பட்டது - ஒன்றியம்பப்பட்டது - உரைத்ததற்கு - கூறியவப்பாஷியத்திற்கே - விவரணாசாரியனென்பவனால் - விவரணாசாரியனென்பவரால் - செப்பரிய - மொழிதற்கரிய - விவரணமாய் - விவரணமென்னுமோர்வியாக்கியானமாக - கூறப்பட்டதுவே - சொல்லப்பட்டவதையே - தெரியின் - விசாரிக்குமிடத்து - வேதாந்த நூலென்று - வேதாந்தசாத்திரமென்று - உரைக்கப்படும் - சொல்லப்படும் - இப்பெரிய - இம்மாட்சிமையுள்ள - வேதாந்த நூற்பொருளின் - வேதாந்தசாத்திரார்த்தத்தின் - அகலம் - விரிவு - எங்ஙனமென்றிடின் - எத்தன்மைத்தெனின் - இயம்பிய நான்முறையே - முதனூலிற்சொல்லுங்கிரமப்படியே - உரைத்தும் - இனிக்கூறுதும்: எ - று.

வினா - வேதங்களின் முடியிலுள்ள மகாவாக்கியங்களின்பொருள் விளங்கிக்கிடந்த வேதாந்தநூலினவிப்பிராயத்தை யவற்றிற்கூறாது மீமாஞ்சையிற்கூறியதென்னையெனின்.

விடை - இருக்குமுதற்புராணமீறான பதினான்குவித்தையினுமீமாஞ்சை சிறந்ததாலென்க.

வினா - அற்றேல் இஃது இருக்குமுதலியவற்றிற்குமேன்மை யாவ தங்ஙனமெனின்.

விடை - பன்னிண்டு சாகையோடுங்கூடிய முதற்றரமானவதர்வணவேதத்திலுள்ளமாண்டூகவுபநிடதத்திலயமான்மாப்பிரமமெனக்கூறிய மகாவாக்கியார்த்த சாட்சாத்காரஸ்வரூபத்தை - ஆயிரஞ்சாகையோடுங்கூடிய விரண்டாந்தரமான சாமவேதத்திலுள்ள சாந்தோக்கிய வுபநிடதத்தி

ல் - தத்தொமசி யெனக்கூறிய மகாவாக்கியார்த்தமானகுருவுபதேசத்தினால் - நூற்றொருசாகையோடுங்கூடியமூன்றாந்தரமான யசுர்வேதத்தினுள்ளதயித்திரியவுபநிடதத்தில்- அகம்பிரமாஸ்மியெனக்கூறிய மகாவாக்கியார்த்தஞ் சீடனுக்கனுபவமாம்படி - இருபத்துநான்குசாகையோடுங்கூடிய நான்காந்தரமான விருக்குவேதத்தினுள்ள அயித்திரேயவுபநிடதத்திற் பிரக்கியானம்பிரமமெனக்கூறிய மகாவாக்கியார்த்தமானதுவிளங்கச்சொல்லு மங்ஙனங்கூறுமிந்நான்கனுட் பொருள் விசேடமாயமைந்திருக்கின்ற விச்சாமவேதத்தின் மற்றையவேதங்களுஞ் சாந்தோக்கியவுபநிடதத்தின் மற்றைய வுபநிடதங்களுந் தத்தொமசிவாக்கியத்தின் மற்றையவாக்கியங்களுஞ் சேர்ந்திருக்குமாதலினஃதே விசேடமாயிற்று.

இச்சாமவேதத்தனது வாக்கியத்தி னசிபதார்த்தமான ஆனாயென்னு மத்துவிதஸ்வப்பிரகாசத்திற் பிரதிவிம்பிதவர்களிலத்தொம்பதார்த்தனாகிய நீயென்னுஞ் சீவன்றன்னைமறந்தொன்றுந்தோன்றாமனின்றவனைத் தத்தரிசனஞ் செய்விக்குநிமித்தந் தற்பிரக்ஞையோடும் பிரதிபலித்திருக்கின்றவீசனை யுபாதானநிமித்தகாரணனாய்த்தனுவாதிகளைக்கொடுத்து முன்னர்விடயஞானத்தைவிளக்குதற்காக விதிவாதமுதலியவற்றைக்கூறுங் கருமகாண்டத்தைப் பிரதிவாதிப்பதற்குச்சந்தசு முதலியவாறங்கங்களும் பிரமாணாதியசோடசபதார்த்தங்களைச்சொல்லு நியாயமும் - வருணாச்சிரமமுதலியபதினெண் விபகாரங்களையும் பிராயச்சித்தாதிகளையுங்கூறுமனு முதலியபத்தொன்பதுஸ்மிருதிகளுஞ் சர்க்கமுதலியபஞ்சலட்சணமுள்ளனவாய் வைதீகதந்திர கருமங்களைச்சொல்லும் பிரமமுதலிய பதினெண்புராணமுமாகக் கூறிய விவ்வொன்பது வித்தைகளுமுன்னடங்கினமூன்றுவேதங்களோடுங்கூடவடங்கும்.

இங்ஙனம்வியாபித்தசாமவேதத்தின் முற்கூறியசீவர்களுக்குச்சொர்க்கமுதலியவிடய போகங்களனைத்து மனுபவித்தெய்க்குநிமித்தங் கருமங்களையனுட்டிக்கும்படி கருமகாண்டமுமவற்றாலிப்போகங்களனைத்துமின்பம்போலத்தோன்றித்துன்பத்தைவிளைக்கின்றதென்றவற்றிற்றோட திருஷ்டியுண்டான பின்புகாரணரான வீசுரனுக்குஅக்கருமங்களையொப்புவித்தவனருள் பெறுநிமித்தமவரதிலக்கணமறிந்து

பாசிக்கும்படி யுபாசனகாண்டமுமதனைத்திரிபுடிதோன்ற லாற்சலனமுண்டாய்த்துன்ப நீங்காமையான்மேற்சர்வம் பிரமமென்னுமத்துவிதஞானமுதயமாகஞானகாண்டமுஞ் சங்கிரகித்துக் கூறினு மவ்வேதந்தனத விப்பிராயம் வெளிப்பட விம்மூன்று காண்டத்தின்முன்னிரண்டையும் பூருவபட்சமாகவு ஞானமொன்றுமே சித்தாந்தமாகவுங் கூறியவம் மூன்று காண்டத்தி னருத்தமுமிம்மீமாஞ்சையில் வெளிப்படவிளங்கலாலெனக.

வினா. அங்ஙனமாயினிம்மீமாஞ்சையிற் கூறும் வேதாந்த நூலெனது விவேகசிந்தாமணியிற் கூறிற்றென்ற தென்னையெனின்.

விடை. இவ்வடமொழிகளைப்பெயர்த்துக் கூறியவிவேகசிந்தாமணியினெடுத் திந்நூற்கூறினமையாலெனக - வேதங்கட்குத் தாமென்பதும்வாக்கியங்களுப நிடதத்திலுற்பத்தியென்பதும்வாக்கியங்கணன்கையுமேகவாக்கியமென்பது மானவைகளைவாசுதேவமனனந் தசகாரிய மகாவாக்கியமுதலிய நூல்களாற்காண்க.

இவ்விரண்டுகவியினது தாற்பரியம்.

உத்தரமீமாஞ்சையில் வியாசமுனிசூத்திர ரூபமாகக்கூறிய பிரமப் பொருள்வெளிப்படபதமுத்தியைக்கொடுக்குந் வேதவ்வத விலக்கணமு மவைக ணீங்கிப்பர முத்தியைக்கொடுக்குமத்துவிதபாஷியமு மஃது விளங்கவிவரணவியாக்கியானமும் அஃதேவேதாந்தநூலெனவுஞ் சொல்லப்படுமென்பதாம். வேதங்களுக்குச் சாகைமுற்கூறின பிரகாரமன்றி, இருக்குவேதத்திற் கிருபத்தொன்றும் யசுர்வேதத்திற்குப் பதினொன்றும் அதர்வணவேதத்திற் கொன்பதுமாகக்கூறுவதுமுள. (௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிந் நூலாசிரியரதருமையுமவரது நாமமும்விளங்கவுணர்த்துகின்றது.

(கவி.)

அருமறையின்பொருடெரித்த விவேகசிந்தாமணியதனு*
ளுறைவேதாந்தப்................................................*

பொருளினைமுந்நீர்வளாப்பி னுலகறியச்செந்தமிழாற்...*
புனைதல்செய்தான்...*
பெருகுசுவை நறவொழுகுசெஞ்சொன்மலராற்புனைபாப்.*
பெருந்தண்மாலைக்...*
கருமிடற்றுவானவற்கே சாத்துசிவப்பிரகாசன்...*
கவிஞர்வேந்தே...*

(இதனதுபதப்பொருள்.)

அருமறையின்- அறிதற்கரியவேதங்களினுள்ள - பொருள்விரித்த - பொருள்களைத்தெரிவித்த - விவேகசிந்தாமணியதனுள் - விவேகசிந்தாமணியென்கிறநூலின்கண் - அறை-சொல்லாநின்ற-வேதாந்தம் - வேதாந்தப்பரிச்சேதத்திற் கூறிய- பொருளினை -பரமாத்மாயிக்கிய மாகவிளங்கிய மகாவாக்கியார்த்தத்தை - முந்நீர்வளாப்பின் - கடல்சூழ்ந்தபூமியினுள்ள - உலகறிய - பண்டிதபாமரர்கள் சாதாரணமாயறிந்துய்யும்படி - செந்தமிழால் - செவ்விதானதமிழ்ப் பாவினங்களால் - புனைதல்செய்தான்- (சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன்முதலிய வழகுபொருந்த) வேதாந்தசூளாமணி யென்னொருநூலசெய்தான் - பெருகுசுவை நறவொழுகு - அளவின்றிப்பெருகாநின்ற நவரசமாகியதேனிடையறாதொழுகிக் கொண்டிருத்தற் கிடமாகிய - செஞ்சொன் மலரால் - செவ்வியசொற்களென்னும் புட்பங்களால் - புனை - தொடுக்கப்பட்ட - பாப்பெருந்தண்மாலை - அன்புளோர்க்ககங்குளிரச் செய்யுமாட்சிமையுள்ளபாமாலைகளை - கருமிடற்று - திருநீலகண்டத்தையுடைய - வானவற்கே - பரம சிவத்திற்கே- சாத்து - தரிக்காநின்ற - சிவப்பிரகாசன் - சிவப்பிரகாசனென்னுநாமதேயத்தையுடைய- கவிஞர்வேந்து - கலைவல்லோர்களுக்கிறைவன் —எ—று. ஏ-ஈற்றசை.

மலர்மாலையுருவகப்படுத்தியது.

(இதனதுதாற்பரியம்.)

இந்நூலாசிரியரினதுசிறப்பைவிளங்கவுணர்த்தியதாம்... (எ)

# பொதுப்பாயிரம்.

(அவதாரிகை.)

முற்சிறப்புப்பாயிரங்கூறி மங்களாசரணைமுதலென்னனை
வையீருயவங்கங்களு மதிகாரிகளாசிரியர்களினியல்பும்பொ
துப்படக்கூறும் பொதுப்பாயிரங் கூறுவான்றொடங்கியிச்
செய்யுளின் மங்களாசரணை முதலன்னுவயமீறான மூவிலக்க
ணங்களுமனுபந்தசதுட்டயநாமமுமுணர்த்துகின்றது.

(கவி.)

வாய்த்தநூன்முகத்துரைக்குமங்களாசரணை ...... ...... *
வாழ்த்துவணக்கொடுவத்துநிர்த்தேசமெனமூன் ..... *
றார்த்தபதம்பதப்பொருளேவாக்கியயோசனையே .... *
யறிவினாவிடையிவையைந்துரையினிலக்கணமாங் ...... *
கோத்துரைசெய்விசேடவிசேடியங்கருத்தாகருமங் ...... *
கொள்கிரியை யிவையைந்தன்னுவயவிலக்கணமாஞ் .... *
சாத்துமனுபந்தசதுட்டயநூற்குவிடயஞ் ........ *
சம்பந்தம்பயனதிகாரிகளெனநான்கதியே ........ *

(இதனதுபதப்பொருள்.)

வாய்த்த - முமூட்சுக்கணிரதிசயானந்தம் பெறுவான்கிடை
த்த - நூன்முகத்துரைக்கும் - சாத்திரங்களின்முகப்பிற் கூறு
ம் - மங்களாசரணை - மங்களாசரணையினிலக்கணமாவது - வ
த்து - வழிபடுகடவுளை - வாழ்த்து - வாக்காற் றுதித்தலும் -
வணக்கொடு - காயத்தால்வணங்குதலும் - நிர்த்தேசமென -
மனத்தாற் காண்டலுமென - மூன்று - மூன்றும் - ஆர்த்த -
கவியிற சொல்லாநின்ற - பதம் - பதமும் - பதப்பொருள் -
பதத்தினருத்தமும் - வாக்கியயோசனை - வாக்கியார்த்தத்தை
யோசித்தலும் - அறி - அப்பொருளை யறிதற்கு - வினா - வி
னாதலும் - விடை - அப்பொருள்விளங்கக்கூறுதலுமான - இ
வையைந்து - இவ்வைந்து வகையும் - உரையினிலக்கணமா
ம் - வியாக்கியானங்களினிலட்சணமாம் - கோத்துரைசெ
ய் - கோவையிட்டுக்கூறிய - விசேடம் - விசேஷணமும் -
விசேடியம் - விசேஷியமும் - கருத்தா - கருத்தாவும் - கரு
மம் - கருமமும் - கொள்கிரியை - கொள்ளாநின்ற கிரியை

யுமான-இவையைந்து - இவ்வைந்தும் - அன்னுவயவிலக்கணமாம் - அன்னுவய லட்சணமாகும் - நூற்கு - வேதாந்த சாத்திரங்கட்கு - சாத்தும் - இந்நூற்கமைந்த - அனுபந்த சதுட்டயம்-அனுபந்தசதுஷ்டயமாவன-விடயம்-விஷயமும் - சம்பந்தம் - சம்பந்தமும் - பயன் - பயனும் - அதிகாரிகள் - அதிகாரிகளும்-நான்கென-நான்கென்று-அறி-நீயறிவாய்—எ—று. ஏ-ஈற்றசை.

ஆசரித்தல் - ஆசரணையெனவந்தது- எனவே-நடத்தையாம் - நிர்த்தேசம் - காண்பித்தல் - என்னும்மைக டொக்கி நின்றன - மங்களாசரணை - மங்களநடத்தையாம் - அவையாவன - மங்களம்-நிரதிசயசுகமாய் - ஆசரணை - யாவினுங்கண்டு நடக்குதல் - அஃதின் - மூன்றிலக்கணமாவன - இந்நூலின விப்பிராயமாயுள்ளபரவஸ்துவை - மனத்தாற்காண்டலும் வாக்காற்றுதித்தலுங்காயத்தால்வணங்குதலுமாம்.

உரையினைந்தி லக்கணமாவன - முந்நிர்த்தேசித்த வஸ்து வெளிப்படுநிமித்தம் - நூலாசியர் கூறுங்கவியிலுயிர் மெய்யுருபுகள் புணர்ந்துவிகாரப் பட்டிருந்தபதங்களையியல்பாக - வுரையாசிரியர் பிரித்துமப்பதங்களினுள்ளபல பொருள்களை நீக்கிமுற் கூறியதற்கியைந்த பொருளைக்கூறுதலுமப் பொருளைமுதனூலிற் பூருவபட்சமாய்க் கூறும்பலவற்றையு நீக்கிச் சித்தாந்தமாய்க்கூறுமாத்ம ஞானசுருதிகளையேற்கோளாயெடுத்துக்காட்டலுமவ்விரண்டு மொன்றுபனுபவிக்கும் போதவைகட்குத் தடையாயுள்ள வைகளை நீக்கியதன்யதார்த்தம் விளங்க வினாதலு மவ் வினாவிற் கையந்திரிபின்றி யப் பொருள் விளங்கக்கூறுவதேவிடையுமாம்.

அன்னுவய விலக்கணமாவன் அங்ஙனமுரையிடுதற்கு மூலமானபதங்களினமைந்திருக்கின்ற பரவஸ்துவின் சிறப்பானவிசேடணமுமச்சிறப்பையுடைய லட்சியமான விசேடியமுமவ்விலக்கியமான கருத்தாவு மக்கருத்தாவைக் காட்டுங்கருமமுமக்கருமத்தவருது செய்யுங்கிரியையுமான் வைத்திற் பரவஸ்துவான கருத்தா வெளிப்படுகிறதற்குப் பொருத்தமானபதங்களையெடுத்துக்கூட்டிக்கொள்ளுதலாம்.

அனுபந்தமென்பது - அனு - உபசர்க்கம் - பந்தம் கூடிநிற்றல்-எனவே,- இந்நான்குங்கூடிநின்றதாயிற்று.

வினா. இங்ஙனங்கூறிய மங்களாசரணைக்கு மங்ஙனங் கூறியகடவுள்வணக்கத்திற்கும் பொருட்பேதமிருப்ப தென்னையெனின்.

விடை. அஃதிந்நூனிர்விக்கினமாய் நிறைவேறு நிமித்தமுமிஃதுசிஷியப்பிரசிஷியப் பிரவாகப்பிரவர்த்தனையோடுங்கூடிய நூன்மரபுவிளங்குநிமித்தமுங்கூறினதேயன்றிப் பொருள்வேறின்றென்க.

(இதனதுதாற்பரியம்.)

இந்நூலிற்கூறும் பரவஸ்து வினிலக்கணமுணரு நிமித்தமமைக்குங்கவிகளின் பொருடிரிபுபடாமற் செவ்விதாய்ப்பெற்றுக்கொள்ளுகிற தற்காகவேண்டியிவ் விலக்கணங்களைக்கூறியதென்பதாம். (அ)

(அவதாரிகை)

இச்செய்யுளின்முற்கூறியவனுபந்தசதுட்டயத்தி னிலக்கணமுமேற் சாதனசதுட்டயமுமுணர்த்துகின்றது.

(கவி.)

விடயமதுசிவசீவர்தமதேகத்துவமாம்........ *
விமலனொடுநூற்கறையப்படலறையுந்தன்மை........ *
யடைதலுறுசம்பந்தம்பயன்றுயரொழிநீத்........ *
தாநந்தபதம்பெறுதல்சாதனநான்கினையு........ *
முடையவனேயதிகாரியென்றறைவரறிஞ........ *
ருரைத்தசாதனசதுட்டயநித்தவநித்தப்........ *
படுபொருளின்விவேகமிகபரபோகவிராகம்........ *
பழிப்பரியசமைமுமுட்சுத்வமெனப்படுமால்........ *

(இதனதுபதப்பொருள்.)

விடயமது - முற்கூறியவனுபந்தசதுட்டயத் தினுதலியவிடயமாவது - சிவசீவர்தமது - பரமாத்மாக் களினது - ஏகத்துவமாம் - ஐயிக்கத்துவமாகும் - அடைதலுறும் - பொருந்தாநின்ற - சம்பந்தம் - சம்பந்தமாவது - விமலனொடு நூற்கு - பிரமத்திற்கும் வேதாந்தசாத்திரத்திற்கு முடனிகழ்ச்சியாக - அறையப்படல் - சொல்லப்பட்டவருத்தமும் - அறையுந்தன்மை - அவ்வருத்தத்துக்கேற்ற சொல்லுமாம் - ப

யன் - பயனாவது - துயரெலாநீத்து - துன்பங்களனைத்தையு நீக்கி - ஆநந்தபதம்பெறுதல் - நித்தியாநந்தபதத்தையடைதலாம் - அதிகாரி - அதிகாரியாவது - சாதனநான்கினையும் - சாதன சதுட்டயங்களையும் - உடையவனே - உடைத்தானவனேயாம் - என்றறைவரறிஞர் - ஞானிகளிங்ஙனமென்றுசொல்லுவார்கள் - உரைத்த - இங்ஙனங்கூறிய - சாதன சதுட்டயம் - சாதனசதுஷ்டயமாவன - நித்தவநித்தப்படுபொருளின்விவேகம் - நித்தியாநித்தியவஸ்துவிவேகமெனவும் - இகபரபோகவிராகம் - இகாமுத்திரார்த்தபலபோகவிராகமெனவும் - பழிப்பரியசமை - புகழ்தற்கரியசமாதி சட்கசம்பத்தியெனவும் - மூமூட்சுத்துவமெனப்படும் - முமூட்சுத்துவமெனவுஞ்சொல்லப்படும் — ஏ — று - ஆல் - அசை.

வடநூலார் - அறையப்படல் - பிரதிபாத்தியமெனவும் - அறையுந்தன்மை - பிரதிபாதிகமெனவும் - மோக்ஷம் - இச்சா - யஸ்ய - தஸ்ய - பாவா - முமூட்சுத்துவ மெனவுங் கூறுவர்.

(இதனதுதாற்பரியம்.)

குருமுகமாகத் தெளிந்துகொள்ளுஞ் சீடனுக்கிந்நூற்பொருளாகியகூடத்தப்பிரமாயிக்கியமானவத்துவிதஸ்வரூபமேயபரோட்சமானவிடயமெனவும் - அவ்வஸ்துவுநூலினருத்தமுமொன்றாயிருப்பதே - சம்பந்தமெனவும் - அதனாற்றுக்கநிவிர்த்தியுள்ள தடையற்றவாநந்தம் வருதலே பயனெனவும் - இப்படினைபடைதற்கேதுவான சாதனசதுட்டயமுடையவர்களே யதிகாரிகளெனவுங்கூறினதாம். (கூ)

(அவதாரிகை.)

மேற்கூறியசாதனசதுட்டயங்களுளிச் செய்யுளின் மூன்றிலிலக்கணங்கூறுகின்றது.

(கவி.)

நித்தியமான்மாவேபொய்விடயமெலாமெனத்தேர்...... *
நிலைதருநித்தியாநித்தியவத்துவிவேகம்பின்............ *
மெத்திவருமிகமுடனுத்தரத்தில்வருபோக............ *
விராகமிம்மைமறுமையுளவிடயநுகர்வனைத்தும்...... *
பொய்த்தழியுமிடும்பையெனமனம்விடுதலாகும்........ *
புகழ்சமைமேமுத்லாயசட்குணங்கள்பெறுதல்.......... *

வைத்தசமையியல்பாயமுத்திவிருப்பதுவே ............*
வயங்குமுமூட்சுத்துவமென்றறிந்திடுகமதித்தே.... ...*

(இதனுபதப்பொருள்.)

நித்தியாநித்தியவஸ்துவிவேகம் '(முற்கூறியசாதனநான்கனுள்.) நித்தியாநித்தியவஸ்து விவேகமாவது - நித்தியமான்மாவே - பிரமமேநித்தியவஸ்துவெனவும் - பொய்விடயமெலாமென - விஷயரூபமானசகத்தநித்தியவஸ்துவெனவும் - தேர்நிலைதரும் - பகுத்தறிவதாம் -பின்மெத்திவரும்-பின்பமைத்துக்கூறிய - இகமுடனுத்தரத்தில்வருபோகவிராகம் - இகமுத்திரார்த்தபலபோகவிராகமாவது - இம்மை - இகத்திலும் - மறுமையுள் - பரத்திலுமுள்ள -விடயநுகர்வனைத்தும்- விடயானுபவங்களியாவும் - பொய்த்தழியும்-இன்பம்போலத்தோற்றிமித்தையாதசிக்கப்பட்ட - இடும்பையென - துன்பமயமெனக்கண்டு - மனம்விடுதலாகும் - மனமவைகளிற்செல்லாதொழிதலாம் - வைத்தசமை - பின்வைத்தசமையாவது - புகழ் - புகழ்பெற்ற - சமைமுதலாய - சமைமுதலிய-சட்குணங்கள்பெறுதல் -ஆறுகுணங்களையுமடைதலாம்- வயங்குமுமூட்சுத்துவம்-பின்விளங்கவைத்த முமூட்சுத்துவமாவது - இயல்பாய முத்திவிருப்பதுவேயென்று - சகஸ்சாயுச்சியஸ்வரூப மோட்சாபேட்சையேயென்று - அறிந்திடுகமதித்து - யூகித்தறிவாயாக—எ—று. சூற்றனை. (௫)

—ooo|○|ooo—

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறையாற் சமைமுதலியசட்குணங்களினாமமு மவைகளினிலக்கணங்களு முணர்த்துகின்றது.

(கவி.)

சமைதமையேதிதிக்ஷையுபரதிசிரத்தைசமாதி ..........*
சமைமுதலாமறு குணங்களுட்கரணமடக்கல் ..........*
சமைதமைதான்புறக் கரணமடக்குதல்காமாதி..........*
தணித்திடுகைதிதிக்ஷை கருமங்களனைத்தினையுஞ் ......*
சுமையெனவேவிடு தலுபரதிசுருதிகுருவைத்..........*
துணிவினனம்புமதேசிரத்தைகுருமொழிநெஞ்... ..*

சமைமவுறவேதிட்பமுறல்சமாதியிச்சாதனஞ்சே.........*
ரதிகாரிசெயுங்குருசேவையினையெடுத்தியம்பில்.......*

(இதனதுபதப்பொருள்.

சமை - சமையும் - தமை - தமையும் - திதிக்ஷை - திதிட்சையும் - உபரதி - உபரதியும் - சிரத்தை - சிரத்தையும் - சமாதி - சமாதியுமே - சமைமுதலாமறுகுணங்கள் - முற்கூறியசமாதிசட்கசம்பத்தியாம் (அவற்றுள்) உட்கரணமடக்கல் - அந்தக்கரணங்களைப்பாகியவிடயத்திற்செல்லவொட்டாதகத்திலடக்குதல் - சமை - சமையாம்- புறக்கரண மடக்குதல்(ஞானகன்மேந் திரியங்களான)பாகிய கரணங்களையு மவ்வாறடக்குதல் - தமை - தமையாம் - காமாதி தணித்திடுகை - காமமுதலியவற்றை யூழைமுன்னிட் டாற்றிக்கொள்ளுதல் - திதிக்ஷை - திதிட்சையாம் - கருமங்களினைத்தினையும் - சகலகருமங்களையும் - சுமையெனவே விடுதல் - பயனின்றியபாரமெனநீக்குதல் - உபரதி - உபரதியாம் - சுருதி - வேதமுடியிலுள்ள மகாவாக்கியத்தையும் - குருவை - ஆசிரியருபதேசவாக்கியத்தையும் - துணிவிஞனம்புமதே-உண்மையெனத்தெளிவாகநம்புதலே-சிரத்தை-சிரத்தையாம்- குருமொழி-ஆசிரியருபதேசவசனம் - நெஞ்சமைவுற - மனதின்கட்பொருந்த-திட்பமுறல் - சலனமின்றித்திடமாயிருத்தல் - சமாதி - சமாதியாம்-இச்சாதனஞ்சேர்-இந்நான்கு சாதனமுமடைந்த - அதிகாரிசெயும் - அதிகாரியானசீடன்செய்யும் - குருசேவையினை - குருதரிசனத்தின்முறைமையை-எடுத்தியம்பில்-துவக்கிச்சொல்லின்—எ—று. தான்-ஏ- அசை-தர்த்தும் - இச்சா-பஸ்யசா-திதிருஷாஅதுவே திதிட்சையெனவந்தது - எனவேப்வத்தைத்தாண்டுகைக் கிச்சையாதோ வது வேதிதிட்சையென்றுயிற்று - ஆமென்பதும்-எண்ணும்மையும் - வருவிக்கப்பட்டன.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்)

முற்கூறியபரவஸ்துவே நித்தியமெனத்தெரிவிப்பான்சுருதியன்றி நித்தியமெனவும் - பிரகிருதி முதற்பவ்திகமீறான சகலமுமநித்தியமெனவு - மச்சகலமும னித்தியமென்பதற்கனுபவத்தோன்ற வலைகளி னிராசைபிறத்தலு மந்நிராசையனுபவமாதற் கடையாளமானசமாதிசட்க முமக்குணங்க

ளாத் பரவஸ்துவை யடைதற்கடையாளமான முத்திவிருப்பமுமாகிய விந்நான்குமுடையவனே யதிகாரியென்பதாம்.

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியவதிதீவிர பக்குவமானவதிகாரியானவனாசிரியனைப்பூசித்தவருக் கன்புசெய்யுநான்கு பகுதியினிலக்கணமு மூன்றதிகாரிகளி னுமையு முணர்த்துகின்றது.

(கவி.)

ஆத்தமுடனங்கமேதானஞ்சற்பாவ ...... *
மாமவற்றுட்குருபரனுக்கனுகூலவிருத்தி ...... *
யாத்தமுயர்குருபரன்குற்றேவலேயங்க ...... *
மருட்குரவற்குரியமனைநிலமுதலாமவற்றைக் ...... *
காத்தலதுதானமாஞ்சற்குருவேமெய்யாய்க் ...... *
கண்டசிவமெனநம்புமதுவேசற்பாவ ...... *
மேத்துகருமம்பத்திமிகுஞானகாண்ட ...... *
மெனுமிவற்றுன்மூவதிகாரிகள்வேறுமுளரால் ...... *

(இதனதுபதப்பொருள்.)

ஆத்தமுடன் - ஆப்தத்தோடும் - அங்கம் - அங்கமும் - தானம் - தானமும் - சற்பாவமாம் - சற்பாவமுமாகிய - அவற்றுள் - அந்நான்கனுள் - குருபரனுக்கு - ஆசிரியருக்கு - அனுகூலவிருத்தி - அவர்பிரிய வசத்தாய் நடப்பதே - ஆத்தம் - ஆப்தமும் - உயர்குருபரன் குற்றேவலே - மாட்சிமையுள்ள வாசிரியரது பாதசிசுருஷையே - அங்கம் - அங்கமும் - அருட்குரவற்கு - கருணை வடிவமான வாசிரியருக்கு - உரிய - உரித்தாகிய - மனைநிலமுதலாம் - கிரகக்கிராமமாதியான - அவற்றைக்காத்தலது - அவைகட்கு விக்கினம் வாராமற்காப்பதே - தானமாம் - தானமாகும் - சற்குருவே - ஆசிரியரோ - மெய்யாய்க்கண்ட - உண்மையாக வனுபவத்திற் றரிசித்த - சிவமென - பிரமஸ்வரூபமேயென - நம்புமதுவே - மனதிற்றுணிவுபிறத்தலே - சற்பாவமாம் - சற்பாவமுமாம் - ஏத்து - துதிபெற்ற - கருமம் - கருமகாண்டமும் - பத்தி - பத்திகாண்டமும் - மிகுஞான காண்டமெனும் - மிகவும்பொலிவுள்ள ஞானகாண்டமுமென்கின்ற - இவற்றுள் - இம்மூ

ன்றினால் - மூவதிகாரிகள் - கருமகாண்டி - பத்திகாண்டி - ஞானகாண்டியென மூன்றதிகாரிகளும் - வேறுமுளர் - முற்கூறியசாதனசதுட்டயனையன்றிமற்றுமுளர் — எ — று. ஏ - ஆல் - அசை. எண்ணும்மைவருவிக்கப்பட்டன.

(பதசாரம்.)

இருவிழிக்கோர்மணிபோ லிவனறி வவரறிவினிற்றலி னுப்தமெனவும் - கண்ணிற்கிமைபோல விவனங்க மவரங்கமாய்ப்பணிசெய்துநிற்றலி னங்கமெனவும் - பிதாசுதன்போல விவன்பொருளவர் பொருளாகக் கொடுத்தலிற்றானமெனவும் - பிரமநிஷ்டாள்போல விவனிசஸ்வ ரூபமவரதுசத்துஸ்வரூபமாய்ப் பாவித்தலிற் - சற்பாவமெனவுங்கூறினர் - இவற்றைநிரலே - ஆவி - உடல் - பொருள்களைப்-பிரமோபதேசகாலத்தி லாசிரியருக்குத்தத்தமாகக் கொடுத்தானென்பதும் - மேற்சேஷித்து நின்றதனது ஸ்வரூபமேகுருதுரியமெனக்கண்டமைந்து நிற்பார்களென்பதுங்காண்க - மனைநிலமென்றமையாற்கிரகஸ்தனேகுரவனென்பதாயிற்று.

வினா. அங்ஙனமாயிற்றுறவிகள்குரவர்களலரோவெனின்.

விடை. அவர்களைக்கவுணமாகக்கூறுவதேயன்றிமுக்கியமன்றென்க.

வினா. அங்ஙனமாயிற் சனகாதிகட்குப் பரமசிவந்தானேதுறந்துதெட்சணாமூர்த்தமாய் வந்துபதேசித்தன் முக்கியமன்றோவெனின்.

விடை. அப்பரமசிவம்பனை முதலியோர்க்கு ஞானானுக்கிரகமுன் செய்திருத்தலி னஃதேமுக்கியமென்பதற்கும் - பின்னைக்தேசத்திற் சனகாதிகட்கனுக்கிரகித்தல் - கவுணமென்பதற்குமையமின்றென்க.

வினா. அற்றேல் - சுகர்வாமதேவர்முதலியதுறவிகள் - முக்கியமானவாசிரியர்களலரோவெனின்.

விடை. அவர்களுஞ்சனகராசன்முதலியோர்களிடத்திற்கேட்டுத்தெளிந்தவராதலினீர்வினவியவாறேயாமென்க - இன்னும்பிரமபுரமென்னுந்திவ்வியக்ஷேத்திரத்தின்கண்ணெழுந்தருளிவிளங்கிய குருலிங்கசங்கமமென்னுமூன்றனுள்முன்னையது திருத்தோணியின் கண்ணுமையோடுங்கூடியிருந்துதிருஞான சம்பந்தப்பிள்ளையாருக்கனுக்கிரக

ஞ்செய்யுங் குருமூர்த்தமாய்விளங்குதலானுங்காண்க.

(இதனதாற்பரியம்.)

குருகுலவாசத்திற்சீடன்செய்யுமுறைமையாவது ஆசிரியருக்குத் தஸ்மரணைவிட்டு விஸ்மரணைவாராது அவர்பிரியப்படி நடப்பதும் அவரது தேகசவரக்ஷணை நிமித்தமானபணிகளைச் செய்வதும் - அவரது குடும்பமுதலியவைகளைத்தானேபொறுத்துக்காத்தலும் - அவரே சிவஸ்வரூப மெனத்தரிசித்தலுமாம். (௰௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியகருமகாண்டிமுதலியமூவரிலக்கணங்களுமப்பியாசிகளின் முரதன்மியமான கருமிமுதலியோரினைந்துநாமங்களையுமுணர்த்துகின்றது.

(கவி)

உடம்பினையும்வருகுடும்பந்தனையுமியானெனதென்...*
றுளன்கருமகாண்டியெலாக்கிரியையுமீசற்கே...*
திடம்பெறநின்றாக்குமவனேபத்திகாண்டி...*
செயுங்கருமமனைத்தினுக்குங்கரிதானென்றிருப்போன் *
மடந்தவிருநன்ஞானகாண்டியெனலாகு...*
மற்றுமுளரவரொருவர்க்கொருவருயர்வா...*
யடைந்தவதிகாரிகளாங்கருமிமுமூட்சுவினோ...*
டறையுமப்பியாசியனுபவியுடனாரூடன்...*

(இதனதுபதப்பொருள்.)

உடம்பினையும் - முற்கூறியமூவருள்தேகத்தையும் - வருகுடும்பந்தனையும் - அதற்காகவந்தகிரககிருத்தியாதிகளையும் - யானெனதென்றுளன் - யானென்னுமகங்காரமுமெனதென்னுமமகாரமுமுள்ளவனே - கருமகாண்டி - கருமகாண்டியெனவும் - எலாக்கிரியையும் - யாகாதிசகலகருமங்களையும் - ஈசற்கே - பரமசிவத்திற்கேயென - திடம்பெறநின்று - திடமாகநின்று - ஆக்குமவனே - செய்பவனே - பத்திகாண்டி - பத்திகாண்டியெனவும் - செயும் - திரிகரணாதிகள்செய்யாநின்ற - கருமமனைத்தினுக்கும் - சகலகிரியைகளுக்கும் - கரிதானென்றிருப்போன் - தானேசாட்சியென்றிருப்பவன் - ம

டந்தவிரும் - அறியாமை நீங்கிய - தன்ஞான காண்டியென லாகும் - தன்மையுள்ளஞானகாண்டியெனவுமாம்- மற்றும்- இவர்களையன்றியும் - ஒருவர்க்கொருவர் - ஒருவருக்கொரு வர் - உயர்வாயடைந்த - மேம்பாடுபெற்ற - கருமி - கருமி யும் - மூமூட்சுவினோடு - மூமூட்சுவினுடன் - அறையுமப் பியாசி - சொல்லாநின்ற வப்பியாசியும் - அநுபவியுடன்- அநுபவியோடும் - ஆரூடன் - ஆரூடனுமாகிய - அதிகாரி கள் - அதிகாரியானவர்கள் - உளராவாராம்- ஐந்துபேருளரா கும்—எ—று. உடம்பையா னெனவும் - கும்பத்தை யெ னதெனவுங்கொள்க - என்னும்மைவருவிக்கப்பட்டன.

(இதனதுதாற்பரியம்.)

சகலகருமங்களையுங்காமியமூலமாகத்தனக்காக்கிச்செய்பவன் கருமகாண்டியெனவும் அக்கருமங்களை நிட்காமமாகவீசுரா ர்ப்பணஞ்செய்பவன் பத்திகாண்டி யெனவும் - இக்காமியநி ஷ்காமியங்களாற் செய்யுங்கருமங்க ளனைத்தினையும்பற்றின் றியவைகளியாவுந் தனதிடத்துநிகழ்வதாய்த் தானதற்குச் சா ட்சியாகக் காண்கின்றவன்-ஞானகாண்டி யெனவும் விளக்கிய தாம். (யக)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மேற்கூறிய வைந்ததிகாரிகளினுல்வரிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

மூடமொடுதன்சாதிகருமமேபற்றி ......... ...... *
முத்தனும்மவனூறுபிறப்பிணிலொன்கருமி ... ........ ... *
தீடுலகமுண்மையெனநினைந்துபுறக்கரும ................ *
நீட்டனுய்முப்பிறப்பின்முத்தனுமவனே .. ....... ... *
நாடரியமூமூட்சுலக்கங்கனவெனக்கண்டுள்ள ....... ...... *
நற்கருமஞ்சேர்த்துபிறப்பிரண்டினிலப்பியாசி .......*
வீடுலகவிவகாரநினையாமல்விவேக...... ...... ..... ... *
மேவியோர்பிறப்பினுமுத்தனநுபவியே................. *

(இதனதுபதப்பொருள்.)

மூடமொடு - முற்கூறிய வதிகாரிகளைவருளறியாமையுடன்- தன்சாதி - தன்வருணத்திற்குள்ள - கருமமேபற்றி - கரும

த்தையேதவிராதுபிடித்து - நூறுபிறப்பினில் - மேற்சதஜன்மத்தில் - முத்தனாமவன் - ஜீவன்முத்தனாகு மவனே - ஒண்கருமி - ஒள்ளியகன்மியாம் - நீடுலகம் - விரிவாகத்தோன்றிநசிக்கின்றசகம் - உண்மையென - உண்மையென்னவிதமாமென்று - நினைந்து - ஐயமாகக்கருதி - புறக்கருமநிட்டனாய் - அச்சக சம்பந்தத்திற்கு வேறான குருசிசுருஷையுடையவனாய் - முப்பிறப்பின் - மூன்று ஜநநத்தில் - முத்தனாம் - ஜீவன்முத்தனாம் - அவனே நாடரியமுமூட்சு - அவனேநாடற்கரியமுமூட்சுவாம் - உலகங்கனவெனக்கண்டு - இச்சகத்தைச் சொப்பனம்போலப் பார்த்து - உள்ளம் - மனமானது - நற்கருமஞ்சேர்ந்து - நல்லஞானப்பிபாசஞ்செய்து - பிறப்பிரண்டினில் - இரண்டுசென்மத்திற்சீவன்முத்தனாம் - அப்பியாசி - அவனேயப்பியாசியாம் - வீடு - முன்விடப்பட்ட - உலக விவகாரம் - செகத் விபகாரங்களை - நினையாமல் - மேற்கருதாமல் - விவேகமேவி - ஆத்மவிவேகத்தையடைந்து - ஓர்பிறப்பின் - ஒருஜநநத்தில் - முத்தனாம் - ஜீவன்முத்தனாகின்றவனே - அனுபவி - அனுபவியாம் எ—று. ஆல் - ஏ - அசை.

என்னவென்றவினா-எனவெனவந்தது - அப்பியாசியின்கண்ஜீவன்முத்தனைவருவிக்கப்பட்டது- வீடுலகவிபகாரநினையாமலென்றது- நீங்கினபுறப்பற்றுக்களின்வாசனைதோன்றுதகப்பற்றுநீக்கமாம்,

(பதசாரம்,)

வேதங்களிற்கூறும் விதிநிஷேதஞ் சித்தார்த்தபோதமென்கிற வாக்கியங்களிலொன்றாந் தோன்றுதவித்தையான் மறைக்கப்பட்டிருந்தவனிஷேதவாக்கியத்தைநீக்கிவிதிவாக்கியத்தினாலோர்பிரயோசனத்தைக் குறித்தாவதுகட்டுப்பட்டானாதலாற் கணிக்கப்படாதசெநநங் கணிக்கப்பட்ட சிலபிறப்பின்முத்தியை யடைவாரென்பார் - நூறுபிறப்பினி லொண் கருமியெனவும் - அக்கருமத்தினாலுண்டாகும் பதப்பிராப்தி முதலிய பிரயோசனங்களனைத்து மனித்தியமாய்த் துன்பத்தைவிளைத்தலி னவைகளிற்றோஷ திருஷ்டியுண்டாய்நித்தியவஸ்துவை யடைய விருப்ப முடையவனாய்ச் சித்தார்த்தபோத வுபதேசவாக்கியார்த்த நிச்சயங்களைக் குருமூகமாய்ச் சிரவணஞ் செய்பவன் -மேல் - மனனம் - நிதித்தியாசனஞ்

சமாதி - யிம்மூன்றையு மனுஷ்டித்து - முத்தியடையவே ண்டுமென்பார் - முப்பிறப்பின் முத்தனுமவனே - முமூட் சுவெனவும் - அவ்விசாரணையிற் சோதித்த - பிரமவஸ்துவை ச்சமுசயமற மனனஞ்செய்பவன் - மேனிதித்தி யாசனஞ்ச மாதி யிவ்விரண்டையு மனுஷ்டித்து முத்தியையடையவே ண்டுமென்பார் - இரண்டு பிறப்பினின் முத்தனுமவனேயப் பியாசியெனவும் - அம் மனனத்தினுற் றெளிந்த வஸ்துவை நிதித்தியாசனத்திற் காட்சிப்படுவான் மேற்சமாதியை யனு ஷ்டித்து - முத்தியை யடையவேண்டுமென்பார் - ஓர்பிறப் பினு முத்தனனுபவியெனவுங் கூறினர்- உலகமுண்மையெ ன நினைக்கினின்மையாயும் இன்மையென நினைக்கிலுண்மை யாயுந்தோற்றுதலி னுண்மையென்னவிதமாமென்றையமா க நினைத்தாரெனக்கொள்க,

(இங்ஙனங்கொள்ளுதற்குதாரணம்)

அத்துவிதானுபவம், செகமுழுது மொருவனுக்கஞ்ஞான தி சையினிற் சத்தாய்ச்சிறந்திருக்கும் - புகழ்முமூட்சு த்திசை யிற்சத்துமலா வசத்துமலாப் பொருளாய்நிற்குமென்னுங்க வியிற்காண்க, (௰௬)

(அவதாரிகை,)

இச்செய்யுளின் - மேற்கூறியவைத்தின் முடிவானவாறுடனி லக்கணமுமேலுலகமுதலியாதென்னும்-விவேகிமுதலியமூ ன்றதிகாரிகளினிலக்கணமுமுணர்த்துகின்றது,

(கவி,)

உலகநிலைதோன்றுமற்றன்றிகழஞ்ஞானத்தா............... *
னுண்மைமுத்தனுமவனேயாறுடன்மற்று.......... ......*
முலகமுதலியாதெனத்தேர்வொடுகுருவையடைந்து......*
முடம்பாதிபொய்யெனக்கண்டருட்குருவையடைந்து *
மூலகிலொருகுரவன்றன்மகற்குபதேசஞ்செய் ... ......*
துறக்கேட்டுமுயர்தருஞானிகளாகிமுத்தி.................*
யுலகுதொழுவிவேகமொடு விரத்திதெய்வகதியா.............*
லுற்றிடுவரிவர்வேறுமூவதிகாரிகளாம் .....................*

(இதனதுபதப்பொருள்.)

உலகநிலைதோன்றுமல் - சகத்தோற்றமில்லாமல் - தன்றிகழ்

ஞானத்தால்-தானாய்விளங்குகின்றஞானத்தினால்-உண்மைமுத்தனும் - இச்செநநத்திற்சத்தியமுத்தனும் - அவனேயாரூடன் - அவனேயாரூடனாகும் - மற்றும்-இவ்வைவத்ததிகாரிகளன்றிப்பின்னும் - உலகமுதல் - சகத்தின்காரணம்-யாதென-யாதென்கின்ற - தேர்வொடு - விசாரணையுடன் - குருவையடைந்தும் - ஆசிரியனைச்சேர்ந்தும் - உடம்பாதி - சரீரமுதற் பிரகிருதி யீறானதத்துவங்க ளியாவும் - பொய்யெனக் கண்டு - அசத்தியமெனக் கண்டு - அருட்குருவையடைந்தும் - கருணைவடிவமானவாசிரியனைச்சேர்ந்தும் - உலகிலொருகுரவன் - உலகத்திலோராசிரியன் -தன்மகற்கு-தனதுசிடனுக்கு - உபதேசஞ்செய்துற- உபதேசஞ்செய்ய-கேட்டும்-அதைக்கேள்விப்பட்டும் - உயர்தருஞானிகளாகி-மாட்சிமையுள்ளஞானவான்களாகி - உலகுதொழுவிவேகமொடு - பெரியோர்கள்வணங்கும்விவேகத்துடன் - விரத்தி - விரத்தியானும் - தெய்வகதியால் - தெய்வகதியானும் - முத்தி-மோட்சத்தை - உற்றிடுவர்-அடைவர் - இவர்வேறு - முற்கூறியவர்களையன்றிவேறேயிவர்களும் - மூவதிகாரிகளாம் - மூன்றதிகாரிகளாகும்.—எ—று,

சத்தியமுத்தனென்பது - சத்தியோமுத்தனும் - ஆகவேஞானமுதயமானபோதேசீவன் முத்தனாவனென்றாயிற்று,

(பதசாரம்,)

முன்னிதித்தியாசனத்திற்காட்சிப்பட்டுத்தெளிந்தபரவஸ்துவேதானாகச் சமாதியின்கண் ணுதயமான வபரோட்சசாட்சாத்காரமானவப்போதேமுத்திபெற்றானென்பார் - உண்மைமுத்தனுமவனேயாரூடனெனவும்- அசத்தியமானவிச்சகஞ்சிருஷ்டியாதற்குமுன் சத்தா மாத்திரமாயிருந்ததியாதென்கின்றவிவேகத்தேர்டுகுருமுகமாய்விசாரித்திவ்வசத்தைநீக்கியச்சத்தா யிருக்கின்றபிரமத்தையடைந்தானென்பார்-உலகமுதலியாதெனத்தேர்விவேகமொடுகுருவையடைந்தெனவும்-தேகமுதற்பிரகிருதியீறானசகலதத்துவங்களுமனித்தியவஸ்துவெனக்குருமுகமாய் விசாரித்தவைகளில் விரத்தியுடையவனாயிவைகளழிந்துமழியாதிருக்கின்றதானே நித்தியமானபிரமமென்றறிந் தஃதை யடைந்தானென்பார் - உடம்பாதிபொய்யெனக் கண்டு விரத்தியினு லருட் குருவை யடைந்தெனவும் - ஒன்றிலும் பற்றற் றிருக்கின்ற நின்மலமானசித்

தத்திலாசிரியர் மாணாக்கனுக் குபதேசிக்கும் பிரமானுபவந் தெய்வகதியாலடைந்து அப்பிரமத்தையடைந்தானென்பார் குரவன்றன்மகற் குபதேசஞ்செய்துறக் கேட்டுத்தெய்வகதியாலுயர்தரு ஞானிகளாகி முத்திபுத்திபெறொணவுங் கூறினார் - தெய்வகதி யென்றது இவனது முயற்சியின்றி-கதநிஷ்காம்புண்ணிய பரிபாகத்தினாற் றனக்குத் தானேயோர் முன்னிலையிலுண்டாவதெனக்கொள்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

இச்சகத்தையு மிதிலுள்ளசுகதுக்கங்களையுமுளதெனக்கருது மறியாமையை நீக்குவான்கருதி, யந்தணர்முதலிய நான்கு வருணத்தார்க்கும் விதித்த தத்தம்விதிப்படி நடக்கினிச்சக போகங்க ளசத்தியமாய்ப் பரலோக போகங்கள் சத்தியமாமெனக்கருதி நடப்பவனே கருமியும் - இக்கருமமுதிர்ச்சியாலிவ் விகப்ர முண்மையெனின் இன்மையாகவு மின்மையெனினுண்மையாகவுந் தோற்றுகின்றதேயெனவையமுற் றிவற்றினுண்மை வெளிப்படுநிமித்த மிச்சகசம்பந்தமில்லா தசற்கருமங்கள்செய்பவனே முமூட்சுவும் - இச்சற்கருமமுதிர்ச்சியாற்கனவைப்போல - மனத்தோற்றமேசகமெனக்கருதி சமாதி யனுஷ்டிப்பவனே யப்பியாசியும் - இவ் வப்பியாசமுதிர்ச்சியா னிச்சகரூபமாகிய மனதின்காரண மானவ்நிவுருபமாயதனிடத் தமைந்திருப்பவனே யனுபவியும் - இவ்வறிவின்முதிர்ச்சியாற் றானேசகமா யிச்சகத்தோற்றமின்றிச்சாட்சாத்காரமா யிருப்பவனே ஆரூடனும் - இச்சகத்காரண மியாதென்னும் விவேகத்தினாற் குருமுகமாய் விசாரித்துப்பிரமமே தாமெனத் தெளிந்தவிவேகியும்- தேகமுதலியவைகளநித்தியமா யிருக்கின்றதே மேனித்திய மியாதென்கின்ற விரத்தியினாற் குருமுகமாய் விசாரித்துப் பிரமமேநித்தியமெனத்தெளிந்த - விரத்தனும்- இப்பிரமமேநீயெனச்சீடனுக் காசிரியருபதேசிக்கு முபதேசமே தனக்குபதேசமாகப் பிரமமே தானெனத் தெளிந்ததெய்வகதியனுமாகியவிவ்வெண்மரு மதிகாரிகளாவரென்பதாம். (௰௫)

(அவதாரிகை)

சீடர்களதிகாரபேதங்களால்வரு மாசிரியர்பேதமெண்வகையாகக் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளிற்போதகர்முதலிய

நால்வரிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

சாதகர்களாஞ்சீடர்பேதத்தாற்குரவர்............ *
தாமும்போதககுருவேமுதலாகவிருநாற் ............ *
பேதமடைகுவரவரிற்போதகன்முன்னூலிற் ............ *
பெரும்பொருள்கூறிடுபவன்றத்துவந்திகழ்த்துபவனே *
வேதகனல்வசியாதியாலிம்மையின்பம் ............ *
வெந்துயராங்குதவுமவனிகிதகுருவறத்தைப் ............ *
போதகஞ்செய்திருமையினுமின்பமருள்பவனே ............ *
புகழ்தருகாமியகுருவென்றறைகுவர்மூதறிஞர் ............ *

(இதனதுபதப்பொருள்.)

சாதகர்களாம் - முற்கூறிய வப்பியாசிக ளாகிய- சீடர்பேதத்தால் - மாணாக்கர் பேதங்களினால்-குரவர்தாமும்- ஆசிரியர்களும் - போதககுருவேமுதலாக-போதகாசாரியராதியாகிய-இருநாற்பேதமடைகுவர்- எண்வகைப்படுவார்கள்-அவரில் - அவர்களில்- முன்னூலின்-முதனூலான வேதத்தினுள்ளமகாவாக்கியத்தின்- பெரும்பொருள்கூறிடுபவன்-மாட்சிமையுள்ளவருத்தத்தைப் போதிப்பவனே - போதகன்-போதகாசாரியராம்-தத்துவந்திகழ்த்துபவன்- பிரகிருதிமுதலிய தத்துவங்களைவேதித்துப் பரதத்துவத்தைத் தெரிசிப்பித்தவனே-வேதகன்- வேதகாசாரியராம்- நல்வசியாதியால்- நன்மையுள்ள வசியமுதலிய வஷ்டகருமங்களால் - இம்மையின்பம் - இப்பிறப்பிலின்பமும்- வெந்துயராங்கு- மறுமையில் வெவ்விபதுன்பமும் - உதவுமவன் - கொடுப்பவனே-நிகிதகுரு-நிகிதாசாரியராம்-அறத்தை - காமியகருமத்தைச்சொல்லுங்கருமநூலை - போதகஞ்செய்து-போதித்து-இருமையினும்-இம்மைமறுமையிரண்டினும்- இன்பமருள்பவனே-பேதசுகங்களைவருவிப்பவனே- புகழ்தரு- புகழ்பெற்ற- காமியகுருவென்று - காமியாசாரியரென்று - அறைகுவர்மூதறிஞர்-பேரறிவையுடையோர் சொல்லுவார்கள்—எ—று.

நிஹிதமென்னுமாரியமொழி - மூன்றேயகவுமென்னுஞ்சூத்திரப்படி நிகிதமெனவந்தது -எனவே-விகிதமான்ஹிதத்தைநீக்கலானிகிதமாயிற்று - வசியாதியென்றது - வசிய

ம் - மோகனம்-தம்பனம்-ஆகருஷிணம்-உச்சாடனம் - வித்துவேஷிணம் - பேதனம்-மாரணம் - என்னுமட்டகருமங்களாம் - அவை-சத்தியநாத-சதோகநாத- ஆதிநாத-அநாதிநாத-வகுளிதநாத-மதங்கநாத - மச்சேந்திரநாத - கடேந்திரநாத - கோரக்கநாதமென்னும் - நவநாதசித்தர்களாற்கற்பிக்கப்பட்டகவுளயாமளாதிகளில் - இம்சை-மைதுனதி - நிடேதகருமமுள்ள - பலசாத்திரங்களிற்கூறுவனவாம் - அவற்றுள் - ராஜவசியம்-சனவசியம் - ஸ்திரீவசியம் - சுரபூதகிரகாவேசங்களைவசியமெனவும் - பாதுகாசித்தி - யஞ்சனசித்தி-குளிகாசித்தி-மூலிகாசித்தி-ரசவாதாதிசித்திகளைச் செய்வது-பேதனமெனவும் - சுழுத்தி - விடம்-மூர்ச்சா-சாதுரிககரணலெட்சணமாயங்களைச்செய்வதே மோகனமெனவும் - அக்கினிஸ்தம்பம் - சிம்மஸ்தம்பம்-சலஸ்தம்பம் - இந்திரியஸ்தம்பம்-கட்கஸ்தம்பம் - கதிஸ்தம்பம் - ரூபஸ்தம்பாதிகளைச்செய்வது-ஸ்தம்பனமெனவும்- வஸ்திராபரணவாகனவனிதாதிவஸ்துக்களை - நிசஸ்தானத்திலிருந்துவரச்செய்வதேஆகருஷிணமெனவும் - பூருவசுகாசரிதநிரசனத்மகமே - உச்சாடனமெனவும் - பிராணசினேகமானவிடத்தன்னியோன்னியவிரோதகரணஞ்செய்வதே - வித்துவேஷிணமெனவும் - அபிசாரகன்மஜனிதவியாதியாதிகளிலிருந்தகால்மிருத்துவரச்செய்வதேமாரணமுமாம், (௰௬)

(அவதாரிகை.

இச்செய்யுளினிறுத்தமுறையாற் சூசகர்முதனவ்வரிலக்கணமுஞ்சிடாதிதீவரயக்குவதினுல்வருந்துக்கதரிசனமுமுணர்த்துகின்றது,

(கவி.)

சூசகனும்விவேகத்தாற்சமைமுதலாங்குணங்க........ ..[ன்
டொகுப்பவன்பொய்விடயமெனவான்மவிருப்பருள்வோ
வாசகனுஞ்சிவசீவரயிக்கியஞானத்தை.........................*
வழங்குமவன்காரகனையந்தவிர்த்துநிலைத்த ......... ...*
வாசகனுமூத்தியருள்பவன்விதிதகுருவா..................*
மதிகாரியிவராகுமெனமுன்னார்கூறு .....................*

நேசமுறுசீடர்தம்முளொருவன்முத்தாப-...-........... *
நெருப்பினால்வெந்துசிந்தாகுலமுடையனாகி.......... *

(இதனதுபதப்பொருள்.)

விவேகத்தால்-விவேகமூகத்தினால்-சமைமுதலாங்குணங்கள்-சமாதிசட்குணங்களையும் - தொகுப்பவன்-ஒருங்கேவரப்பண்ணுகிறவனே - சூசகனும்-சூசகாசாரியராம் - பொய்விடயமென - சகத்துருவமானவிடயங்களைத் துமித்தையென வெறுத்து - ஆன்மவிருப்பருள்வோன்-ஆத்மாநித்தியமெனவிருப்பமுண்டாகச்செய்பவனே- வாசகனும்-வாசகாசாரியராம் - சிவசிவரயிக்கியஞானத்தை - பரமாத்மாயிக்கஞானத்தை - வழங்குமவன்-கொடுப்பவனே- காரகன் - காரகாசாரியராம்- ஐயந்தவிர்த்து - சந்தேகநீக்கி- நிலைத்த- நிலைபெற்ற ஆசகலுமுத்தி - குற்றமற்றமோட்சத்தை - அருள்பவன் - அனுக்கிரகிப்பவரோ-விகிதகுருவாம் -விகிதாசாரியராம் - அதிகாரியிவராகுமென - இவர்களதிகாரியாவர்களொன்று - முன்னர்க்கூறும் - முன்புசொல்லாநின்ற - நேசமுறுசீடர்தம்முள்-அன்புள்ளசீடர்களுக்குள்ளே-ஒருவன் - ஒருபுருடன்- முத்தாபநெருப்பினால் - தாபத்திரயாக்கினியினால்-வெந்து-வேகப்பட்டு-சிந்தாகுலமுடையனாகி- மனதிற்றுக்கமுடையவனாய்—எ—று,

விருப்பென்றமையால் வெறுப்புவருவிக்கப்பட்டது - விசேடமான இதத்தைச்செய்தலால் - விகிதமெனவந்தது- காரகன் - கொடுப்பவன் - எனவே - ஐயிக்கியஞானத்தைக்கொடுப்பவனென்பதாயிற்று-முற்கூறிபசாதனசதுட்டயத்தினுள்ளமுமூட்சுமுதற்றெய்வகதியனீறான - அதிகாரிகள்பன்னிரண்டனுள்உத்தமன் - மத்திமன்-அதமன்- அதமாதமனென்ன வொன்றற்கொன்று தாரதன்மியமாயிருப்பாராதலி னிச்சீடர்கள் பக்குவங்களைக்குறித்துவந்தநாமமென்வகையாதலா லவ்வாசிரியர் பேதமின்றென்பதும் - இவற்றுள்-விகிதகுருவினாலடைந்த தெய்வகதியனும் - காரககுருவினாலடைந்தமுன்னையமுமூட்சுவும்-ஞானகாண்டியும்அனுபவியும்ஆரூடனும்இவ்வவைவருமுத்தமரெனவும் -சூசககுருவினாலடைந்த பத்திகாண்டியும் - வேதககுருவினாலடைந்தஅப்பியாசியும்- போதக்குருவினாலடைந்த விவேகியும்- வாசககுரு

விஞலடைந்த பின்னைய முமுட்சுவும் - விரத்தியனும் -இவ்வைவருமத்திம ரெனவும் -காமியகுருவிஞலடைந்த கருமகாண்டிஅதமனெனவும் - நிகிதகுருவிஞலடைந்த- அஷ்டகருமி-அதமாதமனெனவுமாம்.

விஞ இவற்றுள்-கருமகாண்டியுமதிகாரியாவனேவெனின்.

விடை. மூன்றுப்தமுட்டனென்ற கவியில் - அதிகாரியென்றமையானும் - துன்பத்தி லதிதப்பட் டிருந்தமை - அத்துன்பந்தோன்று நிமித்தந்- தனுவையு-மதைப்பற்றியகுடும்பத்தையுங் - கொடுத்தவற்றை யானென தென்னுமபிமானத்தினுற் - சுகதுக்கந்தோன்றி - யவைகணீக்குமாபினுடன்பட்டாருதலானுமவனுமதிகாரியாவனெனக.

விஞ அற்றேல்-அவன்அதமாதமனுவானேனெனின்.

விடை, அக்கினிபற்றுந் - தன்மையுள்ள-பஞ்சுகரிகாட்டமிம்மூன்ரேடுமரம்பையுஞ் சேர்த்திருப்பதனுலெனக.

விஞ. அங்ஙனமாயின் - சிலவேதாந்த நூலிற்சேர்க்கவில்லையேயெனின்,

விடை. சரிதைகிரியை யோகமென்கின்ற - மூன்றுபாதங்களுங்கடந்துமேன் ஞான பாதத்திற்கு வந்த வதிகாரிகளைநோக்கியெனக,

விஞ. நிகிதகுருவுமாசிரியராவரோவெனின்

விடை. நல்வசியாதியென்றமையானு மக்கிரியைசிலசீவர்கட்கனுகூல நிமித்தமா யிருக்கின்றமையானு மவருமாசிரியராவரெனக,

விஞ, அற்றேல்-அவரை நிகிதகுருவென்பானேனெனின்,

விடை, சமயாய்ப் ரோட்சமாக விழிவான கருமங்களையுபர்வாசவித்திரனுக்குப் பிரகஸ்பதி யுலகாயிதமதம் - போதித்ததுபோலப் போதிக்குங் கருமத்தினுல் வந்ததெனக.

விஞ, அங்ஙனமாயி னிவ்வாசிரியர்களுடன்சேர்க்காமனீக்கக்கூடாதோவெனின்,

விடை, பிரகஸ்பதியை நீக்காமையாற் கூடாதெனக,

தாபத்திர யாக்கினிகளாவன - பதினுன்கு விடயங்களானும் வியாக்கிராதி துஷ்டஜெந்துக்களானுந் தேகத்திற்குவருந்துன்பங்களைத் தனதாகப் பாவித்துவருந்துதல் - ஆதிபௌதி

கமும் - மனாதிகரணங்களை யியக்குதற்கேதுவான சந்திரா திதேவதைகளானும்-ஐயன்பிடாரிமுதலான துர்த்தேவதைக ளானு மந்தக்கிரணாதிகளுக்கு வருந்துன்பங்களைத் தனதாக ப்பாவித்து வருந்துதல்- ஆதிதெய்வீகமும் - தானல்லாதவை த்தானெனக்கருது மகம்பாவத்தினாற் சங்கற்பரூபமானசிதா பாசாதியகரணங்களா லுண்டாகும் வருத்தங்களைத் தனதாக ப்பாவித்துவருந்துதல் - ஆதியாத்மீகமு மாகியவிவைகளே யாம்,

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

ஆசிரியர்கள் சீடர்களுக் குணர்த்து மிலக்கணங்களிஃதென வுணர்த்தியதாம், (௰எ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மேற்கூறிய சீடரு ளொரு முமூட்சுவானவ ன் றனது துன்பங்களை நீக்குவான்கருதி ஞானாசிரியனையடை ந்துவினாவுமதனிலக்கணமுணர்த்துகின்றது

(கவி)

நானாரிப்பவமெனக்குவந்தவாறென்கொ...... ...... ..*
னசிப்பதெவராலெனவாய்ந்தலர்கரங்கொண்டேகி ... *
யானாநற்கல்வியறிவடக்கம்வைராக.. ......... .........*
மாதியாங்குணமுடைச்சற்குருவையடைந்தெதிர்மண் *
ணாரப்பணிந்தெழுந்தன்பாற்கரங்கள்குவித்து ... ...*
வுறவழுத்தியருட்குருவேயென்பாசத்தழிவு ... ....... *
தானுமெத்திறத்தினுமெனவினவல்சீடன் .. ............ *
றனதுவிதிவத்துபசன்னத்துவமாமன்றே..............*

(இதனதுபதப்பொருள்.)

நானார் - நானியாவன்-இப்பவம் - இச்செநநம்-எனக்குவந்த வாறென்- எனக்குவந்தவகையென்ன- நசிப்பதெவராலென- இதுகெடுவதுயாவராலென்று- ஆய்ந்து- இவ்வாறுதன்னுள்வி வேகித்து - அலர்கரங்கொண்டேகி-பத்திரபுட்பபலாதிகளை க்கையிலெடுத்துக் கொண்டுபோய் - ஆனா-என்று நீங்காத-ந ற்கல்வி - வேதாந்தசிரவணாதிகளும் - அறிவு-அவற்றானுதய மானஞானமும் - அடக்கம் - அந்தஞானத்தினான்மனங்களா தலும் - வைராகமாதியாம்- யாவுந்தானாய்விளங்குநிராசைமு

தலிய - குணமுடை - நான்குகுணங்களையுமுடைய - சற்குருவையடைந்து - ஞானுசாரியரைச் சரணுகெதி யடைந்தவர் திருவடித்தாமரைகளின்மலர்களாலருச்சித்துநைவேத்தியமுஞ்செய்து- எதிர் - அவ்வாசிரியர்சந்நிதிமுன் - மண்-நிலத்திலெழுந்துவந்துகண்ணேணை-ஊனுரப்பணித்து-தனதுமெய் தோயவணங்கி- எழுந்து-எழுகென வெழுந்து- அன்பால் - மெய்யன்பினல்- கரங்கள்குவித்து -கைகளைக்கூப்பிச் சிரசின்மேல் வைத்துக் கொண்டு - உறவழுத்தி-நாவிற்பொருந்த வட்டமந்திரங்களாற்றுதித்து - அருட்குருவே -கருணைவடிவமான வாசிரியரே- என்பாசத்தழிவு - எனதஞ்ஞானநாசம் - ஆமெத்திறத்தினுலெனெ-எவ்விதத்தினுலாமென்று - வினவல் - கேட்பது-சீடன்றனது - மாணுக்கனது -விதிவத்து-விதிப்படி-உபசன்னத்துவமாம் உபசன்னத்துவமாம்—எ—று.

கொல் - தான்-அன்றே-அசை-அலர்கரங்கொண்டேகியென்றதனுற் றிருவடித்தாமரைகளில் - அருச்சித்தென்பதும் அதற்கங்கமானநைவேத்தியமானபலமும்-வருவிக்கப்பட்டன மண்ணுனுரப்பணிந்தென்றது - அட்டாங்கநமஸ்காரமாம்- அவையாவன - பதத்துவயம் கரத்துவயம் - புசத்துவயம்- லலாடம் - வட்சம் இவ்வெட்டும்பூவிலணைபப்பணிவதாம்-அட்டமந்திரமாவன - குருகீதையில் சைதன்யஞ்சாஸ்வதமென்னுஞ்சுலோகத்தாற்காண்க - வழுத்தியருட்குருவேயென்றது-ஞானுதிசட்குணசம்பன்னனுனபகவானேயெனத்துதிப்பதாம் - ஞானுதிசட்குணமாவன-ஞானம்-வைராக்கியம்-பலம்-அயிஸ்வரியம்-கீர்த்தி-ஸ்ரீ-என்பனவாம்-உபசன்னத்துவமென்பது-உப - [illegible]ம்-சன்னத்துவம்- இருத்தல்-எனவேசமீபத்திற்கேட்கவேண்டியகேள்வியைக் கேட்டலென்பதாயிற்று - கைகுவித்துவுறவழுத்தியென்பதில்-குற்றுகரங்கெடாதுவ்வகரவுடம்படுமெய்வந்தது - தன்முகமாகத்தானழைப்பதுவே - என்பதனுற்காண்க.

(இதனதுதாற்பரியம்,)

தனதாத்மவிலக்கணத்தையு மனுத்மவிலக்கணத்தையு மஃதுண்டானவகையும் நசிக்கும்வகையும் விசாரித்தனுத்மாவைக் கெடுத்தாத்மாவைவிளக்குவிப்பவர்நிராசைமுதலியகுணங்களுடைய வாசிரியரே யெனத் தெளிந்தவராது- தெரிசனஞ்

செய்திவ்வனாத்மருபமானபாசநாசம்வருமாறுவினாவினனென்பதாம், (௰அ)

(அவதாரிகை,)

இச்செய்யுளின் முற்கூறிய சீடனது பக்குவத்தை யறிந்து தீட்சா சமஸ்காரஞ் செய்தவனதறியாமையால்வந்த வனாத்ம புத்தியைநீக்கி- மஹாவாக்கியத்தின்பதார்த்தமான வாத்ம சொரூபமே நீயெனவுபதேசித்தப்பொருளை ஐயந்திரிபின்றி வெளிப்படுத்துநிமித்தமுபதேசிக்குமுபதேசமுமுத்தேசமுதன்மூன்றுவிதமாமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

ஆனையவனதிகாரந்தெரிந்தருளானோக்கி............ *
யஞ்சலோம்பென்றபயகரஞ்சிரத்திலிருத்தி............ *
புனையவருஞ்சுருதியுத்தியாலவனனான்ம .................... *
புத்தியினையொழித்துத்தாதான்மியவாக்கியத்தா...... *
னினைவரியவொருபிரமநீயேயென்றுள்ள................ *
நிலையையுணர்த்துதல்குரவனுபதேசமாகு............. *
மினையவுபதேசமுறையுத்தேசமுடனே.................. *
யிலக்கணஞ்சோதனையெனு மூன்றினையுமுடைத்தாமால்

இதனதுபதப்பொருள்.

அனையவனது - அங்ஙனம்வினாவியசீடனது- அதிகாரந்தெரிந்து - பக்குவமறிந்து - அருளால் - ஆசிரியரதுகிருபையால்-நோக்கி-கருதிப்பார்த்து - [illegible] -பயப்படாதே- ஓம்பென்று-யாமருள்வதைப்பாதுகாப்பாயென்று - அபயகரம்-தனதபயாஸ்தத்தை - சிரத்திலிருத்தி- அவனது சிரத்தின்கண்வைத்து - புனையவரும் - சாத்திரனாலலங்கரிக்கப்பெற்ற - சுருதி-சுருதியினாலும்-உத்தியால் - உத்தியினாலும்-அவன்-அவனது - அனான்மபுத்தியினை - தேகான்மபுத்தியை-ஒழித்து - நியதிகளைந்து-தாதான்மியவாக்கியத்தால்-ஒன்றுபடுத்திக்கூறுமகாவாக்கியத்தினால் - நினைவரிய-நினைத்தற்கரிய-ஒருபிரமம் ஒப்பற்றபிரமம்-நீயேயென்று-நீதானென்று-உள்ளநிலையை - உள்ளதத்துவத்தை-உணர்த்துதல் - அறிவித்தல்- குரவனுபதேசமாகும்- ஆசிரியருபதேசமாம்-இனையவுபதேசம் - இத்தன்மையுள்ளவுபதேசமானது - முறை

கிரமமாக - உத்தேசமுடனே, உத்தேசத்தோடும்- இலக்கணம் - இலக்கணமும்-சோதனையெனும்- சோதனையுமென-மூன்றினையுமுடைத்தாம் - இம்மூன்று வகையினையுமுடையதாம்—எ—று. ஆல் - அசை - ததாத்ம்யேருபாவா - தாதான்மியம் -எனம்வ-யயிக்கியவஸ்துவை விளக்குதல்.

பிரமம்நீயேயென்றது - அதுவேநீயென்பதாம்-எனவே-அதுநீயாயினையென்னுமகாவாக்கியார்த்தமானபிரமோபதேசமாம்.— நோக்கிக்கரஞ்சிரத்திலிருத்தியென்றமையாலவை கட்கினமானகருதல்வருவிக்கப்பட்டது.

கமடம்போலக்கருதலும்-சலசரம்போலநோக்கலும்-குருகுபோலப்பரிசித்தலும்-இம்மூன்றுந்தீட்சாசமஸ்காரமாம்-இவை- அகத்தீட்சைமூன்று - புறத்தீட்சைமூன்றாகக்கூறுதலுமுள-வவைகளு மிவற்றிலடங்கியிருக்கின்றன - அவையெங்ஙனமெனின் - நோக்கிற்கருதலும்யோகமுமடங்கின - இம்மூன்று மகத்தீட்சையெனவும்- கரஞ்சிரத்திலிருத்தியென்றபரிசித்தலிற்- சுருதியென்றதாலும் நீயேபிரமமென்றவாக்குமடங்கின - இம்மூன்றும் புறத்தீட்சையெனவுங்கொள்க.

(பதசாரம்.)

முன்றுன்பமென்றறித்த தேகமுதலிய விடயங்களொன்றினுஞ் செல்லாதின்புருவமான தத்ஸ்வரூபந் தரிசனமாமவ்விதினில்லாது - மத்தியிற்கலக்கமுற்றுத் துன்பநீங்கி யவ்வின்பமெங்ஙன முதயமாமென வவசரப்படுந் தீவிரதரபக்குவனென்றறிந் தசிரன்பார் - அனையவனதிகாரந்தெரிந்தென்றும் - அவனதி[illegible]வம் வியாபிக்கு நிமித்தந் தீட்சாசமஸ்காரமானபூரண திருஷ்டிவைத்தாரென்பார் - அருளானோக்கியென்றும் - அத்துன்பமான விடயங்களுக்குஞ்சாதனைகளைநீக்குநிமித்தம் அஸ்தமஸ்தகசையோகஞ்செய்தாரென்பார்-அஞ்சலேலாமவென்றபயகரஞ்சிரத்தி லிருத்தியென்றும்-தானாய்விளங்குமாத்மஸ்வரூபம்விளங்கத்தேகாதிப்பிரவஞ்சத்தையுண்மையாகக் கொண்டதைநேதிகளைந்தாரென்பார்-புனையவருஞ்சுருதி யுத்தியாலவனுன்ம புத்தியினையொழித்தென்றும் - மஹாவாக்கியத்தி னருத்தமான - அதுநீயானாயென்னுமத்துவித ஸ்வரூபமான - தன்னை யபரோட்சமாகத்தெரிசிப்பித்தாரென்பார் - தாதான்மிய வாக்கியத்தாலினைவறியவொரு பிரமநீயே யென்றுள்ள நிலையை யுணர்த்துதல்

குரவனுபதேசமாகுமென்றங்கூறினர் (௰௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியவுத்தேசமுதன் மூன்றிலக்கணமுமப்பொருளனுபவமாதற்குக் காட்சிமுதலிய வெண்வகையளவையுமுணர்த்துகின்றது.

(கவி.)

அறியவுணர்த்துறுபொருளைநாமமாத்திரையா ........ ✻
யறைந்திடுதலுத்தேசமாங்களகம்பளமாங் ........ ✻
குறியுடையதனைப்போலப்பொருளிற்சிறந்த ........ ✻
குறியுரைத்தலிலக்கணமவ்விலக்கியமாம்பொருளிற்... ✻
செறிவுறுமவ்விலக்கணமுண்டோவில்லையோவென்னத் .... ✻
தெரிந்திடுதல்பரீட்சையோர்பொருளறிந்துபெறற்குப் ✻
பொறியுறற்செய்காட்சியாமளவைமுதலாகப் ........ ✻
பொருந்துபிரமாணங்களெட்டுளவாமன்றே............ ✻

(இதனதுபதப்பொருள்.)

அறிய - சீடனுக்குவிளங்க - உணர்த்துறுபொருளை - ஆசிரியரறிவிக்கும்பொருளை - நாமமாத்திரையாய் - பெயர்மாத்திரந்தோன்ற - அறைந்திடுதல் - உரைத்திடுதலே உத்தேசம் - உத்தேசமாம் - களகம்பளமாம் - அலைதாடியாகிய - குறியுடையது - அடையாளமுள்ளது - அதனைப்போல் - பசுவென்றதுபோல - அப்பொருளில் - அந்தப்பொருளின் பொதுவானபல குறிகளையுந்தள்ளி - சிறந்தகுறியுரைத்தல் - விசேடமானவோரடையாளஞ்சொல்லுவதே - இலக்கணம் - இலக்கணமும் - அவ்விலக்கியமாம்பொருளில் - அதன்லட்சியமானபொருளின்கண் - செறிவுறும் - பொருந்திய - அவ்விலக்கணம் - அந்தலட்சணமாவது - உண்டோவில்லையோவென்ன - இருக்கின்றதோ வில்லையோவென்று - தெரிந்திடுதல் - தெரிந்துகொள்ளுவதே - பரீட்சை - பரீட்சையும் - ஆம் - அம்மூன்றுமாம் - ஓர்பொருள் - இங்ஙனம்லட்சியித்தவாப்பிறபரவஸ்துவை - அறிந்துபெறற்கு - தெரித்தடைதற்கு - பொறியுறல்செய் - அறிவினுலுற்றறியும் - காட்சியாமளவை முதலாக - பிரத்தியட்சப்பிரமாணமுதலேதிகமீருக - பொருந்து - அமைந்திருக்கின்ற - பிரமாணங்கள் - அளவைகள் -

எட்டுளவாம் - எட்டுவகை யுள்ளனவாம்—எ—று—அன்றே. ஆசை.

களமென்பது-கண்டம்-கம்பளமென்பது-கம்பிளியின் ஞாலாநின்றவலைதாடியாம் - ஆசிரியர் பிரமமேநீயென்பது பரோட்சமாகத்தோன்ற வுபதேசிப்பதே - உத்தேசமெனவும் - அங்ஙனந்தோன்றியபிரமம் அபரோட்சமாய் நிரதிசயாநந்த வடிவமெனத்தோன்றவுபதேசிப்பதே - இலக்கணமெனவும் - அவ்விலக்கணம்-சத்தாவத்தையினும்பேதியாமற்றானாய் விளங்கும்படிசோதிக்கவுபதேசிப்பதே- பரீட்சையெனவுங்கொள்க,

சத்தாவத்தையாவன - சாக்கிரம்-சொப்பனம்-சுழுத்தி-துரியம் - துரியாதீதம் - மூர்ச்சை-மரணமென்பனவாம் - காட்சிமுதலென்றது - பிரத்தியட்சம்-அனுமானம்-ஆகமம்-உவமானம்- அருத்தாபத்தி-அபாவம் - சம்பவம்-ஐதீகம்-என்பனவாம்- இவற்றுள் - சுதரிசனம்-பிரத்தியட்சம்- அனுமித்தல்-அனுமானம் - வேதம்- ஆகமம்-உவமித்தல்-உவமானம்- அருத்தத்துக்காபத்துவருதல்-அருத்தாபத்தி- என்றுமின்மை-அபாவம்-உண்டெனல்-சம்பவம்-இவண் தொன்றுதொட்டுவருகை-ஐதிகமாம்-இகம்-இபதி-ஐதீகமெனவந்தது.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

ஆசிரியர் சீடனதுபக்குவங்களறிந்துபதேசிக்கும்போதே விஸ்மரணையாவுநீங்கித்தனித்தவிடஞ்சாமானியமாகத்தோன்றவு மஃதே தனதுபேரின்பமாக விளங்கவு மஃதேயாவும்பிரமஸ்வரூபமாகக் கண்டமையும்படி யுபதேசித்தாரென்பதாம். (உ௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியவளவை யெட்டனுள் - காட்சிமுதன்மூன்றுபிரமாணங்களினிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி.)

குடமுதலாமவற்றினதுகாண்கைதானே ..................*
காட்சிபுகையாலங்கிஞானமனுமானந் ..................*
திடமருவுமவ்வனுமானப்பதிஞையேது ..................*
திட்டாந்தமெனுமங்கமுடைத்தவற்றுட்பதிஞை ..........*

யிடமலைவெவ்வழலுடைத்தென்பதுபுகையுண்மையினா...*
லெனலேதுமடைப்பளிபோலென்பதுதிட்டாந்த......*
முடைமையுணராத்தனையானதிதீராதி..................*
யுறுகனியாதிகளுண்மைஞானமாகமமாம்..................*

(இதனதுபதப்பொருள்.)

கடமுதலாமவற்றினது - கடமாதியவஸ்துக்களின் - காண்கைதானே - தரிசனமே - காட்சி - பிரத்தியட்சமும் - புகையால் - தூமத்தினால் - அங்கி - அக்கினியுண்டென்னும் - ஞானம் - ஞானமே - அனுமானம் - அனுமானமும் - இடமருவும் - இவ்வாறு துணியப்படும் - அவ்வனுமானம் - அந்தவனுமானமும் - பதிஞை - பிரதிஞ்ஞையும் - ஏது - ஏதுவும் - திட்டாந்தமெனும் - திஷ்டாந்தமுமென - அங்கமுடைத்து - மூன்றங்கங்களையுமுடையதாம் - அவற்றுள் - அம்மூன்றனுள் - இடமலை - விசாலமானமலை - வெவ்வழலுடைத்தென்பது - வெம்மையானதீயையுள்ளேயுடையதென்பதே - பதிஞை - பிரதிஞ்ஞையும் - புகையுண்மையினாலெனல் - தூமமுள்ளதனாலென்பதே - ஏது - ஏதுவும் - மடைப்பளிபோலென்பது - இப்பாகசாலையைப்போலென்பதே - திட்டாந்தம் - திஷ்டாந்தமுமாம் - உடைமை - தேசத்திலுள்ள பொருள்களை - உணராத்தனையால் - அறித்தவிஷ்டன்யதார்த்தவசனத்தினால் - நதிதீராதி - நதிக்கரைமுதலியவற்றில் - உறுகனியாதிகள் - பழமுதலிய விருக்கின்றனவென்னும் - உண்மைஞானம் - சற்பாவஞ்ஞானமே - ஆகமம் - சத்தமுமாகியபிரமாணங்களாம் — எ — று.

பிரமாணமென்றதை - மற்றிரண்டிடத்திலுங் கூட்டுக - கடமுதலென்றமையின் படமுங்கொள்க - கொள்ளவேகண்முதலியவைவந்து பொறிகளினானும் - ரூபமுதலிய பஞ்சவிடயங்களையறியுமென்பதாயிற்று. (உக)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையானருத்தாபத்திமுதலிரண்டளவையினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

பகற்பொழுதுண்ணானொருவனிளையாமைகண்டு.........*
பரிந்திரவுண்கற்பித்தல்காணருத்தாபத்தி..................*

யகத்தினிலையுறுதேவதத்தனெனிலிருப்ப.............. ....*
னவன்வேறோரிடத்திலெனத்தெரிந்தறிதறன்னைத்........*
தகப்பெரியர்கேள்வியருத்தாபத்தியென்பர்... ....... ...*
தகுபசுவோடொக்குமரையெனுமொழிகேட்டிருந்தோன்
புகப்படரும்வனத்திற்றன்விடயஞானத்தாற் ....... .......*
பொருந்துதலையுவமானப்பிரமாணமாகும்.. .........*

(இதனுபதப்பொருள்.)

பகற்பொழுது - பகற்காலத்தில் - உண்ணுமொருவன் - புசியாதவோர்புருடன் - இளையாமைகண்டு - பூரித்திருத்தலைப் பார்த்து - பரித்து - ஆசையுடன்- இராவூண்கற்பித்தல் - இரவிலுணவையொளித்துண்பானெனக்கற்பித்துச்சொல்வதே- காணருத்தாபத்தி - காட்சியருத் தாபத்தியும் - உறுதேவதத் தன்-நீகேட்ட சீவிதபுருடன் - அகத்தினில்லையெனில் - வீட்டின் கணில்லையென்னில் - அவன்வேறோரிடத்தில் - அப்புருடன்மற்றோரிடத்தில் - இருப்பனென - இருப்பானென்று- தெரிந்தறிதறன்னை - கண்டறிவதை - தகப்பெரியர்- தகுதியுள்ளபெரியோர்கள் - கேள்வியருத்தாபத்தியென்பர்- கேள்வியருத்தா பத்தியெனவுஞ் சொல்லுவார்கள்-தகுபசுவோடொக்கும் - இங்ஙனம்பொருந்திய பசுவுக்குச்சமானமாம்- மரையெனுமொழி - மரையென்கின்றவசனத்தை -.கேட்டிருந்தோன் - கேள்விப்பட்டிருந்தவன் - புகப்படரும்வனத்தில் - விஸ்தாரமான வனத்திற்செல்ல - தன்விடயஞானத்தால் - தனதுருபமானவிடயவறிவினால் - பொருந்துதலே - மரையைத்தெரிந்துகொள்ளுதலே - உவமானம் - உவமானரூமாகியபிரமாணங்களாம்—எ—று. (௨௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையாலபாவமுதலிய மூன்றளவையினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

இந்நிலனிற்கடமில்லையென்பதனாற்றோன்று ............*
மின்மையுணர்வபாவமாமாயிரமாகியவெண் ..........*
டன்னிலொருநூறெனுமெண்ணுண்டெனுஞானந்தான் ...*
சம்பவமாமிம்மரத்தினியக்கனுளனென்னுஞ் ....... ....*

சொன்னிகழ்வில்வருமியக்கவிடயவுணர்வதனைச்........ *
சொற்றிடுவரறிஞரைதிகமாகுமளவை.................... *
யென்னவிவண்டொகுத்துரைத்தகாட்சிமுதலாய........ *
வெண்வகையிற்சமயர்கொளலின்னவெனவுரைப்பாம் *

(இதனதுபதப்பொருள்)

இந்நிலனில் - இம்மண்ணின்கண் - கடமில்லையென்பதனால் கடமில்லையென்று சொல்வதனால் - தோன்றும்- உதயமான- இன்மையுணர்வு-கடாபாவஞானமே - அபாவமாம் - அபாவப் பிரமாணமாம் - ஆயிரமாகிய - ஆயிரமான - எண்டனில் - எண்ணிக்கையுள்ளதொகையில்- ஒருநூறெனுமெண்- ஒருநூறென்கின்ற கணக்கு - உண்டெனுஞானம் - உண்டென்னு மறிவே - சம்பவமாம் - சம்பவப் பிரமாணமாம் - இம்மரத்தின் - இத்தருவில் - இயக்கனுள னென்னும் - யட்சனுண்டென்னும் - சொன்னிகழ்வில் - சொல் விளங்குங்கால் -வருமியக்க-மனத்தின்கண்ணுதிக்கும்யட்சரூபமான,-விடயவுணர்வதனை - விடயஞானத்தையே- ஐதிகமாகுமளவையென்ன - ஐதிகப் பிரமாணமென்று - சொற்றிடுவரறிஞர்- அறிவுடையோர் சொல்லுவார்கள் - இவண்டொகுத்துரைத்த - இங்ஙனந்தொகுத்துக்கூறிய - காட்சிமுதலாய- பிரத்தியட்ச முதலிய - எண்வகையில்- எண்விதமானவளவைகளுக்குள் - சமயர்- சமயவாதிகள்-கொளல்- கொண்டபிரமாணங்கள் - இன்னவெனவுரைப்பாம்- இவையிவையெனச் சொல்லுவாம்—எ—று.

வினா- முற்கூறியபிரமவஸ்துவானதையந்திரிபின்றியபரோட்ச சாட்சாத்காரமாதற்குத்திட்டாந்தமாகக்கூறிய வெண்ணளவைகட்குத்தாட்டாந்தமாவதியாதெனின்.

விடை. ஊனக்கண்ணிற்குக்கடமுதலியவைகள் பிரத்தியட்சமாவதுபோல் ஞானக்கண்ணிற்குத்தற்சொரூபஞ்சந்தேகவிபரீதமின்றி யதார்த்தப் பிரத்தியட்சமாகப் பிரமத்தையடையவேண்டுதலிற்காட்சிப்பிரமாணமுங்காரியமாகிய தூமத்தைக்கண்டுகாரணமான வக்கினியைப்பிரத்தியட்சமாகக்காண்பதுபோலக் காரியமாகியதேகாதிபிரபஞ்சத் தோற்றம்விளங்குதலைக்கண்டிவற்றை விளக்குவிக்குங் காரணமானபிரமத்தைப்பிரத்தியட்சமாகவடையவேண்டுதலின் - அனுமானப்பிரமாணமும் - ஆப்தன் வசனத்தினுந்திதிங்களில் - அ

பூருவமான பலங்களிருக்கின்ற தெனவறிந் தவ்வழிச்சென்று
ப்பலத்தைப்பிரத்தியட்சமா யடைவதுபோல மகான்களனு
பவித்துச் சொல்லிய -, சுவானுபவத்தைச் சுருதிமார்க்கத்தி
ற்சென் றப்பிரமத்தைப் பிரத்தியட்சமாகவடையவேண்டுத
லி னுகமப்பிரமாணமும் - ஊ ரெனுழிந்தா னென்பவன் - பு
ருத்திருக்கையா லிரவிற்கரவிற்புசிப்பன் - நீவினவினபுரு
ஷனிங்ஙனில்லையெனின்-மற்றோரிடத்தி லிருப்பனென்னுங்
காட்சி கேள்விகளினு லவற்றைப் பிரத்தியட்சமாய்க் காணப
துபோலத் - தேகமுதலியவைகளனுபவிக்கவில்லையெனினி
ஃதுதேஜசோடும் -விருத்தியடைந்துவருதலினுன்- மறைந்
திருந்தனுபவிக்கின்றனெனவும் அவனெங்ஙனெனினிங்ஙனி
ல்லையென்பதனுலிச்சுட்டிறந்துநின்றனெனவும்- நிச்சயித்
தப்பிரமத்தைப்பிரத்தியட்சமாகவடையவேண்டுதலின் - அ
ருத்தாபத்திப்பிரமாணமும்- மனையைக்காணவேண்டிற் பசு
வின்பொறிகளைக்கூறி - யவ்வலதாடியோன் றில்லையெனச்
சொல்வதனு லவ்வயத்தனுயடவியிற்சென்று மனையைப் பிர
த்தியட்சமாக வறிவதுபோல வாத்மாவையறியவேண்டினனு
த்மாவினடையாளங்களினுமருபநீங்கின தெனக்கூறின விட
த் தவ்வழிச்சென் றஃதே சச்சிதானந்தமெனப் பிரமத்தை
ப்பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் உபமானப்பிரமா
ணமும் - கடமானது முன்பின்னிடையொருகாலத்துமில்லை
யென்று லந்நான்கிடத்து - ம்ருத்திகைபிரத்தியட்சமாயிரு
ப்பதுபோலப் பஞ்சபூதபவுதிகமுதலியயாவு முன்பின்னி
டை யொருகாலத்துமில்லை யென்றதனு லிந்நான்குகாலத்து
ங் காலாதீதமான சத்தே யிருக்கின்றதென்று - அச்சத்தாகிய
பிரமத்தைப் பிரத்தியட்சமாகவடையவேண்டுதலின் - அபா
வப் பிரமாணமும் - ஆயிரமென்னுந் தொகையி னூறுன்
டென்பது பிரத்தியட்சமாவதுபோல வளவின்றிய வெண்
ணிக்கையுள்ள வஸ்துக்களி லெண்ணுபவ தொருவனுளனென
பிரமத்தைப்பிரத்தியட்சமாக வடையவேண்டுதலிற் - சம்ப
வப்பிரமாணமும் - இம்மரத்திற் பேயுண்டென்னுஞ் சத்த
மாத்திரத்தி லஃதுண்மையாய் - அப்பேயுளதிற்பிரத்தி
யட்சமாவதுபோலத் தோன்றுதொட்டிவ் வுலகத்தைவிளக்கு
மோர்பரவஸ்துவுண் டென்னுஞ் சத்தமாத்திரத்தி லஃதுவு
ண்மையாயறிவின் கண்ணுதயமான பிரமத்தைப்பிரத்தியட்

சமாக வடையவேண்டுதலின் - ஐதிகப்பிரமாணமும் -வந்ததென்க.

மேற்பிரத்தியட்சப்பிரமாணமாவது-ஞானகதப்பிரத்தியட்சமெனவும் - விஷயகதப்பிரத்தியட்சமெனவுமிரண்டாம்- அவற்றுள் - ஞானகதப்பிரத்தியட்சத்தைநிருவிகற்பப்பிரத்தியட்சமெனவும் விஷயகதப்பிரத்தியட்சத்தைச்சவிகற்பப்பிரத்தியட்சமெனவுங் கூறுவாருமுளர் - இவற்றுள் - ஞானகதப்பிரத்தியட்சமாவது - அபரோட்சஞானமாம் - விஷயகதப்பிரத்தியட்சமாவது - விஷயப்பிரத்தியட்ச மெனவும் - இந்திரியப்பிரத்தியட்ச மெனவும் - மானதப்பிரத்தியட்சமெனவும்-வேதனைப்பிரத்தியட்ச மெனவும்-யோகப்பிரத்தியட்சமெனவுமைந்தாம் - இவற்றுள் - வேதாந்தமுடியினுள்ளமகா வாக்கியப்படி - பரமாத்மாயிக்கிய மானவத்துவிதவேதாந்திகட்கு ஞானகதப்பிரத்தியட்சமொன்றுமேயாம் - ஏனையவுலகாயிதன் முதற்பாட்ட வேதாந்தியீறானசமயவாதிகட்கைந்து விதமான விஷயகதப்பிரத்தியட்சங்களில் வரவர்க்குத் தகுந்தவைகளே யாம் - இன்னும் - பிரத்தியட்சப்பிரமாணமாவது மூன்றுவிதமா யிருக்கும் - அவையாவன-விபரீதப் பிரத்தியட்சமெனவும் - சந்தேகப் பிரத்தியட்சமெனவும் - யதார்த்தப்பிரத்தியட்சமெனவுமாம் - இவற்றுள் - உஷிக்காலாந்தகாரவிமோசன பூருவங் கண்ணிருந்துங் கட்டையைக் கள்வனாகக்கண்டு பயகம்பனாதிகளை யடைவது போல வஞ்ஞானாந்தகாரவிமோசன பூருவஞ் சித்திருந்துஞ் சச்சிதானந்தஸ்வரூபமான பிரமத்தை யநிர்தசடதுக்கரூபமான சகத்தாகக்காண்பதே விபரீதப் பிரத்தியட்சமும் - அருணோதய பூருவம் - நாய் - கண்டது கள்வனாக விருந்தாற் சரிக்கவேண்டுமே யங்ஙனஞ்சரியாமையினாற் - கட்டையோ கள்ளனோ வென்றையுறுதல் போல - வஞ்ஞான விமோசன விவேக பூருவமியாங்கண்டது சகத்தாகவிருந்தாற் - பிரியமன்னியிற் றோற்ற வேண்டுமே - யங்ஙனந் தோற்றாமையாற் சச்சிதானந்தமோ - சகத்தோ வெனவையுறுதல் - சந்தேகப் பிரத்தியட்சமும் - சூரியோதயகாலத்திற் கண்ணொளியுஞ் சூரியனொளியு மேகோபித்துயாங்கண்டது நிச்சலமாயசைவற்றிருத்தலிற் கள்வனன்று கட்டையேயென் றறிந்தாற்போலச் - ஞானோதயகாலத்திற் சிற்றறிவும் பேரறிவு மேகோபித்து யாங்கண்டது தற்பிரியமாகத் தோற்றியிருத்தலி

ணிர்தசடதுக்கரூபமானசகத்தல்ல இருப்பதுசச்சிதாநந்த ஸ்வரூபமாகிய சித்தேயெனக் காண்பது-யதார்த்தப்பிரத்தியட்சமுமாம்.

விரு. இங்ஙனம்ஸ்வரூபப் பிரத்தியட்சமான வநுபவமுண்டானால்மேலனுமானப்பிரமாண மியாதுக்கெனின்.

விடை, கதஞ்செய்ததிஷ்காமபுண்ணிய பரிபாகத்தினாலிவ்வனுபவங்கிடைப்ப ததிதீவரபக்குவர்க்கேயன்றி யேனையோர்க்கின்மையினவர்களை முன்னிட்டக்காரணமான சித்தைக் காரியமான திரிஸ்யத்தினால் வெளிப்படுத்திப் பிரத்தியட்சமாகக்காண்பிக்குநிமித்தமிப் பிரமாணமும்வந்ததென்க.

விரு - அற்றேல் - அஃதெங்ஙனமெனின் -

விடை - அவ்வனுமானப்பிரமாணமுமைந்துவிதமாயிருக்கும். அவையாவன-பிரதிஞ்ஞை-ஏது-திட்டாந்தம்- உபநயம் நிகமனம்-என்பனவாம் - இவற்றுள்-பிரதிஞ்ஞைமூன்றுவிதமாம்-அவையாவன-பிரதிஞ்ஞை-ஸப்பிரதிஞ்ஞை-விப்பிரதிஞ்ஞையென்பனவாம்-ஏது-மூன்றுவிதமாம்- அவையாவன- இயல்பேது-காரியவேது- அநுபலத்திபேது-என்பனவாம் திட்டாந்த மிரண்டுவிதமாம் - அவையாவன -அன்னுவயம்- வியதிரேக மென்பனவாம் - உபநயம் - நிகமனம் - இவற்றிலடங்கியிருக்கின்றன - இவ்வைந்தங்கங்களையுடைய வனுமானம்- பூருவப் பிரத்தியட்சானுமான மெனவும் - அனுமானானுமானமெனவும் - ஆகமானுமான மெனவும் - மூன்றும்- முற்கூறியவற்றுள் - இப்பருப்பதத்தில் - வேயாதிவிருட்சங்களுங் - காந்தமாதிய கற்களுமிருப்பதனால் - அத்தருக்களொன்றோ டொன்றிழைத் - தவற்றுள் - வியாபித் திருந்த வக்கினியுங் - கதிரினூட் டணங்காந்தக்கல்லிற்றாக்க - வவற்றுள்வியாபித்திருந்த வக்கினியும் - வெளிப்படுதலி னிம்மலையின்கண் ணக்கினியுண்டென நிச்சயிப்பதுபோல - இச்சகத்தின்கணுள்ள - சராசர வுயிர்க- ளொவ்வொரு போகங்களையனுபவிக்கு மிடத்துமவற்றுள் - வியாபித்திருந்த- தற்பிரீதி வெளிப்படுதலினிவ்வுயிர்க ளிடத்திற்- பிரமசித் துண்டென நிச்சயிப்பதே - பிரதிஞ்ஞை யெனவும்- அத்தருவின்கணுள்ளவக்கினி வெளிப்படுத்தற்கதன்காரியமான - புகைமுன்வெளிப்படுதல்போல விவ்வுயிர்களிடத் துள்ள வான்மப்பிரியம் வெளிப் படுத்தற் கதன்காரியமான விடயானந்தம் வெளிப்

படுதலினீதே - பேதுவெனவும் - சலமாதியவற்றுள்ள தூ
மம்போலன்றிப் - பாகசாலையின்க ணுள்ள - தூமத்தாலக்கி
னியைப் பிரத்தியட்சமாகக் காண்பதுபோலக் காலவரம்பைய
க்காட்டுங் கடிகாரமாதியவற்றின் சித்துப்போலன்றியஃதின்
னவிதமாகச்செய்யி - னின்னவிதமாகக்காலவரம்பைக்காண்
பிக்குமென்றறிந்தது செய்யுஞ்சத்தியைக்கொண்டச்சத்தனை
யறிவதுபோல விச்சகத்துற்பத்தி லய மிவ்விதமாய்ச் செய்
யி னிவ்விதமாய் நடந்து வருமென் றறிந்து செய்யுஞ் சிற்
சத்தியைக்கொண்டதனுதாரமான சுயஞ்சித்தைப்பிரத்தியட்
சமாகக்காண்பதே திட்டாந்தமெனவுமாம்.

வினா-இங்ஙனமிவ்விரண்டுபிரமாணத்தான்ஞானகதப்பிரத்தி
யட்சமானால்மேலாகமப்பிரமாணமியாதுக்கெனின்.

விடை-இவ்வனுபவத்தையடைந்தோர்களதையடைந்தவாப்த
ர்கள்வசனமுக்கியமாகக்கொள்ளவேண்டுவதாகலி னிப்பி
ரமாணமும்வேண்டிற்றென்க.

வினா-அற்றேல்-அஃதெங்ஙனமெனின்.

விடை -இவ்வாகமமுஞ்சாத்திரம்-அசாத்திரமெனவிரண்டா
ம்-இன்னுமிவையே மூன்றுகலைகளாம் - அவையாவன -
தந்திரகலை - மந்திரகலை -உபதேசகலையென்பனவாம்-இ
ன்னுமிவையே யிரண்டு சுருதிகளாம் - அவையாவன -
அற்பசுருதி-பிரபலசுருதி யென்பனவாம் - அவற்றுள் -
கானலாற்றின் கரையிற் கனி யிருக்கின்றதென்னும் - அ
நாப்தன் வசனத்தைக் கேட்டுச் செல்வதுபோலத் தேவர்
மூசுற்றுரைரமீருயுள்ளவுலகங்களிற் சொர்க்காதிவிடயாநந்
தங்களிருக்கின்றதென்னும் - பாமரர் வசனத்தைநம்பச்
சொல்வதசாத்திரமெனவும் - கங்கையாதியநதிதீரங்களின் மு
க்கனி முதலியவைகளிருக்கின்றதென்னு மாப்தன் வசனத்
தைக்கேட்டுச் சென்றவற்றையடைவதுபோல - மனுடாந
ந்தமுதலி ரணியகருப்பா நந்தமீறானவாநந்தங்க ளனைத்து
ம்விளங்குதற்கு ஸ்தானமான நிரதிசயாநந்த மிருக்கின்றதெ
ன்றவாப்தன்வசனத்தைக் கேட்டவ் வழிச்சென்றச் சுயஞ்சித்
தைப்பிரத்தியட்சமாகக் காணச்சொல்வதேசாத்திரமெனவு
மாம்,

வினா-இங்ஙனமூன்றுபிரமாணத்தால்அச்சுயஞ்சைதன்னிய
ம்பிரத்தியட்சமானால்மேலனுபவமானப்பிரமாணமியாதுக்
கெனின்,

விடை- இவ்வனுபவ மறிவினிடத்திற்கண்ட திதமாகவேண்டு
தலா லிப்பிரமாணமும் வேணடிற்றென்க

விஞ- அற்றேல்-அஃதெங்ஙனமெனின்

விடை- அதிட்டம் -திட்டமெனவிரண்டாம்- அவற்றுள்-புரு
டனைப்போலச்- சாயாபுருட னிருப்பானெனக்காணுக
வின் சுத்தாவத்தையிற்றோன்றுமனுபவமானந்தாதிதமாயி
ருக்குமென்பது அதிட்டமும் - பசுவைப் போலமனை-யலை
தாடியின்றி யிருக்குமென்றபடி யதைத்தேடிக்கண்டவிட
த் - தஃதாயதி லதீதப்பட்டுநிற்றல்போலச்- சமாதியின்கண்
தத்தெரிசனமான- வாத்மாநந்தத்தைப் போலச் சிவாநந்தம்
போதமின்றி யிருக்குமென்றபடிசித்தித்தவிடத்துதயமான
போதவ் விரண்டுமின்றியதிதானுபவம் பிரத்தியட்சமாயக்
காண்பது- திட்டமுமாம்.

விஞ. இங்ஙனமிந்நான்கு பிரமாணத்தாற் சுவானுபவம்பிர
த்தியட்சமாயிருக்க - மேலருத்தா பத்திப் பிரமாணமியா
துக்கெனின்.

விடை. அவ்வனுபவி யெவ்விதமாயிருக்கினுமவ் வானந்தா
தீதமாகவே யிருப்பனென் றறிதற்காகவிப்பிரமாணமும்
வேண்டிற்றென்க.

விஞ. அற்றேல் - அஃதெங்ஙனமெனின்,

விடை, சிரவணம் திட்டமெனவிரண்டாம் - அவற்றுள் - சி
விதமானபுருடன்வீட்டின்கணில்லையென்றால் - மற்றோ
ரிடத்தி லிருப்பானென் றறிவதுபோல வவ்வறிவி னிடத்த
திதானுபவமில்லையென்றால் ஆநந்தத்தி லிருக்குமென்ப
து-சிரவணருத்தாபத்தியெனவும்- பகலிலுண்ணாதபுரு
டன்றேகம்- பருத்திருப்பதைப் பார்த் திரவிற் காவிலொ
ளித்துண்பா னெனக்காண்பது போலப் - புறம்பிலுள்ள
விடயங்களைக்கூடி யாநந்தியாதவன் - முகத்திற்பிரமதே
ஜஸ் ஜொலிக்கின்றதைப்பார்த்தகத்திற்பிரமாநந்தத்தை
ப்பிரத்தியட்சமா யடைந்திருக்கின்றானெனக் காண்பது
திட்டாருத்தாபத்தியெனவுமாம்.

விஞ. இங்ஙனமிவ்வைந்து பிரமாணத்தாற்சமாதியனுபவம்
பிரத்தியட்சமானால் மேல் அபாவப் பிரமாண மியாதுக்
கெனின்.

விடை. இவ்வனுபவஞ்சகசத்தில் விளங்குநிமித்தமிப்பிரமாணமும்வேண்டிற்றென்க,

வினா, அற்றேல் - அஃதெங்ஙனமெனின்.

விடை. பிராகபாவம் - பிரத்தொம்ஸாபாவம்- அன்னியோன்னியாபாவம் - அத்தியந்தாபாவமென நான்கும் - முன்பின்னிடையொருகாலத்துமில்லையென்பனவாம்-அவற்றுள் - உற்பத்திக்குமுன் மிருத்திகையைத் தவிரக் கடமின்மைபோலச் - சிருட்டிக்குமுன் சத்தைத்தவிரச் சகத்தில்லாமையால் - பிராகபாவமெனவும் - லயத்திற்குப்பின்மிருத்திகையைத் தவிரக்கட மின்மைபோல - லயத்திற்குப்பின்னுஞ்சத்தைத்தவிரச் சகத்தில்லாமையால்- பிரத்தொம்சாபாவமெனவும் - இடையில் - கடத்திற் படமும்படத்திற்கடமுமின்மையென்பதனான்- மிருத்திகையுந்தந்துவுமேயிருக்கின்றதுபோல - இடையிலறிதலிலறிபொருளுமறிபொருளிலறிதலுமின்றி யறிவாகிய சத்தேயதுவதுவாய்விளங்குதலிற் றிரிபுடி ரூபமாகிய சகத்தில்லாமையால் - அன்னியோன்னியா பாவ மெனவும் - இந்தமூன்றிடத்து மிருத்திகையைத் தவிரக்கடமில்லா ததுபோல - எப்போதுஞ் சத்தே பிரத்தியட்சமா யிருத்தலி னெப்போதுஞ் சகத் தில்லாமையால் - அத்தியந்தா பாவமெனவுமாம்-

வினா. இங்ஙன மிவ்வாறுபிரமாணத்தாற் சதோதயமான சத்தேபிரதியட்சமானான் - மேற்சம்பவப்பிரமாணமியாதுக்கெனின்.

விடை. இவ்வனுபவ மெக்காலத்து மியல்பாய்விளங்குகின்றதென்பதை யறிவிக்குநிமித்த மிப்பிரமாணமும்வேண்டிற்றென்க.

வினா, அற்றேல் - அஃதெங்ஙனமெனின்.

விடை. சகஸ்திரத்திற் சதமிருக்குமென்னுமிடத்திற் சகஸ்திரத்திற்குஞ் - சதத்திற்கும் - அம்பதந் தோன்றல் போலப் - பிரமத்திற் கூடத்தனிருக்குமென்னுமிடத்தக்கூடத்தனே பிரமம்-பிரம்மமேகூடத்தனென வபேதம் பிரத்தியட்சமாகத்தோன்றுவதேசம்பவப்பிரமாணமெனவுமாம்,

வினா. இவ்வேழு பிரமாணங்களா லத்துவித ஸ்வரூபம்பிரத்தியட்சமானான்-மேல் ஐதீகப்பிரமாண மியாதுக்கெனின்.

விடை. இவ்வனுபவந்தோன்றுதொட்டுவிளங்குகின்றதென்பதையறிவிக்குநிமித்தமிப்பிரமாணமும்வேண்டிற்றென்க.

விரு. அற்றேல் - அஃதெங்ஙனமெனின்.

விடை. இம்மரத்தினியக்கனுளதென்பதநாதி சித்தமாயிருப்பதென்னுமிடத்திம்மரமேபேயாய்க் காண்பதுபோலவிச்சகத்திற்சித்துளதென்பதநாதிசித்தமாயிருப்பதென்னுமிடத்திச்சகமேசித்தாய்விளங்குதல் பிரத்தியட்சமாவதே- ஐதீகப்பிரமாணமெனவுமாம்.

விரு, இவைகட்குச்சுத்தானுபவமியாதெனின்.

விடை, சுவானுபவாதீத சுயம்பிரகாச ஸ்வரூபமேபிரத்தியட்சமுமதனது ஸ்வப்பிரபையான ஸ்புரணமே அனுமானமும் - அத்தஸ்புரணரூபமான சங்கற்பம்- அதீதமான தத்தெரிசனார்த்தமாய் வந்ததேயன்றி வேறின்றெனநிச்சயிப்பது - சத்தமும்- இப்பூரணமான சங்கற்பத்தைப்போலவ்வறிவிருப்பினுமறிதன்மாத்திரங்களைந்துநிற்றல் உபமானமும் - இச்சங்கற்பம் பகிர்முகத்திலதிசயமானவிடயானந்தங் களான்மொத்துண் டதுவே-யகத்தினிரதிசயானந்தத்தைக்காட்டுதலில்அருத்தாபத்தியும்-அச்சங்கற்பமுன்பின்னிடையொரு காலத்துமின்றி யெப்போதுந்தானாகப் பிரகாசித்தலின் அபாவமும்-இச்சங் கற்பஞ்சத்தின்சுபாவமாயுண் டென்பதனாற் சம்பவமும் - இச்சங்கற்பத்தையதீதம் வியாபித்து நிற்றலின் ஐதீகமெனவுமாம் - இஃது சுருதிகுருசுவானுபவ ரீதியாற் குருவாக்கியப்படியனுபவத்திற்காண்க - இன்னும் பிரமாணங்களின்விரிவைத்தர்க்கசாத்திரத்திற்கண்டுகொள்க.

(இம்மூன்றுகவியின தாத்பரியம்.)

பரோக்ஷஞானமாய் விளங்கக்கண்ட பரவஸ்துவான தபரோக்ஷமாய் விளங்குவதைக் காண்பதனிமித்த மிவ்வெண் வகையளவையுமெடுத்தியம்பியதென்பதாம். (உரு)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய வெண்ணளவைகட்கு லோகாயதன் முதற்பௌராணிக ரீறானசமயிகள் கொண்டவளவைகளிவையிவையெனவுணர்த்துகின்றது.

(கவி)

புகலுலகாயிதனுக்குக்காட்சியொன்றேசயின........ ...*
புத்தவைபாடிகர்கடமக்கிரண்டனுமானத்தோ... ......*
டுகளுறுசாங்கியற்குமூன்றுரையொடுநான்குவமை ...... *
யொடுநியாயற்கருத்தாபத்தியொடைந்தாகு...........*
மிகுபிரபாகரற்காறுமபாவமொடுபாட்ட.......... ......*
வேதாந்திகட்காகுமெனவறிகதெரிவுற் .. ..............*
றிகலருமொண்புராணிகர்கடமக்களவையெட்டா..........*
மென்றுரைப்பர்சம்பவவைதிகங்களுடனன்றே... ...*

(இதனதுபதப்பொருள்.)

புகலுலகாயிதனுக்கு - சொல்லப்பட்ட வுலகாயிதசமயனுக்கு - காட்சியொன்றே - பிரத்தியட்சப் பிரமாண மொன்றேயாம் - சயின - சயினர் - புத்தர்-பௌத்தர் - வைபாடிகர்கடமக்கு-வைபாடிகர்களான விம்மூன்று சமயிகளுக்கும்- அனுமானத்தோடு- அனுமானத்துடனே - இரண்டு-இரண்டுபிரமாணங்களாம்- உகளுறுசாங்கியற்கு - தத்துவங்களைக்கடந்தசாங்கியசமயனுக்கு - உரையொடு - சத்தத்தோடு-மூன்று-மூன்றுபிரமாணங்களாம்-நியாயற்கு- தர்க்கசமயனுக்கு-உவமையொடு- உவமானத்துடன்- நான்கு- நான்குபிரமாணங்களாம் - மிகுபிரபாகரற்கு - மேன்மையுள்ள பிரபாகரசமயனுக்கு- அருத்தா பத்தியொ டைந்தாகும்- அருத்தாபத்தியுடனைந்துபிரமாணங்களாம் - பாட்டவேதாந்திகட்கு-பாட்டவேதாந்த சமயிகளுக்கு-அபாவமொடு - அபாவப் பிரமாணத்துடன் - ஆறுகுமென - ஆறு-பிரமாணங்களாகுமென்று-அறிகதெரிவுற்று - தெளிவுற்றறிவாயாக- இகலரும்-பகையின்றிய - ஒண்புராணிகர் கடமக்கு- அழகுள்ளபுராணிகசமயிகளுக்கு - சம்பவவைதிகங்களுடன்- சம்பவவைதிகமானவிரண்டு பிரமாணங்களோடு - அளவையெட்டா மென்று-பிரமாணங்களெண்வகையாகுமென்று - உரைப்பர்- கற்றுவல்லோர்சொல்லுவார்கள்—எ—று, அன்றே- அசை,

ஆகமம்- சத்தம்- உரை- என்பனவொருபொருட்கிளவி,

(பதசாரம்,)

பிரகஸ்பதியினாற் சொல்லப்பட்ட வுலகாயிதமென்னும்- அவைதீக சாத்திரப் பிரபஞ்சத்திற்சாருவாகனதியமூன்றுபே

தமாய்க் கத்தமுதலிய நான்குகுணங்களை யுடைய பிருதிவி
யாதிசதுர்ப்பூதமே - சகத்தெனவும் - அதனேகதேசவிகார
மாய்ப் பரிணமித்த தேகத்தி லப்பூதங்களின் கூட்டரவிறுத்
சைதன்னிய மென்றொரு தருமம்பிறக்குமதைச்சாருவாகன்
றேகமெனவுஞ் - சாருவாகவேக தேசிகளிந்திரிய மெனவும்-
இரணிய கருப்பசாருவாக வேகதேசிகள் பிராணனெனவும்-
இவற்றையேயாத்மாவெனவுமிவற்றா லுண்டான சுகதுக்கங்க
ளேசொர்க்க நரகமெனவு மிவற்றினொருமையாய் மகளிர்மு
தலியவிஷயானு பவமுந் தேகநசிப்புமே - முத்தியெனவுங்
கூறும் - இவர்கட்குக்கண்டதே காட்சியென்பதுறுதியாகலி
ற் - புகலுலகாயிதனுக்குக்காட்சி யொன்றேயெனவும்,

• அரகதமுனிவனாற் சொல்லப்பட்ட- சயினமென்னும்-அ
வைதீகசாத்திரப் பிரபஞ்சத்தி னிகண்டவாதி ஆசீவகனென்
னுமிரண்டு பேதமாய்க் காரணகாரிய ரூபத்தாலாத்மாக்களி
ன்- கன்மானுரூபமான சரீரங்களினுடைய பரிமாணத்தைத்
தனக்குப் பரிமாணமாகக் கொண்டிருக்கின்ற சகத்துப்- பி
ன்னுபின்னமும்- நித்தியாநித்தியமுஞ் - சத்தியா சத்தியமு
மாயிருக்குஞ்-சமுசாரமநாதியெனவும்,

இன்னும்- ஊர்த்வகேச-திகம்பர - பாணிபாத்திர - மயூரபி
ஞ்ச- பஞ்சம லதாரணாதிகளும்-பொய்-களவு-பாரத்துவராவ
தி - ஹாங்கிஸை-யிம்ஸை - யில்லாதிருக்கிற பஞ்சானுவிரதங்
களையு- மதுபலாண்டு முதலிய- நிஷேத திரவியங்களையும்வி
ட்டுத் தப்தசிலா சயனாதிகளினுக்கிர தவமாசரிக்கிற முனிவித்
தைகளையும்- ஏமச்சந்திராதிய விருபத்துநான்குதீர்த்தகர்-ச
ரித்திரங்களையும்-ஷியாதஸ்தி-ஸ்யா நாஸ்தி-யென் னுமிவை
முதலானசப்தபங்கிகளையுஞ்-சீவ-சற்ஜீவ-நிற்ஜீவ-நிற்சர-ஆ
சிரவ-பந்த- மோட்சமென்னுஞ்- சப்தபதார்த்தங்களையும்-
ஞானமுதலிய வெண்குணங்களையு மடைந்து - ஞானவர்ணீ
யமாதியவெண்குற்றமும் - பசித்தன்முதலியபதினெண்கு
ற்றங்களையுங்கடிந்து - காலம்- சீவன்- தன்மாத்திகாயம்-அத
ன்மாத்திகாயம் - புண்ணியம்- பாவம்- விசும்பு-புட்கலம்-ப
ந்தம் - வீடு-என்கின்றபதார்த்தங்கள்-பத்தும்-அநாதியென
வுந் - தேகாதிவிலட்சணனாய்த் தேகபரிமிதனுகிமத்திமபரி
ணமத்தின் சங்கோசவிகாசகன்மயுத்தனுமே - ஆத்மனென
வும்,

பலதாரணாதிகளாலு மாத்மஞானத்தாலும் - பிரகிருதி- நிர்ம்மூத்தனு யூர்த்த கதியிலுத்திரோத்தர கமனமே மோட்சமென்னுஞ் சயினனுக்கும் - சுகதராற்சொல்லப்பட்டபௌத்தமென்னும் அவைதிகசாத்திரப் பிரபஞ்சத்திற்சவுத்திராந்திகன் - யோகாசாரன் - மாத்திமிகன்-வைபாடிகனென்னும்- நான்குபேதமாய்ப் பூமியாதிபத்திகளையாக விருபத்துமூன்று தத்வாத்மகமே பிரபஞ்சம்-அஃதுதீபச்சுவாலையைப்போலக்ஷணிக மாத்திரமாம்- ஞாதுரு - ஞான - ஞேயமென்னும்- பதார்த்தங்கட்கு- உரு- அரு- வீடு- வழக்கெனநான்காம் - அவற்றிற்பூத ரூபாதானமென வுருவத்திற் கிரண்டுஞ் - சித்தங்கன்மமென வருவத்திற் கிரண்டுங் குற்றங்கந்தமென வீட்டிற்கிரண்டும் - உள்ளதில்லதெனவழக்கிற்கிரண்டாகவெட்டாம்- இநின் -உருவம் - வேதனை- குறிப்பு- பாவனை - விஞ்ஞானமென்ற வைந்துகந்தத்தாலுண்டானதுசகத்தெனவும்,

இம்மூன்றைப்படி கெடல்பந்தம்-முற்றுங்கெடல்வீடெனவும்-உயிர் - ஆகாயம்- காலம்-திசை- ஈசன்-இவ்வைந்துமில்லையென்ற சவுத்திராந்திகனுக்கும்- ஞாதுரு - ஞேயங்களின் மயக்கஞானமே - கனவைப்போலச் சகத்து - அதுவும்- க்ஷணிகமென்றறிவதே முத்தி யென்னும் யோகாசாரனுக்கும்- தேகமேசகத்துப் பிரமாணப்பிரமேயப் பிரமாதா வுண்டென்பதுமயக்கம் - சூனியத்தாலே இத்தேகஞ் சூனியமென்றறிகை - முத்தியென்ற மாத்மிகனுக்கும்- மஞ்சளுஞ்சுண்ணமுங்கூடினவிடத் துண்டான சிவப்பைப்போலப் பரமாணுசங்காதமாகிய விடயமும் - தத் விஷயக்கியானமுங் கூடினவிடத்துப் பிரசித்தசித்தமாயிருப்பதுசகத்து-அதையறியும் புத்தியேயான்மா-அதிற்றிர புத்தியேபந்தமிதிற்சகதுக்காதி மயக்கமடாத சுத்தபுத்திசந்ததியே மோட்சமென்னும் வைபாடியனுக்கும்-இன்னும்- காயாநிகன் - சவுசுருதனென்பவருக்கும் - புகையைக்கண்டு நெருப்புண்டென்றுநிச்சயிப்பதுபோலத் - தத்விஷயமாகிய வனுமானத்தைக்கொண்டு புத்தியேயாத்மாவெனவும் - இன்னுஞ் சூனியமேயாத்மாவெனவும்- இவைபிரத்தியட்சமாக வறிதற்கவ்வனுமானமும்வேண்டுதலினிஃதும் வேண்டுமென்பார்- சயின்புத்தவைபாடிகர் கடமக்கிரண்டனுமானத்தோமெனவும்,

கபிலராற் சொல்லப்பட்ட சாங்கியமென்னு மந்திரியாத்மீகசாத்திரத்தில்- அசங்கசின் மாத்திரமானவாத்மசந்நிதானத்திற் குணத்திரயமாத்மகப்பிரகிருதியைச் சுதந்திரமாகக்கொண்டு பஞ்சவிம்சதித்தத்துவாத்மக ஜகதாகார மாயிற்று- அந்தப்பிரகிருதியோ டாத்மாவுக் குண்டான வநாதிசம்பந்தமே சம்சாரம்- பிரகிருதி புருடவிவேகத்தினால்- அவித்தையா நாசமானதே மோட்சமென்பார் - அதனாற் புருடனைப்பிரத்தியட்சமாக வறிதற்கு விவேகபுத்தியாகிய வநுமானமும்- பிரகிருதியாரோபிதமாயொன்றுண்டென்னு மாகமப்பிரமாணமும் வேண்டுமென்பார் -சாங்கியற்குமூன்றுணாயோடெனவும்,

அக்ஷபாதராற் சொல்லப்பட்ட வைதிக சாத்திரப்பிரபஞ்சத்திற்பிரமாணம்- பிரமேயம் - சங்சயம்- பிரயோசனம்-திஷ்டாந்தம்-சித்தாந்தம்- அவயவம்- வைதர்க்கம்- நிர்ணயம்-வாதம்- ஜல்பம்- விதண்டை-எத்துவாபாச்சல் - சாதி- நிக்கிரகஸ்தானமென்னுஞ்சோடச பதார்த்தங்களுஞ்சொல்லப்பட்டிதனாற் பரமாணுசமூகமே சகத்துக்குபாதானகாரணமெனவும் - அனுமானிக்கேசுரனே நிமித்தகாரண மெனவும்-விபுவாயும்- அனேகமாயுஞ் சைதன்னியயுத்தனுயுமிருப்பவனே யாத்மாவெனவும்- ஆகாயங்-காலந்-திக்கு-ஆத்மா-பரமாத்மா-இவ்வைந்து நித்தியமெனவுஞ் சம்சாரமநாதியெனவு மீசுரோபாஸ்தியாற் றேகமுதலாய விருபத்தொரு விதமான சகதுக்க ஞானநசிக்கையே மோட்சமெனவுங் கூறும் - இவ்வாத்மாவியாபகப்பிரத்தியட்சத்தையடைதற்குப் - புத்தியாகிய வனுமானமும் - சம்சாரமநாதி யென்பதற்காகமமும் ஈசுரோபாஸ்திக்கவினின்ன விதமாயிருப்ப னென்றுபாமிக்குநிமித்தமும் உவமானமும் வேண்டுமென்பார்- நான்குவமையொடு நியாயற்கெனவும்,

சைமுனிவனாற்சூத்திரரூபமாகச்சொல்லப்பட்ட பூருவமீமாஞ்சைபேதமான பிரபாகர மென்னும்- வைதிக சாத்திரத்திலநாதிகன்மத்தினாற் றானேயுண்டாகியபூர்வதேசகம்- மந்திரரூபமே தேவர்கள் - வேதமநாதி - நித்தியராய்ச்சுவேதப்பிரமாணமான ஞானஸ்வரூபனேயாத்மா- கன்மமானது - நித்தியம்-நைமித்தியம் - காமியம் - விலக்கு-பிராயச்சித்தமென வைந்தாம் - சீவகோடிகளுக்குள்ள - பிராரத்தவாகாமிய-சஞ்சிதங்களால் - அபூருவத்துவாரா சொர்க்கவின்பத்தைக்கொடுத்தல் முத்தியென்னும் - பிரபாகரத்திற்குந்தேவாநந்

துப் பிரத்தியட்சத்தை யடைதற்கதை யறியுமறிவென்னு ம
னுமானமு மச்சுகத்தைப் போதகஞ்செய்யும் - வேதமுமச்
சுகமிங்ஙனமிருக்குமென்னு முவமானமும் - யாகாதிகளில
வாகிய வருத்தமான தகத்திலின்புற்றுச்- சகத்தைவிளக்குதலி
ன் - அருத்தாபத்தியும் வேண்டுமென்பார் - அருத்தாபத்தி
யொடைந்தாகு மிகுபிரபாகரற்கெனவும்,

வியாசரா லுபநிடதார்த்தப் பிரதிபாதிக மானவேதாந்த
மென்னு மத்தியாத்மீகசாத்திரம்-பாஸ்கரியம்-மாயாவாதம்-
யாதவப்பிரகாசம்- யோகாயனம் - சத்தப்பிர்மவாதம் - கிரீ
டப்பிரமவாதமென - ஆறுபேதமா யிருக்கும் - அவற்றுள்-
பிரமந்தானே சத்தியோபாதி மிசிரமாய்க் கொண்டு பிரமிக்
கையேசமுசாரம்-வருணாச்சிரமதர்மோசிதமாய்வாக்கியசெ
ன்னிய ஞானபூருவகமா யுள்ளவுபாசனாத்மக ஞானத்தினாலு
பாதிநசிக்கையே - மோட்சமென்ற - பாஸ்கரியமும் - நிர்வி
சேஷ-சின்மாத்திரமே - மாயாசபளமாகக்கொண்டு- பிரமி
க்கையே- சம்சாரம் - மகாவாக்கியசென்னிய ஞானத்தினால
ந்தப்பிரமைபோகையே - மோட்ச மென்னு மாயாவாதமு
ம்-அந்தப்பிரமந்தானே- சத்தியமானசித்தசித்தீசுராத்மகமா
ன- பிரபஞ்சமாகக்கொண்டு பிரமிக்கிறது-அதற்குண்டான
பேதஞானஞ் சம்சாரம் -ஞானகன்மச்சமுசியத்தினாலேபே
தஞானம்போகையே - மோட்சமென்னும்- யாதவப்பிரகாச
மும் -பிரமஞ் சகத்காரணம் அப்பிரமத்துக் கதிபயசத்திவி
சிட்டமென்னும் வைதிகசித்தாந்தத்தையுடைய - யோகாய
னமும்- அப்பிரமம் நாதாதீதமென்னுஞ்- சத்தப்பிரமவாத
மும் - தத்சொரூபம்மே யாவுமா யானந்தித்துக்கொண்டிருக்
கும் லீலையே கிரீடப்பிரமவாதமுமாம்.

இன்னுமித்தியத்துவமே சகத்துப்- பரமாத்மா யிக்கத்து
வம்வன்னிக்கப்பட்ட ஞெப்திமாத்திரமேயாத்மா - பரமாத்
மாயிக்கியத்தில் விபகாராதிசமுசாரபந்தநிவிர்த்தியே மோ
ட்சமென்னும் - வேதாந்தத்திற்குப் பரமாத்மா யிக்கியமா
ன - ஞானகதப் பிரத்தியட்சத்தை யறிதற்கேதுவானவிசார
க்கியானமாகிய வனுமானமும்- அஃதே- வஸ்துவெனநிச்ச
யிப்பதற்கு வேதமு மஃததீதமாதலா லஃதின்பரியாயநாம
ங்களறிதற்குவமானமு மொரு செயலுமின்றி நித்தியதிருத்
தியடைந் திருத்தற்கருத்தாபத்தியு மஃதேசதோதயமான நி

த்தியமாய் விளங்குதத்கபாவப் பிரமாணமும் வேண்டுமென்
பார் - ஆறுமபாவமொடு வேதாந்திகட்கெனவும்,

முற்கூறியமுனிவர் - சிவப்பிரகாசத்தாற் சொல்லப்பட்
ட - வெத்த - நட்ட - சாகர - அர்த்தப்பிரதிபாதிகமான - நா
லுலட்சங்கிரந்தமுள்ள புராணங்களிற் சர்க்க- பிரதிசர்க்க-
வம்ச- மன்மந்திர (வம்சானுசரித்திரங்க ளென்னும் - பஞ்
சலட்சணங்களும் - சமஸ்த- வைதீகதாந்திரீக - கன்மங்களு
ஞ்சொல்லப்பட்ட)புராணங்கட்கு - முற்கூறிய- ஞானகதப்
பிரத்தியட்சத்தை யறிதற்குப்புராதனத்துள்ள சத்துக்களறி
ந்துரைத்த வனுமானமும்- அதுவேநிச்சய மென்றறிவிக்கு
மாகமமும் - அதற்கு-ஆப்தாளடைத்திருந்த வனுபவவுல்லா
சத்தைக் காண்பதற் குவமானமு மவர்கணிராசையாத் திருத்
தியடைதற் கருத்தாபத்தியுமத்திருத்தி மாறு திருக்குந்துக்
கநிவிர்த்தியாதற் கபாவமுமிக் குணங்களிற்றன் பிரிவுபடா
மலொன்றாயிருத்தற்குச் சம்பவமு மிவ்வனுபவந் தொன்று
தொட்டுபண்டிதபாமர சாதாரணமாயுள தென்பதற்கைதிக
மும் வேண்டுமென்பார்- புராணிகர்கடமக்களவையெட்டா
மெனவுங்கூறினர்,

இவற்றுள் - கணாதரராற்சொல்லப் பட்டவைதீகசாத்திரப்
பிரபஞ்சத்திற் - திரவியம் - குணம் - கன்மம்-சாமானியம்-
விசேடம்- சமவாயமென்னுஞ் சட்பதார்த்தங்களுள்- திரவி
யத்திற்குப் - பூதமுதலிய வொன்பதும்- குணத்திற்குருமு
தலிய - விருபத்துநான்கும் - கன்மத்திற்குக் - குவிதல்முத
லியவைந்தும் - சாமானியத்திற்குச் சாதிமுதலியவிரண்டும்
விசேடத்திற்கொன்றும் - சமவாயத்திற் கொன்றும் இவ்வா
றுபதார்த்தங்க ளுடைய - விசேடவிவேக ஞானத்தாலேயறி
யத்தக்கனவகளான - ககனாதிபூதபஞ்சகசிவாத்மாபரமாத்மா
க்களாகிய - வேழும் - நித்தியம்- பாஞ்ச பூதிகமானபிரபஞ்
சம் - சகாத்திரிகம்- சீவாத்மாக்களநேகராயும் - விபுக்களாயு
ஞ்சுகாம்பல போக்தாளாயுங் கர்த்துருபரா தீனளாயுஞ் சா
பேக்ஷாளாயும் அனுமானீசுரனே யுடைத்தாயுந் - தர்க்கத்தி
லேகதேசமாயும் இச்சட்பதார்த்தவிவேக ஞானத்துவாராசுக
துக்கநிவர்த்தியே-மோட்சமாயும்பிரதிபாதிக்கின்றவைசேடி
யனைத்தார்க்கிகரேனும்-உபக்கிரமமுதலான சடுவிதலிங்கதா
ற்பரியத்தில்வேதவாக்கிய விசாரபூருவகமாய்-ஜோதிஷ்டோ
மயாகாதிகம் விதியுத்தமாகச் சொல்லியும் - ஆத்மசுவதப்பி

ரமாணமே ஞானஸ்வரூபனெனவுஞ் சொல்லும் பூருவமீமா
ஞ்சைபேதமான பாட்டனைப் பிரபாகரனோடுங்கூட்டுக,

இன்னஞ்சிலமதங்களுள்ளன- அவையாவன - சாக்தேயம்
பாஞ்சராத்திரம் - லௌகீகம் - பாதஞ்சலம்-பாசுபதம்- கா
பாலியம் - மகாவிரதம் - சித்தாந்தமென வெண்வகையாம்-
இவற்றுள் - சத்திதத்துவ வாதியினாற் சொல்லப்பட்ட வாம
சாத்திரங்களிற் - சத்தியின்பரிணமமே- சடாசடப் பிரவஞ்
சம்ஆநந்தமேயாத்மா-வாநந்தப்பிராப்தியேமுத்தியெனவா
திமதவிஸ்தாரஞ்செய்வதே சாக்தேயமெனவும் - வாசுதேவ
னாற்சொல்லப்பட்ட பாஞ்சராத்திர மென்னுஞ் சாத்திரங்க
ளிற்பிரகிருதியாதி மஹசாந்தமான சதுர்விம்ஸதித்துவத்தி
ற்குமேற்குணதத்வாத்மக வாசுதேவனி லிருந்து - கிருஷ்ண
அனிருத்த - மகாதவக - ஸௌகிமேய மென்னு நால்வர்களா
லுஞ்சகத்தியதார்த்தமாயுற்பத்தியாதி கிருத்தியமும்-நாடிம
த்தியகதனே யாத்மாவனுப்பிரமாணமெனவும்- வாசுதேவாத்
மகப்பிரகிருதியினிற் சொரூபவாணியில்லாதடங்குவதேமோ
ட்சமென்றது - பாஞ்சராத்திர மெனவும் - தன்வந்திரியினா
ற்சொல்லப்பட்ட லௌகீக சாத்திரத்தில் - ஆயுள்வேதந்- த
ண்ட - நீதி- முதலானதிஷ்டபலன்களையு முள்ளதேகபுத்தி
ராதிரூபமே யாத்மாவெனவும் - இகபரங்களிற் புத்திரபாரி
யாதிகளுடனே கூடி வியாதியாதிய துக்கமில்லாமற் சுகத்தி
லிருக்கிறது மோட்சமென்பதே லௌகீகமெனவும்,

பதஞ்சலியினாற் சொல்லப்பட்ட - அத்தியாத்மீக சாத்திர
த்திலியமாதி யஷ்டாங்கயோகத்தினன் மனோநிச்சலசித்தியு
ம்- அசங்க சின்மாத்திரமே யாத்மாவெனவும்-மனோலயத்து
வாரா அஞ்ஞானவழிவேமோட்சமென்பது பாதஞ்சலமென
வும்-மாயாதத்துவ வாதியான ருத்திரனாற்சொல்லப்பட்ட அ
த்தியாத்மீகசாத்திரத்தின்- மாயை - கன்மமென்னும்பாசத்
தொய்தநிச்சயமும்- நித்தியவியாபக சைதன்னியனே யாத்
மனெனவும்- பிரபாகேசுரத்தினாலீசுரத்துவ மன்னியருக்கு
க்கொடுத்து ஆத்மன் ஞெப்திமாத்திரமாயிருப்பதுமோட்ச
மென்பதேபாசுபாத மெனவுமுற்கூறிய தத்துவவாதியான
ருத்திரனாற் சொல்லப்பட்ட - ஆதியாத்மீக சாத்திரத்தினர
கபால பிட்சாடனாதிகளும் நித்திய வியாபக சைதன்யனே-
யாத்மனெனவுங்- கத்துருத்துவமே-சமுசாரம்-அதைவிட்டு
ஞெப்திமாத்திரமாயிருப்பதே மோட்சமென்பது காபாலி

யமெனவும் - வித்தியாதத்துவவாசியான ருத்திரனாற் சொல்லப்பட்ட - அத்தியாத்மீக சாத்திரத்தி லஸ்திதாரணாதிகளைச் சொல்வதும் நித்தியவியாபக சைதன்னியமே யாத்மாவெனவும் - கத்துருத்துவமேசமுசாரமெனவும்- அதைவிட்டுச் சூப்திமாத்திரமா யிருப்பதே மோட்சமென்பது மஹாவிரதமெனவும்,

பரமசிவனாற் சொல்லப்பட்ட மந்திரசவுஜசாத்திரத்தில் மோட்சாங்கமான - சரிதைகிரியையோகம் ஞானாதிகளையும் நித்தியவியாபகக் கிரியாரூபனேவாத்மா-சடத்துவாதீத சிவசமானத்துவம்மோட்சமென்பதே - மந்திரசவுஜ சித்தாந்திகளெனவுமாம் - இவர்களில் - உலகாயித- சயின - பௌத்த - பூருவமீமாஞ்ச- சாங்கியமொன்று மிவர்களை - நிரீசுரவாதிகளெனவும் - மற்றவர்களெல்லாஞ் - சயீசுர வாதிகளெனவும் - இம்மஹாவாதிகளுக்குள் - சாருவாகனாதியாவரும்- பேதவாதிகளெனவும் - வேதாந்தியொருவனே யபேதவாதியெனவுங்கொள்க - இவைகளோடு முற்கூறியசமயங்கள்- பதினெட்டுமவற்றின் கருத்தாக்கள் பதினெட்டு மவர்களாற்கூறப்பட்ட சாத்திரபேதமேழுமாம் - இன்னுமதங்களனேகமுள்ளன- அவைகளைக்காணவேண்டினவைகட்குரியபலநூல்களிலுற்காண்க. (௨௪)

பொதுப்பாயிரமுற்றிற்று.

---

ஸ்ரீசற்குருவேநமா.

# திருக்குவிவேகம்,

முற்பாயிரங்களி னிலக்கணங்கூறிமேல் வேதமுடிவிற்கூறியபரமாத்மாயிக்கமான வத்துவித மிஃதெனத் தெரிவிப்பானியற்றிய திருக்குத் திரிஸ்ய விவேகமென்னு மிரண்டனுள் கானற்சலம்போலக் காணப்படுஞ் சகமாகிய திரிஸ்யமுங் - கானற்போல விளங்குங் காண்பானாகிய திருக்குவுமக் கானற்சலமுங் கானலுஞ் சூரியப் பிரகாசமாய் விளங்குதல் போலவிவ்விரண்டுஞ் சிற்பிரகாசமாகவிளங்குகின்றதனாலவ

த்திற் கிடையாயுள்ள - திருக்குவைமுற்பாலதாக்கி யிதிற்கற்பனையாகத்தோற்றிய திரிஸ்யத்தைப் பிற்பாலதாக்கி யிவ்விரண்டிற் காதாரமான சிற்சொரூபத்தைக் கரதலாமலகம்போலவிளக்குவிக்குஞ் சாமவேத மகாவாக்கிய விவேகத்தைமுடிவின்கண்வைத் தவற்றினிலக்கணங்களைக் கூறுவான்றொடங்கி-இத்திருக்கு விவேகத்தின்விளம்பிய - பிரமசுபாவமானதிருக்குவினாதாரமாகிய - சிற்சொரூபமொன்றே யன்றிவேறின்றென வித்நூலிச் செய்யுளினுவமான பூருவகமாகச் சுவகதாதிபேதம்பிரமத்திற்கின்றென்பதையுணர்த்துகின்றது.

(கவி.)

திருந்தியவேதாந்தநூலியம்புறுவதிருக்குத்.......... ...*
திரிசியமென்றிருபொருளங்கவற்றின்முதற்றிருக்கின்...*
வரைந்திடுவசுவகதத்தன்சாதிவிசாதிகளா .............. ....*
மற்றவைமூன்றினுக்குமுதாரணமுறையேமொழியின்*
விரிந்தநிழறருநெடும்பூம்பணைமரமொன்றிற்கு .... .....*
மிஞிறினங்கள்புக்குமுகத்துழுதுபெருகுறுதே.. ...*
னருந்துதருமலர்முதலாயினவும்வேறுள்ள ......... .........*
வணிவரமுங்கன்முதலாயினவும்போலாமால் ... ......*

(இதனதுபதப்பொருள்.)

திருந்திய - சுத்தமான - வேதாந்தநூல்- வேதாந்தசாத்திரங்கள் - இயம்புறுவ - சொல்லப்படுவன - திருக்கு - திருக்கென்றும் - திரிசியமென்று - திரிசியமென்றும் - இருபொருள் - இரண்டுபொருள்களாம் - அங்கவற்றின் - அவைகளின் - முதல் - முற்கூறிய - திருக்கின்- காண்பானாகியசித்தினுக்கு - வரைந்திடுவ - நீக்கப்படுவனவான - சுவகதம்- சுவகதமும் - தன்சாதி - சுசாதியமும் - விசாதிகளாம் - விசாதியமுமான - அவைமூன்றினுக்கும் - அம்மூன்றிற்கும் - உதாரணம் - உவமாநங்கள் - முறையேமொழியின் - கிரமமாகச்சொல்லின் - விரிந்தநிழல்- பரந்தநிழலை-தரும் - கொடுக்கின்ற-நெடும் - நீண்ட- பூம்பணை - அழகியகிளைகளையுடைய - மரமொன்றிற்கு- ஓர்விருட்சத்திற்கு- மிஞிறினங்கள்-வண்டின்கூட்டங்கள் - புக்கு - புகுந்து- முகத்துழுது - இதழ்முகங்களைக் காலாற்கின்று - பெருகுறு - அதனாற்பெருகப்பட்ட - தேனருந்தும்- மதுக்களை யுண்ணும்படியான-த

றுமலர் முதலாயினவும் - வாசனையுள்ள புட்பாதிகளும்- வேறுள்ள - அம்மரத்திற்கு வேறாயுள்ள- அணிமரமும்- அழகியவிருட்சமும் - கன்முதலாயினவும்- அம்மரத்திற்குப் பேதமாயுள்ளபாடாணாதிகளையும்-போலாம்- போலவாம்—எ-று மற்று - ஆல் - அசை.

மலர்முதலென்றமையின் பத்திர பலாதிகளுங்- கன்முதலென்றமையின் கடபடாதிகளையுங் கொள்க-காண்பானாகிய சித்தைத்திருக்கெனவும் -காணப்படு மாயாகாரியமாகியசடத்தைத்திரிஸ்யமெனவுமுருவகப்படுத்தது,சுகதம்- சுவ-தன்னிடத்தில்-கதம் - நீங்காதுபற்றல் -எனவே- ஒன்றிற்றோன்றியபலதைநீங்காது பலதன்மையாயிருத்தல், தன்சாதி - சுசாதியம் - எனவே - தன்னைப்போலமற்றொன்றிருத்தல், விசாதி-வி - நீக்கம் - சாதி - அம்சம்- எனவே-தனக்குமாறாக மற்றொன்றிருத்தல், சுவகதத்திற்கு- மரமுமதிற்றோன்றிய பத்திரபுட்பபலாதிகளையும்-சுசாதிக்கு-அம்மரத்திற்கு வேறாயுள்ள மரத்தையும்-விசாதிக்கு - அம்மரத்திற்கு மாறாயுள்ள கல்லையுமுவமித்தல் - இம்மூன்றுஞ்சுயஞ்சித்திற் கின்றென்பதை யிங்ஙன் றிருக்குவின்மேல் வைத்துக்கூறினார். (உரு)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வுவமானப்படிபிரமத்திற்குச்சுவகதாதிபேதமின்றென்பதற்குவமேய மூணர்த்துகின்றது.

(கவி.)

நிரவயவமாதலினுஞ்சத்துவேறு ............ ........ *
நிகழாமையானுமிறைதனக்குமுதனடுவின்............ *
றொருவுறகவிவ்வுலககாரணமாமாயை........ ...... *
யுண்மையினுவிறுதியதிலென்பதென்கொலென்னில்... *
வராவுதருசித்திரிகன்சித்திரசத்தியைப்போன்............ *
மாயையுஞ்சின்மாத்திரமாம்பிரமத்தின்வேறாத் ....... ... *
தெரிவதிலாமையினென்றுஞ்சச்சிதானந்த.................. *
சிவத்திற்குவிசாதியில்லையென்றுணர்கதெரிந்தே... *

(இதனதுபதப்பொருள்.)

நிரவயவமாதலினும்- அவயவமின்மையினும் - சத்து-சத்தைப்போல- வேறு-மற்றோர்சத்து-நிகழாமையானு

ம் - விளங்காமையினாலும்- இறைதனக்கு- பிரமத்திற்கு-மூதல் - முற்கூறியசுவகதமும் - நடு-இடையிற் கூறியசுசாதியுமாகியவிரண்டும்-இன்றொருவுறுக-இல்லையென நீக்குவாயாக-இவ்வுலககாரணமாம் - இச்சகத்திற் கேதுவாகிய-மாயை-மாயையென்பது - உண்மையினால்- மெய்யா யிருத்தலால்-இறுதியது- மூடிவினுள்ள விசாதியை-இலெனப்தென்னென்னில் - இல்லையென்ப தெங்ஙனமெனின் - வனாவுதரு - எழுதாநின்ற- சித்திரிகன்-சித்திரக்காரனது- சித்திரசத்தியைப்போல் - சித்திரமமைக்கின்றசத்தியவனில்வேறுகாணாமைபோல - மாயையும்-மாயாசத்தியும் - சின்மாத்திரமாம் - சைதன்னியமயமான-பிரமத்தின் - பிரமத்திற்கு- வேறு-வேறுக - தெரிவதிலாமையின்- தோன்றாமையின் - என்றும்-எப்போதும் - சச்சிதானந்த- சச்சிதாநந்தஸ்வரூபமாகிய-சிவத்திறுக்கு- பிரமத்திற்கு-விசாதி யில்லையென்று - விசாதிபேதமில்லையென-உணர்க தெரிந்து-தன்றாயுணர்ந்தறிவாயாக-என — று-சொல்- ஏ- அசை.

மாயையுமென்ற வும்மை - சித்திரசத்தியைத் தழுவிநின்றமையின் இறந்ததுதழீஇயவெச்சவும்மை-பிரமத்திற்குச்சித்திரிகனையும்மாயைக்குச் சித்திரசத்தியையு முவமித்தல்.

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியவுவமேயத்திற்குறுதியாக-பசுர்வேதமகாவாக்கியார்த்தத்தினாலத்துவிதப்பிரமத்திற்குச்சுவகதாதிபேதமின்றென்பதையுணர்த்துகின்றது.

(கவி.)

சுருதியினுளேகமேவாத்துவிதமென்னுஞ் ....... .......*
சொற்கிடையுளேகமெனுஞ்சொல்லதனுக்கயிக்க .......*
மரிதினுணரேவவென்னுமிடைச்சொற்குத்தேற்ற.. .......*
மத்துவிதமெனுமொழிக்குத்துவிதவிலக்காகக்..... ... *
கருதுபொருள்வருதலினாலிம்முறையேமாயா... ..........*
கற்பனைகள்கடந்துநிரவயமாகியென்றுந்...............*
திரிதலில்சின்மயமாகுமொருபிரமந்தனக்குத்...... .......*
தெரித்தசுவகதமுதலாயினமூன்றுமிலையே... ........*

(இதனதுபதப்பொருள்.)

சுருதியினுள்-யசுர்வேதத்தினுள் - ஏகமேவாத்துவிதமென்னும்-ஏகமேவாத்துவிதமென்கின்ற - சொற்கிடையுள்-வாக்கியத்திற்குள்-ஏகமெனும் - ஏகமென்கின்ற- சொல்லதனுக்கு - பதத்தினுக்கு -அயிக்கியம்- அயிக்கியமும்- அரிதினுணர் - அருமையா யுணரப்பட்ட - ஏவவென்னும் - ஏவவென்கின்ற- இடைச்சொற்கு - இடைப்பதத்திற்கு - தேற்றம்- தேற்றமும் - அத்துவிதமெனுமொழிக்கு - அத்துவிதமென்கின்ற பதத்திற்கு - துவித விலக்காக- துவிதநீக்கமுமாக- கருதும்பொருள்- சிந்திக்கப்பட்ட வருத்தம்- வருதலினால்-வருகின்றதனால் - இம்முறையே - இம்முறைமைப் படியே- மாயாகற்பனைகள் - மாயாரோபிதங்களை-கடந்து- நீங்கி - நிரவயமாகி - அவயவமின்றாய் -என்றும்- காலத்திரயத்திலும்- திரிதலில் - மாறுபடாத - சின்மயமாகும் - சின்மாத்திரமாகிய- ஒருபிரமத்தனக்கு - ஒப்பற்றபிரமத்திற்கு - தெரித்த- முற்கூறிய - சுவகதமுதலாயின - சுவகதாதிய- மூன்றும்-மூன்றுபேதங்களும்-இலை-என்றுமில்லை-எ—று-எ-சுற்றசை-நிரவயவமென்பது நிரவயமெனக்கடைக்குறையாய்நின்றது()

மரத்திற்றோன்றியபத்திரபுட்பபலாதிகட்கு வெவ்வேறுதன்மையிருத்தல்போலச் சத்திற்றோன்றிய சகசீவபரங்கட்கு வெவ்வேறுதன்மை யின்மையிற் சுவகதமும், மரத்திற்கினமாய மரமிருத்தல்போலச் சத்திற்கினமாகச் சகசீவபரம்வேறின்மையிற்சுசாதியும், மரத்திற்குக் கல்மாறாயிருத்தல்போலச்சத்திற்குமாறாகச் சகசீவபரம் வேறின்மையின் விசாதியுமாகியவிம்மூன்றுபேதங்களும்பிரமத்திற்கின்றென்க.

வினா - அற்றேல் - சத்திற்றோற்றிய சகசீவபரங்கட்குச் சடத்துவகிஞ்சிஞ்ஞத்துவ-சர்வஞ்ஞத்துவாதிபேதத்தன்மைகளிருக்கச் சுவகதமின்றென்ப தெங்ஙனமெனின்.

விடை - சகமாதிகட்குச் சடத்துவாதித்தன்மை நுண்ணியவறிவுளோர்கூறார் - அஃதியாதெனெனின் - சடமாயிருப்பதுசகம் - கிஞ்சிஞ்ஞனாயிருப்பதுசீவன் - சர்வஞ்ஞனாயிருப்பது பரனென்னுமிடத்திலிம்மூன்றினு மிருப்பது சத்தேயாதலின் - இவற்றிற் சத்துத்தன்மையைக்காண்பதேயன்றி வேறுதன்மையைக் காண்கிலராதலிற் சுவகதபேதமின்றென்க.

வினா - அற்றேல் - முற்கூறிய சத்தைப்போலவிச்சகசீவபர
ங்களினுஞ் சத்திருக்கச் சுசாதியின் றென்ப தென்னையெ
னின்.

விடை - அச்சத்தைப்போல வேறோர்சத்தென்பதின்றி- அ
ச்சத்தேயிருத்தலிற் சுசாதிபேதமின் றென்க.

வினா - அற்றேல்- மாயாவிகாரமான சகசீவபரங்கடொன்று
தொட்டிருக்க- விசாதியின்றென்ப தென்னையெனின்.

விடை - அவையாவுஞ் சத்தாயிருந்துவிளங்குதலின் விசாதி
பேதமின்றென்க.

வினா - அற்றேல்-பிரமத்திற் சச்சிதானந்தமென்னும்பேதம்
விளக்கச் சுவகதமின்றென்ப தென்னையெனின்

விடை - சூரியனதழகேபிரகாச மப்பிரகாசமே சூரியனாதல்
போலச் சத்தினது தேஜசேசித்தும்- அத்தேஜஸான சித்
தேசத்துமவ்விருமையி னொருமையே யாநந்தமுமாய் -
வேற்றுமை யின்மையிற்- சுவகதபேத மின்றென்க.

வினா - அற்றேல் - சத்தைப்போல வியாவகாரிகம் பிராபாதி
திகம் - பாரமார்த்திகமென மூன்று சத்திருக்கச் சுசாதி
யின்றென்ப தென்னையெனின்.

விடை - அங்ஙனமிருத்தல்- சத்தொளியின்பிரதிபலினமே
யன்றிச்சத்தன்றாதலிற் - சுசாதிபேதமின்றென்க.

வினா - அற்றேல் - அதிதப்பிரமத்தி னநந்தானுபவம்- நவ
நவமாயனுபவித்தலில் - விசாதிபேதமின்றென்பதென்
னையெனின்.

விடை - அஃது- சச்சிதாநந்த வொருமையான சுவானுபவ
மெனத் தோன்றாத பேதவாதிகட் கங்ஙனந் தோன்றுவத
ன்றி யவ்வனுபவமுள்ளவ பேதவாதிகட்கங்ஙனந்தோன்
றாதாதலின் விசாதிபேதமின்றென்க.

வினா -அற்றேல்-இவைகட்குப்பிரமாணமுண்டோவெனிக்.
விடை - அறிஞர்க்குலகானந்த மயமென்பதனானும் - விள
க்குமிரவியு மலருமுண்டா முண்டாம் - வீசொளியும்ப
கற்பொழுதும் வினையும்போலத், துளக்கமில்சித்துண்டா
கிலுண்டாம் ஞாலந்-தோற்றரவு மாத்திரமே சொரூபமா
குங்,கிளர்த்த பரமார்த்தத்தா லில்லையென்பதனானும்-பொ
ருகடலிற்றிரைமுதலாப் பிறந்தவெல்லாம் - புனலாகிவிளங்

காமற் புழுதியாமோ - வொருபொருளாம் பிரமமாத்திரமே யல்லாதுபயமெனுங் கற்பனைப்பேறொன்றுதாகுமெனவு மருளியவசிட்டசம்மிதையினாலும் - சத்தேசித்தாகுமயலெனி லசித்தாமசித்தானாற் சாக்ஷியெங்கே, சித்தேசத்தாகுமயலெ னிலசத்தா மசத்தானாற் சடங்களுக்குத் திதியுமில்லை, யொத் தேதோன்றிய சத்துஞ்சித்து நல்லசுகமாகு மென்ற, கைவ ல்யநவநீதத்தினாலும் - ஏகமென்னும்பதத்தினாற்சுவகதமும் ஏவவென்னும் பதத்தினாற் சுசாதியும் - அத்துவிதமென்றப தத்தினால் விசாதியுமின்றெனுஞ் சுருதியினாலுஞ், சர்வம் பிரமமயமென்றபிரமோப தேசத்தினாலும் - சுசனுபர்சமா தி நீங்கி - யென்றகவியினாலும் - மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழ்ற்றிக்கில், வானில்வைய கத்திலெங்கு மியான ன்றிமற் றொன்றில்லை, யானிலாவிடமுமில்லை யெனறிடத்தி யாதுமில்லைத் - தானிகழ் பொருள்வேறில்லைச் சச்சிதாநந்த மென்றுமொன்ற - கசமுனி சுவானுபவத்தினாலும் - யாவுந்தன் மயமாய் விளங்குதலா லெப்போதுஞ் சுவகதாதிபேதம்பிர மத்திற்கின்றென்க.

வினா - அற்றேல் - பரவியாபகத்துள் - சகசீவபரத்-தத்தங் குணங்களோடும் விளங்கினதாக விஸ்வரூபதரிசனத்திற்கி ருஷ்ணசுவாமி காண்பித்ததென்னையெனின்.

விடை - முன்புபாகியத்திற் பேதமாகக் கண்ட - விசயனுக் கவைநீங்கு நிமித்தந்தனதகத்திற் பேதாபேதமாயிருப்ப தைக்காண்பித்ததற்குமேலபேதமானபிரமஸ்வரூபத்தை க்காண்பிப்பதற்கேயன்றிவேறின்றென்க.

வினா - அற்றேல்-அங்ஙனமயிக்க வஸ்துவைமேற்றரிசிப்பித் தற்குப் பிரமாண முண்டோவெனின்.

விடை - அந்நூலிற்றானே—பிரமமானேர் பிரமநெருப்பி டைப்,பிரமமாகியமந்திரந்தன்னினாற்,பிரமமாயசருவுட ன்பெய்தபின்,பிரமமேயடைவா ரவர்பின்னுங்கேளென் ற,கவியினாலுங்காண்க.

வினா - அற்றேல் - இச்சுவகதாதிபேத மொருவரு மொப்ப விலையோவெனின்.

விடை - பரவியாபகத்திற் சீவர்கள் பின்னபின்னமாயிருக்கி ன்றுமொன்றவிசிட்டாத்துவிதிகள் சுவகதமும்,பாசிவசமா ன மாத்மாவென்ற விசிட்டாத்துவிதபக்ஷங்கிஞ்சித்தொப்

புக்கொண்டவர்கள் சுசாதியும், பரம்வேறு - சீவர்கள்வேறு - அப்பரத்தின தருளாலிச்சீவர்கடத்தங் குணங்களோடுஞ் சுகித்திருக்கின்றார்களென்றதுவிதிகள் விசாதியுமுன்டெனவிப்பேதவாதிகளொப்புவரென்க.

வினா - அற்றேல்- அவர்களனுபவத்தானியாதெனின்.

விடை - நிஷ்களஸ்வரூபமான பரவாசுதேவசமூகத்திற் சீவர்களவ்வடிவமாயிருந்தவனதருளாற் பரமாநந்தமனுபவிப்பவென்ற விசிட்டாத்துவிதிகளனுபவமும் - நிஷ்களஸ்வரூபமான பரசிவத்தினது பேராநந்தத்தைநிஷ்களஸ்வரூபமான வாத்மாக்களனுபவிப்பவென்றசிவசமானத்துவமென்னும் விசிட்டாத்துவிதவேகதேசிகளனுபவமும், நிஷ்களஸ்வரூபமான பரவாசுதேவசமூகத்திலாத்மாக்களெவ்வெவ்வத் தன்மையரோ- வவரவாத்தன்மையிலேற்றங்குறைவின்றி யுபாசிப்பதனாலவர்கொடுத்த வாநந்தத்தையனுபவிப்பவென்றதுவிதிகளனுபவமுமாமென்க.

வினா - அற்றேல்- இவர்களுக்கிவ்வனுபவத்தான் முத்தியின்றேவெனின்.

விடை-பரமாத்மபேதமான பதமுத்தியேயன்றி யனேகமென்னுமபேதமான வயிக்கியமுத்தியின்றென்க,

(இம்மூன்றுகவியினதாற்பரியம்,)

சர்வம்பிரம்மமயஞ் சர்வமின்றென்னும் பிரமோபதேசப்படி-யனுபவந்தோன்ற-பேதவாதிகள்கொண்ட சுவகதாதிபேதங்களென்னுங்களங்கங்களைநேகமாநந்தபேதவாதிகட்கனுபவமானவத்துவிதஸ்வரூபமிஃதென நிச்சயித்ததாம்-(உஎ)

(அவதாரிகை,)

இச்செய்யுளின்முன்னிச்சயித்தபிரமஸ்வரூபத்தைத்தரிசிப்பிப்பான்கருதியஃதிற்சற்பனையாகத்தோற்றிய வாரோபமுமவைகளைநீக்கும் அபவாதமு மவைகணீங்கினவிடத்துள்ளயதார்த்தத்தை யறிவித்தற்கேதுவான மூன்றிலக்கணமுமுணர்த்துகின்றது,

(கவி,)

அத்தியாரோபமபவாதமெனவிரண்டா... ... ... ... *
யறைகுவர்கற்பிதமத்தியாரோபமுள்ள... ... ... ... *

சுத்தியூடிலாதவிரசிதம்விளைத்தல்போலச்……………… *
சொற்பிரமசத்தினிலாவுலகதுகற்பித்த…………… *
லெத்திறுதான்வெள்ளியதின்றிப்பியெனல்போலோர்ந்.. *
திறைமெய்பொய்யுலகமெனத்தெளிதலபவாத ………… *
மெய்த்தபொருளறியுமிலக்கணமூன்றுமவைதாம்……… *
விளங்கதத்துவாவிருத்திதடத்தமொடுசொரூபம் ……… *

(இதன்றுபதப்பொருள்,)

அத்தியாரோபம் - அத்தியாரோபமும் - அபவாதமென- அபவாதமுமென - இரண்டாய்-இருவிதமாக - அறைகுவர்- சத்துக்கள் சொல்லுவார்கள்- கற்பிதம்- கற்பிதமாகிய-அத்தியாரோபம் - அத்தியாரோபமானது- உள்ளசுத்தியூடு - உள்ளதான கிளிஞ்சியினிடத்தில்- இலாதவிரசிதம்- இல்லாதவெள்ளியை - விளைத்தல்போல-கற்பித்தல்போல - சொல்-சொல்லாநின்ற-பிரமசத்தின் - உள்ளதானபிரமத்தினிடத்தில்-இலாவுலகது- இல்லாதசகத்தை- கற்பித்தல்- உண்டெனக்கற்பித்துச் சொல்லுதலாம்-அபவாதம்-அபவாதமாவது-எத்திறு- இஃதெத் தன்மைத்தெனில் - வெள்ளியது - பிராந்தியாய்த் தோற்றியவிரசிதம்-இன்று -எதார்த்தமாகவில்லை-இப்பியெனல்போல் -இருக்கின்றதுசிப்பியேயென்றுணர்தல்போல - ஓர்ந்து - விசாரித்து- இறைமெய்- பிரமஞ்சத்தியம் - பொய்யுலகமென- சகமித்தையென்று -தெளிதல்- தெளிவதாம்- மெய்த்தபொருள்- உண்மையானபிரமவஸ்துவை- அறியும்- அறிதற்கேதுவான-இலக்கணமூன்றும்- இலக்ஷணங்கள்மூன்றுவிதமாம் - அவை-அவையாவன-விளங்கு-விளங்காநின்ற- அதத்துவாவிருத்தி - அதத்துவாவிருத்திலட்சணமும்-தடத்தமொடு - தடத்தலட்சணமுடன்- சொரூபம் - சொரூபலக்ஷணமுமாம்—ஏ—று - தான் - தாம் - அசை,

வடநூலார்- அதிகதம்-ஆரோபம்- அத்தியாரோபமெனவும்- அபகதம்- வாதம்- அபவாதமெனவுங் கூறுவர்,

(இதனதுதாற்பரியம்,)

பிரமத்திற் சகசீவபரந்தோன்றுங் கற்பனையுமக்கற்பனைகணீங்குமுறைமையுந் தெரிவித்ததாம், (௨அ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய மூன்றிலக்கண பூருவகமாக வெளிப்படும்பயனையு மங்ஙனம் வெளிப்படும்பிரமத்திற்குப்பரியாயநாமமைந்தையு முணர்த்து கின்றது

(கவி.)

ஆகமுதலனநேதியதுசெய்துநின்ற .... ..... ..... ...*
வாருயிரையறிவித்தலதத்துவாவிருத்தி ... ...... .... *
சாகைநுனிமதியுளதென் றுணர்த்தலிற்பூதாதி....... .......*
சகமயகாரணங்கொண்டறிவுணர்த்தறடத்த.... .. ...*
மாகனலிவிளங்குகதிர்சொரூபனெனல்போலான்.........*
மாவினிசசொரூபமிதுவெனவுணர்த்தல்சொரூப ... *
நீகடவுள்சொரூபநிசஞ்சச்சிதாநந்த.. ........... .... *
நித்தியம்பூரணமாகநீநினைந்துகொள்ளே ....... ..... *

(இதனதுபதப்பொருள்)

ஆகமுதலன-தேகாதிகளை-நேதியதுசெய்து-நேதிகளைந்து-நின்ற-சேடித்திருந்த-ஆருயிரை - வியாபகமானகூடத்தனை-அறிவித்தல்-தெரிவிப்பது- அதத்துவாவிருத்தி-அதத்துவியாவிருத்திலட்சணமாம்-சாகைநுனி- இம்மரக்கோட்டினுச்சியில்-மதியுளதென்று - மூன்றாம்பிறையிருக்கின்றதென-உணர்த்தலின்-அறிவிப்பதுபோல-பூதாதிசகமாய- பிருதிவிமுதற் பிரகிருதியீறானசகமாகிய - காரணங்கொண்டு-எதுவைக்கொண்டு - அறிவுணர்த்தல் - பிரமத்தையறிவிப்பது-தடத்தம்-தடத்தலட்சணமாம்-மாகனலி-மாண்பானசூரியன்-விளங்குகதிர்-பிரகாசகிரணமே-சொரூபனெனல்போல்-வடிவனென்பதுபோல-ஆன்மாவின்-ஆத்மாவினுடைய-நிசசொரூபம்-உண்மையானஸ்வரூபம்-இதுவெனவுணர்த்தல்-இதுவெனவறிவிப்பது - சொரூபம் - ஸ்வரூபலட்சணமாம்-நீ - நீயென்னுங்கூடஸ்தனும் - கடவுள் - அதுவென்னும்பிரமமும் - சொரூபம்- ஆனுமென்னு மயிக்கியஸ்வரூபமே-நிசம்- அத்துவிதத்தினுண்மையாம்- சச்சிதாநந்தநித்தியம்பூரணம்- சத்தாதியைந்தும்- ஆக- அதற்குருவமாக-நீநினைந்துகொள்-நீகருதிக்கொள்ளுவாய்—எ—று-ஏ-அசை,

(பதசாரம்,)

பூரணமானகூடத்தனென்பார்-ஆருயிரென்றார்- நீகடவுள்

சொரூபமென்றது-அதுநீயாகுமென்னுஞ்சாமவேதமஹா வாக்கியத்தை - நீயதுவாகுமென்னும் பிரகடவுபதேசமாக க்கூறினது-இவையேபிரம்மோபதேசத்தின் கருவியாம்-அத த்துவீயா விருத்தியென்பது- அதத்துவாவிருத்தியெனவந் தது-தது- பிரமம்-அத்து-சகத்து- வியாவிருத்தி - நீக்கம்-த டஸ்தமென்பது- லட்சியகாலமுள்ளவளவு மஃதில்லாததாயும தற்கேயுரித்தாயுமிருப்பது -எனவே-நாதமுதற் பிருதிவிப ரியந்தமில்லாதது பிரமமாம்.

(இதனதுதாற்பரியம்)

அதத்துவியா விருத்திலட்சணத்தாற் றேகவிலட்சணமா னநீயென்னுங் கூடஸ்தனையும்- தடஸ்த லட்சணத்தாற்சகத் துவிலட்சணமான- அதுவென்னும் பிரமத்தையும் -சொரூ பவிலக்கணத்தாகுமென்னு மத்துவிதஸ்வரூபத்தையும் - நி கடவுள் சொரூபமெனும்வாக்கியரூபமாகத்தெரிவித்ததாம்.

(அவதாரிகை,)

இச்செய்யுளின் முற்கூறிய சத்தாதியைந்தினிலக்கணமு ணர்த்துகின்றது,

(கவி,)

மதித்தன்மதியாமைநனவாதிகளிற்றனக்கோர் .......... *
வாதையிலாதுண்டெனல்சத்தவத்தையனைத்தினுமே...*
யுதித்தவிடயங்களைநின்றறிந்திடுதல்சித்தா ............... *
முவப்பினுக்குவிடயமாந்தன்மையாநந்தந் .......... *
திதித்தசதோதிதநித்தமனைத்திலுஞ்சாதகமாந் ............ *
திறத்திலனைத்தினுஞ்சம்பந்தநிறைவெனவே ........ *
விதித்திடுகவுயிர்சச்சிதாநந்தமயமேல்.................... *
விளங்கியதிலவற்றுளாநந்தமெங்குமெனினே ........ *

(இதனதுபதப்பொருள்.)

மதித்தன்மதியாமை- அறிவறியாமைகளினும்-நனவாதிக ளின்- சாக்கிராதியவத்தைகளினும் - தனக்கோர்- தனக்கொ ரு-வாதையிலாது- வாதையின்றி-உண்டெனல்-எப்போதுமு ண்டென்பதே-சத்து-சத்தும்- அவத்தையனைத்தினும்- எல் லாவவத்தைகளினும்-உதித்த- தோன்றிய-விடயங்களை -திரி ஸியங்களை-நின்று-விலட்சணமாயிருந்து -அறிந்திடுதல்-அறி வதே-சித்து-சித்தும்-உவப்பினுக்கு- பரமப்பிரீதிக்கு-விட

யமாந்தன்மை-விஷயமாகுந் தன்மையே- ஆநந்தம்-ஆநந்தமும் நிதித்த நிலைபெற்ற- சதோதிதம்- எப்போது முதயமாயிருக்கின்றதே-நித்தம்-நித்தியமும் - அனைத்தினும்-சர்வார்த்தங்களுக்கும் - சாதகமாந்திறத்தினால்- சாதகமா யிருக்குந்தன்மையினால்- அனைத்தினுஞ்சம்பந்தம் - சர்வத்தினுங்கலந்திருப்பது -நிறைவு-பூரணமும்-ஆமென-ஆகுமென-விதித்திடுக-மதிப்பாயாக- உயிர்-ஆன்மாவானது- சச்சிதாநந்தமய்மேல்-சச்சிதாநந்தஸ்வரூபமானால் -அவற்றுள்-அவைகளுக்குள்-ஆநந்தம்- ஆநந்தமானது- எங்கும்-எவ்விடத்தும்-விளங்கியதில்- விளங்கவில்லையே - எனின்-என்னெனக்கேட்கில்—எ—று - ஏ - ஈற்றசை.

தனக்கோர்வாதையிலாதுண்டெனல் - சத்தென்றமையானவத்தைகள் வாதிக்கப்பட்டவசத்தென்பதாயிற்று-பிரமஞ்சத்தாதியைந்தெனவே- சகத்து-அசத்து-சடந்-துக்க-மனித்தங்-கண்டமெனக்கொள்க - அசத்தானபிரகிருதிமுதலியதத்துவங்களி யாவிற்குந் தன்சத்தைக் கொடுத்தவைகளுஞ்சத்துப்போன் றிருக்கச்செய் தவைகளியாவும் அசத்தாயினுந் தானங்ஙனமாகா திருப்பதியாதோ வதுவே சத்தும், அச்சடமானவஸ்துக்களி யாவிற்குந்தன்னறிவைக்கொடுத்தவைகளுஞ்சித்தைப்போன் றறியச்செய் தவைசடமாயினுந் தானங்ஙனமாகாதவைகட்குச் சாக்ஷியாய் விளங்குகின்ற தியாதோவதுவேசித்தும், பவமுதலியதுன்பங்களியாவிற்குந் தன்னின்பத்தைக் கொடுத்தவைக ளின்பம் போலத் தோற்றுவித்தவைகளனைத்துந் துன்பமாயினுந்தானங்ஙனமாகாதெப்போதுமின்பமாய் ரமிக்கின்றதியாதோவதுவேயாநந்தமும், உதித்தொடுங்குகின்ற வஸ்துக்களியாவிற்குந்தன்னித்தியத்தைக்கொடுத்தவைகளென்று முதயமா யிருப்பது போலத்தோற்றுவித்தவைக ளநித்தியமாயினுந் தானங்ஙனமாகாதுசதோதயமாய்விளங்குவதியாதோ வதுவேநித்தியமும், பரிச்சின்னமானவஸ்துக்களியாவிற்குந் தன்னபரிச்சின்னஞ்சத்தைக் கொடுத்தவைக ளஃதைப்போல விளங்கச்செய் தவைகள்பரிச்சின்னமாய்ச் சிதறினுந் தானங்ஙனமாகாம னிறைவாய்விளங்குகின்றதியாதோ வதுவே பூரணமுமாம்.

(இதனதாற்பரியம்.)

பிரமத்தினதுசுபாவமே சத்துமுதலைந்திலக்கணங்களுடைமாமென்பதாம்.

(௩௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய சத்தாதியேயாத்துமாவானா லவ்வாநந்தமிவ் வாத்துமாக்களிடத்தினிரந்தரமாகக் காணப் படவில்லையேயென்றவினாவை நோக்கியிச்சச்சிதாநந்தம்விருத்தித்திரயத்தினாற் பேதம்போலத் தோற்றுந்தன்மையை புணர்த்துகின்றது.

(கவி.)

வெம்மையொளியுருவாயவழல்விளக்கிலொளியே... ...*
விளங்கியிடும்புனலிடத்தின்வெம்மையேவிரியும்...... *
வெம்மையொளியிரண்டுமெழும்விறகினிலவ்வகைபோல் *
விமலசத்தொன்றேநிகழுங்கன்முதலாமவற்றின் ... ...*
மென்மைதவிர்புத்தியதுதமோகுணத்தின்மூட......... *
விருத்தியினுமிராசதத்தின்கோரவிருத்தியினு......... *
மெய்ம்மையொடுசித்தாகுஞ்சத்துவத்திற்சாந்த... ...... *
விருத்தியினிற்சச்சிதாநந்தங்கடோன்றும் ............. *

(இதனதுபதப்பொருள்.)

வெம்மை - உட்டணமும்-ஒளி - பிரகாசமும்-உருவாயவழல் - வடிவமானவக்கினியானது-விளக்கில் - தீபத்தில்-ஒளியேவிளங்கியிடும் - பிரகாசமொன்றுமே விளங்கும்- புனலிடத்தில் - சலத்தில்-வெம்மையேவிரியும் - உட்டணமேவியாபித்திருக்கும்-வெம்மை - வெப்பமும் - ஒளி-பிரகாசமுமாகிய - இரண்டும்-இவ்விரண்டும் - எழும்விறகினில்-காட்டத்திலுண்டாயிருக்கும் - அவ்வகைபோல் - அத்தன்மையைப்போல - விமல-நின்மலமானவாத்மாவினதுகுணங்களில் - கன்முதலாமவற்றின் - மலையாதியவைகளின் - சத்தொன்றேநிகழும் - சத்தொன்றுமேவிளங்கும்-மென்மைதவிர் - கடினமாகிய - புத்தியது-புத்தியினது - தமோகுணத்தின்- தாமதகுணத்தினது-மூடவிருத்தியினும் - மூடவிருத்தியினும்-இராசதத்தின் - இராசதகுணத்தினது-கோரவிருத்தியினும்-கோரவிருத்தியினும்-மெய்ம்மையொடு-சத்துடன்-சித்தாகும்-சித்துமாம்- சத்துவத்தில்-சாத்துவிதகுணத்தின்-சாந்தவிருத்தியினில்-சாந்தவிருத்தியில் - சச்சிதானந்தங்கடோன்றும்-சச்சிதாநந்தமாகியமூன்றுகுணங்களுந்தோன்றும்-எ-று.

ஆத்மாவிற்கல்லையும் -அதின்சத்திற்குட்டணத்தையும்-அ

தின்சித்திற்குப்பிரகாசத்தையும் - அதினாநந்தத்திற்றுருவத்தையும் - மூடவிருத்திக்குப்புனலையும் - கோரவிருத்திக்கு விளக்கையும் - சாந்தவிருத்திக்கு விறகையுமுவமித்தல்—புத்தியினது மூடவிருத்தியிற்சத்தும் - கோரவிருத்தியிற் சத்துஞ்சித்தும்-சாந்தவிருத்தியிற்சச்சிதாநந்தமும்பிரகடிதமாய்த்தோற்றுமென்க.

விநா - அங்ஙனமாயின் - ஒன்றேமூன்றாயிருத்தலா னெவ்வோர்விருத்திகளிற்சிலந்தோற்றிச் சிலதோற்றாததென்னையெனின்.

விடை - அவத்தாத்திரயங்களிற்றத்துவவிரிவினால் விரிந்துமவைகுவிதனாற் குவிந்துந்தோன்றும்.

விநா - அஃதெங்ஙனமெனின்.

விடை - சுழுத்தியிற்றத்துவங்களொடுங்கிநின்ற தாமதத்தினுள்ளமூடவிருத்தியிற்சத்துமேலிடும்போது மற்றிரண்டுமந்தர்க்கதமாயும் - சொப்பனத்திற்றத்துவஞ்சிலவிரிந்தவிராசதத்தினுள்ளகோரவிருத்தியிற் சத்துஞ்சித்துமேலிடும் போதானந்தமொன்றுமந்தர்க்கதமாயும் - சாக்கிரத்திற்றத்துவமுழுதும்விரிந்தசத்துவத்தினுள்ளசாந்தவிருத்தியிற்சச்சிதானந்தமூன்றுந்தோற்றுமென்க.

விநா-அற்றேல்- கோரவிருத்தியிற்சத்தென்றது -கல்லினிடத்தென்றதென்னையெனின்.

விடை - இச்சச்சிதாநந்தப் பிரகடிதமாத்மாவைக்குறித்தேயன்றி- யநாத்மாவைக்குறித்தின்மையிற் - கற்பிதாத்மசம்பந்தமானமூடத்தன்மையையுடையதருவைப்போலமலைகளுஞ்சுழுத்தியையுடையவுயிராதலினங்ஙனங்கூறினானென்க.

(இதனதுதாற்பரியம்.)

விருத்திபேதங்களினாலிருக்கின்றதில்லையென்கின்றதுபோலத்தோற்றுவதேயன்றியெப்போதுமவ்வாத்மாசச்சிதாநந்தஸ்வரூபமாகவேவிளங்குமென்பதாம், (௯௧)

(அவதாரிகை,)

இச்செய்யுளின் முற்கூறிய சத்தாதி யைந்தைப் போலவவைக்குப்போலியாகத் தோற்றிய குற்றங்களை நீக்கிச்சுத்தம்

வெளிப்படுத்துவான் கருதியவற்றுட் சுயஞ்சத்தினுபாசமா
னமூன்றினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

ஆதலினுலானந்தமயமாமான்மா.................. *
அவைத்தினுக்குமுபாதியுளவவைமுறையேமொழியிற் *
பேதமுறுசத்துமூன்றும்விவகாரிகம்பின்................ *
பிராதிபாதிகம்பாரமார்த்திகசத்தெனவே.................. *
மூதுணர்விற்சுழுத்தியிற்றோன்றுது நனவுற்று......... *
முத்தியுறுமளவுமுறுங்கடாதிமுதலதுவாம்............ *
போதுகனவிற்றோன்றியழிவதிடையதுவாம்............ *
பொன்றுதபிரமசத்தேயிறுதியதாமன்றே ......... ..... *

(இதனதுபதப்பொருள்.)

ஆதலினுல்-ஆதலால் - ஆநந்தமயமாமான்மா - ஆநந்தஸ்வரூபமேயாத்மாவாய்-அவைத்தினுக்கும் - அவரதுதன்மையான சத்தாதியைத்திற்கும்- உபாதியுள-உபாதியுள்ளனவாம்-அவை-அவ்வுபாதிகளை - முறையேமொழியில்-கிரமமாகச்சொல்லுமிடத்து - பேதமுறு - சுயஞ்சத்தினுபாசமான-சத்துமூன்றும்- சத்துதிரிவிதமாம் - அவையாவன-விவகாரிகம்-வியாவகாரிகசத்தெனவும் - பின்-பின்பு-பிராதிபாதிகம்-பிராதிபாசிகசத்தெனவும்-பாரமார்த்திகசத்தென-பாரமார்த்திகசத்தெனவுமாம்-அவற்றுள்-மூதுணர்வில்- மூதுணர்வின்றியமூர்ச்சையிலும்-சுழுத்தியில்-சுழுத்தியவத்தையிலும்-தோன்றுது - தோன்றமல்-நனவுற்று-சாக்கிரத்தையடைந்து-முத்தியுறுமளவும்-மோட்சமடைகிறபரியந்தமும்- உறும்-இருக்கின்ற-கடாதி-கடாதிவிஷயசத்தே - முதலதுவாம்-முற்கூறியவியாவகாரிகசத்தாம்-போதுகனவில் -சொப்பனகாலத்தில்-தோன்றி-தோற்றி-அழிவது- நனவிலழிகின்றமனுதிவிஷயசத்தே- இடையதுவாம்- இடையிற்கூறியபிராதிபாசிகசத்தாம்-பொன்றுத - சுழுத்தியில் வியாபித்திருக்கின்ற-பிரமசத்தே-ஞானுதிவிஷயசத்தே-இறுதியதாம்-முடிவிற்கூறியபாரமார்த்திகசத்தாம்—எ—று - அன்றே - அசை,

வியாவகாரிகம்விவகரிக்கப்படுதல்-பிராதிபாசிகம் - பிரதிபலித்ததாகக்காணப்படல் - பாரமார்த்திகம்-விருத்திசம்பத்தநீங்கிநிற்றல்- கடாதியென்றல்- கண்ணுதிலயம்பொறிகளா

னும் அறியும்புலன்களனைத்தையும் மூன்று காலத்தினுமுள்ளதுசத்தெனவும்- ஒருகாற்றோன்றியொருகாலழிதலினிம் மூன்றுஞ் சத்துப்போலி யெனவுங்கொள்க.

(பதசாரம்)

நனவிற்றோற்றுங்கடாதி விஷயக்காட்சியுள்ளதா யிருப்பதுவியாவகாரிகசத்தும், கனவிற்றோற்று மனோரூபமானவிடயங்களுள்ளதாயிருப்பது- பிராதிபாசிகசத்தும், சுழுத்தியிற்றோன்றுஞ்சூன்யமேபோதவிடயமேயுள்ளதாயிருப்பது - பாரமார்த்திகசத்துமாம்.

வினா - பொன்றாத பிரமசத்தென்ற வஸ்துவையுமிங்ஙனங்கூறலாமோவெனின்.

விடை - சுழுத்தியிரண்டவத்தையுந்தோன்றியழிதற்குக்காரணமாயிருத்தலினிஃது பொன்றாததுவும்- துரியத்திற்சூனியமழிதலினிஃதுமாபாசமாமென்க,

வினா - அற்றேல்இனிச் சத்தாவது தானியாதெனின்.

விடை- அதிஷ்டானமாகிய பாரமார்த்திகமுமாரோபிதமானவேனையவிரண்டுமான விம்மூன்று சத்துமிருத்தற்கு ஸ்தானமாய்த்துரியத்திற் காட்சிப்பட்ட நீதமாயிருப்பதேயாமென்க.

(இதனதுதாற்பரியம்.)

பஞ்சபூதபௌதிகங்களை யெனதெனவும் - தேகமுதலிய தத்துவங்களையானெனவுங்கூறுங் குற்றங்களினீங்கின விடத்தியாவுந்தானாயிருத்தலே சுயஞ்சத்தாமெனத்தெரிவித்ததாம்.

(அவதாரிகை)

இச்செய்யுளினிறுத்தமுறையாற்சுயஞ் சித்திரூபாசமானநான்கிலக்கணமுஞ் சுயாநந்தாபாசமான வெண்விதநாமமுமுணர்த்துகின்றது.

(கவி;)

சிவனொடுசன்கூடத்தன்பிரமமென்னச்.................*
சித்துநான்காங்குடநீர்கதவுறும்வெள்ளமீன்வான்.......*
றாவுபனிநீர்விம்பவனுமிதாகாசஞ்.......................*
சொல்கடாவிச்சின்னாகாசமொடுமாவான்................*

மேவுமிவையவற்றினுக்குத்திட்டாந்தமுறையாம் .... ...... *
விடயமொடுபிரமம்வாசனைமுக்கியம்பின் ............ *
னேவுநிசமான்மாவோடத்துவிதம்வித்தை .. ...... ... ..... *
யெனுமிவற்றின்பெயராலெண்வகைப்படுமாநந்தம் ... *

(இதனதுபதப்பொருள்.)

சீவனொடு- சீவனுடனே-ஈசன்-ஈசனும் - கூடத்தன்-கூடத்தனும்-பிரமமென்ன - பிரமமென-சித்துநான்காம்-சித்துநான்குவிதமாம்- அவையாவன-குடநீர்- கடசலத்தில்-கதவுறும்-பிரதிபலிக்கின்ற- வெண்மீன்-வெண்மையான நட்சத்திரங்களையுடைய-வான்-ஆகாயமும்- தூவு-வீசாநின்ற-பனிநீர்-குளிர்ந்தமேகசலத்தில்-விம்ப- பிரதிவிம்பமாகிய-அனுமிதாகாசம்-அனுமானத்தாலறியுமேகாகாசமும்-சொல்-சொல்லாநின்ற-கடாவிச்சின்னாகாசமொடு- கடாகாயத்துடன்-மாவான்-மகாகாசமுமாக-மேவுமிவை-பொருந்தாநின்றவிந்நான்கும்-அவற்றினுக்கு- அச்சீவாதிநான்கினுக்கும் -திட்டாந்தமுறையாம்- நிரமேலதிருட்டாந்தமாம் - விடயமொடு -விடயாநந்தத்துடன்- பிரமம்-பிரமாநந்தமும் -வாசனை-வாசனாநந்தமும்-முக்கியம்- முக்கியாநந்தமும்-பின்-பின்பு-ஏவும்-சொல்லாநின்ற- நிசம்-நிசாநந்தமும் -ஆன்மாவொடு-ஆத்மாநந்தத்துடன்-அத்துவிதம்- அத்துவிதாநந்தமும் -வித்தை-யெனும்- வித்தியாநந்தமுமென- இவற்றின்பெயரால் -இவைகளினுடைமங்களால் - எண்வகைப்படுமாநந்தம்-ஆநந்தமெட்டுவிதமாம்.—எ—று.

பிரதிவிம்பமென்பது - விம்பமெனச்சொல் லெச்சமாய்நின்றது - என்றுந்தானாய்விளங்குவதுசித்தெனவுமொருகாற்றெரிவுமொருகாற்றெரிவின்மையுமாதலி னிந்நான்குஞ் சித்தப்போலியெனவுங்கொள்க - கடாவிச்சின்னம் -கட-கடத்துள்-அவிச்சின்னம் - பின்னமின்றிநிற்றல்- எனவேகடத்துட்சேர்ந்தவாகாயமென்பதாயிற்று-அனுமிதம் - அனுமானசித்தம்.

சீவனுக்குக்கடசலப்பிரதிவிம்பாகாயமும் ஈசனுக்குமேகசலப்பிரதிவிம்பாகாயமும் - கூடத்தனுக்குக் கடாகாயமும் - பிரமத்திற்குமகாகாயமும்- உவமித்தல்- ஆநந்தமென்பதைக் -கடைநிலைத்தீபமாகவெட்டிடத்துங்கூட்டினும்.

ஆலாதிசரீரத்திரயங்களினின்று நனவாதியவத்தாத்திரய

ங்களினுள்ள விசுவாதி யபிமானிகளோடு மவித்தையாதி தத்துவங்களை யாமெனவென்றறியுங் கிஞ்சிஞ்ஞனே சீவனெனவும், விராட்டாதி சரீரத் திரயங்களினின்று நனவாதி யவத்தாத்திரயங்களினுள்ள பிரமனாதி யபிமானிகளோடு மாயாதி தத்துவங்களையறியுஞ் சர்வஞ்ஞனே யீசனெனவும், வியட்டிதூலாதிகளசையத்தானசையாது சாட்சியாயறிவதே கூடஸ்தனெனவும், சமட்டிதூலாதிகளசையத்தானசையாது சாட்சியாயறிவதே பிரமமெனவுமாகியவிந்நான்கின் - முன்னையவிரண்டும் - வியட்டிசமட்டியையறிதலுந்தங்களை யறியுமிடத்துக்கிஞ்சிஞ்ஞ சர்வஞ்ஞபேதமாயறிதலு மிவையுந் தற்பிரகாசங் கொண்டறியாது புறப்பிரகாசங்கொண் டறிதலுமாதலி னாபாசரூபம்பின்னையவிரண்டுமுற்கூறிய சீவபரங்களின் செய்கைகட்குச் சாட்சியாதலினானுந் தங்களையறியுமிடத்துச்சீவசாட்சி யீசுரசாட்சி யென்கின்ற பேதமிருந்தவினாலுமிவ்வறிதலுந் தானாயிராது தற்பிரகாசங் கொண்டறிதலின் - அதிஷ்டானரூபமாகியவிந்நான்குஞ் சித்திரூபாசமென்க.

விஞ - அற்றேல்-கூடஸ்தப்பிரமஞ்சித்தேயெனப்பஞ்சதசப்பிரகரணமாதிய நூல்களிற்கூற விங்ஙனஞ்சீவேசுரரைப்போலவவர்களையுநீக்கினதென்னையெனின்.

விடை - கடத்தைப்போலத்தேகத்தைச்சடமெனவும் - கடசலப்பிரதிவிம்பம்போலச்சிதாபாசனைச்சீவனெனவும் - கடாகாசம்போற்றேகத்தினுள்ளிருக்குஞ்சாக்ஷியைக் கூடஸ்தனெனவும் - மேகம்போலப்பாஞ்ச பூதபௌதிகத்தைச்சடமெனவும் - மேகசலப்பிரதிவிம்பம்போற்பரனையீசனெனவும் - மகாகாசம்போற் சர்வசாக்ஷியைப்பிரமமெனவுங்கண்டவற்றைப்பிரித்தவைக்கு விலட்சணமானவைகளைத்தரிசிக்குநிமித்தஞ் சமயாபமோக்ஷமாகச் சித்தெனக்கூறினதேயன்றி யவைகளைமுன்னிட்டேயமான கூடஸ்தப்பிரமத்தை யுபாதியின்றியவத்துவிதசைதன்யமெனக்கூறுமையிற் காரியத்தோடிக்காரணத்தையுங்கூட்டிநீக்கினானென்க.

விஞ - இங்ஙனநீக்குதற்குமேற்கோளுளவோவெனின்.

விடை - விண்ணொன்றேமகாவிண்ணொன்று மேகவிண்ணொன்றம்பாரின்,மண்ணொன்றகட-விண்ணொன்று மருவியசலவிண்ணொன்று, மென்னுங்கற்பனைபோலொன்றேயெ

ங்குமாம்பிரமமீச,னன்னுங்கூடஸ்தர்சீவனென்கு சைதன்யமாமென்ற,நவநீதகைவல்யக்கவியினாற்காண்க.

வினா - இங்ஙனங்கூறிய கூடஸ்தப்பிரமமுஞ்சீவேசுரரைப்போலவித்தையாமோவெனின்.

விடை - பொய்யைக்குறித்துமெய்யும் மெய்யைக்குறித்துப்பொய்யும் வந்தமைபோலச் சீவேசுரரைக்குறித்துக் கூடஸ்தப்பிரமமுமவைகளைக்குறித்துச் சீவேசுரனுமென்கின்ற நாமங்கள் வந்தமையானுஞ் சத்துள்ளமட்டுமசத்துண்டென்றும் - உள்ளதானபிரமத்திற்கு மில்லாததானபிரபஞ்சத்திற்குமதீதமேஸ்வரூபமென்ற சுருதிவாக்கியத்தினானுமிந்நான்காகாயமு நீங்கினவிடத்து நாமரூபரகிதமான வாகாயமேவிளங்குதல்போல வவித்தைமாயாவுபாதிநீங்கினவிடத்திந்நான்குஞ் சின்மாத்திரமாய் விளங்கலாற்காரியகாரணவுபாதியைக்குறித்துப்பொய்மெய்யெனவுங்கூறப்பட்டதேயன்றிச்சுபாவமாயவ்விரண்டுமின்றென்க.

வினா - இனிச்சித்தாவது தானியாதெனின்.

விடை - இங்ஙனங்கூறியவவத்தைகளொன்றினுன்று மறையினுந்தான் மறைபடாதவைகள் விளங்குதல்விளக்குதலென்பதின்றி யென்றுஞ்சமோதயமாய்த் தானேதானாய்விளங்குதலே சுயஞ்சித்தாமென்க.

(இதனதுதாற்பரியம்,)

அதிஷ்டானாரோபிதமாகத் தோற்றிய பிரமஞானாநிதாரதன்மியங்களைத் தரிசிப்பித்தவைகணீங்கினபரிசுத்தஞானமே சுயஞ்சித்தெனவபரோக்ஷப்படுத்தினதாம். (௧௮)

(அவதாரிகை.)

முற்கூறிய வாநந்தாபாசமான வஷிடவிதாநந்தவிலக்கணங்கூறுவான்றொடங்கி யிச்செய்யுளிற்சவிதாநந்த விலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

மாதுமுதல்விடயவூதியங்கடமிற்றோன்றி ........ ........*
வரல்விடயவானந்தங்கண்படையிற்றோன்ற ........,.....*
வோதுபிரமாநந்தந்துயிற்றெளிவிற்றோற்ற ...............*
மூடையதுதான்வாசனாநந்தங்கேடுளவா ....... ........*

மாதலுமின்றெநுமன்மதிதோன்றுதல்முக்கியமா ......... *
மாநந்தமனோலயயோகத்தினில்வந்துதித்த ................ *
லேதமறுநிசாநந்தம்பிரியவிடயத்து ........................ *
ளியான்பிரியனென்னத்தோன்றுதலான்மாநந்தம்........ *

(இதனதுபதப்பொருள்)

மாதுமுதல் - வனிதாதிய-விடயவூதியங்கடமில் - விடயப்பிரயோசனங்களில் -தோன்றிவரல்-தோற்றுவதே - விடயவாநந்தம் - விடயாநந்தமும் - கண்படையில் - நித்திரையில் - தோன்றல் - தோற்றுவதே-ஓதுபிரமாநந்தம் - சொல்லாநின்றபிரமாநந்தமும் - துயிற்றெளிவில் - நித்திரைதெளிந்துந்தெளியாவிடத்தில் - தோற்றமுடையது - உண்டாவதே-வாசனாநந்தம் - வாசனாநந்தமும்- வேளவாமாதலுமில் - விருப்புவெறுப்பின்றிய - நொதுமன்மதி - உபேக்ஷாபுத்தியில் -தோன்றுதல்-உண்டாவதே- முக்கியாநந்தம்-முக்கியாநந்தமும் - மனோலயயோகத்தினில்- மனோலயமானயோகாப்பியாசத்தில் - வந்துதித்தல்-உண்டாதலே - ஏதமறும்- குற்றமற்ற - நிசாநந்தம்-நிசாநந்தமும் - பிரியவிடயத்துள்-பிரியவஸ்துக்களில் - யான்பிரியனென்ன-யானேபிரியவஸ்துவென - தோன்றுதல்-தோற்றுதலே - ஆன்மாநந்தம்-ஆத்மாநந்தமும்-ஆம்-ஆகும்—ஏ-று—தான் - அசை. (௩ச)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையாணிரண்டாநந்தங்களுநித்தியாபாசமானவபாவசதுட்டயங்களுமாகிய விவைகளினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

விரியுமுலகனைத்தும்பொய்மெய்ம்மைதானென்னும் .. *
விவேகத்திற்றோன்றுவதேயத்துவிதானந்த........ .......*
மரியமறைமுடிவாகும்வாக்கியஞானத்தா ................*
லாதலதுவித்தையாநந்தமெனவறிக........ ........... *
வுரியனமுன்னின்மையொடுபின்னின்மையன்றி...... [கார்
யொன்றினிலொன்றின்மையென்று மின்மையெனநான்
திரியுமபாவங்களிவைநித்தியத்துட்புகாத ............... *
திறத்தனவாம்பூரணத்துமுறுதனமூன்றுகும் ........*

(இதனது பதப்பொருள்,)

விரியும் - மாயையினின்றும்விரிந்த - உலகனைத்தும் - நாமரூபப்பிரபஞ்சமியாவும்-பொய் - மித்தையெனவும் - மெய்ம்மைதானென்னும் - பிரமமேசத்தியமெனவும்-விவேகத்தில் - விசாரிக்கின்றவிவேகஞானத்தில் - தோன்றுவதே - உண்டாவதே - அத்துவிதாநந்தம்- அத்துவிதாநந்தமும்-அரிய - அறிதற்கரிய-மறைமுடிவாகும் - வேதாந்தத்திலுள்ள - வாக்கியஞானத்தால்-மகாவாக்கியத்திற்செனிதமான ஞானத்தால் - ஆதலது-உண்டாகின்றவாநந்தமே - வித்தையானந்தமென - வித்தியாநந்தமென்று - அறிக - அறிவாயாக-உரியன-அறிதற்குரியனவாகிய- முன்னின்மையொடு-பிராகபாவத்துடன் - பின்னின்மை-பிரத்தொம்சாபாவமும்-அன்றி-இவையன்றியும் - ஒன்றினிலொன்றின்மை - அன்னியோன்னியாபாவமும் - என்றுமின்மையென - அத்தியந்தாபாவமுமென - நான்காம்-அபாவசதுட்டயங்களாம் - திரியும்பாவங்களிவை - வேறுபாடுடையவிந்நான்கபாவங்களும் - நித்தியத்துட்புகாத - நித்தியத்திற்சேராத - திறத்தனவாம் - தன்மையையுடையனவாம் - பூரணத்தும் - பூரணத்திலும் - உறுதன- பொருந்ாதனவாகியபரிச்சேதங்கள் - மூன்றுகும்-திரிவிதமாம்-எ-று.

என்றும்பிரியவடிவாயிருத்தலினநந்தமும் - ஒருகாற்பிரியமுமொருகாற் பிரியமின்மையுமாயிருத்தனி லிவ்வெல்லைகையும் - ஆநந்தப்போலியெனவும்-சதோதயமாய் விளங்குவதே நித்தியமெனவு - முன்னின்மையாதிய நான்கிடத்துந்தோற்றுதனித்தியப்போலியெனவுங்கொள்க.

நனவினுள்ளவோர் விடயக்கூட்டரவிற்கூடுவோனாகியவியாவகாரிகசீவனுங்கூடப்படும்பொருளாகியவிடயவஸ்துக்களையுமழித்துக்கொண் டெழாநின்றபயனெதுவோவதுவிடயத்தைமுன்னிட்டு வருதலால்விடயாநந்த மெனவும்,

சுழுத்திநித்திரையிலுள்ள சூனியமானவிடயக்கூட்டரவிற்கூடுவோனாகிய பாரமார்த்திக சீவனுங்கூடப்படும் பொருளாகியசூனியமுங்கரைந்தவிடத்தெழாநின்றபயனெதுவோவது நித்திரையைமுன்னிட்டுவருதலாற்பிரமாநந்தமெனவும்

நித்திரைதெளிந்துந் தெளியாவிடத்துச் சூனியமும்விடயமுங்கூடுங் கூட்டரவினவற்றைக்கரைத்துக் கொண்டெழா

நின்றபயனெதுவோவது வாசனையைமுன்னிட்டு வருதலால் வாசனாநந்தமெனவும்,

சகலவஸ்துக்களிலுங்கூடும்போது பிரியாப்பிரியமின்றி யவுபேக்ஷா புத்தியிற்றோன்றும் பயனெதுவோவதுசமத்துவத்தை முன்னிட்டுவருதலான் முக்கியாநந்தமெனவும்,

யோகத்திற் சாக்ஷியாகிய குறியைக்காண்பானாகிய மனஞ் சேர்ந்தொடுங்கினவிடத் தவ்விரண்டுமின்றிவரும்பயனெது வோவது நிசத்தைமுன்னிட்டு வருதலானிசாநந்தமெனவும்,

சீவனானவன் றனதுபிரியத்தைத்தனாதிவிடயங்களின்மே லவைத்தவைகளையின்பமாயனுபவிக்குமிடத்தனுபவிப்பா னுமனுபவியமுமாகிய விரண்டுமின்றியுதிக்கும் பயனெது வோவதுசீவனைமுன்னிட்டுவருதலா லாத்மானந்தமெனவும்,

ஒன்றெனவுமிரண்டெனவு மறிந்தனுபவிக்குமிடத்தவ்வி ரண்டுநீங்கியவறிவினிடத் துதிக்கும்பயனெதுவோவது து விதநீக்கத்தைமுன்னிட்டுவருதலாலத்துவிதாநந்தமெனவும்,

மகாவாக்கியார்த்த நிச்சயமறிந்த விடத்தச்சொற்பொரு ளின்றியுதிக்கும்பயனெதுவோவது விசாரஞானத்தைமுன் னிட்டுவருதலால் வித்தையாநந்தமெனவுமாம்,

நிசாநந்தமென்பது-சுவகீயாநந்தம்-அஃதாவது-தன்னு டையதானவாநந்தம்-எனவே-யிங்குமனதைப்பற்றிவரலால்- மானதாநந்தமென்பதேநிசாநந்தமென்பதாயிற்று-இங்ஙன ங்கூறிய வானந்தங்களொன்றற்கொன்று தாரதம்மியமாகி யுமொன்றை முன்னிட்டிருப்பதாகியு மங்ஙனமுதித்தவிடத் தவ்வஸ்துக்க ளின்மையாயினும் பின்னுந்தானுதித்தவிடத்த வ்வஸ்துக்களாகவே காண்கையானுமிவை ஸ்வயாநந்தமாகா வென்க.

வினா - இங்ஙனமாயின் - உலகாயிதன் விடயாநந்தமே யாநந்தமெனக்கூறியதென்னையெனின்.

விடை - ஆகாயத்திலுள்ள வாதித்தனை யூர்த்தமுகமாய்ப்பா ர்க்கச்சத்தியில்லாதவனுக்குச் சலாகாயத்திற்றோற்றிய கற் பனாசூரியனை யதோமுகத்திற்காட்டியதுகாரணமாக வூர் த்தமுகத்திலுள்ள யதார்த்தம் வெளிப்படுத்துவதுபோல விடயக்காட்சியிறந்தபேரின்பமுதியாதவபக்குவனுக்கிவ்

விடயாநந்தமேபொருளெனக் கூறிய துகாரணமாக யதா ர்த்தமனஸ்வரூபாநந்தம் வெளிப்படுமென்பது நோக் கியென்க.

வினா - இனிச்சாமளாதி மதம்பிரமாநந்தமே யாநந்தமென க்கூறியதென்னையெனின்,

விடை-யாவுஞ் சூனியமான விடத்துள்ள போதையேசுகமா தலின தனையடையுநிமித்தமியாவுஞ்சூனியமானவிடத்து ள்ளசுழூத்தியாநந்தமே பொருளெனக்கவுணமாகக் கூறி யதென்க.

வினா -அற்றேல்-இவ்வாநந்தமாபாசமானதென்னையெனின்,

விடை-சகலாவத்தையிற் றோன்றுமாநந்தஞ் சகலமேயாதல் போலக்கேவலாவத்தையிற் றோன்றுமாநந்தமுங் கேவல மேயாதலினாலென்க.

வினா - அற்றேல்- அதனைப்பிரமாநந்தமென்றதென்னையெ னின்,

விடை - பொய்யானதேகத்தின் மெய்யிருந்தமைகொண்ட தற்குமெய்யெனத்தானியாகுபெயராய்வந்ததுபோலச்,ச ர்வசூன்யமயானத்திலுள்ள பிரமாநந்தம்போலவித்தத்து வங்களடங்கினசூன்யத்திலும்நித்திரா மயக்கத்திலுமிருந் தலினிச்சுழுத்தி யாநந்தத்திற்குமந்நாமம்வந்ததென்க.

வினா - அச்சர்வசூன்யத்தைப்போல விச்சூனியமிருக்கவி தினுள்ளவாநந்தத்திற்குத்தோஷம்வந்ததென்னையெனின்.

விடை - அச்சூன்யம்- (அண்டமெண்டிக்கெங்கண்ணுமட ங்கச்சூனியமதாகக், கண்டுகொண்டிருக்கக்கண்டகருத்தை யுமறவேவிட்டா, லணட்டெண்டிக்கெங்கண்ணுமாய்நின்ற வானந்தத்தைக், கண்டு கொண்டிருக்கும்வண்ணங்கணத்தி லுவந்துதிக்குமன்றே, யென்றகவிப்படி யாவனந்தமேவிட் டிருக்குமிச்சூன்யம் அவித்தையான் மறைப்புண்டிருக்கு மாதலாலிங்ஙனமாயிற்றென்க.

வினா - இனிச்சுத்தவாசனையாற் சத்வாசனையு மிதனுற்சித்து வாசனையு மிதனுலாநந்தவாசனையு மிதனுலாநந்தாதீதமாத லின்வாசனாநந்தமே யாநந்தமெனச்சில நூல்களிற்கூறிய தென்னையெனின்,

விடை - அசுத்தவாசனைநீங்கச் சுத்தவாசனையுமிதனாலுண்டானவாத்மவிசாரணையாற் சித்துவாசனையு மிதனாலுண்டான சமாதியினனுபவசமஸ்காரமு மிதனாலியாவுமாநந்தமயமாமெனக்கருதிச் சாதனமாகக்கூறினதேயன்றி யதார்த்தமன்றென்க.

வினா - இனியிராகத்துவேஷமின்றி யுபேக்ஷாபுத்தியிற்றோற்றுகின்ற முக்கியாநந்தமேயாநந்தமெனச் சிலநூல்களிற்கூறியதென்னையெனின்,

விடை - காமக்குரோதாதிகளைசித்தவிடத்துண்டான வின்பமேபேராநந்தமெனக்காட்டற்கென்க.

வினா-அங்ஙனமாயின்-இஃதாபாசமென்றதென்னையெனின்,

விடை - இராகத்துவேஷநீங்கின விடந்தானாகத்தோன்றுதிலைகளைமுன்னிட்டுத்தோற்றலினிங்ஙனமாயிற்றென்க.

வினா - இனிமனமொடுங்கினயோகத்தினுண்டான நிசாநந்தமேயானந்தமென யோகநூல்களிற்கூறிய தென்னையெனின்,

விடை - சங்கற்ப விகற்பங்களற்ற சுத்தத்தினுள்ளபேராநந்தமிஃதெனத்தெரிவிப்பான்கருதிக்கூறியதென்க.

வினா - ஆயின் அஃதுமனோலயமானவிடமன்றோவெனின்,

விடை - மனத்தனக்குப் பிரியவஸ்துவெதுவோவதி லடங்குமதுபொருளாகாதென்க.

வினா - அஃதெங்ஙனமெனின்.

விடை - அம்மனம் விடயத்தினடங்கினுமடங்கும் பிரமத்தினடங்கினு மடங்குமாதலின் தானுதித்த விடத்தொடுங்கவேண்டுதலிலைஃதன்றென்க.

வினா - அற்றேல்- யோகத்தின் மனமொடுங்கின தென்றமையாற்குற்றமென்னையெனின்,

விடை - ஞானபாதத்திற்குக் கீழ்ப்படியோகமாதலினானுமஃதொருகுறியிலடங்கிநிற்குமாதலினானு மக்குறியேகதேசவஸ்துவாதலினானு மிஃது மஃதேயாமென்க.

வினா - இனியாத்மஞான சாத்திரங்களி லாத்மாநந்தமேயாநந்தமெனக்கூறிய தென்னையெனின்.

விடை - ஆத்மாதனது பிரியத்தை விடயத்திலதென்றுரூப வியாதுதனதாகக்கண் டனுபவித்தலினென்க.

வினா-அங்ஙனமாயின் இஃதாபாசமென்றதென்னையெனின்,

விடை-பிரியவிடயத்துளியான்பிரியனெனக்கண்டும்பின்னு மவ்விடயங்களைமுன்னிட்டுவருதலினங்ஙனமாயிற்றென்க.

வினா - அற்றேல் - தனுவிவிடயங்கள் பிரியமாய்நிற்கின்றதெ ன்னையெனின்,

விடை - தனதுபிரியத்தை யவைகண்மேல்வைத்தபோதவை பிரியமாகவும் வெறுத்தபோதவை வெறுப்பாகவுமொன் றும் வையாதபோ துதாசீனமாகவுமிருத்தலிற் றனதுபி ரியமவைகட் கிருத்தல்போலத் தோற்றிற்றென்க.

வினா - இனிச்சுருதிகளிற்றுவித நீக்கத்தி லுதயமான வத்து விதாநந்தமென்ற தென்னையெனின்,

விடை - கூடஸ்தப் பிரமமென்ற நாமரூபமவைகளின் வியா ப்பியவியாபகமென்ற ரூபமுமாகியவித்துவிதநீங்கின விடத்துண்டானதே யஃதாமென்றறிவித்தற்கென்க.

வினா - அங்ஙனமாயின்-இஃதுமாபாச மென்றதென்னையெ னின்,

விடை - பொய்மெய்யெனக்கண்ட விவேகத்திற்றோன்றலா ரோபிதசம்பந்தமாதலா லங்ஙனமாயிற்றென்க.

வினா - அற்றேல் - இச்சடசித்து நீக்கந்துவித நீக்கமன்றோ வெனின்,

விடை - இச்சடதிருஷ்டியின்றிச் சித்தானகூடஸ்தப் பிரமா யிக்கியமேதுவிதநீக்கமாதலினவையாகாவென்க.

வினா - இனிவேதாந்தசாத்திரங்க ளனைத்துமஹாவாக்கியத்தி ற்றோன்றிய வித்தியாநந்தமேயாநந்தமெனக் கூறியதெ ன்னையெனின்.

விடை - அதுநீயாகுமென்னும்பதத்தினருத்தமாகியசுயஞ் சித்தினுதயமானநிரதிசயானந்தமேயஃதெனவனுபவித் தற்கென்க.

வினா-அங்ஙனமாயினிஃதுமாபாசமென்றதென்னையெனின்

விடை - வாக்கியார்த்தவிசாரணை செய்யும்போதுதயமுமஃ

தின்றியபோதின்மையுமாதலினங்ஙனமாயிற்றென்க.

வினு - அற்றேல்- இவ்வாநந்தங்களாற்பிரயோசனமின்றே வெனின்,

விடை - ஆடியிற்றோன்றிய வாபாசமுகத்தால்யதார்த்தமுகம்வெளிப்படுவதுபோல விவ்வாநந்தங்களாற் சுயாநந்தவேத்தியம்வருதலே பிரயோசனமாமென்க.

வினு - அற்றேல் - யாவர்க்குமிங்ஙனந்தானேயெனின்,

விடை - ஆடியிற்சாயாமுகத்தைக் கண்ட பாலாளஃதேபொருளெனக் காத்தாற்பற்றித்துன்புறும், குமாரராளச்சாயையைக்கண்டவுடனே தனதுயதார்த்தமுகத்தி னிருக்கின்றமீசைமேற்கரம்பற்றி யின்புறுமவைபோலவிவ்வாநந்தங்களுதித்தபோதிவையேபொருளெனக்கண்ட அபக்குவன்றுன்புறுவன்- பக்குவனிவை முன்னில்லையாகத்தனதுசுயாநந்தத்தைக்கண்டின்புறுவனென்க- மேல், நித்தியம்போலத்தோற்றுஞ்சகமறிதற்கு முன்னும் பின்னுமிடையினுமெட்போது மின்மையென்கின்றவிந்நான்குத்தியினுனந்நித்தியத்துட்புகாதவநித்தியமாமென்க.

வினு - இச்சகமிந்நான்கிடத்து மபாவமாயின்மேலிருக்கின்றதியாதெனின்,

விடை - இந்நான்கிடத்தும்-பாவமாயிருப்பதுநித்தியமானபிரமமேயாதலினஃதேயிருக்கின்றதென்க.

வினு - அற்றேல் - இச்சகம்நித்தியமாகத்தோற்றுவதென்னையெனின்,

விடை - தனதுசாயைசலத்தினதோமுகத்தினபாவமாயிருந்துஞ்சுபாவமாய்த்தோற்றல்போல நித்தியச்சாயையானசகமுங்கற்பிதமாகத்தோற்றும்போதே நித்தியம்போலிருந்ததென்க.

வினு - விம்பரூபமாகப்பிரதிவிம்பந் தோற்றல்போலச்சித்துரூபமாகச்சகந்தோற்றுதுபலவாகத்தோற்றினதென்னையெனின்,

விடை - ஆடியின்பேதத்தினு லானந்தமும் வேறாகத்தோற்றுதல்போலமாயாபேதத்தினு லகிலமுமனேகமாகத்தோற்றுமவைநீங்கினியாவுத்தன்மயமாகவிளங்குமென்க.

(இவ்விரண்டுகவியினதுதாத்பரியம்.)

விடயாநந்தமுதல்வித்தியாநந்தமீறானவெண்வகையாநந்தங்களுண்டாகுங்காரணங்களுமவற்றின்றாதன்மியங்களுஞ்சாதனத்தின்கண்ணுதயமானபிரயோசனங்களுஞ்சாத்தியமானசுயாநந்தத்திருபாசமாகவிவைகளனைத்தும் விளங்குமென்பதும்-மேல்-நித்தியம்போலவிளங்குமிச்சகம்- அபாவசதுட்டயமென்னுமுத்தியிலுனித்தியத்துட்பகாதவனித்தியமெனவும் - நித்தியத்திருபாசமெனவுந்தெரிவித்ததாம். (௫௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய பூரணுபாசமாகவிளங்கிய- காலபரிச்சேதமுதலியமூன்றினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

உரைத்தவைதாமியாவையெனினொருகாலத்துண்டின் *
றொருகாலத்தெனுங்காலபரிச்சேதமுடனே............ *
தெரித்தவொருதேயத்துண்டொருதேயத்திலையென் .... *
றேயபரிச்சேதமுமொன்றுமாகாதென்னுங்.......... *
கருத்தில்வருவத்துபரிச்சேதமுமாமென்னக்............. *
கருதிடுகவினிச்சித்தின்விரிவாகுமெனமூன்......... ... *
விரித்திடுமெச்சிவாதிகட்குநாமாதி......... ......... *
விவகாரகற்பனையீன்றெடுத்துமொழிகுதுமால் ... ... *

(இதனதுபதப்பொருள்.)

உரைத்தவை - முற்கூறியபரிச்சேதங்கள் - யாவையெனின் - எவையென்றால் - ஒருகாலத்துண்டு - ஒருகாலத்துள்ளதும் - இன்றொருகாலத்தெனும் - ஒருகாலத்திலையுமென்கின்ற - காலபரிச்சேதமுடன் - காலபரிச்சேதத்துடன் - தெரித்த - தெரிவிக்கப்பட்ட - ஒருதேயத்துண்டு - ஒருதேசத்துளதும் - ஒருதேயத்திலையென் - ஒருதேசத்தில்லையுமென்கின்ற - தேயபரிச்சேதமும் - தேசபரிச்சேதமும் - ஒன்றும் - ஒருபொருளாம் - ஆகாதென்னும் - ஒருபொருளாகாதென்கின்றதே - கருத்தில்வரு - மனதிற்றோற்றுகின்ற - வத்துபரிச்சேதமும் - வஸ்துபரிச்சேதமும் - ஆமென்ன - இம்மூன்றுமாமென்று - கருதிடுக - அறிவாயாக - இனி - மேல் - சித்தின் - சயஞ்சித்தினது -

விரிவாகுமென- விரிவாகுமென்று - முன்விரித்திடும்-முன் விரித்துக்கூறிய - அச்சீவாதிகட்கு - அச்சீவர்முதலியபகித்து நான்கிற்கும் - விவகாரம்-கிரியையினால் - நாமாதிகற்பனை-கற்பனாநாமங்களை - கண்டு-இவ்விடத்தில் - எடுத்துமொழிதரும் - தாக்கிச்சொல்லுவாம்——எ——று- தாம் ஏ-ஆல்-அசை.

சொரூபமுதல்ஸ்தம்ப பரியந்தமிடைவிடாமனிறைந்திருப்பதே பூரணமெனவும், அவைபோலத் தோன்றுங்காலாதிபரிச்சேதமூன்றும் பூரணப்போலியெனவுங்கொள்க -ஒன்றென்பதையாகாதென்பதோடுங்கூட்டினும் - நாமாதியென்றமையின்ரூபமுங்கொள்கவெனவே - நாமரூபக்கிரியையாயிற்று விபுவைப்போலத்தோற்றுகின்ற காலமுந்தேசமும்வஸ்துவுமாகியவிம்மூன்றும்பரிச்சேதமேயன்றிப்பரிபூரணமாகாவென்க.

வினா - அற்றேல் - காலம்விபுவாயசஞ்சலமாயிருப்பதுமன்றியதனிடத்தியாவுந்தோன்றி விளங்கியழிவதனாலதுவேபிரமமெனக்காலப்பிரமவாதிகள்கூறியதென்னையெனின்,

விடை-அமைச்சையரசனெனக்கண்டவனாலவ்வரசனைக்காண்பதுபோலக் காலத்தை விபுவெனக்கண்டதனாலதற்கதீதமானபூரணத்தைக்காண்பதற்கென்க.

வினா-அற்றேல்- காலத்திற்கு விபுவாதிகுணங்களின்றோவெனின்,

விடை-தன்மாத்திரையினின்றேகதேசத்திலாகாயமுதித்தது போலவதீதத்தினின்றேகதேசத்திலுதித்தலொருப்திக்குமுன்பின்னிப்போதென்கின்றகாலமூன்றுதலினாலும்- ஒன்றினொன்றில்லையென்கின்ற பருவங்களாறுதலினாலுமொருபருவத்திற்றோன்றிய பொருண்மற்றோர் பருவத்திற்றோன்றாமையானுமதற்குப் பரிச்சின்னமேயன்றி விபுத்துவமெங்ஙனமாமென்க.

வினா - அற்றேல்-இனித் தேயத்திற்கும் விபுத்துவமின்றோவெனின்,

விடை- யானைகண்டகுருடனைப்போலத்தான்கண்டபூமியெங்குமிருக்கின்றதென்பதேயன்றிமேலாகாயமிருக்கவெங்ஙனம்விபுத்துவம்வரும், அஃதன்றியு மொருதேயத்தன்மைபோலவொருதேயத்திலுமொருதேயத்திலுண்டாத

லொருதேயத்திலின்மையி னிஃதிற்கு மங்ஙனமேயாமெ
ன்க.

வினா- அற்றேல்-வஸ்துவுக்கும்விபுத்துவ மின்றோவெனின்,
விடை-அதற்குஞ் சமுதாயத்தில் விபுத்துவங்கூறினதேயன்
றிப்பலவா யிருத்தற்கெங்ஙனம்விபுத்துவம்வரும், அஃத
ன்றியும்நாமத்தினும் ரூபத்தினுமதாரத்தினும் பரிச்சின்
னமேயிருத்தலி னிதற்குமங்ஙனமேயாமென்க.

வினா - அற்றேல்-இவைகட்குவிபுத்துவங்கற்பிப்பானேனெ
னின்,

விடை-தனிவஸ்துவிற்குப் பலவஸ்துக்க ளுமிவ்வஸ்துக்களு
ண்டாதற்காதாரமானதேயங்களு மித்தேயங்களுண்டாதற்
காதாரமான காலங்களு மாகிய விவைகட்கொன்றற்கொன்
றுவிசேடமானதையே விபுவாமெனக்கூறியிவைகட்காதா
ரமானபூரணமேவிபுவாமெனக்காண்பித்ததன்மேலிம்மூ
ன்றும்பரிச்சின்னமென வறிவித்தற்கென்க.

வினா - அற்றேல்-அசத்து சடந் துக்கமனித்தங்கண்டமென
க்கூறியவிவ்வைந்திற்குமாதாரமான - சத்துச்சித்துஆநந்
தம் நித்தியம்பூரணமென்ற விவ்வைந்து தன்மையுடைய
வாத்மாவுக்கத்துவிதமெங்ஙனங்கூடுமெனின்,

விடை - அசத்தாதியைந் துதன்மையுடையதிச்சகமெனத்த
ள்ளற்பொருட் டிச்சத்தாதிகுணங்களைக் கற்பித்ததேயன்
றியிதற்குச்சுபாவமன்றென்க - அஃதன்றியுஞ் சத்தினித்
தியமுஞ் சித்திற்பூரணமுமடங்கச் சச்சிதாநந்தமாம் - இ
வற்றில் - சத்துச்சித்தினடங்கச்சிதானந்தமும் சித்து ஆந
ந்தத்தினடங்க வாநந்தமொன்றுமே சேடிக்கும்,இவ்வாந
ந்தமுஞ்சுயம் பிரகாசமாய்த்தானேயதிதஞானமாம், அங்
ஙனமானவிடஞ்சுத்தப்பிரம மாதலாலத்துவிதமேயாமெ
ன்க.

வினா - அற்றேல்- இப்பிரமத்திற் கவ்வைந்துதன்மையுமின்
றோவெனின்,

விடை - இன்றென்பது முண்டென்பதுங்கற்பித்துக்கூறுத
லேயன்றி யிவையவாங்மனகோசரமாதலிற் குருவாக்கிய
ப்படி தன்னனுபவத்திற்காணென்க,

(இதனதுதாற்பரியம்.)

பரிபூரணத்தைப்போல விளங்குங் காலாதிமூன்றினிலக்க ணங்களுமவைபூரணத்தி ரூபாசமென்பதுந்தெரிவித்துச்சு யஞ்சத்தாதியைந்தின தொருமையாகியவாத்மஸ்வரூபமிஃ தெனக்குறிப்பாற் றெரிவித்ததாம். (௯௬)

(அவதாரிகை.)

மூன்சுத்தப்பிரமசுபாவமான சத்தாதியைந்தினிலக்கணங் கூறிமேற்சுயஞ்சித்தி ரூபாசமானசீவாதிநான்கினுமரூபவி வகாரங்களினிலக்கணங்கூறுவான்றொடங்கியிச்செய்யுளிற் சீ வனுக்கபிமானநாமமான மூன்றிற்றூலதேக வபிமானியான விசுவனதுபரியாய நாமங்கள்பன்னிரண்டையுமுணர்த்துகி ன்றது.

(கவி.)

சாற்றரியசீவபேதங்கண்மூறைவிசுவன்............... *
றைசதன்பின்பிராஞ்ஞனெனப்பகர்ந்திடுவரவ்ருள் ..... *
வேற்றுமைசெய்தூலவுடல்வியட்டியபிமானி............... *
விவகாரிகன்புத்திகதுவுறுசைதன்யன்................... *
மாற்றரியசிதாபாசன்விட்சேபரூபன் ......................... *
வருபிரமாதிருநுவல்கத்திருவொடுபோத்திருவே ... ...*
தோற்றியிடும்விஞ்ஞானமயன்குடும்பிசரீரி.............. *
தொம்பதமுக்கியன்முதலாயினவிசுவனுமம்... ..... ..... *

(இதனதுபதப்பொருள்.)

சாற்றரிய-சொல்லுதற்கரிய - சீவபேதங்கள்-சீவபேதங்க ளை-மூறை-சாக்கிராதி முறைப்படி - விசுவன் - விசுவனும்- தைசதன்-தைசஸனும்- பின்-பின்பு- பிராஞ்ஞனென-பிரா ஞ்ஞனுமென-பகர்ந்திடுவர் - அறிஞர்சொல்லுவார்கள்-அவ ருள் - அம்மூவருள் - வேற்றுமைசெய்- வேறுபாடுசெய்கின் ற-தூலவுடல்வியட்டியபிமானி- வியட்டிதூலதேகாபிமானி யும் - விவகாரிகன் - வியாவகாரிகனும்- புத்திகதுவுறுசைத ன்யன் - அந்தக்கரணப்பிரதிபலன சைதன்னியனும் - மா ற்றரிய - நீக்குதற்கரிய - சிதாபாசன்-சிதாபாசனும்- விக்ஷே பரூபன்-விட்சேபரூபனும்- வருபிரமாதிரு-வராநின்றபிர மாதாவும்-நுவல் - சொல்லிய-கத்திருவொடு- கர்த்தாவுடன்-

போத்திரு - போக்தாவும்- தோற்றியிடும் - தோற்றுநின்ற-விஞ்ஞானமயன் - விஞ்ஞானமயனும்-குடும்பி - குடும்பியும் - சரீரி-சரீரியும்-தொம்பதமுக்கியன் - தொம்பதமுக்கியனும்-முதலாயின - இவைமுதலிய பிறவும்-விசுவனுமம்-விசுவனதுபரியாய நாமங்களாம் --- எ — று-ஏ-அசை.

ஆபாசமென்பது - உண்மை போலத்தோன்றல்,முதலாயினமென்றமையின் - க்ஷேத்திரீ-விஷயி-முதற்பிறவுங்கொள்க, விசுவனென்பது - சாக்கிரத்தினிறைந்ததன்மையையுடையவன்,தைஜசன் - என்பது-தேஜசு சம்பந்தமாத்திரமுடையவன்,தேஜசு - அந்தக்கரணம், பிராஞ்ஞனென்பது-பிராணசம்பந்தமாத்திர முடையவன்.

(பதசாரம்.)

தூலதேகத்திற் சாக்கிராவத்தையி னுள்ளதத்துவங்களனைத்தினும்வியாபித் திருத்தலின் விசுவனெனவும்—இத்தேகத்தைத்தானென் றபிமானித்தலிற் றூலவுடல் வியட்டியபிமானியெனவும்—இத்தத்துவங்களோடும் விவகரித்தலின் வியாவகாரிகனெனவும்—அந்தக்கரணப்பிரதிபலனாதலிற் புத்திகதுவுறு சைதன்னியனெனவும்—கூடஸ்தச்சாயையாதலிற்சிதாபாசனெனவும்—விடயமாகப் பரிணமித்தலின்விட்சேபனெனவும்—கரணங்களோடு கூடியறிதலிற் பிரமாத்திருவெனவும்—இவைகட்குக் கருத்தாவாயிருத்தலிற்கத்திருவெனவும்—யாவுந்தான் புசித்தலிற் போத்திருவெனவும்— யாவையுமறிதலின்விஞ்ஞானமயனெனவும்—சம்சாரத்திற் கூடியிருத்தலிற்குடும்பியெனவும்—சரீரத்தையுடையவனாதலிற் சரீரியெனவும்—நீயென்னும் பதத்திற்கு வாச்சியப்பொருளாதலிற் றொம்பதமுக்கிய னெனவுங்கூறினர். (௬௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளி னிறுத்தமுறையாற்றைசதனதுபரியாயநாமமூன்றும் பிராஞ்ஞனது பரியாயநாமமூன்றும்- மேலாத்மநாமமூன்று முணர்த்துகின்றது.

(கவி.

பெற்றவொருசுக்குமமெய்வியட்டியபிமானி ....... .... ※

பிராதிபாதிகசீவன்சொப்பனகற்பிதனே ...............※

மற்றிவைதாமுதலாயதைசதன்றன்பெயராய் ............ *
வழங்குறுவகாரணமெய்வியட்டியபிமானி ............ *
யுற்றவிருமவித்தையோபாதிகன்காரியமா ............ *
முபாதிகனென்பனமுதலாம்பிராஞ்ஞனமங்கள் ......... *
பற்றிவருசீவான்மாவந்தரான்மாமேற் ............ *
பரமான்மாவெனப்படுமான்மாவிதமூன்றாகும் ....... *

(இதனதுபதப்பொருள்.)

பெற்றவொரு - ஓர்கற்பனையாகவந்த - சூக்குமமெய்வியட்டியபிமானி - சூட்சுமசரீரவியட்டியபிமானியும் - பிராதிபாதிகசீவன் - பிராதிபாதிகசீவனும்- சொப்பனகற்பிதன் - சொப்பனகற்பிதனுமான - இவைதாமுதலாய-இவையாதிய பிறவும்-தைசதன்றன்பெயராய்-தைசதனதுநாமமாக-வழங்குறுவ - வழங்குகின்றனவாம் - காரணமெய் வியட்டியபிமானி-வியட்டிகாரணசரீரவபிமானியும்- உற்றவிரும்-பொருந்திவிளங்கிய- அவித்தையோபாதிகன்- அவித்தையாவுபாதிகனும் - காரியமாமுபாதிகன் - காரியோபாதிகனும் - என்பனமுதலாம்-என்கின்றனவாதியபிறவும்- பிராஞ்ஞனமங்கள்- பிராஞ்ஞனதுநாமங்களாம் - பற்றிவரும்-இம்மூன்றைப் பற்றிவருகின்ற-சீவான்மா- ஜீவாத்மாவெனவும் - அந்தராத்மா- அந்தராத்மாவெனவும்- மேல்-மேலான - பரமான்மாவெனப்படும்-பரமாத்மாவென்றுசொல்லப்பட்ட- ஆன்மா-ஆன்மாவானது - விதமூன்றாகும்- மூன்றுவிதமாம்— ஏ—று - ஏ- மற்று - தாம் - அசை.

அவித்தியோபாதிக னென்பது - அவித்தியாவென்னு நிலைமொழி யீற்றினுள்ள ஆகாரமும் - உபாதிகனென்னும்வருமொழிமுதலினுள்ள வுகாரமுங்கெட்டோகாரந் தோன்றின, இஃதுவடநூல்விதிப்படி குணசந்தியாம்.

(பதசாரம்.)

சூட்சுமதேகத்திற் சொப்பனவத்தையிற் பிரகாசித்தலிற்றைசதனெனவும்—அத்தேகத்தை யானென்ற பிமானித்தலிற்சூக்குமமெய் வியட்டியபிமானி யெனவும்—அங்ஙனமுள்ளதத்துவங்களின் முன்னுள்ள சாக்கிரவாசனையேறிமெய்போலக்காண்டலிற் பிராதிபாசிக சீவனெனவும்—கனவிற்சுயேச்சாபோகமாயனுபவித்தலிற் சொப்பன கற்பிதனெனவுமா

ம்—இனிகாரண தேகத்திற் சுழுத்தியவத்தையிற் றத்துவநீங் கினவிடத்திற் றெரிவாயிருத்தலிற் பிராஞ்ஞனெனவும்—சூ ன்யத்தை யபிமானித்திருத்தலிற் காரணமெய் வியட்டியபி மானியெனவும்— அவித்தைசம்பந்தமாயிருத்தலின அவித் தையோபாதிகனெனவும் — காரணத்தினின்று காரியப் படு தலிற்காரியோபாதிக னெனவுங்கூறினர். (௯௮)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வாத்மத்திரயவிலக்கணமுணர் த்துகின்றது.

(கவி,)—(வேறு.)

காய்த்துள்விரும்புபோலுடம்பாதி ........................*
கலந்துறுகுடும்பமென்வழக்கிற் ........................*
சார்ந்துளன்சீவான்மாவெனப்படுவான் ........................*
றாமரையிலையினீர்போலத் ........................*
தோய்ந்துள்குடும்பப்பெருவிவகாரந் ........................*
தோய்விலனந்தரான்மாவாம் ........................*
போந்துலகிற்குப்பரிதிபோற்சான்றாய்ப் ........................*
பொருந்தினேன்றான்பரமான்மா ........................*

(இதனதுபதப்பொருள்.)

காய்த்துள-தப்தமான- இரும்புபோல்- அயத்தைப்போ ல-உடம்பாதி-தூலமாதியசரீரங்களின்-கலந்துறு-சம்பந்தித் து-குடும்பமென்-சம்சாரமென்கின்ற-வழக்கில்-விவகாரத்தி ல்-சார்ந்துளன்-சேர்ந்திருப்பவன்-சீவான்மாவெனப்படுவா ன்-சீவாத்மா வெனச்சொல்லப் படுவோனும் - தாமரையிலை யினீர்போல - கமலபத்திரோதகம்போல- தோய்ந்து - கலந் திருந்தும்-உளகுடும்பம் - சமுசாரத்தி னுள்ள-பெருவிவகா ரம்-பெரியவிவகாரத்தில் - தோய்விலன்-கலவாதவன் - அந் தரான்மாவாம்- அந்தராத்மாவென்பவனும் - போந்துலகிற் கு-தோன்றியவுலகவியாபாரத்திற்கு- பரிதிபோல்-சூரியனை ப்போல-சான்றாய் - விவகாரத்திற்குச்சாட்சியாக- பொருந் தினோன் - அமைந்திருப்பவன் - பரமான்மா - பரமாத்மா வாம்—எ—று - தான்-அசை.

ஆத்மாவென்றது-அபிமானத்திரயசாட்சியெனக்கொள்க.

தூலஞ்சூக்குமங்காரணமென்கின்றசரீரத்திரயசாக்கிரஞ்சொப்பனஞ்சுழுத்தியென்கிறவவத்தாத்திரயவிவகாரங்களையானென்றபிமானிக்கும் விசுவதைசச பிராஞ்ஞனென்னுமபிமானத்திரயங்களோடுங்கூடி விடயங்களையனுபவிக்கும்வியாவகாரிகன்பிராதிபாசிகன் பாரமார்த்திகனென்னுஞ்சீவத்திரயங்களுக்குச்சாட்சியானசீவான்மா-வந்தரான்மா- பரமான்மாவென்னு மான்மத்திரயங்களாம்.

இவற்றுள். - தப்தாயபிண்டம்போல- விச்சாக்கிரவிவகாரத்திற்சார்ந்து மதற்குச் சாட்சியா யிருக்கின்றவன்சீவாத்மாவெனவும்சொப்பன விவகாரத்திற் கமலபத்திரோதகம்போலச்சேர்ந்துஞ் சேராதுசாட்சியாயிருக்கின்றவனந்தராத்மாவெனவும் — சுழுத்தி சூனியத்திற் சகத்திற்குச் சூரியனைப்போலச்சாட்சியா யிருக்கின்றவன்பரமாத்மாவெனவுங்கொள்க—இம்மூன்றுங் கூடத்தனதமிசங்களாம்.

வினா - அபிமானத் திரயங்களோடுங்கூட்டிக் கூறியநாமங்களைச்சீவத்திரயங்களெனப்பிரித்துக்கூறியதென்னையெனின்,

விடை - விரிக்கின் விரியுமெனச் சமுதாயமாய்க் கூறினதாலென்க, இங்ஙனங்கூறுவதற்குப் பிரமாணம் நானுசீவவாதக்கட்டளையிற்காண்க, இன்னுநனவிற்சாக்கிராதிமூன்றிற்கும்விடய விவகாரமுமனோராச்சியவிவகாரமும்சூன்றிவிவகாரமுமாகிய விவற்றிற்குச் சாட்சியெனக்கொள்ளினுமமையும்.

(இம்மூன்றுகவியினதுதாற்பரியம்.)

தொம்பத விலக்கியார்த்தந்தோன்று நிமித்தமதன்முக்கியார்த்தத்தை விரித்துக்கூறியதாம். (௩௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியவவத்தாத்திரயவிலட்சணமானஞானாத்மாவினுக்கவாந்தரமாகத் தோற்றியகற்பனைவிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

நீர்விழுந்தொருவெங்கதிர்தமோறி........................ *
நின்றதென்றுரைப்பதுபோலுங் ........................ *
கார்வினாந்தோடவோடுகின்றதுதன்........................ *

கலைமதியென்பதுபோலு ........................ *
மோர்வருந்திரிவில்போதவான்மாவிற் ........................ *
றுடன்முதலாகியவுபாதிப் ........................ *
பேர்பெறுஞ்சீவபாவனையுலகப் ........................ *
பெருவிவகாரமென்றறியே ........................ *

(இதனதுபதப்பொருள்,)

நீர்-சலிக்கின்றசலத்தின்கண் - விழுந்து-பிரதிபலித்த- ஒருவெங்கதிர்-ஓர்வெம்மையான சூரியன்-தடுமாறிநின்றதென்று-சலித்திருக்கின்றதென்று- உரைப்பதுபோலும்-சொல்கின்றதுபோலும் - கார்-மேகமானது - விரைந்தோட-விரைவிற்செல்ல - ஓடுகின்றது- கடிதிற்செல்கின்றது - தண்கலை-குளிர்ந்தகலைகளையுடைய - மதியென்பதுபோலும்- சந்திரனென்பதுபோலவும்- ஓர்வரும் - அறிதற்கரிய - திரிவில்-அபேதமான - போதவான்மாவிற்கு- ஞானாத்மாவினுக்கு-உடன்முதலாகிய-தேகமாதியான - உபாதிப்பேர்பெறும்- உபாதிநாமங்களைப்பெற்ற- ஜீவபாவனை -ஜீவகற்பிதமே-உலகம்-ஜகத்தினது - பெருவிவகாரமென்றறி - பெரியவிவகாரமென்றறிவாயாக—எ—று - ஏ - ஈற்றசை,

உலகமென்பது- இவன்சமுசார மெனக்கொள்க - சலப்பிரதிவிம்பமான சூரியனதுசலனமே- நிச்சலமானவிம்பசூரியனுக்குண்டானதாகக்காண்பதுபோலவித்தியாப்பிரதிவிம்பனானஜீவனது கற்பனாவிவகாரங்களனைத்து மதிஷ்டானஞானாத்மாவான்கூடஸ்தனுக்குவந்தது போலவாந்தரமாகத்தோற்றினதேயன்றி யதார்த்தமாயின்றென்க.

(இதனதுதாற்பரியம்,)

தொம்பதத்தின் வாச்சியார்த்த விலக்கண மிலக்கியார்த்தமானகூடஸ்தனுக்குவந்ததாகத் தோற்றுங்கற்பனையையுணர்த்தியதாம். (௬௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையா னீசுரனுக் கபிமானநாமமூன்றுமவரில் விராட்டிற்கிரண்டுமிரணியகருப்பற்கிரண்டுமானபரியாயநாமங்களையுமுணர்த்துகின்றது.

(கவி.)

அருவிராட்புருடனிரணியகருப்ப.......................*
அந்தரியாமியென்றீசன்.......................*
திரிவிதமவருட்டூலவாகத்துச்.......................*
சமட்டியாகியவபிமானி.......................*
விரிவுறும்வைசுவானரனெனன்முதலாம்.......................*
விராட்புருடன்பெயராகு.......................*
மருவுறுமிலிங்கமெனுமுட்டற்சமட்டி.......................*
மானிமாப்பிராணனேயன்றி.......................*

(இதனதுபதப்பொருள்.)

அருவிராட்புருடன் - அறிதற்கரியவிராட்புருடனும்-இரணியகருப்பன் - இரணியகருப்பனும் - அந்தரியாமியென்று-அந்தரியாமியுமென- ஈசன்-ஈசனுளவன்-திரிவிதம்-மூன்றுவிதமாம்-அவருள்-அவர்களுக்குள்-தூலவாகத்துச்சமட்டியாகியவபிமானி - சமட்டிதூல சரீரவபிமானியும் - விரிவுறும்-விரிவுற்ற - வைசுவானரனெனன் முதலாம் - வைசுவானரனென்னு மிரண்டுமுதலியபிறவும்- விராட்புருடன்பெயராகும் - விராட்புருடனது நாமங்களாம் - மருவுறும்-பொருந்தாநின்ற - இலிங்கமெனுமுடற் சமட்டிமானி - சமட்டிசூட்சுமசரீரவபிமானியும் - மாப்பிராணனேயன்றி-மஹாப்பிராணனுமல்லாமல்—எ—று - ஏ - அசை,

விராட்புருடனென்பது - பிருதிவியாதி யாவுந்தனதுருவமாகக்கொண் டிருப்பவன்—இரணிய கருப்பனென்பது-விகசிதமாய்ப்பிரகாசிக்கின்றயாவையுந்தன துதரத்துளடக்கியிருப்பவன்—அந்தரியாமியென்பது-ஆகாயம்போல்யாவினுள்ளும் வியாபித்திருப்பவன்—பிருதிவியாதியென்பது-பிருதிவி-அப்பு-தேயு-வாயு - ஆகாயம்-சந்திரன்-சூரியனுத்மாவென்னுமஷ்டமூர்த்தமெனினுமமையும்—சமட்டிதூலத்தையபிமானித்தலிற்றூலவாகத்துச்சமட்டியபிமானியெனவும்—விசுவவியாபகனாதலின் வைசுவானரனெனவுமாகியவிரண்டு நாமங்களாம். (௪௧)

---

(அவதாரிகை,)

இச்செய்யுளி னிரணியகருப்பனுக்கு முற்கூறுதவொன்றுமந்தரியாமியினுமை மேழுமுணர்த்துகின்றது,

(கவி,)

சூத்திரான்மகனென்பெயர்முதலாகச்.......... .....*
சொற்றனரிரணியகருப்பற்........................*
கேத்துகாரணமாமுடம்புறுசமட்டி....................*
யெனுமபிமானியவ்வியத்தன்..........................*
வாய்த்தகாரணமாமுபாதிகனநந்த........................*
மயன்பரதேவதைபரம....................................*
ளுத்ததற்பதமுக்கியார்த்தனென்பெயர்மு............*
னந்தரியாமிபெற்றிடுமே......................................*

(இதனதுபதப்பொருள்,)

சூத்திரான்மகனென் - சூத்திராத்மகனுமென்கின்ற- பெயர்முதலாக-நாமமாதியானபிறவும் - சொற்றனரிரணியகருப்பற்கு - இரணிய கருப்பனுக்குச்சொன்னார்கள்-ஏத்து-துதிக்கப்பட்ட-காரணமாமுடம்புறுசமட்டியெனுமபிமானி-சமட்டிகாரண சரீரவபிமானியும் - அவ்வியத்தன்- அவ்வியத்தனும்-வாய்த்த-பொருந்திய-காரணமாமுபாதிகன் - காரணோபாதிகனும்- அநந்தமயன் - அநந்தமயனும் - பரதேவதை-பரதேவதையும் - பரமன்- பரமனும்- ஆத்த-பொருந்திய - தற்பதமுக்கியார்த்தனென-தற்பதமுக்கியார்த்தனுமென்கின்ற - பெயர்முன்- நாமங்களாதியபிறவும் - அந்தரியாமிபெற்றிடும்-அந்தரியாமிபெறுவன்—ஏ-று-ஏ-அசை,

பெயர்முதலென்றமையின்-மாயோபாதிகன் - மாயாபாசகன்-மாயாவிசேஷிகன்-சகத்யோனி- அக்ஷரன்-அவ்வியாகிருதன்-சபலப்பிரமன்-சகுணப்பிரமனென்பனவுங்கொள்க.

(பதசாரம்,)

சமட்டிசூக்குமசரீரத்தையபிமானித்திருத்தலினிலிங்கமெனுமுடற்சமட்டியபிமானியெனவும்—மாருதமேமூச்சாயிருத்தலின்மாப்பிராணனெனவும் — சூத்திரதாரியாயாவையுமசைப்பிக்கின்றவனாதலிற்சூத்திராத்மகனெனவும்—சமட்டிகாரணதேகத்தையபிமானித்திருத்தலிற் காரணமாமுடம்புறுசமட்டியபிமானியெனவும்—இந்திரியங்கட்குவிஷயமாகாதடங்கிநிற்றலி னவ்வியத்தனெனவும்—சகத்செென்மாதிகாரணத்துவமே யுபாதியாயுடையவனாதலிற் காரணமாமுபாதிகனெனவும் — முடிவின்றி வியாபித்திருத்தலினனந்த

மயனெனவும்—மஹாதேவாதலிற் பரதேவதையெனவும்—யாவுக்குமேலா யிருத்தலிற் பரமனெனவும்—அதுவென்னும்பதத்திற்குவாச்சியார்த்தனாதலிற் றற்பதமுக்கியார்த்தனெனவுங்கூறினர்.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்,)

தற்பதவிலக்கியார்த்தந்தோன்ற நிமித்தமதின்முக்கியார்த்தத்தைவிரித்துணர்த்தியதாம். (சஉ)

—○○○—

(அவதாரிகை.)

இச்செய்யுளினவத்தாத்திரய சம்பந்தமானவீசனதுமூவுருவவிலக்கணமுமவைகட்கு விலட்சணமானபிரமவிலக்கணமுந்தோன்றத் திட்டாந்தபூருவமாக வுணர்த்துகின்றது.

(கவி.)

சித்திரப்படமோர்பொருளொடுங்கூடாத் ..................*
திகழ்வினிற்றவுதமேயெனவு ..................*
நெய்த்தகூழ்வருடக்கடிதமேயெனவு..................*
நீனிறத்திலாஞ்சனையெனவும்..................*
பத்தியோவியஞ்சேர்ந்திரஞ்சிதமெனவும்..................*
படுதல்போற்பிரமமுமாயை..................*
வைத்தகாரியங்கள்கடந்துறுநிலையில்..................*
வயங்குஞ்சித்தெனும்பெயர்புனைந்தே..................*

(இதனதுபதப்பொருள்,)

சித்திரப்படம் - சித்திரப்படமானது - ஓர்பொருளொடும் - பஞ்சவன்னங்களொன்றோடும் - கூடாத்திகழ்வினில்- சேராமற்றனித்து விளங்குமிடத்து - தவுதமெனவும் - தவுதபடமெனவும்- நெய்த்தகூழ்வருட- பசைக்கூழ்த்தடவினால்- கடிதமெனவும் - கடிதபடமெனவும் - நீனிறத்து - நீலநிறத்தினாலச்சுக்கட்டினால் - இலாஞ்சனை யெனவும்- இலாஞ்சனபடமெனவும் - பத்தியோவியஞ்சேர்ந்து- வரிசையானசித்திரம்வரைந்தால் - இரஞ்சிதமெனவும் - இரஞ்சிதபடமெனவும் - படுதல்போல் - சொல்லப்படுவதுபோல- பிரமமும்-பிரமவஸ்துவும்- மாயைவைத்த- மாயையினாலுண்டான- காரியங்கள் - பாஞ்சபூதபௌதிகங்களை -கடந்துறுநிலையில்-

நீங்கியவிடத்தில் - வயங்குஞ்சித்தெனும்பெயர்புனைந்து-சி த்தெனுநாமத்தைத்தரித்துவிளங்கும் — எ — று-எ-அசை,

இலாஞ்சனையென்பதுருவமமைத்தற்கடையாளமானசின் னம் - இரஞ்சிதமென்பது-உருவம் பூரணமாயமைத்ததின் மகிழ்தல் - சித்திற்குப்படமும் - ஈசுரனுக்குவெளுத்தபட மும்- அந்தரியாமிக்குக்கடிதபடமும்- இரணியகருப்பனு க்கு - இலாஞ்சனபடமும் - விராட்டிற்கு-இரஞ்சிதபடமு மெனவுவமித்தல்,

படமானதுவெளுத்தவிடத்திற்றவுதமெனவும்— துவரிட் டுக்கொட்டியவிடத்துக்கடிதமெனவும்— ஓர்வன்னத்தினுலு ருக்கடோன்றவச்சுக்கட்டின திலாஞ்சனையெனவும்—மனது ரமிக்கும்படியான வன்னங்க ளடைத்த திரஞ்சிதமெனவுங் கொள்க - இந்நான்கிற்குமாதாரஞ் சுபாவபடம்போல்விரா ட்டாதிய நான்கிற்குமாதாரம் பிரமசித்தொன்றே யெனக் காண்க. (௬௩)

(அவதாரிகை,)

இச்செய்யுளின்முன்னுவமானப்படி யுவமேயந்தோன்ற ஈசுரசாட்சியானசித்திற்கமைந்த கற்பனுசரீரமானமூன்றும் வந்தகிரமமுணர்த்துகின்றது,

(கவி,)

அகிலகாரணமாமாயையைமருவி..............................*
அந்தரியாமியாய்மாயை...................................*
சகல்காரியமாஞ்சூக்குமவுடம்பு..........................*
சார்ந்துபொன்கருப்பனென்றுகி.............................*
விகலமிறாலவுடம்பினைமேவி...............................*
விராட்டெனதிற்குமென்றறிவாய்.............................*
திகழுறுபிரமஞ்சித்திரப்படமேற்............................*
சித்திரமியாதெனவினவில்...................................*

(இதனதுபதப்பொருள்.)

அகிலகாரணமாம்-சகத்திற்குக்காரணமாகிய - மாயையை-ச மட்டிகாரணசரீரமாகியமாயையினை-மருவி - அவ்விசன்சு டி- அந்தரியாமியாய் - அந்தரியாமியென்னுநாமத்தையும்-

மாயை -மாயையினது-சகலகாரியமாம் - அபஞ்சிகிருதபூதமாகிய - சூக்குமவுடம்பு-சமட்டி சூட்சுமசரீரத்தை- சார்ந்து-பொருந்தி - பொன்கருப்ப னென்றாகி - இரணியகருப்பனென்னுநாமத்தையும் - விகலமிறூலவுடம்பினைமேவி-சமட்டிதூல தேகத்தைப் பொருந்தி-விராட்டென- விராட்டென்னுநாமத்தையுமடைந்து - நிற்குமென் றறிவாய்-இருக்குமென்றறிவாயாக - திகழுறுபிரமம்-எங்குந்தானாகிவிளங்கியபிரமம் - சித்திரப்படமேல்- சித்திரப்படமானால் - சித்திரமியாதெனவினவில் - அதிலெழுதியசித்திரமியாதெனக் கேட்கில்—எ—று.

விகலமில்-குறைவின்மையெனவே - சமட்டியென்றும்-பிரமச்சாயையான வீசனென்னுஞ் சித்துமாயை யானகாரணத்துடன் கூடினந்தரியாமியெனவும்—மாயாகாரியமான சூட்சுமத்திற்கூடினிரணியகருப்பனெனவும்— காரியமான தூலத்திற்கூடின் - விராட்டெனவும் வந்ததென்க.

(இவ்விரண்டுகவியினது தாற்பரியம்.)

தற்பதத்தினிலக்கியார்த்தந்தோன்ற வவற்றிற்குவந்தவுபாதிகளையுவமானபூருவமாகவிளக்கியதாம், (௪௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசித்து சித்திரப்படமாயின்சித்திரமியாதென்னும்வினாவிற்குத்தரமுணர்த்துகின்றது.

(கவி.)

விரிஞ்சனேமுதலாஞ்சேதனமோடு ........................ *
வெற்பெழுவாயசேதனமாய்ப் ........................ *
பரந்துளவுலகஞ்சித்திரமென்பர் ........................ *
பரம்பொருளாமொருபிரமத் ........................ *
திருஞ்சடாசடமாமுலகதுதோற்ற ........................ *
மெவ்வணமெனிற்படந்தன்னில் ........................ *
வரைந்தபன்னிறமாய்க்குளிர்முதன்மாற்ற ........................ *
வல்லனவலதுகிற்போலி ........................ *

(இதனதுபதப்பொருள்.)

விரிஞ்சன்முதலாம் - பிரமனாதியான- சேதனமோடு-சித்

றுடன் - வெற்பெழுவாய்-மேருவாதிய - அசேதனமாய் - அசித்துருவமாக - பரந்துளவுலகம்-விரிந்திருக்கின்றசகத்தை - சித்திரமென்பர்-சித்திரமென்றறிவுடையோர்கள் சொல்வார்கள்-பரம்பொருளாம் - பரவஸ்துவாகிய - ஒருபிரமத்து - ஒருதன்மையான பிரமத்தில் - இருஞ் சடாசடமாம்-இருதன்மையுள்ளசடசித்தாகிய - உலகதுதோற்றம் - சகத்தோற்றமானது - எவ்வண்மெனில்-எவ்வாறிருக்குமென்றால் - படந்தன்னில் - படத்தில்-வரைந்த- எழுதாநின்ற-பன்னிறமாய்-பலவன்னமாக- குளிர்முதல்-சீதாதிகளை - மாற்றவல்லவலல-நீக்கச்சக்தியில்லாத- துகிற்போலி- வஸ்திராபாசமானது- ஏ—று-ஏ-அசை.

விரிஞ்சனே முதலென்றமையின்-சராசரவுயிர்களையும், வெற்பெழுவா யென்றமையின் - பாஞ்சபூதபௌதிகங்களையும், துகிற்போலியென்றமையின் - பிரதமையையுங்கொள்க, துகிற்போலி- சித்தபிசத்திற்குவமித்தல் -எனவே-ஜீவேசுரசகத்தே சித்திரமென்பதாயிற்று - இதற்குப் பிரமாணம் - பஞ்சதசப்பிரகரணஞ்சித்திரதீபிகையில்பர மாத்மாவாயிருக்கின்ற தன்னுடையசொரூபத்திற் ஜீவேசுரசகத்தென்னப்பட்ட சித்திரமாரோபிக்கப் பட்டதென்றவாக்கியத்திற்காண்க.

(இதனதுதாற்பரியம்.)

- பிரமாதிஸ்தம்பபரியந்தமானசேதனமாகியபரசீவர்களுமலையாதியான வசேதனங்களுங்கூடின சகமேசித்திரமென்பதாம். (௪௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியசித்தினிடத்திற் சடாசடமானசகமெங்ஙனமிருக்கின்றதென்ற வினாவிற் குத்தரமுணர்த்துகின்றது.

(கவி.)

ஓர்வடிவாகிக்குளிர்முதன்மாற்று ........................ *
முன்னமையாஞ்சித்திரப்படம்போன் ........................ *
றூர்வுறழ்வெழுதுங்கிரிமுதலாய ........................ *
வதனொடொப்புறுகிலாவாபோற் ........................ *

தேர்வரும்பிரமத்தெழுந்தபற்பலவாஞ்................ *
சீவர்கள்சித்தொடொப்பாகா.......... .............*
பார்முதலெவ்வாச்சடங்களாதலினாற் ............ .....*
பரத்திலாஞ்சடாசடவுலகம்...................... *

(இதனதுபதப்பொருள்.)

ஓர்வடிவாகி-ஏகாகாரமாய்-குளிர்முதன்மாற்றும் - சீதளமாதியவைகளை நீக்குதற்கு-உண்மையாம்-மெய்யான - சித்திரப்படம்போன்று-சித்திரப்படத்திற்கொப்பாக-ஆர்வு-ஆராயின்-உறழ்வு - துகிற்போலியொப்பாகும்-எழுதும் - வரையாநின்ற - கிரிமுதலாய-மலையாதியசித்திரங்கள் - அதனொடொப் புறுகிலாவாபோல் - அப்படத்திற்கொவ்வாத வாறுபோல-தேர்வரும்-அறிதற்கரிய-பிரமத்தெழுந்த-பிரமத்துதித்த-பற்பலவாஞ்சீவர்கள்- நானாவாகியசீவேசுரர்கள் - சித்தொடொப்பாகா-சித்தைப்போலிருக்கும்-பார்முதல்-பிருதிவியாதிய-சடங்களாதலினால்-சடவஸ்துக்களாதலினால்-ஒவ்வா-அச்சித்துக்கொப்பாகா-பரத்தில்-பிரமத்தில்- ஆஞ்சடாசடவுலகம்-சடசித்துக்களாயுள்ள-சகத்தோற்றமாம் - எ-று.

கிரிமுதலென்றமையின் - தநுவையும்- பார்முதலென்றமையின் - பகுதிவனையுங்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

பிரமத்திற்சேதனு சேதனவடிவமிருக்கின்றதெங்ஙனமெனின், சுபாவபடத்தி னமைந்தபிரதிமைகளுக்குத் தரித்திருக்கின்ற வஸ்திரங்களாபாசமாயினு மவ்வஸ்திரம்போன் றிருக்கின்றமையின், அதற்கொப்பாகவும், ஏனையகிரியாதிகளவ்வஸ்திரம்போன்றிராமையின், அதற்கொப்பாகாமையுமாம். இவ்விரண்டும் படத்திலிருக்கின்றதுபோலப் பிரமாதிபிபீலிகாந்தமீறுயுள்ள சீவர்களாபாசமாயினுங் கிஞ்சித்து சித்தம்சமிருத்தலின், சித்திற்கொப்பாகவும், பிருதிவியாதிசடமாதலின், அதற்கொப்பாகாமையுமான விவ்விரண்டும்பிரமத்திற்கற்பனையாகத் தோற்றிக்கொண்டிருக்குமென்பதாம்.

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியவீசனது ஷட்குணங்களுஞ்சாமர்த்தியத்திரயங்களும் பஞ்சகிருத்தியத்திறமைகளுமுணர்த்துகின்றது.

(கலி.)

இத்திறத்தீசன்முக்கியகுணங்க .................... *
ளெலாமறிதன்முதலனவாங் .................... *
கத்திருத்துவமோடகத்திருத்துவம்பி .................... *
னந்திதாகத்திருத்துவமே .................... *
யத்தன்மெய்ப்பிரபுத்துவவலியாக்க .................... *
லளித்தல்போக்குதல்சமனந்தா .................... *
னெய்த்திடலகற்றுமனுப்பிரவேச .................... *
மென்பனவீசனைந்தொழிலே .................... *

(இதனதுபதப்பொருள்.)

இத்திறத்தீசன் - இத்தன்மையையுடையவீசனுக்கு - முக்கியகுணங்கள் - முக்கியமானகுணங்களாவன - எலாமறிதன் முதலனவாம் - சர்வஞ்ஞத்துவாதியெனவாம் - கத்திருத்துவமோடு - கர்த்திருத்துவத்துடன் - அகத்திருத்துவம் - அகர்த்திருத்துவமும் பின் - பின்பு - அந்திதாகத்திருத்துவம் - அந்நிதாகர்த்திருத்துவமுமாகியமூன்றும் - அத்தன் - ஈசனது - மெய்ப்பிரபுத்துவவலி - உள்ளபிரபுத்துவசாமர்த்தியங்கள் - ஆக்கல் - சிருட்டித்தலும் - அளித்தல் - திதித்தலும் - போக்குதல் - சங்கரித்தலும் - சமனம் - திரோபவித்தலும் - எயத்திடலகற்றும் - இளைப்பைநீக்கும் - அனுப்பிரவேசம் - அனுக்கிரகித்தலும் - என்பன - என்கின்றவைகள் ஈசனைந்தொழில் - ஈசனதுபஞ்சகிருத்தியங்களாம் — எ — று - தான் - ஏ - அசை.

எலாமறிதன்முத லென்றமையான், சர்வஞ்ஞத்துவம் - சர்வேசுரத்துவம் - சர்வநியந்திருத்துவம் - சர்வாந்தரியாமித்துவம் - சர்வாத்மகத்துவம் - சர்வசத்தியத்துவமுங்கொள்க — இவற்றுள் - சர்வாத்மாக்களுடையவறிவையறிதலிற் சர்வஞ்ஞத்துவமெனவும், அவர்களுக்கு மேலாயிருத்தலிற் சர்வேசுரத்துவமெனவும், யாவினுள்ளுஞ் சமத்துவமாயிருத்தலிற் சர்வநியந்திருத்துவமெனவும், சர்வத்துக்குமுள்ளீடாயிருத்தலிற்சர்வாந்தரியாமித்துவமெனவும், சர்வ சீவராயும்விளங்குதலிற்சர்வாத் மகத்துவமெனவும், சகலசத்தியுமுடையவராதலிற் - சர்வசத்தியத்துவமெனவுமாம், கர்த்திருத்துவமென்பது - ஒன்றினுபாதான ஞானமுஞ்செய்யும் விருப்பமுமுயற்சியுமுடைத்தாமவன் தன்மை - எனவே - ஞான - இச்

சா-கிரியையாயிற்று— அகர்த்திருத்துவமென்பது, அத்தன்மைநீங்கிநிற்றல் - அந்நியதாகர்த்திருத்துவமென்பது, ஒன்றையொன்றாக்குபவன்றன்மை - பிரபுத்துவ மென்பது, பிரபுவின்றன்மை.

அவித்தியாசம்பந்தமான வாத்மாக்களை யதினின்று நீக்கி முத்தியை யடைவிப்பிக்கு நிமித்தந்தனுகரணபுவனபோகங்களைக் கற்பிதமாக வுண்டாக்கி யச்சீவர்களினிருவினைகளை ருசிப்பித்துப் புசிப்பித்து நசிப்பிக்குநிமித்தஞ்சிருட்டிமுதன்முத்திபரியந்தமுயிர்க்குயிராயிருந்தசைப்பித்துக்கொண்டிருக்குந் தனதுசாமார்த்தியமே- கர்த்திருத்துவமும், இவைகளிற்கூடிக் கன்மானுசாரப்பிரகாரமாத்மாக்கள் பிரேரிக்கும்படி பிரேரகஞ்செய்துமவற்றிற்பற்றின்றித்தனியேயதானிருத்தலே- அகர்த்திருத்துவமும், சிற்சத்தியினியமப்படி வழுவாமற்செய்யுமுறைமையின்றிக்கடத்தைப்படமாகச்செய்வதுபோலவொன்றைமற்றொன்றாகச்செய்யுஞ்சாமர்த்தியமே - அந்நியதாகர்த்திருத்துவமுமாகியவிம்மூன்றுமீசுரனதுபிரபுத்துவ சாமர்த்தியத்திரயங்களாம்.

ஆத்மாக்களுக்குத் தனுவாதிகொடுப்பது-சிருட்டியும், அவற்றினுள்ள சுகதுக்கபோகங்களைப்புசிப்பிப்பது-திதியும், அப்போகானுபவங்களை நசிப்பிப்பது சங்காரமும், அங்ஙன நசிப்பித்த போகவாசனைகளை ருசிப்பிப்பது திரோபவமும், அவ்வாசனையை நீக்கித்தெளிவிப்பது - அனுக்கிரகமுமாகிய பஞ்சகிருத்தியமெனக்கொள்க.

அறிவையுண்டாக்குதல் - சிருட்டியும், அதுமறைபடாது வளர்த்தல் - திதியும்; அதைமறைக்கு மாயையைக்கெடுத்தல் சங்காரமும், அம்மாயாவாசனை தோன்றாதுமறைத்தல் - திரோபவமும், அவ்வறிவேபூரணமாக விளக்குதலனுக்கிரகமுமாமென்னினுமமையும்.

வினா - இங்ஙனங்கூறிய குணங்களாலுண்டாகுமிருவினைகளவ்வீசனைச்சாராதோவெனின்,

விடை - சூரியசந்நிதானத்தினடக்கு மிருவினைகளவனைச்சாராததுபோலவனைத்தையுஞ் செய்துஞ்செய்யாதவனாதலினிவனையுஞ்சாராதென்க.

(இதனதுதாற்பரியம்.)

இவ்வனங்கூறியபதினென்குமீசனது சுபாவகுணங்களென்பதாம். (௬௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியபஞ்சகிருத்தியங்களிவ்வனமெனவிளங்கவுவமானபூருவகமாகவுணர்த்துகின்றது.

(கவி.)

நீங்கியவிகாரப்பிரமமாமீச ............ *
னிகழ்த்துமோதொழில்பலவென்னிற் ............ *
பூங்கதிரிச்சையின்றிவாரி ............ *
பொழிமழைக்கதிரினுற்பொழிய ............ *
வாங்கதினிழலாய்ப்பொருந்தியந்நிழலை ............ *
யலர்முகிலான்மறைத்தளித்துத் ............ *
தூங்கிமகரத்தால்வெங்கதிரானீர் ............ *
தொலைத்ததைத்தன்னுடாக்குதல்போல் ............ *

(இதனதுபதப்பொருள்.)

நீங்கியவிகாரம் - நிர்விகாரமான-பிரமமாமீசன்-பிரமமாகியவீசுரன் - நிகழ்த்துமோ-நடத்துமோ- தொழில்பலவென்னில் - விகாரமானபஞ்சகிருத்தியங்களையென்றால் - பூங்கதிர் - பிரகாசமானசூரியன்- இச்சையின்றி- இச்சாவெத்தனமின்றி-வாரி- சமுத்திரத்திலெடுத்து- பொழி-சொரியாநின்ற-மழைக்கதிரினால் - வருஷகிரணத்தினால் - பொழிய-சலம்பெய்ய- ஆங்கதின்- அச்சலத்தின்-நிழலாய்ப்பொருந்தி-சாயையாகப்பிரதிவிம்பித்து-அந்நிழலை- அச்சாயையை-அலர்முகிலால்-விரிவானமேககிரணத்தால்-மறைத்து-ஆவரணித்து அளித்துத்தூங்கிமகரத்தால் - தாழந்துவரும் பனிக்கிரணத்தாற்காத்து-வெங்கதிரால்-உஷ்ணகிரணத்தினால்-நீர்தொலைத்து-சலத்தைக்கிரிகித்து-அதை-அப்பிரதிவிம்பசூரியனை-தன்னுடாக்குதல்போல் - தானடக்கிக்கொள்வதுபோல -எ-று.

நீங்கியவிகாரப்பிரமமென்றது- ஈசுரனதிஷ்டானமான பிரமமெனக்கொள்க, பிரமத்திற்குச் சூரியனையும்- மாயாசத்திக்குவருஷ கிரணத்தையும்- ஜீவர்களுக்குப்பிரதிவிம்பசூரியனையும்-பிரகிருதிக்குமேககிரணத்தையும்- நியமசத்திக்கு

இமகிரணத்தையும்-உருத்திரனுக்கு- உஷ்ணகிரணத்தையுமுவமித்தல். (௪௮)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியவுவமானப்படியுவமேயந்தோன்றவுணர்த்துகின்றது.

(கவி,)

போற்றிறைமாயாசத்தியோடொன்றிப்........................*
பொலிந்தசிற்பிரதானமதனாற் ........................*
சாற்றருநிமித்தகாரணனாகித் ........................*
தகுசடப்பிரதானமதனு ........................*
லாற்றுபாதானகாரணனென்னநின்........................*
ருக்கியபுத்தியாதிகளிற் ........................*
றோற்றுபுசீவரூபமாய்வினையாற்........................*
சொற்றபோத்திருவெனநின்றே ........................*

(இதனதுபதப்பொருள்.)

போற்றிறை- துதிபெற்றவீசன் -மாயாசத்தியோடொன்றி-மாயாசத்தியுடன்கூடி - பொலிந்த-விளங்கிய- சிற்பிரதானமதனால் - ஞானமேலிட்டினால் - சாற்றரும்- சொல்லுதற்கரிய- நிமித்தகாரணனாகி- நிமித்தகாரணனாய் - தகு-தகுதியான-சடப்பிரதானமதனால்- சடமேலிட்டினால்- ஆற்று-செய்வதற்குரிய- உபாதானகாரணனென-முதற்காரணனென்ன-நின்றாக்கிய-இருந்துண்டாக்கிய- புத்தியாதிகளில்- புத்திமுதலியவைகளில்-தோற்றுபு-தோன்றாநின்ற- சீவரூபமாய் சீவவடிவமாய் - வினையால்- வினைகளால்- சொற்ற-சொல்லாநின்ற-போத்திருவென-போத்திருவென்ன-நின்று-இருந்து-எ—று-ஏ-அசை.

உபாதானகாரணம் - சமவாயகாரணம்- முதற்காரணமென்பனவொரு பொருட்கிளவி - புத்தியென்பது- அகங்கார தத்துவத்தினிராசதமெனவும் - ஆதென்றமையாலவித்தையுங்கொள்க. (௪௯)

(அவதாரிகை-இதுவுமது.)

(கவி)

நியமசத்தியினாற்போகபோத்திருவை ... ...............*
நியமஞ்செய்துருத்திரவுருவான் ........................*

மயமுறுமாயாகாரியஞ்சிதைத்து ............ *
வந்தருளாரியவுருவா ............ *
லயர்வுறுசீவன்றன்னையேதன்னோ ............ *
டயிக்கமாக்குவனெனவறிக ............ *
வுயர்வுறுசமட்டிவியட்டியெனபனவா ............ *
லுயிரிறைகட்குறும்பேதம். ............ *

(இதனதுபதப்பொருள்.)

நியம்சத்தியினால்- நியாமகசத்தியினால்-போகபோத்திருவை-போகத்திற்குரியசீவர்களை- நியமஞ்செய்து- நியமப்படரக்ஷித்து-உருத்திரவுருவால்- உருத்திரசொருபத்தினால்-மயமுறுமாயா-மாயாமயமாகிய- காரியஞ்சிதைத்து-காரியங்களைக்கெடுத்து-வந்தருள்- எழுந்தருளிவந்தனுக்கிரகஞ்செய்யும்-ஆரியவுருவால்- ஆசிரியரூபத்தினால்-அயர்வுறு- தளர்ச்சியையுடைய சீவன்றன்னை ஜீவனை- தன்னோடு-தன்னுடன்- அயிக்கமாக்குவனென - ஏகமாக்கிக்கொள்ளுவனென -அறிக- நீயுணர்வாயாக-உயர்வுறு-மேலான-சமட்டி-சமஷ்டியும்-வியட்டி - வியஷ்டியும்-என்பனவால்-என்னுந்தன்மையால்-உயிரிறைகட்கு-சீவேசுரருக்கு -உறும்பேதம்-பேதமுண்டாம்——எ——று ஏ-அசை.

ஆசிரியவொன்றமையிற்சுருதியுங்கொள்க-ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தேயென்ற சூத்திரவிதிப்படிதிரோபவமுங்கொள்க.

பிரமத்திற்குச்சூரியனையும்மாயைக்குவருஷகிரணசலத்தையுஞ்சீவேசுராளுக்குப் பிரதிவிம்பத்தையும் இரட்சித்தலுக்கு இமகிரணத்தையுஞ் சங்கரித்தலுக்கு உஷ்ணகிரணத்தையுந் திரோபவித்தற்குமேககிரணத்தையும் அனுக்கிரகித்தலுக்குப்பிரதிவிம்பத்தைத்தன்னிடத்திற்சேர்த்துக்கொள்ளுதலையுமுவமித்தல்.

வினா - இவ்வுவமைப்படி பஞ்சகிருத்தியத்திற்குவமேயமியாதென்னின்,

விடை-போற்றிறை யென்பது பிரமமெனவும், மாயாசத்தி போடொன்றியென்பது மாயாப்பிரதிபலனான சீவனெனவும், சிற்பிரதானமதனாலென்பது தனது காரணமறைவுபடாமலறிவுமேலிட்டிருத்தலெனவும், நிமித்தகாரணனென்

பதுதன்று காரணத்தைமறந்த சீவர்கட்கதுவெளிப்படுதிமித்தந் தனுகரணங்களைக் கொடுப்பதற் பொருட்டு நோக்கிச் சிருஷ்டிக்கும் பிரமமெனவும், சடப்பிரதானமென்பது தானுண்டாதற்கேதுவாயிருந்த மாயைமேலிட் டிருத்தலெனவும், ஆற்றுபாதானகாரணமென்பது அம்மாயாசம்பந்தத்தினாற்றானேயுபாதானகாரணமெனவும், புத்தியாதிகளிற்றோற்றுபுசீவரூபமென்பது அவித்தியாபுத்தியிற்றோற்றியசீவர்களெனவும், நியமசத்தியினாற்போகபோத்திருவைநியமஞ்செய்தென்பது நியமப்படிசீவர்களை விஷ்ணுரூபமாயிரட்சித்தலெனவும், உருத்திரவுருவான்மாயாகாரியஞ்சிதைத்தென்பது வித்தையவித்தைமுதலிய தோற்றங்களையுருத்திரரூபமாய்க்கெடுத்தல் சங்கரித்தலெனவும், இவைகளொன்றுந்தோன்றுதடங்கிநிற்றல்மயேசுரரூபமாய்மறைப்பித்தலெனவும், வந்தருளாரியவுருவென்பது கற்பனையிறந்த விடத்துண்டாகியசுகபோதமெனவும் சீவன்றன்னையே தன்னுடையிக்கமாக்குவனென்பது பிரமத்தோடுதன்னுடன் கூடச்சதாசிவவுருவாயயிக்கியமாக்குவ னெனவுங்கொள்க.

சீவேசுரருக்குத்தநுவாதியதோற்றம்சிருட்டி - அவற்றையிரட்சித்தல் - திதி - அவற்றைக்கெடுத்தல் - சங்காரம் - அவ்விஷயநீக்கம் - திரோபவம் - அவர்களுக்கு - தத்சொரூபம்வெளிப்படுதல்அநுக்கிரகம் - இவற்றின் மூன்று தேகத்திற்கும்இரண்டும்தகிக்குமாகவைந்தும்பஞ்சகிருத்தியமெனக்கொள்க.

வினு - அற்றேல் - இச்சிவசீவர்களுபாதியோடுங் கூடினவரொன்றுக்கூறி யிங்ஙனந் தன்னுடையிக்கிய மாக்கிக்கொள்வனென்ற தென்னையெனின்,

விடை - அவ்வீசனுக் கதிஷ்டானமானபிரமமுஞ்சீவனுக்கதிஷ்டானமான கூடஸ்தனுமேகமாய்க் கலத்தலினாலென்க.

வினு - அற்றேல்அவையேசுயஞ்சித்தாகாதோவெனின்,

விடை - அங்ஙனங்கலப்பதோருபாதியாதலினாகாவென்க.

(இம்மூன்றுகவியினதாற்பரியம்.)

பிரமசந்நிதியில் மாயாப்பிரதி விம்பரான வீசுரன்அவித்தியாப்பிரதிபலரான சீவர்களைமுன்னிட் டவர்கடமதுயதார்த்தஸ்வரூபத்தையடையும் பொருட்டுந்தாமு மங்ஙனமேவிள

ங்கும் பொருட்டும் பஞ்சகிருத்தியஞ் செய்யுங் கிரமமுணர்த்தியதாம். (௨௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய சீவேசுரர்களின்பேதமானசமஷ்டிவியஷ்டியி னிலக்கணங்களையுவமான பூருவகமாகவுணர்த்துகின்றது.

(கவி.)

மிகுமரப்பன்மைதண்டலையெனல்போன்..........*
மிகுமுயிரெலாமுநானெனுமோர்..........*
தகுமபிமானமிறைசமட்டியதாந்..........*
தனித்தனிமரப்பெயர்கொளல்போற்..........*
பகுமுடலோறுறும்வேறுவேறாகப்..........*
படுமபிமானமோர்ந்துரைப்பிற்..........*
றொகுமுயிர்வியட்டியுருவமென்றுமேற்..........*
றொம்பதவிலக்கியமுரைப்பாம்..........*

(இதனதுபதப்பொருள்)

மிகுமரப்பன்மை- அநேகமரக்கூட்டங்களை - தண்டலையெனல்போல் வனமென்பதுபோல்- மிகுமுயிரெலாமும்- திரண்டசீவர்களியாவையும்-நானெனும்-நானென்கிற-ஓர்தகுமபிமானம்- ஒருதகுதியானவபிமானமே- இறைசமட்டியதாம்-ஈசனதுசமஷ்டிரூபமாம்-தனித்தனி-வேறுவேறாக-மரப்பெயர்கொளல்போல்-விருட்சத்தினதுநாமங்களைக்கொள்வதுபோல-பகுமுடலோறும்- பகுக்கநின்றதேகங்கடோறும்- வேறுவேறாக-பலபலவாக-படும்-சொல்லப்படுகின்ற-அபிமானம்- அபிமானத்தை- ஓர்ந்துரைப்பின்-விசாரித்துச்சொல்லின்-தொகுமுயிர்- தொகுத்துக்கூறியசீவர்களின்-வியட்டியுருவமென்றும் - வியஷ்டிரூபமென்று சொல்லப்படும் - மேற்றொம்பதம்- இனித்தொம்பதத்தின்- இலக்கியம்- இலக்கியார்த்தத்தை-உரைப்பாம்-கூறுவாம்—எ—று.

சீவர்களனைத்தினுள்ளு மிருப்பவனீசுரனெனவும்-தனித்தனியேயிருப்பவன் சீவனெனவுமிவையே சமஷ்டிவியஷ்டிபேதமெனக்கொள்க.

[௨௮]

வினா-இங்ஙனமாயின் மிகவும்பேதமாமேயெனின்,

விடை-யானுந்தானுந் தனிபொய்யென்ற கவிப்படி சாலத்தைத்தவிரச்சாலியுஞ் சாலியைத்தவிரச்சாலமுமெங்ஙனமின்றோவங்ஙனஞ்ஜீவனைத்தவிர வீசனுமீசனைத்தவிரச்சீவனுமின்மையிற்பேதம்போலத்தோற்றுவதன்றிச்சுபாவமாகவின்றென்க.

(இதனதுதாற்பரியம்.)

ஒருமைபன்மைபேதஜீவேசுரபேதமென்பதாம். (௩௪)

(அவதாரிகை.)

அருவிராட்புருடனென்றகவி முதலிருகாறுந்தற்பதவாச்சியார்த்தம் விளங்கக்கூறி யிச்செய்யுளிற்றொம்பதவிலக்கியார்த்தமான கூடஸ்தனது பரியாயநாமங்களைத் தசவிதமாகவுணர்த்துகின்றது.

(கவி.)

சீவனென்றிடுமூவகையதிட்டான ............ *
சேதனனந்தரியாமி ............ *
யாவலினனுசந்தாத்திருசுயஞ்சத் ............ *
தார்த்தனோடவிச்சின்னசீவன் ............ *
றாவருமபாரமார்த்திகன்றுரியன் ............ *
சான்றினன்பிரத்திகான்மாவா ............ *
மேவமிற்றொம்பதத்திலக்கியார்த்த ............ *
னென்பகூடத்தனாமங்கள் ............ *

(இதனதுபதப்பொருள்.)

சீவனென்றிடும் - சீவன்பொருந்தாநின்ற- மூவகை-விசுவாதிமூன்றினுக்கும்-அதிட்டானசேதனன்-அதிஷ்டானசைதன்னியனும்-அந்தரியாமி - அந்தரியாமியும்- ஆவலில்-இச்சாசத்தியின்றிய-அனுசந்தாத்திரு - அனுசந்தாத்திருவும்-சுயஞ்சத்தார்த்தனொடு-சுயஞ்சத்தார்த்தனுடன்- அவிச்சின்னசீவன்- அவிச்சின்னசீவனும்-தாவரும்-ஒன்றுற்பற்றுதற்கரிய-பாரமார்த்திகன்-பாரமார்த்திகனும் - துரியன்-துரியனும்- சான்றினன்-சாட்சிகனும் - பிரத்திகான்மா-பிரத்தியகான்மாவும்-ஏவமில்-குற்றமற்ற- தொம்பதத்திலக்கியார்த்தன்-

தொம்பதலட்சியார்த்தனாம் - என்ப - என்றுசொல்லப்படு வன - கூடத்தனாமங்கள் - கூடத்தனது பரியாயநாமங்களா ம்—எ—று.

(பதசாரம்,)

வியாவகாரிகனாதிய சீவத்திரயமுதலியவைகட் காதாரமா யிருத்தலின் - சீவனென்றிடுமூவகையதிட்டானசேதனனெ வும்—அகத்தினிறைந்திருத்தலின் அந்தரியாமியெனவும்— அவாவின்றியாவினு மனுசந்தித்திருத்தலின்-ஆவலினனுசந் தாத்திருவெனவும்—தானேயுண்மைப்பொருளாயிருத்தலிற் சுயஞ்சத்தார்த்தனெனவும்—கடாகாசம்போலத்தேகத்தினு ல்வளைபட்டிருத்தலின்அவிச்சின்னசீவனெனவும் — ஒன்றி னும்பற்றின்றி யதார்த்தனாதலிற்றுவரும் பாரமார்த்திகனெ னவும்— தானேசித்தாய்விளங்கலின் நற்றுரியனெனவும்— யாவிற்குஞ்சாட்சியாயிருத்தலிற்சான்றின னெனவும்— தே காதிகட்கு விலட்சணமாயிருத்தலிற் பிரத்திகான்மாவெனவு ம்—நீயென்னும்பதத்தி னிச்சயப்பொருளாதலிற்றொம்பத விலக்கியார்த்தனெனவுங் கூறினார்.

(இதனதுதாற்பரியம்.)

தொம்பதலட்சியார்த்தமானகூடஸ்தனது பரியாயநாமங் களினிலக்கணமுணர்த்தியதாம். (௫௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்தற்பதவிலக்கியார்த்தமான பிரமத்தின்ச டுவிதபரியாயநாமங்களுணர்த்துகின்றது.

(கவி.)

ஈசனென்றிடுமூவகையதிட்டான ........................ *
னியம்பருமொருபரப்பிரமம் ........................ *
பாசமில்பரதத்துவம்பரமான்மாப் ........................ *
படியிலாவிசுத்தசித்தன்றிப் ........................ *
பேசுதற்பதலக்கியார்த்தனென்பனமுற் ........................ *
பெறும்பரியாயநாமங்க ........................ *
டேசுறுபிரமந்தனக்கெனவுணர்ப்பர் ........................ *
திருந்துநூறெரிதரும்புலவர் ........................ *

(இதனதுபதப்பொருள்.)

ஈசனென்றிடும் - ஈசனடைந்திடும்-மூவகை-விராட்டாதி மூன்றிற்கும்-அதிட்டானன்- அதிஷ்டானனும்-இயம்பரும்-வசனித்தற்கரிய-ஒருபரப்பிரமம்- ஒப்பற்றபரப்பிரமமும்-பாசமில்- பாசாதீதமான - பரதத்துவம் - பரதத்துவமும்-பரமாத்மா-பரமாத்மாவும்-படியிலா-குணங்களொன்றினுந்தோயாத-விசுத்தசித்து- பரிசுத்தமானசித்தும் -அன்றி -இவைகளன்னியில்-பேசு- வேதமுடிவினுதலிய-தற்பதவிலக்கியார்த்தன்-தற்பதலட்சியார்த்தனும் - என்பனமுன் என்கின்றனமுதலிய- பெறும்பரியாயநாமங்கள் - பெற்றிருக்கும்பரியாயநாமங்கள்-தேசுறுபிரமந்தனக்கென- சுயம்பிரகாசமானபிரமத்திற்கேயென- திருந்து-திருத்தமான- நூல்-வேதாந்தசாத்திரங்களை - தெரிதரும்-ஆராய்ந்தறிந்த-புலவர்-அறிஞர்கள்-உரைப்பர்-சொல்லுவார்கள்—எ—று—முன்னென்றமையின்சர்வாதிஷ்டாத்திருமுதலியவுங்கொள்க,

(பதசாரம்.)

விராட்டாதியபிமானித்திரயங்களுக்கு முதன்மையானவீசனுக்காதாரமாயிருத்தலின் ஈசனென்றிம்மூவகையதிட்டானனெனவும்—அவாங்மனோகோசரமானவொப்பற்றபிரமமாதலினியம்பருமொருபரப்பிரமமெனவும்—மாயாதீதமானவஸ்துவாதலிற்பாசமில்பரதத்துவமெனவும்—மாட்சிமையானவான்மாவாதலிற்பரமாத்மாவெனவும்—தாரதன்மியமின்றிப்பரிசுத்தமானசித்தாதலிற்படியிலாவிசுத்தசித்தெனவும்—அதுவென்னும் பதத்தினிச்சயப் பொருளாய்விளங்கலிற் றற்பதவிலக்கியார்த்தனெனவுங்கூறினார்.

(இதனதுதாற்பரியம்.)

இப்பரியாயநாமங்களோடும் விளங்கியதற்பதவிலக்கியார்த்தமான பிரமத்தின்சுபாவவிலக்கணங்களையுணர்த்தியதாம்)

---

(அவதாரிகை,)

இச்செய்யுளின் முற்கூடஸ்தப்பிரமமென்றதுவிதநீக்கியத்துவிதமான சுத்தப்பிரமஸ்வரூபத்தினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

வடிவொடுபெயராற்கூடமுதலாக ............ ........... *

மன்பலவகைப்படுமதுபோற் .. .... ......................... *

சுடுபசும்பொன்னேசெய்கையாற்பலவாஞ் .................. *
சுடரிழையுருவுகொள்வதுபோற் .................. *
படியறுஞ்சித்தேமுன்சொல்சீவாதி .................. *
பலவுமாமெனமுதலாக .................. *
விடலருமறிஞர்நூல்பலதிருக்கு .................. *
விவேகமென்றியம்புறுமன்றே .................. *

(இதனதுபதப்பொருள்.)

மண் - மிருத்திகையொன்றே- வடிவொடு - உருவத்துடன்- பெயரால் - நாமத்தினுல்-குடமுதலாக - கடமாதிய- பலவகைப்படும்-பலபேதங்களையடையும் - அதுபோல் - அதைப்போலவும் - சுடும்-புடம்வைத்த- பசும்பொன்னே - பசியபொன்னென்றே-செய்கையால் - தொழில்களால் -பலவாம் - நானுவாகிய-சுடரிழை - விளங்காநின்றவாபரண-உருவுகொள்வதுபோல்-ரூபமாவதுபோலவும்-படியறுஞ்சித்தே-குணாதீதமாகியபிரமமே - முன்சொல்-முற்கூறிய - சீவாதி-ஜீவிசுரசகத்தாதிய - பலவுமாமென-நானுவிதமென - விடலரும் - நீங்குதற்கரிய-அறிஞர்-சத்துக்கள்-முதலாக-ஆதியான - நூல்பல-பலசாத்திரங்களும்- திருக்குவிவேகமென்றியம்புறும் - திருக்குவிவேகமென்று சொல்லப்படும்-எ—று- அன்றே - அசை-

(இதனதுதாற்பரியம்.)

மண்ணேகடகலசாதிகளாகவுங் - கனகமேகடகமகுடாதிகளாகவுந்தோற்றுவதுபோல-விவ்வத்துவிதப்பிரமமே முற்கூறியஜீவிசுரசகத்தைப்போலத் தோற்றமாத்திரமாய் விளங்குமென்பதாம். (௫௪)

(திருக்குவிவேகமுற்றிற்று,)

# திரிஸ்யவிவேகம்.

(அவதாரிகை,)

முன்றிருக்குவிவேகத்திற் றிருக்குத்திரிஸ்யமென்னு மிரண்டிற்கதீதமாகியவத்துவிதப்பிரமமே மெய்ப்பொருளெனத்

தெரிவித்தலின்றிநின்றற்பிரகாசமே கூடஸ்தப்பிரமமெனவும், புறப்பிரகாசமேயீசுவரனெனவும், இவைகள் சுத்தப்பிரமா ம்சமானபடியாற்றிருக்குமெனக்கூறியிவற்றிற் காணப்பட்ட மாயாகாரியங்களானசகதாதிகளனைத்தும்பொய்ப்பொருளெ னக்கண்டிவற்றைநீக்குநிமித்தந் திரிஸ்யவிவேகங்கூறுவான் றொடங்கி யிச்செய்யுளினப்பிரமத்தினின்று மித்திரிஸ்யங்க டோன்றற்கேதுவான மாயாசத்தியி னிலக்கணமுணர்த்துகி ன்றது,

(கவி-வேறு.)

இந்துவினையநாதியடைந் ததைமுழுதுமறையாமலிந்து தன்று, லந்திறனையொளிர்வித்துக் கொள்களங்கமென வெ னையா னறியேனென்னு, முந்துலகவிவகாரந்தனிலுயிரைய டைந்ததனை மூடாதென்று, மந்தவுயிராலறியப் பட்டுமன ற்றம்பிக்கு மந்திரம்போல்.......................................*

(இதனதுபதப்பொருள்.)

அநாதி - அநாதியான-இந்துவினை-சந்திரனை - அடைந்து - சேர்ந்து-அதை - அச்சந்திரனை- முழுதுமறையாமல்-எவ்வ ளவுமறைக்காமல்-இந்துதன்றால் - அச்சந்திரனால்- அந்திற னை - அழகியதனதுதன்மையை- ஒளிர்வித்துக்கொள் - பிர காசிப்பித்துக்கொள்ளுகின்ற - களங்கமென - களங்கத்தைப் போல-எனை-எனதுஸ்வரூபத்தை- யானறியேனென்னும் - யானறியேனென்கின்ற - முந்து-தொன்றுதொட்டுவந்த-உ லகவிவகாரந்தனில்-சகத்விவகாரத்தினால்-உயிரையடைந்து- ஆத்மாவைச்சேர்ந்து - அதனை-அவ்வாத்மாவை- மூடாது-ம றையாமல்-என்றும்-எப்போதும் - அந்தவுயிரால்-அவ்வாத் மாவினால்-அறியப்பட்டும் - விளங்கப்பெற்றும்- அனற்றம் பிக்கும்-அக்கினியைத்தம்பிக்கிற-மந்திரம்போல் - மந்திரச த்தியைப்போல—எ—று.

உயிரென்றதாத்மாவெனவே-பிரமமாயிற்று-பிரமத்திற்குச்ச ந்திரனையும்-அனலையும் - மாயைக்குக்களங்கத்தையுமந்திரத் தையுமுவமித்தல். (௧௩)

(அவதாரிகை-இதுவுமது.)

(கவி,)

விளங்குமுமான்மாவுருவு மல்லாமலான்மாவின் வேறாத் தோன்று, துளங்கொள்வியோமாதி காரியங்கடமைத்தோன்

ருவாலொடுக்கிநின்று, துளங்கலகடிதகடனுசாமர்த்தியாகியு மே தோன்றுநின்ற, வளங்கடருகாரணமாமதுவாகுந்திரிசி யமாமாயாசத்தி..........................................*

(இதனதுபதப்பொருள்,)

விளங்குறும்-விளங்காநின்ற-ஆன்மா-ஆத்மாவினது- உருவு மல்லாமல்-வடிவமுமல்லாமல்-ஆன்மாவின்-ஆத்மாவிற்கு— வேறுத்தோன்று- வேறாகவுந்தோன்றாமல்- ஒடுக்கிநின்று-ம றைந்துநின்று- உளங்கொள்-சங்கற்பரூபமான- வியோமா திகாரிங்கடமை - ஆகாயாதிகாரியங்களை-தோன்று-தோற்று விக்கின்றவளாயும் - துளங்கல்-விளக்கமாய்- அகடிதகடனு- செய்யாதகாரியத்தைச் செய்விக்கும் - சாமர்த்தியாகியும் - சாமார்த்தியமுடையவளாயும் -தோன்றுநின்று- தோற்றுகி ன்ற-அவளங்கடரு-சகலவனர்த்தங்களையுங் கொடுப்பதற்கு- காரணமாம்- காரணமுமா யிருக்கின்றதெதுவோ- அது-அ துவே- ஆகுந்திரிசியமா மாயாசத்தி - திரிஸ்யரூபமானமா யாசத்தியாம்—எ—று-ஏ-ஆல்- அசை,அவலங்களென்பது- அவளங்களெனவெதுகைநோக்கிவந்தது, சத்தியென்றது-ச த்தனதுதொழிலின்வன்மை,

மந்திரசத்தி-பக்கினியினுஷ்டணத்தைமுழுதும்-ஸ்தம்ப னஞ்செய்யி னக்கினியோராதாரத்தைப் பற்றிப்பிரகாசிப்ப துகூடாது, அங்ஙனமின்றிப்பிரகாசித்தலின்- அச்சத்தியை யுடையமாந்திரிகனுக்குமாத்திரங் கற்பனையாகக்கிஞ்சித்து தோற்றினதேயன்றிவேறின்று,அஃதுசுபாவமாய்ப்பிரகாசி த்துக்கொண்டிருப்பதுபோல மாயாசத்திபிரமசுபாவமான சிற்சத்தியை-முழுதுமறைக்கின் - பிரமஞானப்பிரகாசிப்ப துகூடாமையின்- அங்ஙனமின்றிச் சொரூபமுதல்-ஸ்தம்ப மீறுனயாவினிடத்தும்பூரணமாய்ப்பிரகாசித்தலின்-அம்மா யாசத்தியையுடையவனுக்கேகிஞ்சித்துகற்பிதமாய்மறைந்த துபோலத் தோற்றினதேயன்றிப் பிரமம்சுபாவமாய்ப்பிரகா காசித்துக்கொண்டிருக்குமெனக்கொள்க.

(பதசாரம்.)

பூச்சாயையானது, சொப்பிரகாசமாய்விளங்குஞ் சந்திரனி டத்திற்றோற்றி யதனைமறையாமற் றான்விளங்குவதுபோல ப்பிரமப்பிரகாசத்திற்சங்கற்பரூபமான மாயையானது அ தனை மறையாம லதனிடமாய்விளங்கிக்கொண்டிருக்குமென்

பார் - இந்துவினையதாகிபடைந்ததை முழுதுமறையாமலித்துதன்று, லந்திறனைபொளிர்வித்துக் கொள்ளங்கமெனவும்—கல்லைப்போலவனைத்தையு மறிகின்ற சித்தாகியதன்னைத்தானெனவறியாததேயறியாமையென்பார் - எனையானறியேனென்னு மூந்துலகவிவகார மெனவும்—அவ்வறியாமையறிவினிடத்திருந்ததனைமறையாமலதனாற்றான்விளங்குகின்றதென்பார்- உயிராயடைந்ததனைமூடாதென்றுமந்தவுயிராலறியப்பட்டெனவும்—அக்கினியினுஷ்ணத்தைமந்திரசத்தியினாலதனுளடக்குவதுபோலப்,பிரமசுபாவமானசிற்சத்தியையதனுளடக்கிற்றென்பார் - அனற்றம்பிக்குமந்திரம்போலெனவும்—அம்மாயை, யப்பிரமமாகவுமதற்குவேறாகவுமிராதென்பார் - விளங்குமான்மாவுருவுமல்லாமலான்மாவின் வேறாத்தோன்றாதெனவும்—பிரமத்திற்கெதிரிட்டசங்கற்பமாகிய கண்ணாடியிலியல்பாய்த்தோற்றுகின்றவப்பிரமச்சாயைகண்ணாடியாலுண்டாக்கித்தோற்றுகின்றதென்றதுபோலமாயையாற் சகலமுந்தோற்றுகின்றதென்பார்-உளங்கொள்வியோமாதிகாரியங்கடமைத்தோன்றாவெனவும்--இங்ஙனங் கூடாதகாரியங்களைக் கூட்டுவிப்பதாகக் காட்டும்வல்லபமுடையதென்பார் - அகடிதகடனாசாமர்த்தியெனவும்—சர்வானர்த்தங்களுக்குங்காரணமென்பார்-அவளங்கடரு காரணமாமெனவும்—இவ்வல்லபமுள்ளதே மாயாசத்தியென்பார்-அதுவேதிரிசியமா மாயாசததியெனவுங்கூறினார்.

வினா - அதிரிஸ்யமான மாயாசத்தியைத் திரிஸ்யமென்றதென்னையெனின்,

விடை - வித்துவானதுசத்தி,யவன் வித்தைசெய்யுங் காரியத்திற்றெரிவதுபோல்பிரமத்தினதுமாயாசத்தி,பிரபஞ்சரூபத்திற்காட்டுநிமித்தந் திரிஸ்யமாமாயாசத்தி யென்றோர்க. இன்னும்பூச்சாயாகளங்கமானது, கலாநிதியினிடத்திலிருத்தல்போலத்தோற்றியதனைமறையாமலதனாற்றான் விளங்குவதுபோலதீதப்பிரமஸ்புரணமவ்வதீதமாகவே விளங்கவதையறியேனென்ற வறிவினறியாமையவவறிவுமாகாமலதற்குவேறுமாகாமலவ்வறிவினிடத்திருப்பதுபோலத்தோற்றியவ்வறிவைமறையாமலதனாற் றான்விளங்குவதன்றியுந்தான்வெளிப்படாது தனக்காதாரமான திருக்குவின் சத்தியைக்கொண்டாகமுதலியதிரிஸ்யங்களென்னும் பொய்ப்பொருள்களை

மெய்போலத்தோற்றுவிக்கு மாயாசத்தியொன்றுண்டென்ற வாந்தரமாகச்சுருதியங்கீகரித்ததென்க.

விஞ-அற்றேல்-முன்சுத்தப்பிரமத்திற்குச்சகாதிபேதமின் றென்றசுருதியிவ்வணிங்ஙனமங்கீகரித்த தென்னையெனின்,

விடை - இம்மாயாகாரியங்களினிற்பவர்களவற்றினின்று நீங் குநிமித்தமஃதை விசாரித்தென்றுமின்றென்பதுதோன் றற்கென்க.

விஞ - அங்ஙனமாயின்-வேதாந்தியொருவ னிற்கவேனையோ ரியாவரு மிம்மாயையை நித்தியமெனக் கூறின தென்னை யெனின்,

விடை - இம்மாயையின் யதார்த்தம் வெளிப்படா மையினு லென்க.

விஞ - அற்றேல்-இம்மாயையினுண்மைதானியாதெனின்,

விடை - தனக்கெனவோருருவ மில்லாமையேயாமென்க.

விஞ - அற்றேல்- மாயையினுண்மை தெரியாத மதங்களதற் கதீதமானமுத்தியினிலக்கணங்கூறினதென்னையெனின்,

விடை - மதங்கண்மாயைக்குட்பட்ட பதமுத்தியைக்கூறின தேயன்றி-இதற்கதீதமானபரமுத்தியைக்கூறினதன்றென்க.

விஞ - அற்றேல்-மதங்களற்பப்பிரயோசனமான பதமுத்தி களைமுக்கியமாகக் கூறுதற்கு வேதஞ்சம்மதித்த தென்னை யெனின்,

விடை-யாதுமின்றியவாதுலர்க்கியாதேனுமுள்ளவன், ஆக்க வானென்பதுலவுகீகசம்மதமாதல்போலச்சுகமென்பதொ ன்றுமின்றிய பேதைகட்குக் கிஞ்சித்சுகத்தைக் கொடுக்கு ம்பதமுத்திகளைக்கூறுதலும், சக்கிரவர்த்திச் செல்வமுள் ளபெருமன்னனுக்கோர் தேசாதிபதியான குறுமன்னன்,தா ரித்திரனென்பதுபோலப் பரமுத்தியான மோக்ஷசாம்பிரா ச்சியம்பெற்ற மகதைஸ்வரியவானுக்கிப்பதமுத்தியானசொ ற்பவைஸ்வரியவான் தாரித்திரனெனக்கூறுதலும்வேதசம்மத மேயாமென்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

அக்கினி,பிரகாசத்தோடுகூடியிருக்கவதன்குணமானவுஷ்டி ணத்தைத்தன்வசமாக்கிக்கொள்ளுமந்திரசத்தியைப்போலப்

பிரமம், தனதருளோடும் பிரகாசித்திருக்கவதனுல்லாசமான சித்துவிலாசத்தைத் தன்வசமாக்கிக் கொண்டிருத்தலும், பிரமத்தைத்தவிரத்தானொரு பொருளுந்தனக்கோர் சுதந்தரமுமின்றியதன்பிரதிபலனச்சாயையாகிய சீவேசுரசகத்திற்குக் காரணமாயு மிருக்கின்ற மாயாசத்தியினியல்பைவிளங்கக்கூறினதாம். (ருசுா)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய பிரமத்திற்குச் சத்தாதியைந்துதன்மையுள்ளதாகத்தோற்றுவதுபோலவதனுபாசமான விம்மாயாசத்திக் கசத்தாதியைந்துதன்மையுமுள்ளதென்பது போலத்தோற்றுமவையினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி,)

அனையதொருமாயையிலக்கணமசத்துச்சடந்துக்க மநித்தங்கண்ட, மெனுமிவையுண்முயற்கோடுமுதலசத்துச்சடவுருக்கல்லெழுவாய்புத்தி, தனையடையுங்கோரமொடுமூடவிருத்திகடுக்கந்தபுமெய்யாதி, முனமுனாசெயநித்தங்கண்டங்காலபரிச்சேதமுதலவாகும்.................................*

(இதனதுபதப்பொருள்.)

அனையது- அத்தன்மையான-ஒருமாயை- ஒருமாயையினது-இலக்கணம் - இலக்கணமாவன்- அசத்து - அசத்தும்-சடம்-சடமும் - துக்கம்-துக்கமும்- அநித்தம் - அநித்தமும்- கண்டமெனும்- கண்டமு மென்கின்ற- இவையுள்-இவ்வைந்தனுள்-முயற்கோடுமுதல்- சசவிஷாணாதியன -அசத்து-அசத்துருவமும் -கல்லெழுவாய்- மலைமுதலியன- சடவுரு-சடரூபமும்-புத்திதனையடையும்- புத்தியில்மைத்திருக்கின்ற-கோரமொடு- கோரவிருத்தியுடன் - மூடவிருத்திகள்- மூடவிருத்திகளானவை-துக்கம்-துக்கரூபமும்-தபு-தோற்றியழிகின்ற-மெய்யாதி - தேகாதியன- முனமுனாசெய் - முற்கூறிய-அநித்தம் - அநித்தரூபமும்-காலபரிச்சேதமுதல் - காலபரிச்சேதாதியன-கண்டம்- கண்டரூபமும்-ஆகும்- ஆம்—எ—று,

இத்திரிஸ்ய முண்மையாய்ப் பார்க்குமிடத் தில்லாமையாலசத்தும்—தனக்கெனவோரறிவின்மையிற் சடமும்—இன்பம்போலத்தோற்றி யழிதலிற்றுக்கமும்—இருப்பதுபோல

த்தோற்றியழிதலின நித்தமும்— பின்னமயமாயிருத்தலிற் கண்டமுமாமெனக.

விரு - இவ்வைந்தாதன்மையு மாயைக்கேயென்றால், அதன் காரியமான சகத்திற்கின்றோ வெனின்,

விடை - காரணுதநந்நியத்காரியமென்ற நியாயத்தாற்காரணத்திலுள்ளது காரியத்திற்கு முண்டெனக்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

இம்மாயையநாதியே மித்தையென்பது தோன்றவசத்தாதியைத்தினிலக்கண மூணர்த்தியதாம். (௫௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிம்மாயைக்குள்ளவொன்பதுவிதமானதன்மையையு மூன்றுஞானமு முணர்த்துகின்றது.

(கவி.)

பின்னமோடசத்துச் சாவயமூமெதிர்மறையுமவைபிரிந்து தம்மின், மன்னியவு மொழிந்தநிர்வாச் சியமாகு நவவிதமம் மாயையெய்து, முன்னலருஞ் சுருதிசம்பந்தமுத்திசம்பந்த முலோகபந்த, மென்னவருஞானங்கண்முறையேயம்மாயை படுமியல்புகூறின் ........................................*

(இதனதுபதப்பொருள்.)

பின்னமொடு- பின்னத்துடன்-அசத்து-அசத்தும்-சாவயமும்-சாவயவமும்- எதிர்மறையும்-இவைகட் கெதிர்மறையான, அபின்னமும்,சத்தும்,நிரவயவமும்- அவை- அம்மூன்றும்-பிரிந்து-எதிர்மறையாகப்பிரிந்து- தம்மின்மன்னியவும்-தம்மினத்தோடினஞ்சேர்ந்த.பின்னுபின்னமும், சத்தசத்தும், சாவயவநிரவயவமுமாய், மொழிந்த-சொல்லிய- நவவிதம்-இந்நவப்பிரகாரத்தையும்-அநிர்வாச்சியமாகும்- வசனித்தற்கரிய-அம்மாயை-அம்மாயையானது-எய்தும்-அடையும் - உன்னலரும்-நினைத்தற்கரிய-சுருதிசம்பந்தம்- சுருதிசம்பந்தமும்-உத்திசம்பந்தம்-உத்திசம்பந்தமும்- உலோகபந்தம்-சகத்சம்பந்தமுமென-வருஞானங்கள்- வராநின்றஞானத்திரயங்கள்-முறையே-கிரமமாக-அம்மாயைபடும்- அம்மாயைக்குண்டாகும் இயல்புகூறின்-தன்மையைச்சொல்லுமிடத்து-எ-று.

சாவயவமென்பது, சாவயமெனக்கடைக்குறையும்-சம்பந்தமென்பது பந்தமெனத்தலைக்குறையுமாய்வந்தன, ஞானங்களென்றபன்மை சுருதியாதிமூன்றிற்குங்கூட்டுக.

பிரமவிசாரத்தின்கண் ஞாத்மதரிசன நிமித்தமநாத்மநியதிகளையும்போது திரிஸ்யமனைத்தும் வேறுபட்டிருத்தலிற் பின்னமும்—அஃது சமாதியினில்லாமையினசத்தும்—அஃது முன்னவயவமாகத்தோற்றலிற் சாவயவமும்—சமாதியின் கண்ணின்றெழுந்ததனதறிவிற்கத்திரிஸ்யங்கட்டனதுருவாகவிளங்கலினபின்னமும் — அவ்விடத் தத்திரிஸ்யங்களறிவாய்நிற்றலிற்சத்தும் — அங்ஙனமதற்கோருருவமின்மையினிரவயவமும்—சாதனத்தின்வேறாகவுஞ் சாத்தியத்தினொன்றாகவுமிருத்தலிற்பின்னாபின்னமும்—அங்ஙனமே கற்பனையிற்சத்தும்பதார்த்தத்திலசத்தாகவுமிருத்தலிற் சதசத்தும்—சகசத்திற்கண்டேகல்லானதுபோலப்பிரமமேயாவுமாகவிளங்கலிற் சாவயவநிரவயவமுமாகிய விவைகளாமென்றுமல்லவென்றும்வசனிக்கப்படாதாதலினிம்மாயையநிர்வசனீயநவப்பிரகாரமெனவுங்கூறினர்.

(இதனதுதாற்பரியம்.)

இம்மாயையசத்தியமாயினுஞ்சத்தியமான பிரமசந்நிதானத்திலுண்டாகுந்தன்மையிவையெனத்தெரிவித்ததாம்(௫௮

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியமாயைக்கு மூன்றுஞானத்திலுண்டாகுந்தன்மையையுந் தமமாதியபஞ்சகநாமமு முணர்த்துகின்றது.

(கவி.)

விண்ணின்மலரெனத்துச்சமேயெனவுமிப்பிவருவெள்ளி
போல, வெண்ணுமநிர்வாச்சியமா மெனவுமுயிர்போலித்த
மெனவுநிற்கு, முன்னிலவு தமமாயை மோகமுடனவித்தை
பொய்ம்மையுருவியென்றே, நண்ணுமிவைமாயாபஞ்சகமா
குமெனவறிஞர் நவில்வரன்றே........................................*

(இதனதுதாற்பரியம்.)

விண்ணின்மலரென-ககனாரவிந்தம்போல-துச்சமெனவும்-மித்தையெனவும்- இப்பிவருவெள்ளிபோல- சுத்தியிற்றோன்

றுமிரசிதம்போல- என்னும்-கருதாநின்ற-அநிர்வாச்சியமா மெனவும்-அநிர்வசனீயமெனவும்-உயிர்போல்-ஆன்மாவைப் போல-நித்தமெனவுநிற்கும்-நித்தியமெனவு மிருக்கும்-உண்ணிலவு-அகத்தில்விளங்குகின்ற-தமம்-தமசும்-மாயை-மாயையும்-மோகமுடன்-மோகத்தோடும்-அவித்தை-அவித்தையும்-பொய்ம்மையுருவியென்று-மித்தையாசொரூபியென-நண்ணும்-பொருந்தாநின்ற-இவை-இவற்றை-மாயாபஞ்சகமாகுமென-மாயாபஞ்சகமாமென்று-அறிஞர்-அறிவுடையோர்-நவில்வர்-சொல்லுவார்கள்-எ-று-அன்றே-அசை-

பொய்ம்மையுருவி யென்பதை வடநூலார்-அநிர்தாத்மிகையெனக்கூறுவர்.

(பதசாரம்.)

மாயைசுருதிசம்பந்தமாய்விசாரிக்கிற்ககனகுசுமம்போல வின்மையாதலிற்றுச்சமெனவும்—உத்திசம்பந்தமாய்விசாரிக்கிற் சுத்திகாரசிதம்போல வுண்டின்றென்னுதாதலினனிர்வாச்சியமெனவும்—உலகசம்பந்தமாய் விசாரிக்கினுத்மாவைப்போலவுள்ளதாகத் தோற்றலினித்தியமெனவுங்கூறினர்.

(இதனதுதாற்பரியம்.)

இம்மாயைக்கிங்ஙனங்கூறிய வேதுக்களாலித்தன்மைமூன்றுமுளதாயிருக்கின்ற தென்பதாம். (ருகூ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மூன்மொழுகுத்துக்கூறிய மாயாபஞ்சகவிலக்கணங்களைவகுத்துணர்த்துகின்றது.

(கவி.)

சிவசேதனமறைத்துத் தமமயலாகியவுலகத்திறத்திற்கெல்லா, மேவுகாரணமாகிமாயைவிபரிதஞானம்விளைத்துமோக, மோவவுணர்வழித்தவித்தை சத்தின்வேறுகிப்பொய்யுருவியாகும், வீவிலாமாயையிதற் கிருதருமஞ்சங்கோசவிகாசமென்றும்...................................................... *

(இதனதுபதப்பொருள்.)

சிவசேதனம்-ஆத்மஞானத்தை-மறைத்து-மறைத்துநிற்றலின்-தமம்-தமமெனவும்-அயலாகிய-தனக்கிதரமான-உலகத்திறத்திற்கெல்லாம்-சகத்தன்மையனைத்திற்கும்-மேவுகா

ரணமாகி-பொருந்தாநின்ற காரணமாதலின்- மாயை-மாயையெனவும் - விபரிதஞானம்விளைத்து- ஒன்றையொன்றாயறியுந்தன்மையுண்டாக்குதலின்-மோகம்-மோகமெனவும்-அவவுணர்வு - தீங்காதவித்தலை- அழித்து- கெடுப்பதனால்- அவித்தை- அவித்தையெனவும்- சதனின்வேறாகி- சத்துக்குவேறாயிருத்தலின்-பொய்யுருவியாகும்- மித்தையாரூபியெனவுமிருக்கின்ற - வீவிலா-நீக்கமில்லாத- மாயையிதற்கு-இம்மாயைக்கு-இருதருமம் - இரண்டுதருமங்களாம்-சங்கோசம்-சங்கோசமெனவும்-விகாசமென்றும்- விகாசமெனவுமாம்-எ-று.

சங்கோசம், குவிதல்-விகாசம், விரிதல்-அசத்து-பொய்யுருவி- துச்சமென்பனவொரு பொருட்கிளவி யாயினுங்கிஞ்சித்து-தாரதன்மியமிருத்தலினவைதோன்றவாங்காங்குகூறினர்.

(பதசாரம்.)

இம்மாயையிரவியையெழிலி மறைத்ததுபோலவாத்மஞானத்தையேகதேசத்தின் மறைத்ததுபோலத்தோற்றுவிக்குமந்தகாரமாதலிற்றமசெனவும்—தன்னைமறந்தவிடத்திப்பிரபஞ்சமாகத்தோற்றுவித்தற்கேதுவாகலின் மாயையெனவும்—குற்றியைமகனென்றதுபோலச் சிவத்தைச்சகமாகத்தோற்றுவித்தலின் மோகமெனவும்— தன்னையறியேனென்றதன்மையறிவாயிருந்து மதனைத்தோற்றுமற்கெடுத்தலின் அவித்தையெனவும்—இங்ஙனஞ்செய்வதற்கேதுவானவுருவந்தனக்கெனவொன்றின்மையிற் பொய்யுருவியெனவுங்கூறினர்.

வினா - இந்துவினையென்ற கவியின் மறையாதென்ற மாயை
யிங்ஙன மறைத்ததென்ற தென்னையெனின்,

விடை - சந்திரனுருவங்களங்கத்தினளவெவ்வளவோவவ்வளவு மறைபட்டதாகத் தோற்றல்போலவாத்மஞானவியாபகத்திலேகதேசமான மாயையெவ்வளவோவவ்வளவு மறைபட்டதுபோலத்தோற்றினதேயன்றிவேறின்றெனக.

(இதனதுதாற்பரியம்.)

இம்மாயையின் செய்தியைக்குறித்துவந்ததிம்மாயாபஞ்சகமென்பதாம். (௯௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியதருமங்களி னிலக்கணமுமேலிரண்டுகுணங்களினுமரு முணர்த்துகின்றது.

(கவி.)

விரிந்துபடமோவியங்கள்பலதிகழ்த்திக்குவிந் தொடுக்கு
ம்விதமேபோல, வரந்தைதருமாயையுந்தன் விகாசதருமத்தி
னாலகிலங்காட்டிப், பரந்தவைகள்சங்கோச தருமத்தாலடக்கு
மெனப்பகர்வர்மாயைக், கிருந்தகுண மிரண்டுளவில்சுதந்தி
ரமுஞ்சுதந்திரமுமென்னவன்றே ............ ............ *

(இதனதுபதப்பொருள்.)

விரிந்துபடம்-சித்திரப்படமானது விரிந்தவிடத்து- ஓவியங்கள்பல- நானாவிதமான சித்திரங்களை- திகழ்த்தி-விளங்கக்காண்பித்து-குவிந்து-குவிந்தவிடத்து-ஒடுக்கும்- சித்திரங்களையடக்கிக்கொள்ளும்-விதம்போல-இவ்விதத்தைப்போல-அரந்தைதரும்-துன்பத்தைக் கொடுக்கின்ற-மாயையும்- மாயையானதும்- தன்விகாச தருமத்தினால்- தனது விரிந்த தொழிலினால்-அகிலங்காட்டி -சகத்தைக்காண்பித்து- பரந்தவைகள் விரிந்தவச்சகங்களை-சங்கோசதருமத்தால்- சுருங்குங்கிரியையினால்-அடக்குமென - ஒடுக்கிக்கொள்ளுமென்று - பகர்வர்-அறிஞருரைப்பார்கள்- மாயைக்கு-பின்னுமந்தமாயைக்கு-இருந்தகுணம்-உண்டானகுணங்கள்- இல்சுதந்திரமும்-சுதந்திரமின்மையும்- சுதந்திரமுமென்ன - சுதந்திரமுமென-இரண்டுள-இரண்டுள்ளனவாம்—ஏ—று- அன்றே-அசை.

யதார்த்தமான படத்தில் வன்னங்களாற் கற்பிதமாயமைத்த சித்திரங்களே விகசிதமாய் விளங்கல்போலச் சுயஞ்சித்திற் கற்பிக்கப்பட்ட-சராசரங்களே விகசித்தலின்- ஈண்டுமாயைக் கிச்சித்திரப்படத்தை யுவமித்தாரென்க.

(இதனதுதாற்பரியம்.)

இச்சகமாகியகாரியந்தோற்றற் கிம்மாயையொரு சார்புகாரணமாதலி னதன்விரிவொடுக்கமே சகதினுதிப்பொடுக்கமாமென்பதாம். (௬௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியகுணங்களிரண்டினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

பொய்யாகிச்சத்துருவப் பொருளின்வேறாகியொரு
பொருளாய்த்தோற்றல், செய்யாமையாலுளதில்சுதந்திரஞ்சா

ன்றபவொருசேதனன்பா-லுய்யாதசீவாதி யாக்குதலாற்சுதந்
திரமுமுளதுமாயை- மெய்யானதலதென்றல்விசும்பலர்போ
லில்லையெனவிளம்பலன்றே ..... ....... ............... ....... *

(இதனதுபதப்பொருள்.)

பொய்யாகி - மித்தையாய் - சத்துருவப்பொருளின் - சத்து
ருவமானவஸ்துவுக்கு - வேறாகி - அயலாக - ஒருபொருளா
ய் - தானொருவஸ்துவாகி- தோற்றல்செய்யாமையால் - தோ
ன்றாமையால்- இல்சுதந்திரம்-சுதந்திரமின்மை - உளது-உள்
ளதாம் - சான்றாய - சாட்சியாகிய - ஒருசேதனன்பால் - ஒ
ப்பற்றஞானாத்மாவினிடத்தில்- உய்யாத- சுகமாய்ச்சீவியாத-
சீவாதியாக்குதலால் - சீவேசுரசகத்தாகத் தோற்றுவித்தலால் -
சுதந்திரமுமுளது-சுதந்திரமுமுடையதாம்-மாயை -இம்மா
யையானது - மெய்யானதலதென்றல்-பொய்யென்றுசொல்
லுதல் எங்ஙனமெனின் - விசும்பலர்போல் - ககனாரவிந்தம்
போல- இல்லையெனவிளம்பலன்று- மித்தையெனச்சொல்லு
தலன்று-எ—று—ஈற்றசை.

(இதனது தாற்பரியம்.)

பிரமத்தைத்தவிரத் தனக்கெனவோர்செயலில்லாமையாற்சுத
ந்திரமின்மையும் அப்பிரமசத்தையைக் கொண்டியாவையுங்
கற்பித்தலிற்சுதந்திரமுமுளதென்பதாம் (௬௨)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்பொய்யென்றதனிலக்கணமுங்குண
விருத்தியினுமமுமுணர்த்துகின்றது.

(கவி.)

புலனில்கனாக்கரியாதிபோற்றோன்றிவிசாரிக்கிற்பொன்று
ம்பொய்யா - நிலவுதல்செய்சுத்தசத்துவவடிவமாயையொடு
நிகழ்த்துகின்ற - மலினசத்துவவடிவவித்தைதமப்பிரதானவ
டிவமாகு-நலமில்பிரகிருதியெனவிருத்திமூன்றுடையது மு
ன்னவின்றமாயை. .................... ....... ................ *

(இதனதுபதப்பொருள்.)

புலனில்-ஐம்புலன்களுமடங்கிய-கனாக்கரியாதிபோல்-சொ
ப்பனத்திற்காண்கின்ற கசாதிகள்போல - தோன்றி - அம்மா
யையானது தோற்றி-விசாரிக்கில் -விசாரிக்குமிடத்தில்-பொ

ன்றும்பொய்யாம் - இல்லாதமித்தையாம்-நிலவுதல்செய் - விளங்காநின்ற - சுத்தசத்துவவடிவம் - சுத்தசாத்துவிகரூபமான - மாயையொடு- மாயையுடன் - நிகழ்த்துகின்ற-சொல்லாநின்ற - மலினசத்துவவடிவு - அசுத்தசத்துவரூபமான-அவித்தை - அவித்தையும்-நலமில்-நன்மையில்லாத- தமப்பிரதானவடிவமாகும் - தமோமுக்கியரூபமான - பிரகிருதியென-பிரகிருதியுமென - முன்னவின்றமாயை - முற்கூறியமாயையானது - விருத்திமூன்றுடையது - விருத்தித்திரயங்களையுடையதாம்-எ—று.

விருத்தியென்பதைச்சுத்தசத்துவாதிமூன்றிடத்துங்கூட்டுக-எனவே-சுத்தசத்துவவடிவமாயாவிருத்தியெனவும்- மலினசத்துவவடிவவவித்தியாவிருத்தியெனவும்-தமப்பிரதானவடிவவிருத்தியெனவுங்கொள்க, மாயையின்சத்துவத்தின்மூன்றும் - ரஜசில்மூன்றும்- தமசில்மூன்றுமாகவொன்பதாய்விரிந்ததுவிருத்தியென்க

(இதனதுதாற்பரியம்,)

மாயைபொய்யென்றது, ககனாரவிந்தம்போலென்பதின்றிக்கனவின்பொருணனவிற்றோற்றல் போலெனவும் - இம்மாயைக்கோர்சார்புசுதந்திரமென்றமையிற், சுத்தசத்துவாதிகுணங்களாற்சுத்தமாயைமுதலியமூன்றுவிருத்திகளுமுண்டாயிற்றென்பதாம்- (௱௩)

(அவதாரிகை.)

முற்கூறியமாயையின்சத்துவாதிகுணங்களிற் சகசீவபரங்களினுற்பத்திகூறுவான்றொடங்கியிச்செய்யுளிற் சுத்தசத்துவமாயையிலீசன்றோன்றுமியல்புணர்த்துகின்றது.

(கவி.)

மாயைவருசுழுத்திலயங்களினத்தியாசயிக்க மாயிற்றுண்மை, யாயபிரமத்தி னனவொடுபடைப்பினிதுபேதவவத்தையெய்தி, மேயவதிற்பிரமசைதன்னிபம்விப்பித்திட்டது வேவிளங்குஞானத், தூயசைதன்னிய வீசன்பதியிறையென்றிடநிற்குந்துணிவுதன்னால்.......................... ௯

(இதனதுபதப்பொருள்)

மாயை- மாயையானது - வருசுழுத்தி - வாராநின்றசுழுத்தியவத்தையினும் - லயங்களின்-சர்வசங்காரகாலங்களினும் - உ

ண்மையாயபிரமத்தின்-சத்தாகியபிரமத்துடன் - அத்தியாச யிக்கமாயிற்று-அத்தியாசயிக்கமாயிருந்து-நனவொடுபடை ட்பின்-பின்சாக்கிரகிருஷ்டியின்- இதுபேதவவத்தையெய்து ம்- இம்மாயைக்கிஞ்சித்பேதாவத்தையடையுமளவில் -மேய வதில்-பொருந்தியவம்மாயையில்-பிரமசைதன்னியம்-பிரம ஞானமானது-விம்பித்திட்டு-பிரதிபலித்து - அதுவே- அது தானே-விளங்கும்-விளங்காநின்ற - ஞானம்- சர்வஞ்ஞத்துவா திகுணங்களையுடைய- தூயசைதன்னியம்-விசிட்டசைதன்னி யனான-ஈசன்-ஈசனெனவும்-பதி-பதியெனவும் - இறையென் றிடநிற்கும்-பிரேரகனெனவுமிருக்கும்- துணிவுதன்னால்-தெ ளிவினால்.எ—று.

பேதமென்பது - பிரமவியாபகத்தின்மாயை கிஞ்சித்வேறு படுதல். இனியுண்டாகு மியாவைக்கு மேலாயிருத்தலி னீச னெனவும்—இங்ஙனமுண்டாகின்ற யாவைக்குங்கர்த்தாவாயி ருத்தலின் பதியெனவும்—அவையனைத்தையும் பிரேரகப்படு த்தலினிறையெனவுங்கொள்க.

(இதனதுதாற்பரியம்,)

மாயையானதுண்மையானபிரமத்துடனேயத்தியாசயிக்கி யமாயடங்கிக் கிஞ்சித்வெளிப்படும்போது - அதற்கேசுத்தசத் துவமாயாவிருத்தியெனவும், இந்நிருமலத்துதித்த பிரமப் பிரதிபலனச்சாயை நிருமலமாய்விளங்கலினாலே சர்வஞ்ஞத் துவாதிகுணவிசிஷ்டனான வீசனுமென்பதாம். (௬௯)

(அவதாரிகை)

இச்செய்புளின் முற்கூறியமலினசத்துவாவித்தையிற்சீவர் கடோன்றுமியல்புணர்த்துகின்றது.

(கவி.வேறு,)

அப்பரற்குபாதியாகியமோககாரணியாமாயை ..... [து பொய்ப்புறுமவித்தையெண்ணிற் போத்திருப்பசுவென்றே மொப்பருஞ்சீவர்க்கெல்லாமுபாதியாய்மோகஞ்செய்யு...* மெய்ப்புறுபகுதிபாசமெனச்சமகுணமாய்நின்று.........*

(இதனதுபதப்பொருள்.)

மாயை-மாயையானது-அப்பரற்கு - முற்கூறியவீசனுக்கு- உபாதியாகி-உபாதியையுடைத்தாய்-அமோக-மோகமின்மை

யைச்செய்வதற்கு-காரணியாம்-காரணரூபமுடையவளாம்- பொய்ப்புறும் - மித்தையான-அவித்தை-அவித்தையானது-எண்ணில்-அளவில்லாத-பேதத்திரு - போக்தாவென்றும்-பசுவென்றோதும் - பசுக்களென்றுஞ்சொல்லநின்ற- ஒப்பரும்- இணையின்றிய- சீவர்க்கெல்லாம் ஜீவர்களனைவருக்கும் - உபாதியாய் உபாதியோடு - மோகஞ்செய்யும்-மயக்கத்தைச்செய்யும்-எய்ப்புறு-இளைப்புள்ள-பகுதி - பிரகிருதியானது - பாசமென - போக்கியாத்மகத்துவத்தினாற்பாசமென்றுசொல்லப்பட்டு-சமகுணமாய்நின்று - குணத்திரயசமானத்வத்தையினின்று—எ—று.

காரணமென்பது, காரணியெனச்சுத்தமாயாசத்தியைநோக்கிவந்தது,போத்திரு- அநுபவிப்பவன், மலினமானகளங்கத்துதித்தலிற் சீவர்களைமயக்குஞ் சத்தியுண்டாமெனவும்— நிர்மலத்துதித்தவனது காரணந்தெரிதலி னீசனைமயக்குஞ்சத்திமாயைக்கின் றெனவுங்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

இம்மலினசத்துவாவித்தையினுதித்த பிரமப்பிரதிபலனச்சாயைமலினமாய் விளங்கலினஃதே- கிஞ்சிஞ்ஞத்துவாதிகுணங்களையுடையஜீவர்களென்பதாம். (௬௯)

(அவதாரிகை,)

இச்செய்யுளின்முற்கூறிய தமப்பிரதானரூபமானபிரகிருதியிற்கால் தத்துவந்தோன்று மியல்பையுணர்த்துகின்றது,

(கவி,)

அவித்தையின்விம்பித்துள்ளவாருயிர் நுகர்ச்சிக்காகத்... *
துவக்குறுகாரியங்கடோற்றிடவெதிர்குறித்த............ *
வுவப்புறுமீசனோக்கமாத்திரத்துற்றலர்ந்து ........... *
டவப்படுகாலமாகியதுகொடுபரிணமித்து.................. *

(இதனதுபதப்பொருள்,)

அவித்தையின் - முற்கூறியவவித்தையின்கண்-விம்பித்துள்ள-பிரதிபலித்த- ஆருயிர்- நிறைந்தசீவர்கள்- நுகர்ச்சிக்காக-போகாநுபவநிமித்தம்- துவக்குறு- தொந்தமான-காரியங்கடோற்றிட- தேகாதிகாரியங்களுண்டாகவேண்டி-எதிர்குறித்த-சந்நிதானத்திற்சங்கற்பித்த- உவப்புறுமீசன்-மகிழ்ச்சியுள்ளவீசனது- நோக்கமாத்திரத்து- வீக்ஷணமாத்திரத்தின்-

உற்றலர்ந்து-மிகவும் விரிந்து-பவப்படு- உற்பத்திக்கேதுவா
ன-காலமாகி- காலதத்துவ மூண்டாய்-அதுகொடு-அக்காலத்
தைக்கொண்டு-பரிணமித்து-வேறுபட்டு—எ—று.

பிரதிவிப்பித்தல், விம்பித்தலெனத் தலைக்குறைபாயிற்று-
காலமென்பது, தமோப்பிரகிருதியெனக்கொள்க, பரிணமித்
தல், பால்தயிராதல்.

(இதனதுதாற்பரியம்)

வித்தையாப்பிரதி விம்பரானவீசுரனது கடாக்ஷத்தினலவித்
தையாப்பிரதி விம்பரானசீவர்கள் மயக்கம்நீங்கத்தனுவாதிக
ளைக்கொடுக்குநிமித்தங்காலதத்துவமுண்டாயிற்றென்பதாம்.

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மகதத்துவத்தினுற்பத்தியு மதன்குணமு
முணர்த்துகின்றது.

(கவி)

இருமகதத்துவத்தா னென நிற்கு மதுதானீர்பெய்...... *
தரும்விதைமுளையாமன் முன்போலிராதாதல்போலக்.. *
கருவெனும்பகுதியோடாங்காரமுமாகாமற்பொய்........ *
புரமுறுநிருவிகற்பவுருநடுவவத்தையாகும் ................ *

(இதனதுபதப்பொருள்,)

இரு-பெருமையுள்ள-மகதத்துவந்தானென நிற்கும்-மக
தத்துவமென்னும் பெயரையுடைத்தாயிருக்கும்- அது-அந்
தமகதத்துவமானது-நீர்பெய்து- சலம்விட்டேறிய - அரும்வி
தை-அரியவித்தானது - முளையாமன்- முளையாமலும்-முன்
போலிராது-முன்போலக் கெட்டியாயிராமலும் -ஆதல்போ
ல-உப்பிதடுவாதல்போல- கருவெனும்-காரணமென்னும்- ப
குதியோடு-பிரகிருதியுடன் - ஆங்காரமும்-ஆங்காரமும- ஆ
காமல்-இவ்விரண்டுமாகாமல்-பொய்புரமுறு-மித்தையாஞான
முள்ள-நிருவிகற்பவுரு - விகற்பவடிவமில்லாத-நடுவவத்தை
யாகும்-மத்தியாவவத்தையாயிருக்கும்—எ-று-தான்-அசை,

பிரகிருதிக்குவிதையும்- மகதத்துவத்துக்கூறினவிதையும்-
அகங்காரத்திற்கு-அங்குரவிதையு முவமித்தல், நடுவென்றமை
யின்முதற்பிரகிருதியு மீற்றிலகங்காரமுங்கொள்க, விதைநீரி
னுப்பினங்குராதி விருக்ஷமுண்டாதற் கேதுவாதல்போலப்பி

ரகிருதி யுன்முகத்தான் மகதத்துவமாத லாங்காராதிசகமுண்டாதற்கேதுவெல்க.

(இதனது தாற்பரியம்,)

சகசிருஷ்டிக்கேதுவாயிருக்கின்றமகதத்துவத்தினுற்பத்தி கூறினதாம். (௬௭)

---

(அவதாரிகை,)

இச்செய்யுளின் முற்கூறியமகதத்துவத்தினின்றுந்திரிகுணாத்மகமானவகங்காரதத்துவத்தினுற்பத்தியுணர்த்துகின்றது,

(கவி,)

கோன்மகதத்துவத்திற்குணபேதமுறும்பொய்ஞான ... *
மன்சவிகற்பமாகவருமுதல்த்தியாச ...... *
மென்முதலாங்காரந்தோன்றிடுங்குணஞ்சத்துவந்தான் .. *
பின்வருமிராசதஞ்சொற்பெருந்தமோகுணமென்றாகும். *

(இதனதுபதப்பொருள்,)

கோன்-பெருமை பெற்ற-மகதத்துவத்தில்-மகதத்துவத்தினின்றும்- குணபேதமுறு-குணபேதமாய்-பொய்ஞானமன்-மித்தையாஞானமிருந்த -சவிகற்பமாக-வீகற்பவடிவமாக-வரும்-வாராநின்ற-முதல்த்தியாசமென்-பிரதமாத்தியாசமென-முதலாங்காரந்தோன்றிடும்-மூலாங்காரமுண்டாகும்-குணம்-அதன்குணமான-சத்துவம்-சத்துவமும்- பின்வரும் - பின்புண்டான-இராசதம்-இராஜசும்-சொல்-சொல்லாநின்ற- பெருந்தமோகுண மென்றாகும் -பெரிதானதமசுமெனக்குணத்திரயங்களாம்—எ—று- தான்-அசை.

விருட்சத்துக்கங்குரமுதலாவதுபோலச்சகத்தோற்றத்திற்கங்காரமுதலாதலினிவ்வகங்காரத்தை முதலென்றார் - அத்தியாசமென்பது-கற்பனை.

(இதனது தாற்பரியம்.)

அகங்காரதத்துவத்தினுற்பத்திகூறியதாம். (௬அ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியமுக்குணங்களினுருவமும்-அவகரிமுதலிய மூன்றங்காரநாமமு முணர்த்துகின்றது.

(கவி.)

உரைப்பருஞ்சத்துவாதியுருவங்கள்பிரகாசம்பின் ... ..... *
புரைப்பிரவிருத்திமோகமென்குவர்புகல்குணங்க ... ......*
ணிரைப்பெயர்தான்வைகாரிநிகழுந்தைசதம்பூதாதி ...... *
விரிப்பருங்குணங்கண்மூன்றுந் தருவமேல்விளம்பலுற்றும்.

(இதனதுபதப்பொருள்.)

உரைப்பரும் - சொல்லுதற்கரிய - சத்துவாதி-சத்துவமுதலியமுக்குணங்களின் - உருவங்கள் - வடிவங்களாவன - பிரகாசம்-பிரகாசமும் - பின்புரை- பின்களங்கமுள்ள-பிரவிருத்தி-பிரவிர்த்தியும் - மோகமென்குவர் - மோகமுமெனவறிவுடையோர்சொல்லுவார்கள் - புகல்குணங்கள் - இங்ஙனங்கூறியகுணத்திரயங்களின்- நிரைப்பெயர்- முறையாகவந்தநாமங்கள்-வைகாரி - வைகாரியும்-நிகழும்-விளங்காநின்ற-தைசதம்-தைசசமும்-பூதாதி - பூதாதியுமென்பனவாம் - விரிப்பரும்-விரித்தற்கரிய - குணங்கண்மூன்றும்- குணத்திரயங்களும்-தருவ-கொடுக்கப் பட்டவைகளை - மேல்விளம்பலுற்றும் - மேற்கூறுவாம்—ஏ—று-தான்-அசை.

குணங்கணிரைப் பெயரொன்றது - சத்துவப்பிரகாசத்தில் வைகாரியும் - ரஜசின்பிரவிருத்தியிற் - றைசதமும் - தமசின் மோகத்திற்பூதாதியு மெனக்கொள்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

விதையின்கணுதித்தவங்குரமே மூன்றிதழானதுபோலமகத்துவத்தி னுதித்தவகங் காரமேமுக்குணங்க ளாயிற்றென்பதாம். (௱௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மூக்குணங்களினின்று மனமுதலியவிருபத்துநான்கு தத்துவமாகிய சூக்குமசரீரமுந்தூலபூதமுமுண்டானவியல்புணர்த்துகின்றது.

(கவி-)

சத்துவகுணத்திற்றோன்றுந் தயங்குமுட்கரணநான்கும் ...*
புத்தியிந்தியங்களைந்தும்போற்றுதித்திடுமிராச ............ *
தத்தில்வாக்காதியைந்துந்தகும்பிராணாதியைந்து ... ... .. *
மத்தமோகுணத்திற்றோன்றுமகல்விசும்பாதிபூதம் .. ..... *

(இதனதுபதப்பொருள்.)

சத்துவகுணத்தில் - சாத்துவிதகுணத்தில்-தயங்கும் - விளங்காநின்ற - உட்கரணநான்கும்- அந்தக்கரணநான்கும்- புத்தியிந்திரியங்களைந்தும் - ஞானேந்திரியங்களைந்தும் - தோன்றும்-உதிக்கும்-இராசதத்தில் - ரஜோகுணத்தில்- வாக்காதியைந்தும்-கன்மேந்திரியங்களைந்தும்-தகும்-தகைமையுள்ள-பிராணாதியைந்தும்- பிராணாதிவாயுக்களைந்தும் - போந்துதித்திடும்-வந்துண்டாகும் - அத்தமோ குணத்தில் - முற்கூறிய தாமதகுணத்தில் - அகல்-அகன்ற-விசும்பாதிபூதம் - ஆகாயாதிபஞ்சபூதங்கள் - தோன்றும்-உண்டாகும்—எ—று.

கரணநான்கென்பன-மனம்-புத்தி-சித்தம்-ஆங்காரமும்,புத்தியிந்திரியங்களைந்தென்பன - செவி-மெய்-கண் - நா-மூக்கும்.வாக்காதி யைந்தென்பன - வாக்கு-பாதம்-பாணி - பாயுரு-உபஸ்தமும், பிராணாதி யைந்தென்பன - பிராணன்-அபானன்-உதானன் - வியானன்-சமானனும்,இப்பத்தொன்பதுஞ்சூக்குமதேசமும், விசும்பாதி பூதமென்பன,விண் - காற்று-அக்கினி - அப்பு-மண்-இவ்வைந்துந் தூலபூதமுமாமெனக்கொள்க. (௭௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியதூலபூதத்தினின்றிவ்வுலகவுற்பத்தியுமந்தக் கரணத்தின் றொழிலுமவைகட் கதிதேவதையுமுணர்த்துகின்றது.

(கவி.)

அப்பெரும்பூதம்பஞ்சீகரித்துலகாகிநிற்குஞ் ……… *
செப்பியகரணநான்கின்செயல்கடாநினைத்தலந்தப் ….. …. *
பொய்ப்பொருடுணிதன்மானம்புரிதல்சிந்தித்தறிங்க ……. *
டிப்பியநான்முகன்கேத்திரிபுராந்தகன்றேவன்றே……… *

(இதனதுபதப்பொருள்.)

பஞ்சீகரித்த - பஞ்சீகரணமான- அப்பெரும்பூதம் - அத்தூலபூதமானது - உலகாகிநிற்கும் - பிரமாண்ட புவனசரீரகடாதிவிஷயங்களாயிருக்கும் - செப்பிய- முற்கூறிய - கரணநான்கின்-அந்தக்கரணநான்கினுடைய - செயல்கள்- தொழில்களாவன - அந்த-முற்கூறிய - பொய்ப்பொருள் - மித்தை

பாவஸ்துக்களை-நினைத்தல் - சங்கற்பித்தலும் - துணிதல்-நிச்சயித்தலும் - மானம்புரிதல்-அபிமானித்தலும் - சிந்தித்தல்-சிந்தித்தலுமாம்- திங்கள்-சந்திரனும் - திப்பியநான்முகன்-திவ்வியரூபமான பிரமனும்- கேத்திரி-அரியும் - புராந்தகன் அரனும் - தேவு-இக்கரணங்கட்கதிதெய்வங்களாம்—எ—று. அன்றே-தாம்-அசை. கரணநான்கின் செயல்கள்-தேவு-எனவே-மனதிற்குச்சங்கற்பித்தலும்-சந்திரனும்,புத்திக்குத்துணிதலும்பிரமனும், சித்தத்திற்குச் சிந்தித்தலும் விஷ்ணுவும்,அகங்காரத்திற்கு-அபிமானமுமுருத்திரனுமாம்.

பஞ்சீகரித்தலென்பது, தன்மாத்திரை யின்றமோகுணபூதங்களையொன்றிரண்டாகப் பகுத்தஃதின் முற்பாதியையைந்தை நிறுத்திப்பிற்பாதியையைந்தையொவ்வொன்றைநந்நான்காக்கியிவற்றை முற்பாதியிற் றன்னமிசம்விட்டு மற்றவைக்கிவ்விருபதையுங்கொடுக்கச் சுவயாமிசம்பாதியு மேனையவமிசம்பாதியுஞ்சேர்ந்தொன்றுதல். (௭௧)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின் கரணங்களிருக்குந்தானமும் ஞானேந்திரியங்கட்குத் தொழிலாதிமூன்று முணர்த்துகின்றது.

(கவி.)

இக்கரணங்கடானமிதயஞானேந்தியங்கட்..................*
குய்க்குறுதொழிலாங்கேட்ட லுறல்காண்டலுண்டன்மோத்த
றிக்குமாருதமேநன்மித்திரனுயர்வருணனோடு ...........*
தக்கசுவினியாந்தெய்வந்தானங்காதாதியாமே................*

(இதனதுபதப்பொருள்.)

இக்கரணங்கள்-இவ்வந்தக்கரணங்களிருக்கும்- தானம்-இடம்-இதயம்-இருதயமாம்-ஞானேந்தியங்கட்கு-ஞானேந்திரியங்களுக்கு-உய்க்குறு-செலுத்தாநின்ற-தொழிலாம்- தொழிலானவை-கேட்டல்-கேட்டலும் - உறல் - பரிசித்தலும்-காண்டல்-காணலும்-உண்டல்-புசித்தலும் - மோத்தல்-ஆக்கிராணித்தலுமாம்-திக்கு-திசையும்-மாருதம்-வாயுவும்-நன்மித்திரன்-நல்லசூரியனும்- உயர்வருணனோடு - உயர்ந்தவருணனுடனே-தக்கசுவினி- தகைமையுடையவசுவினியும்-ஆந்தெய்வம் - அதிதெய்வங்களாம் - தானம்- இவைகட்கிடமாவன - காதாதியாம்-செவிமுதலியவைந்துமாம்.எ—று-ஏ-ஈற்றசை.

கரணங்களென்னும் பன்மைகூறித் தானமிதயமென நடுநிலையைக்கூறினமையிற்புத்திக்கஃதுமனதிற்குக்கண்டமுஞ்சித்தத்திற்குநாபியுமகங்காரத்திற்குச் சர்வாங்கமுமாமெனவும், காதாதியென்றது, மெய்-கண்-நா-மூக்கெனவும், ஞானேந்திரியங்கட்குத்-தொழில்-தெய்வம்-தானமெனவே-நிரலே-சுரோத்திரத்திற்குக்கேட்டலும்- திக்கும்-காதும், தொக்குவிற்கு-உறலும் - மாருதமும்-மெய்யும், சட்சுவுக்குக்காண்டலும்-மித்திரனும்-நேத்திரமும், சிங்குவைக்கு - உண்டலும்-வருணனும்-நாவும், ஆக்கிராணத்திற்கு-மோத்தலும் - அசுவினியும்-மூக்குமாமெனவுங்கொள்க, (௭௨)

(அவதாரிகை)

இச்செய்யுளின்முற்கூறிய ஞானேந்திரியங்களினுட்டொழிலுங்கன்மேந்திரியங்களின்புறத்தொழிலுமுணர்த்துகின்றது,

(கலி-வேறு)

புத்தியிந்திரியங்கடாமுணரும்விடயம்.............. *
புறமெனவேயுள்ளுமுணர்ந்திடுஞ்செவிகள்புதைப்பி... *
னுய்த்தபிராணாதியொலிகேட்கையன்னாதிகளை .......... *
யுண்ணும்போதழல்குளிர்ச்சியறிதல்விழிமூடின் ........ *
மெத்துமகவிருளறிதலுற்காராதிகளின் .................. *
விளங்குசுவைகந்தமறிந்திடன்முறையேயாகும் ........ *
வைத்தகருமேந்திரியத்தொழிலுரைத்தனடத்தல் ........... *
வழங்கல்விடலானந்தித்திடுதலெனவறியே ............ *

(இதனதுபதப்பொருள்.)

புத்தியிந்திரியங்கள்- ஞானேந்திரியங்களாந்தாம்- தாமுணரும்விடயம்புறமெனவே - தாம்புறத்துள்ளவிஷயங்களையறிவதுபோலவே - உள்ளுமுணர்ந்திடும் - அகத்தினுமறிந்திடும் (அவையெங்ஙனமெனின்) செவிகள்புதைப்பின்-கன்னங்களைமூடியவிடத்தில்- உய்த்த- உசுவாசநிசுவாசங்களைச்செலுத்துகிற- பிராணாதி - பிராணாதிபஞ்சவாயுக்களின்- ஒலிகேட்கை-சத்தங்களைக்கேட்டலும்- அன்னாதிகளை-அன்னபானாதிகளை-உண்ணும்போது- புசிக்குமிடத்தில்- அழல்குளிர்ச்சி-சீதோஷ்ணாதிபரிசனங்களை-அறிதல்- அறிதலும்-விழிமூடின்-கண்ணிணைமூடுமிடத்தில்-மெத்தும்- நெருங்கிய- அகவிருளறிதல்-உ

ள்ளிருட்டாகியரூபத்தையறிதலும்- உற்காராதிகளில்- கார்ப்புமுதலியவைகளால்- விளங்கு-விளங்காநின்ற- சுவை- இரசத்தையும்-கந்தம்-வாசனையையும்-அறிந்திடல்-அறிந்திடுதலும்-முறையேயாகும்-கிரமமேயாம்- வைத்த-முன்விருத்திவைத்த- கருமேந்திரியத்தொழில்- கன்மேந்திரியங்களாந்தினசெயல்களானவை- உரைத்தல்-வசனித்தலும்- நடத்தல்-நடத்தலும்-வழங்கல்- இடுதலேற்றலும்- விடல்- மலசலங்களைவிடுதலும்-ஆநந்தித்திடுதல்-சுகத்தையனுபவித்தலும்-எனவறி - இவ்வைந்துமெனவுணர்வாயாக—எ—று-ஏ-அசை.

கருமேந்திரியமென்றது, தொகுதியொருமை - பிராணாதியென்றமையின், வியான - அபான - சமான - உதானனையுங்கொள்க-முறையேயென்றமையின், அகத்தில்வியானவாயுவினாற்சத்தத்தையும்- பிராணவாயுவினாற்பரிசத்தையும்-அபானவாயுவினால்-ரூபத்தையும்- சமானவாயுவினால்- ரசத்தையும்-உதானவாயுவினாற் கந்தத்தையு மறியுமென்பதாயிற்று. அன்னாதியென்றமையின்பானமுதலிய வுணவுகளையும் - உற்காராதியென்றமையின்- வாந்தியேப்பங்களினாலிதயகண்டங்களிற்கரித்தல் கார்த்தலையுங்கொள்க. உரைமேற்கோடலென்னு முத்தியால்- சீதோஷ்ணாதியென்றவூறுகளெட்டையும் - அவையாவன-வெம்மை- தண்மை- மென்மை- வன்மை- திண்மை- நொய்மை- சீர்மை- சர்ச்சரையென்பனவாம் - இருளென்றமையின்- ஒளிமுதலியவுங்கொள்க - அஃதுவெண்மைமுதலியபஞ்சவன்னங்களென்னினுமமையும்.

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய கன்மேந்திரியங்களினதி தேவதைகளுமவைகளிருக்குந்தானங்களையுமிவைகளால் வருந்தாபத்திரயங்களையு மிவ்வதிதேவதைகளே யீசுரனுக்கு மூன்றவத்தைகளாமென்பதையுமுணர்த்துகின்றது.

(கவி.)

அங்கிமகபதியிரவிமிருத்தியுபிரசேச.......................*
னதிதெய்வம்வாய்முதலாங்கோளகங்கடான ................*
மிங்கிவைளுட்கரணமிருவகையிந்திரிய .......................*
மென்னவருபதினான்குமத்தியான்மிகமாந் ...................*

தங்குமிவற்று றுவிடயமாதிபவுதிகமாந் ........................ *
தகுமதிதேவதையாதிதெய்விகமாமிப் ........................ *
புங்கவரேயிந்திரியம்விராட்புருடற்கதுமெய் ........................ *
பொன்கர்ப்பத்கதுமறைப்பாமந்தரியாமிக்கே ........................ *

(இதனதுபதப்பொருள்.)

அங்கி-அக்கினியும் -மகபதி- இந்திரனும்- இரவி-சூரியனு
ம்-மிருத்திபு-நமனும்-பிரசேசன்- பிரசாபதியும்- அதிதெய்வ
ம்-முற்கூறிய கன்மேந்திரியங்கட்கதிதெய்வங்களாம்- வாய்மு
தலாங்கோளகங்கள் -வாக்காதி கோளகங்களே - தானம்- அவ்வி
ந்திரியங்கட்கிடமாம் - இங்கிவையுள் - இவைகளுக்குள் - உட்
கரணம் - அந்தக்கரணநான்கும் - இருவகை யிந்திரியமென்
ன-ஞானேந்திரியமைந்து கன்மேந்திரிய மைந்துமென - வ
ருபதிமூன்றும்- வாராநின்றவிப்பதின்மூன்றும் - அத்தியான்மி
கமாம் - ஆதியாத்மிகமாம் - தங்குமிவற்று - தங்கப்பட்டவி
வைகளுக்குள் - உறுவிடயம் - பொருந்தாநின்ற சம்சயாதிப
திமூன்று விடயங்களே - ஆதி பௌதிகமாம் - ஆதிபௌதிக
மாகும் - தகும்-தகுதியுள்ள- அதிதேவதை - சந்திரனாதியப
திமூன்றுதேவுமே- ஆதிதெய்விகமாம் -ஆதிதெய்விகமாகும்-
இப்புங்கவரே - இத்தேவர்களே- விராட்புருடற்கிந்திரியம் -
விராட்புருடனுக்கிந்திரியங்களாம்-பொன்கர்ப்பற்கு-இரணி
யகருப்பனுக்கு அதுமெய்-அவ்விந்திரியங்களேசூக்குமதே
கமாம்-அந்தரியாமிக்கு-அந்தரியாமிக்கு-அது-அத்தேகம்-ம
றைப்பாம்- தமோரூபமானவாவரணமாம்—எ-று-ஏ-அசை-
கோளகம்-இடம்,

முற்கூறிய கன்மேந்திரியங்கட்குத்தெய்வமும் - தானமு
மென்றது, நிரலே - வாக்கிற்கு-அங்கியும்-வாயும், பாதத்திற்
கு மகபதியுங்காலும், பாணிக்கிரவியுங்கையும், பாயுருவிற்கு
மிருத்தியுவுங்குதமும், உபஸ்தத்திற்குப் பிரசாபதியுங்குய்ய
முமாம், உரையிற்கோடலென்னு மூத்தியால்விடயம் பதிமூ
ன்காவன -சம்சய-நிச்சய-சாஞ்சல்ய-அபிமான, சத்த-பரிச-
ரூப-ரச - கெந்த,வசன-கமன-தானவிசர்க்க - வாநந்தங்களா
ம்-சம்சயாதி நான்குமொருபொருளிடத்திலவைத்து - விட
யம்பதின்மூன்றெனக் கூறுவாருமுளர்- அக்கரணமுடதிமூன்
கிற்குத் தனித்தனியே விடயங்களிருத்தலி னங்ஙனங்கூறுதல்
மாபன்றென்க.

(பதசாரம்.)

விடயங்களை நுகர்தற்கிந்திரியங்களையியக்குஞ் சந்திராதியரு
க்குத்தேவாம்சமிருத்தலினதிதேவதையெனவும்— இவைகள்
சகமாகிய தூலவிடயங்களையறிதற்கிடமாயிருத்தலின் விராட்
புருடனுக் கிந்திரியங்களெனவும் — அவ்விந்திரியங்களவ்விட
யங்கட்குக் காரணமானசூக்குமமாயிருத்தலின் பொன்கர்ப்
பர்க்கதுமெய்யெனவும்— இவைகளொன்றுந்தோன்றுமற்கா
ரணமான தமசிலடங்கியிருத்தலின் மறைப்பாமந்தரியாமிக்
கெனவுங்கூறினர்—எனவே- யீசனுக்குத்தூலாதிமூன்றுதேக
முமாயிற்று. (௭௪)

(அவதாரிகை)

இச்செய்யுளிற்றசவாயுவினிலக்கணங்கூறுவான்றொடங்கிப்
பிராணாதிசத்தவாயுக்களினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

நின்றிதயந்தனையடைந்துபிராணனுசுவாச.......... ......*
நிசுவாசமியற்றுமபானன்குதத்தினுற்றுச் ....... ........*
சென்றொழிபமலசலங்களொழித்தனுறுஞ்சமானன் ......*
சேர்ந்துந்தியன்னரசமுறுப்பனைத்தும்பகுக்கு ......*
மென்றுமுதானன்களமுற்றுற்காரம்புரியு........ ..........*
மிருந்தங்கமெங்கும்வியானன்பரிக்குமுடம்பைக்.... ...*
குன்றுதலினுகன்சோம்பாவித்தல்விளக்குங்.......... ......*
கூர்மனுல்விக்கலொடுதேக்குவருமன்றே ............ ...*

(இதனதுபதப்பொருள்.)

பிராணன்- பிராணவாயுவானது - நின்றிதயந்தனையடைந்
து-இதயஸ்தானத்தைச்சேர்ந்துநின்று - உசுவாசம்-மேற்செ
ல்லுதலையும் - நிசுவாசம் - கீழ்ச்செல்லுதலையும் - இயற்றும்-
செய்யும்-அபானன்- அபானவாயுவு-குதத்தினுற்று-குதஸ்தா
னத்திருந்து - சென்றொழிப- வெளிப்பட-மலசலங்கள் - ம
லசலங்களை - ஒழித்தனுறும்- நீக்கிக்கொண்டிருக்கும்-சமான
ன்-சமானவாயு-சேர்ந்துந்தி - நாபிஸ்தானத்திருந்து-அன்ன
ரசம்-உண்டவன்னரசத்தை- உறுப்பனைத்தும் - அங்கமுழுதி
ற்கும்-பகுக்கும் - பகுத்துக்கொண்டிருக்கும் - என்றும்-எ
ப்போதும் - உதானன்-உதானவாயு-களமுற்று - கண்டஸ்தா

னத்திருந்து - உற்காரம்புரியும் - வாந்தி பண்ணுவிக்கும்- வியானன்-வியானவாயு - இருந்தங்க மெங்கும் - சர்வாங்கமுமிருந்து - பரிக்குமுடம்பை - தேகத்தைத்தாங்கிக்கொண்டிருக்கும் - குன்றுதலிற்-குன்றுத - நாகன்-நாகவாயு - சோம்பு-சோம்பலையும்-ஆவித்தல்-கொட்டாவியையும் - விளக்கும் உண்டாக்கும்-கூர்மனால்-கூர்மவாயுவால்-விக்கலொடு - விக்கலுடன்-தேங்குவரும்- எப்பமுமுண்டாகும்—எ—று-அன்றே-அசை.

---

(அவதாரிகை)

இச்செய்யுளின்முன்னிறுத்தமுறையான்மூன்றுவாயுக்களினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

தும்மலுடனிருமல்வருங்கிரிகரனானுதல்.............*
சொல்லுதலாந்தேவதத்தனாற்சோகராக..................*
மென்மைதருந்தனஞ்செயனத்தனஞ்செயனாம்வாயு.....*
வியனுயிர்போயைந்நாளின்வீங்கிவெடித்தகலு......*
மிம்மையினாகாதிபுறவாயுக்களைந்தா.......................*
யிசைத்திடுங்கன்மேந்திரியங்கட்கதுசேட்டிக்குந்... ....*
தன்மையாம்பிராணாதிபஞ்சவாயுக்க.......................*
டாமியக்கும்விடாமன்ஞானேந்திரியங்களையே...,.....*

(இதனதுபதப்பொருள்)

கிரிகரனால் - கிரிகரவாயுவினால்-தும்மலுடன்-தும்மலோடும்-இருமல்-இருமலும் - வரும்-உண்டாகும் - தேவதத்தனால்-தேவதத்தவாயுவினால்-தகுதல் - தகைத்தலும்-சொல்லுதல் - சொல்லுதலும்-ஆம்-உண்டாகும்-தனஞ்செயன்-தனஞ்செயவாயுவினால்-சோகராகம் - துன்பவின்பங்களை-மென்மை- மிருதுவாக-தரும்-கொடுக்கும் - அத்தனஞ்செயனாம்வாயு-அத்தனஞ்செயவாயுவானது - வியனுயிர்போய்-மேலானவுயிர்நீங்கி-ஐந்நாளின்-ஐந்துதினவளவாயில்-வீங்கி-சரீரம்வீங்கி-வெடித்து-கபாலம்வெடித்து-அகலுமிம்மையில்- இச்சரீரத்தினின்றுநீங்கும்- நாகாதி- நாகன்முதலிய- புறவாயுக்களைந்தாய்-புறவாயுக்களைந்தாக - இசைத்திடும்-சொல்லப்படும்-கன்மேந்திரியங்கட்கு-வாக்காதி கன்மேந்திரியங்களை - அது-அப்புறவாயுக்கள்-சேட்டிக்கும் - அசைப்பிக்கும்- தன்மையாம்-கு

ணங்களாம்-பிராணாதி- பிராணன்முதலிய-பஞ்சவாயுக்கள்-ஐந்து வாயுக்களும் - ஞானேந்திரியங்களை - சுரோத்திராதிஞானேந்திரியங்களை-தாமியக்கும்விடாமல்- தாமேவிடாமலசைப்பிக்கும் —எ—று-எ-அசை.

இந்திரியங்கட்கென்றநான்காம்வேற்றுமை, பொருள்சென்மருங்கில்வேற்றுமைசாருமென்ற சூத்திரப்படி இரண்டாம்வேற்றுமையாயின. அதுவென்றது புறவாயுக்களின் றொகுதியொருமை. நாகாதிபுற வாயுக்களெனவே - பிராணாதியந்தரவாயுக்களெனவும் - மேற்கூறும்வயிரம்பணாதிய- அகவாயுக்களெனவுமாம். ஆகவே- புறம்பினுள்ள கன்மேந்திரியங்களைச்சேட்டிப்பித்தலின், நாகாதியைப் புறவாயுக்களெனவும் - இடையினுள்ள ஞானேந்திரியங்களையசைப்பித்தலின்- பிராணாதியையந்தர வாயுக்களெனவும் - அகத்தினுள்ள வந்தக்கரணங்களையசைப்பித்தலின்வயிரம்பணாதியையகவாயுக்களெனவுங்கொள்க. (எ௯)

(அவதாரிகை)

இச்செய்யுளின்வயிரம்பணாதியபஞ்சவாயுக்களின்றொழில்களும், பஞ்சபூதங்களினது தொழில்களுந் தருமமுமதிதேவதைகளுமானவிவற்றையுணர்த்துகின்றது.

(கவி.)

சாற்றின்வயிரம்பன்முக்கியன்பிரபஞ்சனனந் ... ..... ... *
 தரியாமியொடுமகாப்பிராணனெனும்பெயர்கொள் .... *
காற்றிவைகள்சீவசம்பந்தமாயெயுட் ......... ... .......*
 கரணங்களியக்கியிடுமண்முதலைந்திற்கும் .............*
பாற்றிகழும்வியாபாரம்பொறைபிண்டிகரணம் ..........*
 பாகமொடுவிரகமிடங்கொடையாகுந்தரும ............*
மாற்றலுறுந்திண்மைநெகிழ்வழற்சிபரிவெளியா ... ... ... *
 மயனுடரியரனீசன்சதாசிவன்றேவதைகள் ..... ........*

(இதனதுபதப்பொருள்.)

சாற்றின்-கூறுமிடத்து- வயிரம்பன்- வயிரம்பனும்-முக்கியன்-முக்கியனும் - பிரபஞ்சனன்- பிரபஞ்சனனும் - அந்தரியாமியொடு- அந்தரியாமியுடன் - மகாப்பிராணனெனும-மகாப்பிராணனுமென்கின்ற -பெயர்கொள்- நாமங்களையுடைய-காற்று-வாயுக்களாகிய - இவைகள்-இவ்வைந்தும்- சீவசம்ப

ந்தமாய் - சீவனுடனேகூடிநின்று- உட்கரணங்கள்- அந்தக்கரணங்களா நான்கையும்- இயக்கியிடும் - தொழிற்படுத்தும் -மண்முதலைந்திற்கும்- பிருதிவியாதிய பஞ்சபூதத்திற்கும் பாற்றிகளும்- அதினிடமாய் விளங்கும்- வியாபாரம்-தொழில்களாவன-பொறை-பொறுத்தலும்-பிண்டிகரணம்-பிண்டிகரித்தலும் - பாகமொடு-பாகஞ்செய்வித்தலுடன்-விரகம்-உலர்த்தலும்-இடங்கொடையாகும் -இடங்கொடுத்தலுமாம்-தருமம்- அவற்றின் றருமமாவன - ஆற்றலுறும் -நிலைபெற்ற-திண்மை - கடினமும் - நெகிழ்வு - நெகிழ்ச்சியும் - அழற்சி-வெம்மையும்-பரி-பரிசித்தலும்-வெளியாம்-வெளியுமாம்-அயனொடு-பிரமனுடன்-அரி - அரியும்-அரன்-உருத்திரனும்-ஈசன்-மயேசனும்-சதாசிவன்-சதாசிவனும்-தேவதைகள்-இவ்வைவருமதிதேவதைகளாம்—எ—று-ஏ - அசை.

பரிசம்- பரியெனக்கடைக் குறையாயிற்று- வயிரம்பணதியபஞ்சவாயுக்கள் ஜீவசம்பந்தமா யுட்கரணங்களை யியக்கியிடுமென்றது - உள்ளத்தைவயிரப்பனும் -மனதைமுக்கியனும்-புத்தியைப்பிரபஞ்சனனும் - சித்தத்தை யந்தரியாமியும்-அகங்காரத்தைமகாப்பிராணனும்- அசைப்பித்தலாம்,மண்முதலைந்திற்கும்-வியாபாரம்-தருமம்-தேவதையென்றது, நிரலேமண்ணிற்குப் பொறுத்தலும்- வன்மையும்-அயனும்-நீரிற்குப்பிண்டிகரித்தலும்- நெகிழ்ச்சியுமரியும், தீக்குப்பாகித்தலுமழற்சியுமரனும், காற்றிற் குலர்த்தலும்-பரிசித்தலுமயேசனும், விண்ணிற்கிடங்கொடுத்தலும்- வெளியும்-சதாசிவனுமாம். இவற்றினுற்பத்திக் கிரமப்படியுள்ளமுஞ் சேர்த்தந்தக்கரண மைந்தெனக்கூறியது. (எஎ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மேற்கூறியபஞ்சபூதங்களின் குணங்களுந் திரிபுடியினிலக்கணமு முணர்த்துகின்றது.

(கவி.)

கந்தமுதலாயினவேகுணங்களவைதம்முட் ........... *
ககனத்திற்கொலியொன்றேவளிக்கிரண்டூறுடனே...... *
யந்தழலுக்கொளியொடுமூன்றறற்கிரதமொடுநான் ....... *
கைந்துமணமொடுபுவிக்கென்றறிதிதிரிபுடிகள் ....... *

முந்துஞாதிருஞானஞேயமாமிவற்றின் ...........................*
மூலவகங்காரஞ்சேர்சீவசைதன்னிய ..........................*
நந்துஞாதிருமனத்திற்கதுவறிவுஞான ..........................*
நவின்றபவுதிகவிடயஞேயமெனவறியே ......................*

(இதனதுபதப்பொருள்.)

கந்தமுதலாயினவே - கந்தமாதியவைந்துமே - குணங்கள் - அப்பஞ்சபூதத்தின் குணங்களாம் - அவைதம்முள் - அவற்றுள் - ககனத்திற்கு - ஆகாயத்திற்கு - ஒலியொன்றே - சத்தமொன்றும் - வளிக்கு - வாயுவிற்கு - இரண்டேறுடனே - பரிசத்துடனிரண்டும் - அந்தழலுக்கு - அழகிய தேயுவிற்கு - ஒளியொடுமூன்று - ரூபத்துடன்மூன்றும் - அதற்கு - அப்புவிற்கு - இரதமொடு - இரசத்துடன் - நான்கு - நான்கும் - புவிக்கு - பிருதிவிக்கு - மணமொடு - கந்தத்துடன் - ஐந்தென்று - ஐந்துமாமென்று - அறிக - அறிவாயாக - திரிபுடிகள் - இனித்திரிபுடிகளாவன - முந்து - முத்தன்மையான - ஞாதிரு - ஞாதிருவும் - ஞானம் - ஞானமும் - ஞேயமாம் - ஞேயமுமான - இவற்றின் - இவைகளுள் - மூலவகங்காரஞ்சேர் - மூலாங்கார சம்பந்தமான - சீவசைதன்னியம் - சீவபோதமே - நந்து - ஆக்கமுள்ள - ஞாதிரு - ஞாதாவும் - மனத்திற்கதுவறிவு - அந்தக்கரணப்பிரதிபலனசைதன்னியமே - ஞானம் - ஞானமும் - நவின்ற - முற்கூறிய - பௌதிகவிடயம் - பௌதிகவிடயங்கள் - ஞேயமென - ஞேயமுமென - அறி - நீயறிவாயாக — எ — று - ஏ - ஈற்றசை. திரிபுடி - அறிபவனும்அறிவும்அறியப்படும்பொருளுமாம்()

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய தத்துவங்கள்பூதமுதற்பிரமபரியந்தமான விருபத்தொன்பதையுமுணர்த்துகின்றது.

(கவி.)

ஓங்குமனமிருபத்துநான்காவதாகு ..........................*
மிருபத்தைந்தாவதுதான்மூலவகங்கார ......................*
மாங்கதனையடைதலுறுசிதாபாசசீவ ..........................*
னறையினிருபத்தாறுமவன்மாயைமருவு ......................*
மோங்கொளியாமீசனிருபத்தேழாமவனவ் ......................*
வுயிர்முதலாந்துரியனிருபத்தெட்டாமவனு ......................*

நீங்கலருமீசனதிட்டாத்திருவாம்பிரம............................*
நிகழ்த்தினிருபத்தொன்பதாவதுவாமன்றே... ... ...*

(இதனதுபதப்பொருள்)

ஈங்கு-இவ்விடத்தில் - மனம்-மனமானது - இருபத்துநான்காவதாகும்- இருபத்துநான்காந்தத்துவமாம் - மூலவகங்காரம்- மூலாங்காரமானது - இருபத்தைந்தாவது- இருபத்தைந்தாந்தத்துவமாம் - ஆங்கதனை - அவ்விடத்தம் மூலவாங்காரத்தை- அடைதலுறு - அடையாநின்ற -சிதாபாசசீவன்- சீவசிதாபாசனானவன் - அறையில்- சொல்லுமிடத்து - இருபத்தாறுமவன் - இருபத்தாறுந்தத்துவமாவன் - மாயைமருவு-மாயாசகிதனான - ஓங்கொளியாமீசன்-உயர்ந்தபிரகாசத்தையுடைய வீசனானவன்-இருபத்தேழாமவன் - இருபத்தேழாந்தத்துவமாவன்-அவ்வுயிர்-முற்கூறியசீவனுக்கு-முதலாம்-அதிஷ்டானமான-துரியன்- கூடத்தனானவன்-இருபத்தெட்டாமவனும் - இருபத்தெட்டாந் தத்துவமாவன்- நீங்கலரும்-நீங்குதற்கரிய - ஈசன்-ஈசனுக்கு- அதிட்டாத் திருவாம்-அதிஷ்டானமாகிய - பிரமம்-பிரமமானது-நிகழ்த்தில்-சொல்லுமிடத்தில்- இருபத்தொன்பதாவதுவாம்-இருபத்தொன்பதாந்தத்துவமாம்—எ—று-தான் அன்றே-அசை.

மூலாங்காரத்தின சத்துவத்திற் கரணநான்கும் · ஞானேந்திரியமைந்துமாகவொன்பதும், இரஜசின்வாயுவைந்துங் கன்மேந்திரியமைந்துமாகப்பத்தும், தமசின்பூதமைந்துமிவ விருபத்துநான்கின்முதன்மையான மனமுமிவற்றைதானென்றபிமானித்திருக்குமகங்காரமுமதற்காதாரமானசீவனுமதற்குவியாபகமானவீசனுமிவ்விரண்டிற் கதிஷ்டானமானகூடஸ்தனும் பிரமமுமாக விருபத்தொன்பதுந் தத்துவமாமென்க.

விஞா-இங்ஙனமாயினேனைய நூல்களிற் சத்துவத்திற்பத்துமிரஜசிற்பத்துந்தமசிற்பதினொன்றுமிவைகட்குக்காரணமான-அவித்தை-வித்தை-சீவன்-ஈசன்- பிரமமைந்துமாகமுப்பத்தாறெனக்கூறிய தென்னையெனின்,

விடை-இந்நூலாசிரியர் சத்துவத்தினுதித்த பத்தின்மூன்றுதித்தஞானமொன்றையகங்காரத்தி னடக்கியொன்பதெனவுமிரஜசினுதித்தபத்தும்பத்தேயெனவுந்-தமசினுதித்த பதினொன்றின்- அஸ்தி-மாமிசம்- சருமம்-நரம்பு-உரோ

மம்-மச்சை - யென்கின்றவாறையு மிவற்றின்காரண மானபஞ்ச பூதத்தினடக்கியு மூன்னீக்கின ஞானத்தை யகங்காரான்மாவெனச்சேர்த்தும் அவித்தைவித்தையிரண்டையுஞ்சிவேஸ்வரரிலடக்கியும் - பிரமத்தைக் கூடஸ்தனெனவிரித்துமாக விருபத்தொன்பதெனக் கூறினுமென்க.

வினா - இந்நூலின் முற்கூறியவாயுக்கள் பதினைந்தைப் பின்னைந்தாகக்கூட்டியதென்னையெனின்,

விடை - நாகாதியென்ற புறவாயுக்களைந்தையும்பிராணாதியைந்தினும்வயிரம்பஞறிய வாயுவைந்தையுஞ் சிவனிலுமடக்கியதாலென்க.

வினா - அற்றேல்-வயிரம்பஞறிய வாயுக்களைச் சிவனிலடக்கியதென்னையெனின்,

விடை - இவ்வைந்தும் விராட்புருடனது பஞ்சவாயுக்களாதலிற்சிவசம்பந்தமா யிருந்ததென்க.

வினா - அற்றேலித்தத்துவங்களடங்கின விடத்துள்ளசிவனிடத்திருக்கின்றதெங்ஙனமெனின்,

விடை - இருபத்துநான்கு தத்துவங்களொடுங்கின சுழுத்தியவத்தையிற் பிராணனைசைதலனுபவமிருத்தலினானும்பிராணனுமல்லவென்ற, சசிவன்னபோதக் கவியினானுமிருக்கின்றதெனக்காண்க.

வினா - அங்ஙனமாயினிச் சிவனிடத்திவ் வாயுவெங்ஙனமிருக்கின்றதெனின்,

விடை - சிவனுக்குச்சங்கற்ப ரூபமான வந்தக்கரணங்களையசைப்பித்தலினவனது ஜீவசத்தியாயிருக்கின்றதென்க, இதனாலிப்பிராண னன்றென்பதுதோன்ற மகாப்பிராணனெனநாமம்வந்தது.

(இப்பத்துக்கவியின தாற்பரியம்.)

முற்கூறிய சிவர்கட்கவித்தையினீக்கமும் வித்தையினுக்கமுமுண்டாகுநிமித்தமதற்குச்சாதனமாகக் காலமுதற்பௌதிகமீறான தத்துவங்களீசுரனது நிருபாதிருஷ்டியினாலவாந்தரமாகவுண்டாயிற்றென்பதாம். (௭௯)

---

அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய சிருஷ்டிகளிருவிதமெனவுணர்த்துகின்றது,

(கவி.)

தெரித்தகாரியத்தோற்றமிருவகையாங்கிரம ............ *
சிருட்டியுகபற்சிருட்டியெனமூலப்பகுதி ......... ...... *
விரித்தமகதத்வமகமூந்தன்மாத்திரையாம்................ *
விளங்குசத்தப்பிரகிருதியாற்பஞ்சபூத ................ *
மூரைத்தவற்றிற்பிரமாண்டபிண்டமுதலாய ................ *
வுலகுதயந்தான்கிரமசிருட்டிநிறைகடலின்...... ...... *
மருத்துவசத்தலையாதிபோற்சிவத்தின்மாயா ... ..... ..... *
மயநாமவுருவநிகழ்வாமுகபற்சிருட்டி ................ *

(இதனதுபதப்பொருள்.)

தெரிந்த-முற்கூறிய - காரியத்தோற்றம் - காரியமானசகமுண்டாதல் - இருவகையாம் - இரண்டுபிரகாரமாம்-(அவையாவன) கிரமசிருட்டி - கிரமசிருஷ்டியெனவும் - உகபற்சிருட்டியென - உகபற்சிருஷ்டியெனவுமாம்-(இவற்றுள்) மூலப்பகுதி - மூலப்பிரகிருதியில் - விரித்த- உண்டான-மகதத்வம் - மகதத்துவமும்- அகமும் -அகங்காரதத்துவமும்-தன்மாத்திரையாம்- பஞ்சதன்மாத்திரையுமாக - விளங்கு-விளங்காநின்ற - சத்தப்பிரகிருதியால்-சத்தப்பிரகிருதியினால்-பஞ்சபூதம்-பஞ்சபூதங்களும் - உரைத்தவற்றில் - சொன்னவப்பூதங்களால் - பிரமாண்டம் - பிரமாண்டங்களும்-பிண்டமுதலாய- சரீராதிகளான - உலகுதயம் - சகத்தோற்றம் - கிரமசிருட்டி-கிரமசிருஷ்டியாம்-நிறைகடலின்-நிறைந்தசமுத்திரசலத்துள் - மருத்துவசத்து-வாயுவசத்தால் - அலையாதிபோல்-தரங்கமாதிய பேதமுண்டாதல்போல- சிவத்தின்-பிரமசந்நிதியில் - மாயாமயம் - மித்தையாரூபமான-நாமவுருவம்-நாமரூபமாகிய சகத்பேதம் - நிகழ்வு-ஏககாலத்திற்றோற்றிவிளங்குவது - ஆமுகபற்சிருட்டி- உகபற்சிருஷ்டியாம்-எ—று-தான்-அசை.

பிரமாண்டமென்பது, பஞ்சபூதாகாரமான வுலகமுதலியயாவுஞ் சேர்ந்தொன்றாயிருக்குமண்டமனைத்துங்கூடியது; பிண்டமென்ப தவற்றிற்சஞ்சரிக்கப் பட்டபஞ்சபூதகாரியமானபௌதிக வடிவமானதேகங்களாம். பிரமாண்டத்தைப்புவனபோகமெனவும், பிண்டத்தைத் தனுகரணமெனவுங்கொள்க, அவற்றையண்டத்திலுள்ள வுலகம்பதங்களைப்பிண்டித்த பொருளென்பாருமுளர் - அங்ஙனங்கூறுதல்சிவர்க

ட்குத்தேகாதி தத்துவந் தோன்றினமையானு மவர்க்கேபிர
தானமாயிச்சிருட்டி வந்தமையானுங்குற்றமாமென்க.

(இதனதுதாற்பரியம்.)

பிரகிருதி முதற்பிருதிவி பரியந்தமொன்றின் பின்னொன்ற
டைவாகவுதித்தகிரம சிருஷ்டியுமொருங்கேயுதித்தலுகபற்சி
ருஷ்டியுமா மென்பதாம். (௮௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிர்விகாரமானபிரமத்தில்விகாரமானவிச்சகஜீ
வபரமெங்ஙனந் தோற்றிற்றென்ற வினாவிற்குத்தரமுணர்த்
துகின்றது.

(கவி.)

சுருதிசித்தமாதலினாலிவையுடன்பாடாகுந் ............*
தூயபரப்பிரமமாம்விகாரமிலாவிறையாற் ............*
றருதலெங்ஙன்காரியங்கள்சடப்பகுதியென்னிற் ............*
றாளிலாக்கதிர்ச்சிலையிலிச்சையிலாதெழுந்த ............*
பரிதியினாலழல்வரல்போற்பரசிவனான்மூலப் ............*
பகுதியிடைமகதாதிகாரியங்கள்வரற்குக் ............*
கருதின்முரணிலையாகுமெனப்புகல்வரறிஞர் ............*
காரியங்கடோற்றுதனால்வகையவைமீண்டுரைப்பாம் ...*

(இதனதுபதப்பொருள்.)

சுருதி-வேதங்களின் - சித்தமாதலினால் - நிச்சயமாதலால்-இ
வை-இவ்விரு சிருஷ்டிகளும் - உடன்பாடாகும் - அங்கீகார
மாம்-தூயபரப்பிரமமாம்- சுத்தப்பிரமமாகிய-விகாரமிலா-
நிர்விகாரமான-இறையால் - ஈசனால்- சடப்பகுதிதன்னில்-ச
டமானபிரகிருதியில் - காரியங்கள் -சகதாதி காரியங்களை-த
ருதலெங்ஙனென்னில்- சிருஷ்டியாதலெங்ஙனமெனின்-தா
ளிலா-இச்சாவேதனையின்றிய - கதிர்ச்சிலையில்-சூரியகாந்த
க்கல்லில்-இச்சையிலாது- இச்சாவேதனையின்றி- எழுந்தப
ரிதியினால் - உதித்தசூரியனால் - அழல்வரல்போல்- அக்கினி
யுண்டாவதுபோல - பரசிவனால் - நிர்விகாரமான சிவத்தினா
ல்-மூலப்பகுதியிடை - சடமானமூலப் பிரகிருதியினிடத்தி
ல்-மகதாதி - மகதத்துவமுதலிய - காரியங்கள் வரற்கு-சகத்
துண்டாதற்கு-கருதின் - யூகிக்கின் - முரணிலையாகுமென-

ளுல் - ளுன்பிராந்தி - முற்கூறிய பிராந்தியானது - ஆர்க்கெ
ன்னில் - ஆருக்கென்ளுல் - ஒப்பில் - சமானமின்றிய - சதி - க
ற்புடையதலைவியும் - பதி - தலைவனுங்கூடி - ரதிமால் - அனுபவி
க்கும்ரதிகாங்கிஷை யென்னும் - உருவம் - இத்திரிவிதருபமா
ன - சொப்பனம் - சொப்பனமானது - ஒருமுனிவன்பால் -
ஒருயோகிஸ்வரனிடத்தில் - உதிப்பின் - தோற்றின் - அதனுக்
அக்கனவினுல் - அங்கவனுக்கு - அவ்விடத்திவ்வியோகீசரனு
க்கு - எப்பழுதுமிலாதனும்போல் - யாதோராணியுமில்லாதனு
போல - சான்ருமான்மாவில் - சாட்சியானவாத்மாவினிடத்தி
ல் - இலங்கு - விளங்காநின்ற - குணவுருவமாம் - திரிகுணுத்மக
மான - பகுதியினுல் - பிரகிருதியினுல் - மருளுமெய்ப்பரிய -
மித்தையாப் பிராந்தியையுடைய - ஞாதிருவும் - ஞாதாவும் -
பிராந்திஞானமும் - பிராந்தியையுடையஞானமும் - பொய்
விடயம் - பிராந்திவிஷயமான - ஞேயமும் - ஞேயமுமாகிய
திரிபுடிகள் - வரினும் - தோற்றினும் - அவற்கு - அவ்வாத்மா
விற்கு - இடையூறில்லை - ஓராணியுமில்லை — என — று - ஏ - அசை -

சகசநிஷ்டையையுடைய யோகிக்கிச்சாக்கிரத்திற் பிராரத்
தவசமாமெ... விதவனுபவம்வந்தாலுமவற்றைத்தனதுபிரமா
நந்தமாய... வித்தலினிவ்வுவமானங்கூறினதென்க, ஆயின
வென்னும் ... மை - ஆயிற்றெனத்திரிபுடி யென்னுமொரு
மைபற்றி... து - உயிரவிகாரியென்றதனுற்கூடஸ்தனும் - ஆ
கவே - ... பிரம மென்பதாயிற்று - முனிவன்போல்வா
த்மா, க... பாவச்சங்கற்பம், சதிகேளிமயக்கம்போலத்
திரிபு...

(இதனதுதாற்பரியம்.)

கனவி... க்கமானமன்மதவிகாரத்தையவ்வவத்தையி
ற்று... க் கண்டவர்க்கெங்ஙனமவ்விகாரமின்று
வங்க... பத்திமுதலிற்றுனேதனதுவிலாசமாய்க்க
ண்டி... ற் கென்றுமில்லையென்று மித்திரிபுடிவி
கா... கேயாமென்றும்விளக்கியதாம். (௮௫)

(அவதாரிகை.)

... ர் மலறப்புநீங்கு நிமித்தமுண்டானஜ
... ந புணர்த்துகின்றது.

(கவி.)

இறைவனாற்றோன்றியமாயாமயமாமுலக......... ..... ...*
மிருந்தபடியிருக்குந்தன்வடிவினாலதனுன்... .......... *
மறைவிலாச்சீவபுத்திவிருத்திகற்பிதமா.......... ........ *
மற்றொருபோக்கியவடிவமேவிருப்புவிடயம் ......... *
வெறுவிதாம்வெறுப்புவிடயத்தினொடுநொதுமல் ... ... *
விடயமெனத்திரிவிதமாமவையாவையென்னின் ........ *
முறையின்வனிதாதிபுலிபெழுவாய்வீழ்துரும்பு ... ....... *
முதலனவாமெனமொழிவர் முற்றாமுணர்ந்துடையோர்

(இதனதுபதப்பொருள்,)

இறைவனால் - ஈசனால்-தோன்றிய-உண்டாகிய-மாயாமயமாம்-மாயாரூபமாகிய - உலகம்-சகத்தானது-இருந்தபடி- முன்னுண்டானபடி- இருக்குந்தன்வடிவினால்- தன்வடிவத்துடனேயோபிரகாரமாயிருக்கும் - அதனுள்-அதனிடத்தில்-மறைவிலா-மறைவுபடாத-சீவ-சீவனுடைய -புத்திவிருத்தி-புத்திவிருத்தியில்-கற்பிதமாம் - கற்பிதமான-மற்றொரு - வேறொரு-போக்கியவடிவமே-போக்கியரூபமே-விருப்புவிடயம்-பிரியவிஷயமும்-வெறுவிதாம்- விருப்ப ற்ற- வெறுப்புவிடயத்தினொடு-துவேஷிவிஷயத்துடன்- தாதுமல்விடயமென-உபேட்சாவிஷயமுமென - திரிவித -மூன்றுபிரகாரமாயிருக்கும்- அவையாவையென்னில் வையெவையென்றால்- முறையில்-நிரலே- வனிதாதி- முதலியனவும் - புலிபெழுவாய்-வியாக்கிரமுதலியன ழ்துரும்புமுதலன-வீழ்கின்றதிரணமுதலியனவும்- - ஆகுமென்று-முற்றாமுணர்ந்துடையோர் - மு ணர்ந்தசத்துக்கள்-மொழிவர்-சொல்லுவார்கள்.—

முறையினென்றமைப்பின்வனிதாதிவிருப் யாதி
வெறுப்பெனவுந்துரும்பாதிநொதுமலெ க.

(இதனதுதாற்பரியம் :

முத்திசாதனமாய்வந்ததீசுரசிருஷ்டி தசாதனமாய்வந்ததுஜீவசிருஷ்டியெனவும் (௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளினீசுரசிருஷ்டியினொரு
ன்பன்மையுமுவமானபூருவகமாகவு

(கவி.)

ஈசனிருமிதமானவேகாகாரமும்பி ...... *
னெய்துமுயிர்க்கற்பிதமாம்பலவாகாரமுமோர் ...... *
தேசவிடயத்துறுதற்கெவ்வாறிங்கென்னிற் ...... *
றிட்டாந்தமீசனிருமிதமணியாதிகடாம் ...... *
பேசிலொருதகையாய்ப்போத்திருபுத்திதன்கற் ...... *
பிதநானாவிதத்தினலவைதமைப்பெற்றோனுக் ...... *
காசைவிடயமதாகிப்பெறாற்குவெறுப்பாகி ...... *
யரியதுறவிக்குபேட்சாவிடயமாமே ...... *

(இதனதுபதப்பொருள்.)

ஈசனிருமிதமான-ஈசுரசிருஷ்டியான-ஏகாகாரமும்-ஒரேவடிவமும்.பின்னெய்தும்.பின்னுண்டான.உயிர்க்கற்பிதமாம்-ஜீவசிருஷ்டியான-பலவாகாரம்-நானாவிதமோகாகாரங்களும்.ஓர்தேசவிடயத்துறுதற்கு.ஓரிடத்துள்ளவிடயத்திருத்தற்கு-திட்டாந்தம்-திட்டாந்தமானது-எவ்வாறிங்கென்னில்-இங்கெவ்வண்ணமாமென்றால்-ஈசனிருமிதம்-ஈசுரசிருஷ்டியான-மணியாதிகள்-இரத்தினமுதலானவைகள்-பேசில்-சொல்லுமிடத்து-ஒருதகையாய்-ஒருதன்மையாயிருக்க-போத்திரு-சீவனுடைய-புத்திதன்-புத்தியினது-கற்பிதம்-கற்பிதமானது-நானாவிதத்தினால்-பலவிதத்தினால்-அவைதமை-அவ்விரத்தினங்களை-பெற்றோனுக்கு-அடைந்தவனுக்கு-ஆசைவிடயமதாகி-இராகவிஷயமாய்-பெறாற்கு-அடையாதவனுக்கு-வெறுப்பாகி-துவேஷவிஷயமாய்-அரியதுறவிக்கு-அரிதானவிரத்தனுக்கு-உபேக்ஷாவிடயமாம்-நொதுமல் விஷயமாம்—ஏ—று-தாம்-ஏ-அசை.

(இதனதுதாற்பரியம்.)

மணியாதிய வீசுரசிருஷ்டியுமிதனில் விருப்பாதிய மூன்று முண்டாதலே சீவசிருஷ்டியுமா மென்பதாம். (௮௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மேலுமிச்சிருஷ்டிகளிங்ஙனமெனத்தோன்றவற்புறுத்தி யுணர்த்துகின்றது.

(கவி.)

அப்பொருடானேவிளங்கித்தோன்றுறுதற்கின்னு ...... *
மறைதுமோர்திட்டாந்தந்தோன்றியவோர்மாது ...... *

மெய்ப்பரிசோர்திறமாகப்போத்திருக்கள்புத்தி.......... *
விருத்திகற்பிதத்தினாற்றாதைக்குமகளாய்த்... ........ *
தப்பிலகொழுநற்குக்காதலியாகிமகற்குத்......... ....... *
தாயாகிமாதுலற்குமருகியாயிருப்ப ........... ...... *
ளிப்பரிசுவிடயமெலாமிறைவனிருமிதமு ... ......... *
மிலங்குயிர்க்கற்பிதமுமெனவிருதிறத்துற்றிடுமே.....*

(இதனதுபதப்பொருள்,)

அப்பொருள் - முற்கூறிய சிருட்டிகள் - விளங்கித்தோன்றுமதற்கு - விளக்கமாய்த்தெரிவதற்கு- இன்னும்-இன்னமும்-அறைதுமோர் திட்டாந்தம் - ஒருதிஷ்டாந்தஞ்சொல்லுகின்றோம்-தோன்றிய- ஈசுரசிருட்டியினாலுண்டான - ஓர்மாது-ஒருபெண் - மெய்ப்பரிசு - தேகத்தன்மை - ஓர்திறமாக-ஒரோபிரகாரமாயிருக்க - போத்திருக்கள்- சீவர்களின் - புத்திவிருத்தி-புத்திவிருத்தியினது - கற்பிதத்தினால்- கற்பனையால்-தாதைக்கு - தந்தைக்கு-மகளாய்-குமாரியாகியும் - தப்பில்-மெய்யான - கொழுநற்கு- மணாளனுக்கு - காதலியாகி-மனைவியாகியும்-மகற்கு - குமாரனுக்கு- தாயாகி - மாதாவாகியும்-மாதுலற்கு - மாமனுக்கு-மருகியாய்- மருமகளாகியும்-இருப்பள் - இருப்பாள்-இப்பரிசு- இத்தன்மையாக-விடயமெலாம்-சர்வவிஷயங்களும்-இறைவனிருமிதமும்-ஈசுரசிருஷ்டியும்-இலங்கும்-விளங்காநின்ற-உயிர்க்கற்பித முமென-சீவகற்பிதமுமாமென - இருதிறத் துற்றிடும் - இவ்விருதன்மையாகவுண்டாம்—எ—று-தான்-ஏ-அசை.

(இதனதுதாற்பரியம்.)

ஏகமான வோர்பெண்வடிவைச்சிவசிருஷ்டியெனவும் புத்திரியாதியபேதமாகக் கற்பிப்பது சீவ சிருஷ்டியெனவும்விளக்கியதாம். (௮௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய சிருஷ்டிகளினீசுரசிருஷ்டிமுத்திசாதனமெனவும் சீவசிருஷ்டியம் முத்தியை யடைதற்கும்விடுதற்குமேது வெனவும் அஃது சாத்திரம் அசாத்திரமானபிரபஞ்சமிரண்டெனவுமவற்றுட்சாத்திரப்பிரபஞ்சமிரண்டாமெனவு முணர்த்துகின்றது.

(கலி.)

அன்னணிருமிதப்பிரபஞ்சந்தான்வாதிப்ப.......... ...*
தல்லாமையானு நூலாசிரியவடிவாய் ......... .......*
நண்ணலருமுத்திசாதனமாயுந்தன்னா........................*
னழுவவொண்ணாமையினுமனையதுதானிற்க... ......*
வெண்ணரியசீவகற்பிதமாயவதுதா.................. .... ...*
னிருபிரபஞ்சங்கள்சாத்திரத்தொடசாத்திரமாங்........*
கண்ணுமசாத்திரப்பிரபஞ்சங்கொலிருதிறனாங்... ... ....*
கழறிற்றீவிரமத்தமெனவவைமீண்டுரைப்பாம்..........*

(இதனதுபதப்பொருள்.)

அன்னணிருமிதம் - ஈசுரசிருஷ்டியாகிய - பிரபஞ்சம்-பிரபஞ்சமானது - வாதிப்பதல்லாமையானும் - வாதியாமையினானும் - நூலாசிரியவடிவாய் - சுருதிகுரு ரூபத்தினால் - நண்ணலரும் - அடைதற்கரிய-முத்திசாதனமாயும் - மோக்ஷசாதனமாகியும்- தன்னால்-சீவனால்-நழுவவொண்ணாமையினானும்-விடுதற்கசக்கியமாவதினானும்- அனையதுதானிற்க-அத்தன்மையானவீசுரசிருஷ்டியை நிறுத்தி - எண்ணரிய-கணித்தற்கரிய-சீவகற்பிதமாய - சீவகற்பனையாகிய- அது-அதுவே(முமூட்சுகளானிவர்த்திக்கத்தக்கதான)இருபிரபஞ்சங்கள்-இரண்டுபிரபஞ்சங்களாம் -அவையாவன - சாத்திரத்தோடு-சாத்திரப்பிரபஞ்சத்துடன் - அசாத்திரமாம்- அசாத்திரப்பிரபஞ்சமுமாம் - கண்ணும்- வருத்துகின்ற-அசாத்திரப்பிரபஞ்சம் - அசாத்திரப்பிரபஞ்சமானது - இருதிறனும்-இரண்டுதன்மையாம் - கழறில்-அவற்றைக் கூறில்-தீவிரம்-தீவிரமும் - மத்தமென - மந்தமுமெனவாம்-அவைமீண்டுரைப்பாம்-அம்முறையே பின்னர்க்கூறுவாம்—எ-று-கொல்-தான்-அசை.

ஈசுரசிருஷ்டி நழுவவொண்ணாமையினு மென்றமையின் சீவசிருஷ்டி நழுவுமென வெதிர்மறையான்வந்தது.(௮௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசீவசிருஷ்டியின்சாத்திரம் அசாத்திரங்களினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

சிவபரவிசாரணையேயுரைத்தலரிதாஞ்சாத் ................ *
திரப்பிரபஞ்சங்காமாதிகளேதீவிரமாங் ................ *
காவலுறுசாதிகருமாதிகமொடேதான் ................ *
கருதுமனக்கற்பிதமேமந்தமசாத்திரத்தின் ................ *
மேவுறுமிவ்விருதிறமுமாருயிர்மெய்க்காட்சி ................ *
விரோதிகளாதலின்ஞானம்பயிறற்குமுன்னை ................ *
மேவுவசாத்திரப்பிரபஞ்சந்தான்மெய்ஞ்ஞான ................ *
வுதவியாயான்மகாட்சியின்பின்விடுவதுவாம் ................ *

(இதனதுபதப்பொருள்.)

சிவபரவிசாரணையே - பரமாத்மவிசாரமே-உரைத்தல்-சொல்லுதற்கு-அரிதாம்- அரியவான- சாத்திரப்பிரபஞ்சம் - சாத்திரப் பிரபஞ்சமாம் - காமாதிகளே - காமக்குரோதாதிகளே-தீவிரம்-தீவிரப்பிரபஞ்சமும்- காவலுறும் - பந்தப்படுகின்ற- சாதிகருமாதிகமொடு - வர்ணதன்மங்களுடன்-கருதுமனக்கற்பிதமே - கருதாநின்ற மனோசங்கற்பமே - மந்தம்-மந்தப்பிரபஞ்சமும்- ஆம்-ஆகிய விரண்டும்- அசாத்திரத்தின்-அசாத்திரப் பிரபஞ்சத்தின் - மேவுறும்- பொருந்தும்-இவ்விருதிறமும் - இவ்விரண்டு தன்மையும் - ஆருயிர்-கூடஸ்தனது- மெய்க்காட்சி - உண்மையான தெரிசனத்திற்கு-விரோதிகளாதலின் - பகைகளாதலின்-ஞானம்பயிறற்கு-ஞானப்பியாசத்திற்கு - முன்னம்-முன்னமே- ஒவுவ-விடுவனவாம்- சாத்திரப்பிரபஞ்சம் - சாத்திரப்பிரபஞ்சமானது-மெய்ஞ்ஞானம் - உண்மைஞானத்தை யடைதற்கு - உதவியாய் - சகாயமாயிருத்தலின் - ஆன்மகாட்சியின்பின் - ஆத்மதரிசனமானபின்பு - விடுவதுவாம் -விடத்தக்கதாம்-எ-று. தான்-அசை.

சாத்திரம், தானாய்விளங்கும் யதார்த்தமாகிய வாத்மலாபமானபேரின்பத்தை யடையுமுத்தியாதியகூறல், அசாத்திரம், புறம்பாயுள்ள கற்பிதமாகிய வநாத்மலாபமானசிற்றின்பத்தையடையுமுத்தியாதியகூறல், தீவிரமென்றது, வனிதாதிபோகசம்பத்தின்மேற்காமிப்பது, மந்தமென்றது, வருணாச்சிரம தர்மப்படிசொர்க்காபேக்ஷையாற் செய்யுங்கருமம்.

(பதசாரம்.)

தானாகியபிரமத்தி லத்தியாசமாகத்தோற்றிய மூலாஞ்ஞான

த்தினாற்றோன்றுததன்னையதார்த்தமாகத்தரிசிக்குநிமித்தஞ் சீவர்களுடைய வவித்தையா னாசத்தின்பொருட்டீசுரானுக் கிரகத்தாலுண்டானசரீரத்தினின்றுமிச்சநநமரணப்பிர வாகரூபத்திற்கேதுவானகாமாதிகளாகியதீவிரத்தைநீக்கிமே ற்செய்யுங்கர்மங்களின் மனுஷ்யாநந்தமாதிய சுகங்களையனு பவிக்கும்பதப் பிராப்திக்கேதுவாகுங் கர்மரூபமான ம ந்தத்தைநீக்கிநிஷ்காமமான சற்கிருத்தியங் களினாற்சித் தசுத்தியுமதனாற் சாதனசதுஷ்டயமு முண்டாதலின் றீவிர மந்தங்களையுடைய வசாத்திரப்பிரபஞ்சம் ஞானம்பயிறற் குமுன்னமேயோவுவவெனவும்— இச்சாதனத்தினாற் பரமாத்ம விசாரம்பிறந் ததனான்மனனமு மதனானிதித்யாசனமு ம தனாற்சமாதியுங் கூடினவிடத்து லங்கனம்விசாரித்தவிசாரம் நீங்கலிற்சாத்திரப் பிரபஞ்ச மெய்ஞ்ஞான வுதவியாயான்ம காட்சியின்பின் விடுவவெனவுங்கூறினார், இவ்விரண்டும்விடு வதாயினும் அசாத்திரமான்ம லாபத்தைக் கொடாமலுஞ்சா த்திரமஃதைக்கொடுத்து நீங்குமாதலின் இச்சாத்திரப்பிரப ஞ்சமுமுமூட்சுக்கண் முக்கியமாகவிரும்பத் தக்கதாயிற்று,

வினா - ஆத்மதரிசனத்துக்கு விரோதமானதீவிரமந்தமிரண் டையுமுடையவசாத்திரப்பிரபஞ்சத்தைவிடத்தக்கதுதா னேனைய வொன்றையெற்றினுக்குவிடத் தக்கதெனின்,

விடை - பரமாத்மவிசாரணையாலாத்மதெரிசனமாயினுமத ற்கதிஷ்டானமான கூடஸ்தப்பிரமாயிக்கியத்தி லிவ்விருத ன்மையுநீங்குமிடத்தஃதைவிசாரிக்குஞ்சாத்திரப் பிரபஞ்ச முநீங்குதலாமென்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

இப்பெத்தமாகியசீவேசுர சிருஷ்டிகள்முத்தியின்கணின் றென்பதை யுணர்த்தியதாம். (அஅ)

(அவதாரிகை.)

முற்கூறியசீவனுக்கு மூன்றுபாதியு மெட்டத்தியாசமுமை ந்தவத்தையுங் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளின் மூன்று பாதிகளினாமங்களு மவற்றினொன்றி னிலக்கணமு முணர்த் துகின்றது.

(கவி.)

தீவிரமந்தங்களுயிர்க்காட்சியுற்றபின்னுந் ........... ...... *
திகழ்முத்திபெறற்பொருட்டுவிடுவனவென்றறிக ... .... *
பாவமுறுமவிச்சின்னோபாதிபதிவிம்போ.......... ........ *
பாதியுடனத்தியாசோபாதியெனவே ............ .... .... *
மேவுமுபாதிகளொருமூன்றுளவவற்றைமுறையே ..... .... *
விளம்பியிடிற்சுழுத்தியுருவாமவித்தைதானே ..... .... .. *
யாவரணவவிச்சின்னோபாதியாம்பிரத்தி ............... *
கான்மாவிற்கதனதுகாரியமாம்புத்தியினில் ............ *

(இதனதுபதப்பொருள்.)

தீவிரமந்தங்கள் - முற்கூறியதீவிர மந்தங்களை- உயிர்க்காட்சி-ஆத்மதரிசனத்தை - உற்றபின்னும் - அடைந்தபின்பும்-திகழ்-விளங்கா நின்ற - முத்திபெறற்பொருட்டு - அயிக்கியமடையுநிமித்தம் - விடுவனவென்றறிக - விடத்தக்கனவென்றறிவாயாக- பாவமுறும்- பாவனையுள்ள- அவிச்சின்னோபாதி -அவிச்சின்னோபாதியும்-பதிவிம்போபாதியுடன்-பிரதிவிம்போபாதியோடு- அத்தியாசோபாதியென - அத்தியாசோபாதியுமென- மேவுமுபாதிகள்- மேவா நின்றவுபாதிகள்- ஒருமூன்றுள- ஒருமூன்றுள்ளன- அவற்றை- அவைகளை- முறையே- நிரலே-விளம்பியிடில்- சொல்லுமிடத்து- பிரத்திகான்மாவிற்கு-கூடஸ்தனுக்கு - சுழுத்தியுருவாம் - சுழுத்திவடிவமான- ஆவரணம்-மறைப்பிலிருக்கின்ற-அவித்தைதானே-அவித்தையே-அவிச்சின்னோபாதியாம்-அவிச்சின்னோபாதியாகும்- அதனது- அவ்வாத்மாவினது- காரியமாம்- காரியமான-புத்தியினில்- புத்தியில் — எ — று-ஏ-தான்-அசை.

அவிச்சின்ன-உபாதி - அவிச்சின்னோபாதியெனவும், பதிவிம்ப- உபாதி - பதிவிம்போபாதியெனவும், அத்தியாச உபாதி - அத்தியாசோபாதி யெனவும், நிலைமொழியீற்றுஅகரமும் - வருமொழிமுதலி லுகரமுங்கெட்டுக் கமலபத்திரோதகம்போல-ஓகாரமாதல் வடநூல்விதிப்படி குணசந்தியாய்வந்தது

வி௵- ஞானப்பியாசத்துக்குமுன்அசாத்திரப்பிரபஞ்சமும் ஆத்மதெரிசனத்திற்குப்பின்-சாத்திரப்பிரபஞ்சமும், மு

த்தியின்கணிவ்வுபயப்பிரபஞ்சமும்விடுமென்றதில்ஞானாப்
பியாசத்திற்குமுன்னே யசாத்திரப்பிரபஞ்சத்தை விடவே
ண்டுமென்றதநுபவையாதலின்விடத்தக்கதுதான், ஆத்மதரி
சனத்திற்குப்பின் சாத்திரப்பிரபஞ்சத்தின் லட்சியார்த்தம்
வெளிப்படுதலினதன்வாச்சியார்த்தந்தானேவிடத்தக்கதுதா
ன்இவ்வுபயமுமுத்திபெறற்பொருட்டுவிடவேண்டுமாயின்
ஆத்மதரிசனம்வேறுமுத்தி வேறோவெனின்.

விடை- ஆத்மதரிசனஞ் சீவன்முத்தியெனவும், இகழ்முத்தி
யென்பது, விதேகமுத்தியெனவு மிச்சீவன்முத்தியே வி
தேகமுத்தியாதலி னிதற்குமுன்னும்பின்னும் விடவேண்டு
மென்ற வுபயப்பிரபஞ்சமும்விதேகமுத்தியிலியல்பாகவே
யின்றென்பதுந்தோன்றவிங்ஙனங்கூறினானென்க. (௮௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முன்னிருந்த முறையாலிரண்டுபாதிகளி னி
லக்கணமுநான்கத்தியாசநாமமுமுணர்த்துகின்றது

(கவி.)

பற்றியவான்மாப்பதிவிம்பித்திடுதலானே .... ... ... ..... *
பதிவிம்போபாதியாம்புத்திகதமாய.................. *
முற்றுசுகதுக்கங்களுயிர்நுகர்தல்போல ........ ........ *
முயலுதலேயத்தியாசோபாதியாகு .............. ... .... *
முற்றவத்தியாசவிலக்கணமாம்வேறொன்றை............... *
யொன்றாகக்கருதலிப்பிவெள்ளியதுபோல.......... *
மற்றதுநால்வகைப்படுமாமித்தையுடனிதர .... ......... *
மற்றித்ரோதரஞ்சத்தியங்களினாலன்றே ........ ....... *

(இதனதுபதப்பொருள்,)

பற்றிய-தொடர்ந்த - ஆன்மா-ஆத்மா - பதிவிம்பித்திடுதலா
னே- புத்தியிற் பிரதிவிம்பித் திடுதலே - பதிவிம்போபாதி
யாம்-பிரதிவிம்போ பாதியாகும் - புத்திகதமாய - அந்தக்க
ரணசம்பந்தமாகிய- முற்றுசுகதுக்கங்கள் - சுகதுக்கங்களை
முழுதும்-உயிர்நுகர்தல்போல- ஆத்மாவனுபவிப்பதுபோ
ல் - முயலுதலே-முயற்சிப்பதே - அத்தியாசோ பாதியாகு
ம்-அத்தியாச வுபாதியாம் - உற்ற இங்ஙனம் வந்த-அத்தியா

சம்-அத்தியாசத்தின் - இலக்கணமாம் - இலக்கணமானது-இப்பிவெள்ளியதுபோல் - சுத்திகாரசிதம்போல- ஒன்றை-ஒருவஸ்துவை-வேறொன்றாக- மற்றொன்றாக - கருதல்-நினைத்தலாம் - மற்றது-பின்னந்த வத்தியாசமே - நால்வகைப்படும் - நான்குவிதமாம் (அவையாவன) மித்தையுடன்-மித்தியாத்தியாசத்தோடு - இதரம் - இதராத்தியாசமும்- இதரேதரம் - இதரேதராத்தியாசமும் - சத்தியங்களினால்- சத்தியாத்தியாசமுமாகியவிவைகளாம்—ஏ—று-ஆல்-அன்றே-அசை,

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்,)

சுழுத்தியவத்தையிற் பிராஞ்ஞனாகக் கட்டுண் டிருத்தலினுபரஞ்ஞவிச்சின்னோபாதியெனவும் - அந்தக்கரணப் பிரதிபலனாகிக்கன விற்றைஜசனாக வஸ்துதைப்பார்த் திருத்தலின்பிரதிவிம்போபாதியெனவும் - மனோகற்பிதத்தா லுண்டானதுக்கரூபமானவிடயங்களைச் சுகம்போலக்கருதி நனவின்கண்ணடைதற்குவிசுவனாகமாயலுதலினத்தியாசோபாதியெனவும்ஆத்மாவிற்கவாந்தரமாகவந்ததுபோலத் தோற்றினவென்பதாம், (௬௰)

(அவதாரிகை,)

இச்செய்யுளின்முற்கூறியநான்கத்தியாசத்தினிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி,)

நெருப்பினொடுபுணர்ச்சியாற்புனற்கழற்சிவரல்போ ... *
லித்தமுறுமான்மசந்நிதியதனின்முறையே ... *
சரிப்பினொடுகொண்டவினைவுறலறிதல்வரலாற் ... *
றருந்தூலமெய்ம்மித்தியாத்தியாசந்தா ... *
னிரிப்பருமிந்திரியங்களையிதராத்தியாச ... *
மிதரேதராத்தியாசங்கரணமாகுந் ... *
தரிப்பரியமூலவகங்காரமதுதானே ... *
சத்தியாத்தியாசமெனச்சாற்றுவர்தக்கவரோ ... *

(இதனதுபதப்பொருள்.)

நெருப்பினொடு - அக்கினியுடன்- புணர்ச்சியால் - கூட்டரவினால்- புனற்கு - குளிர்ந்தசலத்திற்கு - அழற்சிவரல்போ

ல் - உஷ்ணம்வருவதுபோல - நித்தமுறும் - நித்தியமான- ஆன்மசந்நிதியதனின் - கூடஸ்தசந்நிதானத்தில் - முறையே-கிரமமாக - சரிப்பினொடு - சஞ்சரித்தலுடன் - காண்டல்-பார்த்தலும் - நினைவுறல் - நினைத்தலும் - அறிதல்-அறிதலும் - வரலால்-வருதலினால் - தகும்-தகுதியுள்ள - தூலமெய்-தூலசரீரமே - மித்தியாத்தியாசம்- மித்தையாத்தியாசமும்-இரிப்பரும் - நீக்கற்கரிய- இந்திரியங்களே - ஞானேந்தியகன்மேந்திரியங்களே - இதராத்தியாசம் - இதராத்தியாசமும் - கரணம்-அந்தக்கரணங்களே - இதரேதராத்தியாசம்-இதரேதராத்தியாசமும் - தரிப்பரிய- நிலையில்லாத - மூலவகங்காரம்-மூலவகங்காரமாகிய - அதுதானே- அதுவே - சத்தியாத்தியாசம் - சத்தியாத்தியாசமும் - ஆகுமென- ஆமென்று-சாற்றுவர்தக்கவரோ-சத்துக்கள்சொல்லுவார்கள்-எ-று. தான்-ஏ-அசை.

பஞ்ச-அங்கம்-பஞ்சாங்கமெனவந்ததுபோல, மித்திய அத்தியாசம்-மித்தியாத்தியாசமெனவும், இதர-அத்தியாசம்-இதராத்தியாசமெனவும், சத்திய-அத்தியாசம் - சத்தியாத்தியாசமெனவும்- தீர்க்கசந்தியும்-தேவ- இந்திரன்- தேவேந்திரனென்பதுபோல, இதர-இதரமென்பது- நிலைமொழியீற்று-அகரமும் - வருமொழிமுதலின் - இகரமுங்கெட்டு-ஏகாரந்தோன்றி- இதரேதரமெனக்குணசந்தியுமாய்வந்தது. முறையே யென்றமையிற்சரிப்பு தூலதேகத்திற்குங் காண்டலிந்திரியங்களுக்கும் - நினைத்தலந்தக் கரணங்களுக்கும்- அறிதல் மூலவகங்காரத் திற்குமெனக்கொள்க, கூடத்தனது சந்நிதியை யடுத்திருத்தலா லகங்காரமுதலிய நான்கிற்குமித்தொழில்களுண்டாயினவென்க, எனவே, யிவைகட்கோரறிவுதனியேயின்றென்பதுபெற்றாம்.

(பதசாரம்.)

நித்தியமானவாத்மாவநித்தியமானதேகசம்பந்தமாய்அதன் சரித்தலாதியின் றொழிலைத் தனதாகப்பாவித்தலின்மித்தியாத்தியாசமெனவும்—தனக்கு வேறானவித்திரியங்களின் றொழிலைத்தனதாகக்காண்டலி னிதராத்தியாசமெனவும் — மனமாதியயானெனதெனச் சங்கற்பிக்குஞ் சங்கற்பத்தைத் தனதாகப்பாவித்தலி னிதரேதராத்தியாசமெனவும்—தானெல்லாத்தைத்தானாகக்கருதுமகங்காரத்தைத்தானாகவறிதலின் சத்தியாத்தியாசமெனவுங்கூறினர்.

(இதனது தாற்பரியம்.)

அத்தியாசோபாதியி னுண்டான நான்கத்தியாசத்தி னிலக்க ணமுணர்த்துகின்றது. (௬௯)

(அவதாரிகை)

இச்செய்யுளி னகங்காராத்மாவிற்குள்ளவேனைய நான்கின்மூன்றத்தியாசங்களி னிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

ஆங்காரான்மாவிற்குநானெனலாற்கயிற்றி ..................*
னரவமெனநிருபாதிகாத்தியாசந்தா ..................*
ஞங்காரவியலான்மாவிற்குநான்கருத்தா ..................*
வாமெனலாற்சிவப்புவலம்போற்சோபாதிகமா ..................*
மீங்காகுங்கரணதருமான்மாவிற்கிச்சா ..................*
மியநானென்றிருத்தலினலைபுனலிற்புக்க ..................*
வீர்ங்கதிரின்விம்பமெனத்தத்தருமாத்தியாச ..................*
மெனவுரைப்பர்நான்குடும்பவானெனநிற்கையினால் ...*

(இதனது பதப்பொருள்.)

ஆங்காரான்மாவிற்கு - அகங்காராத்மாவிற்கு- நானெனலால்- அகமென்பதனால் - கயிற்றினரவமென - ரச்சுசர்ப்பம்போல- நிருபாதிகாத்தியாசம் - நிருபாதிகாத்தியாசமாம்- ஆங்காரவியலான்மாவிற்கு - அகங்காரதருமாத்மாவிற்கே - நான் கருத்தாவாமெனலால் - அகங்கருத்தாவென்பதனால் - சிவப்புவலம்போல் - படிகத்திற்பற்றிய சிவப்புப்போல-சோபாதிகமாம் - சோபாதிகாத்தியாசமாகும் - ஈங்காகும்-இவண்வந்த - கரணதருமான்மாவிற்கு - அந்தக்கரண தருமாத்மாவிற்கே - இச்சாமியநானென் றிருத்தலினால் - இச்சாமியமகமென்பதனால் - அலைபுனலில்-தரங்கசலத்தில் - புக்க- பிரதிபலித்த . ஈர்ங்கதிரின்விம்பமென - குளிர்ச்சிபொருந்திய சந்திரவிம்பம்போல - தத்தரு மாத்தியாசமென - தத்தருமாத்தியாசமென - உரைப்பர்- சத்துக்கள்சொல்லுவார்கள்- நான்குடும்பவானெனநிற்கையினால் - அகங்குடும்ப வானென்றதனால் —எ—று. (௬௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மூற்கூறுதவோரத்தியாசத்தினிலக்கணமுமைந்தவத்தையினுமமுமுணர்த்துகின்றது.

(கலி.)

மைந்தர்முதலாயினருடனான்மாவிற்கு ... *
மண்ணுலகிற்பஃறியத்தர்விவகாரமெனவே ... *
யந்தமுறுஞ்சம்பந்தமாத்திராத்தியாச ... *
மாமென்பரிவ்வத்தியாசங்கடம்மா ... *
னந்துநிர்விகாரியான்மாவென்றல்பெற்று ... *
நவிறருமைந்தவத்தையுளவவையாவையென்னிற் ... *
றொந்தமுறுநனவொடுசொப்பனஞ்சுழுத்திதுரியந் ... *
துரியாதீதந்தானுமவற்றியல்புமொழிவாம் ... *

(இதனதுபதப்பொருள்.)

மைந்தர்முதலாயினருடனான்மாவிற்கு - புத்திரகளத்திராதி
சம்பந்தாத்மாவிற்கு - மண்ணுலகில்-பூமியின்கண்-பஃறிய
த்தர் - ஓடத்திருந்தவர்-விவகாரமெனவே -விவகாரத்தைப்
போலவே-அந்தமுறும் - அழகுள்ள -சம்பந்தமாத்திராத்தி
யாசம்-சம்பந்தமாத்திராத்தியாசம்- ஆமென்பர் - ஆமென
வறிஞர்சொல்லுவார்கள் -இவ்வத்தியாசங்கடம்மால்-இவ்வெ
ட்டத்தியாசங்களினால் - நந்து-ஆக்கமுள்ள- நிர்விகாரியான்
மாவென்றல்- ஆத்மா நிருவிகாரியென்பது - பெற்றும்-பெ
றப்படும்-நவிறரும் -சொல்லாநின்ற-ஐந்தவத்தையுள-பஞ்
சாவத்தையுள்ளன -அவை-அவ்வவத்தைகள்-யாவையென்னி
ல-எவையென்றால்- தொந்தமுறு-ஒன்றற்கொன்றுசம்பந்த
முள்ள- நனவொடு-சாக்கிரத்துடன்-சொப்பனம்-கனவும்-
சுழுத்தி-சுழுத்தியும்-துரியம்-துரியமும்-துரியாதீதம் - து
ரியாதீதமும் ஆம்-ஆகும்-அவற்றியல்பு - அவைகளின்றன்
மையை-மொழிவாம்-மேற்கூறுவாம்—ஏ-று-தான்-அசை.

(பதசாரம்-)

ரச்சுசர்ப்பம்போல-கூடஸ்தசாயைதங்கிய வகங்காராத்மா
வானது முன்னுள்ள கூடஸ்தனையும்-பின்னுள்ளதிரிகுணாத்ம
கத்தையுநோக்குமுபாதியின்றித் தன்னைநானெனநோக்குத
லினிருபாதிகாத்தியாசமெனவும்—மாணிக்கச்சாயைபற்றிய
படிகமதனைத்தன்னிறமாகக்காண்பதுபோலத் தனதுவடிவ
ங் கூடஸ்தச்சாயையெனவறியாது முற்கூறியதிரிகுணாத்மக
த்தைநோக்கியவுன்முகத்தைக்கொண்டு தானேகருத்தாவெ
னமதித்தலிற்சோபாதிகாத்தியாசமெனவும்— சலப்பிரதிவி
ம்பத்தைச்சூரியனென்பதுபோல-வந்தக்கரணசம்பந்தத்தி

னுமுண்டானவதன்தருமந்தன்தருமமாகக்காண்டலின் -தத்தருமாத்தியாசமெனவும்— ஒடத்தர்சம்பந்தம்போலப் புத்திராதி விடயங்களினேகதேச சம்பந்தமாத்திரத்தினனேகுடும்பியென நிற்றலிற் சம்பந்தமாத்திராத்தியாச மெனவுங் கூறினர்.

வினா.-அற்றேல்-இங்ஙனங்கூறியவகங்காரான்மாயாதெனின்,

விடை-மேற்கூறுதலாற்காண்க. ஆன்ம சந்நிதியிலகங்காரான்மா, அகங்காரவியலான்மா,காரணதருமான்மா, அகங்குடும்பான்மா, வாகியநான்குமாம். காரணதருமான்மாவென்றலினீற்றிலுள்ளவான்மாவை யித்திரியதருமான்மாவெனக்கொள்க, எனவே, கன்மேந்திரியங்களை யங்ஙனந்தூலதேகமென்றலினிவற்றின் முன்னையவிரண்டுந்தருமியெனவும், பின்னையவிரண்டுந் தருமமெனவுமாம். இவ்வத்தியாசங்கடன துசந்நிதிசத்தையினுற்றோற்றினுந்தானதிற் சம்பந்தமின்றியிருத்தலின்,ஆத்மாநிருவிகாரியெனலாம். அவற்றின்சம்பந்தங்களைத் தானறிந்துகொண்டிருத்தலிற் சமுசாரமாத்மாவிற்கென்னினுமமையும்.

(இவ்விரண்டுகவியினதாற்பரியம்.)

கூடஸ்தனதிச்சாயெத்தனமின்றியவனதுசந்நிதியினியல்பாக நான்கத்தியாசமும், அகங்காரசம்பந்தமாக நான்கத்தியாசமுமாகியவிவ்வெண்வகையத்தியாசங்களுமவாந்தரமாயுண்டானதுபோலத்தோற்றினவென்பதாம். (௬௩)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வைந்தவத்தையுட்சாக்கிராவத்தையினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

பெருந்தூலவைம்பூதமீரைந்திந்திரியம் ...................... *
பிராணபஞ்சகமொடுநாற்கரணமிவையுருவா...... ... *
மருந்தூலசரீரத்திற்சாத்துவிதகுணமோ ................. *
டகாரவெழுத்தரிதெய்வம்விழியிடமேயாக ............. *
விருந்தாகவிதயமலரட்டதளகத்துயில் ......................... *
விசுவசீவனும்விராட்டிறையுமொருங்கடைந்து ........ *
வருந்தாவிலவிடயங்கள்கரணமனைத்தானு ............... *
மருவிநுகர்ந்திடுதல்சாக்கிரமதாமன்றே ................... *

(இதனதுபதப்பொருள்.

பெருந்தூலவைம்பூதம்- தூலபஞ்சபூதமும்- ஞானேந்திந்திரியம்- தச்சேந்திரியங்களும்- பிராணபஞ்சகமொடு- பஞ்சப்பிராணனுடன்- நாற்கரணம்- நான்குகரணமுமான- இவை- இவ்விருபத்துநான்குதத்துவங்களும்- உருவாம்- வடிவமான- அருந்தூலசரீரத்தில் - அரிதானதூலதேகத்தில் - சாத்துவிதகுணமோடு- சத்துவகுணத்துடன் - அகாரவெழுத்து- அகராக்ஷரமும் - அரிதெய்வம்- விஷ்ணுதெய்வமும்- விழியிடமேயாக - நேத்திரமேஸ்தானமாக - விருந்தாக- புதுமையான- இதயமலர் - இருதய கமலத்தினுள்ள - அட்டதளகதியில்- எட்டிதழ்கமலில் - விசுவசீவனும்- விசுவ ரூபமானசீவனும்-விராட்டினையும் - விராட்டுருவமான விசனும் - ஒருங்கடைந்து- கூடிநின்று-வருந்தா- இன்பமாக- இல்- வனிதாதி- விடயங்கள்- விஷயங்களை - கரணமனைத்தானும் - கரணங்களனைத்தினாலும்-மருவிநுகர்ந்திடுதல்- கூடியனுபவித்தலே- சாக்கிரமதாம் - சாக்கிராவத்தையாம்-ஏ-று- அன்றே-அசை.

கதி - இடம்-கரணமனைத்தானு மென்றதமையின், அந்தக்கரணம்பிராண பஞ்சகத்தோடுங்கூடி ஞானேந்திரியங்களினின் றுங்கன்மேந்திரியங்களால் விடயங்களை யநுபவித்தல் - விழியிடமென்ற ததனுள்ளிருக்கும் பாவைவடிவான ரூபமெனக்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

முற்கூறியசான்றாகிய ஜீவாத்மா தூலசரீரத்தி னுள்ளவிருதயகமலத்தில்-விசுவதாமத்தோடும்விராட்டுடன்கூடியிருந்து நேத்திரஸ்தான முன்னிலையிற் சகலவிடயாநுபவங்களை யிந்திரியங்களாற் பொசிப்பது சாக்கிராவத்தை யென்பதாம்.()

(அவதாரிகை.)

இச்செய்புளின் முன்னிறுத்தமுறையான்சொப்பனுவத்தையினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

பஞ்சபூதமுஞ்சித்தபுத்தியினின்றெழுந்த ..............*
பதினேழின்மயமாஞ்சூக்குமதனுவினின்று ..........*
விஞ்சுரசோகுணமுகரவெழுத்ததிதெய்வந்தான் ... .....*
விரிஞ்சனிடங்களமாகநல்லிதயமென்னும் ..... ......... ...*

கஞ்சமலர்க்கன்னிகா கதியிற்றைசதனுங் ................*
கனககர்ப்பனுமருவி நனவின்வாதனையை ..........*
நெஞ்சமெனுங்கரணத்தாலனுபவிக்கைதானே..........*
நிகழ்ந்திடுஞ்சொப்பனமென்று நிகழ்த்துவர்மூதறிஞர்*

(இதனதுபதப்பொருள்.)

பஞ்சபூதமும் - ஐந்துபூதமும் - சித்தபுத்தியினின்று - சித்தமும்புத்தியுமாகிய விவ்வேழினின்றும் - ஒழிந்த- நீங்கிய- பதினேழின்மயமாம் - பதினேழின்வடிவமான - சூக்குமதனுவினின்றும்- சூட்சுமதேகத்தி லிருந்தும்- விஞ்சு- மேலிட்டிருக்கின்ற- ரஜோகுணம்- ராசதகுணமும்- உகரவெழுத்து-உகராக்ஷரமும் - அதிதெய்வம் - அதிதெய்வமானது-விரிஞ்சன்-பிரமனும் - இடங்களாக- தானங்கண்டமாக - நல்லிதயமென்னும் - நல்லிதய மென்கின்ற - கஞ்சமலர்க்கன்னிகாகதியில்- தாமரைப்பூப் பொகுட்டில்-தைசதனும்-தைஜசனும்-கனககர்ப்பனும்- இரணிய கருப்பனும்- மருவி-கூடி-நனவின்வாதனையை-சாக்கிரவாசனையை- நெஞ்சமெனும்- மனமென்னும்- கரணத்தால்- அந்தக்கரணத்தால்- அனுபவிக்கைதானே- அனுபவிப்பதே- நிகழ்ந்திடும்- விளங்காநின்ற-சொப்பனமென்று- சொப்பனவத்தையென - நிகழ்த்துவர் மூதறிஞர்- முதிர்ந்தவறிவுடையோர் சொல்லுவார்கள்—ஏ—து-தான்-அசை.

நின்றொழிந்த பதினேழெண்பது - மனமுமகங்காரமும் பிராணபஞ்சகமுந் தசேந்திரியமு மெனவும்-
இடங்களமென்றது-அதனுள்ளிருக்குமனமெனவுங்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

மூற்கூறியசான்றாகிய வத்தராத்மா சூட்சும தேகத்தினுள்ள விருதயகமலப்பொகுட்டிற் றைசதனுயிரணிய கருப்பனோடுங்கூடிகண்டஸ்தான மூன்னிலையில் வாசனாவிடயங் களோமனதினாற்புசிப்பது சொப்பனவத்தை யென்பதாம். (கூ௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முன் னிறுத்தமுறையாற் சுழுத்தியவத்தையி னிலக்கண முணர்த்துகின்றது,

(கவி,)

மெய்ந்துதிரிபார்ப்படக்கியுறங்களகுபோல...... ......*
விரிந்தகாரியங்களையுட்கொண்டுவாதனையோ... ... ...*
டாய்ந்தவான்மாசிரயத்தவத்தையறவிருக்கு ........ ........*
மரும்பகுதிமயமாங்காரணவுடம்பிற்றமமே .........*
யேய்ந்தகுணமகரவெழுத்தரன்றெய்வமிதய ...............*
மிடமாந்தக்கமலமலர்ப்பொகுட்டுநடுக்கதியி ...........*
லோர்ந்தபிராஞ்ஞனும்பரனுமாய்ப்பிரமாநந்த........ ...*
முறுமாயாவிருத்தியெனுநுண்கரணந்தன்னால் ........*

(இதனதுபதப்பொருள்.)

மெய்த்துதிரி பார்ப்படக்கி - மெய்ந்து திரியாநின்றகுஞ்சுகளைச்சிறையிலடக்கி - உறங்கு - நித்திரைசெய்கின்ற - அளகுபோல - பெண்பட்சியைப்போல - விரிந்தகாரியங்களை - சமஸ்த காரியங்களையும் - உட்கொண்டு- அடக்கிக்கொண்டு- வாதனையோடு - அச்சாக்கிராதி வாசனையுடன்- ஆய்ந்தவான்மா - நுண்மையானவாத்மாவினது - ஆசிரயத்து- அனுசாரத்தில் - அவத்தையற - ஈரவத்தைகளுநீங்க - இருக்கும்-இருக்கின்ற - அரும் - அரிய - பகுதிமயமாம் -அவித்தியாரூபமாகிய - காரணவுடம்பில்-காரணதேகத்தில் - தமமேயேய்ந்தகுணம் - பொருந்திய தமோகுணமும் - மகரவெழுத்து - மகராக்ஷரமும் - அரன்றெய்வம் - உருத்திரதேவதையும்-இதயமிடமாம் - இருதயஸ்தானமாக- தக்கமலமலர் - அத்தாமரைப்பூவினது - பொகுட்டுநடுக்கதியில்-கன்னிகாமத்தியத்தானத்தில்-ஓர்ந்த-ஓர்ந்துள்ள-பிராஞ்ஞனும்-பிராஞ்ஞனும்-பரனுமாய்-அந்தரியாமியுஞ்சேர்ந்து- பிரமாநந்தம்-பிரமாநந்தவிஷயத்தை- மாயாவிருத்தியெனும்-மாயாசம்பந்தமானவிருத்தியென்கின்ற-நுண்கரணந்தன்னால்- சூட்சுமவிருத்தியினால் -உறும்-அனுபவிக்கும்— எ — று-ஏ-அசை.

மெய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங்களமென்றமையின் -அளகு,பெண்கோழியாயிற்று - அவத்தையெனப்பொதுவாகக்கூறினமையினீரவத்தையெனவுங்காரணதேகத்தைச்சுட்டிவருதலிற்பகுதியையவித்தையெனவுங்கூறினும், இதயமிடமென்றது-அதனுள்ளிருக்குநுண்கரணமெனக்கொள்க,மாயாவிருத்தியெனுநுண்கரணமென்றதவித்தையான் மறைபட்டு மெலிந்துநின்றவித்தை,எனவே,சுழுத்தியினவித்தையி

னாலுங் கனவின்மனத்தினாலும் நனவிற்கரணங்களினாலும் புசித்தலாம் - பிரமாநந்தமென்றது, அவித்தைகளனைத்து மிறந்தவற்றால் வாராநின்ற துன்பங்கணீங்கின விடத்துள்ள சுகம்.

(இதனுதாற்பரியம்.)

முற்கூறியசான்றாகிய பரமாத்மா, காரணதேகத்தினுள்ளபி ராஞ்ஞனாயவ்வியாகிருதமென்னும்பாமேனோடுங்கூடி யிதயக மலப்பொருட்டுமத்தியி லிதயமுன்னிலையிற் பிராஜ்ஞவிருத் தியினாலானந்தமனுபவிப்பதே சுழுத்தியவத்தையென்ப தாம். (௬௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்த மூன்றையாற்றுரியந்துரியாதீதமான விரண்டினிலக்கணமு மிவ்வைந்தவத்தைகளை யெழுவகைப் பிறப்பிலிவரிவரிதுவிது வின்னவின்னவுடைய வெனக்கூறு வான்றொடங்கித் தாபரமொன்றுஞ் சுழுத்தியவத்தையைய டைந்திருக்குமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

அனுபவித்தல்சுழுத்தியாமிந்நனவாதிகண்மூ ..........*
வவத்தையொடுமுத்தருமமுப்புரமூத்தானம் ..........*
பினுமுத்தெய்வங்களெனும்பரியாயநாமம் ..........*
பெறுமுணர்த்தசாக்கிரத்தேதத்கமலமழிந்து ..........*
மனவழக்கந்தவிர்ந்துபரந்தனைச்சிந்தித்திடலே ..........*
வருதுரியமப்பரமான்மாவின்மனமடங்கன் ..........*
முனமுணர்த்தல்செய்துரியாதீதமெனப்புகல்வர் ..........*
மொழிந்தவற்றட்டாவரங்கள்பெறுதலிருட்சுழுத்தி ...*

(இதனதுபதப்பொருள்.)

அனுபவித்தல் - முற்கூறியபரமா நந்தத்தையனுபவிப்ப தே - சுழுத்தியாம் - சுழுத்தியவத்தையாம் - இந்நனவாதிக ள் - இச்சாக்கிராதிகளானவை-மூவவத்தையொடு - மூன்றவ த்தையுடன் - முத்தருமம் - மூன்றுதர்மமும் - முப்புரம்- மூன்றுதேகமும் - மூத்தானம் - மூன்றிடமும்- பினும்-பி ன்னும் - முத்தெய்வங்களெனும் - மூன்றுதெய்வங்களுமெ ன்கின்ற - பரியாயநாமம்-பரியாயநாமங்களை - பெறும்-அ

ணையும் - உரைத்த - மூற்கூறிய - சாக்கிரத்து - சாக்கிராவத்தையில் - தத்கமலமழிந்து - மூற்கூறுங்கமலநீங்கி - மனவழக்கந்தவிர்ந்து - மம்ருவிருத்துநீங்கி - பரந்தனை - பிரமத்தை - சிந்தித்திடலே - சிந்திப்பதே - வருதுரியம் - வராநின்ற துரியாவத்தையும் - அப்பரமான்மாவில் - அப்பரமாத்மாவினிடத்தில் - மனமடங்கல் - மனங்களாவதே - முனைமுறைத்தல்செய் - முற்கூறிய - துரியாதீத மெனப்புகல்வர் - துரியாதீதமென்று சத்துக்க ளுரைப்பார்கள் - மொழிந்தவற்றுள் - முற்கூறியவைந் தவத்தைகளுள் - தாவரங்கள் பெறுதல் - விருட்சங்களடைவது - இருட்சுழுத்தி - அந்தகாரமாகிய சுழுத்தியொன்றே — எ — று - ஏ - அசை.

துரியனில் - சீவேசுரனையும் - அதிதத்திற் கூடஸ்தப்பிரமத்தையுங்கொள்க.

எற்றினுக்கென்றால் - நனவில், விசுவ விராட்டையுங் கனவில், தைசத விரணியகருப்பனையுஞ் சுழுத்தியிற் பிராஞ்ஞனையும்பரனையுங் கூட்டினதாலென்க.

(பதசாரம்.)

சாக்கிராதிமூன்றை மூன்றவத்தையெனவும் — அவை மூன்றுதன்மையாயிருத்தலின் முத்தருமமெனவும் — மூன்றுதேகமாயிருத்தலின் முப்புரமெனவும் — இருதயங்கண்டம் நேத்திரமென மூன்றிடமாயிருத்தலின் முத்தானமெனவும் — மும்மூர்த்திகளா யிருத்தலின் முத்தெய்வங்களெனவும் — இங்ஙனங்கூறியகேவலசுழுத்தியாதிய மூன்றுமுதலியயாவுநீங்கினவிடந் தத்கமலமழிந்து மனவழக்கந் தவிர்ந்தெனவுங்கூறினர்.

தத்கமலமழிந்தென்றது கேவலசுழுத்தி நிகழுமிதயத்தை நீங்கியசுழுத்தியினனவாகியாவினிடத்து நிகழுதலே.

(இதன்றாற்பரியம்.)

முற்கூறியசான்றாகிய ஞானாத்மா, அவத்தாத்திரயவிவகாரமியாவுமின்றிவிலட்சணமானவிடத்துள்ள சீவசைதன்னியரு யப்பிரதியேகாத்மனைக்கூடிச் சாக்கிரசுழுத்தியென்னுஞ்சமாதியிற்சின்மாத்திரமா யனுபவிப்பதே துரியாவத்தையெனவும், சான்றாகிய ஆநந்தாத்மா, இவ்வறியுந்தன்மையனைத்து நீங்கினவிடத்துள்ள கூடஸ்தனாய்ப் பரமாநந்தத்தைக் கூடியாவுந்தன்மயமாகச் சகசத்திலனுபவிப்பதே துரியாதீதாவத்தையெனவும் விளக்கியதாம். (௧௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறையாற்றேவர்முதலியவனு வரடையுமவத்தைகளிதுவெனவுணர்த்துகின்றது.

(கலி.)

விலங்குமுதலனபெறுவசுழுத்தியொடுகனவாம்...... ...... *
விண்ணவர்க்குநனவுநரர்க்கம்மூன்றுமாகுங் ....... *
கலங்கலறுமருளர்க்குத்துரியம்வரயோகி... ... ......... ... *
கட்குவருவதுதுரியாதீதமுதன்மூன்று .... ... .......... *
மலங்கலுறுமனிதர்க்குத்தமிற்றமேதோன்றி .... ..... .. .. *
வருபந்தமாமேனையிரண்டுமியோகத்தா ... ... .. .... *
லிலங்குமுத்திசாதனமாமவைகளிலொன்றினிலொன்...... *
றிலாமையினாற்காலதேசங்கணியமம்பொய்...... ... ... *

(இதனதுபதப்பொருள்,)

விலங்குமுதலன - மிருகமாதியானவைகள்-பெறுவ-அடைவன-சுழுத்தியொடு - சுழுத்தியவத்தையுடன்-கனவாம்-சொப்பனாவத்தையுமாகிய விரண்டாம் - விண்ணவர்க்கு- வானவர்க்கு-நனவு- சாக்கிரமொன்றேயாம்- நரர்க்கு- மனிதர்களுக்கு-அம்மூன்றுமாம் - அச்சாக்கிராதி மூன்றவத்தையுமாம்-கலங்கலறு-கலக்கமற்ற- மருளர்க்கு-உன்மத்தருக்கு- துரியம்-துரியாவத்தை யொன்றுமேயாம் - வரயோகிகட்கு-மேன்மையானயோகிகளுக்கு - வருவது-உண்டாவது- துரியாதீதம்-துரியாதீத மொன்றுமேயாம்- முதன்மூன்றும்-சாக்கிராதிமூன்றவத்தைகளும் - மலங்கலுறும் - சஞ்சலமுடைய-மனிதர்க்கு-மானிடருக்கு-தமிற்றமே- தனக்குத்தானே-தோன்றி-உதித்து - வருபந்தமாம் - வருகின்றசமுசாரமாம் -ஏனையவிரண்டும் - மற்றையவிரண்டும்- யோகத்தால் - யோகாப்பியாசபலத்தால் - இலங்கு-விளங்காநின்ற - முத்திசாதனமாம்-மோக்ஷசாதனங்களாம்- அவைகளில்- அவ்வவத்தைகளில்-ஒன்றினிலொன்று- ஒரவத்தையிலோரவத்தை- இலாமையால் - இல்லாமையானும்- காலதேசம் - காலதேசங்ளின்-நியமம்- நியமத்திற்றேன்றுமை யானும்-பொய்- மித்தையேயாம்—எ—று.

விலங்குமுதலென்றமையின் பறவையும், ஊர்வனவும், சலசெந்துக் களையுங்கொள்க, மருளரென்றது, ஒருதெய்வ வசப்பட்டவன்-எனவே- அறிவின்வசப் பட்டதுவாய்நின்ற

துரியனுயிர்த்து. - - - - *

(பதசாரம்)

முற்கூறிய பஞ்சாவத்தைகளுள் பரிசவறிவொன்றையுடையதாவர வுயிர்கட்கு மற்றொன்றுந் தோன்றா திருத்தலினவைகட்குச் சுழுத்தியொன்றே யெனவும்—பரிசமிரதமிரண்டறிவையுடைய நீரில்வாழும் நத்து முதலிய வுயிர்கட்கும், பரிசமிரசங் கந்தமுமாகிய மூன்றறிவையுடைய செல்லுமுதலிய வூர்வனவுயிர்கட்கும், பரிச மிரசங் கந்தமுருவமுமாகிய விந்நான்கறிவையுடைய வண்டாதி வுயிர்கட்கும், சத்தமாதி யைந்தறிவுமுடைய நடப்பன பறப்பனவாகிய பசுபக்ஷி முதலியவுயிர்கட்கும், கனவைப்போலத் தோற்றிய நினைவு சுழுத்தியைப் போல மறைதலினிந்நான்கு வகுப்பிற்குஞ் சொப்பனஞ் சுழுத்தியிரண்டே யெனவும்— ஐந்தறிவையுடைய தேவர்கட்குத் தோற்றிய நினைவுமறையா திருத்தலினவர்கட்கு நனவொன்றேயெனவும்— இவ்வைந் தறிவுமுடைய மானிடவுயிர்கட்குத் தோற்றிய நினைவு, ஒருகாற்றெரிவாயிருத்தலின் நனவும், ஒருகாற் றோற்றியுந் தோன்றா திருத்தலிற் கனவும், ஒருகாற்றோன்றுந் தோன்றா திருத்தலிற் சுழுத்தியுமாகியவிம் மூன்றேயெனவும்— மருளர்க்கு, ஆசானனுக்கிரகம்பெற்றுத்தம விசாரணையினுதயமானவறிவு சொப்பிரகாசமாய் விளங்கலிற் றுரியமொன்றேயெனவும்—வரயோகிகட்கு, அங்ஙனந் தோன்றியவறிவாநந்தமா யதீதப்பட்டிருத்தலிற் றுரியாதீதமொன்றேயெனவும்— முன்மூன்றவத்தையுமான்மாவை மறைக்குமெனவும்—மேலிரண்டவத்தையு மாத்மாவைவெளிப்படுத்துமெனவுங்கொள்க.

வினா - இங்ஙனமாயின், தேவர் முதலிய வறுவகையாருநிற்க மனிதரொருவர்க்கே யிம்மூன் றவத்தை வந்தகாரணமென்னையெனின்,

விடை - தேவர்களுக்குச்சாக்கிராவத்தையினினைவன் றிமறைப்பின்மையினனுமேனைய வைந்திற்குமறைப்பன் றிநினைவின்மையினனுமானிடர்க் கவ்விரண்டுமிருத்தலினனுமிவ்விரண்டு நீங்கினவிட முத்தியடைதற் காதாரமாதலினுமதற்காகவிச்சரீரம் வந்ததெனலென்க.

வினா - அற்றேல், முப்பத்தாறு தத்துவங்களோடுங் கூடிவிவகரிப்பது சாக்கிரமெனவும், இவற்றில்— அஸ்தி முதற்பதிமூன்றுநிற்க, ஏனையவிருபத்தைந்து தத்துவங்களோ

மும் விவகரிப்பது சொப்பனமெனவும், இவற்றில் — மன முதலிய விருபதுநிற்க, ஏனையவைந்து தத்துவங்களோடும் விவகரிப்பது சுழுத்தியெனவும், இவற்றில், வித்தையவித் தையிரண்டுநிற்க, ஏனையமூன்று தத்துவங்களோடும்விவகரி ப்பதுதுரியமெனவும், இவற்றில் ஜீவனீச னிரண்டுநிற்க,எ னைபிரமமொன்றும் விவகரிப்பது, துரியாதீதமெனவும், இவ்வைந்தவத்தையு மானிடவுயிர்கட்குச் சமுதாயத்தினித்தி யப்பிரளயமானது, ஆயிலினும் விழிப்பினும் நியதிப்படி யேனையசுருதியுத்தி யனுபவமிருக்கச்சுரோத்திரியனுக் கிர ண்டும்- விராத்திரியனுக்கு மூன்றுமெனக் கூறியதென்னை யெனின்,

விடை - மானிடவுயிர்கட் கிவ்வைந்தவத்தையுள்வாயினும்வி ராத்திரியனறியாமையின் மூன்றவத்தையிற்சஞ்சரிக்குமி டத்தவ்விரண்டுமிவற்றினடங்கிநிற்றலி னிவர்கட்கம்மூன் றேயெனவும், சுரோத்திரியனறிவினாலிவ்விரண்டினுஞ் சஞ் சரிக்குமிடத் தம்மூன்று மிவற்றிலடங்கிப் போதலி னிவர்க ட்கிரண்டேயெனவுங்கூறினதென்க.

(இதனதுதாற்பரியம்.)

இவ்வைந்தவத்தையை நீக்குநிமித்தமிவைகளி னிலக்கணமு மிவற்றையடைந்தவர்களிலக்கணமுமுணர்த்தியதாம் (௯அ)

(அவதாரிகை.)

இச்செய்யுளி னிவ்வைந்தவத்தைகளி னிடையின்றிப் பூரண மா யிருத்தலொன்றுமே பிரமமெனவும், நனவு கனவைப் போலச் சுழுத்தியின்க ணறிவுவிளங்க விலலையென்றவி னாவிற்குத்தரமு முணர்த்துகின்றது.

(கவி.)

சொற்றவவத்தைகளிலனுகுதனுயறியுந் ......................*
துரியனேயுளனனவு கனவிலறிவுண்மை ... ..............*
பெற்றனமச்சுழுத்தியினிற்பெறலுணாப்பினெழுந்து ...*
பிறிதொன்றுமறியாதுசுகத்துறங்கினேனென்ன் ..........*
றற்றவிருதினைவுமனுபவஞ்சுழுத்தியதனி ...................*
லுருதுவராவெனுமருத்தாபத்தியினற்பொருள்கண் .. *
முற்றுமடக்கிருள்விழிகாண்குதலெனக்காரியங்கண் ......*
முழுதையுமூட்டிகொண்டம்பாவித்தையிருளினையும் ...*

(இதனதுபதப்பொருள்.)

சொற்ற-முற்கூறிய-அவத்தைகளின்-பஞ்சாவத்தைகளின்-அனுசூதனாய் - நீங்காமற்பூரணனாயிருந்து - அறியும்-சர்வசாக்ஷியாயறிகின்ற - துரியனேயுளான் - கூடஸ்தனேயுள்ளவன்-நனவு- சாக்கிரத்திலும் - கனவில்-சொப்பனத்திலும் - அறிவு- அறிவுண்டென்பது- உண்மைபெற்றனம்- உண்மையாகத்தெரிந்தனம் - அச்சுழுத்தியினில் - அச்சுழுத்தியவத்தையில்- பெறலுணாட்பின் - அவ்வறிவுண்டெனச்சொல்லுவ(தியாதிலெனின்) எழுந்து - நித்திரையினின் றெழுந்தவிடத்தில-பிறிதொன்றும்- மற்றொன்றையும். அறியாது-அறியாமலும்-சுகத்து - சுகமாக-உறங்கினேனென்று- நித்திரைசெய்தேனெனவும்- உற்ற-உண்டான- இருநினைவும்-இரண்டு நினைப்புமுண்டென்பது - அனுபவம் - அனுபவமாதலினாலும்-சுழுத்தியதனில்-சுழுத்தியில்-உறுது - இல்லாதது-வராவெனும் - நனவில்வாராவென்கின்ற - அருத்தாபத்தியினால் - அருத்தாபத்திப்பிரமாணத்தினாலும் - பொருள்களனைத்தும்-வஸ்துக்களனைத்தையும்-அடக்கும் - அடக்கியிருக்கின்ற-இருள்- அந்தகாரத்தை - விழிகாண்குதலென - கண்பார்ப்பதுபோல- காரியங்கள் முழுதையும்- மாயாகாரியங்களனைத்தையும்- உட்கொண்ட- அடக்கியிருக்கின்ற-பேரவித்தை-பேரவித்தையாகிய- இருளினையும்- அந்தகாரத்தையும்—எ—று.

துரியனேயுளனென்ற,தேற்றேகாரமற்றொன்றுமில்லையேயில்லையெனவிளக்குகின்றது-அனுசூதம்,நீங்காமையெனவே,யொன்றையும்விட்டுநீங்காமற்பரிபூரணனாயிருத்தல். (௯௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசுழுத்தியின்மனோவிருத்திசகாயமின்றிச் சுகானுபவந்தோன்றலினங்ஙனமறிவுளதென்பதற்கையமின்றெனவுணர்த்துகின்றது.

(கவி.)

அந்தவவித்தையினதருக்குமவிருத்திதன்னி............*
லலையுமாத்திலையிடையின்வெண்ணிலாத்துளிபோல்...*
வந்திலங்கியுடங்குநிசாநந்தக்கூற்றினையும் ......... .........*
வருகரணாந்தராபேட்சையின்றியேயான்மா,...........*

முந்துரைசெய்சுழுத்தியினி லனுபவிக்கையாலே... ...... *
மொழிந்ததனிலறிவுளதா மேதுமறியாமை ......... ... *
நந்துசுகத் துறங்கினேனெனற்கேதுவிடய................ *
ஞானமிலாமையுங்குடும்பநிவிர்த்தியுமா முறையே ... *

(இதனதுபதப்பொருள்.)

அந்த - முற்கூறிய - அவித்தையினது - அவித்தையினுடைய - சூக்குமவிருத்திதன்னில் - சூட்சுமவிருத்தியில் - அலையும் - காற்றினலசைப்பட்ட - மரத்து - மரங்களினது - இலையிடையின் - பத்திரங்களினிடையிற்றோன்றும் - வெள்ளொளிதான - நிலாத்துளிபோல் - சந்திரிகாலேசங்கள்போல - வந்து - உதித்து - இலங்கி - விளங்கி - அடங்கும் - ஒடுங்குகின்ற - நிசானந்தக்கூற்றினையும் - நிசாநந்தக்கூறுபாட்டினையும் - வரு - வராநின்ற - கரணந்தர - ஓர்கரணங்களின் - அபேட்சையின்றி - சகாயம்வேண்டாமல் - ஆன்மா - ஆத்மாவானது - முந்துரைசெய் - முற்கூறிய - சுழுத்தியினில் - சுழுத்தியவத்தையில் - அனுபவிக்கையால் - அனுபவித்திருத்தலின் - மொழிந்ததனில - முற்கூறியசுழுத்தியவத்தையில் - அறிவு - அறிவுண்டென்பது - உளதாம் - உண்மையாம் - ஏதுமறியாமை - வேறொன்றுமறியாமைக்கும் - நந்து - அங்குள்ள - சுகத்துறங்கினேனெனற்கு - சுகமாய் நித்திரைசெய்தேனென்னுமிரண்டிற்கும் - ஏது - காரணமானது - முறையே - நிரலே - விடயஞானமிலாமையும் - விஷயக்காட்சியின்மையும் - குடும்பநிவர்த்தியும் - சமுசாரநிவர்த்தியும் - ஆம் - ஆகியவிரண்டுமாம் — எ — று - ஏ - ஈற்றசை.

சூக்குமவிருத்தியென்றது, சுழுத்தியவத்தையினுள்ளபிராஞ்ஞன்றொழில் - குடும்பநிவர்த்தி, துக்கரூபமாகியபந்தநீக்கம் - நிசாநந்தக் கூற்றென்பது, பிரமானந்தாமிசலேசமெனக்கொள்க, இதனைச்சமாதியின்கணவநுவமாய்விளங்குமாநந்தமென்னினுமமையும் - முறையேயென்றமையின், விடயஞான மின்மையறியாமைக்குங் குடும்பநிவர்த்திசுகத்துறங்கினேனென்பதற்குங்கொள்க. (௱)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியசுழுத்தியிற்றனக்குத்தானேதரிசனமென்கிற வுவமேயம் விளங்கவுவமானபூருவகமாகவுணர்த்துகின்றது.

(கவி.)

மன்றசுழுத்தியிலதற்குக்கரியாமாநந்த.................... *
மயவுயிருண்டெனிலொருவராகிலுமாண்டறிந்தே .... *
னென்றலிலதுகாரணமெனிலோர்பொருளை............ *
யெடுப்பநீர்மூழ்கினானாண்டுளதென்பதுமேற் ...... *
சென்றலதுபுகலவொணாததுபோலக்கருமச் ................ *
செயலினாலெழுந்து துணையாங்கரணங்கூடி ............ *
னன்றியதிலறிந்தபொருட்கூறொணாதாகு ...................... *
மாதலினாலுயிர்சச்சிதாநந்தவொளியாம் .................. *

(இதனதுபதப்பொருள்.)

மன்றசுழுத்தியில்- வாசனையுடைய சுழுத்தியவத்தையில்-அதற்கு-அவ்வவத்தைக்கு - கரியாம்-சாட்சியாகிய - ஆநந்தமய-ஆநந்தவடிவமான- உயிருண்டெனில்- கூடத்தனுண்டென்றால்- ஒருவராகிலும்- யாதொருத்தராலும் - ஆண்டு-அச்சுழுத்தியில் - அறிந்தேனென்றல் - அறிந்தேனென்பது- இலது- இல்லாதது - எதுகாரணமெனில்- யாதுகாரணமென்றால் -ஓர்பொருளை - கூபத்தில்வீழ்ந்தவோர்வஸ்துவை- எடுப்ப- எடுக்குநிமித்தம்- நீர்மூழ்கினோன்- சலத்திலமிழ்ந்தினவன்- ஆண்டு-அவ்விடத்து - உளதென்பது- இருக்கின்றதென்பதை- மேற்சென்றலது- சலத்தினின்று வெளிப்பட்டாலன்றி- புகலவொணாது -சொல்லக் கூடாததாம்- அதுபோல- அவ்வுவமைப்போல- கருமச்செயலினால் - காலகர்மசமீரணனால்- எழுந்து - சுழுத்தியினின்று வெளிப்பட்டு-துணையாங்கரணம் - சகாயமான கரணங்களோடும் - கூடினன்றி-சேர்ந்தாலல்லது- அதில்- அச்சுழுத்தியில்- அறிந்தபொருள்- அறிந்தவஸ்துவை - கூறொணாதாகும்- சொல்லக்கூடாததாம்-ஆதலினால் - ஆகையால்-உயிர்- ஆத்மாவானது-சச்சிதாநந்தவொளியாம்-சச்சிதாநந்தசுயம்பிரகாசமாம்—எ-று.

தோன்றாத் தோன்றுதெனப் பாடமோதுதலுமுள. கரணங்கூடினன்றியதி லறிந்தபொருள்கூறொணாதென்றமையின், கூடத்தனறிவுமயமாமென்பதுபெற்றாம். முற்கூறியவைந்தவத்தையினிடையினுள்ள சுழுத்தியினுமறிவுண்டெனவிளக்கியிவற்றையறிகின்ற விசுவதைசதபிராஞ்ஞ-சீவன்-ஸாக்ஷியென்றதற்கிம்முறையே யிவைகட்கதிஷ்டானமான சத்துசித்துஆனந்தம்நித்தியம்பூரணமென்னு மைந்துதன்மையுமு

டையதேயாத்மாவெனவும், இவற்றிற்கெதிர்மறையானவைந்துதன்மையுமுடையதேயனாத்மாவெனவுந் தோன்றவிளக்கினதெனக்காண்க.

வினா. அற்றேல், துரியத்தினுள்ளசிவனையுமதீதத்தினுள்ளசாக்ஷியையுமிங்ஙனங்கூறலாமோவெனின்,

விடை, சொற்றவவத்தைகளிலனுசூதனையறியுந் துரியனையுளனென்னுமிடத்து, உளனென்பது நித்தியமும் அனுசூதனென்பது பூரணமுமாகவிளங்கலினாலும் இச்சீவனுக்கு நித்தியத்துவமும் இச்சாட்சிக்குப் பூரணத்துவமுமிருத்தலினாற்றானென்க.

வினா. அற்றேல்; ஆன்மாவுக்கிவ்வைந்துதன்மையுங் கூறலாமோவெனின்.

விடை, உயிர்சச்சிதாநந்தவொளியாமெனவு மசத்தாதியைந்து நீங்கவந்தசத்தாதிநாமமேயன்றிச்சுபாவமன்றெனவு முற்கூறியிருக்கின்றதேயுத்தரமுமாமென்க.

(இம்மூன்றுகவியினதுதாற்பரியம்.)

இவ்வைந்தவத்தையு மனாத்மாவெனவுமிவற்றை யறிவதாகற்பிதாத்மாவெனவு மிவையாவுமாயவை யல்லாத சொப்பிரகாசமேயாத்மாவெனவும் விளக்கியதாம். (௱௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளினாத்மாவரணமான பஞ்சகோச நாமமுமவற்றின்மூன்றினிலக்கணமுமுணர்த்துகின்றது.

(கவி.)

அன்னமொடுபிராணன்மனம்விஞ்ஞானமிக்க ........ *
வாநந்தமயமாமைங்கோசமுளவவைதாஞ் ........ *
சொன்னமுறைசுக்கிலசோணிதத்தாகிநின்ற ........ *
தூலவுடம்பன்னமயகோசஞ்சூக்குமமெய் ........ *
மன்னுவாயுபிராணனும்வாக்காதியுமேபிராண ........ *
மயங்கோசமனமுஞானேந்திரியமும்புணரிற் ........ *
பன்னுமனோமயகோசந்துரியன்சிற்சாயை ........ *
பதிதலொடுலோகாந்தகுந்தமேபோன்று ........ *

(இதனதுபதப்பொருள்.)

அன்னமொடு- அன்னமயத்துடன்- பிராணன் - பிராணமயமும்-மனம்- மனோமயமும் - விஞ்ஞானம்- விஞ்ஞானமய

மும்-மிக்க-மேலான-ஆநந்தமயமாம்-ஆநந்தமயமுமாகிய-ஐங்கோசமுள-பஞ்சகோசமுள்ளன-அவை-அவையாவன-சொன்னமுறை-முற்கூறியகிரமப்படி-சுக்கிலம்-பிதாவின்சுக்கிலமும்-சோணிதத்து-மாதாவின்சோணிதமும்-ஆகிநின்ற-சேர்ந்தாகாநின்ற-தூலவுடம்பு-தூலசரீரமே-அன்னமயகோசம்-அன்னமயகோசமாம்-சூக்குமமெய்-சூக்குமதேகத்தில்-மன்னவிது-பொருந்தியிருக்கின்ற-பிராணனும்-பிராணவாயுவும்-வாக்காதியும்-வாக்குமுதலியகன்மேந்திரியங்களுங்கூடில்-பிராணமயகோசம்-பிராணமயகோசமாம்-மனமும்-மனதும்-ஞானேந்திரியமும்-சுரோத்திராதிஞானேந்திரியங்களும்-புணரில்-கூடில்-பன்னும்-முற்கூறிய-மனோமயகோசம்-மனோமயகோசமாம்-துரியன்-பிரத்தியகாத்மாவினது-சிற்சாயை-சைதன்னியச்சாயையானது-பதிதலொடு-சேர்தலுடன்-லோகாந்த குந்தமேபோன்று-இரும்பை நண்ணியிலுடைய சவளத்தைப் போல-எ-னு-தாம்-ஏ-அசை.

குந்தமென்றது, வருஞ்செய்யுள் முதலிலுள்ள வகங்காரத்திற்கு வயித்தல்-அஃதொருவனிடமாய் வருவதுபோல்க்கூடஸ்தனறிவு தோன்றுமென்க, கோசமென்றது-உறை-அஃது கடகமுதலியவைகளை மறைப்பதுபோலிவ்வைந்துங்கூடத்தனை மறைத்துநிற்றலாலிங்ஙனமுருவகித்தது (௱௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறையானிரண்டு கோசவிலக்கணமுஞ் சுழுத்தி சுகமனுபவிக்கும் விஞ்ஞானமயனானவகங்காரத்தை யனாத்மாவெனவுமுணர்த்துகின்றது.

(கவி.)

இருந்தவகங்காரமுஞானேந்திரியமுங்கூடி ........... *
விளைத்ததுவும்விஞ்ஞானமயகோசமாகும் ........... *
பொருந்துகாரணதேகரூபாவித்தையுத்தாம் ........... *
புகல்விடயதரிசனசாமீப்பியசையோகந் ........... *
தரும்பிரியமோதமொடுபிரமோதமென்னத் ........... *
தக்கவையுமாநந்தமயகோசநானென் ........... *
னரத்தைதரும்விஞ்ஞானமயகோசவடிவா ........... *
மாங்காரந்தனையான்மாவென்பரறிவிழந்தோர் ........... *

(இதனதுபதப்பொருள்,)

இருந்த-முற்கூறிய சவளம்போன்றிருந்த- அகங்காரமும்- ஆங்காரமும்- ஞானேந்திரியமும்- ஞானேந்திரியங்களும்- கூடின்-சேரின்- இசைத்தனிறு - சொல்லாநின்ற- விஞ்ஞானமயகோசமாகும்- விஞ்ஞானமயகோசமாம்-பொருந்து-பொருந்தாநின்ற- காரணதேகரூப- காரணசரீர வடிவமான- அவித்தையும்- அவித்தையும்-புகல் - சொல்கின்ற - விடயதரிசனம்- வனிதாதிவிடயக்காட்சியும்- சாமீப்பியம்- சமீபமும்- சையோகம் - கூட்டரவுமாகிய விம்மூன்றினுடன்- தரும்-உண்டாகின்ற- பிரியம்- பிரியமும்- மோதமொடு- மோதத்துடன்-பிரமோதம்- பிரமோதமும்- என்னத் தக்கவையும்-என்றுசொல்லத்தக்க மூன்றுங்கூடில்- ஆனந்தமயகோசம்- ஆநந்தமயகோசமாம்- நாமென்றரந்தைதரும்- அகமென்னுந்துன்பத்தைத்தருகின்ற- விஞ்ஞானமயகோசவடிவாம்- விஞ்ஞானமய கோசரூபமான- ஆங்காரத்தனை- ஆங்காரத்தை- ஆன்மாவென்பர்- ஆத்மாவெனச் சொல்லுவார்கள் - அறிவிழந்தோர்- ஆத்மாநாத்மவிவேக சூனியர்கள்—எ—று-தாம்-அசை.

அவித்தையானது, விடயதரிசனத்தி லுதிக்கும் பிரியமும், சாமீப்பியத்திலுதிக்கு மோதமும், சையோகத்தி லுதிக்கும்பிரமோதமுமாகியவிம்மூன்றுடன்கூடி யாநந்தமயகோசமாம், அவற்றுள், அந்தக்கரணவிருத்தி யடங்கிநிற்றலின், அவித்தையெனவும், அங்ஙனமுள்ள சுகத்தையறிதலின், பிரியமெனவும், அச்சுகசமீபமா யிருத்தலின், மோதமெனவும், அச்சுகத்தோடுங் கூடிநிற்றலின், பிரமோதமெனவும், வந்ததெனக்கொள்க.

அறிவிழந்தோரென்றது, பாரமார்த்திக கூடத்தரிலக்கணந்தெரியாது கற்பிதமான வகங்காரத்தையே யாத்மாவெனக்கொள்ளுஞ் சிலமதஸ்தரை, அவரிலிங்ஙனங் கொள்ளுவோர் சைவசித்தாந்தி யென்பாருமுளர் - அங்ஙனங் கூறினுமமையும், ஆநந்தமயகோசத்துக்கதித மாகியவாத்மா விஞ்ஞானமயகோசத்துக்குரித்தாகியவகங்காரமாகாமையி னங்ஙனங்கூறுவாராத்மஞான மில்லாதவரெனக்காண்க.

(இவ்விரண்டுசெய்யுளினது தாற்பரியம்,)

பிரமத்தைத்தரிசிப்பிக்குநிமித்தமதனைமறைக்கும்பஞ்சகோசத்தைநீக்கவேண்டியவற்றி னிலக்கணமுணர்த்தியதாம். (௱௯

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய விஞ்ஞானமயகோசனாயிருந்தறி கின்றவாங்காரங் கற்பிதாத்மா வென்றறிவிப்பான் றொடங்கி யிந்நமைவத்தாத்திரய விலட்சணமான கூடஸ்தனது சந்நிதி யினின்றவனது சத்தியினாற் றாலமுதன் மனமீறான தத்துவ ங்களையறிவதன்றியிதற் கறியுஞ்சத்திசுயமாயின் றெனவுணா ர்த்துகின்றது.

(கலி.)

நீலகுணவிசேடமொடுத்பலவிசேடியந்தா ............ *
னிகழ்ந்தரவேத்தியமாதல்போலிளைத்தேனெனினான் ...*
றாலதனுவொடுங்கேட்பனெனினிந்தியத்துந் .............. *
சூழ்வனெனிற்கரணமுடனும்வேத்தியமாய்ச்....... *
சாலவுயர்தூரியனிற்கையினாலாங்காரந் ..................... *
தானான்மாவன்றாகிலசேதனவாங்காரஞ் ............... *
சீலமொடுபுறவிடயாறிவதென்னெனினூ ............... *
சிக்கலின்முன்னூசிசேட்டித்திடுதல்போலும் .........*

(இதனதுபதப்பொருள்.)

நீலகுணம்-நீலநிறமாகிய- விசேடமொடு- விசேடத்துடன்- உற்பலம்- புஷ்பமென்னும்- விசேடியம் - விசேஷியமான து-நிகழ்ந்தர- விளங்க- வேத்தியமாதல்போல்- அறியப்படுவ துபோல - இளைத்தேனெனினான்- யானிளைத்தேனென்றால்- தாலதனுவொடும் - தாலதேகத்துடனும் - கேட்பனெனி ல்-நான்கேட்ப னென்றால்- இந்தியத்தும் - இந்திரியங்களுட னும்- சூழ்வனெனில் - யான்யோசிப்ப னென்றால்-கர ணமுடனும்- அந்தக்கரணத்துடனுங்கூடி- வேத்தியமாய்- பிரத்தியட்சமாய்- சாலவுயர்-மிகவுமாட்சிமையுள்ள- தூரிய ன் ஆத்மன்- நிற்கையினால்- இருப்பதனால்- ஆங்காரம்-ஆங் காரமானது- ஆன்மாவன்று - ஆத்மாவல்ல- ஆகில்-அங்ஙன மாயின்-அசேதனவாங்காரம்-சடவகங்காரமானது- சீலமொ டு-ஒழுங்குடன் - புறவிடயம் - பாகியவிஷயங்களை - அறிவ தென்னெனில் - அறிவதெங்ஙன மென்றால் - ஊசிக்கலின் முன்-காந்தக்கல்லின்முன்- ஊசி-இருப்பூசியானது- சேட் டித்திடுதல்போலும்- அசைந்திடுதல்போலு மறிவன்-எ-று- தான்-அசை,

துரியனுக்குற்பலமும்- அகங்காரசம்பந்தமான தூலாதிகட்குநீலநிறமுருவமிததல்- வேத்தியம்வெளியாய்க் காண்குதல்-அகங்காரமான்மாவன்றென் றமையிற் றுரியனேயாத்மாவென்பதாயிற்று, துரியனேதனுவாதி தத்துவங்களைச்சாட்சியாயறிந்து நிற்றலினவனே யாத்மாவெனவும், அகங்காரமநுபவமறியாமையின் அநாத்மாவெனவுங்காண்க.

வி.று - அங்ஙனமாயின், புறவிடயங்களை யறியவதெங்ஙனமெனின்,

விடை - அவனுசத்திதானவிசேடத்தாலென்க.

வி.று - அற்றேல் - ஆத்மாவிற்குமநாத்மாவிற்கும் விடயங்களையறியுந்தன்மை யொன்றென்றுலிவர்கட்குப்பேதமென்னையெனின்,

விடை - ஆகாயமானது,பிருதிவியாதிய நான்குபூதத்தினுங் கூடியிருந்துங்கூடாமலதற்குச் சாக்ஷியாயிருப்பதுபோலச்சின்மாத்திரமான வாத்மாவானது தனுவாதிவிஷயங்களோடுங்கூடியதன்றொழில்களையறிந்து மவற்றிற்சம்பந்தப்படாமற் சாக்ஷியா யறிவதும்.மாணிக்கச் சாயைபற்றின படிகமச்சாயைத் தனதாகக் காட்டல்போல வாத்மாவினது பூரணமான சிற்சாயையிற் கிஞ்சிதம்சம்பெற்ற வகங்காரம்விடயங்களிற்சம்பந்தமா யவற்றிற் சுகதுக்கங்களைத் தானறிவதுபோலக்காட்டுதலாம்.

கேட்பனென்றமையின், பரிசிப்பன்-காண்பன்-உண்பன்-மோப்ப னென்னு ஞானேந்திரியங்களுடனும் - இந்திரியமெனப்பொதுவாகக்கூறினமையின்- வசனிப்பன்-கவனிப்பன்-கொடுப்பன்- ஆநந்திப்பன் - விசர்க்கிப்ப னென்னுங் கன்மேந்திரியங்களுடனும் - சூழ்வனென்றமையி னிச்சயிப்பன்-சிந்திப்பன் - அபிமானிப்பனென்கிற வந்தக்கரணங்களுடனுங் கூடியவற்றின் குணங்களுக்குவிலட்சணமாயிருந்தறிவது துரியனென்பதுபெற்றும். (௱௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளினகங்காரமானது, மேலானபிரமப்பிரகாசத்தைப்பெற்றுக் கீழானவிடய ஞானத்தோடுங்கூடிச் சாக்கிரசொப்பனத்திற்சுழன்றுசுழுத்தியி லடங்குமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

வெயிலினிடைக்காட்டுபடிமக்கலுண்மனையை........*
விளக்குதல்போலுஞ் சூரியன்றன் றிருச்சந்நிதியி......*
னியலுறுதற்சைதன்யப்பதிவிம்பந்தன்பா..............*
லெய்தலும்பெற்றிடுதலினாலச்சடவாங்காரம்.. ... ...*
பயில்விடயவுணர்வினொடு நனவுகனவுழன்று ....... ......*
பகர்சுழுத்திதனிலடங்குமவ்வழக்குரைப்பிற் ... .......*
செயிர்தருமாங்காரமடங்குறுசுழுத்திதன்னிற்.............*
செறியவித்தையுட்சுவருந்துயிற்கதவுமின்றி...... ......*

(இதனதுபதப்பொருள்.)

வெயிலினிடை- சூரியகிரணத்தின்கண்- காட்டும்-காட்டாநின்ற-படிமக்கல்- கண்ணாடியானது-உண்மனையை-உள்வீட்டிலிருளை-விளக்குதல்போலும் -விளக்குவிப்பதுபோல-சூரியன்றன்- ஆத்மாவினுடைய - திருச்சந்நிதியில்- சிறந்தசந்நிதானத்தில் - இயலுறு - சுபாவமாயுள்ள - தற்சைதன்யப்பதிவிம்பம்- தத்ஞானப்பிரதிபிம்பமானது - தன்பால் -தன்னிடத்தில்-எய்தலும்- சேர்தலை-பெற்றிடுதலினால்- அடைந்திருப்பதனால் - அச்சடவாங்காரம் - அந்தச்சடாங்காரமானது - பயில்விடய - சொல்லாநின்றபாகியவிஷயத்தில் - உணர்வினொடு- முன்னடைந்த வறிவினுடன்கூடி - நனவு- சாக்கிரத்தும் - கனவு - சொப்பனத்தும் - உழன்று - சஞ்சரித்து- பகர்சுழுத்திதனில்-முற்கூறியசுழுத்தியவத்தையில்-அடங்கும்-அடங்கிநிற்கும்-அவ்வழக்கம்-அம்முறைமையை-உரைப்பில்-கூறில்-செயிர்தரும்- குற்றத்தையுடைய- ஆங்காரம்-அகங்காரமானது- அடங்குறு-அடங்காநின்ற-சுழுத்திதன்னில்-சுழுத்தியவத்தையில்- செறியவித்தை- நெருங்கியவவித்தையென்னும்- உட்சுவரும்- உள்வீட்டுச் சுவராயும்-துயிற்கதவும்-நித்திராகபாடமுமாகியவிரண்டும்- அன்றி-அல்லாமலும்—எ—று.

உவமானம், சொல்லெச்சம்- அவித்தைக்குட்சுவரும், துயிற்குக்கதவுமுருவகித்தல். (௭௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய சுழுத்தியினுள்ளபிரத்தியகான்ம

ப்பிரகாசத்திலடங்கிப் பின்வெளிப்பட்ட கங்காரான்மாவாக நிற்குமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

நடுக்கமறு தீபமாந்தனைத்தானேவிளக்க ...... *
னவில்பிரத்திகான்மாவின்சோதியாம்பின்னர்த் ...... *
தொடக்கிவருகாலகருமாதிசமீரணனாற் ...... *
றுயிற்கதவந்திறந்திடவவ்வவித்தையதுதன்னி ...... *
லடுக்குமுதலவத்தைமகதத்துவமாந்தெற்றி ...... *
யடுத்திருந்தாங்காரமெனும்வெண்பளிக்குமணிதான் ... *
படைத்தலருந்தூரியசுடர்ப்பதிவிம்பம்பதியப் ...... *
பட்டுமுனைப்போற்சீவனென்னவேநின்று ...... *

(இதனது பதப்பொருள்.)

நடுக்கமறு-நிஷ்கம்பரூபமான-தீபமாந்தனை-தீபப்பிரகாசமாகியதன்னை-தானேவிளக்கல்-தானேபிரகாசிப்பிப்பது-நவில்-முற்கூறியபிரத்திகான்மாவின்-பிரத்தியகாத்மனுடைய-சோதியாம்-சொப்பிரகாசமாம்-பின்னர்-பின்பு-தொடக்கிவரும்-தொடர்ந்துவருகின்ற-காலம்-காலமும்-கருமம்-கருமமும்-ஆதி-காரணமாகவெழுகின்ற-சமீரணனால்-மகாப்பிராணனால்-துயிற்கதவம்-நித்திராகபாடம்-திறந்திட-திறக்க-அவ்வவித்தையதுதன்னில்-அவ்வவித்தையின்கண்-அடுக்கும்-அடுத்திருக்கின்ற-முதலவத்தை-முதலவத்தையென்னும்-மகதத்துவமாம்-மகதத்துவமாகிய-தெற்றி-வாசற்படியில்-அடுத்திருந்து-சேர்ந்திருந்து-ஆங்காரமெனும்-சத்துவாங்காரமென்கின்ற-வெண்பளிக்குமணி-தவளமானபடிகமணியில்-படைத்தலரும்-சுயம்பாகிய-தூரியசுடர்-பிரத்தியகாத்மப்பிரகாசமானது-பதிவிம்பம்-பிரதிவிம்பமாக-பதியப்பட்டு-அடையப்பெற்று-முனைப்போல்-முனைப்போலவே-சீவனென்னவேநின்று-ஜீவனாகவேயிருந்து—எ—று. தான்-அசை.

பிரத்தியகாத்மாவிற்குத்தீபமும், மகதத்துவத்திற்குத்தெற்றியும், ஆங்காரத்திற்குப் பளிக்குமுருவகித்தல்.

கருமாதியென்றதனாலிச்சையும் ஞானமுங்கூட்டுக, எனவே, உயிர்களினிச்சா ஞானக்கிரியைகளென்பனவாய், சமீரணனென்றது, சிவசம்பந்தமான மகாப்பிராணன், முதல

வத்தைமகதத்துவமென்றமையின், இதற்குக்காரணமானவ வித்தைதமூலப்பிரகிருதி யென்பதுபெற்றாம்.

வினா - அவ்வவித்தையைச்சுழுத்தியிற் கூறலாமோவெனின்,

விடை - இங்ஙனம்பிரமத்தையே கூடத்தருக்கக்கூறுதலினத் தியாரோபிதக்கிரமப்படி பிரகிருதியாதியமூன்றையுங்கூ றினரென்க.

வினா - சுழுத்தியின்மகாப்பிராண னிருக்கின்றதெங்ஙனமெ னின்,

விடை - அவித்தையினடங்கியிருந்தவறிவின் புடைபெயர்ச் சியேகாற்றுதலினாலுமவ்வூர்த்தஜீவசம்பந்தமாயிருத்தலினா லுமதுமெய்யுள்ளிருந்துதுயிற்றவத்தைத்திறப்பதற்கும டைப்பதற்குமேதுவாயிருத்தலினாலும் பண்டிதபாமர சாதாரணமாய்ச் சுழுத்தியவத்தையிற்பிராணனிருக்கின்ற தனுபவத்தினாலு மச்சுழுத்தியிற்பிராணனுண்டென்பத ற்கையமின்றென்க. (௱௧)

(கவி.)

சொற்பனமாநடுமனையைவிளக்கியேபொறியாஞ்... ...*
சுருங்கையினிற்போந்துநனவெனுமுன்றில்விளக்கு ...*
முற்பகருங்காலகருமாதிசமீரணனான் ........*
மூடனுமத்துயிற்கதவங்காரியவாங்கார ........*
நற்படிகமணியவித்தைதனிலடங்கச்சென்று ......*
நனவுகனவெனுமுன்றிணடுமனைகளிருளாத் ......*
தற்படிகமணிகருவுமறிவொளிதன்முதலாந் .......*
தனித்துரியவிளக்கையடைந்தேகமாமன்றே .......*

(இதனதுபதப்பொருள்.)

சொற்பனமாம்- கனவாகிய-நடுமனையை- நடுவீட்டை-விள க்கி-விளக்கிக்கொண்டு-பொறியாம்- இந்திரியங்களாகிய-சுரு ங்கையினில்-பலகணிவாயிலில்- போந்து-வெளிப்பட்டு-நன வெனும்- சாக்கிரமென்கின்ற-முன்றில்- பாகியமுற்றத்தை- விளக்கும்- பிரகாசிப்பிக்கும்- முற்பகரும்-முந்தகூறுநின்ற- காலகருமாதி- காலகருமமாதிகளின்- சமீரணனால்-மகாப்பி ராணனால் - மூடனும்-அத்துயிற்கதவம்- நித்திராகபாடமூடினை வுடன்-காரியம்- மகதத்துவகாரியமான-ஆங்காரம்- ஆங்கார மென்னும் - நற்படிகமணி- நல்லபடிகக்கல்லானது-அவித்

தூதனில்-தனக்காதாரமான சுழுத்தியவத்தையில்- அடங்கச்
சென்று-சென்றடங்கலால் - நனவுகனவெனும் - சாக்கிரஞ்
சொப்பனமென்கிற-மூன்றினமேனைகள்-யாகியமுற்றமுந
டுவீடும்-இருளாம்- அந்தகாரமாம்- நற்படிகமணி-இவ்வகங்
காரமென்னும்படிகக்கல்லில்- கதுவும்-பிரதிபலித்திருந்த-
அறிவொளி-ஞானப்பிரகாசமானது- தன்முதலாம்- தனக்கு
க்காரணமாகிய-தனித்துரியவிளக்கை- ஒப்பற்ற பிரத்தியகா
த்மப்பிரகாசத்தை-அடைந்து-சேர்ந்து-ஏகமாம்-ஒன்றும்—
எ—து- அன்றே - அசை.

பொறிக்குச்சுருங்கையும், நனவிற்கு மூன்றிலும், கனவி
ற்கு நடுமனையுமுருவகித்தல், சொற்பனமா நடுமனையெ
ன்றமையின்சுழுத்தியுள்வீடும், நனவுமுன்வீடுமாயிற்று.

(இந்நான்குகவியினது தாற்பரியம்-)

ஆத்மாவின் சிற்சாயைதங்கின விடத்தவைபோலத் தோற்றி
ய வகங்காரமானது, அவத்தாத்திரயங்களிற் சஞ்சரித்தவற்றி
லடங்கும்போதுதானவத்தையிலுந்தான்பெற்றிருந்தசிற்சா
யையதன்காரணமான வாத்மாவினிடத்திலு மடங்குமென்
பதாம். (௯௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளிலாத்மாநாத்மவிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

இத்திறமிங்ககமினது பாவாபாவங்க .................... *
விலங்குநனவாதிகளினவிகாரமாகி .................... *
புத்துணருமுயிர்வேறென்றிருத்தலினாலென்று ... .. *
முரைத்தவகமான்மாவன்றெனவறிகபுறப்பு .... ........ *
வைத்தவிடயங்கடனக்கான்மாவாய்ப்பரமான் ............ *
மாவிற்குவேத்தியமாதலிற்சடாசடமா .... .............. *
யத்தமதின்முன்பின்போலொளியிலதாமகந்தைக் ....... *
காகஞ்சிற்சாயையான்மாவுடனும்புணர்ச்சி ................ *

(இதனதுபதப்பொருள்.)

இத்திறம்- இத்தன்மையாக- இங்கு-இவ்விடத்தில்- இலங்கும்-
விளங்காநின்ற- நனவாதிகளில்- சாக்கிராதியவத்தைகளில்-அ
கமினது-அகங்காரத்தினது-பாவாபாவங்கள்-அறிவறியாமை

களை-அவிகாரமாகி-நிருவிகாரமாய்- உய்த்துணரும்- சென்றறிகின்ற - உயிர்க்கேநின்றிருத்தலினால் - பிரத்தியகாத்மாவொன்றிருப்பதனால்-என்றும்-எப்போதும்- உணர்த்தவகம்-முற்கூறியவகங்காரமானது - ஆன்மாவன்றென- ஆத்மாவல்லவென்று-அறிக - நீயறிவாயாக- புறம்புணைத்த- புறம்பிலுள்ள- விடயங்கடனக்கு- விஷயங்களுக்கு- ஆன்மாவாய்- ஆத்மாவாகி - பரமான்மாவிற்கு - பிரத்தியகாத்மனுக்கு - வேத்தியமாதலின்- அறியப்படும்விஷயமாதலால்-சடாசடமாய்-சடசித்தாய்- அத்தமதில்- கண்ணாடியில்-முன்பின்போல்-முன்னும்பின்னும்போல- ஒளி-பிரகாசமும்- இலது-அப்பிரகாசமும்- ஆம்-ஆகிய- அகத்தைக்கு- அகங்காரத்திற்கு- ஆகம்-தூலதேகத்துடனும்- சித்சாயை- சித்சாயையுடனும்-ஆன்மாவுடன்- ஆத்மாவினுடனும் - ஆம்புணர்ச்சி - சம்பந்தமேதாதான்மியத் திரயங்களாம் —எ— று.

ஆடிக்குமுன்பொளியும் பின்பிருட்டெமாதல் போலகங்காரத்திற்குமுன்பு சித்தும் பின்பு சடமுமாம் - ஆகவே - இவ்வகங்காரஞ்சித்திற்குச்சடமுஞ் சடத்திற்குச்சித்துமாதலிற் சித்சடவடிவமென்க.

வினா - அற்றேல்- ஒருபொருளிருதன்மை யடையுமோவெனின்,

விடை - அத்தப்போலிருக்குமென்க.

வினா - அற்றேல்- கண்ணாடியின்பினிரசப்பூச்சின விருட்டுவந்ததன்றிச்சுபாவமன்றேயெனின்,

விடை - இவ்வகங்காரத்திற்குமுன்புசிற்சாயாவொளியும்பின்பு சடச்சாயாமலினமுமிருத்தலினங்ஙனமாயிற்றென்க.

வினா - அற்றேல்-முன்சடமெனக் கூறிப்பின்சிற்சடமெனக் கூறலாமோவெனின்,

விடை - சடமாயிருந்தவாடிக்குச் சூரியனொளியைவாங்கியிருளைவிளக்குந்தெளிவொன் றிருப்பதும்போலவிவ்வகங்காரஞ்சடமாயினுங் கூடஸ்தனொளியைவாங்கி விடயங்களைவிளக்குதலினிங்ஙனங் கூறலாயிற்றென்க.ஒளி - அறிவும்-இலது- அறியாமையுமெனக்கொள்க,

முன்-பின்-ஒளி-இலதெனுமிந்நான்குமும்மைத்தொகை
(இதனது தாற்பரியம்.)

•சாக்கிராதியவத்தைகளில் விகாரத்தோடுஞ் சஞ்சரிக்குமகங்

காராதியவத்தைகட்கு விலட்சணனாயிருந்தறியுந் துரியனே யாத்மாவெனவுமங்ஙனஞ் சடமித்துரூபமாய்ச் சஞ்சரிக்குமக கங்காரங்கற்பிதாத்மாவெனவு மவன்சஞ்சரிக்குஞ்சாக்கிராதி யவத்தைகளநாத்மாவெனவுந் தெரிவித்ததாம். (௱௮)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முன் சிற்சடமென்றுகூறிய வகங்காரத்திற் குச்சம்பந்தங்களினால் வருந்தாதான்மியத்திரய முணர்த்து கின்றது.

(கலி.)

வெப்பினேனுனெனலாற்சிற்பதிவிம்பந்தான் ........*
மேவுமாங்காரசம்பந்தத்தாற்றூல ............*
மெய்ப்படுவவெம்மைமுதலனவறிதல்கரும ............*
வினைவாகிக்கருமசமாநானறிந்தேனெனலாற் ........*
றப்பரியசிற்சாயையுடனவ்வாங்கார ............*
சம்பந்தஞ்சிருட்டிமுதன்முத்தியளவாகப் ............*
பொய்ப்பரிசினியல்பாகுநான்கருத்தனெனலாற் ........*
புணர்ச்சியிலான்மாவினுடனனையதின்சம்பந்தம் ......*

(இதனது பதப்பொருள்.)

வெப்பினேனுனெனலால்- யானிச்சையை யுடையவனென் றிருத்தலின்- சிற்பதிவிம்பமேவும்- ஞானப்பிரதிவிம்பயுத் தனான- ஆங்காரம்- ஆங்காரத்தினது- சம்பந்தத்தால்- கூட்டர வினால்- தூலமெய்ப்படுவ- தூலதேகத்திற்குண்டான- வெம் மைமுதலனவறிதல்- உஷ்ணாதிகளையறிவமைத- கருமவினைவா கி- கர்மஜன்னியமான- கருமசமாம்- கன்மஜதாதாத்மியமாம்- நானறிந்தே னெனலால்- நானறிந்தேனென்பதனால்- தப்ப ரிய- தவாத- சிற்சாயையுடன்- சிற்சாயையோடும் - அவ்வாங் காரசம்பந்தம்- அவ்வகங்காரத்தினதுசம்பந்தமே- சிருட்டி முதல்- சிருஷ்டிதொடங்கி- முத்தியளவாக- மோக்ஷபரியந் தம்- பொய்ப்பரிசில்- மெய்த்தன்மையாயிருத்தலின்- இயல் பாகும்- சகஜதாதாத்மியமாம்- நான்கருத்தனெனலால்- அக ங்கர்த்தாவென்பதனால்- புணர்ச்சியிலான்மாவினுடன்- பிர த்தியகாத்மனிடத்தில்- அனையதின்- அவ்வகங்காரத்தினது- ச ம்பந்தம் - சம்பந்தமே— ஏ — து- தான்- அசை — தாதான்மி யமென்பது, ஒன்றுபடல்.

(பதசாரம்.)

சிற்சாயைபதங்கியவகங்காரமானது, நானிச்சாரூபியென்பதனினிருந்துதூலசம்பந்தத்தினாலதன் கன்மமானசீதோஷ்ணாதிசுகதுக்கங்களையறிதலே கன்மஜதாதாத்மியமெனவும்— அவ்வகங்காரமானது, சீவனுடன்கூடி நானறிந்தேனென்பதியல்பாயிருத்தலிற் சகஜதாதாத்மியமெனவும்— அவ்வகங்காரம், ஆத்மசம்பந்தத்தினா னான்கருத்தாவென்றறிவது பிரமையாதலிற்பிராந்திஜதாதாத்மியமெனவுங்கூறினர்.

(இதனதாற்பரியம்.)

அகங்காரசம்பந்தமான வித்தாதாத்மியத்திரயங்களா லிவ்வகங்காரமாத்மாவன்றென்பதையுணர்த்தியதாம். (௱௬)

(அவதாரிகை.)

முன்னின்று வினையென்ற கவிமுதலினது காறுமாயையினாலுண்டாகியதிரிஸ்யங்களி னிலக்கணங்களைப் பகுத்தறிகின்றதிரிஸ்யவிவேக மிவ்வளவெனக்கூறி மேலித்திரிசியத்தைநீக்குநிமித்தமிவற்றைச் சங்கிரகமாகச் சுருக்கியாத்மா விலாகந்துகமாகத்தோற்றின வஞ்ஞானமுதலிய வேழுவத்தையினிலக்கணங்கூறுவான்றொடங்கி யிச்செய்யுளினவ்வேழுவத்தையினுமருமையுணர்த்துகின்றது.

(கவி.)

இசைப்பிலதுபிராந்திசென்னியமாகுமென்று ........ *
மிவைமுழுதுஞ்செப்புதிரிசியவிவேகந்தான் ........ *
மிசைப்புகல்வவஞ்ஞானமாவரணமிக்க ........ *
விட்சேபம்பரோட்சமபரோட்சஞானம்பின் ........ *
வசைப்படுதலுறுஞ்சோகநிவிர்த்தியதன்மீது ........ *
வருதிரங்கிசதிருத்தியெனுமவத்தையேழுந் ........ *
திசைப்புறுதலுறுஞ்சீவர்க்காவனவாமிவற்றின் ........ *
திறமனைத்துமுறைபிறழாதினியெடுத்துமொழிவாம் .. *

(இதனதுபதப்பொருள்.)

இசைப்பில்- சொல்லுமிடத்தில்- அது-முற்கூறியவாத்மசம்பந்தமே- பிராந்திசென்னியமாகுமென்னும் - பிராந்திசென்னியதாதாத்மியமென்றுசொல்லப்படும்-இவைமுழுதும்- இங்ஙனங்கூறியயாவும் - செப்பு-சொல்லாநின்ற- திரிசியவி

வேகம்-திரிஸ்யவிவேகமாம்- மிசைப்புகல்வ-மேற்கூறுவன-அஞ்ஞானம்- அஞ்ஞானமும்- ஆவரணம்- ஆவரணமும்-மிக்கவிட்சேபம்-விரிந்தவிட்சேபமும்-பரோட்சம்-பரோக்ஷஞானமும்- அபரோட்சஞானம்- அபரோக்ஷஞானமும்-பின்-பின்பு-வகைப்படுத்தலும்- இகழ்ச்சியுற்ற- சோகநிவிர்த்தி- துக்கநிவிர்த்தியும்-அதன்மீதுவரு- அதற்குமேலுண்டான- நிரங்குசதிருத்தியெனும்- தடையற்றவாநந்தமுமென்கின்ற-அவத்தையேழும்- சத்தாவத்தையும்- இசைப்புறுதலுறும்-இகப்பையடையும்-சீவர்க்கு- சிதாபாசனுக்கு-ஆவனவாம்- உண்டானவைகளாம்- இவற்றின்- இச்சத்தாவத்தைகளின் - திறமனைத்தும்- தன்மைகளியாவையும்- முறைபிறழாது- கிரமப்படி- இனிஎடுத்துமொழிவாம்- மேலெடுத்துக்கூறுவாம்—எ—று.

இசைப்பு - இசையென வெதுகைநோக்கிவந்தது, அம்சமென்பது, அங்கிசமென்றாயிற்று.

வினா - அங்ஙனந்திரிசிய விவேகமெனக் கூறியிவணவத்தையெனவேறுபிரித்ததென்னையெனின்,

விடை - இந்நூற்றிருக்குத் திரிசியமென்னு மிரண்டானவிவற்றிற் றிரிசியத்தினபிப்பிராயமான வஞ்ஞானாவரணவிட்சேபத்தையும் திருக்குவினபிப்பிராயமான வபரோட்சாதிமூன்றையுமித்திரிசியத்தை விடுதற்குத்திருக்குவைப்பற்றுதற்குமேதுவாக மத்தியிலுள்ளபரோட்ச ஞானமுமான வேழுவத்தையும்பற்றுதலும் விடுதலுமாதலி னிவற்றையுந்திரிசியத்தி லடக்கிக் கூறினாரேனுமிவை மலிநவத்தையை நீக்குஞ் சத்தாவத்தையெனத்தோன்றப்பிரித்தாரென்க.

(இதனதுதாற்பரியம்,)

வெளிப்படை. - - - - (௱௰)

(அவதாரிகை,)

இச்செய்யுளி னிறுத்தமுறையான் சத்தாவத்தையினஞ்ஞான முதலியவிரண்டினிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி,)

புன்னெறிசெல்குறும்பியாய்வலியதுமோர்சித்துப்...... *
போலியாஞ்சிவனுபர்சுருதிவிசாரத்தின் ............... *

முன்னமொருதன்சொருபமாகியபேரொளியா ...........*
முதற்றூரியநிலையறியாதிருந்திடலஞ்ஞானம்.........*
பின்னொருகாலுயிரியல்புகூறுமிடத்தின்று ..............*
பிரத்திகான்மாத்தோன்றெனுங்கலக்கமிரண்டும் ... *
பன்னியவஞ்ஞானகாரியமாகுமென்னப் ...........*
பகர்தருமாவரணமென்பர்பலகலைகற்றுணர்ந்தோர் ...*

(இதனதுபதப்பொருள்.)

புன்னெறிகொள் - அற்பமார்க்கத்தைக்கொண்ட - குடும்பியாய்-சமுசாரியாய் - வலியறும்- அசத்தனென - ஓர்சித்துப்போலியாம்- ஓர்சிதாபாசனாகிய-சீவன்-சீவனானவன் உயர்-மேலான- சுருதிவிசாரத்தின் - வேதவிசாரத்திற்கு-முன்னம்-முன்னமே- ஒரு-ஒப்பற்ற- தன்சொரூபமாகிய- தன்னிசஸ்வரூபமான- பேரொளியாம்- சுயம்பிரகாசமாகிய- முதற்றூரியநிலை- முதன்மையானபிரத்தியகாதமன்றன்மையை- அறியாதிருந்திடல்- அறியாதிருப்பதே- அஞ்ஞானம்- முற்கூறியவஞ்ஞானமாம்-பின்-பின்பு -ஒருகால்-ஒருவேளையில்- உயிரியல்பு- ஆத்மாவின்றன்மையை - கூறுமிடத்து - பிரசங்ங்கிக்குமிடத்து- இன்றுபிரத்தேகான்மா-பிரத்தியகாத்மனில்லையென்கின்றநாஸ்தியும் - தோன்றெனும் - இருந்தாற்றோன்றுமென்கின்றபாதியுமாகிய- கலக்கமிரண்டும்-இவ்விரண்டுகலக்கமும்-பன்னிய- முற்கூறிய-அஞ்ஞானம்-அஞ்ஞானத்தினது- காரியமாகுமென்ன- காரியமென- பகர்தரும்- சொல்லாநின்ற- ஆவரணமென்பர்- ஆவரணமென்றுரைப்பர்- பலகலை-சகலசாத்திரங்களையும்- கற்றுணர்ந்தோர்- ஓதியுணர்ந்தபெரியோர்கள்—எ—று. (௱௰௩)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையான் விட்சேபமுதன்மூன்றவத்தையினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

கிருத்தனுமொண்கருமபலப்போத்திருவுந்தானாய்க்.......*
கருதியுடம்பபிமானியாஞ்சீவன்றானே ...............*
யுரைத்தலரும்விட்சேபஞ்சுருதிகுருவுண்மை ..........*
யுரையாலுண்டுயிரெனவேயறிதலசத்தென்று.........*

நிரைத்தமுதலாவரண நிவிர்த்தகமாம்பரோட்ச ......... *
நீபிரமமெனும்வேதமொழிவிசாரத்தால் ......... *
வரத்தரியன்றானெனவேயறிந்திடுதலபாவா ......... *
வரண நிவிர்த்தகமாகுமபரோட்சஞானம் ......... *

(இதனது பதப்பொருள்.)

கருத்தனும் - கருத்தாவும் - ஒண்கருமபலம் - ஒள்ளியகரும பலத்தையனுபவிக்கும் - போத்திருவும் - போக்தாவும் - தானாக்கருதி - தானாகநினைத்து - உடம்பபிமானியாம் - தேகாபிமானியான - சீவன்றானே - சிதாபாசனே - உரைத்தலரும் - சொல்லுதற்கரிய - விட்சேபம் - விட்சேபமாம் - சுருதி - வேதங்களும் - குரு - ஆசிரியருங்கூறாநின்ற - உண்மையுரையால் - மஹாவாக்கியப் பிரமோபதேசமென்னுஞ் சத்தியவசனத்தினால் - உண்டேயெனவே - ஆத்மனிருக்கின்றானெனவே - அறிதல் - அறிவது - அசத்தென்று - முன்னாஸ்தியென்று - நிரைத்த - சொல்லிய - முதலாவரணம் - முதலாவரணமானது - நிவிர்த்தகமாம் - நிவிர்த்தியான - பரோட்சம் - பரோட்சஞானமாம் - நீபிரமமெனும் - நீயேபிரமமென்கின்ற - வேதமொழி - வேதமுடிவினுள்ளமஹாவாக்கியத்தின் - விசாரத்தால் - விசாரணையால் - வர - உதயமான - அரியன் - ஆத்மனை - தானெனவே - தானென்று - அறிந்திடுதல் - தெரிந்துகொள்வது - அபாவ - இரண்டாவதான நபாதியென்னும் - ஆவரணம் - ஆவரணமானது - நிவிர்த்தகமாம் - நிவிர்த்தியானதே - அபரோட்சஞானம் - அபரோக்ஷஞானமாம் — ஏ — று - தான் - அசை.

ஞானமென்பதைப்பரோக்ஷத்துடனுங்கூட்டினும், பரோக்ஷஞானத்தால் நாஸ்தியென்பதும், அபரோக்ஷஞானத்தால் நபாதியுமாகியவிரு தன்மையையுடையவாவரண நீங்கிற்றென்க.

நீபிரமமெனும் வேதமொழியென்பது, நீயேபிரமம்பிரமம்நீயென்றவிடத்துள்ளதேற்றேகாரத்தாலவ்விருதன்மையுநீங்கிச் சுயம்பிரகாசனான வாத்மனேதானென விளங்குமத்துவிதஸ்வரூபமாம். (௱௰௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிரைத்தமுறையாற்சோகநிவிர்த்தி முதலிரண்டவத்தையினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

துரியநிலையடைந்ததற்பினான்கருத்தனான்போத் ...... *
திருவென்னுஞ்சீவவுருத்துக்கமகன்றிடுத................ *
லரியதெனுமச்சோகநிவிர்த்தியாஞ்செய்தே ..... ....... *
யடைதலுறும்பலனைத்துமடைந்தனமென்றமைதல் *
பரிவினிரங்கிசகிருத்தியிரண்டுமபரோட்ச................ *
பலமாகுமறிவுருவாமான்மாவிற்கென்றுந்........ ... ... *
தெரியுமபரோட்சமுளதாதலினாலவற்குச்,........ ...... *
சேர்தலெவ்வாறஞ்ஞானமுதலனவிங்கென்னில் ,....... *

(இனி பதப்பொருள்.)

துரியநிலையடைந்து - ஆத்மசாட்சாத்காரத்தைப்பெற்று- அதன்பின்- அதற்குமேல்- நான்கருத்தன்- நான்கர்மகர்த்திரு-நான்போத்திரு- நான்கன்மபலப்போத்திரு- என்னும்- என்கின்ற-சீவவுரு- சிதாபாசரூபமான- துக்கமகன்றிடுதல்- துக்கநிவிர்த்தியே-அரியதெனும்-நீங்கற்கரிதெனச்சொல்லும்-அச்சோகநிர்வித்தி- முற்கூறிய துக்கநிவிர்த்தியாம்-இயாம-நாம்-செய்து- 'செய்யத்தக்ககிருத்தியங்களைச்செய்து-அடைதலுறும் பலனைத்தும் - அடையவேண்டிய பயனியாவையும்- அடைந்தனமென்று- பெற்றனமென்ன- அமைதல்- சகசநிஷ்டையிலமைந்திருப்பதே-பரிவின்- இன்பவடிவமான- நிரங்கிசகிருத்தி- முற்கூறியதடையற்றவாநந்தமாம்-இரண்டும்- இவ்விரண்டும் - அபரோட்சபலமாகும்- அபரோட்சஞானானுபவமாம்- அறிவுருவாம்- சைதன்னியஸ்வரூபமான-ஆன்மாவிற்கு- பிரத்தியகாத்மனுக்கு- என்றும்-எப்போதும்- தெரியும்- பிரசன்னமாய்த்தெரிகின்ற- அபரோட்சம்-அபரோக்ஷஞானம்- உளதாதலினால்- உண்டாயிருத்தலினால்-அவற்கு- அவனுக்கு- அஞ்ஞானமுதலன - அஞ்ஞானாதியசத்தாவத்தைகள்- இங்கு-இவ்விடத்தில்- சேர்தல்- அடைதல்-எவ்வாறென்னில்- எங்ஙனமென்னில்—எ-று ஏ ஈற்றசை, சோகமென்றது- கூடத்தனில்லையென்றதுன்பம்.

(இம்மூன்றுகவியின தாற்பரியம்.)

அவாங்மனகோசரமாய்த் தானேதானாய் விளங்குமதீதமாண கூடத்தன் தனதுலீலாவிபூதியினாலெவ்விடத்துமதுவது வாய்விளங்குந் தன்னையறியு நிமித்தமுண்டான சங்கற்பமந்

தர்முகத்தைநோக்கியதிற்கணாயாது பகிர்முகநோக்கத்திற்ற
னானதுநிரதிசயம் வெளிப்படாமையை யானதியேயென்றச
ங்கற்பத்துக்குமுன்னுள்ளவிடமஞ்ஞானமெனவும், அஃது
விசாரத்தாற்றேயிடத் தல்லதிவ்விருத்திக் கெட்டாமை
யாலில்லையெனக் காண்பதாவரணமும், அவ்வனுபவம்விள
ங்கவில்லையெனவருத்திவிரிகின்ற விருத்தியையுடையது
விட்சேபமும், ஆசிரியனாலந்நிரதிசயமிருக்கின்றதெனக்கூ
றுமுத்தியினாலேமார்த்திருக்குமிடத்து முன்னில்லையென்றம
யக்கநீங்கியிருப்பதாகநிச்சயிப்பதுபரோக்ஷமும், அவ்வாசி
ரியன்சுருதியுத்தி யநுபவத்தால் வெளிப்படுத்துமிடத்து
முன்றோன்றுநின்ற மயக்கநீங்கித் தானாகக் காண்பது அப
ரோக்ஷமும், இவற்றான் முன்னில்லை யென்றவதனால்வந்த கர்
திருத்துவபோக்திருத்துவமாதிய துன்பங்கணீங்குவதேசோ
கநிவிர்த்தியும், இவ்விடத்திற் றனக்குத்தானேயுள்ளவின்பம்
விளங்குவதுநிரங்கிசதிருத்தியெனவும்விளக்குவித்ததாம்.()

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியவுவமேயம் போதமாம்படியிவ்வ
வத்தைகள் வந்தகாரண நன்றாகவிளக்கவேண்டுமென்றவினா
வைநோக்கியுவமான பூருவகமாகக்கூறுவான் றொடங்கியஞ்
ஞானதிநான்கவத்தையினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

கடந்துநதிபதின்மர்தமையெண்ணுங்காலொருவன் ...... *
கண்டுநவபுருடரொப்பத்தாமவன்றானெனவே ...... *
யடைத்தறியாதிருந்தவேயஞ்ஞானம்பத்தா ...... *
மவனில்லைகாணப்படானென்னுமிருபிராந்தி ...... *
யிடும்பைதருமாவரணநதியுளவனிறந்தா ...... *
னெனுந்துக்கம்விட்சேபம்வேறொருவன்மொழியாற் *
கிடந்ததொருதுறக்கமெனவுளனெனவ்வயறிதல் ...... *
கிளர்ந்தவவனிலையென்றலொடுபகைத்தபரோட்சம் ... *

(இதனதுபதப்பொருள்,)

கடந்துநதி-ஆற்றைக்கடந்து- பதின்மர்தமை-பதின்மரை-
எண்ணுங்கால் - எண்ணுமிடத்து - ஒருவன்-அவருளொருவ
ன்-கண்டுநவபுருடரை- ஒன்பதுபேரைப்பார்த்து- பத்தாம
வன்-பத்தாவான்- தானெனவேயடைத்து-தானாயிருந்தும்-

அறியாதிருத்தலே-யானென்றுணராதிருப்பதே-அஞ்ஞானம்-அஞ்ஞானமாம்-பத்தாமவன் - பத்தாவான்-இலை-இல்லை-காணப்படானென்னும்- இருந்தாற்காணப்படானென்கின்ற- இருபிராந்தி - இவ்விரண்டுகலக்கமும் - இடும்பைதரும்-துன்பத்தைக்கொடுக்கின்ற- ஆவரணம்-ஆவரணமாம்-நதியுள்- ஆற்றினுள்- அவன்-அப்பத்தாவான் - இறந்தானெனும்-மரித்தானென்கின்ற- துக்கம்- துன்பமே- விட்சேபம்-விட்சேபமாம்- வேறொருவன்- மார்க்கத்திற்செல்லுமற்றொராப்தன்-மொழியால்-வாக்கினால் - கிடந்ததொருதுறக்கமென- ஒருசொர்க்கமுண்டென்றாகமப்பிரமாணத்தாலறிவதுபோல-உளனென-பத்தாவானுண்டென -அறிதல்-அறிகின்றதே-கிளந்த- முற்கூறிய-அவன்- அப்பத்தாவான்-இலையென்றலொடு- நாஸ்தியென்பதனோடு- பகைத்த- பகையான-பரோட்சம்- பரோட்சஞானமாம்— எ—று-ஏ-அசை. (௱யச

(அவதாரிகை.)

இச்செய்யுளின்பரோட்சமுதலியமூன்றவத்தையி னிலக்கணமுணர்த்துகின்றது.

(கலி.)

சங்கைநவபுருடரொடுமுறையெண்ணிநீயே ...... ........ *
தசமனெனத்தனைத்தானேயிருந்தபடியறித ............ *
லிங்குவருதசமன்காணப்படானெனலோ ............... *
டிகலும்பரோட்சமாநதியிலிறந்தனனெனன் ... ........... *
றங்குவருதுயரகறல்சோகநிவிர்த்தியதா...... ... ....... ... *
மடைந்ததனதியனிலையிற்சுகித்திருத்தலுமே.......... *
துங்கநிரங்குசதிருத்தியெனவறிகவினிமேற் ............. *
றொல்வேதவாக்கியமாம்விசாரமெடுத்துரைப்பாம் ... *

(இதனநுபதப்பொருள்.)

சங்கை- ஓர்சங்கையுள்ள- நவபுருடரொடு- ஒன்பதின்மருடன்கூடி-முறை- கிரமமாயிருந்தவன்-எண்ணி- எண்ணிக்கையிட்டு- நீயேதசமனென- நீயேபத்தாவானென்று தெரிவிக்க-தனை- தன்னை- தானே-தான்றனே- இருந்தபடியறிதல்-முன்னிருந்தவண்ணந் தெரிந்துகொள்வதே- இங்குவரு-இவ்விடத்தில் வராநின்ற - தசமன்-பத்தாவான் - காணப்படா

னனவனோடு-காணப்படானென்ற நபாதியோடு-இசலும்-பகைக்கின்ற-அபரோட்சமாம்-அபரோக்ஷஞானமாம்-நதியில்-ஆற்றில்-இறந்தனனென்று-மரித்தானென்று-அங்குவரு-அவ்விடத்துண்டான-துயரகறல்-துக்கநீங்கலே-சோகநிவிர்த்தியதாம்-துக்கநிவிர்த்தியாம்-அடைந்த-இங்ஙனமடைந்த-தனதியனிலையில்-தனதுநிசஸ்திதியில்-சுகித்திருத்தருமே-சுகித்திருத்தலே-துங்கம்-மேலான-நிரங்கிசதிருத்தியென்று-தடையற்றவாநந்தமென-அறிக-நீயறிவாயாக-இனிமேல்-இனிமேல்-தொல்வேத-அநாதியானவேதமுடிவிற்கூறிய-வாக்கியமாம்-மஹாவாக்கியத்தினது-விசாரம்-பரமாத்மாயிக்கிய விசாரணையை-எடுத்துரைப்பாம்-தூக்கிச்சொல்லுவாம்—எ—து-தான்-அசை.

தசமனென்பது,ஆன்மா,ஏனையவொன்பதும்விசுவன்-தைசதன்-பிராஞ்ஞன்-வைசுவானரன்-சூத்திரான்மா-அந்தரியாமி-சிற்சொலிதை-பொற்புவிசாந்தன்-பிரசாபத்தியனுமாம்.வேறொருவனென்றது,ஆசிரியன்-அஞ்ஞானம்,தன்னைமறந்தவறியாமை—ஆவரணம்,முழுதுந்தெரியாமன்மறைத்தல்—விட்சேபம்,அவனிறந்தானென்றதனால்வருந்துன்பம்—பரோட்சம்,இருக்கின்றானென்கின்றநிச்சயம்—அபரோக்ஷம்,பிரத்தியட்சமாய்க்காண்பது—துக்கநிவர்த்தி,மரித்தானென்றதனால்வருந்துன்பநீங்கல்—நிரங்கிசதிருத்தி,மசித்தானென்றவனைக்கண்டதனால்வந்தசுகம்.

வினா - ஈற்றவைமூன்றுமவத்தையானதென்னையெனின்,

விடை - ஏனையநான்குநீங்கினவிடத்துதித்ததாதலினென்க.

(இவ்விரண்டுகவியின தாற்பரியம்.)

தசமனுக்குமுன்னும்பின்னுமின்றி விசாரணகாலத்திலவாந்தரமாகவிவ்வவத்தைகடோன்றி நீங்கினதுபோல வான்மாவிற்குமிங்ஙனமேதோன்றிநீங்கிற்றென்பதாம். (௱௰௫)

(அவதாரிகை.)

முற்கூறியவேழவத்தைகளிலாசிரியர்முகமாய்ச்செய்யுஞ்சுருதிவிசாரத்திற்பரோட்சஞானத்தாலுண்டான வான்மநிச்சயத்தைய பரோட்சமாய் விளக்குவான்கருதிவேதங்களின்முடிவான மஹாவாக்கியங்களினிலக்கணங்கூறுவான்றொடங்கியிச்செய்யுளின்மூன்றுவாக்கியங்களினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

விரிந்தவிதிநிடேதஞ்சித்தார்த்தபோதகமாம் ……… …*
வேதவாக்கியமூன்றுதிறனாகுமவற்றுள் ……………*
வருந்திமகமுதலனசெய்கென்றல்விதிவிடுக ………… *
மதுபானாதிகளென்கைநிடேதம்விதியின்றித் ……… *
திருந்துசிவவுயிரயிக்கப்பொருடனையேதெருட்டல்……*
சித்தார்த்தபோதகவாக்கியமாகுமென்னப் ………… *
பொருந்துமறைநான்கினுநான்குளவாஞ்சித்தார்த்த ……*
போதகமாகியமகாவாக்கியங்களன்றே ……………*

(இதனதுபதப்பொருள்.)

விரித்த-விரிந்திருக்கின்ற-விதி- விதிவாக்கியமும்- நிடேதம்-நிஷேதவாக்கியமும்-சித்தார்த்தபோதகம்-சித்தார்த்தபோதகவாக்கியமும் - ஆம்-ஆகிய-வேதவாக்கியம்-சுருதிவாக்கியம் மூன்றுதிறனாகும்-மூன்றுவகையாம்- அவற்றுள்- அவைகளுக்குள்-வருந்தி- வருத்தப்பட்டு-மகமுதலன-யாகாதிகன்மங்களை-செய்கென்றல்-செய்கவென்றுசொல்லுதல்-விதி-விதிவாக்கியமும்- மதுபானாதிகளை - சுராபானமுதலியவற்றை-விடுக-தவிர்வாயாக-என்கை- என்றுசொல்வதே- நிடேதம்-நிஷேதவாக்கியமும்- விதியின்றி- இவ்விதிசூனியமாய்- திருந்து- திருத்தமான - சிவவுயிர்-பரமாத்மருக்கு- அயிக்கியப்பொருடனை -ஐக்கியவஸ்துவைமாத்திரம்-தெருட்டல்-உறுதியாய்ப்போதிப்பதே- சித்தார்த்தபோதகம்- சித்தார்த்தபோதகமென்னும் - வாக்கியமாகுமென்ன - வாக்கியமாமென-பொருந்தும்- அமைந்திருக்கும்- மறைநான்கினும்- நான்குவேதங்களிலும் - சித்தார்த்தபோதகமாகிய- சித்தார்த்தபோதகமான - மகாவாக்கியங்கள் - மஹாவாக்கியங்களானவை- நான்குளவாம்- நான்குள்ளனவாம்—எ—று-அன்றே-அசை.

சித்தார்த்தபோதகம்நிச்சயப்பொருளைவிளக்குதல்,எனவே-கூடஸ்தப்பிரமாயிக்கியத்தைக்கூறவந்தமகாவாக்கியமென்க.

இங்ஙனங்கூறவந்தமறைநான்கினும்நான்குளவாஞ்சித்தார்த்தபோதகமகாவாக்கியமெனவே, இருக்கு-யசுர்-சாம-அதர்வணமென. நான்குவேதங்களினுமுறையே,பிரஞ்ஞானப்பிரமம்- அகம்பிரமாஸ்மி - தத்தொமசி - அயமான்மாப்பிரமமென்றவிவையேயந்நான்கென்க.

வினு - அற்றேல்-இங்ஙனங்கூறியவேதம்விதிநிஷேதமானக ருமத்தையுங்கூறியதென்னையெனின்,

விடை- அக்கருமங்களின்சிறுமையும் ஞானத்தின்பெருமை யுந்தோன்றியவற்றைநீக்கியிதனையடைதற்கென்க.

வினு - யாகாதிகளைவிதிப்படி செய்கவென்றவிதிவாக்கியங்க ருமமாம், மதுபானாதிகளைவிடுகவென்ற நிஷேதவாக்கிய மெங்ஙனங்கருமமாமெனின்,

விடை - விலக்குகவென்றதுமோர்விதியாதலினஃதுங்கரும மேயாயிற்றென்க.

வினு - அற்றேல் - இவ்வேதங் கருமம் பத்தி ஞானமெனமூ ன்றுகாண்டமாக்கூறியதிவணிரண்டாகக்கூறியதென்னை யெனின்,

விடை - இவ்விரண்டிற்கும் நடுவாயிருந்த பத்திக்குத்தனக் கெனவோருருவமின்றி யவ்விரண்டிற்குங் கருவியாய்க்க ருமத்தைச்சேரினஃதையும் ஞானத்தைச்சேரினஃதையும் விளக்கலாலஃதையவற்றினடக்கிக்கூறினதென்க. (௱௰௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வேதங்களிற்சாமவேதத்தின்மு டிவிற்கூறுஞ் சித்தார்த்தபோதகமான தத்தொமசியென்னு மஹாவாக்கியமுமதனிலக்கணங்களும்விளங்கவுணர்த்துகின் றது,

(கவி.)

உரைத்தவையுட்சிறந்தது நற்சாமமறைபுகலு ..........*
 மோங்குதத்தொமசிமகாவாக்கியமங்கதற்குப் ..........*
பரத்தினுதற்பதந்தொம்பதமொடசிபதமாய்ப் ..........*
 பதமூன்றுஞ்சிவமுயிரங்கவற்றயிக்கமுறையே ..........*
யருத்தமெனலாம்பதமேபதார்த்தமொடுவாக்கி ..........*
 யார்த்தங்கடமக்குச்சம்பந்தமுறைமூன்றும் ..........*
விரிக்கிலவைதாஞ்சாமானாதிகரணம்பின் ..........*
 விசேடவிசேடியமிலக்கணமொடிலக்கியமாம் ..........*

(இதனதுபதப்பொருள்)

உரைத்த-முற்கூறிய - அவையுள்-அந்நான்கனுள்-சிறந்தது- மேம்பாடுள்ளது- நற்சாமமறை - இனியசாமவேதமானது- புகலும்-கூறிய- ஓங்கு-உயர்ந்த-தத்தொமசி-தத்து - தொம்-

அசியென்னும் - மகாவாக்கியம் - மஹாவாக்கியமாகும்- அங்கதற்கு- அவ்வாக்கியத்திற்கு- பாத்தனூறு -விரித்துச்சொல்லின்ற-தற்பதம்- தற்பதமும்-தொம்பதமொடு - தொம்பதத்தினுடன்- அசிபதமாய் - அசிபதமுமாக - பதமூன்றும்-பதத்திரயங்களாம் - சிவம்-பிரமமும் - உயிர் - கூடஸ்தனும்-அங்கவற்று - அவ்விரண்டின் - அயிக்கியம்-அயிக்கியமுமாகியவிம்மூன்றும்-முறைமே-நிரலே- அருத்தமெனலாம்-அர்த்தமென்னப்படும் - பதமூன்றுக்குமும் - பதார்த்தமொடு - மூன்றுபதார்த்தத்துடன் - வாக்கியார்த்தங்கட்கு- வாக்கியார்த்தமுமாகியவிம்மூன்றற்கும்- முறை நிரலே-சம்பந்தமூன்றும்- சம்பந்தத்திரயங்களாம்- விரிக்கிலவை-அவற்றைவிரிக்கில்- சாமானாதிகரணம் - சமானாதிகரணியமும்-பின்-பின்பு-விசேட விசேடிய- விசேஷண விசேஷியமும்-இலக்கணமொடிலக்கியம் - இலக்ஷணத்துட னிலக்ஷியமும்-ஆம்-ஆகும்—ஏ—ஓ ஏ தாம்-அசை.

முறைமேயருத்த மென்றமையின், தற்பதத்திற்குச்-சிவமும், தொம்பதத்திற்கு- உயிரும், அசிபதத்திற்கு- அயிக்கியமுங்கொள்க.

சாமானாதிகரணசம்பந்தமென்பது, தத்தொமென்ற, இருவிதபதஞ் சம்பந்தமாயிருத்தலின், சமானமும், இவ்விரண்டுமசிபதமா யிருத்தலின் , அதிகரணமும் , இம்மூன்றுபதமுமொன்றாய்ச் சம்பந்தித்திருத்தலின், சம்பந்தமுமாம், விசேடணவிசேடிய சம்பந்தமென்பது, பரசிவரின்றற்கிழமையை விசேடித்தல், விசேடணமும், அவ்விசேடணத்தினொருமையான ஆனாயென்னும்பொருளாய்க் காண்பது, விசேடியமும், இப்பொருண்மூன்றுமொன்றாய்ச் சம்பந்தித்திருப்பது,சம்பந்தமுமாம். இலக்கணவிலக்கியசம்பந்தமென்பது, இம்மூன்றுபொருளு மேகமாயிருத்தல், இலக்கணமும், ஏகமென்பதின்றிச்சுபமாய்விளங்குவது, இலக்கியமும், அங்ஙன மேகமென்றுஞ் சுபமென்னும் பிரிவின்றிச்சம்பந்திப்பதே, சம்பந்தமுமாம். கூடஸ்தப்பிரமா யிக்கியம் போதமாம்படிகரதலாமலகம்போலவிளங்கக்கூறுதலினனைத்தவையுட்சிறந்தது சாமமறைபுகலு மோங்குதத்தொம் சிமஹா வாக்கியமென்பர்- முறைமூன்றுமென்றமையின், தத்தொமசியென்ற பதங்கட்குச் சாமானாதிகரணிய சம்பந்தமும், அது- நீ- யாயினையென்னும் பதார்த்தங்கட்குவிசேஷி

ணவிசேஷிய சம்பந்தமும், இப்பதார்த்தமுள்ள வாக்கியார்த்தங்கட் கிலக்கணவிலக்கிய சம்பந்தமுமாம்.

(இவ்விரண்டுகவியின் றாற்பரியம்.)

சாமவேதமகா வாக்கியத்தின் பதமும்பதார்த்தமும் வாக்கியார்த்தமுமாகிய, மூன்றிற்குமுள்ளசம்பந்தமுமதனாலுண்டான பரமாத்மாயிக்கமான வத்துவிதஸ்வரூபமுமே பிரயோசனமாக விளக்குவித்ததாம். (௱௰௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய மஹாவாக்கியத்தின் கண்முன்னுள்ளவிரண்டுபதத்தி னிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி)

அறைதலுறுபதார்த்தங்கட்கிருபொருளிங்குளவா ...... *
மவைவாச்சியார்த்தமிலக்கியார்த்தமெனவவற்றன் .... *
முறைமைதருவிராட்புருடன்முதலாகிநின்ற ............ *
மூவுருவவீசனும்பிரமமுமொன்றாகிப் ....... ....... *
பிறிதலறநிற்புழிதற்பதத்திற்கெய்துறுவ ... ........... *
பெயர்வாச்சியார்த்தமுக்கியார்த்தமபிதார்த்த ....... ... *
நெறிகொள்விசுவாதிகளுந்துரியனுமொன்றாகி ........ *
நிற்புழித்தாம்பதத்திற்குவருமம்மூவகையும் ..... ...... *

(இதனதுபதப்பொருள்-)

அறைதலுறு- முற்கூறிய-பதார்த்தங்கட்கு- பதப்பொருள்களிரண்டிற்கும்- இருபொருள்- இரண்டருத்தம்- இங்குளவாம்- இவ்விடத்துள்ளனவாம்- அவை-அவையாவன - வாச்சியார்த்தம்-வாச்சியார்த்தமெனவும் - இலக்கியார்த்தமென-இலக்கியார்த்தமெனவுமாம்-அவற்றுள்- அவ்விரண்டினுள்-முறைமைதரு - கிரமமாய்வராநின்ற - விராட்புருடன்முதலாகிநின்ற - விராட்புருஷினாதியான- மூவுருவவீசனும்- மூன்றுருவமாகியவீசுரனும்- அப்பிரமமும்- இவைகட்கதிஷ்டானமானவப்பிரமமும்-ஒன்றாகி-ஏகமாய்- பிறிதலறநிற்புழி-கலந்துநின்றவிடத்து - தற்பதத்திற்கெய்துறுவ- தற்பதத்திற்கடைவனவாகிய - பெயர்-நாமங்கள்- வாச்சியார்த்தம்-வாச்சியார்த்தமும் - முக்கியார்த்தம்- முக்கியார்த்தமும் - அபிதார்த்தம்- அபிதார்த்தமுமாகியமூன்றுமாம்- நெறிகொள்-

இந்திரியோடு - விசுவாதிகளும் - விசுவனாதியமூன்றுஜீவரும் - ஈசுரியனும் - இவைகட்கதிஷ்டானமானகூடஸ்தனும்- ஒன்றாகி ஏகமாய்-திற்புழி-கலந்திருக்குமிடத்து- தொம்பதந்திற்கு - தொம்பதத்தினுக்கும்- அம்மூவகையும்-அவ்வாச்சியார்த்தமுதலானமூன்றுவிதமும் - வரும்- உண்டாம்-எ-று.

வாச்சியார்த்தம், வாசகப்பொருள். முக்கியார்த்தம், இவ்வாசகப் பொருளின்குணத்தி னிலக்கணப்பொருள். அபிதார்த்தம், இவ்விலக்கணப் பொருளே விராட்டாதி நாமமாய்த் தோற்றல். முக்கியார்த்த மபிதார்த்தமென்பன வாச்சியார்த்தத்தின்பேதங்களாய். இவைபிரமசூஸ்தர்கட் காபாசமாகத் தோற்றியவுபாதிநாமங்கள்.

(இதனதுதாற்பரியம்.)

பிரமசந்நிதானத்தினீசுரன் விராட்டாதிமூன்றினுடன் கூடிச்சிருஷ்டியாதியதொழில்களைச் செய்வதுங்கூடஸ்தசந்நிதானத்திற் சீவன்விசுவாதி மூன்றினுடன் கூடியிராகத்துவேஷங்களால்விஷயங்களைப்புசிப்பதும்வாச்சியார்த்தமெனத்தெரிவித்ததாம். (௨௰அ)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மூற்கூறிய விரண்டுபதத்தி னிலக்கியார்த்தவிலக்கணங்களையுணர்த்துகின்றது.

(கவி.)

தற்பதத்தினுக்குவிராட்புருடாதியகன்ற................*
தனிநிருபாதிகப்பிரமமேயிலக்கியார்த்தஞ் ............*
சொற்பரவுஞ்சோதிதசற்பதார்த்தமெனநிற்குந் ...........*
தொம்பதத்திற்குத்தவிசுவாதிகளின்வேறாம் ... ......*
பொற்பினிருபாதிகமாந்துரியனிலக்கியார்த்தம் .. .... ...*
பொருந்துஞ்சோதிததொம்பதார்த்தமெனவாமவ் .....*
விற்பரவுமிலக்கணைவிட்டதுவும்விடாததுவும் ..............*
விட்டுவிடாததுவுமெனமூவகையாமன்றே ............*

(இதனதுபதப்பொருள்.)

தற்பதத்தினுக்கு - முற்கூறியதற்பதத்திற்கு-விராட்புருடாதி-விராட்புருஷன்முதலியமூன்றும் - அகன்ற- நீங்கிய-தனி-

தனிமையான - நிருபாதிகப்பிரமமே -உபாதிகணீங்கியபிரமமே-இலக்கியார்த்தம்-லக்ஷியார்த்தமெனவும்-சொற்பரவு-வாக்காற்றுதிபெற்ற-சோதித - சோதனையிற்சேடித்த - தற்பதார்த்தமென- தற்பதார்த்தமெனவும்-நிற்கும்-இருக்கும்-தொம்பதத்திற்கு- முற்கூறியதொம்பதத்திற்கு-உற்ற-பொருந்திய- விசுவாதிகளின்- விசுவாதியமூன்றிற்கும்- வேறும்-பிரத்தியக்காய-பொற்பின்- பொலிவையுடைய-நிருபாதிகமாம்-உபாதிரகிதமான- துரியன்- கூடஸ்தனே-இலக்கியார்த்தம்-இலக்கியார்த்தமெனவும்-பொருந்துறு- அடையப்பெற்ற-சோதித -சோதனையிற்சேடித்த - தொம்பதார்த்தமெனவாம்- தொம்பதார்த்தமெனவுமாம்- ஆவ்விற்பரவும்-அவைகட்கொப்பாகச்சொல்லுகின்ற-இலக்கணை - இலக்கணையானது-விட்டதுவும்- விட்டவிலக்கணையெனவும் - விடாததுவும்-விடாதவிலக்கணையெனவும்- விட்டுவிடாததுவுமென-விட்டுவிடாதவிலக்கணையெனவும் - மூவகையாம்- மூன்றுவிதமாம்-எ—று-அன்றே-அசை,

இலக்கியார்த்தம், இலக்கணையாலறியு முண்மைப்பொருள்-எனவே, அதுநீயென்னும் பதங்கட்கிலட்சியப் பொருள் பிரம கூடஸ்தராதலின், இலக்கியார்த்தமெனவும், அப்பதங்களைச் சோதனைசெய்தவிடத்துச் சேடித்துநிற்றலின், சோதித தத் தொம்பதார்த்தங்களெனவும் நாமங்கள்வந்தன. இவை, பரசீவர்களின்பதார்த்தமாயுள்ள நிருபாதிகநாமங்களைச் சொல்லுதலாம், தேகாதித்தன்மைகளை விட்டுச்சிவனைலட்சியிப்பதால் விட்டவிலக்கணையெனவும், சர்வஞத்துவாதித்தன்மைகளை விடாமலீசனை லட்சியிப்பதால் விடாதவிலக்கணையெனவும், இவைகட்காதாரமாயு மியாவுமாயும்விளங்காநின்றபிரம கூடஸ்தனை விட்டும்விடாமல் அத்துவிதத்தைலட்சியிப்பதால்விட்டுவிடாதவிலக்கணையுமாம்.

(இதனதுதாற்பரியம்.)

விராட்டாதி நான்குபாதியு நீங்கியபிரமத்தையும், விசுவாதி நான்குபாதியுநீங்கிய கூடஸ்தனையும், பிரத்தியக்காய்க்காண்பது, இலக்கியார்த்தமெனத்தெரிவித்ததாம். (௱௰௯)

(அவதாரிகை.)

மூன்மகாவாக்கியத்திற் கூறியவஸ்துநிச்சயத்தைப்பின்னும் ஸ்திரப்படுத்துவதற்காக வற்புறுத்திச்சொல்லிய மூன்றிலக்

க்கணகளையுதாஹரண பூருவகமாகக் கூறுவான்றொடங்கியி
ச்செய்யுளின் மூன்றுதாஹரணமுமவற்றி னிரண்டினிலக்க
ணங்களுமுணர்த்துகின்றது.

(கவி.)

கங்கையினிலிடைச்சேரிமருவலுறுஞ்சொல்லுங் ... ........ *
கவன்குந்தமொடுசோயந்தேவதத்தனெனுஞ்சொ ..... *
லிங்கிவைகளுதாரணமாமவற்றினுக்குக்கங்கை............ *
யெனுமொழிதீர்வடிவாந்தன்முக்கியார்த்தத்தைத்.... *
தங்குமிடைச்சேரிதனக்கிடமாகாமையிலுற்................ *
றணந்துகரைகாட்டுந்தன்முக்கியார்த்தத்தைத் .... ..... *
துங்கமுறுகுந்தமொழிவிடாமற்குந்தத்தைச் .... ... . ..... *
சுமப்பவனைக்காட்டுமெனவுணர்த்திடுகதுணிந்தே . ... *

(இதனதுபதப்பொருள்.)

கங்கையினில் - கங்காநதியில்-இடைச்சேரி- இடைச்சேரியா
னது-மருவலுறும்-மருவியிருக்கின்றதென்ற- சொல்லும்-வ
சனமும் - கவன் குந்தமொடு - செல்கின்ற குந்தமென்னு
ம்வசனத்துடன் - சோயந்தேவதத்த னெனுஞ்சொல்- சோ
யந்தேவதத்தனென்கின்ற வசனமுமாகிய- இங்கு-இவண்-இ
வைகள்- இம்மூன்றும்-உதாரணமாம்- முற்கூறியவிலக்கணை
மூன்றிற்குமுதாரணங்களாம்- அவற்றினுக்கு- அவ்வுதாரண
ங்களுக்குள் - தீர்வடிவாம்-சலரூபமான- கங்கையெனுமொ
ழி-கங்கையென்னும் வசனமானது- தங்குமிடைச்சேரிதன
க்கு-தங்கப்பட்ட விடைச்சேரிக்கு - இடமாகாமை யினால்-
ஆசிரயமாகாமையினால்- தன்முக்கியார்த்தத்தை- தனதுமு
க்கியார்த்த மானசலத்தை - தணந்து- விட்டு-கரைகாட்டும்-
தீரத்தைக்காண்பிப்பதே விட்டலக்கணையெனவும் - துங்கமு
று-பெருமையுள்ள-குந்தமொழி-சவளசத்தமானது- தன்மு
க்கியார்த்தத்தை- தனதுமுக்கியப்பொருளை- விடாமல்-நீங்
காமல்-குந்தத்தை- அச்சவளத்தை-சுமப்பவனை- சுமக்கின்ற
புருடனை-காட்டுமென - காண்பிப்பது விடாதலக்கணையெ
னவும்-துணிந்து - தெளிவாக-உணர்த்திடுக- அறிவாயாக—
எ—று-எ-கற்றசை.

கங்கையென்பது, தேகாதிப் பிராஞ்ஞனீறான வொன்பதி
ற்கும்- இடைச்சேரியென்பது, இவற்றைநீங்கினசீவனுக்கு

ம்-ஞத்தமென்பது; விராட்டாதியந்தரியாமியீறான வொன்பதிற்றும்-இவற்றைவிடாமனின்றதுந்ததாரியை, ஈசனுக்கும்-சொல்லப்படுது, அவனென்றுமீசனுக்கும்-அயமென்பது, இவனென்றுஞ்சீவனுக்கும்-தேவதத்தனென்பது, அத்துவிதத்திற்குமுவமித்தல-இவ்வுதாகரணங்கள் காரணகாரியோபாதிகளிற்சம்பந்தமான பரசீவர்களை வெளிப்படுத்து நிமித்தமிவ்விரண்டு லக்கணையான வுவமானத்தின்வாச்சியார்த்தலட்சியார்த்தவிலக்கணமுணர்த்தியது. (௱௨௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மூல்விருத்தமுறையான் மூன்றுவதிலக்கணையினிலக்கணங்களையுவமான பூருவகமாயுணர்த்துகின்றது.

(கவி.)

முன்னமொழிதருஞ்சோயத்தேவதத்தனென்று ........*
மொழியுண்முதல்வனென்றுமொழியிறந்தகாலந் ......*
தன்னில்வருதேசவயோவிசிட்டனுந்தேவ ..........*
தத்தனைக்காட்டிடுமிவனென்மொழிநிகழ்காலத்தி ......*
னுன்னவருமவையுடையதேவதத்தன்றன்னை ..........*
யுணர்த்திடுமிவ்விருத்தருமப்பொருள்களிரண்டு ....*
மன்றுதல்செய்யயிக்கமுறுமையினலப்பொருட்கண் ...*
வருவிருத்ததருமங்களனைத்தினையும்விட்டே........*

(இதனதுபதப்பொருள்)

முன்னமொழிதரும்-மூற்கூறிய-சோயத்தேவதத்தனென்றும்-சோயந்தேவதத்தனென்கின்ற-மொழியுள்-வாக்கியத்துள்-முதல்-முதலில்-அவனென்றும்-அவனென்கின்ற-மொழி-வசனமானது-இறந்தகாலந்தன்னில்-பூதகாலத்தில்-வரு-வாராநின்ற-தேச-தேசமும்-வயோவிசிட்டனும்-வயதினுயர்ந்தவனுமாகிய-தேவதத்தனை-புருடனை-காட்டிடும்-காண்பிக்கும்-இவனென்மொழி-இவனென்னும்வசனமானது-நிகழ்காலத்தில்-வர்த்தமானகாலத்தில்-உன்னவரும்-நினையாநின்ற-அவையுடைய-அத்தேசவயசுக்களையுடைய-தேவதத்தன்றன்னை-புருடனையே-உணர்த்திடும்-அறிவிக்கும்-இவ்விருத்ததருமம்-இப்பேததன்மமாகிய-பொருள்களிரண்டும்-இருபொருள்களும்-மன்றுதல்செய்-நிலைபெற்

று-அயிக்கமுறுமையில் - அயிக்கமடையாமையினால் - அப்பொருட்கண் - அப்பொருள்களின். வரு-வாராநின்ற-விருத்ததருமங்கள்- பேததருமங்களான-அனைத்தினையும்விட்டே- யாவையுநீக்கி—எ—று-ங-கூற்றதை.

சோவென்னும்பதத்திற்கு-அவனெனவும், அயமென்னும்பதத்திற்கு-இவனெனவுங்கொள்க. விருத்தமென்பதுவேறுபாடுடையது, அதுவென்னு மீசனுக்குச் சோதேவதத்தனெனவும், நீயென்னுஞ்சீவனுக்கு, அயந்தேவதத்தனெனவுமுவமித்தல். இஃது விட்டுவிடாதவிலக்கணையான வுவமானத்தின்வாச்சியார்த்தவிலக்கணமுணர்த்தியது. (௨௰௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் மூன்றாமிலக்கணையினிலக்கியார்த்தமுணர்த்துகின்றது.

(கலி.)

விருத்தமறுதருமமாந்தேவதத்தன்றனையே ...... ... .. *
விடாதுகொளினவனிவனேயிவனவனேயென்னுந் ..... *
தெரித்தலரிதாயதாதான்மியங்கூடுறுமாற் ............... *
றேரினிதைவிட்டுவிடாவிலக்கணையினொடுதா ....... *
னருத்தவிலக்கணைபாகத்தியாகவிலக்கணையென் ........ *
றறைதலினாலிதுவேதத்தொம்மசிவாக்கியத்திற் ....... *
ளாத்திவருதாரணமாயுரியதெனவுண்மை .... .. [பாம்
யுணர்த்துடையோரஃதெவ்வாறெனின்மூன்றையேயுரைப்

(இதனது பதப்பொருள்.)

விருத்தமறுதருமமாம் - அவிருத்தாம்சதருமமான-தேவதத்தன்றனையே - புருடனையே - விடாதுகொளின் - விடாமற்கொண்டால்-அவன் - அப்புருடன்-இவனே- இப்புருடனே- இவன் - இப்புருடன் - அவனேயென்னும் - அப்புருடனேயென்கின்ற- தெரித்தலரிதாய- அறிவித்தற்கரியவாகிய- தாதான்மியம்- அயிக்கமானது- கூடுறும்-பொருந்தும்-தேரின்-விசாரிக்கின் - இதை-இதனை- விட்டுவிடா-விட்டுவிடாத- இலக்கணையினொடு- இலக்கணையினுடன்-அருத்தவிலக்கணை- அருத்தவிலக்கணையும்- பாகத்தியாகவிலக்கணையென்று- பாகத்தியாகவிலக்கணையுமென - அறைதலினால் - சொல்லுதலி

ளல்-இதுவே-இவ்விலக்கணைகளே- தத்தொம்மசி-தத்தொமசியென்னும்- வாக்கியத்திற்கு- மஹாவாக்கியத்திற்கு-உரியது-உரித்தான- உதாரணமாமென- உதாரணமாகுமென்று- உண்மை - தத்துவத்தை- உணர்ந்துடையோர்- உணர்ந்தசத்துக்கள்- உரைத்திடுவர்- சொல்லுவார்கள்- அஃது-அவ்விலக்கணை- எவ்வாறென்னில்- பிரகிருதத்திலெத்தன்மைத்தென்றல்-முறையே-நிரலே-உரைப்பாம்-சொல்லுவாம்,எ—று-தான்-ஏ-அசை.

விட்டுவிடாதவிலக்கணை, அருத்தவிலக்கணை,பாகத்தியாகவிலக்கணையென்பனவொருபொருட்கிளவி;வேடங்களைவிட்டுப்புருடனைவிடாமற்கொள்ளுமிடத்தவ்வேடத்தோடும்புருடனையொன்றாகக்காணுதலின்,விட்டுவிடாதவிலக்கணையெனவும்,அதன்பொருளைமாத்திரங்காட்டுதலின், அருத்தவிலக்கணையெனவும்,இவ்விருத்தருமமாகியபாகுபாட்டைநீக்குதலின்,பாகத்தியாக விலக்கணையெனவுங்கொள்க, இஃது-உவமானங்கூறிய விட்டுவிடாதவில்க்கணையி னிலக்கியார்த்தமுணர்த்தியது.

(௱௨௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியமஹாவாக்கியத்தின்;யதார்த்தஸ்வரூபத்தைலட்சியிக்குநிமித்தமஃதிற்கூறியமூன்றுபொருளைமூன்றுவிலக்கணையான் வெளிப்படுத்துவான்கருதிமுன்பவனிவனென்கின்ற பேததன்மத்தை நீக்கிப்பின்பவனேயிவனிவனேயவனென்கிறவபேததன்மத்தைவிளக்கினவத்தவுவமானப்படியுபமேயத்தின்வாச்சியார்த்தம்விளங்கவுணர்த்துகின்றது.

(கவி.)

துற்பதவாச்சியார்த்தமாயெலாமறிதன்முதலாஞ் ... ......*
சட்குணங்கொள்பரோட்சனுஞ்சிவன்றனையேயுணர்த்து
முற்பகருந்தொம்பதலக்கியமாய்ச்சிற்றுணர்வு ....... ... *
முதலாயவினகுணவிசிட்டவபரோட்ச ... .......... .... *
கற்பிதசீவனையுணர்த்துமிம்முரண்கொள்பொருட்கே ...*
கத்துவங்கூடாமையினவ்விருபொருளுமடையும் ...... *
பற்பலவாம்பரோட்சமுடனபரோட்சமாகும் ............*
பகைத்ததருமத்திறங்களனைத்தினையும்விட்டே.........*

(இதனது பதப்பொருள்.)

தற்பதம் - தற்பதத்திற்கு- வாச்சியார்த்தமாய்-வாச்சியார்த்தமானது- எலாமறிதன்முதலாம்- சர்வஞ்ஞத்துவாதிய-சட்குணங்கொள்-ஆறுகுணங்களையுடைய-பரோட்சனும்-பரோட்சனாகிய - சிவன்றனையே-ஈசனையே - உணர்த்தும்-அறிவிக்கும்-முற்பகரும்- முற்கூறிய-தொம்பதம்- தொம்பதத்திற்கு-முக்கியமாய்- வாச்சியார்த்தமானது- சிற்றுணர்வுமுதலாய - கிஞ்சிஞ்ஞத்துவாதிய - ஈனகுணவிசிட்ட - இழிந்தகுணங்களின்மேலான- அபரோட்ச-அபரோட்சமான- கற்பிதசீவனை- சிதாபாசஜீவனை - உணர்த்தும் - அறிவிக்கும்-இம்முரண்கொள் - இவ்விரோதாம்சமுள்ள. பொருட்கு-ஜீவேசுரர்களுக்கு - ஏகத்துவம்-ஐக்கியத்துவம்- கூடாமையின்-வாராமையினால் - அவ்விருபொருளும் - அச்சீவேசுரனும்-அடையும் - பொருந்தாநின்ற- பற்பலவாம் - பலபலவான-பரோட்சமுடன் -பரோட்சத்துடன்- அபரோட்சமாகும்-அபரோட்சமுமாகிய - பகைத்த தருமத்திறங்கள்- விரோதாம்சங்களான - அனைத்தினையும்விட்டே-யாவையுந்நீக்கி—எ-று—ஏ - அசை, ——சகத்திற்குக் காரணனொருவனுண்டென நிச்சயிப்பதா லீசனைப் பரோட்சமெனவும், காரியமானதூலதேகத்தோடும் விடயங்களை யனுபவிப்பது காட்சியாயிருத்தலிற் சீவனையபரோட்சமெனவும், கிஞ்சிஞ்ஞத்துவசர்வஞ்ஞத்துவாதிவிருத்த தருமங்கட்கயிக்கங்கூடாமையினிம்முரண்கொள் பொருட்கேகத்துவங் கூடாவெனவும், முற்கூறியசர்வஞ்ஞத்துவ கிஞ்சிஞ்ஞத்துவகுணங்களானவிருத்தாமிசத்தை நீக்கவேண்டுமாதலின், பற்பலவாம்பரோட்சமுட னபரோட்சமாகும் பகைத்ததருமத்திறங்க ளனைத்தினையும் விட்டேயெனவுங்கூறினர் - இஃதுதற்பததொம்பதத்தின்வாச்சியார்த்த பேதமான சீவேசுரர்களுக் கேகத்துவங் கூடாதென்னுமிலக்கணமுணர்த்தியது. (௱௨௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய மஹாவாக்கியத்தி லிலக்கியார்த்தங்களைவிளங்கவுணர்த்துகின்றது.

(கவி.)

இகலிலாவதிவுமாத்திரமாகிநின்ற.......................................*
விலக்கியமாம்பிரமகூடத்தவுயிர்கொள்ளிற்...............*

புகரிலாவதுவிதுவேயிதுவதுவேயென்னப் ..................*
பொருந்துதாதான்மியம்வந் துறுமெனவேயறிக ......*
பகரிலாவசிபதமிவ்விலக்கியார்த்தத்திற் ..........................*
பரோட்சவபரோட்சங்கண்மாயாகற்பிதமென் ..........*
றுகவிலதுணர்த்தியுறுபலமாமிம்முறையா ..............*
லொன்றாகுமறிவேயுண்டெனல்வாக்கியார்த்தம்........*

(இதனதுபதப்பொருள்.)

இகலிலா - விரோதமில்லாத - அறிவுமாத்திரமாகிநின்ற - சின்மாத்திரமாயிருந்த - இலக்கியமாம் - மஹாவாக்கியவிலக்கியார்த்தமாகிய - பிரமம் - பிரமத்தையும் - கூடத்தவுயிர் - பிரத்தியகாத்மாவையும் - கொள்ளில் - அங்கீகரிக்கில் - புகரிலா - குற்றமற்ற - அது - அப்பிரமம் - இது - இக்கூடத்தனே - இது - இக்கூடத்தன் - அதுவேயென்ன - அப்பிரமமேயென்ன - பொருந்து - பொருந்தாநின்ற - தாதான்மியம் - அயிக்கமானது - வந்துறுமெனவே - வருமென்றே - அறிக - அறிவாயாக - பகரிலா - கூறுதற்கரிய - அசிபதம் - அசிபதமே - இவ்விலக்கியார்த்தத்தில் - இவ்விலக்கியார்த்தத்தினால் - பரோட்சம் - பரோட்சமானபரனையும் - அபரோட்சங்கள் - அபரோட்சமானஜீவர்களையும் - மாயா - மாயையினால் - கற்பிதமென்று - கற்பிக்கப்பட்டதென்று - உகவிலாதுணர்த்தி - உண்மையாகத்தெரிவிப்பதே - உறுபலமாம் - அடையப்பெற்ற சடலமாம் - இம்முறையால் - இக்கிரமத்தினால் - ஒன்றாகும் - ஏகமாகிய - அறிவே - சுயஞ்சித்தே - உண்டெனல் - உள்ளதென்பது - வாக்கியார்த்தம் - மேற்கூறிய மஹாவாக்கியத்திற்கருத்தமாம் — எ — று.

இவ்வைந்துகவிதையினால் மஹாவாக்கியத்தின் லக்ஷியார்த்தம்வெளிப்படுத்துவானுதலிய மூன்றுவிலக்கணையினாலுமானவுவமைப்படி தூலமுதலியவற்றிற்சம்பந்தமானகாரியவுபாதிகளைவிட்டவத்தாத்திரயவிலட்சணமான ஜீவதுரியங்கடந்த தீதமாய்நிற்பது கூடஸ்தனெனவும் — விராட்டுமுதலியவற்றுட் சம்பந்தமான காரணோபாதிகளைவிட்டவற்றிற்காதாரமானபரதுரியமுங் கடந்ததீதமாய் நிற்பதுபிரமமெனவும் — இக்கூடஸ்தப்பிரமாயிக்கமானவத்துவிதஸ்வரூபமேபொருளெனக்காட்டியவுவமானவுவமேயங்களாம். அதின்சம்பந்தமியாதெனின், கங்கைக்கண்ணுள்ளவிடைச்சேரிசத்திக்கின்றதென்னுமிடத்தில் அக்கங்கைசத்திக்குமா வெ

ன்றதனைவிட்ட தன்கரையிலுள்ள விடைச்சேரியின்சத்தமெ
ன்றுகாண்பதுபோலத் தூலாதிகளாற்றெரிவிக்கின்றதென்ற
வசனத்தின்சடமானதேகாதிகள்தெரிவிக்குமாவென விட்டத
னிடமாயிருந்தசீவன்றெரிவிக்குமெனக் காண்பது விட்டவி
லக்கணையெனவும்—குந்தஞ்செல்கின்றதென்னில் அக்குந்த
ந்தனிமையசெல்லுமாவென்றதனைவிடாமற்குந்தத்தைச்சுமப்
பவனைக்காண்பதுபோல, ஞானஞ்செல்கின்றதென்னிலஃது
தனிமையசெல்லுமா வென்றதனைவிடாம லதற்காதாரமானவி
ன்புருஷமாகிய வீசனைக்காண்பது, விடாதவிலக்கணையென
வும்—சோயந்தேவதத்தனென்பது, சோ- அவனென்னுமீ
சனே அயம் இவனென்னுஞ்சீவன், தேவதத்தனென்பதிவ்வி
ரண்டினையிக்கமானவஸ்துவாம். இத்தேவதத்தனை யவ்விரண்
டிடத்துங்கூட்டிச்சோ தேவதத்தனென்னின், அங்ஙனமுத
யகாலத்திற்காசித்தலத்தி லில்லறத்தோடுங் கூடியிருந்தவன்
போலவிராட்டாதியவற்றிற்கூடியிருந்தவீசனும், அயந்தே
வதத்தனென்னின், இங்ஙனமர்த்தசாமத்திற்சிதம்பரஸ்தலத்
திற்றுறவோடுங் கூடியிருந்தவன்போலத் தூலாதிகட்குவில
ட்சணனாயிருந்தஜீவனும்வாச்சியார்த்தமெனவும் — உதயார்
த்தசாமமென்னுங் காலமுங் காசிசிதம்பரமென்னுந் தேச
முந்துறவி கிரகஸ்தனென்னும்வேடமுமான விவ்விருத்தத
ருமங்களைவிட்டிவ்விரண்டுகாலத்து மிவ்விரண்டுதேசத்துமி
வ்விரண்டுவேடத்து மிருந்தவ்விருத்தமான வவனேயிவனிவ
னேயவனென்று மொருபுருடனைக் காண்பதுபோல வனு
க்கிரகஞ்செய்த லஃதையடைதலென்னுங் காலமு மகிலாண்
டமண்டமென்னுந் தேசமுஞ்சமஷ்டி வியஷ்டியென்னும்
வேடமுமானவிவ்விருத்த தன்மங்களைவிட் டவ்விரண்டுகால
த்துமிரண்டுதேசத்துமிரண்டு வேடத்துமுள்ளவவிருத்தமா
னவப்பிரமமேஇக்கூடஸ்தனிக் கூடஸ்தனே அப்பிரமமென
வேகமானவிடத்துந் தன்னைவிடாம லவைகளைத் தனதுதேஜ
ஸாய்விட்டிருத்தலின், விட்டுவிடாத விலக்கணையெனவும் -
இஃதே தத்தொமசியென்னுமஹாவாக்கியத்தின் லக்ஷியார்
த்தமெனவுங்கொள்க.

வி௵ - அற்றேல்- இவ்வாக்கியார்த்த விசாரமிங்ஙனங்கூறிய
விருவர்களில்யார்க்கெனின்,

விடை - சீவர்க்கேயாமென்க.

வி௵ - அற்றேல்- சீவன்றொம்பதத்தை விசாரித்தறனீக்

கவேண்டிய தூலாதியவத்தைகளனைத்தையுநீக்கி யதனுட
ன்றன் றுசங்கற்பமும் நீங்கினவிடத்திற் சேடித்தகூடத்த
னேதானுதலின் மேலிவனுக்குத் தற்பதவிசார மியாதுக்
கெனின்,

விடை - இவனந்தர்முகத்திற் றூலாதியவவத்தைகளனைத்தை
யுநீக்கின சீவனுக்குமேனின்ற கூடஸ்தனைத் தரிசித்ததீ
மாயதன்மயமாயினு மச்சீவகூடஸ்த மத்தியிலுள்ள வித்
தையாரூபமானபிரகிருதி நீங்காமலடங்கி நிற்றலினவனி
ங்ஙனதின் றுபாகியப்படும்போதவ் வவத்தைகடோன் றுமாத
லினப்பிரகிருதி நசிக்குநிமித்தந் தற்பதசோதனை பண்ண
வேண்டிற்றென்க.

வினா - அங்ஙனஞ்செய்யாவிடினென்னையெனின்,

விடை - பிரகிருதிநசிப்புஞ்சுவானுபவவிலாசமுமறையுமெ
ன்க.

வினா - அங்ஙனமறைதற்குப்பிரமாணமுளவோவெனின்.

விடை - சொருபானந்தத்திற் றொம்பதத்தி லுபாதிகெடச்
சொருபமதாமதுவே தொன்மைய தாந்தற்பதசோதனை
செயவும்வேண்டுந், தம்பவுடன்மூன்றினுக்குஞ் சீவனுங்
குழூதலாய்ச்சாற்று தன்மாத்திரைப் பகுதிதானுமிருப்ப
தனு,வம்பரிபூரணமறைந்துஞானமின்றிமுனம்போனுடமு
யிராதலினு றதனருட்படியே, யிம்பருபாதியும்போய்நிரு
பாதிகமாமதனுலெப்பேர்ருளப் பொருளாகியிருப்பதுதன்
னியல்பேயென்பதனுற்காண்க.

வினா - அற்றேல்-இங்ஙனந்தற்பத விசாரத்தாற்சீவர்க்குப்ப
யனென்னையெனின்,

விடை - முன்புதொம்பத விசாரத்தாலந்தர்முகத்திற்றூலா
திகற்பனவவத்தைகள் சம்பந்தமான வாச்சியார்த்தசொ
ருபஜீவத்துவம்நீங்கி-லக்ஷியார்த்தப்பிரத்தியகாத்மஸ்வரு
பமானகூடஸ்தனுனதுபோலத் தற்பதவிசாரத்தாற்பாகியத்
திலுள்ளவிராட்டாதி யாகத்தோற்றுமவத்தைகளின்சம்பந்
தமானவாச்சியார்த்த ஸ்வரூபமாகியவீசத்துவம் நீங்கி லட்சி
யார்த்தமானபிரமமாய துவிது வென்னுந்துவிதநீங்கியத்து
விதசுத்தசைதன்னியஞான நிரதிசயானந்தமாய் விளங்கலின்
பிரகிருதிமுதலிய யாவுந்தனது சிற்பிரகாசமாய் விளங்குமக
கப்புறமின்றிய சுவானுபவமாதலேயென்க.

வினா - அற்றேல் - இவ்விசாரமீசன் செய்யாதிருந்த காரணமென்னை, யவனும்விராட்டாதியகாரணோபாதியிற்கட்டுப்பட்டிருப்பதைவிசாரித்தல்லவா வவ்வுபாதிகளைநீக்கி மேனின்றபிரமத்தைத்தரிசித்ததனாதீதமாக வேண்டுமெங்ஙனம்விசாரியாமற்பிரமமாகின்றதென்னையெனின்,

விடை - அவ்வீசன்மாயைமுதலியவவத்தைகளிற்கூடியிருக்கினுஞ்சீவர்களைப்போல மறைப்பின்மையினங்ஙனங்கூடாதலவகட் கதீதமானபிரமத்தைத்தரிசித்ததுவாகவிளங்குவனாதலாலவனுக் கிவ்விசாரம்வேண்டுவதின்றென்க.

வினா - அற்றேல்-இம்மாயாப்பிரதிவிம்பராய்விராட்டாதியவவத்தைகளையுடைய வீசன்பிரமவிசாரஞ்செய்யாதெங்ஙனமாயையை நீக்கிப் பிரமத்தையடைந்தானென்னின்,

விடை - சுத்தமாயையிற் பிரதிவிம்பிக்கும்போதே மறைப்பின்றித் தனக்காதாரமானபிரமத்தைத் தரிசித்தே யிருந்தானென்க.

வினா - அற்றேல் - அவன்மாயையான் மறைபடவில்லையோவெனின்,

விடை - கண்ணுள்ளின்றகண்ணாடிநேரேதடையாயிருக்கினுமதனான்மறைவுபடாமலெப்பொருளும் விளங்கத்தோற்றுவதுபோலச்சுத்தமாயைநின்மலமாதலினஃதிற்கூடியிருக்கினும்பிரமதரிசனத்திற்குத் தடையின்மையின்கூடாதவனேயாமென்க.

வினா-அற்றேல்-இத்தடையின்மைகட்புலனுக்கேயன்றிக்கைப்பரிசத்திற்கின்றாயதுபோலவிச்சுத்தமாயைபிரமத்தையறிதற்குத் தடையின்றேயன்றியனுபவித்தற்குத் தடைதானேயெனின்,

விடை - அவ்வனுபவமாகத்திற் கின்றியறிவிற் கேயாதலினானுமவர்கள்நித்தியமுத்தரென்று சுருதிசொல்லுகையினானுமவர்கட்குத்தடையேயின்றென்க.

வினா - இங்ஙனங்கூறிய சுருதிகளோரிடத்தின் மாயாசகிதனெனவுமோரிடத்தின்மாயாரகிதனெனவுங்கூறியதென்னையெனின்,

விடை - மாயாப்பிரதிவிம்பராயதுகருவியாகச் சிருட்டியாதிகளைச்செய்தலிற்சகிதனெனவும் அம்மாயையின்யதா

ர்த்தஸ்வரூபந் தெரிந்ததன்வசமாகாமலிருத்தலின்ரகித
னெனவுங்கூறிற்றென்க.

வினா - அம்மாயையோடு கூடியிருந்துமதன் வயப்படவில்
லையென்பதற்குமேற்கோளுளவோவெனின்,

விடை- நவநீதகைவல்யத்தில், அச்சுவத்தமென்னொருமரமதி
லிரண்டரும்பறவைகள்வாழும், நச்சுமங்கொருபறவைய
ம்மரக்கனிநன்றுநனறெனத்தின்னு, மெச்சுமங்கொருப
றவைதின்றதெனவிடங்கியப் பொருளாக, வைச்சுமாம
றைசீவனையீசனைவகுத்தவாறறிவாயே, யென்னுங்கவியிற்
காண்க.

வினா- அற்றேல்- இம்மகாவாக்கியவிசாரஞ்சீவனுக்கும்வேண்டு
வதுமீசனுக்குவேண்டாததுமியாதுகாரணத்தாலெனின்,

விடை - சீவன்றனதுகாரணத்தை மறந்தமையாலுமீசன்ம
றவாமையாலுஞ்சீவனுக்கேவேண்டிற்றென்க.

வினா - அற்றேல்- இச்சீவனுக்கு மஹாவாக்கியார்த்தவிசார
மென்பதுமதற்குமுன்பினுள்ளவனுபவத்தையும்விளக்க
வேண்டுமெனின்,

விடை - அவாங்மனகோசரசுயஞ்சைதன்னியநிரதிசயசுகா
னுபவவேத்தியமே, வேதமொழிந்தசச்சிதானந்தம்போ
லத்தோற்றியபர சீவசகத்தாகத்தோற்றும், அவையேயாகமங்
களிலுற்பதிபசுபாசமென்னப்பட்டவற்றை மதங்களனைத்
துமனுஷ்டித்துவரும் - இவற்றிலானந்தமென்பது, பரம்-சி
த்தென்பது, சீவன் - சத்தென்பதுசகம் - இவற்றினடுநிலையா
ய்நின்ற சுகானுபவசங்கற்பரூபமானசீவன் அச்சுகத்திலுதி
த்ததில் விளங்கியதினடங்கித்தனதுமலைப்பினின்று நீங்கித்
தெளிதலினச்சுகவடிவமான வீசனுக்கே பஞ்சகிருத்திய
மெனவும், அதற்கு முன்னிலை சீவனெனவு மவனனுபவத்
திற்குச் சகத்தெனவும்வந்தன, அங்ஙனமுள்ள சீவன்றனது
சுகானுபவநிமித்தம்ஸ்புரணரூபமாயனுபவிக்கப்பகிர்முக
ப்பட்டவிடத்திற் சத்துப்போலத் தோற்றுஞ் சகத்விஷயத்
திற்சுகிக்கவரும்போது ஜநநமுமதிலடங்கும்போது மரண
முமவையேசுகதுக்கமும் நல்வினைதீவினையுஞ்சொர்க்கநரக
முமாதியபலவுமாம். இவற்றில்வருந்துவது சீவர்க்கேயன்றி
யேனையோர்க்கின்றாம், இங்ஙனம்வருந்துவதுந்தனதந்தரங்
கமானசுகத்தைநாடி விஷயத்திலிருப்பதாக வனுபவிக்கும்

போதச்சகமுண்மையின்றித் தோற்றமாத்திரமாய்த் தோன்றி மறைதலாலங்ஙனந் தோன்றும்போது சுகமு மறையும்போது துன்பமுமாயிச் சுகதுக்கமென்னுஞ் சநநமரணப்பிரவாகரூபமான சாகரத்தின் வீழ்ந்தலைகின்றனன். அங்ஙனமலையும்போது சுகஸ்புரணானுபவமேயிவனது சொரூபமாயிருப்பதையறியாத விச்சீவனுக்கேயிவன்யதார்த்தந்தெரிவிக்குநிமித்தமநாதியாகவிளங்கிய நாதரூபமானவேதமிச்சகமென்னுமீசனேயேதற்பதமெனவும், அஃதையனுபவிக்கவந்தஸ்புரணசித்தென்னுஞ் சீவனேயே தொம்பதமெனவும், அவ்விரண்டினதொருமையானவஸ்துவையேயசிபதமெனவும், நுதலியவிம்மூன்றுபதங்களையுமுடையமஹாவாக்கியமெனப்படுத்துக்கூறினவாதலாலிம்மஹாவாக்கியமுமதன்விசாரமுமிச்சீவர்க்கேசிறந்ததென்க.

விஞ - இச்சத்தேசகத்தென்பதற்குமிவ்வாக்கியானுபவமிச்சீவனுக்கேயென்பதற்கு மேற்கோளுளவோவெனின்,

விடை - விளக்குமிரவியுமலருமுண்டா முண்டாம்வீசொளியும்பகற்பொழுதும்விளையும்போலத், துளக்கமில்சித்துண்டாகிலுண்டாகுலந் தோற்றரவுமாத்திரமேசொரூபமாகும், கிளர்த்தபரமார்த்தத்தாலில்லையென்னக்கேட்டதுமேபாற்கடல்போற்கெம்பீரத்தாலளக்கரிதாய்ச்சீதளமாயமலமாகியற்புதமாதின்மொழியென்னண்ணல்சொல்வானேனும் வாசிட்டக்கவியினாலும், ஆனந்தோப்பிரமமெனுமிரண்டாம்வாக்கியத்தினாலகண்டாகார,வாநந்தம்பிரமமாய்த்துன்பறியாவின்பமாமாதலாலே,யாநந்தமாநந்தியெனும்வடிவமிரண்டுமேறவளவிலாத,வாநந்தஞ்சீவனிடத்ததாதலால்வாக்கியத்தினையிக்கங்கூடுமென்னு மஹாவாக்கியக்கவியினாலுங்காண்க,

விஞ - இவைநிற்க,இம்மஹாவாக்கியரூபமான சச்சிதானந்தமே பிரமாதிஸ்தம்ப பரியந்தமு நிறைந்திருக்கின்றனவெங்ஙனமெனின்,

விடை-இச்சச்சிதானந்தாதீதமாகிய சுத்தப்பிரமந்தத்விலாசத்தினாற் றன்னைநோக்குதற்குன்முகமானவிடத்தவ்வின்பத்தாலாயிருத்தலி னவ்வறிவிற்கெட்டாமற் பகிர்முகமானவிடத்தெதிரிட்டுத் தோன்றியவின்பமேவிடயமாகவுமஃதையனுபவிக்கவந்தவறிவேவிருத்தியாகவுமிங்ஙனப்பிரிவுபட்டவிடத்திற்றோன்றுஞ்சகத்தே மூலாஞ்ஞானமுமாம், இஃ

துநீக்க,முற்கூறியவறிவினுளாநந்தமுமாநந்தத்துளறிவுமாய்ப்பிரதிபலித்தேகதேசத்திற் பிரகிருதிமுதற்பிண்டபரியந்தங்கற்பிதமாகத்தோன்றிநின்றன விவற்றிற் காதாரமானவறியாமையாங்காங்குமறைத்துநின்றன,இம்மறைப்பையுடையசிற்றறிவுமதனாலனுபவிக்குஞ்சிற்றின்பமுமுடையஜீவன்கந கன்மநிஷ்காமபுண்ணியபரிபாகத்தினாற்சித்தசுத்தியுமதனாற்சாதனசதுட்டயமுமதனாற்சற்குருகடாட்சமும்பெற்றதனுலாத்மவிசாரஞ்செய்யத்தொடங்கிமுன் பிரதிபலித்திறங்கியவிடயஞானத்தினாலனுபவித்துக் கொண்டிருந்தவிடயாநந்தரூபமானதூலாதிமூன்றுசரீரமுமவித்தையெனக்கண்டவற்றை நீக்கினவிடத்தாங்காங் கொன்றற்கொன் றதிகரிப்பாய் வியாபித்திருந்தவிசுவாதி மூன்றறிவுமதனாலனுபவிக்குஞ்சிற்றின்பங்களுங்கண்டப்பாற் றுரியவறிவுமதனாலனுபவிக்கும்பேரின்பமுங்கண்டவைக ளொருமைப்படமேல கூடஸ்தனெனவகத்திற்றெளிந்ததேதொய்பதவிசாரமாம். இவற்றாலவித்தையாரூபமானபடிவங்கணீங்கின,இதுநிற்கமுற்கூறியகூடஸ்தனதொருமையால சித்ரூபமாகிய விராட்டாதிமூன்றுசரீரமும், வித்தையெனக்கண்டவற்றை நீக்காமனீக்கினவிடத்தாங்காங்கொன்றற்கொன்றதிகரிப்பாய் வியாபித்திருந்தவைசுவானராதியவிம்மூன்றறிவுமதனாலனுபவிக்குமாநந்தமுங்கண்டப்பாற்பரதுரியமானவறிவுமதனாலனுபவிக்கும்பரமாநந்தமுங் கண்டவைகளொருமைப் படமேல பிரமமெனப்புறத்திற்றெளிந்ததே தற்பதவிசாரமுமாம், இவற்றான்மாயையும்,வித்தையாரூபமானபடிவங்களனைத்துநீங்கினவிச்சீவனேயவித்தைநீங்கின்வித்தையாரூபமானவீசனுமென்பதற்குமேற்கோள், துரியமாகியபோதமோர் துளக்கமற்றனைத்தின்,கரியதாயிருந்திடம்பரனை யெனக்கண்டேனென்னுஞ்சசிவன்னபோதக்கவியிற்காண்க, இங்ஙனங்கூறியவதுவென்னும்பிரமமேநீயென்னுங் கூடத்தன் நீயென்னுங்கூடத்தனேயதுவென்னும்பிரமமெனக்கலப்பதேயசிபதவிசாரமாம். இவற்றாற்பிண்டாண்டங்களுமவித்தாவித்தைகளுங் கிஞ்சிஞ்ஞத்துவசர்வஞ்ஞத்துவங்களுமாகியவிவற்றையொருமைதோலுமற்செய்தலாலுஞ்ஞானமுமான வித்துவிதங்கணீங்கிநிரத்சயாநந்த விளக்கம்ம யுண்மையான வத்துவிதஸ்வரூபமாம். இஃதேதமுத்துரியமுங்கடந்தகுருதுரியமாம். இங்ஙனம்விளங்குதன் முற்கூறியஜீவனதுயதார்த்தசொரூபமா

தலாவிவனுக்கே மஹாவாக்கியவிசாரமு மதனாலுள்ளநிரதி சயாநந்தவனுபவமுமாமெனக்காண்க.

(இவ்வைத்துகவியினது தாற்பரியம்.)

முற்கூறியவுவமானவுவமேயப்படி பரமாத்மாயிக்கியமான வத்துவித சுயஞ்சைதன்னியமேயாவுமாய் விளங்குகின்றதெ ன்பதாம். (௱௨௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியமஹாவாக்கியார்த்தமென்னுமொன்று ஞ் சுபாவசித்தமான வத்துவிதமாகவிளங்க மத்தியிற்சீவேச கூடத்தப்பிரமமாகப்பிரிந்து மொருமையுமானகற்பனையா கந்துகமாய்த்தோற்றி நீங்கிற்றென்பதற்குவமானமுணர்த்து கின்றது.

(கவி.)

தூயதத்தொமசிமகாவாக்கியத்தினாலே............*
துரியபரத்துளதேகத்துவமென்கைகடாதி............*
யாயவுபாதிகளகற்றிவிசும்பொன்றேயெனவு............*
மகற்றிமனிதத்தன்மையிராமனைநீதானே............*
மாயவன்காணெனவுங்கன்னனைவேடுகழித்து............*
மகன்குந்திக்கெனவுமொருதசமனைமாய்த்துயரம்......*
போயகலவொழித்துநீயேதசமனெனவும்............*
புகலுதல்போற்சுபாவசித்தமாகுவதேயன்றி............*

(இதனதுபதப்பொருள்.)

தூய- பரிசுத்தமான - தத்தொமசி - தத்தொமசியென்கின் ற - மகாவாக்கியத்தினால் - மஹாவாக்கியத்தினால்விளங்கிய- துரியபரத்து-கூடத்தப்பிரமத்திற்கு-உளது-உள்ளதான-ஏ கத்துவமென்கை- அயிக்கத்துவமென்பதெங்ஙனமெனின்- கடாதியாய-கடாகாயமுதலிய-உபாதிகள்-நான்குபாதிகளை யும்-அகற்றி - நீக்கி- விசும்பு-ஆகாயம்- ஒன்றேயெனவும்-ஏ கமெனவும் - அகற்றிமனிதத்தன்மை- மானிடத்தன்மை யை நீக்கி-இராமனை-இராகவனை-நீதானே - நீயே-மாயவன்கா ணெனவும் - திருமாலெனவும்- கன்னனை-கர்ணனை- வேடுக ழித்து- வேடத்தன்மையை நீக்கி- குந்திக்கு-குந்திதேவிக்கு- மகனெனவும்-புத்திரனெனவும்- ஒருதசமனை-பத்தாவானை

யவோர்புருடனை-மாய் துயரம்-மரண துன்பம்- போயகல- நீங்கும்படி-ஒழித்து-நீக்கி- நீயேதசமனென - நீயேபத்தாவானெனவும்- புகலுதல்போல்- சொல்லுதல்போல-சுபாவசித்தமாகுவதே- சுபாவசித்தமாவதே-அன்றி-அல்லாமலும்- ஏ—று-ஏ-தான்-அசை.

கடமென்றது - அதனுள்ளிருக்குமாகாயமும் ஆதியென்றமையின்-கடசலப்பிரதிவிம்பாகாயமுமகாகாயமுமேகசலப்பிரதிவிம்பாகாயமுங்கொள்க, சுபாவசித்தமென்றது, சுபாவம்-இயற்கை- சித்தம்-நிசம்-எனவே, பிரமத்திற்சீவேசரெனப்பிரிந்ததும் விசாரத்தினாலொன்றுபட்டது மியல்பாகவேயின்றென்க. அன்றியுமென்பது, அன்றியெனவும்மைதொக்கிநின்றது- அவ்வும்மைமேற்கூறுவதைக்காட்டுப, சுயவாகாயத்திற்குக்கடாகாயமாதிய நான்குபாதியும்வந்தது நீங்கினதும், திருடனுக்கிராமனென்னு மனிதத்தன்மைவந்து நீங்கினதும், கன்னனுக்குவேடத் தன்மைவந்து நீங்கினதும், பத்தாவானுக்கு, மரித்தானிருந்தானென்னுமுபாதிவந்ததும் நீங்கினது மெங்ஙனஞ்சுபாவமாயின்றோவங்ஙனமே சுயஞ்சைதன்னியத்திற் சீவேசரபேதம் வந்ததும்நீங்கினதுமின்றிச் சுயமாகவே யாவுந்தற்பிரகாசமாய் விளங்குகின்றதெனக்காண்க,

(இதனதுதாற்பரியம்.)

வேதாந்தத்தினுள்ளமஹாவாக்கியார்த்த நிச்சயமானபிரமஸ்வரூபத்திற் கிவ்வுபாதிகள்வந்ததும் போனதுமின்றியென்றுஞ்சமோதயமாய்விளங்குகின்றதே யதார்த்தமென்பதாம்.

(அவதாரிகை.)

முன்மஹாவாக்கியத்தாற்கூறியபேதாபேதமின்றியவத்துவிதவஸ்துவானசுபாவசித்தமே சுருதிசம்மதமெனத்தோன்றவிங்ஙனஞ்சுருதிவிரோதமாகிய பேதாபேதமான அர்த்தவாதமுதலேகாதசவாதங் கூறுவான்றொடங்கியிச் செய்யுளிற்சவிதபேதவாதமுணர்த்துகின்றது.

(கவி,)

ஒருமலர்க்குத்துறக்கமெனல்போன்முத்திவிருப்ப .....*
முதவருத்தலாதமெழிற்பதுமைமையத்தேவெனல்போ *

வீருமைதருமுபாசனுபரமணிதன்றன்னை ............ *
யிந்திரனென்பதும்போலத்துதிபரமாளினையே .......... *
யருமரசென்பதும்பாலவுபசாரிகத்தா ............ *
னக்கினிமாணவகனெனும்வாக்கியமேபோல ......... *
வுரிமைதருசகுணசாதிரிசமிதுகோவி ............ *
னுடம்பென்கைபோற்சாதிவியத்தியாமன்றே ........ *

(இதனபதப்பொருள்)

ஒருமலர்க்கு - அருச்சித்தவோர்புஷ்பத்திற்கு - துறக்கமெனல்போல் - சுவர்க்கம்வருமென்பதுபோல - முத்திவிருப்பம்-மோட்சவிச்சையை - உதவு-தருவது - அருத்தவாதம்-அருத்தவாதமும்-எழிற்பதுமையை- அழகுள்ளவிக்கிரகத்தை-தேவெனல்போல்-தேவதாரூபமென்பதுபோல - இருமைதரும்-பெருமையைக்கொடுக்கின்ற உபாசனுபம் - உபாசனுபமும்- மனிதன்றன்னை-மனிதனை - இந்திரனென்பதுபோல - தேவேந்திரனென்பதுபோல- துதிபரம்- துதிபரமும்-ஆளினை-அடிமையை- அருமரசென்பதும்பால - அரியவரசனென்பதுபோல - உபசாரிகம்- ஔபசாரமும் - அக்கினிமாணவகனென்னும் - இப்பிரமசாரியக்கினியென்னும்-வாக்கியம்போல - வாக்கியத்தைப்போல - உரிமைதரு-ஒன்றற்கொன்றுரித்தாகிய-சகுணசாதிரிசம்- சகுணசாதிரிசமும்.இது- இவ்வவயவங்கள் - கோவினுடம்பென்கைபோல்-பசுவின்றேகமென்பதுபோல- சாதிவியத்தியாம்- சாதிவியத்தியுமாம்—எ—று-அன்றே-அசை.

சகுணசாதிரிசமென்றது, சகுணம் - குணம் -சாதிரிசம்-ஒப்பு- எனவே, ஒன்றின்குணத்தைமற்றொன்றின்ரூபகப்படுத்தல். சாதி-வேற்றுமை-வியத்தி-ஒற்றுமை. அபேக்ஷித்தவாலடையக்கூடாதவஸ்துவை ஈசுரனுடையவியல்பானசொரூபத்திலொருபுஷ்பார்ச்சனைசெய்தாலதற்கே சொர்க்கபலங்கிடைக்குமென்ற கன்மகாண்டவசனம் போலவொருவனுக்குநிராசையினுலுண்டான முத்திவிருப்பத்தினு லடையலாமென்ற-அருத்தவாதமும், சிந்திக்கப்படாதவஸ்துவையொருவிக் கிரகத்தினிடத்திற் றனதுபிரியத்தை வைத்தன்போடுமுபாசிக்குமுபாசனையே தேவதாரூபமாய்த்தன திஷ்டப்பிராப்திதருவதுபோல வெதிரிட்டவஸ்துக்களைத் தனதுருவமாகச்சித்தித்தலினச்சிந்தனையாலடையலாமென்ற வுபாசனு

பரவாதமும், புகழ்ந்தற்கடங்காத வஸ்துவை மனிதனைத்தேவனாகத்துதிக்கினத்தேவனாவதுபோலச் சீவனைச் சிவமாகத்துதித்தலிற்சீவனே சிவமாகவடையலாமென்ற துதிபரவாதமும், பெருமை சிறுமையின்றிய வஸ்துவை அனையரசனென்பதுபோலவடியார்களாகிய சீவர்களடிகளாகிய சிவமாகவுபசரித்துக்கூறுதலா லடையலாமென்ற வுபசாரிகவாதமும், உருவகப்படாத வஸ்துவையக்கினியை மாணவகனென்பதுபோலச்சிவத்தின்குணத்தைச் சீவனிடத்திற் காண்பித்தசகுணடையலாமென்ற சகுணசாதிரிசவாதமும், உறுப்பில்லாத வஸ்துவையலிதாடிமுதலியவவயவங்கள் கோவின்வடிவமாகவிளங்குதல்போலச் சீவேசுரசகத்துக்கள் சிவத்தினவயவங்களாய்விளங்கலா லடையலாமென்ற சாதிவியத்திவாதமுமாமெனவுங்கூறினர்- இங்ஙனங்கூறுதற்கு மேற்கோளுளவோவெனின், நிர்மல - காலானமுதற்பூமிகைவந்தான்முத்தியுங்கைவந்ததாமேயெனவும்; ஐயமின்றித்தெய்வ வுருக்தியானித்தலதுவாமெனவும், சீவன்சிவலிங்கமாகுமவர்க்கேபாவங்கள்போகும்பறந்தெனவும், ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார்சடைக் கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீரியாம்வணங்குங் கடவுளாரே யெனவும், உயிர்சச்சிதானந்தவடிவா மெனவும், பலபொழுதுங்கண்மூடிச் சமாதியிருந்தான்விழித்துப்பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித்திரங்களெல்லாத் தோன்றுமொரு படமானனேயெனவும், உரைத்தனுற்காண்க-

(இதனுதாற்பரியம்.)

இங்ஙனங்கூறிய சடுவிதவாதமும்பேதமானது, அபேதமென்றலிற்சுருதி விரோதமென்பதாம். (௱௨௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முன்னிறுத்த முறையானைந்துவிதவபேதவாதங்களினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

கடத்தொடுமட்கநதியமென்வாக்கியமேபோலக் ..........*
காரியகாரண நீலோற்பலமெனும்வாக்கியம்போல் ......*
விடுப்பில்குணகுணிதயிர்பாற்கபேதமெனல்போல்......*
விகாரமேவாரிகணங்கட்கேகமெனல்போ ..........*

லடுத்தவஞ்சாஞ்சிகம்விம்பப்பதிவிம்பங்களினுக் ........ *
கயிக்கமெனல்போல்விம்பப்பதிவிம்பவாத ... ....... *
மெடுத்துணரிலெனவிங்ஙனபேதபரமாக ...... ....... *
விசைப்பனவெலாஞ்சுருதிவிரோதமெனவறியே ......*

(இதனுபதப்பொருள்.)

கடத்தொடு-கடத்துடன்-மட்கு- மண்ணினுக்கு-அநந்யமென்-ஏகமென்கின்ற- வாக்கியமேபோல- வாக்கியத்தைப்போல- - காரியகாரணம்-காரியகாரணவாதமும்-நீலோற்பலமெனும்- நீலநிறமுடையவுற்பலமென்கின்ற - வாக்கியம்போல் - வாக்கியத்தைப்போல-விடுப்பில்- நீக்கமின்றிய-குணகுணி- குணகுணிவாதமும்- தயிர்-ததியானது- பாற்கு க்ஷீரத்திற்கு- அபேதமெனல்போல- ஏகமேன்பதுபோல- விகாரம்-விகாரவாதமும்- வாரி-சலமானது- கணங்கட்கு- அலையாதியகூட்டங்களுக்கு-ஏகமெனல்போல- ஒன்றென்பதுபோல-அடுத்த- அடைந்திருக்கின்ற- அஞ்சாஞ்சிகம்- அம்சாம்சிகவாதமும் - விம்பம்- விம்பத்திற்கும்- பதிவிம்பங்களினுக்கு - பிரதிவிம்பங்களுக்கும் - அயிக்கமெனல் போல் - ஏகமென்பதுபோல்-விம்பப்பதிவிம்பவாதமென- விம்பப்பிரதிவிம்பவாதமுமென - எடுத்துணரில் - இவற்றைத்தாக்கிவிசாரிக்குமிடத்தில்-இங்ஙன்- இவண்-அபேதபரமாக- அபேதமாக- இசைப்பனவெலாம்- சொல்லுவனயாவும்-சுருதி-பரமாத்மவயிக்கியங்கூறியசுருதிக்கு - விரோதமெனவறியே- விருத்தமேயாமென்றறிவாயாக—ஏ—று-ஏ-ஈற்றசை,

இப்படியென்னுஞ் சுருதிவிரோதமென் றமையான்முற்கூறியநான்குஞ்சுருதிசம்மத மெனவாயிற்று, ஆதாரவாதேயரகிதமான வஸ்துவிற்கவையமைத்துக் கூறுகின்ற காரணகாரியவாதமும், பண்புபண்பிரகிதமான வஸ்துவிற் கவையமைத்துக்கூறுகின்றகுணகுணிவாதமும், அவிருத்தவிருத்தாகிதவஸ்துவிற்கவையமைத்துக் கூறுகின்றவிகாரவாதமும், ஒன்றேபலவுமாகாதவஸ்துவிற்கவையமைத்துக்கூறுகின்ற-அம்சாம்சிகவாதமும், ஒன்றிக்கூடிமற்றொன்றாகத் தோற்றாதவஸ்துவிற் கவையமைத்துக்கூறும் விம்பப்பிரதிவிம்பவாதமுமாம், இவ்வைந்துவாதமும்பேதத்திற்கபேதஞ்சாதித்தல். காரணமாகிய மிருத்திகை காரியமாகிய கடமாகச் சொல்லுதல் காரணகாரியவாதமும், குணமாகியநீலநிறங் குணியா

யெவற்பலத்தி லிருக்கிறதென்று சொல்லுதல் குணகுணிவா தமும், ஒன்றன்றன்மைகெட்டு மற்றொன்றாகச் சொல்லுத ல்-விகாரவாதமும், அமிசமானஜலம் தன்னமிசங்குமிழியா கச்சொல்லுதல்- அமிசாம்சிகவாதமும், விம்பமாகியசூரிய ன்- சலத்திற்பிரதிவிம்பமாகக்காட்டுதல் - விம்பப்பிரதிவிம் பவாதமுமாம், இங்ஙனமாகவிவைகளை யபேதத்துவம்பே சினுமறிதற்கரிதமானவஸ்துவை யறிந்ததிலதீதமாகு நிமித் தஞ்சாதனமாகக் கற்பித்துக் கூறினதேயன்றி யதார்த்தமன் றுதலிற்சுருதி விரோதமென்றார்.

வினா - அற்றேல்-அதீதமான யதார்த்தமறிதலான கற்பனைக் கெங்ஙனங் கிடைக்குமெனின்,

விடை - பலகறைதேடவிரத்தினங் கிடைத்ததுபோற் கிடை க்குமென்க.

வினா-இங்ஙனங்கிடைத்தல்விடயம் அஃதிஃதன்றேயெனின்,

விடை - ஒன்றைத்தேடவொன்றுகிடைத்தல்போல-வறிதலை த்தேடவதீதங்கிடைத்ததென்க.

வினா - அற்றேல்- தேடினது கிடைக்குமேயன்றித் தேடாத தெங்ஙனங்கிடைக்குமெனின்,

விடை - தேடல்பொருணயத்தைப்பற்றியாதலிற் பலகறைந யத்திற்கிரத்தினத்தின்னய மளவின்மையாதல்போலவறி தலின்பநயத்தைப்பற்றியாதலினிவ்வறிதலின் பத்திற்கதீ தவின்பமளவின்மையி னவ்வின்பத் தேடாததேட்டத்தா ற்றானேவருமென்க.

வினா - அற்றேல்-சுவானுபவத்திற்குப்பிரயோசனமின்றிய வாதங்களைச்சுருதிகூறிய தெற்றினுக்கெனின்,

விடை - கடவுபாதிநீங்கின கடாகாயத்திற்கு மகாகாயத்திற் குமயிக்கம்வருவதுபோல- மூலாஞ்ஞான நீங்கினகூடஸ் தனுக்கும் பிரமத்திற்குமயிக்கஞ்சொல்லு நிமித்தங்கடா காயமகாகாயமெனக்கூறினதாமலென்க.

வினா - மெய்யான விம்பசூரியனிடத்திற் சலவுபாதிநீக்கின போததிற் பொய்யாகத்தோன்றிய பிரதிவிம்பசூரியனயி க்கியமாகவில்லையோவெனின்,

விடை - சலவுபாதிநீங்கவே, யக்கற்பனைசூரியனும் நீங்கல் மாத்திரமேயன்றியயிக்கியமாகவில்லையென்க, ஆயினும்

வேறுதோன்றாத பிரயோசனத்தைக்கருதி யயிக்கியங்கூறின
துபோலப்பிரமத்திற்குஞ் சகத்திற்கு மயிக்கியங் கூறினதே
யன்றி இச்சகத்தோன்றற்குக்காரணமானமாயை பிரதிவிம்ப
சூரியன்றோன்றற்குக்காரணமானசலம் விம்பசூரியன்கிரண
த்திற்சோஷித்ததுபோலப்பிரமப்பிரகாசத்திற் சோஷிக்கித்
பிரமமேசுயாவமாக விளங்குமென்பது தோன்றக்காரணமா
ணபிரமங்காரியமானசகம்போலத்தோற்றிற்றெனக்கற்பனாவ
யிக்கியங்கூறல், யதார்த்த வயிக்கியத்தோன்றத்தே பூருவபட்
சமாகச்சுருதிகூறினதேயன்றிச் சித்தாந்தபட்சமன்றென்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

யதார்த்தத்திற்கும் யதார்த்தத்திற்குமயிக்கியமேயன்றி-யதா
ர்த்தத்திற்குங் கற்பனைக்கு மயிக்கிய மின்மையாற் சுருதிவி
ரோதமெனக்கூறியதாம். (௱௨௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்பூருவபட்சமாகக் கூறிய சுருதிவாக்கியத்தினா
ற்சித்தாந்தமாகிய முத்தியெங்ஙனங்கூடுமென்றவினாவிற்கு
வமான பூருவகமாகக்கூடுமென்பதற்குத்தரமுணர்த்துகின்
றது,

(கவி.)

அவ்வகிலங்கட்கெலாம்பொய்ம்மையேபுகலு ............ *
மரியதாம்வேதாந்தபக்கமதிலினைய ........................ *
வெவ்வமறுசுருதிவிசாரத்தினாலுண்மை ...................... *
யெனுமுத்திகூடுமெனவெவ்வாறிங்கென்னி ............ *
லவ்வியமென்சொப்பனமாதனைவினான்மெய்ம்மை........ *
யாயவீரியவொழிவுங்கற்பிதமாம்வடிவிற்.............. *
செவ்வியவொண்கடவுள்வழிபாட்டினாவிட்டஞ் .... ....... *
சேர்தலும்போனாலுணர்வான்முத்தியுஞ்சித்திக்கும் ... *

(இதனதுபதப்பொருள்.)

அவ்வகிலங்கட்கெலாம்- முற்கூறியதிரிசியரூபமானபிரபஞ்
சங்களனைத்திற்கும்- பொய்ம்மையேபுகலும்- மித்தியாத்து
வமேசொல்கின்ற- அரியதாம்- அறிதற்கரிதான- வேதாந்த
பக்கமதில்-வேதாந்தபட்சத்தில்- இனைய-இத்தன்மையான-

எவ்வமறு-துன்பநீங்குதற்கேதுவான- சுருதிவிசாரத்தினால்-வேதவிசாரணையினால்- உண்மையெனும்- மெய்யென்ற-முத்தி-வீடானது-கூடுமெனல்- அதையுமெனச்சொல்லுதல்-எவ்வாறிங்கென்னில்- இவணெங்ஙனமென்றால்-அவ்வியமென்- வடிவமில்லையென்னும் - சொப்பனம்- கனவிற்கண்ட-மாதுணைவினால்- பெண்ணைக்கூடின்- மெய்ம்மையாய-மெய்யான- வீரியவொழிவும் - இந்திரியம்விடுதலும்- கற்பிதமாம்-கற்பியாநின்ற- வடிவில்-விக்கிரகங்களில்- செவ்விய-செவ்விதான - ஒள்கடவுள்- அழகியதேவினை-வழிபாட்டினால்-வழிபடுதலினால்- இட்டஞ்சேர்தலும்போல்- இஷ்டப்பிராப்தியுமுண்டாவதுபோல- நூலுணர்வால் - சுருதிஞானத்தால்-முத்தியுஞ்சித்திக்கும் - வீடுமுண்டாகும்—எ—று.

அவியமென்பது, அவ்வியமென்வெதுகை நோக்கிவந்தது,அ-நீக்கம்-வியம்-வடிவம்-எனவே,பொய்வடிவமாயிற்று. பொய்யானபெண்ணைக்கூடின் மெய்யானவீரியமும், பொய்வடிவத்தைத்தேவெனவுபாசித்தலின் மெய்யானவிஷ்டப்பிராப்தியுமுண்டாவதுபோலச் சித்திலக்கணம் வெளிப்படுத்து மவிப்பிராயமுட்கொண்ட சுருதிசடத்தினிலக்கணம் வெளியாகக் கூறினுமதன்கருத்தை யுணரும்போததனந்தரங்கமானசித்தே வெளிப்படுமெனக.

விரு - அற்றேல் - சுருதிகற்பித்துக் கூறியபொய்யினலான மெய்யும்பொய்யாக வேண்டுமேயன்றிமெய்யாதற்கேது வென்னையெனின்,

விடை - பொய்யானசொப்பனசிம்மத்தால் மெய்யானசாக்கிர முண்டாவதுபோல மெய்யேயாயிற்றென்க, இதற்கு மேற்கோள்-சுத்தியில்வெள்ளிபோலத்தோன்றியதோற்றமான,சத்தியும்பொய்யேயென்றற்சத்திசாதனமாவத்த,முத்தியும்பொய்யா மென்னின் மோகதித்திரை விலங்கா,னித்திரைதெளியுமாபோ னிருவாணநிலைமெய்யாமே, யென்றகைவல்யநவநீதத்தாற்காண்க.

(இதனதுதாற்பரியம்-)

சுருதிகூறியகற்பிதத்தினும் யதார்த்தாம்சமே விளங்கலினில்வெளிப்படும் பிரயோசனமும் யதார்த்தமே யாமென்பதாம்.

(ஈஉஅ)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிங்ஙனஞ் சுருதியினல்ஞான முண்டாயினுமதற்குமுரணானவஞ்ஞானாதி மூன்றினிலக்கணமு மவற்றைநிவிர்த்திக்குஞ்சிரவணாதிமூன்றினுமமுமுணர்த்துகின்றது.

(கவி.)

அருமையெனுமுத்திவிலக்காகமூன்றுளவா.............*
மஞ்ஞானமையம்விபரீதமெனவவற்றுட்.............*
பிரமமலனென்கையஞ்ஞானநானப் .... ..... ........*
பிரமமோவலனோவென்றிடலையஞ்சுருதி ..............*
வருமினியயுத்திகளானான்பரமாயினுமூன் ..............*
வளர்சிவபாவமுண்டென்குதல்விபரீதந்தான் .... ... ...*
தருமுறையிலஞ்ஞானாதிக்குமுரணாகுஞ் .. ..... ......*
சவணமொடுமனனநிதித்தியாசனங்களன்றே...........*

(இதனதுபதப்பொருள்.)

அருமையெனும்- அறிதற்கரிதென்கின்ற - முத்தி-மோட்சமடைதற்கு-விலக்காக- விக்கினமாக-அஞ்ஞானம்- அஞ்ஞானமும் - ஐயம்-சந்தேகமும் -விபரீதமென- விபரீதமுமென-மூன்றுளவாம்- மூன்றுள்ளனவாம் - அவற்றுள்- அவைகளுக்குள்-நான் - யான் - பிரமமலனென்கை- பிரமமல்லவென்றுசொல்லுதல் - அஞ்ஞானம்-அஞ்ஞானமாம் - நான்-யான்-அப்பிரமமோ - முற்கூறியபிரமம்மா - அலனோவென்றிடல்- அல்லனோவென நினைத்தல்-ஐயம்- சந்தேகமுமாம்-சுருதி-சுருதியினானும்- வரும்-அதனால்வராநின்ற - இனியயுத்திகளால் - இனிமையானயுத்திகளினாலும் - நான் - யான்-பரமாயினும்-பிரமமானாலும்-மூன்வளர்- முன்றேகமேயாமெனவர்த்தித்த- சிவபாவம்-சிவத்தன்மை- உண்டென்குதல்-எனக்கிருக்கின்றதென்பது - விபரீதம்- விபரீதமாம்- தரும்- இங்ஙனம்வந்த-முறையில்-கிரமப்படி- அஞ்ஞானாதிக்கு- அஞ்ஞானாதிமூன்றிற்கும்- சவணமொடு- சிரவணத்துடன்- மனனம்-மனனமும்- நிதித்தியாசனங்கள்-நிருத்தியாசனமுமானமூன்றும்-முரணாகும் - விரோதமாம்—எ—று-தான்-அன்றே-அசை.

முறையினென்றமையின், சவணமஞ்ஞானத்தையும், மனன

மையத்தையும், நிதித்தியாசனவிபரீதத்தையும்விலக்குமெனக்கொள்க. (௱உ௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசிரவணாதியினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

சூதகாதிகளினிடைச்சுருதிவிசாரத்தாற் ................*
றுணிவுதோன்றுதலெனவேசிவமொடுயிரயிக்க.........*
மோதுமாரணமொழியின்றாற்பரியங்கேட்கை...........*
யுயர்சவணங்கேட்டபொருளுத்தியிற்சிந்தித்த .........*
றீதின்மாமனனமவற்றாற்றுணிந்தபொருளிற்..............*
சித்தமசைவறவிருத்தனிதித்தியாசனந்தான்...........*
மேதையாகியசவணஞானத்தாலான்மா ..................*
மெய்ம்மையாமுக்கியத்தாற்சவணமங்கியெனலாம் ...*

(இதனதுபதப்பொருள்.)

சூதகாதிகளினிடை-ஆசௌசமுதலியவற்றில் - சுருதி-சுருதியிற்கூறும் - விசாரத்தால் - கன்மகாண்டவிசாரணையால்-துணிவு - திடபுத்தியானதெளிவு - தோன்றுதலெனவே- உண்டாதல்போலவே- சிவமொடு- பிரமத்துடன்- உயிர்-கூடத்தன்-அயிக்கம்-அயிக்கத்தை-ஓதும்- ஞானகாண்டத்திற்சொல்லும்- ஆரணமொழியின் - வேதவாக்கியத்தின்-தாற்பரியம்-அபிப்பிராயத்தை - கேட்கை - திடபுத்தியோடுமாசிரியமுகமாய்க்கேட்பது- உயர்சவணம் - மேலானசிரவணமாம்-கேட்டபொருள்- இங்ஙனங்கேள்வியானபொருளை - உத்தியில்-யுத்தியினால்-சிந்தித்தல்- சிந்திப்பது- தீதில்-குற்றமற்ற-மாமனனம்- மாட்சிமையுள்ளமனனமாம்- அவற்றால்-அவ்விரண்டினால் - துணிந்தபொருளில்- தெளிந்தபிரமவஸ்துவில்-சித்தம் - சித்தமானது- அசைவறவிருத்தல்- நிச்சலமாயிருப்பது- நிதித்தியாசனம்- நிதித்தியாசனமாம் - மேதையாகிய- மேன்மையாகிய - சவணஞானத்தால்- சிரவணத்திலுத்தமமானஞானத்தினால்விளங்கிய - ஆன்மா-ஆத்மாவே - மெய்ம்மையாம்-உண்மையாம்- முக்கியத்தால்- அம்முக்கியத்தின்

ல்: சவணம் - சிரவணமே - அங்கியெனலாம் - அங்கியென்று சொல்லலாம் — ஏ — று - தான் - அசை.

சிரவணத்திற்கு, அங்கியையுவமித்தல். அங்கியென்பது, அங்கங்களையுடையது; எனவே, சவணமங்கியும், ஏனையவிரண்டுமங்கங்களாம், இவற்றைமேற்கூறுப.

சென்மாந்திரப் பழக்கத்தினாற் கற்பிதமாகியசடங்கின்சித்து தோற்றத்தால் தான்சித்தென்பதைமறப்பது அஞ்ஞானமாம், இதனைக்கெடுப்பதிச்சடத்தைக்காண்பவன் சித்தேயென்னுங்கேள்வியே சவணமாம், இக்கேள்வியிருந்து மடிக்கடிசடந் தோற்றலால் நான்சித்தோவல்லோவெனமயங்கல்-ஐயமாம், இதனைக்கெடுப்பது முன்னுள்ள சித்தாத்தானெனக்கண்டதைச சிந்தித்திருக்கின்றதே மனனமாம், இச்சிந்தனத்தாலுண்டான சித்துத்தானாகினு முற்கூறியசகசீவபாவமுண்டெனக்காணுதல்விபரீதமாம், இதைக்கெடுப்பதுமுற்சிந்திப்பினுதித்ததுதானாகிய சித்தேயாவுமாய் விளங்குகின்றதென்றறிந்ததே தெளிவான நிதித்தியாசனமாம்.

(இவ்விரண்டுகவியினுந்தாற்பரியம்.)

சுவானுபவத்திற்கு விலக்கான வஞ்ஞானாதிகள் வரினவற்றையாங்காங்கு சிரவணாதிகளி னனுஷ்டானத்தினாற்கெடுக்கவேண்டுமென்பதாம். (௱௯௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசிரவணாதிமூன்றிற்சிரவணமேமுக்கியமெனத்தோன்ற வேனையவிரண்டுங்கவுணமெனவிவ்விரண்டினிலக் கணங்களுவமான பூருவகமாக வுணர்த்துகின்றது.

(கவி.)

ஏனையவோரிரண்டுமதன்றுணையெனலாலங்க ............ *
மெனலாகுமஃதெவ்வாறெனிற்பொருள்கடிகழ்ந்து ... *
மாண்டோர்சுடரசைவிற்கருமவலியின்று ... ... ......... *
மாதலினல்வளிதடுக்குந்திரையெனலாமனன ....... ... *
மேனிமிர்வான்றிரிதூண்டியொளிர்வித்தல்போலும் ...... *
விளம்புநிதித்தியாசனமென்றறிந்திடுகதெரிந்து .... .... *
மோனமாமெனவுரைத்தசவணத்திற்குள்ள ......... *
முறையிலதுவகையிலிந்தாற்பரியமுரைப்பாம் ....... *

(இதனதுபதப்பொருள்.)

வினைய-மற்றைய - ஓரிரண்டும்- மனனநிதித்தியாசனமென்றவிரண்டும்-அதன்- அச்சிரவணத்திற்கு- துணையெனலால்- சகாயமென்பதனால்- அங்கமெனலாகும் - அங்கமெனப்படும்-அஃதெவ்வாறெனில் - அஃதெங்ஙனமென்றால்-பொருள்கள்- இருட்டின்கணுள்ளவஸ்துக்களை - திகழ்த்துமானது-விளக்குவித்தலாகிய - ஓர்சுடர்- ஓர்விளக்கினது- அசைவில்-சஞ்சலாவத்தையில் - கருமவலி - பொருளை விளக்குவிக்குந்தொழிலின்வல்லமை - இன்றாம்- இன்மையாம் - ஆதலினால்- ஆதலால்-வளிதடுக்கும்-அக்காற்றைத்தடுக்கின்ற- திரையெனலாம்- திரையென்பதே- மனனம்-மனனமும்- மேனிமிர்வான்-அத்தீபமேலோங்கிப்பிரகாசிக்குநிமித்தம்-திரிதூண்டி- வத்தியைத்தூண்டுகோலானுந்தி - ஒளிர்வித்தல்போலும்-பிரகாசிப்பித்தல்போலவும் - விளம்பும் - முற்கூறிய- நிதித்தியாசனமென்று - நிதித்தியாசனமுமெனு- அறிந்திடுக தெரிந்து-ஆராய்ந்தறிவாயாக- மோனியாமென- முதலாமென- உரைத்த-சொல்லிய- சவணத்திற்கு- சிரவணத்தினுக்கு-உள்ளமுறையில்- உண்டானகிரமப்படி- அறுவகையிலிங்கம்-சம்விதலிங்கத்தின்- தாற்பரியம்-கருத்தை- உரைப்பாம்-சொல்லுவாம்—எ—று-

முற்கூறியசிரவணத்தி லுதயமானஞானத்தைத் தீபமாகவும், அத்தீபப்புறவிருத்தியான காற்றினாலையாமலகவிருத்தியினாற்சிந்திக்குமனனமாகிய காப்பேதிரையாகவும், அந்தஞானதீபத்தைச் சதோதயமாகப் பிரகாசிப்பிக்குந்தெளிவாகிய நிதித்தியாசனமேதூண்டுகோலாகவுமுவமித்தல்.

அரணியாற்கடைந்தெடுத்த வங்கியானேற்றியதீபம்போல. ஆகமுதலிய வவத்தைகளை நீக்கினவிடத்துள்ள அத்துவிதப்பிரகாச சுயஞ்சைதன்யஞ்சிரவணத்தினாலாதலினஃதையங்கியெனவும், இங்ஙனமூண்டானசிற்பிரகாசதீபந்துவிதவாதத்தாலலையாமற்றற்சிந்தனமாகிய திரையாற்றடுக்குதலாலஃதேமனனமும், அச்சிற்பிரகாசத்தைத் தெளிவாகிய தூண்டுகோலானன்றாய்விளங்கச் செய்தலாலஃது நிதித்தியாசனமுமாம், இவ்விரண்டுமேச்சிரவணத்திற்குச்சகாயமாதலாலங்கமெனவாயிற்று.

(இதனதுதாற்பரியம்.)

சிரவணாதிகளின்விசேடணவிசேடியங்கூறியதாம். (௱௩௧)

(அவதாரிகை.)

மூன்முக்கியமெனக்கூறிய சிரவணத்திற்குச்சடுவிதலிங்கதாற்பரியங்கூறுவான்றொடங்கி யிச்செய்யுளினுபக்கிரம முபசங்காரமாகியபிரதமலிங்கத்தினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

அவைகளுபக்கிரமமுபசங்காரமுடனே.................. *
யப்பியாசம்பினபூர்வதைபலமோடுற்ற .................. *
நவில்ருத்தவாதமுற்பத்தியெனலாகு .................. *
நற்சிருட்டிமுன்சகமெய்ப்பரமாயிற்றென்றுஞ் ..... *
சிவமதற்குச்சுவகதாதிகளில்லையென்றகண்டஞ் ........... *
செப்புவதேயுபக்கிரமஞ்சகஞ்சிவத்தின்மாய்த்துப் ... *
பவமகலத்துரியற்குப்பிரமமுடனயிக்கம் .................. *
பகர்ந்தத்துவிதங்கூறலுபசங்காரந்தான் .................. *

(இதனதுபதப்பொருள்.)

அவைகள் - அவ்விலிங்கங்கள்- உபக்கிரமம்-உபக்கிரமமும்-உபசங்காரமுடன் - உபசங்காரத்தோடும்- அப்பியாசம்-அப்பியாசமும்- பினபூர்வதை-பின்னபூர்வதையும்-பலமோடு-பலத்துடன்- உற்ற-பொருந்த- நவில்-சொல்லாநின்ற-அருத்தவாதம் - அர்த்தவாதமும் - உற்பத்தியெனல் - உற்பத்தியுமென-ஆகும்-இவ்வாறாகும்(அவற்றுள்) நற்சிருட்டிமுன்-நல்லசிருட்டிக்குமுன்னே - சகம்-சகத்தானது - மெய்ப்பரம்-சத்தாமாத்திரமானபிரமமே - ஆயிற்றென்றும்- ஆனதென்றும்-சிவமதற்கு - அப்பிரமத்திற்கு- சுவகதாதிகள்-சுவகதாதிமூன்றும் - இலையென்று - இல்லையெனக்களைந்து. அகண்டஞ்செப்புவதே - பூரணத்துவஞ்சொல்லுவதே- உபக்கிரமம்- உபக்கிரமமும்- சகம்-இச்சகத்தை - சிவத்தின்மாய்த்து - பிரமத்திற்கணைத்து - பவமகல-ஜநநநீங்க-துரியற்கு-கூடத்தனுக்கு- பிரமமுடன் -பிரமத்தோடு- அயிக்கம்பகர்ந்து-அயிக்கஞ்சொல்லி - அத்துவிதங்கூறல்- துவிதநீக்கஞ்சொல்லுவதே- உபசங்காரம்- உபசங்காரமுமாம்—எ—று-ஏ-தான்-அசை.

சிருட்டிக்குமுன்பின்னெப்போதுஞ் சத்தாகத்தோன்றி விளங்குவதேயுபக்கிரமமும், இங்ஙனந்தோன்றியசத்தினம் சமாகச்சகசீவபரங்களைக்கரைப்பதேயுபசங்காரமுமாம்.

(இதன் தாற்பரியம்.)

அத்துவிதத்தினுண்டாகிய ஸ்மரணமுதித்து விளங்கியபோதினுமிடத்தும் அவ்வத்துவித ஸ்வரூபமாகவே விளங்குமென்பதாம். (௩௯௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்த முறையானுங்கிலிங்கவிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

கூறுமிவையிரண்டுமோரிலிங்கமெனவறிகக் ............*
    கூடத்தனைபிரமமெனமறித்துமறித்துந் ............*
தேறவுரைத்திடலப்பியாசமாந்துரியன் ............*
    திகழ்பிரமாணாதீதனென்கையபூர்வதையாம் ............*
பாறிலுயிரொன்றறிதலெல்லாமறிதலென்கை ............*
    பலம்பிரத்திகான்மவுருவாம்பிரமந்தனக்கு ............*
மாறரியவைந்தொழிற்கத்திருத்துவஞ்செப்புதல் ............*
    வயங்கருத்தவாதமெனமதித்திடுகதெரிந்தே ............*

(இதனதுபதப்பொருள்.)

கூறும்- இங்ஙனங்கூறிய - இவையிரண்டும்-உபக்கிரமமுபசங்காரமுமாகியவிரண்டும்-ஓரிலிங்கமென-ஒருலிங்கமென-அறிக-அறிவாயாக-கூடத்தனை-முற்கூறியகூடத்தனை-பிரமமென-பிரமமென்று - மறித்துமறித்தும்- மீட்டுமீட்டும்-தேறவுரைத்திடல்-தெளியச்சொல்லுதல்- அப்பியாசமாம்-அப்பியாசமாகும்- துரியன்-ஆத்மன்-திகழ்-விளங்காநின்ற-பிரமாணாதீதனென்கை-பிரமாணங்களுக்கதீதனென்பதே-அபூர்வதையாம்-அபூர்வதையாகும்-பாறில்-பிறிவில்லாத-உயிர்-கூடத்தனை- ஒன்றறிதல் - ஒருபொருளையறிதலே- எலாமறிதலென்கை - அனைத்தையுமறிதலென்பதே- பலம்-பலமாகும் - பிரத்திகான்ம- கூடத்தனது-உருவாம்-சொரூபமாகிய -பிரமந்தனக்கு-பிரமத்திற்கு- மாறரிய- தவறுதற்கரிய-ஐந்தொழில் - பஞ்சகிருத்தியத்திற்கு-கத்திருத்துவம்-கர்த்திருத்துவம் - செப்புதல்- சொல்லுதலே- வயங்கு-விளங்காநின்ற- அருத்தவாதமென- அருத்தவாதமென்று- மதித்திடுகதெரிந்து- வளாயநுத்தறிவாயாக- எ-று. ஏ-ஈற்றசை;

(பதசாரம்.)

சாமவேதத்திற்பிரத்திகான்மாவே பிரமமெனவொன்பதுதிரம்போதித்ததைக் கூடஸ்தனேபிரமமெனமறித்துமறித்துந்தேறவுரைத்திட லப்பியாசமென்றார், முற்கூறின வண்ணமியாவுஞ் சின்மாத்திரமாகச் சிந்திக்கு மிடத்திற் சகசீவபரந்தோன்றினவின்சுபாவமேயிங்ஙனந்தோன்றுவதெனக்கண்டவற்றையஃதேயெனப்பழகுவதே யப்பியாசமெனவும்—இங்ஙனமப்பியாசித்த அச்சித்திலதீதமாதலையபூருவதையெனவும்--இத்துரியாதீதமியாவுமாய்நிறைந்திருக்கின்றமையால்அதனையறிதலியாவையு மறிந்ததாதலைபலமெனவும்—இங்ஙனம்விளங்கிய சத்துக்கும் அஃதின்சத்தியாகிய சகசீவபரங்களுக்குஞ்சிருட்டியாதிகர்த்திருத்துவஞ்சொல்லுவதேயருத்தவாதமெனவுமாம்.

(இதனதாற்பரியம்.)

முதற்கட்சொன்ன விலிங்கத்தானிச்சயித்த பொருளினைஐயந்திரிபின்றியநுபவமாக வனுஷ்டித்தற்கும் அங்ஙனமனுபவித்தபொருளில் அதீதமாதற்கும்அவ்வதீதமே யாவுமாய்விளங்குதற்குமங்ஙனம்விளங்குதலே மாகர்த்திருத்துவ மென்பதற்கும்இந்நான்கிலிங்கமும் வந்ததென்பதாம். (௱௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறையானுற்பத்திலிங்கவிலக்கணங்கூறி மேன்மனனத்துக்குச் சகாயமான வுத்திமுதன்மூன்றிலக்கணங்கூறுவான் றொடங்கிமுன்னுத்தியி னிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

கடத்தினுக்குமண்ணினையுநூற்குலண்டுதனையும்.......... *
காரணமென்பதுபோலப்பிரமமேமுன்னம் ... ......*
படைத்தசகத்காரணமென்கின்றதுற்பத்தி ...................*
பகருத்திதருக்கமனுமானமிவைமூன்று ... .............*
மடுத்துவருமனனசககாரிகளாமவற்று................... ......*
ளாருயிர்களனேகம்வியாபகமெனவேகூறுந் ............ *
தடுப்பரியசாங்கியமேமுதலாயமதத்துட் ... ... ... ...... *
சாற்றுமுயிரெலாமுடம்புதொறும்புணர்ச்சியுறலால் *

(இதனதுபதப்பொருள்.)

கடத்தினுக்கு-கலசத்திற்கு-மண்ணினையும்- மிருத்திகையையும்-நூற்கு-பட்டுநூற்கு-உலண்டுதன்னையும்-கோசகாரப்புழுவையும்- காரணமென்பதுபோல - காரணமெனச்சொல்வதுபோல-பிரமமே - ஆத்மாவே-முன்னம்படைத்த - முன்னஞ்சிருஷ்டித்த-சகத்து - உலகத்திற்கு- காரணமென்கின்றது- காரணமெனச்சொல்வதே - உற்பத்தி-இட்டாந்தமாம்-பகர்- சொல்லாநின்ற-உத்தி - உத்தியும் - தருக்கம்-தர்க்கமும்- அநுமானம்- அநுமானமுமாகிய - இவைமூன்றும்- இம்மூன்றும்- அடுத்துவரும் - சவணத்தைச்சார்ந்துவராநின்ற-மனன்- மனனத்திற்கு- சககாரிகளாம்- சகாயங்களாம்- அவற்றுள்-அம்மூன்றனுள்- ஆருயிர்கள்- பொருந்தியசீவர்கள்-அநேகம் - பலவெனவும்- வியாபகமெனவே- ஒன்றேயெனவும்- கூறும்-சொல்லாநின்ற - தடுப்பரிய- தடுத்தற்கரிய- சாங்கியமுதலாய - சாங்கியமாதியான- மதத்துள்-சமயங்களுள்-சாற்றும்- சொல்லாநின்ற- உயிரெலாம்- சீவர்களனைத்தும் - உடம்புதொறும்- தேகங்கடோறும்-புணர்ச்சியுறலால்- சேர்ந்திருத்தலால்—எ—று-ஏ- அசை.

உற்பத்தி,உண்டாதல்- ஆகவே-இங்ஙனமுண்டாதற்குபாதானகாரணம் பிரமமென்பதாயிற்று.

வினா - இங்ஙனமிருக்கவிச்சகத்திற்குபாதானகாரணமாயையென்றுசிலர்கூறுவ தென்னையெனின்,

விடை - சுத்தியிலிரசிதபுத்திமயக்காற்றோற்றல்போலப்பிரமத்திற்சகத்துற்பத்திமாயா மயக்காற்றோற்றலினென்க.

வினா-அற்றேல்இவரிங்ஙனங்கூறியகாரணமென்னையெனின்,

விடை - இச்சகஞ்சச்சிதாநந்தாம்சமாதலி னிதற்குக்காரணம்பிரமமெனக்கூறினரென்க,எனவே- அவரது திருஷ்டிக்குச்சகம்நாமரூபமாதலினானுமிவரது திருஷ்டிக்குச்சச்சிதாநந்தாம்சமாதலினானுமிங்ஙனம் வந்ததென்க, கடத்திற் குபாதானகாரண மிருத்திகையு மம்மிருத்திகையிற்கடமாதற்குப் பக்குவமுள்ள சத்தியுமென்பவை போலவாம். காரண காரியங்கட்கொன்றற்கொன்று சம்பந்தங்களைக்காட்டியவைகட் கதீதமானபிரமத்தை யாறுலிங்கத்தாற் றரிசிப்பித்ததென்க.

(இதனதுதாற்பரியம்)

முற்கூறியசிரவணத்தினாலுதயமானவாத்மசொரூபமாதிமத்தியாந்தரகிதமா யெக்காலத்துமொருபடித்தாய்ச் சதோதயமாகவிளங்குமென்பதைச் சடுவிதலிங்கதாற்பரியத்தால்விளக்குவித்ததாம். (௱௯௬)

(அவதாரிகை-இதுவுமது.)

(கவி.)

இந்தவுடம்பிவற்கேயாம்போகசாதனமற் ..................*
றேனோர்க்கன்றெனிற்போகத்திதிபுகலொணாதாம்......*
வந்தவுடம்பெத்திறத்துமிவன்வினையால்வரலான் .........*
மற்றிவற்கேயெனின்வினையுமெவர்க்குமில்லையோதான் *
முந்தையுடம்பபிமானத்தாற்செய்வினையிவற்கே ..........*
முற்றுமெனினவ்வபிமானமுமுந்தையுடல்சே.........*
ரந்தவுயிரனைத்திற்குமில்லையோதானிவ்வா ..................*
றனவத்தைநீக்கலரிதநேகவுயிரொனலால் ..................*

(இதனதுபதப்பொருள்)

இந்தவுடம்பு- இத்தேகம்-இவற்கே - இவனுக்கே- ஆம்போகசாதனம்- போகானுபவத்திற்கிடமாம் - மற்றேனோர்க்கு- மற்றவர்களுக்கு- அன்றெனில் - அல்லவென்றால் - போகத்திதி-போகஸ்திதியை - புகலொணாதாம்- சொல்லப்படாதாம்-வந்தவுடம்பு- வாராநின்றதேகம் - எத்திறத்தும் - எவ்விதத்தினாலும் - இவன்வினையால் - இவனதுகருமத்தினால் - வரலால்-வருவதனால் - மற்றிவற்கேயெனில்- இவனுக்கேயாமென்றால்-வினையும்- அவ்வினையும்- எவர்க்குமில்லையோ-யாவர்களுக்குமில்லையோ - முந்தையுடம்பபிமானத்தால் - பூருவதேகாபிமானத்தினால் - செய்வினை - செய்யாநின்றகருமம்- இவற்கே - இவனுக்கே- முற்றுமெனில்- கூடுமென்றால்-அவ்வபிமானமும்- அத்தேகாபிமானமும்- முந்தையுடல்-பூருவதேகத்தில்- சேர்- அடைந்த - அந்தவுயிரனைத்திற்கும்-அச்சீவர்களனைவர்க்கும்- இல்லையோ- இல்லையோ - இவ்வாறு-இவ்வண்ணம்-அனவத்தை - அனவத்தாதோஷம்வரும்- நீக்கலரிது- அதைநீக்குதற்கரியதாம்- அநேகவுயிரொனலால்- ஜீவர்களநேகமொன்றன்மையால்—எ—று-மற்று-தான்-அசை.

அநாதியுயிரெனப்பாடமோதுவாருமுளர். போகஸ்திதி, போக்கியவஸ்து - பொசிப்பதனிலைமை, இலையோவென்ற வெதிர்மறைப்பிரகாரமிருக்குமென்பதைக்காட்டும். அனவ த்தை, முடிவுபெருமை. (௱௯[illegible])

(அவதாரிகை-இதுவுமது.)

(கவி.)

செப்பரியவேகான்மபக்கத்திற்போகத்..................*
திதியிலையென்றநேகான்மபக்கமதுகொளினு..........*
மிப்பரிசுமிகுபோகத்திதிகூடாதாயிற்...................*
றிச்சங்கையிருமதத்துமொக்குமேயென்னிற்..........*
பற்பலவிலேகான்மபக்கமதில்விம்பப்.....................*
பதிவிம்பநியாயத்தாற்கரணவசைவாதி...................*
மெய்ப்பரியபலதிறத்தாலெண்ணிறந்தபோக..............*
விளைவுகூடுதலெளிதென்குதலுத்தியாமால்..............*

(இதனதுபதப்பொருள்.)

செப்பரிய- வசனித்தற்கரிய- ஏகான்மபக்கத்தில்-ஏகான்மப க்ஷத்தில்-போகஸ்திதி - போகத்திதியானது - இலையென்று- இல்லையென்று - அநேகான்மபக்கமது - அநேகான்மபக்ஷ த்தை-கொளினும் - கொண்டாலும்- இப்பரிசு- இத்தன்மை யாக-மிகுபோகத்திதி - மிகுந்தபோகஸ் திதியானது-கூடா தாயிற்று- கூடாததாம்- இச்சங்கை- இச்சங்கையானது-இரு மதத்தும் - முற்கூறியவிரண்டு மதத்திற்கும்- ஒக்குமேயெ ன்னில்- சரிதானேயென்றால் - பற்பலவில்- பலவின்றிய-ஏ கான்மபக்கமதில் - ஏகான்மபக்ஷத்தில் - விம்பப்பதிவிம்ப நியாயத்தால் - விம்பப்பிரதிவிம்ப நியாயத்தினால் - கரண- அந்தக்கரணத்தினுடைய - அசைவாதி - கம்பகாலுஷியாதி ய-மெய்ப்பரிய-மித்தையாகிய- பலதிறத்தால்- நானாவிதத்தி னால்-எண்ணிறந்த-அளவின்றிய-போகவிளைவு-விசித்திரமா னபோகஸ்திதி-கூடுதல் உண்டாகுதல்-எளிதென்குதல்-சொ ற்பமென்பதே- உத்தியாம் - உத்தியாம்-ஏ-று-ஆல்-அசை.

ஆத்மா, சாங்கியத்திலேனகமெனவும், ஏனையமதத்திலநேக மெனவுங்கூறுப, அவற்றுள்- சரீரங்கடோறுங் கூடியிருத்த லினாத்மா வேகமாம், அங்ஙனமாயினித்தேக மிவனுக்கேசுக

த்தைக் கொடுப்பதன்றி மற்றவர்களுக்குக் கொடாமையாலா
த்மாவநேகமேயாம், ஆயின் அப்போகத்திற்குதிலை சொல்லக்
கூடாமை யாலாத்மாவேகமேயாம், இவன்கன்மத்திற்கிடான
தேகம்வருத லிவனுக்கே போகமென்பதனு லாத்மாவநேக
மேயாம், யாவர்க்குங் கன்மமிருப்பதனு லாத்மாவேகமேயா
ம், இவனபிமானத்தாற் செய்தகன்ம மிவனுக்கே வருதலாலா
த்மாவநேகமேயாம், இவ்வபிமானமித்தேகங்களி லுள்ளவா
த்மாவுக்கெல்லா மிருத்தலி னாத்மாவேகமேயாம், என்றவிட
த்தொன்றுமுற்றுப்பெறுத லுவத்த தோஷமுண்டாமென
விவற்றைநீக்கியேகான்மபக்கத்திற் போகமில்லையென்றநே
கான்மபக்கத்தைக்கொள்ளினு முற்கூறியவண்ண மிதற்கும்
போகஸ்திதியில்லை யெனவரும், அங்ஙனம் வரினிவ்விருபட்
சத்திற்குமொக்குமாயினுமேகாத்மபக்கத்தில் விம்பமாகிய
வாத்மாவானது, கரணசலத்திற்பிரதிவிம்பமாய்நானாவிதமா
யிருத்தலிற்பல்விதமான போகானுபவமெளிதிற்கூடுமென
வும், பிரதிவிம்பம்போல வநேகான்மபக்கமும் விம்பம்போ
லவேகான்ம பக்கமுமாதலா னிவ்வநேகான்ம பக்கங்கற்பித
மெனவும், ஏகான்மபக்கம் யதார்த்தமெனவுங்கண்டதனைநீ
க்கியிஃதையொப்புதலேயுத்தியெனக்காண்க.

(இம்மூன்றுகவியினதுதாற்பரியம்.)

முற்கூறியபிரம ஸ்வரூபத்திற் கென்று மிடையூறின்றித்தா
னேதானாய்விளங்கு மென்பதற்கைய மின்றிக்காக்குநிமித்த
முண்டான மனனத்திற்குள்ள யுத்தியானதொன்றநேகமெ
ன்னுமையத்திற்குப் பகையாகவரிக்குமென்பதையறிவித்த
தாம். (௩௩௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறுதொழிந்ததர்க்கவனுமான மிரண்
டுங்கூறிற் பெருகுமெனநிறுத்தி மேனிருத்தியாசனத்திற்கு
ருவமான மந்திரயோகமுதலியவைந்தையுங்கூறுவான் றொ
டங்கியவற்றினாமங்களுணர்த்துகின்றது.

(கவி.)

தருக்கவனுமானவிலக்கணங்கடாமிசரா......................*
சாரியர்கண்முதலோர்கண்டனுதிகளில்......................*

விரித்தமைதலாலிதுதான் சுவானுபவநூலாய் ............*
விளங்குதலாலீண்டுரைப்பிற்பெருகுமெனுங்கருத்தா..*
லுரைக்கிலமந்திரயோகம்பரிசயோகம்பின் ............*
னுயர்பாவயோகமுடனபாவயோகந்தான் ... ........*
தெரித்தமகாயோகமெனுமிவைகளோரைந்துந் ............*
திகழ்கின்றநிருத்தியாசனவடிவமாமால் ... ........ ...*

(இதனதுபதப்பொருள்,)

தருக்க-தருக்கமும்- அநுமானம்- அநுமானமுமாகியவிரண்டின்-இலக்கணங்கள்- இலக்கணங்களை-ருஷிசிராசாரியர்கள்- அருஷிசிராசாரியர்கள்- முதலனோர் - ஆதியானவர்களாற்செய்யப்பட்ட-கண்டனாதிகளில் - கண்டனமுதலியவைகளில்-விரித்தமைதலால்- பிரசித்தமாய்த் தெரிவித்தமைதலாலும் - இது-இந்நூல்- சுவானுபவநூலாய்- சுவானுபவநூலாக-விளங்குதலால்- விளங்குகின்றமையாலும்- ஈண்டு-இவண்- உரைப்பில்-அவற்றைக்கூறில்- பெருகுமெனுங்கருத்தால்-விரியுமென்கின்றகருத்தினாலும்-உரைக்கிலம்-சொற்றிலம்-மந்திரயோகம் - இனிமந்திரயோகமும்- பரிசயோகம்-பரிசயோகமும்- பின்னுயர்- பின்மேலான- பாவயோகமுடன்-பாவயோகத்தோடும்- அபாவயோகம்-அபாவயோகமும்- தெரித்த-தெரிவித்த-மகாயோகமெனும்-மகாயோகமென்கின்ற-இவைகளோரைந்தும்- இவ்வைந்துயோகங்களும்-திகழ்கின்ற-விளங்காநின்ற-நிருத்தியாசனவடிவமாம்- நிருத்தியாசனரூபமாம்—ஏ—ஆ-தான்-ஆல்-அசை.
சுவானுபவந்தன்னைத்தான்றரிசித்தல்,

(இதனதுதாற்பரியம்,)

வெளிப்படை, (ரகஎ)

---

(அவதாரிகை,)

இச்செய்யுளின்முற்கூறியபஞ்சயோகவிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி,)

ஓங்காராதிகளனுசந்தானத்தாற்பரத்தி... ... ..........*
னுள்ளமடங்குதலேமந்திரயோகமதனை .............*
யடங்குமனபவனமொன்றாய்மூலத்தி ....................*
னிருஞ்சுழினைவழிசென்றுசென்னிநடுவிருந்த ........*

தேங்கான்மவொளியின்மனோலயமாதல்பரிசஞ் ..........*
சிரந்துறக்கஞ்செவிதிசைகளிருசுடர்கள்விழிதீப் .....*
பாங்காயமுகமுந்திவிசும்புநிலம்பதமாம் ..................*
பரமனுருவாயவிராட்புருடவடிவெனினும் .........*

(இதன்பதப்பொருள்,)

ஓங்காராதிகள் - பிரணவாதிமந்திரங்களை - அநுசந்தானத்தால்- இடைபறாதுசிந்தனஞ்செய்வதால் - பரத்தின்-பிரமத்தின்- உள்ளமடங்குதலே - மனமடங்குவதே- மந்திரயோகம்- மந்திரயோகமாம் . அதனோடு- அப்பிரணவத்துடன்- ஙங்காகும்-இவனுள்ள-மன- மனமும்-பவனம்-பிராணவாயுவும்-ஒன்றாய்-ஏகமாய் - மூலத்தின்- மூலாதாரத்தில்-இரும்-மாட்சிமையுள்ள - சுழினைவழிசென்று - சுழிமுனைமார்க்கத்திற்சென்று - சென்னிநடு -சிரோமத்தியபிரமரந்திரத்தின்- இருந்த- வியாபித்திருந்த -தேங்கு-நிறைவான- ஆன்மவொளியின்- ஆத்மப்பிரகாசத்தில்- மனோலயமாதல்- மனம்லயிப்பதே- பரிசம்-பரிசயோகமாம் - சிரம்-சிரமானது-துறக்கம்- சொர்க்கமாகவும் - செவி-காதானது-திசைகள்-திக்குகளாகவும்- இருசுடர்கள் - சந்திராதித்தர்கள்- விழி-கண்களாகவும்-தீ-அக்கினி- டாங்காய - அழகான-முகம் - வதனமாகவும்-உந்தி- கொப்பூழ்-விசும்பு ஆகாயமாகவும்- நிலம்-பூமி-பதமாம்- பாதமாகவும்விளங்கிய - பரமனுருவாய- சிவஸ்வரூபமான-விராட்புருடவடிவெனினும்-விராட்புருடஸ்வரூபத்தையானாலும்—எ—று.

விராட்புருடவடிவமென்றது- பூமியந்தரசொர்க்கங்களை யவயவமாகவியாபித்துநின்ற பேருருவமாம். (௩௬அ)

(அவதாரிகை-இதுவுமது.)

(கவி.)

அன்றிபளவறுபெருந்தோட்புடைபணியோடுற்ற .....*
வண்ணல்வடிவெனினுநினைந்தவயவங்கடம்மி .........*
லொன்றொன்றாப்பிடித்துநின்றவவயவிமாத்திரமா .....*
யுண்மையாம்பிரமத்தின்மனமடங்கல்பாவஞ் ........*
சென்றணவுங்கரணமுமொருபிரமந்தன்னிற் ..........*
சிந்தையடங்குதலபாவம்படைப்பிலொழிவிற் .........*

றன்றெரிதறெரியாமையிடத்தினோர்பரிசாய்த் ..........*
தன்வடிவாம்பிரமத்தின்மனமிறன்மாயோகம் ..........*

(இதனதுபதப்பொருள்.)

அன்றி - முற்கூறிய விராட்புருட வடிவமல்லாமலும்- அளவறு-அளவிறந்த - பெருந்தோள் - மாட்சிமையுள்ளபுயங்களையும்- படை-அவைகட்குத்தக்கவாயுதங்களையும்- பணியோடு-அவற்றிற்கேற்றவாபரணத்துடன்- உற்ற-கூடிய-அண்ணல்வடிவெனினும் - மாட்சிமையுள்ளவீசுரஸ்வரூபத்தையானும்- நினைந்து-சிந்தித்து-அவயவங்கடம்மில்- கூறியவவயவங்களில்- ஒன்றொன்றுப்விடுத்து - ஒவ்வொன்றுகநீக்கி-நின்ற-சேடித்திருந்த- அவயவிமாத்திரமாய் - அவயவிமாத்திரமான- உண்மையாம்பிரமத்தில்- சத்ரூபமாகியபிரமத்தில்-மனமடங்கல் - மனம்லயிப்பதே- பாவம்- பாவயோகமாம்-சென்றணைவும் - இங்ஙனஞ்சென்றடையாநின்ற - கரணமுரு-கரணாகோசரமான- ஒருபிரமந்தன்னில்- ஒப்பற்றபிரமத்தில்- சிந்தையடங்குதல்- மனோலயமாவதே- அபாவம்- அபாவயோகமாம்- படைப்பில்- சகசிருட்டியினும்- ஒழிவில்-லயத்தினும்- தன்றெரிதல்- தனதறிவினும்- தெரியாமையிடத்தின் - அறியாமையினும் - ஓர்பரிசாய்- ஒருதன்மையாகவிளங்கிய- தன்வடிவாம் - தற்சொரூபமான- பிரமத்தில்- பரத்தில்- மனமிறல் - மனோலயமாவதே - மாயோகம்- மஹாயோகமாம்—எ—று.

அண்ணல்வடிவென்றது, பரமனுருவம் - எனவே-விராட்டாதிய ஜீவேசுரசகங்களை யவயவங்களாகவுடையது, அவயவியென்றது இவ்வவயங்களையுடையவன் - எனவே - அவைகளை நீக்கித்தனியே நிற்பவன்- கரணமுருவொருபிரமமென்றது, அவாங்மனோகோசரமான சுத்தசைதன்னியம்.

பிரணவானுசந்தானத்தாற் பிரமமுதயமாதலின்மந்திரயோகமெனவும்—இடைபிங்கலைகளையடைத்துச்சுழிமுனைமார்க்கத்திற்சென்று மூலாதாரமுதலாக்கினை யீறுளதானங்களினுள்ள தேவதைகளோடுங்கூடி மேற்பிரமரந்திரத்தினுள்ள பிரமத்தோடுங் கலத்தலிற் பரிசயோகமெனவும்—ஜீவேசுரசகங்களனைத்தையு மவயவமாகக்கண் டவைகளை நீக்கினவிடத்துள்ள வவயவியைப் பிரமமாகப்பாவித்தலிற் பாவயோகமெனவும்—அங்ஙனம் பாவிக்குமனதிற் ககோசரமானவிட

த்துள்ளபிரமத்திற் பாவனாதீதமாய்நிற்றலி னபாவயோகமெனவும்—சங்கற்பமுதித்தொடுங்கினவிடத்து மறிவறியாமையிடத்து மொருதன்மையாய்விளங்கும்பிரமமே தானாய்விளங்கலின்மஹாயோகமெனவுங்கூறினர்.

வினா - இங்ஙனங்கூறியவைந்தினு மொவ்வொன்றினும்பிரமத்தை யடைதலின்- இவைகட்குத் தாரதன்மியம்வந்ததெவ்வனமெனின்,

விடை - ஒன்றென்ப தின்றியாவுமாய் நிறைந்திருக்கின்றபிரமமிவ்வட்சரத்தி லடங்கிநின்று வெளிப்பட்டதென்ககண்டமையானும் அங்ஙன நிறைந்துள்ள பிரமமித்தேகாக்கிரத்தின் வெளிப்பட்டதாகத் தரிசித்தமையானும்- அவயவங்களைநீக்கினவிடத்துள்ள வவயவியைப்பார்க்கும்பாவனையானுதயமாமென்றமையானும்-அப்பாவனையிறந்ததீதமாய் விளங்குமென்றமையானும்-மனமுதித்தவிடத்தொடுங்கினுண்மைவிளங்குகின்றதென்றமையானும்-இவ்வைந்திற்குமேகதேசமானதோஷங்களுமிவை யொன்றற்கொன்றறிவுவியாபித்துவருதலினுயர்வுதாழ்வான தாரதன்மியங்களுமுண்டாம்- இம்முன்னிலைகளியாவு மின்றிச் சிந்திக்குமனதின்கணிறைந்திருக்கின்ற சுத்தசைதன்னியமேயெங்குநிறைந்திருக்கின்றதென்னு மத்துவிதவஸ்துவேமுக்கியமெனவும், ஏனையவைந்துயோகங்களுங்கவுணமெனவும் வந்ததாலென்க.

இவைகளில் மந்திரயோகத்திற் பிரமமுதித்ததென்பதற்குமேற்கோள் (பிரமகீதை) நீமரந்தொறு மடைந்தழிவுறுதெரிவா,காமனின்றரணியால்வடிவுகாணுமதுபோ,நீலாமுடம்பிலறிவின்றிமறைகின்றவமல,ஞேமெனும்பொருளுணர்த்திடவுடம்பின் வெளியாமென்பதனானும்) பரிசயோகமென்பதற்குதாரணம் (வாதவூரர்புராணம்) மூக்குணம்புலனைந்துடனடக்கிமூலவாயுவையழைத்திரு வழியைச், சிக்கெனும்படியடைத்தொருவழியைத் திறந்துதாண்டவச் சிலம்பொலியுடன்போய்த் , தக்கவைந்தெழுத் தோரெழுத்துருவாந்தன்மைகண்டவர் தகும்பெருவெளிக்கே, புக்கழுந்தினொமருப்பெறு வர்புவியில்வேட்டுவ னெடுத்தமண்புழுப்போல்,என்பதனானும்- பாவயோகமென்பதற்கு தாரணம் (வாசிட்டம்) களையறுபரமாகாசங் கதித்தறப்பருத்தகண்டம், புரையறுமதன்கீழெல்லை யற்றவிண்பொற்றுட்கஞ்ச, நிலாபயின்முடிபுதிக்குநீண்டநவுயர்ந்ததோள்க, ளுளாயுயிர்தானு

லோகமொளிகொளாயுதங்களாமே, யென்பதனாலும், அபா வயோகம் (சுருதிசாரம்) தனித்தசுவானுபவாதீதம் பிரமோக மேதாற்றனவனு யிருப்பதுஞ் சங்கற்பத்தாலு, மனித்தமெ னவிட்டிடிற் சூனியமாதலாலு மதுமறவாவிடி னினைவாய றிதலாலு, மினித்தநிட்டைசாதகமா யிருத்தலாலு மேலும ல்லமூடமென்றே யியம்பலாலுந், தொனித்த சுயாவமுங்க டந் தவதிதந்தானே சுயம்பிரகாசம் மெனவே சொல்வர்தா மே, யென்பதனாலும் (மஹாயோகமென்பதற்குதாரணம்) ஞானவாசிட்டம்; ஆங்கதுவே யதீதபதமாதலாலேபதுகிஞ்சி லன்றெங்கு மதுவேயாகும், பாங்குறுவீடென்றும்பருலகி லில்லைப் பாதலத்திற்பூதலத்திற் பார்க்கிலில்லை, வீங்கியவா சைகளெல்லாமிறந்தகாலை விரிந்தமனமிறப்பதுவே வீடெ ன்றேது. மோக்கிய வீடெனக்குள தென்றுள்ளேயெண்ண மூண்டாகின் மீண்டுமன முற்பவிக்கும், இன்னும், சகத்தா ன துதயலயமாகின்ற தெவ்விடமோ வவ்விடத்தின் மனோல யமாகுமந்த மஹாமேயர்கமென்ற பிரமாநந்தவிவேகசமுத் திரமென்னு நூலினானுங்காண்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

இவ்வைந்துயோகமுநிதித்தியாசனத்துக் கங்கமாகவுஞ்சட்ச மாதிக்கனுகூலமாகவுங்கண்டிவற்றிற் கதீதமானபொருளைச் சகசத்திலனுஷ்டிக்கும்படியாகக்கூறினானென்பதாம். (௱௩௪

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய சிரவணாதிமூன்றினுக்குஞ் சவிலி ங்காதி மூன்றும்பொருளினாற் பிரமாணுபவ மூண்டாயினும தற்கிடையூறான பிரதிபந்த மூன்றுண்டெனக் கூறுவான் றொடங்கியவற்றினுமமும்பூதப்பிரதிபந்தவிலக்கணமுமு ணர்த்துகின்றது.

(கவி.)

பகர்ந்தவுயிருண்மைவிலக்காகவரும்பூதப் ........................*
பதிபந்தம்வர்த்தமானப்பதிபந்தம்பி ........................*
னிகழ்த்தவாகாமியப்பதிபந்தங்கண்முத்தி ........................*
நேயமொடுதுறந்துகுருபரனையறிந்தடைந்து ........................*
மகிழ்ந்துசவணாதிகமுற்றிடினுமுன்னுகர்ந்த ........................*
வனிதாதிவிடயசுகவாதனையாற்றினமும் ........................*

புகுந்துமனநிலைகலக்கியுயிருண்மையுறாமற் ........ *
போக்கிவிடுமனைப்பூதப்பதிபந்தமென்பர் ........ *

(இதனதுபதப்பொருள்.)

பகர்ந்த-முற்கூறிய-உயிருண்மை-ஆத்மநிச்சயத்திற்கு-விலக்காக-விக்கினமாக - வரும்-வராநின்ற- பூதப்பதிபந்தம்-பூதப்பிரதிபந்தமும் - வர்த்தமானப்பதிபந்தம்- வர்த்தமானப்பிரதிபந்தமும் - பின்-பின்பு - நிகழ்ந்த - விளங்கிய- ஆகாமியப்பதி பந்தங்களென - ஆகாமியப் பிரதிபந்தங்களுமெனப்பந்தத்திரயங்களாம் (அவற்றுள்) முத்திநேயமொடு- முமூட்சுத்துவத்துடன் - துறந்து - இச்சாரூபமானபாவையும்விடுத்து- குருபரனை- சற்குருவை-அறிந்து- இவர்நம்மையிரட்சிக்கத் தக்கவரென்றறிந்து -அடைந்து-சரணாகதியடைந்து- மகிழ்ந்து- அவரதுபதேச வாக்கியங்களின்மகிழ்ச்சியாய்- சவணாதிகம்- சிரவணாதித்திரயங்களை- உற்றிடினும்- அடைந்திடினும்- முன்னுகர்ந்த-முன்னனுபவித்த- வனிதாதி- பெண்முதலிய-விடய-விஷயங்களிலுண்டாகிய-சுகவாதனையால்- சிற்றின்பவாசனையால்- தினமும்-நாடோறும்-புகுந்து- அகத்திற்புகுந்து- மனநிலைகலக்கி- மனோநிச்சயத்தைக்குழப்பி- உயிருண்மை- ஆத்மநிச்சயத்தை- உறாமல்-அடையாமல்- போக்கிவிடுமனை- நீக்கிவிடுதலை - பூதப்பதிபந்தமென்பர்- இறந்தகாலப் பிரதிபந்தமெனச் சத்துக்களுரைப்பார்கள்—ஏ—து-தான்-அசை. (ராசம்)

(அவதாரிகை.)

இச்செய்யுளினேனைய விரண்டுபிரதிபந்தங்களி னிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

மடிவிடயாசத்தியபிமானமொடுகுதர்க்க ........ *
மருவிடுஞ்சிற்றினஞ்சேர்தல்சபலத்துவாதி ........ *
படைதலின்மெய்தெரிந்துமுயிருண்மையுறாதழித்த ........ *
லதுவாகும்வர்த்தமானப்பதிபந்தங்காண் ........ *
விடலரியசதநமின்னுஞ்சிலவடைந்தாலன்றி ........ *
விடாதுபிரமாதியுலகிச்சையெனுந்தோடம் ........ *

[ருக]

மொடுமருவிமறைப்பொருளையுணர்ந்திடினுமான்ம...... *
வுண்மையுருதழித்தகாமியப்பதிபந்தம் .......... *

(இதன் பதப்பொருள்.)

மடி-மித்தையான-விடயாசத்தி -விடயவிச்சையும்- அபிமானமொடு- அபிமானத்துடன்-குதர்க்கம்- குதர்க்கமும்-மருவிடும்-மனஞ்சுழலாநின்ற- சிற்றினஞ்சேர்தல்- அறிவின்மையோர்கூட்டங்களைச்சேர்தலுமாகிய- சபலத்துவாதி- சாபல்யமுதலியகுணங்களை- அடைதலின்- சேர்தலின்- மெய்யெரிந்தும்- உண்மையையறிந்தும்- உயிருண்மையுருது- ஆத்மஞானத்தையடையவொட்டாது - அழித்தல்- கெடுக்கின்றதெதுவோ-அது- அதுவே-வர்த்தமானப் பதிபந்தங்காண்-நிகழ்காலப் பிரதிபந்தமாம் - விடலரிய-நீக்குதற்கரிய- சதநம்-பிறப்பை இன்னும்-இன்னமும் - சிலவடைந்தாலன்றி-சிலபெற்றாலல்லது-பிரமாதியுலகு -சத்தியலோகமுதலியவற்றில்வைத்த - இச்சைவிடாதெனும் - இச்சைநீங்காதென்கின்ற-தோடமொடு- தோஷத்துடன் -மருவி-சேர்ந்து-மறைப்பொருளை- வேதார்த்தத்தை - உணர்ந்திடினும்- அறிந்திருக்கினும் -ஆன்மவுண்மை - ஆத்மஞானத்தை- உருது-அடையாமல்-அழித்தல்- கெடுப்பதே-ஆகாமியப்பதிபந்தம்-மேல்வருமாகாமியப்பிரதிபந்தம்-ஆகும்-ஆம்—எ—று.

பூதப்பிரதிபந்த மாத்மதெரிசனமாகியு முன்னனுபவித்தவிடயானுபவத்தைச் சிந்தித்தல், வர்த்தமானப் பிரதிபந்தமிப்போது காட்சிப்பட்ட விஷயங்களி லிச்சையுண்டாதல், ஆகாமியப்பிரதிபந்த மேல்வரும்விடய லாபங்களைக்கருதிநிற்றல், இவையே, இறந்தகாலமெதிர்காலம்நிகழ்காலமென்பனவாம் சபலமென்பது- நிலையின்றிப் பலகாலத்தோன்றிமறைதல், எனவே- சித்தமொருநிலையினில்லா தசஞ்சலப்படுதல், குருமுகமாயாத்ம விசாரஞ்செய்யுமிடத்து முன்னனுபவித்த விடயவாசனைதாக்கி மனங்கலங்குவது பூதப்பிரதிபந்தமும், அங்ஙனம்விசாரித்த மெய்யுணர்வையிப்போது விடயாசத்தி யாதிகளாற்கெடுப்பது- வர்த்தமானப்பிரதிபந்தமும், இன்னஞ்சில பிறப்பெடுத்துப் பெரும்போகங்களனுபவித்தாலல்லதிச்சை விடாதென்கின்றசங்கற்பம்-வஸ்து நிச்சயந்தெரித்து மலீதாகவொட்டாமற் செய்வ

தாகாமியப்பிரதிபந்தமுமாம், பிரதிபந்தம்- தனக்குவேறு கநின்றுபந்தப்படு.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

பூதாதிப்பிரதிபந்தங்கள்சிரவணாதியனுசந்தானத்தினாலுண்டான வுண்மைஞானத்தை யறிந்துமமீதையாக வொட்டாமவிடையூறுசெய்வதைநீக்குதற்காகவுணர்த்தியதென்பதாம்.

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறியபூதாதிப் பிரதிபந்தங்கட் கிடையூறான ஞானமூன்றுமவற்றி னொவ்வொன்றற்குங் காரணாதியைந்தாகக்கூறுவான்றொடங்கி ஞானமூன்றுதாமுமவற்றின் ஞானத்திற்குக்காரணாதிமூன்றினிலக்கணமுமுணர்த்துகின்றது.

(கவி.)

பந்தமவைமூன்றினையுங்கடத்திடுவான்பயில்வ... ... ...*
பகர்ஞானவயிராகமுபரதியாமவற்றின் ... ........... *
வந்தணுகுமிலக்கணங்காரணமொடுதான்சொரூப .... ... *
மருவுகாரியமெனவேதனித்தனிஞானக்கு...... ... .. *
முந்துசவணாதிகமேகாரணமான்மாவு ........... ....... *
மூலவகங்காரமும்வேறுக்குதலேசொரூப ... ...... ... *
நந்துமகங்காரகதமபற்குத்தன்கரியாய் ... ... ...... *
நணுகுதலேகாரியமென்றறைகுவர்மூதறிஞர் ... ..... *

(இதனதுபதப்பொருள்.)

பந்தமவை-முற்கூறியபூதாதிபந்தங்கள் - மூன்றினையும்-மூன்றையும்-கடத்திடுவான்-நீக்குநிமித்தம்-பயில்வ - அப்பியாசிக்கின்றனவாகிய-பகர்-சொல்லாநின்ற-ஞானம்-ஞானமும்-வயிராகம்-வயிராகமும்-உபரதியாம்-உபரதியுமாகிய- அவற்றின்-அம்மூன்றினது-இலக்கணம் - இலக்கணமாவன-காரணமொடு-காரணத்துடன்-சொரூபம்-சொரூபமும்-மருவு-பொருந்திய-காரியமென-காரியமுமென்கின்றமூன்றும்-தனித்தனி-ஒவ்வொன்றற்கும்-வந்தணுகும்- வந்துபொருந்தும்-ஞானக்கு(அவற்றுள் ஞானத்திற்கு-முந்துசவணாதிகமே-முதன்மையானசிரவணாதிமூன்றுமே - காரணம்-காரணமும்-ஆன்மாவும்-கூடத்தனையும்-மூலவகங்காரமும்-மூலவகங்

காரத்தினையும்- வேறாக்குதலே - ஒன்றுபடாமல் வேறுசெய்வதே-சொரூபம் - சொரூபமும்-நந்து- நசிக்கின்ற-அகங்காரகதமயற்கு- ஆங்காரசம்பந்தமானசமூசாரத்திற்கு-தான்கரியாய்- தானாகியகூடஸ்தனே சாட்சியாக- நணுகுதலே- பொருந்துதலே- காரியமென்று- காரியமுமென- அறைகுவர்-சொல்லுவார்கள்-மூதறிஞர் -பேரறிவையுடையவர்கள்- ஏ—று-தான்-அசை.

சவணாதி யென்றதனான் மனனநிதித்தியாசனமுங்கொள்க, ஞானத்திற்குச்சவண - மனன - நிதித்தியாசனவிசாரணையே காரணமும், அவற்றாலனாத்மசம்பந்தமின்றியாத்மாவைத்தனியேதரிசித்தல்சொரூபமும், அநாத்மசம்பந்தமானவியாமைக்குத் தான்சாட்சியாய்விளங்குவதேகாரியமுமாம்.

(இதனதுதாற்பரியம்.)

இவ்வாறுகூறிய விசாரஞானத்தினாலாகாமியப் பிரதிபந்த நீங்குமென்பதாம். (௱சஉ)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறையானேனைய விரண்டிற்குங்காரணாதிமூன்றினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

வேண்டும்வயிராக்கியத்திற்குற்றவனிதாதி ........*
விடயத்தினிலையாமைமுதலாயகுற்றங் ........*
காண்டலதுகாரணமெத்திறத்தானுமதனைக் ........*
கழன்றிடுதல்சொரூபம்பின்புறுமைகாரியமா ........*
மாண்டவுபரதிக்கியமாதிகளேகாரணஞ்சூழ் ........*
மனமொடுங்கல்சொரூபமாம்புறக்கருமந்தன்னின் ... *
மீண்டுபுகுமயலறுதல்காரியமென்றிசைப்பர் ........*
விளம்பலுறுஞானிகட்கவதிமொழிவாம் ........*

(இதனதுபதப்பொருள்.)

வேண்டும்- அறிஞரால்விரும்பத்தக்க - வயிராக்கியத்திற்கு- முற்கூறியவைராக்கியத்திற்கு - உற்ற-பொருந்திய- வனிதாதி-பெண்முதலிய- விடயத்தில்- விடயங்களில்-நிலையாமை முதலாய-அனித்தியமாதிய-குற்றங்காண்டலது-தோடதெரி

சனமே-காரணம்- காரணமும்- எத்திறத்தானும்- எந்தப்பிரகாரத்தினாலும்- அதனை - அவ்விஷயானுபவத்தை-கழன்றிடுதல்- நீங்குவதே-சொரூபம்-சொரூபமும்- பின்பருமையின்னும்மவ்விடயங்களிற்புகாததே- காரியமாம்-காரியமுமானமூன்றுமாம்-மாண்ட - மாட்சிமையுள்ள- உபரதிக்கு உபரதிக்கு- இயமாதிகளே-இயமாதியஷ்டாங்கயோகங்களே-காரணம்- காரணமும்-சூழ்- சங்கற்பரூபமான- மனமொடுங்கல்-மனமடங்குவதே - சொரூபம்- சொரூபமும்-புறக்கருமந்தன்னில்- முன்விடுத்தபகிர்முக வியாபாரங்களில்- மீண்டுபுகும்-திரும்பச்செல்கின்ற - மயலறுதல் - மயக்கநீங்குவதே-காரியமாமென்று - காரியமுமாமென- இசைப்பர்-சத்துக்கள்சொல்லுவார்கள் - விளம்பலுறும்- முற்கூறிய- ஞானாதிகட்கு- ஞானமுதலியமூன்றற்கும்- அவதிமொழிவல்- அவதியைச்சொல்லுவாம்—எ—று.

வனிதாதியெனவே, பஞ்சணை- சௌக்கியபோசனம்-சந்தம்-வஸ்திரம்- ஆபரணம்-தயிலம்- தாம்பூலமுங்கொள்க,நிலையாமையெனவே, எதிரிட்டுத் தோற்றும்விடயங்களியாவுமனித்தியமெனவும், இயமாதிகளெனவே, நியமம்-ஆசனம் பிராணாயாமம்- பிரத்தியாகாரம்- தாரணை- தியானம்-சமாதியும். ஞானாதியென்றமையின், வைராக்கியமும் - உபரதியுங்கொள்க,புறத்தொழில்,பாகியவிடயத்திற்செல்லுஞ்சரியைகிரியைகள். அவதியென்பது-அளவு,முற்கூறியவைராக்கியத்திற்குவிடயங்களிற்றோஷதிருஷ்டிவருவதேகாரணமுமங்ஙனமுண்டானவிடயவாசனை நீக்குதலே சொரூபமும் அங்ஙனம் நீக்கினவிடயத்திற்பின்னிச்சைபிறவாததே காரியமுமாம். உபரதிக்கட்டாங்கயோகஞ்செய்வதே காரணமுமவற்றின்மனமொடுங்குதலே சொரூபமுமுன்னீக்கின கருமங்களிற்றிரும்பமயக்கம் வாராததேகாரியமுமாம்.

(இதனதுதாற்பரியம்.)

இங்ஙனங்கூறியவைராக்கியத்தினால்வர்த்தமானப்பிரதிபந்தமுமுபரதியினாற் பூதப்பிரதிபந்தமும்நீங்குமென்பதாம்.

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையான் ஞானாதிகட்கு மூன்றவதியினிலக்கணங்களையுணர்த்துகின்றது.

[௯௰]

(கவி.)

தக்கதேகான்மபாவம்போலப்பிரமந் ...... *
தானென்றுந்திண்மைஞானத்திற்காமவதி ...... *
மிக்கபிரமாதிபதந்துரும்பெனவேநினைத்தல் ...... *
விளம்புவயிராக்கியத்திற்கவதிசுழுத்தியன்போற் ...... *
றொக்ககருமங்களனைத்தினையுநினையாமை ...... *
தோன்றுமுபரதிக்கவதியாகுமிவைமூன்றும் ...... *
புக்கொருவனடைந்திடுமேலிதுமுன்னம்விடாது ...... *
புரிந்தமாதவத்தின்வலியென்றறிகதெரிந்தே ...... *

(இதனது பதப்பொருள்.)

தக்க-உரிமையான - தேகான்மபாவம்போல - தேகமேயாத்மாவெனப்பாவிப்பதுபோல்- பிரமம்-பிரமமே- தானென்றும்- தானென்கின்ற-திண்மை- திடமே- ஞானத்திற்கு- ஞானத்திற்கு- ஆமவதி-அவதியாம்- மிக்க-மேலான-பிரமாதிபதம் - சத்தியலோகாதியபதப்பிராப்திகள்- துரும்பெனவே-திரணமாகவே- நினைத்தல்-நினைப்பது - விளம்பும்- முற்கூறிய-வயிராக்கியத்திற்கு- வைராக்கியத்திற்கு- அவதி-அவதியாம்- சுழுத்தியன்போல் - சுழுத்தியைப்போல- தொக்க பொருந்திய- கருமங்களனைத்தினையும்- தேககாரியங்களனைத்தினையும்- நினையாமை-மறப்பதே- தோன்றும் உண்டான-உபரதிக்கவதியாகும்- உபரதியினவதியாம்- இவைமூன்றும்- இந்தஞானாதிமூன்றும் - புக்கு-புகுந்து- ஒருவன்-ஓர் புருடனை-அடைந்திடுமேல்-அடையுமாகில்- அது-அஃது- முன்னம்- ஜென்மாந்தரங்களில்- விடாது புரிந்த-நீங்காமற் செய்த-மாதவத்தின்-மகாதவத்தினது- வலியென்று-வல்லபமென - அறிகதெரிந்து - உணர்ந்தறிவாயாக—எ—று-ஏ-ஈற்றசை.

பிரமாதிபதமென்றமையின், பிருதிவிலோகபதப்பிராப்திபரியந்தமுங்கொள்க. அஞ்ஞானகாலத்திற் தேகந்தானாயிருப்பதுபோலப் பிரமந்தானாய்விளங்குதல் ஞானத்திற்கும் பதப்பிராப்திகளனைத்தினையுந் துரும்பாகவுபேக்ஷித்தல் வைராக்கியத்திற்கும் கருமங்களனைத்தினுமனமெழாமையே யுபரதிக்குமவதிகளாம்.

(இதனது தாற்பரியம்.)

ஞானாதிமூன்றினெல்லையினளவுகூறியதாம். (௱௪௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய ஞானாதிகளின்பலமுமவற்றின் ஞானமே முக்கியமெனவுமேனையவிரண்டுங் கவுணமெனவு முணர்த்துகின்றது.

(கவி.)

குறையகலும்வயிராகமுபரதியாமிரண்டுங் ... ....... ...*
கூடிஞானங்கூடாதாயின்முத்தியரிதா ... ..... ....... *
முறுமினியமிசையுலகபதங்கிடைக்குஞான....... ..... ...*
மொன்றுமடைந்தவையிரண்டுமிலையேனுநிற்க ... ... *
முறியுமரநெடும்பணையோன்விழநினைவின்றேனு ... ...*
முறியவிழல்போலவேதேகாந்தமதனிற் ....... ....*
பெறுவனுயர்முத்தியினையுடற்கமைந்தவினையாற்.......*
பிறந்திடுந்துக்கானுபவமுளதாதறிண்ணம் ...........*

(இதனதுபதப்பொருள்.)

குறையகலும் - குற்றமற்ற - வயிராகம் - வயிராகமும் - உபரதியாம் - உபரதியுமாகிய - இரண்டும் - இவ்விரண்டும் - கூடி - ஒருங்குடனேக்கூடி - ஞானங்கூடாதாயின். ஞானங்கூடாவிடின் - முத்தியரிதாம் - மோட்சங்கிடையாதாம் - உறுமினிய - இனிமைபொருந்திய - மிசை - ஊர்த்தமான - உலகபதங்கிடைக்கும் - சத்தியலோகபதப்பிராப்தியுண்டாம் - ஞானமொன்றும் - ஞானமாத்திரம் - அடைந்து - பெற்று - அவையிரண்டும் - உபரதிவைராக்கியமானவிவ்விரண்டும் - இலையேனுநிற்க - இல்லாததாயிருக்கினும் - முறியுமரம் - வேரோடுமொடிந்து வீழ்கின்றமரத்தின் - நெடும்பணையோன் - நெடியகிளையி லிருப்பவன் - விழநினைவின்றேனும் - பூமியில்விழமனமின் மையாயினும் - முறிய - மரமுறிந்துவிழ - விழ்ல்போல - அம் மரத்தினிற்பவன் பூமிபதனமாதல்போல் - தேகாந்தமதனி ல் - தேகாந்தத்தில் - பெறுவனுயர்முத்தியினை - மேலானமோ ட்சத்தையடைவன் - உடற்கமைந்த - தேகத்திற்கமைந்த - வினையால் - பிராரத்தகன்மத்தால் - பிறந்திடும் - உண்டான - து க்கானுபவம் - துக்கமனுபவித்தல் - உளதாதறிண்ணம் - உண் டென்பதுநிச்சயமாம் — எ — று - ஏ - அசை -

பணை - பிராரத்ததேகத்திற்கும், விழல் - முத்தியடைதற் குமுவமித்தல். தேகாந்தமதனிற் பெறுவனுயர்முத்தியென்

றமையின், சஞ்சிதமோமுத்தி யெனவும், உடற்கமைந்தவினை யென்றமையின் - சஞ்சிதாகாமிய நீங்கினபிராரத்தவினைமாத் திரமெனவும், துக்காநுபவமுளதாதலின் ஜனனமென்றமையி ன், பிராரத்தத்தால்வருஞ்சுகதுக்கமநுபவிப்பனென்பதும் பெற்றும். பெறவே, வைராக்யபராதியில்லாதவன் சுகதுக்க மநுபவிப்பானென்பது மிச்சுகதுக்கங்கள் புசித்துநீங்கு வதேயன்றிமேல்விளைவிற் கேதுவாகாதென்பதுங்காண்க.

(இதனதுதாற்பரியம்.)

வைராக்யமுபாதிகட்குப் பதப்பிராப்தியே பலமன்றிமுத்தி யின்றென்பதும் ஞானமொன்றற்கு முத்தியே பலமென்ப தும்மூன்றுங்கூடியிருக்கிற்சுகதுக்கமின்றிச்சத்தியோமு த்தநுபவமென்பதுமாம். (௱௪௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் சிரவணாதிமூன்றினாலுதயமானஞானமப ரோட்சமாதற்கேதுவானசமாதிகூறுவான் றொடங்கியதற்கு ச்சாதனமாயுள்ளஞானபூமிகளினேழினையு மவற்றினிரண் டினிலக்கணமுமுணர்த்துகின்றது.

(கவி.)

சாற்றரியசுவேச்சைவிசாரணைதனுமானசிசத் ... ..... .. *
வாபத்தியசம்சத்திபதார்த்தாபாவனையே ............... *
மேற்றுரியகாமியெனுமிவற்றினைமூதறிஞர் ... ... ......... *
விளங்குசத்தஞானபூமிகளென்பரவற்றுட் .............. *
டோற்றிடுநான்மூடனாயிருத்தகாரணமென் ...... ...... *
சுருதிகுருவாலறிவலெனநினைதல்சுவேச்சை ... ...... *
மாற்றரியசுருதிகுருவாற்சிறிதுதோன்றும் ............. *
வைராகத்துறுதல்சதாசாரவிசாரணையே ............... *

(இதனதுபதப்பொருள்.)

சாற்றரிய- சொல்லுதற்கரிய- சுவேச்சை-சுவேச்சையும்-வி சாரணை-விசாரணையும்-தனுமானசி-தனுமானசியும்-சத்வாப த்தி-சத்துவாபத்தியும்-அசம்சத்தி- அசம்சத்தியும்- பதார்த் தாபாவனை-பதார்த்தாபாவனையும் - மேல்-மேலான - துரிய காமியெனும் - துரியகாமியுமென்கின்ற-இவற்றினை - இவ் வேழினையும்-மூதறிஞர்-பேரறிவையுடையசத்துக்கள் -"வி

ளங்கு-விளங்காநின்ற - சத்தஞானபூமிகளென்பர் - சத்தஞானபூமிகளெனச்சொல்லுவார்கள் - அவற்றுள் - அவைகளுக்குள்-தோற்றிடும்-தோற்றுகின்ற - நான்மூடனாய்-யான்மூடனாக - இருந்தகாரணமென் - இருக்கக்காரணமென்ன-சுருதி-வேதவாக்கியத்தினாலும் - குருவால் - ஆசிரியருபதேசத்தினாலும்-அறிவமெனல்-அறிந்துகொள்வேனென - நினைதல்-கருதுவதே-சுவேச்சை - சுவேச்சையாகும்- மாற்றரிய-நீக்குதற்கரிய-சுருதிகுருவால் - வேதங்களினாலுமாசிரியரானும்-சிறிதுதோன்றும்-கிஞ்சித்துண்டான-வயிராகத்துறுதல்-வைராக்கியத்துற்றபலத்தினால்- சதாசார-சதாசாரப்பிரவிர்த்தியே-விசாரணை-விசாரணையாம்—எ—று-ஏ-ஈற்றசை-

ஞானபூமியென்பது, ஞானம்விளைதற்கேதுவானஸ்தானம். ஆமென்பது, சுருதியினுங்கூட்டினும்.

(பதசாரம்.)

நிஷ்காமபுண்ணியபரிபாகத்தாற்சுதந்தரமாயுதயமானஞானமவ்வியத்தமாயிருந்ததைக்கொண்டுவிடயங்களியாவையுந்துக்கமெனக்கண்டும்-தத்தெரிசனம்வியத்தப்படாதிருந்ததியாதுகாரணமென்பார்- தோற்றிடுநான்மூடனாயிருந்தகாரணமென்னெனவும்—இவ்வறியாமையை நீக்குமேதுவைக்கொண்டுநீக்கக்கருதினனென்பார்-சுருதிகுருவாலறிவமெனலெனவும்-அங்ஙனமுள்ள துக்கத்தைநீக்கிச் சுகத்தைவிரும்பினனென்பார்-சுவேச்சையெனவும்—மஹாவாக்கியத்தினாலும்பிரமோபதேசத்தினாலும் விளங்கும் பரமசுகஞ்சிறிதுதயமாமென்பார்- சுருதிகுருவாற்சிறிது தோன்றுமெனவும்—அதனாற் பிரமாதிபதந்தரும் பாகத்தோன்று நிராசையுண்டாமென்பார்- வைராகத்துறுதலெனவும்—அதனாலாத்மாநாத்மவிவேகஞ்செய்தநாத்மாவைநீக்கியாத்மாவைப் பூரணமாக விசாரித்தானென்பார்-சதாசாரவிசாரணையெனவுங்கூறினர்

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மேனையவற்றினான்கினிலக்கணமுணர்த்துகின்றது.

(கலி,)

மருவலுறுசுவேச்சைவிசாரணைவலியால்விடய... ... ...*
வலியறுதருந்தனுமானசியவற்றின்பயில்வால்........*

விரவுநனவாயவுலகினைக்கனவென்றெண்ணி.................*
மெய்த்தவான்மாவுண்மைகருதல்சத்வாபத்தி .........*
பரவுறுமுலகுதோன்றாதுசுழுத்தியன்போற்..........*
பகரறிவுமாத்திரையாய்நிற்றலசம்சத்தி................*
யொருவிவாசனையனைத்துமிகுதுயிலோன்போல..........*
வுயிராநந்தத்தொடுங்கல்பதார்த்தாபாவனையாம்... ..*

(இதனதுபதப்பொருள்,)

மருவலுறு- மருவாநின்ற - சுவேச்சை-சுவேச்சையும்-விசாரணை- விசாரணையுமாகியவிரண்டின் - வலியால்- அப்பியாசபலத்தினால் - விடயவலியறுதல்- விடயவன்மைநீங்கலே-தனுமானசி-தனுமானசியாகும்- அவற்றின்பயில்வால் - அம்மூன்றினப்பியாசபலத்தினால்-விரவு- கலந்திருக்கின்ற- நனவாயவுலகினை - சாக்கிரப்பிரபஞ்சத்தை - கனவென்றெண்ணி சொப்பனமாகநினைத்து - மெய்த்தவான்மா-உள்ளதானவாத்மாவினது - உண்மைகருதல் - சத்தாமாத்திரத்தைச்சிந்திப்பது-சத்வாபத்தி- சத்வாபத்தியாம் - பரவலுறும்- விரிந்திருக்கின்ற - உலகுதோன்றாது - சகத்தோற்றரவின்றி- சுழுத்தியன்போல்- சுழுத்தியனைப்போல - பகர்- சொல்லாநின்ற-அறிவுமாத்திரையாய்- சின்மாத்திரமாய் - நிற்றல்-நிற்பதே-அசம்சத்தி- அசம்சத்தியாகும்- ஒருவிவாசனையனைத்தும்-சர்வவாசனைகளையுநீக்கி - மிகுதுயிலோன்போல - காடநித்திரையடைந்தவனைப்போல- உயிராநந்தத்தொடுங்கல்- ஆத்மாவாநந்தத்திலயிப்பதே- பதார்த்தாபாவனையாம்-பதார்த்தாபாவனையாம்—எ—று,

விடயவலியறுதல், விடயாசத்திநீக்கமாம், நீங்கலேமனஞ்சிறுகுமெனக்கொள்க. கருதல், நிற்றல். ஒடுங்கலென்பதொருபொருளைக்குறித்தேயாம்.

(பதசாரம்.)

முற்கூறியவிரண்டு பூமியினப்பியாசமுதிர்ச்சி யினாலென்பார்-சுவேச்சைவிசாரணைவலியாலெனவும்--அதனால்விடயவாவிற்குச்சிரணம்வந்ததென்பார்- விடயவலியறுதலெனவும்—அதனான் மனமணுத்துவமாய்க் குறுகினதென்பார்-தனுமானசியெனவும்— இங்ஙனமறிவு வளர்தலுமனஞ்சிறுகலுமாகப்பழகி வருதலென்பார்- அவற்றின்பயில்வாலெனவும்—அதனாற்சாக் கிரத்திநிச்சயமாகத் தோற்றப்பட்டதிரி

ஸியங்கள்சொப்பனத்தைப்போலமித்தையாகக்காண்பானெ
ன்பார், நனவாயவுலகினைக் கனவென்றெண்ணியெனவும்—
இங்ஙனமெண்ணியவிடத்தாத்மசத்தைத்தரிசித்தானென்பா
ர், மெய்த்தவான்மாவுண்மைகருதல் சத்வாபத்தியெனவும்—
இவ்வனுபவத்தினாற் சொப்பனப் பிரபஞ்சமனதே யெனக்
கண்டவிடத்தச் சொப்பனந் தோன்றாது மனமாத்திரமாய்
நிற்பதுபோலமுன்கனவெனக் கண்டவுலகங் காண்பானாகிய
திருக்கு மாத்திரமாய் நிற்குமென்பார்- உலகுந்தோன்றாதசு
ழுத்தியன்போற்பகாறிவுமாத்திரையாய்நிற்றலசம்சத்தியெ
னவும்—இங்ஙனம் நிற்றலேவாசனாட்சயமாய்ப் பிரமாநந்த
ம்வெளிப் படுமென்பார்- ஒருவிராசனை படைத்துயிருதுயி
லோன்போல வுயிராநந்தத் தொடுங்கலெனவும்—இப்போ
தாநந்தமானவிடத்துச் சர்வமூர்த்தன்மயமாய்விளங்குமென்
பார்-பதார்த்தாபாவனை யெனவுங்கூறினார்                (௩௪௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளினேனையவொன்றினிலக்கணமுமிப்பூமிகளினு
ள்ளவனுபவத்தையபரோட்சப் படுத்துவான்கருதியிவற்றி
ற்குச்சகாயமான சட்சமாதியி னிலக்கணங்கூறுவான் றொட
ங்கியிவற்றினமுமுணர்த்துகின்றது.

(கவி.)

உண்டிலையென்றுமலகங்கிருதிநிரங்கிருதி................ *
யுறாமலறிவுருவாயவத்துவிதபதத்துட் ................ *
கண்டதொருவனுங்குடம்போனுட்புறஞ்சூனியமாங் ...... *
கதிதுரியகாமியாமுபாதியையடைந்து ................ *
கொண்டிலசனுதுதிரிசியானுவேதம்பின் ................ *
கூறனுசத்தானுவேதநிருவிகற்ப ................ *
மெண்டருசட்சமாதிகளாம்புறமொடகமென்று ......... *
மிரும்பதமடைந்தவற்றைநூறையினிவண்மொழிவாம் *

(இதனதுபதப்பொருள்.)

உண்டு-ஒன்றையுண்டெனவும்- இலையென்றுமல்-இல்லையெ
னவுஞ்சொல்லாமல்- அகங்கிருதி - அகவிவகாரமும்-நிரங்கி
ருதி-புறவிவகாரமும்-உறாமல்- தோன்றாமல்-அறிவுருவாய-
ஞப்திஸ்வரூபமாகிய- அத்துவிதபதத்துள்- அத்துவிதப

தத்தில் கண்டது - வெளியிற்காணப்பட்டதான - ஒருவனுங்
குடம்போல் - ஓர்வெறுங்கடத்தைப்போல - உட்புறம்-உள்
ளும்புறம்பும் சூனியமாங்கதி - சூனியமாயிருக்குமிடமே-
துரியகாமியாம்- துரியகாமியாகும்-உபாதியை-மூற்கூறிய
வுபாதியை-அடைந்துகொண்டு - அனுசரித்துக்கொண்டு-
இலகுறு- விளங்காநின்ற-திரிசியானுவேதம்-திரிசியானுவி
த்தமும்-பின்கூறலுறு-பின்சொல்லப்பட்ட - சத்தானுவேத
ம்-சத்தானுவித்தமும் - நிருவிகற்பம்-நிருவிகற்பமுமாகிய-
எண்டரும்- எண்ணிக்கைபெற்ற- புறமொட்டகமென்னும் உ
ட்புறமென்கின்ற-இருபேதமடைந்து- இரண்டுபேதமடை
ந்ததால்-சட்சமாதிகளாம்- ஆறுசமாதிகளாம்- அவற்றை-அ
ச்சமாதிகளை - முறையின் - நிரலே-இவண் - இவ்விடத்தில்-
மொழிவாம் - சொல்லுவாம்—எ—று.

நிரகங்கிருதியென்பது, நிரங்கிருதியெனக் கெடுதல்விகா
ரமாயிற்று. புறமொடகமென்றமையிற் புறத்தின் மூன்றும்
அகத்தின் மூன்றுமாகச் சட்சமாதியாம்- இவ்வனுசந்தானந்
திரிசியத்தை யனுசரித்துவருதலால் திரிசியானுவேதமென
வும் இருக்குவானசத்தையனுசரித்துவருதலால் சத்தானுவே
தமெனவும், இவ்விரண்டையுமனுசரியாமற்சுவயமாய்விகற்
பமின்றிச்சச்சிதாநந்தமாய்வருவது நிருவிகற்பமெனவும், தி
ரிசியத்திற்றன்னைக் காண்பது புறமெனவும், தேகாதியகக்க
ரணத்திற்றன்னைக்காண்பது அகமெனவுங்கொள்க.

(பதசாரம்.)

மூற்கூறியசிற்சுகாநுபவத்தினால்- சத்தசத்தென்பதும் பா
கியாந்தரமென்பனமுதலியபேதமியாவுமின்றிச்சின்மாத்தி
ரமானவத்துவிதஸ்வரூபத்தைத்தவிர மற்றொன்றுமில்லாத
தேதுரியாதீதமென்பார்- துரியகாமியாமெனவுங்கூறினார்.

சரிதையாதிமூன்றுங்கடந்தஞானபாதத்திற்குச்சாதனமா
னசுபேச்சைவிசாரணை தனுமானசியென்கின்ற மூன்றுமப்
பியாசபூமியெனவும்—சத்துவாபத்தி- அசம்சத்தி-பதார்த்
தாபாவனை-துரியமென்கின்றநான்குமனுபவபூமியெனவும்
—இவற்றினிரலே- பிரமவித்து-பிரமவரன்-பிரமவரியான்-
பிரமவரிட்ட னெனச் சீவன்முத்தர்களது தாரதன்மியங்க
ளெனவும்— இன்னுமிவ்வனுபவமாகிய புருடனுக்குமூற்கூ
றியமூன்றுபூமியுஞ்சாக்கிரமும்- நான்காம்பூமி சொப்பன

மும்-ஐந்தாம்பூமிசுழுத்தியும்- ஆறாம்பூமிதுரியமும்-ஏழாம்பூமிதுரியாதீதமுமாகிய பஞ்சாவத்தைகளுமாம்.

(இம்மூன்றுகவியினதுதாற்பரியம்.)

இவைகளப்பியாசத்திற்குசாதன்மியங்களன்றியு மனுபவத்தினுந் தாசதன்மிய மிருப்பனவைக்கண்டிவ் வவதிகட்கதீதமாக வேண்டியிஞ்ஞானபூமியினிலக்கணங்களை புணர்த்தியதாம்.)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் புறச்சவிகற்பசமாதியினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

கடாதிவிடயத்தினிலொன்றினைக்குறித்து நாம ....... *
கற்பனையோடுருவமெனுமாயைபதன் றிறத்தைத் ...... *
தடாதுவிடுத்தத்திபாதிப்பிரியமென்னுஞ் ......... *
சச்சிதாநந்தமாம்பிரமத்தின் றிறத்தை ............... *
விடாதனுசந்தானஞ்செய்திடுதலேபுறத்து ................ *
மெய்த்திரிசியானுவேதப்பெயர்கொள்கின்ற ............ *
கெடாததொருசவிகற்பசமாதியெனலாகும் ............ *
கிளந்தபுறச்சத்தானுவேதமதுகிளப்பில் ............... *

(இதனதுபதப்பொருள்.)

கடாதிவிடயத்தினில் - கடமாதியவிடயசமூகத்தில்- ஒன்றினைக்குறித்து-யாதொன்றையாகினுங்குறித்து- நாமகற்பனையோடு- கற்பனாநாமத்துடன்- உருவமெனும்- உருவமுமென்கின்ற- மாயைபதன்றிறத்தை- மாயையின்றன்மையாகிய வவ்விரண்டையும் - தடாதுவிடுத்து - தடையில்லாமனீக்கி- அத்திபாதிப்பிரியமென்னும் - அத்திபாதிப்பிரியமுமென்கின்ற-சச்சிதாநந்தமாம்-சச்சிதாநந்தமாகிய- பிரமத்தின்றிறத்தை- பிரமாம்சத்தை - விடாது- இடைவிடாமல்- அனுசந்தானம்- அப்பியாசம் - செய்திடுதலே-செய்வதே- புறத்துமெய்-பாகியத்தினுள்ள- திரிசியானுவேதம்-திரிஸ்யானுவித்தமென்னும்- பெயர்கொள்கின்ற- நாமம்பெற்றிருக்கின்ற- கெடாத-நசியாத-ஒரு- ஒப்பற்ற - சவிகற்பசமாதியெனலாகும் - சவிகற்பசமாதியென்று சொல்லப்படும்- கிளந்த

து-முற்கூறிய - புறச்சத்தானுவேதமது - புறச்சத்தானுவித்தத்தை-இனப்பின்- சொல்லின் — எ — று.

(பதசாரம்.)

காணப்பட்ட திரிஸ்யங்களின்மாயையின் றன்மையாகிய நாமரூபத்தை நீக்கிப்பிரமாம்சத்தால் யதார்த்தமாகவிளங்கியசச்சிதாநந்தமாய்ப் பழகவேண்டுமென்பார்- கடாதிவிடயங்களிலனுசந்தானஞ் செய்தலெனவும்—அங்ஙனஞ் செய்தல்பாகியத்திலென்பார்- புறத்தெனவும்— அஃது திரிஸ்யத்தையனுசரித்து வருதலென்பார்-திரிஸ்யானுவேதமெனவும்—அங்ஙனஞ்செய்தல் விடயங்களின் வேறுபாடென்பார். சவ்விகற்பசமாதியெனவுங்கூறினார்.

(இதனதுதாற்பரியம்.)

புறம்பிலுள்ள விடயங்களினாமரூபதிருஷ்டியின்றிச் சச்சிதாநந்ததிருஷ்டியாகப் பழகவேண்டுமென்பதாம். (௪௬௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிலுத்தமுறைபாவேனையவற்றுட் புறச்சத்தானுவேதமாதிய மூன்றுசமாதியி னிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

சச்சிதாநந்தவுருவாகுவதேபிரமந்...... .... ... .........*
 தானெனவேதியானித்தலதுவாகுமென்க ...............*
விச்சமாதிகள்பயின்றவவியிறைற்மூன்று ...............*
 பிரும்பிரமாநந்தநிலைதனின்மனஞ்சென்றொங்கி .....*
நிச்சலமாடலையில்கடல்போலிருத்தல்புறத்து ...... ....*
 நிருவிகற்பசமாதியாமனேகதகாமாதிக்...............*
கச்சமறுகரிதானென்றெண்ணுதலுட்டிரிசி ...... .......*
 டானுவேதப்பெயர்கொள்சவ்விகற்பசமாதி... ........*

(இதனதுபதப்பொருள்.)

சச்சிதாநந்தவுருவாகுவதே- சச்சிதாநந்தஸ்வரூபமாவதே-பிரமந்தானெனவே- பிரமமேயென- தியானித்தல்-சித்திப்பதே- அதுவாகுமென்க- முற்கூறியபுறச்சத்தானுவேதமென்றறிக-இச்சமாதிகள் - இவ்விருசமாதிகளையும்- பயின்றவ

லியினால்- அப்பியாசித்தபலத்தினால் - தோன்றும்- உண்டா
ன-இருப்-மென்மையுள்ள- பிரமாநந்தநிலைதனில்-பிரமாந
ந்தஸ்தானத்தில் - மனஞ்சென்றொடுங்கி- டுனலயமாய்-நி
ச்சலமாய்-சலனமின்றி-அலையில்கடல்போல்-நிஸ்தரங்கசமு
த்திரம்போல- இருத்தல் - இருப்பதே-பரத்து - பாகியத்தி
னுள்ள- நிருவிகற்பசமாதியாம் - நிருவிகற்பசமாதியாம்-ம
னோகதகாமாதிக்கு- மனதின்கணுள்ளராகத்துவேஷாதிவிஷ
யங்களுக்கு-அச்சமறு-கனமான - கரிதாமென்று- தானேசா
ட்சியென்று- எண்ணுதல் - சிந்திப்பதே-உள்- அகத்தினுள்
ள-திரிசியானுவேதம்- திரிஸ்யானுவித்தமென்னும்- பெயர்
கொள்- நாமமுள்ள - சவ்விகற்பசமாதி - சவ்விகற்பசமாதி
யாம்—எ-று ஏ-ஈற்றசை.

(பதசாரம்.)

முன்னனுசந்தித்துவந்த சச்சிதாநந்தமே பிரமசத்தெனவ
னுசந்தித்துவருதலேபுறச்சத்தானுவேதமெனவும்— இவற்
றாலுதயமானவாநந்தத்தின்மனங்கனைத்துநிற்றல்-புறத்துநி
ருவிகற்பசமாதியெனவும்— இத்தேகாதியந்தக்கரணங்களா
லாருங்காமக்குரோதாதிகளின் சேட்டைக்குத் தான்சாட்சி
யாய்க்காண்பதே- மனோகதகாமாதிக்குக்கரிதாமெனவும்—
இஃதகவிடயத்திலனுசந்தானமாதலினுட் டிரிசியானுவே
தமெனவும்— இஃதுதனக்கு வேறுபாடாயிருத்தலினுட்சவ்
விகற்பசமாதியெனவுங்கூறினர்.

(இதனதாற்பரியம்.)

சச்சிதாநந்தமேபிரமமாகவுமதனாலுதயமானபிரமாநந்தத்
தின்மனங்களையுமகத்திலுள்ள சகலதத்துவங்களுக்குத்தா
ன்சாட்சியா யிருப்பதுமாகப்பழகவேண்டுமென்பதாம்.()

(அவதாரிகை.)

இச்செய்யுளினேனைய வகச்சத்தானுவேதமாதிய விரண்டுச
மாதியினிலக்கணமுணர்த்துகின்றது.

(கலி.)

சங்கமறுசச்சிதாநந்தவொளியுருவந்........ .... .........*
தானெனச்சிந்தித்திடலுட்சத்தானுவேதம் ...............*
பொங்குறுதன்னனுபூதிரசத்தோன்றுமதனாற்... .........*
புகன்றதிரிசியஞ்சத்தமெனுமிரண்டுமேகன்றே.........*

யிங்கசைவிதீபமெனப்பந்தமறவிருத்த................*
விலங்குமகநிருவிகற்பசமாதியிவ்வாறுனுந்.........*
தங்கலுறவொழுகுமியோகிக்குமனமெங்குச்...............*
சரிக்குமாண்டாண்டெலாஞ்சமாதியெனலாமே......*

(இதனதுபதப்பொருள்.)

சங்கமற்ற-அசங்க- சச்சிதாநந்தவொளியுருவம் - சச்சிதாநந்தசுயம்பிரகாசஸ்வரூபமே - தானெனச்சிந்தித்திடல்- தானெனச்சிந்திப்பதே - உட்சத்தானுவேதம் - அகச்சத்தானுவித்தசமாதியாம் - பொங்குறு-வளர்கின்ற- தன்னனுபூதிரசம்-சுவானுபூதிரசாவேசம்- தோன்றுமதனால் - உண்டாகுமதனால்-புகன்ற- இங்ஙனங்கூறிய- திரிசியஞ்சத்தமெனும்-திரிஸ்யானுவேதசத்தானுவேதமென்னும்- இரண்டுமகன்று- இரண்டையுநீங்கி- இங்கு-இவண்- அசைவிதீபமென- சித்திரதீபத்தைப்போல- பந்தமறவிருத்தல்-பந்தநீங்கிநிற்பதே- இலங்கும்-விளங்காநின்ற அகநிருவிகற்பசமாதி- அகநிருவிகற்பசமாதியாம் - இவ்வாறுனும்- இச்சட்சமாதிகளுடன்-தங்கலுறவொழுகும்- தரித்துநடக்கின்ற- யோகிக்கு-யோகீசரனுக்கு-மனம் - மனமானது-எங்குச்சரிக்கும்-எங்கெங்கே சஞ்சரிக்கின்றதோ- ஆண்டாண்டெலாம் - ஆங்காங்குள்ளவிடங்களனைத்தும் - சமாதியெனலாம் - சமாதியென்றுசொல்லலாம்—எ—று-ஏ-ஈற்றசை.

(பதசாரம்-)

சங்கத்தியாகமாய்த் தனித்துவிளங்கியசச்சிதாநந்தமேயாத்மாவெனவும் — இச்சிந்தனமகத்தி லனுசரித்துவருதல், அகச்சத்தானுவேதமெனவும் — அவற்றாலுண்டான வாத்மாநந்தத்தின்முன்பழகினவிரண்டுநீங்கிமனங்கரைந்து நிச்சலமாய்நிற்பதே, அகநிருவிகற்பசமாதியெனவும்—இவற்றுனிவன்மனமானந்தவடிவமாய்நிற்றலிற் சஞ்சரிக்குமாண்டாண்டெலாஞ்சமாதியெனவுங்கூறினர்.

வினு - திரிஸ்யானுவேதத்திற்குஞ்சத்தானுவேதத்திற்குஞ்சவ்விகற்பசமாதியெனவொன்றாய்ச்சொல்வதியாதினுலெனின்,

விடை - நாமரூபமானதிரிஸ்யத்தை விகற்பித்துச்சச்சிதாநந்தத்தைக்கிரகித்தலினுஞ்சச்சிதாநந்தமேபிரமமென

ச்சிந்திக்கும் பேதமிருந்தவிருனு மிவ்விரண்டிற்குமொரே
நாமம்வந்ததென்க.

மனம்ஆனந்தவடிவமென்றதற்குமேற்கோள், மனநிறைந்தி டினமுதமாய் நிறைந்திடுமவையந், தனதுதாட்செருப்புல கெலாந்தோன்மூச்சுந்தரம்போலென்னும் - வாசிட்டக்கவி யிருனுங்காண்க,

(இதனதுதாற்பரியம்-)

புறச்சத்தானுவித்தசமாதிமூன்றாந்தற்பதசோதனையாம் அவற்றின்முன்னையவிரண்டும்வாச்சியார்த்தமான வீசனையும், பின்னையவொன்றும் லட்சியார்த்தமானபிரமத்தையும்விள க்கும், அகச் சமாதிமூன்றுந்தொம்பதசோதனையாம்- அவற் றின்முன்னையவிரண்டும்- வாச்சியார்த்தமான ஜீவனையும்-பி ன்னையவொன்றும்- லட்சியார்த்தமானகூடஸ்தனையும்விளக் கும்; இவ்விரண்டுமசிபதத்தின்வாச்சியார்த்தமெனவுமிவற் றினைக்கியமான வத்துவிதஸ்வரூபமே லட்சியார்த்தமெனவு மிங்ஙனமனுபவமுள்ளவனேசதா சமாதியையுடையவனு மாமென்பதாம். (௱௬க)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறியசமாதிகளா லனுபவமானஞானத் த்திற்குப்பலமுன்பொதுவாகக்கூறினதன்றியதன்சிறப்பைப த்துக்காபாவமு நான்காகத்தொகுத்து மவற்றின்முதலா வொன்றைநான்காகவகுத்துங் கூறுவான்றொடங்கியவற்றினுமமு மவைகளிற்றுக்கானுபவந்தோன்றவிக்லோக துக்கவிலக்கண முமுணர்த்துகின்றது.

(கவி.)

துக்கமாஞானபலநான்குதுக்காபாவஞ் ................... *
சருவகாமாப்தியொடுகிருதகிருத்தியமே ................. *
தொக்கபிராப்திப்பிராப்பியங்களெனுமவற்றுட் .......... *
சொல்லியதுக்காபாவமிகபரத்தாலிரண்டாம்... .......... *
பொய்க்குமோர்தூலவுடம்பெழிலொழிதோற்றம் ... ...*
புகுபிணிகண்முதலனவுங்காரியதேகத்து...... .........*
மிக்ககாமாதியுங்காரணத்தினிலவ்வாதி........................*
வியாதிகட்குவித்தாம்வாசனையுமிகத்திடும்பை ........*

(இதனதுபதப்பொருள்.)

துக்க-தகுதியான- மாஞானபலம்- பூரணஞானத்திற்குப்பலமானது-துக்காபாவம்-துக்காபாவமும்-சருவகாமாப்தியொடு-சர்வகாமாப்தியுடன்- கிருதகிருத்தியம்-கிருதகிருத்தியமும்-தொக்க-தொகுத்திரா நின்ற-பிராப்திப் பிராப்பியங்களெனும்- பிராப்திப்பிராப்பியங்களுமென்கின்ற நான்கு-நான்காம்-அவற்றுள் - அந்நான்களுள் - சொல்லிய- முற்கூறிய-துக்காபாவம்- துக்காபாவமானது- இகபரத்தால் - இகபரமென்றதனுல் - இரண்டாம்- இருமையாம்- பொய்க்கம்-மித்தையாகிய- ஓர்தூலவடப்பு- ஓர்தூலதேகத்தில்- எழிலொழி-குரூபத்துவமும்-திநாற்றம்- துர்க்கந்தமும்- புகு-வராநின்ற-பிணிகண்முதலனவும்- வியாதியாதிகளும்- காரியதேகத்து- சூட்சுமதேகத்தின்-மிக்க- மிகுந்த-காமாதியும்-இராகாதிகளானவாதியும்- காரணத்தினில் - காரணதேகத்தில்-அவ்வாதிவியாதிகட்கு - அங்ஙனங்கூறியவாதி வியாதிகளுக்கு-வித்தாம்-பீசமான - வாசனையும்-வாசனாசமஸ்காரமுமாகிய திரிவிதசந்தாபமே- இகத்திடும்பை- இகலோகதுக்கமாம்—எ—று-ஏ-அசை.

துக்காபாவம், துக்கமின்மை. சர்வகாமாப்தி, யாவினுநிறைந்திருக்கின்ற சுகத்தையடைதல். கிருதகிருத்தியம், செய்யவேண்டியசாதகங்களனைத்துஞ்செய்துமுடித்தது. பிராப்திப்பிராப்பியம், அடையவேண்டியபொருளையடைதல். துக்காபாவமிகபரத்தாலிரண்டென்றமையின், துக்கமுமங்ஙனமேயிரண்டாயின. பிணிகண்முதலனவென்றமையின், வாதபித்தசிலேத்துமங்களாலும், விஷஸ்பரிசமுதலனவற்றிற்குக்கிட்டிப்பாய்ச்சன்முதலனவற்றாலுந்தூலத்திற்குவருந்துன்பங்களும், காமாதியென்றது, இராகத்துவேஷங்களாற்சூக்குமத்திற்குவருந்துன்பங்களும், வித்தாம்வாசனையென்றதிவ்விரண்டிற்குங்காரணமானவாசனையாற்காரணத்திற்குவருந்துன்பங்களுமெனக்கொள்க. கொள்ளவே, இத்தூலாதிமூன்றுதேகத்தால்வருந்துன்பங்களேயிகலோகதுக்கங்களென்பதாயிற்று.

(இதனதுதாற்பரியம்.)

இகலோகதுக்காபாவம்வருவிப்பான் கருதியிவ்விகதுக்கநீங்குநிமித்தமிம்மூன்று சரீரங்களால்வருந் துன்பங்களைத்தரிசிப்பித்ததாம். (௬௰௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிகலோகதுக்காபாவமும்பரலோகதுக்கமுமா கியவிரண்டினிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

மித்தையெனுமாயாகாரியவுடம்பாதிகளின் ......... ...*
வேறுபடுரியஞானத்தின்மேலாக ...... ...............*
வைத்தவொருபோகபோத்திருக்களிலாமையினால் ......*
வரஞானிக்கவ்விடம்பைமூன்றுமிலாதிருத்தல் ....... ... *
பொய்த்தவிகலோகதுக்காபாவமெனலாகும் · ............*
புண்ணியம்வந்தென்றும்போம்பாவமெனநின்ற .........*
சித்தமுறுசிந்தனையேபரலோகதுக்கந் ... ...... ....... *
தெரியினெனப்புகன்றிடுவர்திருக்கறுநல்லறிஞர் ..... *

(இதனதுபதப்பொருள்.)

மித்தையெனும்- அநித்தியமென்கின்ற- மாயா-மாயையின து-காரிய-காரியமான - உடம்பாதிகளில் - தூலதேகமுதலி யவைகளினின்றும் - வேறுப-வேறான - துரியஞானத்தின்- பிரத்தியகாத்மாவிற்கு-மேலாகவைத்த - மேலாயிருக்கின்ற- ஒருபோக-ஒருபோகமும்- போத்திருக்கள்- அதையனுப விக்கும்போத்தாக்களும்- இலாமையினால் - இன்மையினால்- வரஞானிக்கு - மேலானஞானவானுக்கு- அவ்விடம்பைமூன் றும்-முற்கூறிய துக்கத்திரயங்களும்- இலாதிருத்தல்-இல்லா திருப்பதே-பொய்த்த - மித்தையாகிய-இகலோகதுக்காபா வமெனலாகும் - இகலோகதுக்கநிவிர்த்தியென்பனவாம்-பு ண்ணியம்-புண்ணியமானது - வந்து-என்றைக்குவந்து-பா வம்-பாவமானது - என்றும்போமென நின்ற - என்றைக்குப் போகுமென்கின்ற - சித்தமுறு சிந்தனையே- மனதிலுள்ள வாலோசனையே-பரலோகதுக்கந் தெரியினென-விசாரிக்கு மிடத்துப்பரலோகதுக்கமென்று- புகன்றிடுவர்- சொல்லு வார்கள்-திருக்கறு-குற்றமற்ற-நல்லறிஞர் -சுகபோதத்தையு டையசத்துக்கள்—எ—று.

வந்தென்றுமிறந்தகாலம்வருமெனவெதிர்காலத்தைநோ க்கிநின்றது.

வினா - பரலோகதுக்கத்தைக்குறித்துவந்தபாவவெறுப்பும் புண்ணியவிருப்புந்துன்பமாயினதென்னையெனின்,

விடை - இங்ஙனமிவற்றைக் குறிக்கும்போதே வருமோ வா ராமேதாவெனமனதிற்சைகய மாதலினாலுமங்ஙனங்கிடைப் பினுமஃதுமிக துக்கத்தைப் போலத்தாலத்திற்றுச்சுரமா திநோய்களினானுஞ்சூட்சுமத்திற்குக்காமநோயாதியவனி தாதியபோகங்களினானுங்காரணத்திற் காதிவியாதியாதிய வாசனைகளினிறைந்திருப்பதினானுந் துன்பமேயாயிற்றென்க.

வினா - அற்றேல்- வனிதாதிபோகங்களை யனுபவிக்குமின்ப முந் துன்பமாயினதென்னையெனின்.

விடை - துக்கரூபமான விஷயவின்பமுந் துக்கமேயன்றி மற்றொன்றாகாமையாற் துக்கமேயாமென்க-

(இதன் தாற்பரியம்.)

துன்பவடிவமானசரீரத்திரயங்களையு மவற்றையனுபவிக்கு மகங்காராத்மாவையுந்தேகிகளைந்துமேற்சேடித்திருந்தபிர த்தியகான்மஸ்வரூப சுகத்திலிருப்பதே யிகலோகதுக்காபா வமெனவுமிம்மையிற்செய்தபாவமெங்ஙன நீங்குமறுமைக் குவேண்டிய புண்ணியமெங்ஙன முண்டாகுமெனக் கருதி சர்வப்பிராயச்சித்தமுதற்செய்வதன்றுமிந் தேகாந்தத்திற்ப ரலோகத்தை விரும்பிவருந்துவதே பரலோகதுக்கமெனவு முணர்த்தியதாம். (௩௫௩)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் பரலோகதுக்காபாவ விலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

ஞானநிலையடைதலுந்தாமரையிலையினீர்போன் ... ...*
ஞானியிருவினையுமுறைமையினலித்தனத்திற் .........*
நீநணுகுமனலில்விறகிலாததுபோற்கருமச்..............*
செயலிலவனுமவனிலஃதிராமையினான் ... ... .......*
மானழலுண்வஸத்திலுறாததுபோலஞான.................*
மயனைவினையாவுமுறைமையினலச்சிந்தை ..... .........*
தானவனிலெழாதிருத்தறனையுணர்ப்பர்மேலோர் .........*
தக்கபரலோகதுக்காபாவமெனவன்றே....................*

(இதனதுபதப்பொருள்.)

ஞானநிலை- ஆத்மஞான நிச்சயத்தை - அடைதலும்- அடை ந்தமாத்திரத்தில்- தாமரையிலையினீர்போல்- கமலபத்திரோ

தகம்போல-ஞானி - ஞானவானுக்கு - இருவினையுமுறாமை யினால்- கர்மதொந்தமின்மையினால் - இந்தனத்திற்றீதனுகும்- காட்டத்திலக்கினியிருக்கும்- அனலில்- அவ்வங்கியில்- விறகிலாததுபோல் - காட்டமில்லாததுபோல- கருமச்செயலில்-கன்மத்துவயவிவகாரத்தில்-அவனும் - அவ்விவேகியிருப்பன் - அவனில் - அவ்வறிஞனிடத்தில் - அஃது- அக்கருமத்துவயம் - இராமையினால்- இல்லாமையினால்- மான்-மிருகங்கள்- அழலுண் - அக்கினியினாற்றபிக்கப்பட்ட -வனத்தில்-கானகத்தில்-உறாது- சேராது - அதுபோல-அதைப்போல-ஞானமடனை- ஞானஸ்வரூபனை - வினையாவும் - சகலகன்மங்களும்- உறாமையினால் - பொருந்தாமையினால்- அச்சிந்தை- அச்சிந்தையானது- அவனில்-அந்தஞானியினிடத்தில்- எழாதிருத்தறனை- உண்டாகாதிருப்பதை - மேலோர்-மேலானசத்துக்கள்-தக்க-தகைமையான- பரலோகதுக்காபாவமென-பரலோகதுக்காபாவமாமென்று - உரைப்பர்- சொல்லுவார்கள்—எ—று-தான்-அன்றே-அசை.

ஞானிக்குக்கமலபத்திரத்தையும்,அக்கினியையும்,வனத்தையும்,வினைக்குச்சலத்தையும்,விறகையும்,மானையுமுவமித்தல்.

வினா - இங்ஙனங்கூறியவினைகளெங்ஙனந்தீங்கிற்றெனின்,

விடை - அக்கினியினெரிக்கப்பட்டவிறகவ்வக்கினிமயமாய்த்தீங்கினதுபோல முன்னுள்ள சஞ்சிதவினை ஞானத்தாலெரிக்கப்பட்டவைஞானமயமாய்த்தீங்கிற்றென்க.

வினா - பின்னுள்ளவாகாமியத்தால்வரும்வினைகணீங்குவதெங்ஙனமெனின்,

விடை - காடாக்கினியா யெரிகின்றவனத்தில் மிருகாதிகளுண்டாதலும்வருதலுமின்றியதுபோலஞானமயமாய்ப்பிரகாசிக்கின்றசத்துக்களிடத்திலவ்வினைகளுண்டாதலும் வருதலுமின்றென்க.

வினா - அற்றேல்-அவ்வினைகளெரியுமென்றும்வாராவென்றுங்கூறினமையினதற்கோர்சொரூபமுண்டோவெனின்,

விடை- அவைகடமது தொழிலேயன்றி யவைகட்கோர்சொரூபமின்றென்க; எனவே, அவைதமது தொழிலாதலின்றனது சங்கற்பதீங்கவே யவைகணீங்குமெனவும், அந்தீக்கமேஞானவியாபகமாய்விளங்குமெனவும், அங்ஙனம்விளங்க

லேயிவ்வினைகளுண்டாதற்கேதுவின்றெனவுங்காண்க.

வினா - பிராரத்தவினையனுபவித்துத்தீரவேண்டுமென்றதென்னையெனின்,

விடை - அவ்வினைஞானவுதயமாதற்குமுன்னமே யமைந்த தாமென்க.

வினா - அற்றேல்-அதினாலுண்டாகும்வினைகணீங்குவதெங்ஙனமெனின்,

விடை - அவ்விருவினைகளு மிவனைப்புகழ்வர்பாலொன்றும் இகழ்வர்பாலொன்றுமாய் நீங்குமென்க.

வினா - அற்றேல்-இவையிங்ஙனமிருக்கவினைகளைப்பொருமுதலாக நினைத்திவனைநீங்கிற்புறத்திற்சேருமெனச்சிலர்கூறுவதென்னையெனின்,

விடை - அவ்வினைபரிபூரணஸ்வரூபமான தன்னிடத்திலேகதேசசங்கற்பத்தாலுண்டானதென்றறிந்தவற்றைத்தனது நிருவிகற்பத்தாற் களைக்கத்தெரியாத சிற்றறிஞரங்ஙனங் கூறுவரென்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

இங்ஙனங்கூறியபுண்ணியபாவமாகிய விருவினைகளுநீங்கின விடத்தவற்றிற்சித்தையெழாது சின்மாத்திரமாய்விளங்குகின்றதேபரலோகதுக்காபாவமெனவுமிந்நான்கினுற்றுக்கநிவர்த்தியானசுகத்திலிருப்ப னெனவுங்கூறியதாம். (௬௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையாற் சர்வகாமாப்தியினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

எல்லாவாம்வினையுமூலஞ்சார்வபவுமாகி ....... ....... .. *
யிரணியகர்ப்பாந்தமாய்மேன்மேல்வேண்டுற்ற ... ... *
நல்லாநந்தங்களெலாம்பத்திலாவதிரு........ ..... .......... *
னனுகுதலான்ஞானங்கொண்டறிசிவத்தின்கூறாய்த் ... *
தொல்லாநந்தங்களெலாநிற்கையினுலவற்குத் ............... *
துவமிலகண்டாநந்தசித்திதோன்றுதலே ............... *
பொல்லாதவினைப்பகையைக்கடந்தபெருந்தவர்கள்....... *
புகன்றிடுவர்சர்வகாமாப்தியெனவன்றே .. ............... *

(இதனதுபதப்பொருள்.)

எல்லாவாழ்வினையுமுறும் - சர்வைஸ்வரியசம்பன்னனுளை - சார்வபவுமாதி- சார்வபூமன்முதலாக- இரணியகெர்ப்பாந்தமாய்-இரணியகர்ப்பமீறாக - மேன்மேல்- உத்தரோத்தரமாய்-வேண்டுற்ற- விரும்பத்தக்க-நல்லாநந்தங்களெலாம்- சத்குணோத்தரமான வாநந்தங்களனைத்தும்-பற்றிலா-பற்றற்ற-அறிஞன்-ஞானவான்- நணுகுதலால்-அடைந்திருப்பதனால்-ஞானங்கொண்டு-அந்தஞானத்தைக்கொண்டு- அறி-அறியாநின்ற-சிவத்தின்கூறாய் - பிரமாம்சங்களாய் - தொல்லாநந்தங்களெலாம்- முற்கூறியவாநந்தங்களனைத்தும்- நிற்கையினால்-இருப்பதனால் - அவற்கு- அவ்விவேகிக்கு - அவமில்-இரண்டற்ற- அகண்டாநந்தம்- அகண்டாநந்தாம்சமான-சித்திதோன்றுதலே - சித்தியுண்டாவதே -பொல்லாத-ஈனமான-வினைப்பகையை- கன்மவிகலை- கடந்த-செயித்த- பெருந்தவர்கள் - மாதவர்கள்- சர்வகாமாப்தியென-சர்வகாமாப்தியாமென்று- புகன்றிடுவர்-சொல்லுவார்கள்—எ—று-அன்றே-அசை.

சார்வபவுமாதி, இரணியகர்ப்பாந்தமென்றது, துவாதசவாநந்தங்களாம். அவையாவன, மனுஷ்யாநந்தம்- மனுஷ்யகந்தர்வாநந்தம்-தேவகந்தர்வாநந்தம்-பிதுராநந்தம்-ஆசானசதேவாநந்தம்- கருமதேவாநந்தம்- தேவாநந்தம்- இந்திராநந்தம்-பிரகஸ்பதியாநந்தம்- பிரசாபதியாநந்தம்-விராட்டாநந்தம்-இரணியகர்ப்பாநந்தங்களென்பனவாம்.

பிரசாபதியைவிராட்டிலடக்கி- யேகாதசமாகக்கூறுவது, சார்வபூமன்முதற் பிரகஸ்பதியீறான வொன்பதுஞ்சீவர்களனுபவிக்குமாநந்தங்களும், எனையமூன்றும் ஈசுரர்களனுபவிக்குமாநந்தங்களுமாம். சிவத்தின்கூறென்பது, பிரமாநந்தசமுத்திரத்தி னிவ்வாநந்தங்களனைத்துந்தரங்கபுற்புதபேனதிவலைகளாம். இவ்வாநந்தங்களனைத்துந் தானாயிருக்கின்றஞானி இப்பிரமாம்சமான வாநந்தங்களனைத்திற்குமதீதமான நிரதிசயாநந்தமாய்நிற்றலின், அகண்டாநந்தசித்தியையுடையவனென்பதாயிற்று. ஈசரிலந்தரியாமியைக் கூறுதொழிதன்மேற் பிரமத்திற் கடுத்தபடியாய் நிற்றலினென்க.

(இதனதுதாற்பரியம்.)

கிஞ்சிஞ்ஞத்துவஞ் சர்வஞ்ஞத்துவங்களிலுண்டான வாநந்தங்க

னைத்தையுந் தனதம்சமாகக்கண்டவற்றிற்கதிகமான நிரதிசயாநந்தமாயிருத்தலேசர்வ காமாப்தியெனவிளக்கியதாம்.

(அவதாரிகை,)

இச்செய்யுளினிறுத்த முறையாற் கிருதகிருத்தியத்துவ விலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

தத்துவஞானத்திற்குமுன்னமீங்கடையத் ....... *
தக்கவிட்டம்பெறவநிட்டவொழிவிற்குவேண்டி ...... *
வைத்தவுழவாதிகளுந்துறக்கமுதல்பெறற்கு ....... *
மகமுதலாயினவுமுத்திசாதனமாஞான ....... *
சித்தியுறமிகுசவணாதிகளுமறிஞர்க்குச் ....... *
செய்வனவாந்தத்துவஞானத்தின்பின்கும்ப ....... *
புத்தியொடுபலபோகத்திச்சையிலாமையினாற் ....... *
புகன்றவுழவாதிதொழில்யாவுமில்லையாமால் ....... *

(இதன் பதப்பொருள்,)

தத்துவஞானத்திற்கு - தத்துவஞானமடைதற்கு-முன்னம்-முன்னமே ஈங்கடையத்தக்க-இவ்விகத்திலடையத்தக்க-இட்டம்பெற இஷ்டப்பிராப்திக்கும்-அநிட்டவொழிவிற்கு-அனிஷ்டநிவிர்த்திக்குமேதுவாக-வேண்டி- விரும்பி-வைத்த-நியமமாய்வைத்திருக்கின்ற உழவாதிகளும்-கிருஷியாதிகளும்-துறக்கமுதல்-சொர்க்காதிபதங்களை-பெறற்கு - அடையும்பொருட்டு-மகமுதலாயினவும்-யாகோபாசனாதிகளும்-முத்திசாதனமாம்-மோக்ஷசாதனமாகிய-ஞானசித்தியுற- ஞானமடையும்பொருட்டு-மிகுசவணாதிகளும் - மேலானசிரவணாதிகளும்-அறிஞர்க்கு-விவேகிகட்கு-செய்வனவாம்-செய்யத்தக்கனவாம்-தத்துவஞானத்தின்பின்- தத்துவஞானம்வந்தபின்பு-கும்பபுத்தியொடு-சம்சாரானுபவத்துடன்-பலபோகத்து-பலபோகங்களில்-இச்சையிலாமையினால்- அவாவற்றவனுதலால்-புகன்ற- முற்கூறிய- உழவாதிதொழில்- கிருஷியாதிவிருத்திகள் - யாவுமில்லையாம்- அனைத்துமில்லையாம்-எ—று-ஆல்-அசை,

உழவாதியென்றமையால்,வாணிபகோபாலனமாதிகளும், மகமுதலனவென்றமையின், உபாசனை, திரிவேணிசங்கமத்தி

ஸ்மரித்தல் முதலானவைகளும், சவணாதியென்றமையின், ம
னனநிதித்தியாசனசமாதியுஞ்சொல்க, யாவுமில்லையென்றவ
ருணாசிரமதருமங்களானவிதிநிடேதரூபமாதியகன்மங்களை.

(அவதாரிகை - இதுவுமது.)

(கவி.)

வந்துசிறுசாளரத்திற்றோற்றுபரமாணு ........*
வான்கதிரின்பிரபொளியிற்றோற்றிடாவாபோ........*
நந்தலுறுசிற்றறிஞன்விடயமாங்கருமம........*
ஞானியிடைதோன்றுமையாலியற்றத்தக்க ........*
முந்துமகமுதலனவிங்கிலைபிரமாநந்த ........*
முதலுண்மையெய்தலாற்சவணாதியெல்லாஞ் ........*
சிந்தையுறவியற்றுமளவாகுமதாலிதுவே ........*
செப்பியவக்கிருதகிருத்தியத்துவமென்றறியே ........*

(இதனது பதப்பொருள்.)

வந்து - ஆகாயத்தினின்றிறங்கி - சிறுசாளரத்தில் - சிறியபலக
ணிவாயலில் - தோற்று - தோற்றுநின்ற - பரமாணு - பரமாணு
க்கள் - வான்கதிரின் - மேலானசூரியனது - பிரபொளியில் -
பிரகாசத்தில் - தோற்றிடாவாபோல் - காணாததுபோ
ல - நந்தலுறு - நசிக்கின்ற - சிற்றறிஞன் - புல்லறிஞனுக்குள்ள -
விடயமாங்கருமம் - விடயவியாபாரங்களனைத்தும் - ஞானி
யிடை - பூதறிஞனிடத்து - தோன்றுமையால் - தோற்றுப
டியால் - இயற்றத்தக்க - அப்பியாசிக்கத்தக்க - முந்துமகமுத
லன - முற்கூறியயாகோபாசனாதிகள் - இங்கிலை - இவனிடத்திலை - பி
ரமாநந்தம் - பிரமாநந்தமாகிய - முதலுண்மை - முதன்மை
யானதத்துவத்தை - எய்தலால் - அடைந்ததனால் - சவணாதியெ
ல்லாம் - சிரவணாதித்திரயங்களும் - சிந்தையுற - மனதிற்பொரு
ந்த - இயற்றுமளவும் - அப்பியாசிக்குமட்டும் - ஆகும் - ஆம் -
அதால் - அதனால் - இதுவே - இக்கிருதப்பிராப்தியமே - செப்பி
ய - முற்கூறிய - அக்கிருதகிருத்தியத்துவமென்று - அக்கிருதகி
ருத்தியத்துவமென - அறி - அறிவாயாக, — எ - று - எ - ஈற்றசை,

சிற்றறிஞனென்வே, பேரறிவையுங்கூட்டி ஜீவசகருமமெனக்கொள்க. ஞானியென்றது, பிப்பேதஞானமின்றியகத்தசைதன்னியத்தையுடையவன். சிந்தையுறவியற்றுமளவெ

ன்றது, சவணாதியான சாதனங்கள் சாத்தியமாகிறபரியந்தமே யன்றிமேல்வேண்டுவதின்றெனல்,

(இவ்விரண்டுகவியினது தாற்பரியம்,)

இகபோகநிமித்தந் தேகயாத்திரைக்கு வேண்டிய வுழவாதிகளும், பரபோகநிமித்தமிலிங்கதேகயாத்திரைக்குவேண்டிய யாகாதிகளும், நிருவாணசுகநிமித்தமாத்மயாத்திரைக்கு வேண்டிய சவணாதிகளும், ஞானமுண்டானபின் பியாவுந் தன்மயமாய்விளங்கலி னிவைகளைத்துஞ் செய்துஞ்செய்யாமற் சுயமாய்ப்பிரகாசித்தலே கிருதகிருத்தியத்துவமெனத் தரிசிப்பித்ததாம். (௱௫௩)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்த முறையான் பிராப்திப்பிராப்பியவிலக்கணமுமேற் சாட்சாத்கார மிருவிதமாகக்கூறுவான்றொடங்கியவற்றினுமுமுணர்த்துகின்றது.

(கவி.)

முற்றலுறுவிசிட்டபுண்ணியபரிபாகந்தான் ....... ... ...*
முத்திவிருப்பரியகுருவழிபாடுபெருநூல் ........ ... *
வெற்றிதருசவணாதியறிவறியாமைகளின் ...... ..........*
விவேகமிகுமஞ்ஞானவழியொடுதன்னுண்மை.........*
பெற்றசமுசாரதுக்கநிவிர்த்திநிசானந்தப்..... ...........*
பேறெய்தலேபிராப்திப்பிராப்பியமாம் ........ .... ...*
பற்றறுமுயர்முத்திவகையிரண்டாகுமவைதாம் ...........*
பகர்சீவன்முத்தியொடுவிதேககைவல்யம்... ... ......*

(இதனதுபதப்பொருள்.)

முற்றலுறு- முற்றுப்பெற்ற- விசிட்ட - விசேடமான-புண்ணியபரிபாகம் - புண்ணியபரிபாகமும் - முத்திவிருப்பு-அதனால்முமூட்சுத்துவமும் - அரிய-இடைத்தற்கரிய - குருவழிபாடு- அதனாலாசிரியனைவழிபடுதலும் - பெருநூல்-அதனாற்பிரபலச்சுருதியின் - வெற்றிதரு- செய்தலைத்தாராநின்ற-சவணாதி- சிரவணாதித்திரயங்களும்-அறிவறியாமைகளின்-அதனாலாத்மாநாத்மாக்களைப்பகுத்தறிகின்ற-விவேகமிகும்-அறிவுவளர்தலும் - அஞ்ஞானவழியொடு- அதனாலஞ்ஞான

நாசத்துடன்- தன்னுண்மை- ஆத்மசாட்சாத்காரம்-பெற்ற- பெறுதலும்-(அதனான்முன்னமடைந்த) சமுசாரதுக்கநிவிர்த்தி-மாயாதுன்பநீக்கமும் - நிசாநந்தப்பேறு-அதனாற்சுயாநந்தப்பேற்றையும்- எய்தலே-அடைதலே- பிராப்தப்பிராப்பியமாம் - முற்கூறியபிராப்திப்பிராப்பியமாம்- பற்றும்-இங்ஙனம்பெறும்- உயர்முத்தி - மேலானவீடு-வகையிரண்டாகும்-இரண்டுவிதமாம் - அவை-அவையாவன- பகர்-சுருதிசொல்லாநின்ற- சீவன்முத்தியொடு-சீவன்முத்தியுடன்- விதேககைவல்யம்-விதேகமுத்தியுமாம்-எ-று-தான்-அசை.

சீவன்முத்தி, சீவன்சிவமாகவிளங்குதல். விதேககைவல்லியம், நாமரூபாதிதமானஞானவடிவமாதல்.

(இதனதுதாத்பரியம்.)

புண்ணியபரிபாகமுற்ற சம்சாரதுக்கநிவிர்த்திமூனதசவிதபந்தங்களையடைந்தவற்றைநீக்கி நிரதிசயாநந்தத்தையடைதலேபிராப்திப் பிராப்பியமெனவும்; இங்ஙனங்கூறிய துக்கநிவிர்த்தியுமதனாற்றடையபற்ற வானந்தமுமதனாற்செய்யவேண்டியகருமஞ்செய்துமுடிந்ததுமதனாலடையவேண்டியபதத்தையடைந்ததுமாகியவிந்நான்குமே முற்கூறியஞானத்திற்குப்பலவிசேஷமெனபதாம். (௫௮)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்ஞானபலம் பெற்றமகான்களைச்சீவன்முத்தன்விதேகமுத்தனெனவிருவிதமாகக் கூறுவான்றொடங்கிமுதற்கட்சீவன்முத்தனிலக்கண முணர்த்துகின்றது.

(கவி.)

அறிவுடையோர்க்ககமான்மாவொடுவருசம்பந்த........ *
மகறலினுற்பிறருடல்போற்றன்னுடலத்தனிலு........ *
முறுதிதருமபிமானமின்மையேயாகி.................. *
புண்ணுமனுபவவொப்பால்வருபிராரத்த............ *
வறுநுகர்வுண்டாஞ்சுழுத்திப்பாலாதிபோல........... *
மந்தானுசந்தானமாதலிற்றேகாதி..................... *
செறியபிமானங்கழன்றுங்கடமேகித்துஞ்சுழலுந்........ *
திகிரிபோல்வாதனையாலுறல்சீவன்முத்தி................ *

(இதனதுபதப்பொருள்.)

அறிவுடையோர்க்கும் - ஞானவான்களுக்கும் - அகமாத்மாவொடு- அகமாத்மருக்குமுடனிகழ்ச்சியாய்-வருசம்பந்தம்-வராநின்றவன்னியோன்னிய சம்பந்தமாயிருக்கினும்-அகறலின்றல்- இருதயக்கிரந்திநீங்கினதினால்- பிறருடல்போல்-பரசரீரம்போல- தன்னுடல்றனிலும்-தனதுதேகத்திலும்-உறுதிதரும்- திடமான- அபிமானமின்மையாகி- அபிமானமின்றி-உண்ணும்- புசிக்கின்ற- அனுபவமெனப்பால்- அனுபவசாமியத்தினால்- வரு-வரப்பட்ட-பிராரத்த-பிராரத்தமாகிய-வறுநுகர்வு- மித்தையானுபவம்- உண்டாம்-உண்டாகும்-சுழுத்திப்பாலாதிபோல் - சுழுத்தியனையுங் குழந்தையாதிகளையும்போல் - மந்தானுசந்தானம்- மந்தமாயனுபவிக்கும்-ஆகலில்-ஆதலால்- தேகாதி-தேகமுதலியவற்றின்- சேதி-நெருங்கியிருக்கின்ற - அபிமானஞ்சூழன்றும் - யோகாபிமானநீங்கியும் - கடமுறிக்கும் - கபோற்பத்திபாவியும்-சுழலுந்திகிரிபோல்- சுழலாநின்றகுலாலசக்கிரம்போல-வாதனையாலுறல்-வாசனாபலத்திருந்துசஞ்சரிப்பதே- சீவன்முத்தி-சீவன்முத்தியாம்—எ—று.

அகறலின்றலென்றமையின், இருதயக்கிரந்திவருவிக்கப்பட்டது. பாலாதியென்றமையின்,உன்மத்தனையுங்கொள்க.மந்தம்,கூர்மையின்மை.அனுசந்தானம்அப்பியாசித்தல்.எனவே,பாவுமித்தையெனநீக்கியும்பிராரத்தம் புசித்துநீங்கவேண்டி விடயவாசனைகளைப் பகுப்பின்றிக் காடாக்கினியைப்போலவனுபவிப்பது.வாசனையென்பது,முன்னனுபவித்த சமஸ்காரசேடம்.அஃதுமித்தேகமொழிகின்றபரியந்தம்வாசனையிருப்பதுபோலத்தோற்றல். எனவே, சஞ்சிதாகாமிய நீங்கினபிராரத்தமெனவு மஃதுருலாலன்றி கிரிகடமெடுத்தவிடத்துங்கிஞ்சித்துத்தானேசுழன்றுநிற்பதும்போலவுமாம்.

வினா - ஆகவே, மாயைநசிக்கின தன்காரியமானதேகநசிக்கவேண்டுமேயெனின்,

விடை - நசித்தேயிருக்கின்றது.

வினா - எங்ஙனமெனின்,

விடை - ஞானோதயமானபோதேயவித்தியாரூபமான காரணதேகநசித்திருக்கின்றது.

வினா - அற்றேல்- அஃதுநசிக்கினதன்காரியமான தூலதேகமிருக்குமோவெனின்,

விடை - தீத்தமானபடங் காற்றுவருமளவுமிருப்பதுபோல ஞானுக்கினியிறைல்நஷ்தமான வித்தேகம்பிராரத்தநீக்கம்வருமளவுமிருக்குமென்க.

(இதனுதாற்பரியம்.)

சுவானுபூதியைப்பெற்றங்ஙனமடைந்த சுகவடிவத்தோடுங்கூடித்தேகாபிமானமின்றிச் சுகித்திருப்பவனேசீவன்முத்தனென்பதாம். (௬௫௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையான் விதேகமுத்தியினிலக்கணங்கூறிமேற்சீவன்முத்தனிலக்கணங்களை யையமின்றிவிளங்கவுணர்த்துகின்றது.

(கவி.)

பரமமாஞானந்தோன்றுதலுமேகதிர்முன் ......... ✻
பாயிருள்போலஞ்ஞானத்துடனதன்காரியமாம் ...... ✻
புரமுதலாயினவனைத்துமகன்றிடுதருனே ...... ......... ✻
புகலரியவிதேககைவல்லியமென்றிசைப்ப ........ ... ✻
உரமுறுமிங்கிதுகாகாசீவன்முத்தியுளதென் ... ... .. ✻
றுரைப்பதெவ்வாறெனிற்கயிற்றி னரவமயக்கொழிந்தும்
வருமதன்காரியமாகும்பயகம்பனுதி...... ...... ...... ✻
மருவுதல்போன்ஞானத்தாலஞ்ஞானங்கெடினும்..... ✻

(இதனுபதப்பொருள்.)

பரமமாம்- மேலான- ஞானம்-பிரமஞானம்- தோன்றுதலும்- உதயமாகவும்- கதிர்முன்- சூரியன்முன்- பாயிருள்போல்-நீங்குமிருளைப்போல- அஞ்ஞானத்துடன்- அஞ்ஞானத்தோடும்- அதன்காரியமாம்- அதனதுகாரியமான- புரமுதலாயின- தேகமாதிய - அனைத்தும்- தத்துவங்களனைத்தும்- அகன்றிடுதருனே- நசிப்பதே- புகலரிய-சொல்லுதற்கரிய- விதேககைவல்லியமென்று- விதேகமுத்தியென்று- இசைப்பர்-சத்துக்களுரைப்பார்கள்-உரமுறும்- திடமுள்ள-இங்கு- இவன்-இதுவாகா- இவ்விதேகமுத்தியடையாமல்- சீவன்முத்தி-மத்தியிற்சீவன்முத்தி- உளதென்றுரைப்பது- உளதெனக்கூறுவது- எவ்வாறெனில்- எவ்வண்ணமென்றால்-கயிற்றின்-இரச்சுவிற்றோன்றிய-அரவமயக்கு-சர்ப்பபீதி- ஒழிந்து

ம்-நீங்கியும்-வரும்-வராநின்ற-அதன்காரியமாகும்-அச்சர்ப்பிராந்தியின்காரியமான-பயகம்பனாதி-அஞ்சிநடுங்கல் முதலியவைகளை-மருவுதல்போல்-கிஞ்சித்துநேரங்கூடியிருப்பதுபோல-ஞானத்தால்-ஆத்மஞானத்தினால்-அஞ்ஞானங்கெடினும்-அஞ்ஞானநசிக்கினும்-எ-று-தான்-அசை.

ஞானத்திற்குச்சூரியனும், அஞ்ஞானத்திற்கிருளுஞ்சயிற்றரவும், பிராரத்தத்திற்குப்பயகம்பனாதியுமுவமித்தல்.

(இதனதுதாற்பரியம்.)

சூரியப்பிரகாசத்தின்முன்னந்தகாரமதன்மயமாவதுபோல சசிற்பிரகாசத்தின்முன்ஜகசீவபரமதன்மயமாய் விளங்குவதே விதேகமுத்தியென்பதாம், (ஙகூ௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற்பிரமஞானம்பெற்றும் பிராரத்ததேகமிருப்பதியாதுக்கென்னிலஃது இல்லாவிடிற் சாம்பிரதாயவிர்த்தியடையாதெனவுணர்த்துகின்றது,

(கவி.)

அதனதுகாரியமாகுமுடம்பாதிநிற்க ............ *
மதனாலும்பிரமஞானந்தோன்றும்பொழுதே ...... *
சிதைதருமஞ்ஞானமுடனுடம்பொழியுமாயிற் ...... *
றிகழ்ப்பிரமவித்தியாசம்பிரதாயத்தின் ............ *
கதிபொழியுமதனாலும்பரசிவனாற்பிரமன் ............ *
கமலனாலுயர்ப்பிரசாபதியவனான்மனுவாற் ............ *
புதமனுவான்மனிதருணர்ந்தனனெனவேமுறைமை ...... *
புகல்சுருதிவிரோதமாமதனாலுமன்றே ............ *

(இதனதுபதப்பொருள்.)

அதனதுகாரியமாகும்-அவ்வஞ்ஞானத்தின் காரியமாகிய உடம்பாதி-தூலதேகமுதலியவைகள்-நிற்குமதனாலும்-இருக்கின்றதனாலும்-பிரமஞானம்-பிரமஞானமானது-தோன்றும்பொழுதே-உதிக்கும்போதே-சிதைதரும்-கெடாநின்ற-அஞ்ஞானமுடன்-அஞ்ஞானத்துடன்-உடம்பு-அதன்காரியமானதேகம்-ஒழியுமாயில்-நீங்குமானால்-பரசிவனால்-பரமசிவனால்-பிரமன்-பிரமனும்-கமலனால்-அப்பிரமனால்-உயர்-மேலான-பிரசாபதி-பிரசாபதியும்-அவனால்-அப்பிர

சாபதியினால்- மநு-மநுவும்- அற்புதமநுவால்-அற்புதமா
னமநுவினால் - மனிதர்-மானிடரும் - உணர்த்தனரென-பூ
ருவத்திலறிந்தனரொன்று- முறைமை-கிரமமாக- திகழ்-விள
ங்காநின்ற-பிரமவித்தியா - பிரமவித்தையினது - சம்பிரதா
யத்தின்கதி- சம்பிரதாயத்தின்கதியானது - ஒழிபுமதனானு
ம்- நீங்குமதனாலும்-புகல்சுருதி-சொல்லாநின்றசாந்தோக்கி
யவுபநிடதத்திற்கும்-விரோதமதனாலும்-பகையாகுமாதலா
னும்—எ—று-அன்றே-அசை.

இதனடுக்கிவந்தஆறுருபிற்கு மும்மைக்கும்பயன்மேற்
செய்யுளிற்காண்க. பிரசாபதி, நவப்பிரமரிலொருவர்.

வினா - ஞானத்திற்குநேரே விதேகமுத்தியிருக்கச் சிஞ்சித்
காலமாவதுஜீவன்முத்தித் தன்மையோடிருப்பதியாது
க்கெனின்,

விடை - அங்ஙனம்ஞானம்வந்தவுடனே காரணதேகநீங்குத
ல்போலக்காரியமானதூலதேகநீங்குமாயின்பிரமவித்தை
யைப்போதிக்குஞ்சுருதியின்சாம்பிரதாயமும்பரசிவனு
தியகுருபாரம்பரிய பிரம்மோபதேசசம்பிரதாயமுமதனு
லடையத்தக்கசமாதிமார்க்கசம்பிரதாயமுமயின்றிச்சூனியமா
மதனாற்சிஞ்சித்காலந்தேகமிருக்கவேண்டிப்பிராரத்தமுண்
டாயிற்றென்க.

(இதன்றாற்பரியம்.)

ஞானவான் முனைடந்தபேறின்னுஞ்சிலபக்குவவான்களை
டையுநிமித்தம் பிராரத்தானுபவத்தோடுங் கூடியஜீவன்மு
த்தித்தன்மையோடிருந்ததென்பதாம். (௱௬௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற்சீவன்முத்தித் தன்மையுண்டாதற் கேதுவான
சஞ்சிதமாதிய மூன்றுவினையுநீங்கு மிலக்கணமுணர்த்துகி
ன்றது.

(கவி.)

செஞ்ஞானிக்குரித்தாகுநற்சீவன்முத்தி..........*
சித்தித்தற்கூற்றபிராரத்தவாதனையோ..........*
டஞ்ஞானவினைசஞ்சிதமகற்பாவவுடன்பாட்டா..........*
லாகநிலையுஞ்சீடர்க்குபதேசாதிகமே..........*

மெஞ்ஞான்றுங்கிடைத்திடுமோவிச்சீவன்முத்தற் ……… *
கிரிதருசஞ்சிதமங்கிபுகுமுளிபுற்போல ……… *
மெய்ஞ்ஞானத்தாற்பிராரத்தநுகர்ந்தொழியு ……… *
மேல்வினைகூடாதனதிகாரியாதலினால் ……… *

(இதனதுபதப்பொருள்.)

செஞ்ஞானிக்கு- செவ்வியஞானவானுக்கு- உரித்தாகும்-உரிமையாகிய-நற்சீவன்முத்தி - நல்லஜீவன்முத்தியானது- சித்தித்தற்கு- கிடைத்தற்பொருட்டு- உற்ற-பொருந்திய- பிராரத்த- பிராரத்தவகன்மமாகிய - வாதனையோடு- வாசனையுடன்-அஞ்ஞான- அஞ்ஞானத்தினம்சம்- இலேச- கிஞ்சித்தும்- சற்பாவ- சத்தாம்சமிருதியும்- உடன்பாட்டால் - அங்கீகரிப்பதனால்- ஆகதிலையும்- தேகஸ்திதியும் - சீடர்க்கு-மாணக்கருக்கு-உபதேச- உபதேசித்தலும்- ஆதிகமும் - இவையாதியவையும்-எஞ்ஞான்றும்- எந்நாளும் - கிடைத்திடும்- இலபித்திருக்கும்- இச்சீவன்முத்தற்கு- இச்சீவன்முத்தனுக்கு-சஞ்சிதம்-சஞ்சிதவினையானது- அங்கிபுகும்- அக்கினிபுகுந்த-முளிபுற்போல - உலர்ந்தநற்பப்புல்லைப்போல- மெய்ஞ்ஞானத்தால்- மெய்யுணர்வால்-இரிதரும்-நசிக்கும்-பிராரத்தம்- பிராரத்தவினையானது- நுகர்ந்தொழியும்- அநுபவித்துநீங்கும்-மேல்வினை - மேற்கூறுமாகாமியவினையானது- அனதிகாரியாதலினால்- பிறவிக்கதிகாரமின்மையால்- கூடாது-உண்டாகாது—எ—று-ஆல்-அசை.

முற்செய்யுளினுள்ளவாறுநபிற்குச்சீடர்க்குபதேசாதிகமும்மெஞ்ஞான்றுங்கிடைத்திடுமென்பதுபயனில்லை. அஞ்ஞானலேச மென்றமையிற்சற்பாவ மிருதிவருவிக்கப்பட்டது. சீவன்முத்திசித்தித்தற்கென்பது, ஏனையோர்க்குமதுசித்திக்குநிமித்தம். உபதேசாதியென்றமையின், பிரமத்தியானமுங்கொள்க. பிராரத்தவாசனையாற்கிஞ்சித்காலந்தேகமிருப்பதும் அஞ்ஞானலேசத்தாற் சீடனைமரபிற் செல்லச்சிட்சித்தலும் சற்பாவமென்றதால் பிரமத்தியானஞ் செய்தலுஞ் சீவன்முத்தனுக்குண்டென்க. எஞ்ஞான்றுமென்பது, ஜீவன்முத்தியுள்ளபரியந்தமாம்- ஆகவே - ஜீவன்முத்தனுக்கேவிதேகமுத்தியாமென்க.

(இதனதுதாற்பரியம்.)

மாயாகாரியமானதேக மிருப்பதுபோலத்தோற்றிய ஜீவன்முத்தனுக்குப் பூரணஞானத்தாற் சஞ்சிதமும் நசித்தலாற்

பிராரத்தமும் பிரமஞானத்தினா லாகாமியமுமாகிய விம்மூன்றுவினையுநசிக்குமென்பதாம். (௱௬௨)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் பிராரத்தபோகத்தைக் கொடுக்குஞ் சஞ்சித மேற் றேகத்தையுங் கொடாதோவென்ற வினாவிற்குத்தர முணர்த்துகின்றது.

(கலி.)

பெற்றவுயர்ஞானத்தாலொழிந்தவினைதானே ........... ✻
பிராரத்தப்போகத்தையளிக்குமெனிலதுமே ........... ✻
லுற்றவுடலுற்பத்தினையுமியற்றுமென் ........... ✻
றுரைப்பில்வறுவிதைநுகர்ச்சிக்கன்றிமுளைக்கு ... ✻
மற்றதுதான்காரணமன்றதுபோலஞான ........... ✻
மடுகருமநுகர்ச்சியினாலொழிவதாகி ........... ✻
யற்றமுறுமிருவினைமேல்வினைத்திடற்கேது ........... ✻
வாகாதென்றியம்புவராறிவறிதக்கவரே ........... ✻

(இதனதுபதப்பொருள்.)

பெற்ற-கைவடைந்த-உயர்ஞானத்தால்-பிரமஞானத்தினால்-ஒழிந்தவினைதானே-நசித்தசஞ்சிதவினையே-பிராரத்தபோகத்தை-பிராரத்தானுபவத்தை-அளிக்குமெனில்-கொடுக்குமென்றால்-அது-அவ்வினை-மேலுற்ற-மேலுண்டாகும்-உடலுற்பத்தினையும்-தேகோற்பவத்தையும்-இயற்றுமென்று-செய்விக்குமென்று-உரைப்பில்-சொன்னால்-வறுவிதை-வறுத்தவித்து-நுகர்ச்சிக்கன்றிய-புசித்தற்கேயன்றி-முளைக்கு-முளைப்பதற்கு-அது-அவ்விதையானதுகாரணமன்று-ஏதுவல்லவாம்-அதுபோல-அவ்விதைபோல-ஞானம்-ஞானத்தால்-சுடு-எரிபட்ட-கருமம்-(சஞ்சிதசேடமாகிய) பிராரத்தகன்மம்-நுகர்ச்சியினால்-அனுபவிக்கவினால்-ஒழிவதாகி-நீங்குவதல்லாது-அற்றமுறும்-நசித்தலையுடைய-பிறவிசநநங்களை-மேல்வினைத்திடற்கு-இனியுண்டாக்குவதற்கு-ஏதுவாகாதென்று-காரணமாகாதென-அறிவறிதக்கவர்-ஆத்மஞானத்தையறிதக்கவர்-இயம்புவர்-சொல்லுவார்கள்—ஏ-ஆ-மற்று-தான்-ஏ-அசை.

சஞ்சிதத்திற்கு,வறுத்த வித்தையுவமித்தல்-எனவே-அதின்வாசனாசேடப்பிராரத்தமெனக்கொள்க.

(இதனுதாத்பரியம்.)

வறுத்தவிதைபுசித்தற்குயோக்கிய மன்றிமுளைத்தற்குயோக்கியமல்லாததுபோல ஞானாக்கினியிற்றக்கமான சஞ்சிதவினையின்வாசனாரூபமான பிராரத்தகன்மமித்தேகத்தோடேதீர்வதேயன்றிமேற்சநநத்தைக்கொடுப்பதற்கேதுவாகாதென்பதாம். (௱௯௩)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற்பிராரத்தம்புசித்தே நீங்குதலியாவர்க்குஞ்சரியாயினும்பெத்தனுக்கு மறைப்பினாலுமுத்தனுக்கு மறைப்பின்மையினாலு நீங்குமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

அறைந்தநுகர்வினையதுவானுலோகயாத்திரைக........ *
ளதிகரியாதுறுநரர்க்கேயொருடம்புதன்னிற் .. ...... *
செறிந்துநுகர்வாமவற்றினதிகிருதராகிச்.... ............ *
சிறந்தமாபுருடர்க்குத்தசசங்கையுடம்பி ........ ..... *
னுறைந்தலதுதீர்ந்திடாதெனினுமறைப்பின்றி ..... ..... *
யுறுதலாலொருவனுக்கிங்கிளமைமுதற்பேதம் ... ... *
பிறந்திடினுமவனுக்கோருடம்பேயாய்நின்ற .......... *
பெற்றிபோலாகுமெனவுணர்ந்திடுகதெரிந்தே ........ *

(இதனுபதப்பொருள்-)

அறைந்த-முற்கூறிய- நுகர்வினையது - புசியாநின்றபிராரத்தவினையானது - உலோகயாத்திரைகள்-உலகநடைகளை- அதிகரியாதுறு- அதிகரியாதிருக்கும் - நரர்க்கு-மானிடர்க்கு- ஒருடம்புதன்னில் - ஒருதேகத்தில்- செறிந்துநுகர்வாம்- அடைந்தனுபவிப்பதாம்- அவற்றின்- அவ்வுலகநடையை- அதிகிருதராகி- அதிகரித்தவராய்-சிறந்த- சிறப்புள்ள-மாபுருடர்க்கே - மனுவியாசாதியமகான்களுக்கே - தசசங்கை-பத்தென்னுங்கணக்குள்ள - உடம்பின்-தேகத்தின் - உறைந்தலது-சேர்ந்தனுபவித்தாலல்லது - தீர்ந்திடாதெனினும்-பிராரத்தநீங்காதாயினும் - மறைப்பின்றி- திரோதானமின்றி- உறுதல்-பிராரத்தநிற்றலெங்ஙனமெனின் - ஒருவனுக்கு -ஒர்புருடனுக்கு- இங்கு-இவண்-இளமைமுதற்பேதம்- பாலியகவுமாராதிபேதங்கள்- பிறந்திடினும்- உண்டாயினும்- அவ

னுக்கு - அப்புருடனுக்கு - ஒருடம்பேயாய்நின்ற - ஓர்தேக
மாகவேயிருந்த - பெற்றிபோல் - தன்மையைப்போல - ஆரு
மென - ஆமென்று - தெரிந்து - ஆராய்ந்து - உணர்ந்திடுக - அறி
திவாயாக — ஏ — று - தான் - ஆல் - ஏ - அசை.

வெளிதேகமுடையுள்ளமானிடர்க்கோர்ஜென்மத்திலும் வை
திகதேகமுடையுள்ள தேவாம்சமான வியாசாதிரிஷிகளுக்குத் தச
ஜென்மத்திலும் பிராரத்தகன்மமனுபவித்து நீங்குமாயினு
மிவர்களுக்குவருகின்றதறியாமலனுபவிப்பதும் அவர்கட்
குவருவதறிந்தனுபவிப்பதுமாமென்க.

வினா - அற்றேல் - பிராரத்தமோர்ஜென்மத்திற்கமைத்ததேய
ன்றித்தசசன்மத்திற்கமைத்ததென்பதற்கு மேற்கோளுள
வோவெனின்.

விடை. விஷ்ணுவிற்கோபிராரத்தந் தசாவதாரத்திலிங்குத
லேயாமென்க.

(இதன்தாற்பரியம்.)

ஓர்ஜென்மத்திற்குந் தசஜன்மத்திற்கும் பிராரத்தகன்மமொ
ன்றாயமைத்திருக்கின்றதென்பதைத்தெரிவித்ததாம். ()

(அவதாரிகை,)

இச்செய்யுளின் ஞானத்திற்குங் கருமத்திற்கும் பகையாதலி
ற் புசிப்பெங்ஙனங்கூடுமென்றவினாவிற்குத் தாமுணர்த்து
கின்றது,

(கவி,)

விடயங்களனைத்தினுக்கும்பொய்ம்மைசாதிக்கு ...... ...*
மெய்ஞ்ஞானந்தனக்குமவைக்குண்மைசாதிக்கு ......*
மூடவினுகர்வினைக்குமொன்றற்கொன்றுவிரோதமதா ...*
புண்மையினுன்ஞானிக்குநுகர்வெங்ஙனெனினிற் ... ...*
கெடுகனவுமுதலவற்றுண்மைதுறுதிகளாங் ........ .....*
கேடினுகர்வாதல்போற்பிராரத்தபோக...... ........*
விடயங்களுக்குண்மையாமலதாகாதென்னும் ........ .... ..*
விதியின்மையானுகர்வுமுணர்வுமாருவால் .........*

(இதன்பதப்பொருள்,)

விடயங்களனைத்தினுக்கும் - சகலவிஷயங்களுக்கும் - பொய்
ம்மைசாதிக்கும் - மித்தியத்துவஞ்சாதிக்கின்ற - மெய்ஞ்ஞான

ந்தனக்கும்- மெய்ஞ்ஞானத்திற்கும்-அவைக்கு-அவ்விடயங்களுக்கு-உண்மைசாதிக்கும் - சத்தியத்துவஞ்சாதிக்கின்ற-உடலினுகர்வினைக்கும் -தேகத்தினாலனுபவிக்கும்பிராரத்தவினைக்கும்-ஒன்றற்கொன்றுவிரோதமதாய்- அன்னியோன்னியவிரோதமாய்-உண்மையினால்-உள்ளதாதலின்- ஞானிக்கு-ஜீவன்முத்தனுக்கு-நுகர்வு- பிராரத்தானுபவம்-எங்ஙனென்னில்-எப்படிகூடுமென்றால் - கெடுகனவுமுதல்-மித்தியத்துவமானசொப்பனாதிய-அவற்றுள்-அவைகளுக்குள்-மைதுனாதிகளாம்- புணர்ச்சிமுதலானவைகளாகிய-கேடில்-நிசமான-நுகர்வாதல்போல்- போகானுபவமாவதுபோல- பிராரத்தம்-பிராரத்தகன்மமாகிய- போகவிடயங்கள் - விடயானுபவங்கள்-உண்மையாமலது-உள்ளதாமன்றி- ஆகாமென்னும்-ஆகாமென்கின்ற- விதியின்மையால்- நியமமின்மையின்-நுகர்வும்-பிராரத்தவினைக்கும்-உணர்வு-ஞானத்திற்கும்- முரணு-அன்னியோன்னியவிரோதமில்லை — எ — று ஆல-அசை,

கனவுமுதலென்றமையினிந்திரசாலமும் மைதுனாதியென்றமையின் சொர்க்காதிதோற்றங்களும் முரணுமென்றமையின்ஞானிக்குப் பிராரத்தபோகமுணடென்பதுண்மையெனவுங்கொள்க,

(இதனதுதாற்பரியம்,)

மித்தையானசொப்பனவவஸ்தையினிடத்து மிந்திரசாலவித்தையினிடத்துநிசமானமைதுனமுஞ் சொர்க்காதிதோற்றமுங்காண்பதனால் விரோதமில்லாததுபோல இன்மையான பிராரத்தத்திற்குமுண்மையான ஞானத்திற்கும் விரோதமின்மையாற்பிராரத்தபோகஞ் சீவன்முத்தனனுபவித்துத்தீர்வதுண்மையேயென்பதாம், (௩௬௫)

---

(அவதாரிகை,)

இச்செய்யுளிற் சித்துதயத்திற் சகநீங்கினெங்ஙனம் பிராரத்தவினைக்குப்புசிப்புண்டாமென்றவினாவிற்குப்பிரமையிருவிதமாகக்கூறுவானெருடங்கி நிருபாதிகப்பிரமையினிலக்கணமுணர்த்துகின்றது,

(கவி,)

வந்தமயலொழிந்தளகேயிப்பியிடைவெள்ளி............*
மாய்தல்போலதிவினாலஞ்ஞானங்கெடலு............௬

மிந்தவுலகதுதோற்றமேயிலாமையிஞ.......................*
லெங்கணுமாய்வினைப்போகநுகர்ச்சியெனிப்பி.....*
தந்தவிரசிதநிருபாதிகப்பிரமையாகுந்........................*
தன்மையினுலுணர்ந்தளவில்வெள்ளியுருவொழியும்..*
பந்தமுறுமிதுசோபாதிகமாகுமதனுற்.........................*
பகர்ந்ததுபோலன்றுமற்றெங்ஙனெனிலுரைப்பாம்...*

(இதனதுபதப்பொருள்,)

வந்தமயல்-ஒருவனுக்குவந்தவிரசிதமயக்கம்- ஒழிந்தளவே- நீங்கினவுடனே- இப்பியிடை-இளிஞ்சியினிடத்து- வெள்ளி மாய்தல்போல்-இரசிதமடங்குவதுபோல- அறிவினுல்-ஞான த்தினுல்- அஞ்ஞானங்கெடலும்- அஞ்ஞானநசித்தலும்-இந் தவுலகது- இவ்வுலகத்தினது - தோற்றமே-தோற்றமாத்திர மாவது- இலாமையினல்- இன்மையினல்- வினைப்போகநு கர்ச்சி- பிராரத்தானுபவம்- எங்ஙனமாமெனில்-ஞானிக்கெ ப்படியுண்டாமென்றல்-இப்பிதந்த-இளிஞ்சியிலுண்டான- இரசிதம்-வெள்ளி - நிருபாதிகப்பிரமையாகும்- நிருபாதிக ப்பிரமையாம் -தன்மையினுல் - குணத்தினுல்- உணர்ந்தள வில்-அறிந்தமாத்திரத்தில்- வெள்ளியுரு- இரசிதரூபம்-ஒழி யும்-நீங்கும்-பந்தமுறும் - பந்தப்பட்ட இது-இச்சகத்து- சோபாதிகமாகும் - சோபாதிகப்பிரமையாம்- அதனுல்-ஆ தலால் -பகர்ந்ததுபோலன்று - மூற்கூறியநிருபாதிகப்பிர மையைப்போலல்ல-மற்றெங்ஙனெனில்-பின்னெப்படியெ ன்றல்-உரைப்பாம்- மேற்கூறுவாம்—எ-று-ஆம்-ஏ-அசை.

தோற்றமேயிலாமையினென்ற தேற்றேகாரம்,சகத்திலஉ வேயில்லையெனக்காட்டிற்று, நிருபாதிகமுபாதியின்மை,எ னவே சகத்தோற்றமின்மையெனவும். சோபாதிகம், உபாதி யிருத்தல்போலத்தோற்றுதல்-எனவே- சகத்தோற்றமாத்தி ரமெனவுமாம். (ாசாகா)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் சோபாதிகப்பிரமையி னிலக்கணமுவமான பூருவகமாகவுணர்த்துகின்றது.

(கவி.)

தடத்தினுயர்களாயினமர்வோன்றடத்துப்புனலிற்.....*
றனதோமுகமாகவிருப்பதுபொய்யென்றே..........*

[சாஅ]

படைத்ததெளிவுளமொடிருப்பினுமதோமுகமாம்... ...*
படிவந்தோன்றுதல்போலமூலவகங்கார ..........*
மடுத்துவருசீவபாவாதிகமேமித்தை .... ........ ... ......*
யறிஞரியன்றானெனவேயுணரினுஞ்சீவாதி ".........*
தொடுத்தவுலகுறுதலிற்சீவன்முத்தன்றனக்குத்... .....*
துய்க்கும்வினைப்போகவிவகாரமுடன்பாடாம்...... *

(இதனது பதப்பொருள்.)

தடத்தின்- ஓர்வாவியினது - உயர்கரையின்-உயர்ந்ததீரத்தின்-அமர்மேவன்-இருப்பவன்- தடத்து- அத்தடாகத்தினுள்ள்-புனலில்- சலத்தில்- தான்-தனது-உருவம்- அதோமுகமாக-தலைகீழாக- இருப்பது- இருக்கின்றது- பொய்யென்றே-மித்தையெனவே-படைத்த-பெற்ற-தெளிவு- தெளிவான-உளமொடு-மனதுடன்- இருப்பினும்- இருக்கினும்- அதோமுகமாம்-தலைகீழாக-படிவம்-தனதுவடிவம் - தோன்றுதல்போல்-தோற்றுதல்போல - மூலவகங்காரமடுத்து - மூலாங்காரசம்பந்தமாய்-வரு- வாராநின்ற சீவபாவாதிகம் - சீவபாவமுதலியவைகள்-மித்தை- பொய்யாமெனவும் - அறிஞரியன்- இவற்றைச்சாட்சியாயறிகின்றகூடஸ்தன்- தானெனவே-தானேயெனவும்-உணரினும்- அறிகினும்- சீவாதிதொடுத்த- சீவனாதியாகவனைந்த- உலகு- சகத்து-உறுதலினால்- தோற்றிக்கொண்டிருப்பதனால்- சீவன்முத்தன்றனக்கு - சீவன்முத்தனுக்கு- துய்க்கும்- அனுபவியாநின்ற- வினைப்போகம்- பிராரத்தானுபவத்தின்-விவகாரம்- விவகாரமானது-உடன்பாடாம்-அங்கீகாரமாம்—ஏ—து-ஏ-அசை.

சீவபாவாதிகமென்றமையில்விகற்பமுங்கொள்க-எனவே சங்கற்பவிகற்பமித்தையென்பதாயிற்று.

வினா -சத்தியிலிரசிதப்பிராந்தி நீங்கினமாத்திரத்திற்பின்னந்தமயக்கந் தோன்றாதுபோல- ஞானமுதித்தமாத்திரத்தினஞ்ஞானமழிதலினதன்காரியமான சகத்தோற்றமு மதன்போகமுமெங்ஙனமுண்டாமெனின்,

விடை - இரசிதப்பிராந்தி நிருபாதிகப்பிரமையாதலினீங்கும்இச்சகஞ் சோபாதிகப் பிரமையாதலினீரின்கண்தானதோமுகமாயிருத்தன்மித்தையெனத்தெரிந்துமத்தோற்றநீங்காததுபோலச் சித்துருவமாகிய தான்சகசீவபரமாய்த்

தோற்றுதன்மித்தையெனத்தெரிந்து மனவதீங்காமற்றோற் றலின்பிராரத்தப் புசிப்பிருத்தற்கையமின்றென்க.

(இவ்விரண்டுகவியினதாற்பரியம்.)

நிருபாதிகப் பிரமமையாகிய சுத்திகாரசிதந் தோற்றமாத்திர மேயன்றிப் பிரதிபலியாமையி னிங்ஙனமஃதைதீக்கிசசோ பாதிகப்பிரமமைசலத்திற் பிரதிபலித்தசாயை அச்சலமுள்ள பரியந்தந்தோற்றுதல்போல மாயாப்பிரதிபலனஞ் சகத்தா தலினுமஃதுள்ளமட்டு மஃதுந்தோற்றுமதனுமஃது ம் பிராரத்தமுடிவினீங்குதலினு மப்பிராரத்தானுபவத் தையையமின்றியங்கீகரிக்கவேண்டுமென்பதாம். (௱௯௭)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய பிராரத்தபோகமனுபவிக்குஞ்சீ வன்முத்தனுக்குள்ளமயித்திரியாதி நான்குகுணங்களினிலக் கணமுணர்த்துகின்றது.

(கவி.)

சீவன்முத்தர்க்குரியனவாமயித்திரியேகருணை...........*
திகழ்முதிதமுபேட்சையெனுஞ் சற்குணங்களவற்றுண்
மேவுறுசற்புருடரொடுநட்புமயித்திரியா...............*
மெலிதருதுக்கிகளிடத்தினிரக்கமேகருணை.............*
யோவறுநற்புண்ணியர்பால்விருப்பமேமுதித............*
முவப்புவெறுப்பிரண்டுமிலாதுலகிலவமியற்றும்.......*
பாவிகளைவிடுதலேயுபேட்சையெனவறிக...............*
பயனேந்துசீவன்முத்தர்க்குளவவையீண்டுரைப்பாம்...*

(இதனதுபதப்பொருள்.)

சீவன்முத்தர்க்கு-சீவன்முத்தர்களுக்கு- உரியனவாம் - உரித் தாகிய-மைத்திரி-மைத்திரியும்-கருணை-கருணையும்- திகழ்மு திதம் - விளங்காநின்றமுதிதமும் - உபேட்சையெனும் - உ பேக்ஷையுமென்கின்ற-சற்குணங்கள்- சற்குணசதுஷ்டயங் களாம்-அவற்றுள்- அந்நான்கனுள்-மேவுறு-பொருந்திய-ச ற்புருடரொடு- சத்துக்களுடன்- நட்பு-சினேகமே-மைத்தி ரி-மைத்திரியும்- மெலிதரு - மெலியாநின்ற - துக்கிகளிடத் தின்-துன்பமுடையவர்களிடத்தில்-இரக்கமே-இரங்குவதே- கருணை-கருணையும் - ஓவறு- நீங்காத - நற்புண்ணியர்பால்-

நல்லபுண்ணியவான்களிடத்தில்-விருப்பமே-விருப்பமெனவைப்பதே-முதிதம்-முதிதமும்- உவப்பு-விருப்பும்- வெறுப்பு-வெறுப்புமாகிய-இரண்டுமிலாது- இரண்டுமின்றி-உலகில்-சகத்தில்-அவமியற்றும்- தீங்குசெய்யாநின்ற- பாவிகளைவிடுதலே- பாவிகளைவிட்டுநீங்கலே-உபேட்சை- உபேக்ஷையும்-ஆமெனவறிக-ஆமென்றறிவாயாக-சீவன்முத்தர்க்குள-இன்னஞ்சீவன் முத்தர்களுக்குள்ளனவாகிய- பயனாந்து பிரயோசனங்களைந்தாம்- அவை-அவற்றை- ஈண்டுரைப்பாம்-இவணெடுத்துக்கூறுவாம்—எ—று.

(இதன்றாற்பரியம்.)

சத்துக்கடன துருவமாதீத்தலினவரிடத்துநீங்காதவன்பேமயித்திரியும், பவக்கடலிற்சுழல்வோரைநோக்கியேனோவாளாதுக்கிக்கின்றார்களிவர்க்கென்றித்திங்கெழியு மென்றுயிரக்கமேகருணையும், சுராற்பணமாகச்செய்யும்புண்ணியரிடத்திலவர்நோக்குச்சித்தசுத்திக்கேதுவாயக முகப்பயிங்குறியால் வரும் விருப்பமே முதிதையும், இராகத்துவேஷிங்களாற்சுகதுக்கங்களை யனுபவிக்கும்பாவிகளைத் துரும்பென விருப்பு வெறுப்பின்றிவிடுதலே யுபேட்சையும், இந்நான்குமூலோகாநுக்கிரகநிமித்தமாச்சீவன்முத்தனிடத்தி னிகழுமென்பதாம். (உஙஅ)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற்சீவன்முத்தர்க்குள்ள பயனைந்தினிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி.)

ஞானரக்ஷைதவஞ்சகலசம்வாதமுடனே ………………… *
நவிறுக்கவொடுக்கமொடுசுகாவிற்பாவந்தா ………………… *
ஞனவற்றுண்மருவும்வாசனையழிவுமனத்தி ………………… *
னடக்கங்களாற்புத்திதிருமலமாயிருத்தன் ………………… *
ஞானரக்ஷைமனம்பொறிகட்கொருமையேதவமா ………………… *
ஞானியெனவுலகமெலாம்வழிபடல்சம்வாத ………………… *
மானமனக்கிலேசமறலேதுக்கவொடுக்க ………………… *
மவற்றினாற்பந்தமறல்சுகாவிற்பாவந்தான் ………………… *

(இதனதுபதப்பொருள்.)

ஞானரக்ஷை-ஞானரட்சையும்-தவம்-தவமும்-சகலசம்வாத முடன்-சகலசம்வாதத்தோடு-நவில்-சொல்லாநின்ற-துக்க வொடுக்கமுடன்-துக்கநீக்கத்தோடும்-சுகாவிற்பாவம்-சு காவிற்பாவமும்-ஆனவற்றுள்-ஆகியவைத்தனுள்-மருவும்-பொருந்தியிராநின்ற-வாசனையழிவும்-வாசனாட்சயமும்-மனத்தினடக்கங்களால்-மனோநாசமுமாகிய விவ்விரண்டா ல்-புத்தி-அறிவு-நிருமலமாயிருத்தல்-களங்கரகிதமாயிருப் பதே-ஞானரக்ஷை-ஞானரட்சையும்-மனம்-மனதிற்கும்-பொறிகட்கு-இந்திரியங்களுக்கும்-ஒருமையே-ஏகாக்கிரகம் வருவதே-தவம்-தவமும்-ஞானியென-இவன்ஞானவானெ ன-உலகமெலாம்-உலகத்தாரியாவரும்-வழிபடல்-வந்தித்த லே-சம்வாதம்-சம்வாதமும்-ஆனமனக்கிலேசமறலே-மனோ துன்பமானது நீங்குதலே-துக்கவொடுக்கம்-துக்கவொடுக் கமும்-அவற்றினால்-அவைகளால்-பந்தமறல்-பந்தநீங்குத லே-சுகாவிற்பாவம்-சுகாவிற்பாவமும்-ஆம்-ஆகும்——எ-று-ஏ-தன்-அசை.

உலகமென்பது-அஃதுண்டாயவர்மேனிற்றலின்-உலகத்தா ரென்றும். எலாமென்றது-ஆபாலபண்டிதரெனக்கொள்க; உலகமெனப்பொதுவாகக்கூறினமையின்-மூவுலகமென்னி னுமமையும். மனக்கிலேசமென்றது, அஸ்மதாதிபஞ்சக்கி லேசமாம்-சுகாவிற்பாவமென்றது, சுகம்பிரகாசமாயுண்டா தல்.வாசனாட்சயமான மனதுதத்துவ ஞானத்திற்கமைந்துநி ற்றலே ஞானரக்ஷையும், அம்மனமிந்திரியங்கட்கொருமை யாயபரோட்ச ஞானத்தைநாடிநிற்றலேதவமும், இங்ஙனஞ் செய்தல்மெய்த்தவமெனவுலகோர்வழிபடலேசம்வாதமும், இவற்றான்மனோதுன்பமின்மையேதுக்கவொடுக்கமும், அ தனாற்சகலபந்தமு நீங்கிநித்தியாநந்தமுண்டாதலே சுகாவி ற்பாவமுமாம்.

(இதனதுதாற்பரியம்.)

வெளிப்படை. (ஈகாகூ)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளின்ஞானவடிவமான ஜீவன்முத்தற்குள்ளதசவித வடையாளங்களினிலக்கணமு மிவனாலருள்பெற்றசீடர்மு லியநால்வரினுமமுமுணர்த்துகின்றது.

[காகூ]

(கவி.)

குறிகளோர்பத்துளவாஞானமயத்தவைதாங் ... ... ... ... *
குரோதமின்மைவயிராகமைம்பொறிகளடக்க ......... *
லறமுதவுசமைதமைமேயசனப்பிரியத்துவமே ... ....... *
யலோபமொடுகொடையபயதிருமதமென்றறிக ....... *
நெறிமருவுசீடரொடுபத்தருதாசீனர் ... .................... *
நிலையில்பாவிகளென்னுநால்வகையோரிடத்து ... .... *
முறையினனுக்கிரகம்வந்துறுமருள்கொள்சீவன் ......... *
முத்தருக்கென்பரவைமுறையினெடுத்துரைப்பாம் .... *

(இதனதுபதப்பொருள்.)

குறிகள்-அடையாளங்கள்- ஓர்பத்து-ஒருபத்து- உளவாஞானமயற்கு-சீவன்முத்தற்குள்ளனவாம்- அவை-அவையாவன- குரோதமின்மை - குரோதமின்மையும்- வைராகம்-வைராக்கியமும்- ஐம்பொறிகளடக்கல்- பஞ்சவிந்திரியங்களையடக்குதலும்-அறமுதவு - தருமத்தைக்கொடுக்கின்ற - சமை சமையும்-தமை- தமையும் - சனப்பிரியத்துவம்- சனப்பிரியத்துவமும் - அலோபமொடு - லோபமின்மையுடன்- கொடை- கொடையும்-அபயம்- அபயமும்- திருமதம்- திருமதமும்- என்றறிக- இங்ஙனமென்றறிவாயாக - நெறிமருவு- சன்மார்க்கமுள்ள- சீடரொடு-சீடருடன்- பத்தர்-பத்தரும்- உதாசீனர்-உதாசீனரும்- நிலையில் -நிலையற்ற- பாவிகளென்னும்- பாவிகளுமென்கின்ற- நால்வகையோரிடத்தும்- நான்குபேரிடத்தும்- முறையின்-நிரலே- அருள்கொள்- கிருபாமூர்த்தியாகிய- சீவன்முத்தருக்கேல் - ஜீவன்முத்தனுக்கே - அனுக்கிரகம்-அனுக்கிரகமானது-வந்துறும்-வந்தடையும்-என்பர்-என்றுசொல்லுவார்கள்- அவை-அவற்றை- முறையின்- கிரமமாக-எடுத்துரைப்பாம் - தூக்கிச்சொல்லுவாம்-எ-ஓ-எ-அசை.

தனக்கு வேறுனவஸ்து வொன்றின்மையிற் குரோதமின்மையும், தன்னைத்தவிரப்பிரியவஸ்து வொன்றின்மையினிராசையுற்றிருப்பதே வைராக்கியமும்; பொறிகளைவிடயங்களிற்செல்லவொட்டாமன்மெய்யுணர்விற்செலுத்துவதேயைம்பொறிகளடக்கலும், அகத்திற்கரணனை யெழாமலடக்கியதார்த்தத்திற் செலுத்துவதேசமையும், புறத்திற்றிரியத்திலெழவொட்டாமலவற்றினுள்ளசத்தினிலாத்துவதேதமையும், ம

ஞானிகள்சங்கத்திற்கூடிரமித்திருத்தலேசனப்பிரியத்துவமு
ம், தற்பிரியத்தைச் சீவரடையவேண்டுமென்கின்றவன் பிரு
த்தலின் அலோலபமும், தனக்குள்ள வஸ்துக்களியாவையும்வி
ரும்பினோர்பாற்கொடுத்துவிடுவதேதியாகமுடையும், சம்சாரதுக்
கபயத்தினாற் சாஷாத்தியமடைத்தலைச்சாக்குந்தன்மையேய-
அபயமும், கனதுச்சயமின்னமெனமதித்திருந்தாஞ்செ
ருக்கின்மையே நிருமதமுமாமெனக்கூறினார்.

(இதனதுதாற்பரியம்.)

சீவன்முத்தனது ஸ்வரூபத்தெரிந்தடையுநிமித்தமவரதடை
யாளங்களைக்கூறினதாம். (௫௭௯)

---

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் சீவன்முத்தனாற் சீடர்முதலிய நால்வரும்பெ
ற்றபிரயோசனவிலக்கணமுணர்த்துகின்றது.

(கவி,)

தெரிவரியசீவன்முத்தன்றனைநம்புமதனாற் ............ *
சீடர்க்குமுத்தியுமன்பொடுவழிபாடதனைப் ............ *
புரியுமுயர்பத்தர்க்குநல்வினையுமவன்றன் ............ *
புனிதமுறுசரிதமதுகண்டவுதாசினர்க் ............ *
குரியபுண்ணியலயமுமவன்றன்வடிவினைக்கண் ............ *
ணுறுதன்முதலானவற்றாற்பாவிகட்குப்பாவ ............ *
விரிவுமுறுமென்பரகர்த்தாதருக்காதியினோ ............ *
லெங்ஙனெனின்முத்தனாற்பிரமோபதேசம் ............ *

(இதனதுபதப்பொருள்,)

தெரிவரிய-அறிதற்கரிய-சீவன்முத்தன்றனை-சீவன்முத்தனை-
நம்புமதனால் - நம்புதலினால்-சீடர்க்கு- மாணாக்கருக்கு-மு
த்தியும்-வீடும்-அன்பொடு- அன்புடன்-வழிபாடதனை-வழி
படுதலை-புரியும்- செய்யாநின்ற- உயர்பத்தர்க்கு- முதிர்ந்த
பத்திமான்களுக்கு- நல்வினையும்- சற்கிருத்தியமும்-அவன்
றன்-அச்சீவன் முத்தனுடைய- புனிதமுறு-பரிசுத்தமான-
சரிதமது-சரித்திரத்தை- கண்ட-பார்த்த- உதாசினர்க்கு-உ
தாசினர்களுக்கு-உரிய - அவனுக்குரிய- புண்ணியலயமும்-
தருமக்ஷயமும்- அவன்றன்வடிவினை - அச்சீவன்முத்தனது
ருவத்தை - கண்ணுறுதன்முதலான - [illegible]ரிசித்தன்முதலிய-

அவற்றால்-அவைகளினால்- பாவிகட்கு- தீயோர்களுக்கு-பாவவிரிவும்- தீமைநசிப்பும்- உறுமென்பர்- உண்டாகுமெனக்கூறுவர்-அகர்த்தா- கருத்திருத்துவாதிகன்மமில்லாத - முத்தனால்-ஜீவன்முத்தனால்-தருக்காதியினால்-தர்க்கமுதலியவைளால்-பிரமோபதேசம்- பிரமோபதேசஞ்செய்வது- எங்ஙனெனில்-எங்ஙனமுண்டாமெனின் —எ—று.

உதாசீனமென்பது, உபேக்ஷையெனக்கொள்க, கொள்ளவே-சத்துக்களின்பரிசுத்தநடையைக்கண்டும் வழிபடாதிருத்தலினஃதவமானமாதலிற் பூருவபுண்ணிய க்ஷயமுண்டாமென்க. தருக்காதியென்றமையின்வேதாந்தவாக்கியசத்தியதாற்பரிய வனுகூலதர்க்க திருஷ்டாந்தாதிகளினையத்தின்புரசரமுங்கொள்க,

(பதசாரம்)

தீவிரதரபக்குவத்தாலிவரே தம்மையிரட்சிக்கத்தக்கவரென நம்பிச்சரணாகதியையடைந்திவரநுக்கிரகமாகிய பிரமோபதேசத்தினாற்பிரமமேதானாக நிற்றலிற்சீடர்க்குமுத்தியும், பிறிவில்லாதவன்பினாலிவரோநாமடையத்தக்ககதியையடைவிக்கத்தக்கவரெனவழிபாடுடைய பத்தர்களுக்கீசுரார்ப்பணமாகச்செய்யுநல்வினையும், அவரநுசரித்திரத்தினால் விளங்கியபரிசுத்தநடையைக்கண்டுஞ்செல்வச்செருக்கினாலோர்லட்சியமில்லாதவர்களுக்குப் புண்ணியக்ஷயமும், அவரது வடிவைநேரேதரிசிக்கும்போதவர் கடாக்ஷந்தங்கலிற் பாவிகட்குப் பாவவிரிவுமுண்டாமெனவுங்கூறினார்-

வினா - முன்னநுக்கிரகமெனக்கூறிப் பின் தருமக்ஷயமான நிக்கிரகம்வரலாமோவெனின்;

விடை - காமியதருமத்தா லுண்டானவைஸ்சுவரிய மமதையான்மகான்களை லட்சியாதவமதிப்புண்டானதினாற் புண்ணியநசிப்புவரின்பின்னன்புண்டாதற் கேதுவாதலினஃதுங்கிருபையேயெனக்கொள்க.

(இதனதுதாற்பரியம்.)

சீவன்முத்தனையடைந்தவர்களின்பக்குவத்திற்குத்தக்கந்தபயனுண்டாதலைக்கூறியதாம். (௩௭௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளினகர்த்தத்துவமான சீவன்முத்தனால் மஹாவாக்கியார்த்தத்துக் க[illegible]கூலமான திருஷ்டாந்தமாதிய வற்று

ல்வெளிப்படுத்தும்பிரயோசனத்தோடு முபதேசமென்ன
மாமென்றவினாவிற்குத்தர முணர்த்துகின்றது-

(கவி.)

மறைப்பகலுமொருபிரமசொரூபமாதலினான் ......... *
மகிழ்ச்சிவெறுப்பிலாவீசற்கனுக்கிரகஞ்செயவு ...... *
மொறுப்புறவும்வரும்வினையினோராலத்தொழில்க ...... *
ளுறுதல்போற்சாதகர்தம்பக்குவபேதத்தாற் ........... *
சிறப்புறுநல்லுபதேசாதிகண்ஞானிக்கெய்துஞ் ...... *
செப்பியவிவ்விலக்கணமொடிராதுபலமுறையாற் ... *
றுறப்பிலருட்சீவன்முத்தரிருப்பதென்கொலென்னிற் ... *
றுணிவுதோன்றமுதுநூற்றொகுத்தபரிசுரைப்பாம் *

(இதனதுபதப்பொருள்.)

மறைப்பகலும் - ஆவரணநீங்கிய- ஒரு-ஒப்பற்ற-பிரமசொரூபமாதலினால்- பிரமஸ்வரூபந்தானாதலால்- மகிழ்ச்சிவெறுப்பிலா-ராகத்துவேஷமில்லாத-ஈசற்கு- ஈசனுக்கு-வரும்-சங்கற்பிக்கின்ற வினையினோரால்-நல்வினைதீவினையுடையவர்களால்-அனுக்கிரகஞ்செயவும்- அனுக்கிரகித்தலும்-ஒறுப்புறவும்-நிக்கிரகித்தலுமான-அத்தொழில்கள்-அப்பஞ்சகிருத்தியங்கள் -உறுதல்போல்- உண்டாவதுபோல- சாதகர்தம்-அப்பியாசிகளுடைய- பக்குவபேதத்தால்- பக்குவத்தினதாரதம்மியத்தால்- சிறப்புறும்- மேம்பாடுள்ள-நல்லுபதேசாதிகள்- நன்மையானபிரமோபதேசாதிகளைச்செய்ய-ஞானிக்கு- ஜீவன்முத்தனுக்கு-எய்தும்- உண்டாம்-செப்பிய-இங்ஙனங்கூறிய - இவ்விலக்கணமொடு- இந்தவிலக்கணங்களுடன்-இராது- இல்லாமல்-பலமுறையால்- பலதன்மையினால்-துறப்பிலருள் -நீங்காதகிருபையுடைய- சீவன்முத்தர்- ஜீவன்முத்தர்கள்- இருப்பதென்னெனில்- இருப்பதெங்ஙனமென்றால்-. துணிவுதான்றற-தெளிவுண்டாக- முதுநூல்- வேதாந்தசாத்திரங்கள்- தொகுத்தபரிசு-தொகுத்துக்கூறிய தன்மையை- உரைப்பாம்- நுதலுவாம்-என்று- கொல்-அசை.

(இதனதுதாற்பரியம்.)

இராகத்துவேஷமின்றிச்சுவாயம்பு வடிவமானவீசனுக்குச் சீவர்களனல்வினைதீவினையைக் குறித்தவர்கட்கனுக்கிரகநிக்கிரகமுண்டாவது போலவிருப்பு வெறுப்பின்றிச்சயஞ்சைத

ன்னிய சொரூபமாகவிளங்குகின்றஜீவன்முக்தனுக்காத்மாக் களின்பக்குவ தாரதம்மியங்களைக்குறித்துச் சிலக்ஷ ரலக்ஷ த்கிரமமான வுபதேசாதிக ளுண்டாதற் கையமின்றென்ப தாம். (௱௭௨)

---

(அவதாரிகை)

இச்செய்யுளிற்ஜீவன்முக்த ரொருபடித்தா யிராமற்பலவித மாயிருப்பதியாதினாலென்றவினாவை நோக்கிப்பிராரத்தச மஸ்கார நான்கினால் வந்ததெனக்கூறுவான் றொடங்கியவற்றி னுமருமையவற்றின் மூன்றினிலக்கணமுமுணர்த்துகின்றது.

(கவி.)

வந்தனையும்பிராரத்தவாசனை தீவிரமே ……………*
மத்தியமந்தஞ்சுத்தமெனவொருநான்காகும் ……… *
பந்தமறுஞானியாயினும்போகத்தழுந்திப் …………*
பசுப்போலத்தன்மகிழ்ச்சிமாத்திரையாயிருத்தல் ……*
முந்துரைசெய்தீவிரம்போகச்சிறப்புற்றிடினு ……… *
மொழியான்மதற்பரனாய்விநோதமேபுரிந்து ……… *
மைந்தரெனவிருத்தன்மத்தியம்போகமனைத்து ……… *
மாற்றிமிதுனம்போலாநந்தமுறன்மந்தம் ……………*

(இதனதுபதப்பொருள்.)

வந்தனையும் - அனுபவித்துதீர்க்கற்காகவாராநின்ற- பிராரத்த வாசனை- பிராரத்துவசமஸ்காரமானது- தீவிரம்- தீவிரமெ னவும்-மத்தியம்- மத்தியமெனவும்-மந்தம்-மந்தமெனவும்- சுத்தமென-சுத்தமெனவும்- ஒருநான்காகும்-ஒருநான்காம்- (இவற்றுள்)பந்தமறு- பந்தநீங்கிய- ஞானியாயினும்-ஞான வானானாலும்- போகத்தழுந்தி - போகங்களின்மூழ்கி-பசுப் போல- பசுவைப்போல - தன்மகிழ்ச்சிமாத்திரையாய்- ஆத் மப்பிரீதிமாத்திரமாய்- இருத்தல்-இருப்பதே-முந்துரைசெ ய்-முற்கூறிய-தீவிரம் தீவிரசமஸ்காரமும்-போகம்-அனுப விக்கும்விஷயங்கள்- சிறப்புற்றிடினும்-விருத்தியடையினு ம்-மொழி-சொல்லாநின்ற-ஆன்மதற்பரனாய் -ஆத்மசொரூ பனாய்-விநோதமேபுரிந்து-விநோதங்களைச்செய்து-மைந்த ரான- பாலரைப்போல- இருத்தல்-இருப்பதே- மத்தியம்-ம த்தியசமஸ்காரமும்- போகமனைத்தும்- சகலபோகங்களையு

ம்-மாற்றி-நீக்கி- மிதுனம்போல்- சுரதசுகத்தைப்போல-ஆநந்தமுறல்- நிசாநந்தத்திருப்பதே- மந்தம்-மந்தசமஸ்காரமுமாம்—ஏ—று-ஏ-அசை.

மிதுனமென்பது, சுரதலீலையிலுண்டாகும் விஷயாநந்தமெனக்கொள்க, ஜீவன்முத்தன் சுகதுக்கங்களின்மூழ்கியிருப்பினுமுன்பின்னுணராது தற்பிரியம்விடாமலனுபவித்தலிற்பசுவைப்போலெனவும், விடயபோகங்கள்விசேடமாயுண்டாயினுந்தானவைகட்குச் சாட்சியாயிப்போகங்களைவிளையாட்டாகப்பார்த்திருத்தலிற் பாலனைப்போலெனவும், வராநின்றபோகங்களனைத்தையுமித்தையெனநீக்கினவனும் நீக்கப்படும்பொருளுமின்றித் தன்னின்பமாத்திரமாயிருத்தலின் மிதுனம்போலெனவுமுவமித்தல். (௫௭௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்மேனையவொன்றினிலக்கணமுமந்நான்கிற்குமுண்டாகும்பயனையுமுணர்த்துகின்றது.

(கவி.)

உலகவழக்ககன்றுநிருபாதிகான்மாவி.............. *
லுற்றதற்பரனாகிப்பரமுத்தனெனவே.............. *
யிலகுசுகத்துடனிருத்தல்சுத்தவாசனையா.............. *
மென்பரிந்நால்வகையாகுங்கருமவாசனையாற்.............. *
றலைமைகொண்முத்தர்கள்வேறுவேறாயவொழுக்கஞ்.............. *
சாரினுஞ்செந்நெறிகோணெறிபெறுமந்நதிக.............. *
ளலைகடலிற்புகுதல்போன்முடிவினின்மெய்ப்பரமா.............. *
யமர்தருநன்முத்திசுகமொருபரிசென்றறியே.............. *

(இதனதுபதப்பொருள்.)

உலகவழக்ககன்று - லவுகீகதருமங்கணீங்கி- நிருபாதிகான்மாவில் - நிருபாதிகப்பிரமத்தில் - உற்ற - பொருந்த - தற்பரனாகி-தத்தேகனாய்- பரமுத்தனெனவே-பரமுத்தனைப்போலவே-இலகு- விளங்காநின்ற- சுகத்துடனிருத்தல்-பரமசுகத்திருப்பதே - சுத்தவாசனையாமென்பர் - சுத்தசமஸ்காரமென்றுசொல்லுவார்கள் - இந்நால்வகையாகும் - இந்நான்குவிதமாகிய- கருமவாசனையால்- பிராரத்தசமஸ்காரத்தால்-தலைமைகொள்- முதன்மையான-முத்தர்கள்- சீவன்முத்தர்கள்-

வேறுவேறாய - நானாவிதமான-ஒழுக்கஞ்சாரினும்- நடைகளைச்சேர்ந்திருக்கினும் -செந்நெறி-ஒழுங்கானமார்க்கமும்- கோணநெறி- வளைவானமார்க்கமும் - பெரும்-செல்லுதலைப்பெற்றிருக்கின்ற - மாநதிகள் - பெரியநதிகள் - அலைகடலில்-தரங்கத்தினையுடையசாகரத்தில்- புகுதல்போல்-சேர்வதுபோல-முடிவினில்-தேகாந்தத்தில்-மெய்ப்பரமாய்-உண்மையாகியபிரமஸ்வரூபமாய் - அமர்தரும்- அமர்ந்திருக்கின்ற- நன்முத்திசுகம்- நல்லமோட்சவின்பம்- ஒருபரிசென்று-ஒருதன்மையாமென்று- அறி- நீயறிவாயாக—எ—று-ஏ-ஈற்றசை.

யாவுமாய்விளங்காநின்ற பிரமாநந்தத்திருத்தலிற்பரமுத்தனைப் போலெனவுமுவமித்தல், முத்தர்களென்னும்பன்மை, பிரமவித்தன்-பிரமவரன்-பிரமவரியான்-பிரமவரிட்டனெனவும், வேறுவேறாயவொழுக்கமென்பது, அவர்களனுஷ்டானதாரதன்மியமெனவும், விவகாரங்களினூற்போகங்களிற்கூடினுந்தற்பிரியத்திற்றீவிரமாயுற்றிருத்தலிற்பிரமவித்தனுக்குத் தீவிரவாசனையெனவும், அவ்விவகாரங்களினுள்ளபோகங்களனைத்தினுக்குமத்தியனா யிருந்துசாட்சியாயறிதலிற் பிரமவரனுக்கு மத்தியவாசனையெனவும், அவ்விவகாரபோகங்களனைத்துநீங்கிப் பரமசுகத்தின்மந்தகதியாயடங்கிநிற்றலிற்பிரமவரியனுக்கு மந்தவாசனையெனவும், வாசனாட்சயத்திற் றத்துவஞானமானது பரிசுத்தமாய்விளங்கலிற்பிரமவரிட்டனுக்குச்சுத்தவாசனையெனவுங்கொள்க.

(இவ்விரண்டுகவியினதுதாற்பரியம்.)

குருமுகமாய்விசாரிக்கு மாத்மஞானவிசாரத்தா னித்தியாநந்தபோதமுதயமாயினும் பிராரத்ததேகசம்பந்தத்தினாலப்பியாச தாரதன்மியங்களிருக்கினு மனுபவமாகியமுத்திபலமொன்றேயென்பது தோன்றவிகாசமாய் விளங்கவுணர்த்தியதாம். (௩௭௪)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய வப்பியாசத்தின்கண்ணுள்ளபிராரத்தவாசனை நான்குமூன்றுவிதமாக மனுபவித்துத் திருமுறைமையுணர்த்துகின்றது.

(கலி.)

இச்சையுடனனிச்சைபிறரிச்சையெனுமிவற்றா... ......*
வியம்பலுறுபிராரத்தமூன்றுவகைப்படுமா ...........*
லச்சுரர்களாலும்விலக்குதற்கரியவாகு ... ..... ......*
மபத்தியஞ்செய்திடறனக்கேகேடெனவிங்கறிந்தும்...*
வைச்சுமதுபுரிவித்தலிச்சைசெய்யேனெனினு..........*
மன்னவர்தம்மாணைபோற்செய்வித்தலனிச்சை .... .....*
யிச்சையனிச்சைகளின்றியிருந்துமயலோரா ... .........*
லின்பதுன்பநுகர்வித்தல்பிறரிச்சைவினையாம் ..... ... *

(இதனதுபதப்பொருள்.)

இச்சையுடன்-இச்சையோடும்- அனிச்சை-அனிச்சையும்-பிறரிச்சையெனும் - பாரிச்சையுமென்கின்ற - இவற்றால்- இவைகளால்- இயம்பலுறும்- முற்கூறிய- பிராரத்தம்-பிராரத்தகனம்மானது - மூன்றுவகைப்படும் - மூன்றுவிதமாம்- (இவைகளை) அச்சுரர்களாலும் - அத்தேவர்களாலும்- விலக்குதற்கு-நீக்குதற்கு- அரியவாகும் - கூடாதனவாம்(அவற்றுள்)அபத்தியஞ்செய்திடல்-பத்தியந்தவறல்-தனக்கேகேடென-தனக்கேதுன்பமென- இங்கு-இவண்- அறிந்துவைச்சும் அறிந்திருந்தும்- அதுபுரிவித்தல் - அதைச்செய்வதே-இச்சை- இச்சாபிராரத்தமும்-செய்யேனெனினும்- நான்செய்யேனென்றாலும் - மன்னவர்தம்மாணைபோல்-அரசாக்கினையைப்போல- செய்வித்தல்- வலுமையாகச் செய்விப்பதே- அனிச்சை- அனிச்சாபிராரத்தமும் இச்சை-இச்சையும்-அனிச்சைகள்-அனிச்சைகளுமானவிவ்விரண்டும் - இன்றியிருந்தும்-இல்லாதிருந்தும்-அயலோரால்-பரரால்- இன்பதுன்பம்-சுகதுக்கங்களை- நுகர்வித்தல்-புசிப்பித்தல்-பிறரிச்சை-பாரிச்சாபிராரத்தமுமாம்—எ—று-ஆல்-அசை,

தானிவையனுபவிக்கக்கூடாத காரியமெனநன்றாயத்தெரிந்திருந்து மதன்படியில்லாமலனுபவிக்கவருவது இச்சையெனவும், தனக்கிச்சையின்றியிலு மவற்றையனுபவிக்கச் செய்வது அனிச்சையெனவும்; தனக்கவ்விரண்டுமின்றியிலும்பிறரான்புக்காக வனுபவிக்கப்படுவதுபிறரிச்சை யெனவுங்காண்க.

(இதனதுதாற்பரியம்.)

விருப்புவெறுப்பு வுபேக்ஷையுமான வினைகளாற்பலோ
த்காரமாகவனுபவித்துத் தீர்வதுபிராரத்த கன்மங்களாமெ
ன்பதாம். (௱௭௫)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்முற்கூறிய பிராரத்தகன்மங்களுள்ள ஜீவன்
முத்தர்கணடைபலவாயினுமவர்களுண்மை யொன்றேயெ
னவற்புறுத்தற்குவமான புருஷகமாக வுணர்த்துகின்றது.

(கவி.)

இப்பரிசுமூவகையாம்பிராரத்தவினைவா ............ *
லெண்ணில்பலவொழுக்கமாஞ்சீவன்முத்தர்க்கிந்த ... *
மெய்ப்பொருளைவசிட்டனாரதன்றுருவாசன்சீர் ......... *
வியாதனொடுசுகன்வாமதேவனருட்சனக ............. *
னொப்பரியபரதனெழிற்கௌதமனேமுதலா ............ *
யுளர்வருத்தனுபேதமுணர்த்தலுறுமிங்ஙன் ........... *
றுய்ப்புதவுபிராரத்தங்கொளினுஞ்ஞானிக்குஞ் ........... *
சுத்தனுக்கும்வேறுபாடெங்ஙனெனின்மொழிவாம் ... *

(இதனதுபதப்பொருள்.)

இப்பரிசு-இத்தன்மையாக-மூவகையாம்-மூன்றுவிதமான-
பிராரத்தவினைவால்-பிராரத்தமுண்டாவதால்- எண்ணில்-அ
ளவிறந்த- பலவொழுக்கம்- நானாவிதமானநடைகள்-சீவன்
முத்தர்க்கு- ஜீவன்முத்தர்களுக்கு-ஆம்-உள்ளனவாம்-இந்த-
இங்ஙனமான - மெய்ப்பொருளை - உண்மைப்பொருளை-வ
சிட்டன் - வசிஷ்டமுனியும்- நாரதன் - நாரதமுனியும்-துரு
வாசன்-துருவாசமுனியும்- சீர்வியாதனொடு- சிறப்புள்ளவி
யாசமுனியுடன் சுகன்- சுகமுனியும்-வாமதேவன்-வாமதே
வமுனியும்-அருட்சனகன் - கிருபையுள்ளசனகராசனும்-ஒ
ப்பரியபரதன்- இணையின்றியசட்பரதமுனியும்-எழிற்கௌ
தமன்- அழகுள்ளகௌதமமுனியுமாகியவிவர்கள் - முதலா
ய்-ஆதியானமகான்கள் - உளர்-உடையவர்கள க- வருத்தனு
பேதம்-வர்த்தித்துவருகின்றதாரதம்மியமே உணர்த்தலுறு
ம்-அறிவிக்கும்-இங்ஙன்-இவ்வண்ணம்-துய்ப்புதவு புசிப்பை
க்கொடுக்கின்ற-பிராரத்தம்-பிராரத்தகன்மங்களை -கொளில்-

சீவன்முத்தனுக்குண்டெனக்கொண்டால்-அஞ்ஞானிக்கும்-பெத்தனுக்கும்- சுத்தனுக்கும்- ஞானிக்கும்- வேறுபாடெங்ஙனெனின் - பேதமியாதெனக்கேட்கின் - மொழிவாம் - மேற்கூறுவாம்— ௭ — ௱ - ௭ - அஙச.

(இதனது தாற்பரியம்,)

முத்தியைப்பெற்றஞானியானவர்கள் சீவன்முத்தித்தன்மையோடு நாலுவிதமான நடைகளையுடையவர்களாய் விர்த்தியையடைந்து வருவதற்கு வசிட்ட முனியாதிய பெரியோர்களைமேற்கோளாகவெடுத்துணர்த்தியதாம். (௱௭௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் பெத்தனுமுத்தனும் பிராரத்தவினை புசித்தவிற்சரியென்றவிவர்கட்குப் பேதந்தானியாதென்றவினாவிற்குத்தரமுணர்த்துகின்றது.

(கவி.)

மண்ணுலகில்விராத்திரியர்சுரோத்திரியர்தமக்கு ........*
மறையொழிதன்மொழிதலலன்றியுணன்முதலா ......*
யெண்ணவருஞ்செயலான்வேறிலாமையதுபோல ........*
விதயபந்தமுறலொழிதலாலன்றிப்போக ............*
முண்ணுநிலையதனாலஞ்ஞானமுடையோர்க்கு ............*
முணர்வுமயமாய்நின்றசீவன்முத்தர்தமக்கு ............*
நண்ணிவருவேறுபாடிலையெனவேதவில்லவர் ..............*
ஞானநூல்பலவுணர்ந்தநல்லுணர்வினவரோ............*

(இதனதுபதப்பொருள்.)

மண்ணுலகில்-உலகத்தில்-விராத்திரியர்-விராத்திரியருக்கும்-சுரோத்திரியர்தமக்கும்-சுரோத்திரியருக்கும்- மறையொழிதல்- வேதாத்தியயனமின்மையும்-மொழிதல்-அவ்வத்தியயனமுள்ளதும்-அன்றி-பேதமல்லாது-உணன்முதலாய்-ஆகாரநித்திரையாதியாக - எண்ணவருஞ்செயலால் - எண்ணப்பட்டதொழில்களால்-வேறிலாமையதுபோல- பேதமில்லாதது போல - இதயபந்தமுறல் - இருதயக்கிரந்தியடைதலும்- ஒழிதல்-அஃதுவிட்டலுமே-அன்றி-பேதமல்லாது-போகமுண்ணும்-போகங்களைப்புசிக்கும்- நிலையதனால்-தன்மையினால்-

அஞ்ஞானமுடையோர்க்கும்- அஞ்ஞானிகட்கும்- உணர்வுமயமாய்நின்ற - ஞானாகாரமாயிருந்த- சீவன்முத்தர்தமக்கும்-ஞானிகளுக்கும்- நண்ணிவரு- பொருந்திவரப்பட்ட-வேறுபடு-பேதங்கள் - இலையெனவே-வேறில்லையென்றே-ஞானநூல்பல- ஞானசாத்திரங்களனைத்தும்- உணர்ந்த-ஆராய்ந்தறிந்த-நல்லுணர்வினவர் - சுகபோகமடைந்தபெரியோர்கள்-நவில்வர்-சொல்லுவார்கள்— எ—று-ஆல்-ஏ-அசை.

மறையொழிதல்மொழிதலென்றதைநிரைநிரையாய்மறையொழிதலைவிராத்திரியருடனுமொழிதலைச் சுரோத்திரியருடனுங்கூட்டுக. விராத்திரியனென்பவன், அனுலோமப்பெண்ணிற்கும்பிரதிலோமவானுக்கும்பிறந்தவன், அனுலோமப்பெண் கீழானபீசத்திற்கும்மேலானயோனிக்கும்பிறந்தவள், பிரதிலோமன் மேலானபீசத்திற்குங்கீழானயோனிக்கும் பிறந்தவன், சுரோத்திரியனென்பவன் பிரமோபதேசத்தைக்கேட்குமந்தணன்.

(இதனுதாற்பரியம்.)

பெத்தனுக்குமுத்தனுக்குமகம்பாவநீங்கலுமோங்கலுமேயன்றிமற்றைச்செய்கைகளினும்பேதமின்றென்பதாம் (௩௭௫

(அவதாரிகை.)

இச்செய்யுளிற் சீவன்றனதொழிவிற்குச் சம்மதித்துப்பிரமமாதற்குடன்படுமோ வென்றவினாவிற் குத்தரமுணர்த்துகின்றது.

(கவி.)

தத்துவஞானத்தினாற்பிரமமடைந்திடுமேற் ...............*<br>
றறுகண்வரிப்புலிகண்டோன்போற்சீவத்துவத்தை ... *<br>
யத்தலையேயழிந்திடுமோதலினாலச்சீவ ...............*<br>
னழிவுதனக்குடன்படுமோவெனிற்கடவுட்டன்மைக் .*<br>
குய்த்தவாதரவினாற்கங்கைமுதலவற்று ............*<br>
ளொழிப்பதனுக்கிசைவர்நரத்துவமதுபோலென்றும் ..*<br>
பொய்த்தலிலாத்துரியவடிவாம்பிரமத்துவத்திற் .........*<br>
பொருந்தத்தன்கேட்டினுக்கிங்குடன்படுஞ்சீவன்றான்*

(இதனதுபதப்பொருள்.)

தத்துவஞானத்தினால்-மெய்யுணர்வின்விசாரத்தால்-பிரமமடைந்திடுமேல்-பிரமோதயமானால்-தறுகண்-மறஞ்செய்யுங்கொடியகண்களையும்-வரி-தேமல்களையுமுடைய-புலி-வியாக்கிரத்தை-கண்டோன்போல் - சடுதியிற்பார்த்தவனைப்போல-சீவத்துவத்தை-ஜீவத்தன்மையானது-அத்தலையே-அப்பிரமதரிசனமாத்திரத்தில்-அழிந்திடுமாதலினால்-கெடுமாதலால்-அச்சீவன்-அந்தச்சீவனானவன் - அழிவுதனக்கு-தனதுநாசத்திற்கு- உடன்படுமோவெனில்- சம்மதிக்குமோவென்றால்-கடவுட்டன்மைக்கு - தேவத்தன்மையடைதற்கு-உய்த்த-செலுத்திய- ஆதரவினால்- ஆசையினால் - கங்கைமுதலவற்றுள் - கங்கையாதியநதிகளில் - நரத்துவம்-மானிடத்தன்மையை-ஒழிப்பதனுக்கு- நீக்குவதற்கு- இசைவர் -அங்கீகரிப்பர்-அதுபோல்-அதைப்போல- என்றும்-எப்போதும்-பொய்த்தலிலா-சத்தியமான-துரியவடிவாம்- தனதுயதார்த்தமான துரியஸ்வரூபமாகிய - பிரமத்துவத்தில் - பிரமத்துவமானது-பொருந்த- உதயமாக-சீவன் - ஜீவனானவன்- தன்கேட்டினுக்கு- தனதுகற்பிதமான சிதாபாசநாசத்திற்கு- இங்குடன்படும் - இவன்சம்மதிக்கும் — எ — று-தான்-அசை-பிரமத்திற்குப்புலியையுவமித்தல்.

கங்கைமுதலென்றமையின், யமுனாசரஸ்வதி கூடியதிரிவேணிசங்கமமெனக்கொள்க.

(பதசாரம்.)

தன்கண்ணினாற்றனதுருவத்தைக் காண்பதுபோலத் தற்பிரஞ்ஞையாற் றன்னைக்கண்டமைவானென்பார்- தத்துவஞானத்தினாற் பிரமமடைந் திடுமெனவும்—ஆணவத்தைக்கெடுக்குங்கொடியநோக்கென்பார்-தறுகண்ணெனவும்—சமாதியின்கண்ணனவரதமாயுதயமானவனுபவமென்பார்-வரியெனவும்— சீவன்றனக்காதாரமான சிவத்தைப்பார்க்கச் சிவந்தனக்காரோபமான சிதாபாசனைப்பார்க்க விவ்விருபார்வையுமொத்தவிடத்தவ்விருதன்மையுநீங்கிச்சுயஞ்சைதன்னியமாயதனாற்சங்கற்பநாசம்வருமென்பார்-புலிகண்டோன்போற்சீவத்துவமத்தலேயழிந்திடுமெனவும் — சங்கற்பந்தனதழிவானவதீதத்திற்குடன்படுமோவென்பார் - சீவனழிவுதனக்குடன் படுமோவெனவும்—மண்ணின்கண்மனிதவேடம்பூ

ண்டவன் விண்ணின்கண்டேவ வேடம்பூணுநிமித்தங்கங்கை யாதியினித்தேகத்தைவிடுவதுபோலச்சீவ வேடம்பூண்டதுரி யன்றனதுயதார்த்தவடிவமாகிய பிரமஸ்வரூபத்தையடை யுநிமித்தங்கற்பிதரூபமானசீவசிதாபாசத்துவத்தைச்சமாதி யாதியவற்றினாலொழிக்கவிருப்பினானென்பார் - கடவுட்ட ன்மைக்குத்தவாதரவினாற்கங்கைமுதலவற்றுளொழிப்பத னுக்கிசைசேர் நரத்துவம்போமெனவும் — பரமாத்மாயிக்க மாஸடாதத்துவத்தானாய்த்துவிதநீங்கினனென்பார் - பொ ய்தலிலாத்துரியவடிவம்பிரமத்துவத்திற் பொருந்தத்தன் கேட்டினுக்கிங்குடன்படுஞ்சீவன்றனெனவுங்கூறினார்,

வினா, தேகவழிவைச்சீவனழிவாகவுவமானத்திற்கூறியதென் னையெனின்,

விடை, தேகிலயக்காணாதுதேகத்தைத் தானெனக்காண்பதி னாலென்க,

வினா, சீவன்றனதுலாபத்திற்குடன்படுமென்னுதுதனதுகே ட்டிற்குடன்படுமென்றதென்னையெனின்,

விடை, சங்கற்பஞ்சத்திற்கனாதலே சித்தாய்விளங்கலினாலெ ன்க.

(இதனதுதாற்பரியம்.)

சீவசிதாபாசன் றனதவிருத்தாம்சமான சுயஞ்சித்தைநோக் கினவிடத்திற்றனது விருத்தாம்சமான சகலகற்பனைகளுநீங் குமென்பதாம். (௩௭௮)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிங்ஙனங்கூறிய சீவன்முத்தர்க்குமுன்னுள்ள ரிஷிகளைப்போலச்சாபானுக்கிரக சாமர்த்தியங்காணிலமே யிவர்களை ஞானியென்றதெங்ஙனமென்றவினாவிற்குத்தரமு ணர்த்துகின்றது.

(கவி.)

வாதராயணன்முதலோர்போற்சாபமுடனே ...... *
மற்றருள்செய்வலியுடையோன்றத்துவஞானத்தோ ... *
னேதிலானலனெனினவ்வலிதவத்தின்பலமா ....... *
மிலங்குதத்துவஞானபலமன்றமாயின் ........ *

மாதவமேஞானத்திற்கேதுவெனுஞ்சுருதி ............... *
வழக்கினாற்றவமிலர்க்குத்தத்துவஞானந்தா ............... *
னேதெனிலாஞ்சாபாதிக்குச்சகாமியமே............... *
யேதுநிட்காமியதவஞானத்தினுக்கென்றறியே............... *

(இதனதுபதப்பொருள்.)

வாதராயணன்முதலோர்போல் - வியாசரிஷிகளைப்போல-சாபமுடன் - சாபத்தோடும்-மற்றருள்- பின்னனுக்கிரகமும்-செய்-செய்யத்தக்க-வலியுடையோன் - சாமர்த்தியமுடையவனேன் - தத்துவஞானத்தோன் - மெய்யுணர்வுடையவன்-ஏதிலான்- இவற்றிலொன்றுமில்லாதவன்- அலனெனில்-ஞானியலனென்றால்- அவ்வலி- அச்சாமர்த்தியம்- தவத்தின்பலமாம்- தபசின்பலமேயன்றி-இலங்கு- விளங்காநின்ற-தத்துவஞானம் - உண்மைஞானத்தின்- பலமன்றும்- பலமல்லவாம்-ஆயின்-அங்ஙனமாகில்-மாதவமே - மகத்தானதபமே-ஞானத்திற்கு-ஞானமுதித்தற்கு ஏதுவெனும் - காரணமென்னும்-சுருதிவழக்கினால்- வேதநீதியால் - தவமிலர்க்கு-தவமில்லாதவர்களுக்கு- தத்துவஞானம்- மெய்யுணர்வானது ஏதெனில் - யாதென்றுகேட்கில் - சாபாதிக்கு-சாபானுக்கிரகங்களுக்கு- சகாமியமேயேது - காமியதவமேகாரணம்- ஞானத்தினுக்கு-ஞானமுதயமாதற்கு- நிட்காமியதவம்-நிஷ்காமியதவமே-ஆமே ஏதுவாம்-என்றறி-என்றறிவாயாக—எ-று-ஏ-தான்-அசை.

ஏது, நிட்காமியதவத்திற்குங்கூட்டினும். சகாமியமென்பது, சொர்க்காதிபோகங்களையநுபவிக்கவிரும்புவதாம்- நிட்காமியமென்பது, அவ்விச்சையின்றித்தன்னிடத்தமைத்துநிற்றல்.

விரு - சித்தியுள்ளசாபானுக்கிரகசாமர்த்தியங்காமியதவத்தின்வலியேயன்றிஞானத்தின் வலியல்லவென்றுவிதற்குத்தவமேதுவெனச்சுருதிகூறியதென்னையெனின்,

விடை - ஞானத்திற்குநிட்காமியதவமேதுவாதலினென்க.

விரு - இந்நிட்காமியதவத்திற்கவ்வலிமையின்றியதென்னையெனின்,

விடை - இஃதுஞானோதயத்தினைசிப்பதாலிதற்கவ்வளவுசத்தியில்லையென்க.

வினா - சாபாதிக்குங் காமியமே துதானே யதற்கவ்வலிவந்ததென்னையெனின்,

விடை - அக்காமியஞ்சித்தியை யுண்டாக்கித்தானீங்காமல்விருத்தியடைந் தவருதலினாலென்க.

வினா - அற்றேல்-அச்சித்தியினா லிம்முத்திக்குப்பிரயோசனமின்றோவெனின்,

விடை -சோசரமகோசரத்திற்கெங்ஙனம்பிரயோசனமாமென்க.

(இதனதாற்பரியம்.)

ஞானமாத்திரம்பெற்ற சீவன்முத்தனுக்குச் சாபானுக்கிரக சாமர்த்தியமேற் சநநமரணத்திற்கேதுவாகலினஃதுவேண்டுவதின்றென்பதாம். (௫௭௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் ஞானத்தான்முத்தி பெற்றிருக்கும்வியாசாதிமஹாரிஷிகளுக்கிச்சித்திவந்த காரணமியாதென்ற வினாவிற்குத்தரமுணர்த்துகின்றது.

(கவி.)

வேதவியாசாதிகட்குஞானம்வலியிரண்டு.......... *
மேவுமெயெனிலவர்கட்கிருதவமுமுளவா ........ *
மாதலினாலவ்விரண்டுமாகுமொரோர்தவமே........ *
யாயினுமவ்வொன்றேயடையுமதனன்மாறின்று.... *
மேதையாஞ்சாபாதிவலியிலர்களாகி...... *
விதியிறத்துவஞானிகளேக்கிரியாதிட்ட...... *
ரோதுவார்நிந்தையெனினவர்தமக்குவிடயத்...... *
சூழல்பவராணிந்தையாதலிற்குறைவின்றமால்...... *

(இதனதுபதப்பொருள்.)

வேதவியாசாதிகட்கு- வேதவியாசர்முதலிய முனிவர்களுக்கு-ஞானம்- முத்தியும்-வலி - சித்தியுமாகிய-இரண்டும்-இவ்விரண்டும்-மேவுமேயெனில்- மேவியிருக்கின்றதேயென்றுல்-அவர்கட்கு- அவ்விருடிகளுக்கு- இருதவமுமுளவாம்-முற்கூறியவிரண்டுதவமுமுள்ளனவாம்-ஆதலினால்-ஆதலால்-அவ்விரண்டுமாகும் - அச்சித்திமுத்தியாகியவிரண்டுமுண்டாம்-ஓரோர்தவமேயாயின் - அவ்விரண்டினுளொவ்வொருதவத்

தைச்செய்யின்-ஒவ்வொன்றேயடையும்- ஒன்றென்றேவரு
ப்-அதனால்-ஆதலால் - மாறின்றும்- மூரணிலவாம்- மேனை
யாம்- மேம்பாடுள்ள - சாபாதி - சாபானுக்கிரகங்களாகிய-
வலியிலர்களாகி - சாமர்த்தியமில்லாதவர்களாய்-விதியில்-வி
திநிஷேதமின்றிய- தத்துவஞானிகளை - சீவன்முத்தர்களை-
இரியாதிட்டர்-கன்மிகள்- ஓதுவார்நிந்தைசெயினில் - இகழ்ச்சி
சொல்லுவார்களென்றால்- அவர்தமக்கு- அக்கன்மிகளுக்கு-
விடயத்தழுல்பவரால் - விஷயலம்படாளானமூடர்களால்-
நிந்தையாதலின்- நிந்தைவருமாதலின் - குறைவின்றும்- அ
தனாற் - சீவன்முத்தனுக்கோர் குறையுமில்லை —எ—- ஆல்-
அசை.விதியென்றதனால்நிட்டேதம்வருவிக்கப்பட்டது.

வினா-ஞானிகட்கிக்காமியதவமின்றென்பதென்னையெனின்;

விடை - தனக்குவேறு யனித்தமாயுள்ள சிவலோகாதிபதத்
தையடையவிருப்பமின்றாதலினானுந்தனக்குவேறின்றா
ய்த்தானேதானாய் விளங்குமிடத் தொன்றுவேண்டுதலுந்
தின்றாதலு மின்மையாதலினானுமென்க, காமியதவத்தா
ற்சித்தியுநிஷ்காமிய தவத்தான்முத்தியும் வருமாயினுமுத்தி
யின்றிப்சித்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்திய முண்
டாயிருந்தும்பிறர்க்குவினோதமாய்த்தனக்குப்பயனின்றியி
ருத்தலினிந்திரசாலமுதலானவித்தை செய்வோனாகவும், சித்
தியின்றியமுத்தியோர்க்குச் சாபானுக்கிரகசாமர்த்தியமின்
றாயினும்பிறர்க்குவினோதமின்றித் தனக்குப்பயனாயிருத்த
லினிவன் வித்தையைப்பார்க்குஞ் செல்வனாகவிருத் தலினி
வோரிலேற்போரதிகமாகார்போல் முத்தியுள்ளஞானவானு
க்குச்சித்தியுள்ளோர்சமானாதிகமாகாரென்க.

வினா - அங்ஙனமாயின்- முத்திமாத்திரம் பெற்றஞானிக்குச்
சித்திமுத்தியும்பெற்றவர்களதிகரலரோவெனின்,

விடை- தனக்கெனவின்றிப் பிராரத்தத்தினாற்சாபானுக்கிர
கசாமர்த்தியமுண்டாம் அவையுண்டானவிடத்தகம்பாவ
மிருத்தலினானு மவ்வகம்பாவமிவர்கட் கின்மையினானும
திகராகாரென்க.

வினா - அங்ஙனமாயினியாவருமவர்களை முக்கியமாகக்கூறு
வதெற்றினுக்கெனின்,

விடை - சீடர்கள்வேதத்தினுள்ளமஹாவாக்கிய நிச்சயமுண்
மையாகக்கொண்டுமுத்தியையடையுநிமித்தமவ்வாக்கியா

ர்த்தநிச்சயத்தைச்சுருக்கிச்சொல்வதில் விசுவாசந்தோன் றிடச்சாபாநுக்கிரக சாமர்த்தியத்திஞற்பய முண்டாயத ன்வழியொழுகவேண்டியீசுர நியதிப்படி வந்தவர்களாத லினுலென்க,

வினு - அற்றேல்-இச்சாபாநுக்கிரகசாமர்த்தியமில்லாதஞா னிகளாலஃதுடையகன்மிகள் தூஷிப்பர்களெனின்,

விடை - அவர்களை விடயபோகத்தை யுடையோர்தூஷித்த விடத்துலக்கன்மிகளுக்கோர் குறைவின்றுபதுபோலவி க்கன்மிகள் தூஷிப்பினுல்ஞானிக்கோர்குறைவின்றென்க.

(இதன் தாற்பரியம்.)

இச்சித்திரகளீசுரனுடையவல்லபமாதலி னிவையுள்ளவர்களை த்தேவத்தன்மையாக நம்பியவர்களால் விதிக்கப்பட்டவிதிப் படியுயிர்களொழுகவேண்டி யவர்கட்கிவ் விநோதமாயுள்ள சாபாநுக்கிரகசாமர்த்தியமீசுராநுக்கிரகத்திரு லுண்டாயி த்தென்பதாம் (௱அ௰)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முற்கூறிய ஜீவன்முத்தன் பிராரத்தவசத்தா ற்பலவிதநடையை யுடையவனுனு மஃதவனது சித்துவி லாசமாகக்காணவேண்டுமெனவுணர்த்துகின்றது.

(கவி.)

உலகிறந்தசீவன்முத்தனுகர்விளைவாசனையா ... .........*
லுண்பொருள்கள்பலகலர்த்துமவுணமேயுற்றும் ......... *
பலதிறங்கண்மொழிந்துமுபதேசநெதிபுரிந்தும் ... ... .. *
பரிதவித்துமகிழந்துமிகவேடங்கள்புனைந்துங் ... .... *
கலைதுறந்துமுடையுடுத்துங்கல்விபலபயின்றுங் ..... ...... *
கல்லாதுமாதர்முயக்கிடையுற்றுமிவ்வா ... ............ *
றலகிறந்தநடைபுரினுமருள்விளையாட்டென்றே ... ... ... *
யவன்றனைநம்பகவையமொருசிறிதுமுருமல் .... ......*

(இதனதுபதப்பொருள்.)

உலகிறந்த- லௌகிகநடையோடுங்கூடியிருந்த - சீவன்முத் தன்-சீவன்முத்தனுனவன்- நுகர்விளை-பிராரத்தகன்மத்தின்- வாசனையால்- சமஸ்காரத்திஞல்- உண்பொருள்கள் - அநுப

விக்கின்றவஸ்துக்கள் - பலகவர்த்தும் - பலவற்றைக்கிரகித்து
ம்-பணமேயுற்றும் - மௌனமாயிருந்தும் - பலதிறங்களை
மொழிந்தும் - பலசாஸ்திர நெறிகளைக்கூறியும் - உபதேச
நெறிபுரிந்தும் - உபதேசமுறைமைகளைச்செய்தும்- பரிதவி
த்தும்-விசனப்பட்டும்-மகிழ்ந்தும் - மகிழ்ச்சியடைந்தும்-
பகவேடங்கள் - பலவேடங்களை-புனைந்தும்- தரித்தும்- கலை
துறந்தும்- நக்னனாகியும்- உடையுடுத்தும் - கலையைத்தரித்
தும்- கல்விபலபயின்றும் - அநேகசாஸ்திரங்களைப்பியா
சித்தும்-கல்லாது-கற்காமல் - மாதர்மயக்கிடையுற்றும்-ஸ்
திரீலோலனாயிருந்தும்- இவ்வாறு-இவ்வண்ணமாக - அலகிற
ந்த-அளவற்ற- நடையுதிலும்- நடைகளைப்பொருந்திலும்-
அருள்விளையாட்டென்றே - கிருபாவிலாசமென்றேநினைத்
து- ஐயமொருசிறிதுமுறாமல்-சந்தேகமெக்கிஞ்சித்துமின்
றி-அவன்றனை- அச்சீவன்முத்தனை-நம்புக - சிவமெனநம்பு
வாயாக—எ— று-வ-அசை.

(இதனதுதாற்பரியம்.)

சீவன்முத்தனாற்செய்யப்பட்டபலவிதமான நடைகளுமேலோ
கானுக்கிரகமாகவேயன்றி யவற்றாலவனுக்கோர் பலாபலமி
ன்மையின் அந்நடைகளை யாத்மவுல்லாசமென்றேகாணவே
ண்டுமென்பதாம். (௩௮௧)

(அவதாரிகை.)

இச்செய்யுளின்விதேகமுத்த னிலக்கணமுமஃதையடைதற்
கேதுவான நித்தியகருமமுதலானவனுஷ்டானமாயிருப்பதா
கக்கூறுவான்முடங்கல் நித்தியகருமமாதியவாறுமுணர்த்து
கின்றது.

(கவி.)

என்றுமெவ்விடத்திலுமொருடம்புமுறுதொன்று ........*
யிருந்தசச்சிதாநந்தசிவசொருபமாத ....................*
னன்றிதருவிதேககைவல்லியமென்றிசைப்பர் .............*
நவின்றவிதையெய்துமாறெவ்வாறிங்கென்னிற் ........*
பொன்றலினித்தியகருமானுட்டானமதனாற் ...... ....*
புண்ணியமப்புண்ணியத்தாற்பாவவொழிவதனாற் .. ...*

குன்றலறுசித்தசுத்தியதனாற் பொய்க்குடும்பக் ……*
குற்றநெகிழ்வதனான் மெய்த்துறவு துறவதனால் ……*

(இதனதுபதப்பொருள்.)

என்றும்-எக்காலத்திலும்- எவ்விடத்தும்- எத்தேசத்திலும்- ஒருடம்பும்- யாதொருசரீரமாயினும் - உறாது சேராது-ஒன்றாயிருந்த-ஏகமாயிருந்த - சச்சிதாநந்த- சச்சிதாநந்தமயமாகிய- சிவசொரூபமாதல் - பிரமஸ்வரூபமாகவிளங்குதல்- நன்றிதரும்- நன்மையைத்தாநின்ற- விதேககைவல்லியமென்று-விதேகமுத்தியென்று- இசைப்பர்- அறிஞர்சொல்லுவார்கள்- நவின்ற-இங்ஙனங்கூறிய- இதை-இவ்விதேகமுத்தியை-எய்துமாறு- அடையுமார்க்கம்-இங்கு- இவண்-எவ்வாறென்னில்-எவ்வண்ணமென்றால் - பொன்றலில- நசியாத நித்தியகருமானுட்டானம் - நித்தியகருமானுஷ்டானமும்- அதனால் - அவ்வனுஷ்டானத்தினால் - புண்ணியம்- புண்ணியமும்- அப்புண்ணியத்தால் - அந்தப்புண்ணியத்தினால்-பாவவொழிவு- பாவநாசமும்-அதனால் - அப்பாவநாசத்தால்- குன்றலறு- குறைவின்றிய-சித்தசுத்தி-சித்தசுத்தியும் - அதனால்-அச்சித்தசுத்தியினால்-பொய்க்குடும்ப - மித்தையாகியகுடும்பத்தின்-குற்றநெகிழ்வும்-தோஷதரிசனமும்- அதனால்- அத்தோஷதரிசனத்தால்-மெய்த்துறவும் - உண்மையானதுறவும்- துறவதனால்-அத்துறவினால்—எ—று.

(பதசாரம்.)

காலதத்துவமென்பார்- என்றுமெனவும்—சகலபுவனபோகங்களுமென்பார்-எவ்விடத்திலுமெனவும்-சராசரவுயிர்களாகியபௌதிகமென்பார் - ஒருடம்பெனவும்— இவையாவுமின்றென்பார் - உறாதெனவும்—பரிபூரணமாயிருந்ததென்பார்- ஒன்றாயிருந்ததெனவும்—காலத்திரயத்திலுமழிவின்றிநித்தியமாயிருந்ததென்பார்- சத்தெனவும்— ஆதிமத்தியாந்தரகித சதோதயமாய் விளங்குமென்பார்-சித்தெனவும்—தடையற்றநிரதிசயாநந்தமென்பார்-ஆநந்தமெனவும்—மூன்றும் பிரிவின்றியொன்றானமங்களகரமாய் விளங்குகின்றதேபிரமமென்பார் - சிவசொரூபமெனவும்— அஃதேயுண்மையானதென்பார்- ஆதலெனவும்— அஃதேயதீதபதமான முத்தியென்பார் - விதேககைவல்லியமெனவுங்கூறினார்.

விதேகமுத்தியென்பது, தேகஞ்சின்மாத்திரமாதல் - எனவே - சீவன்முத்தியிற்சீவன்சிவமாய் விளங்குவதுபோலப்பிராரத்தானுபவநீக்கத் திற்றேகந்தேகியின்தேஜசாயாநந்தமாத்திரமாய்ச்சேடித்துநிற்பதென்க.

வினா - அற்றேல் - உலகரைப்போலஞானவான்களுக்குமுயிர்பிரியவுமங்ஙனம்பிரிந்ததேகத்தைக்கனனஞ்செய்வதுங் கண்டிருக்கின்றோமே யெங்ஙனம்பூரணமாயிற்றெனின்,

விடை - பஞ்சபூதபௌதிகங்கள் பூரணமாகவிளங்கவி[illegible] மாத்திரமா விளங்கவில்லையிஃதுமங்ஙனமே விளங்குமென்க.

வினா - அற்றேல் - இச்சம்பூர்ண திருஷ்டியாய்ப்பார்க்கிற் பூரணமாய்த்தோன்றுவதேயன்றிப் பூரணமாய்க்காணாததுபோலத் தேகமு மங்ஙனம்பார்க்கு மிடத்தது வாய்த்தோற்றுவதேயன்றியஃதாய்க்காணவில்லையேயெனின்;

விடை - அஸ்தியாதியகடினரூபமாயுள்ள வித்தேகமோர்சித்தியினாற்பரமாணுரூபமாய்ப் பந்தனம்பண்ணின வீட்டின்கணின்று வெளிப்படுதல்போலச் சைதன்னியசிந்தனையாற்றேகஞ்சைதன்னியரூப மாதற்குச்சந்தேகமென்னை யென்க.

வினா - அற்றேல் - இங்ஙனமாயினதற்குப்பிரமாணமுண்டோ வெனின்;

விடை - பரத்தில்வியாச வசிஷ்டாதிய மஹாரிஷிகளுமிக த்திலாசாரியசுவாமிகள்முதலியோருமின்னு மாணிக்கவாசகசுவாமிகள் தேகசேடமின்றிச் சோதியாய்க்கரைந்தாரென்பதுமின்னுமல்லமாப்பிரபுதேவர்ஜீவன்முத்தித் திசையிற்றனேகோரக்கர்கட்கம்பரிசியாமற் சாயையாயிருந்தாரென்பதுமின்னுமநேகமுண்டென்க.

வினா - அற்றேல் - யாவருமேனனுஷ்டிக்கவில்லையெனின்,

விடை - கிஞ்சிஞ்ஞத்துவமானஜீவன் சர்வஞ்ஞத்துவமுள்ளசிவத்தைச் சித்தித்ததுநீயென்னும் பகுப்பறச்சுத்தசைதன்னியமாதற்கே சிருட்டிதொடங்கி யிதுகாறும்வருந்தும் வருத்தத்திற்களவின்மையாயிருத்தலி னிச்சடத்தைச்சித்தாகக்கரைத்தற்குள்ள வருத்தமிவ்வளவென மட்டிடக்கூடாமையாலெவருமனுஷ்டிக்கும்படி சுருதிகள் சொல்லாமை

யாலாசிரியரும் நிரந்தரமா யனுஷ்டிக்கச் சொல்லவில்லை யாதலிம்மைகதேசத்திலுண்டென்க.

வினா - இனிச் சீவன்முத்தியின் விதேகமுத்தித்தன்மையும் விதேகமுத்தியிற் சீவன்முத்தித்தன்மையு முண்டென்பதெங்ஙனமெனின்,

விடை - ஜீவன்முத்தித்தன்மையாயிருந்துபதேசாதிகள்செய்யுமிடத்துந்தேகமின்றிச் சாயைமாத்திரமாயிருக்கவல்லமாப்பிரபுதேவர்போலவிருப்பது சீவன்முத்தியின் விதேகமுத்தியெனவும்விதேகமுத்தித்தன்மையானபரிபூரணமாயிருந்துஞ்சகஜீவபரங்களை யியக்காமலியக்குவிக்கும்பரமேசனைப்போலவிருப்பதுவிதேகமுத்தியிற் சீவன்முத்தியெனவுங்கொள்க.

(இதன்றாற்பரியம்.)

விதேகமுத்தித்தன்மையிஃதெனவிளங்கக்கூறினதாம். ()

(அவதாரிகை.)

இச்செய்யுளினிறுத்தமுறையான் முத்திவிருப்பமாதியபதினொருவிதமரபுணர்த்துகின்றது.

(கவி.)

முத்திவிருப்பதனானேபுறக்கருமமொடுக்க... ... ... *
மொழிந்ததனால்யோகநிலைமுயற்சியதுதன்னாற்...... *
பொய்த்தலறு துரியவிழைவத்துரியவிழைவாற்...... *
புகலருமாவாக்கியவாராய்ச்சியதனானே...... *
யத்துவிதஞானமதனாலவிச்சைநாச...... *
மதனாற்பொய்த்துவிதமயக்கழிதலதனானே...... *
மெத்துசுகதுக்கநினைவழிவதனால்விருப்பு ... ... ... *
வெறுப்பறுதலதனாலொண்விதிவிலக்கோய்வதனால் ...*

(இதன்பதப்பொருள்.)

முத்திவிருப்பு - முமுட்சுத்துவமும் - அதனால்-அம்முமுட்சுத்துவத்தினால்- புறக்கருமமொடுக்கம்- பாகியகன்மநிவிர்த்தியும்- மொழிந்ததனால்- முற்கூறியபாகியகன்மநீக்கத்தினால் - யோகநிலைமுயற்சி-ஞானயோகமடைதற்குமுயற்சியு

ம்-அதுதன்னால் - அம்முயற்சியினால் - பொய்த்தலறு-மெய்யான-துரியவிலழவு-ஆத்மப்பிரியமும்- அத்துரியவிழைவால்- அவ்வாத்மப்பிரியத்தினால் - புகலரும்-வசனித்தற்கரிய-மாவாக்கியவாராய்ச்சி- மகாவாக்கியவிசாரமும்-அதனால்-அவ்விசாரணையால்- அத்துவிதஞானம்- அத்துவிதஞானமும்-அதனால்-அவ்வத்துவிதஞானத்தினால் - அவிச்சைநாசம்-அவித்தியாநாசமும்- அதனால் - அவ்வவித்தியாநாசத்தால்-பொய்-மித்தையாகிய- துவிதமயக்கழிதல்-துவிதப்பிரமைநாசமும்- அதனால்-அத்துவிதநாசத்தால்- மெத்து-மேவிடுகின்ற-சுகதுக்கம்-இன்பதுன்பங்களாகிய-நினைவழிவு-சங்கற்பநாசமும்-அதனால் - அச்சங்கற்பநாசத்தால்- விருப்புவெறுப்பறுதல்- ராகத்துவேஷரகிதமும் - அதனால்-அந்நீக்கத்தினால்-ஒண்- ஒழுங்கான- விதிவிலக்கு-விதிநிஷேதங்கள்-ஓய்வு - ஓய்தலும்-அதனால் - அவ்வோய்தலினால்—எ—று-எ-அசை. (௱அ௯)

(அவதாரிகை.)

இச்செய்யுளின் முன்னிறுத்தமுறைபா விருவினையாதியமூன்றினிலக்கணமுமிவ்விருபது சோபானத்திற்குமதிதமானதேவிதேககைவல்லியமெனவுமுணர்த்துகின்றது,

(கவி.)

வினையிரண்டுமகறலதனாற்றேகபாவ ............ *
விச்சித்தியதனாலேபாசமெலாமொழிதற் ............ *
பினையதனாற்றவதனாலேபராபரமாய்முடிவாய்ப் ............ *
பெயர்சாதிகுறிபெறுதொன்றுமிலாக்கு ............ *
மனமிறந்துநித்தியாநந்தமயமாகி ............ *
மறுவிலாவிதேககைவல்லியம்வந்தெய்து ............ *
மெனவறிந்துணிந்திடுகாருதிகுருபரனே ............ *
வின்பவீடடையுநெறிவிரும்புறுமுத்தமனே ............ *

(இதனதுபதப்பொருள்.)

வினையிரண்டும் -நல்வினைதீவினையாகியவிரண்டும்-அகறல்-நீங்குதலும்- அதனால் - அவ்வினைகணீக்கத்தினால்-தேகபாவவிச்சித்தி-தேகான்மபுத்திநீக்கமும் - அதனால் - அந்நீக்கத்

றினால்-பாசமெல்லாமொழிதல் - பாசமனைத்துநீங்குதலும்-பிணை-பிணிப்பு - அறைந்தவதனால்-முற்கூறியபாசநாசத்தினால்-பராபரமாய்-பரப்பிரமமாகவும் - முடிவாய்-முடிவாகவும்-பெயர் - நாமமும்-சாதி-வருணமும் - குறி-ரூபமும்- பெறுது-அடையாமல் - ஒன்றாகி- ஏகமாய் - வாக்குமனமிறந்து - அவாங்மனோகோசரமான - நித்தியாநந்தமயமாகி-நித்தியாநந்தஸ்வரூபமாய் - மறுவிலா-களங்கமற்ற - விதேககைவல்லியம்-விதேகமுத்தியானது - வந்தெய்துமென-வந்தடையுமென - அறிந்து-தெரிந்து - சுருதி-சுருதிவாக்கியத்தினாலும்-குருபரனால்- ஆசிரியருபதேசத்தினாலும் -இன்பவீடு-பேரின்பமாகிய மோட்சத்தை - அடையுநெறி-செருமார்க்கமிதுவென - விரும்புறும்-விரும்பாநின்ற- உத்தமர்-உத்தமர்கள்-துணிந்திடுக - தெளிபக்கடவாராக—எ—று. ஏ-கூற்றலகை.

(இம்மூன்றுகவியினதுபதச்சாரம்.)

உதயபூருவமைந்துகடிகைக்குள்ளானவுஷக்காலத்தில்விழித்துச்சுசியோடுங்கூடத்தான்வழிபடுகடவுள்ளைக்கத்தோடும் விதிப்படிமலசலவுபயத்துவாரசுத்திசெய்வதேசவுசவிதியெனவும்—மேற்றந்ததாபனசப்தத்துவாரசுத்திசெய்வதுதந்ததாபனவிதியெனவும்—தீர்த்தத்திற்படிந்துமனோசரீரசுத்திசெய்வது ஸ்நானவிதியெனவும்—மூன்றுசத்தியோடுதான்சிவசொரூபமாகவிபூதிதரிப்பது அனுஷ்டானவிதியெனவும்— பிரணவாதிமந்திரங்களாலுருவேற்றுவது செபவிதியெனவும்—பூதசுத்திமுதலியபஞ்சசுத்திகளோடுந்தான்சிவசொரூபமாயிருந்து சோடசவுபசாரத்தோடுசிவத்தைப்பூசிப்பதுபூசாவிதியெனவும்--மேற்பிராணபலியோடுங்கூடவாத்மதிருப்திபண்ணுவிப்பதுபோஜனவிதியெனவும்--ஆகியசப்தவிதிகளு மிங்ஙனமபரான காலத்திலுஞ் செய்கின்றதுமிடையிற்றியானபரனா யிருப்பதுமாதலின் நித்தியகருமானுஷ்டானமெனவும்—இவ்வனுஷ்டானஞ்சற்கருமமாதலாற்றாய்தானபுண்ணியவிசேடமாதலிற்புண்ணியமாமெனவும்-அத்தூய்மையாற்பாவகருமஞ்சேர்தற்கிடமின்மையிற்பாவவொழிவெனவும்—அதனீக்கம்நிருமலமாதலிற் றன்றலசுசி

த்தசத்தியா மெனவும்—அச்சித்தசத்தியின் விடயத்திறன்
மைதெரிதலிற்பொய்க்குடும்பக்குற்றநெகிழ்வாமெனவும்—
அத்தோஷதிருஷ்டியினாலொன்றினும்பற்றின்மையின்மெ
ய்த்துறவாமெனவும்— அவ்விரத்திசுகவேதுவாயிருத்தலின்
முத்திவிருப்பமா மெனவும்—அம்முத்தி விருப்பமகமுகத்
திற்சார்ந்ததாகிய சன்மமொடுங்கலிற் புறக்கருமமொடுக்க
மாமெனவும்— அவ்வொடுக்க மனோநிக்கிரகத்தைநாடலின்
யோகநிலைமுயற்சியா மெனவும்—அம்முயற்சி தனித்திருப்
பதைநாடலிற்பொய்த்தலறுதுரிய விழைவாமெனவும்—அ
த்துரியமிஃதெனலறியும்பரமாத்மவிசாரஞானம்வேண்டுத
லிற் புகலருமாவர்க்கிய வாராய்ச்சியாமெனவும்—அவ்விசார
ம்அபேதமாதலி னதன்சாரமான வத்துவித ஞானமாமென
வும்—அவ்வத்துவிதஞான மபரோட்சமாதலினவித்தியாநா
சமாமெனவும்—அவித்தியாநாசத்தில் அகமிதமென்னும்பி
ராந்திநீங்கலிற்றுவிதமயக் கொழிதலாமெனவும்—அவ்வொ
ழிதலிலின்பதுன்பநீங்கலிற்சுகதுக்கவினையொழிவாமெனவு
ம்—அவ்வொழிதலி னிராகத்துவேஷமின்மையின் விருப்பு
வெறுப் பறுதலெனவும்—அஃதுநீங்கவே யிதுசெய்யத்தக்
கதுசெய்யத்தகாதென்னுஞ்சங்கற்பவிகற்பமின்மையின் வி
திவிலக்கோய்வாமெனவும்— இவற்றாற் சொர்க்கநரக மின்
மையின் வினையிரண்டு நீங்குமெனவும்— இந்நீக்கத்தில் நா
மரூபபாவனையின்மையிற் றேகபாவ விச்சிந்தியாமெனவும்
—இவ்விச்சிந்தியினால்அவாவனைத்துமன்பாய்க்கனைதலிற்பா
சமெலாமொழிதலெனவும்—அப்பாசமாகிய மூலாஞ்ஞான
ம்நசித்த விடத்திற்பரமாகிய வீசரத்தன்மையுமபரமாகியஜீ
வத்தன்மையுநீங்கியானென்னும்பிரமகூடஸ்தவயிக்கமான
வத்துவிதசொரூபமாதலிற் பராபரமெனவும்— இவ்வத்து
வித பதத்திற்கு மேலொரு பதமின்மையின் முடிவாமென
வும்—இதற் கோருருவ மின்மையிற் பேர்பெறாதெனவும்
—இஃதொன்றி னம்சமாகாமையிற் சாதி பெறாதெனவும்—
இஃதிங்ஙன மிருக்குமென வோரடையாள மின்மையிற்குறி
பெறாதெனவும்—இஃதெங்கும் பரிபூரணமாக நிறைந்தி
ருத்தலி னொன்றாகி யெனவும்—இஃதை வாக்கினாற்றறிக்க

த்தொடங்கினத்தூறி முடிவுபெறுததிற்கலாதலின் வாக்கிறந்ததெனவும்—இம்மைதமனதிறும் சிந்திக்கத் தொடங்கினச் சிந்தனத்தின் மனமம்மொதாங்க் கரைந்துபோதலின் மனமிறந்ததெனவும்—இங்ஙன மியாவுங் கரைந்தவிடத்து நிரதிசயாநந்தமாய் நிறைந்து நிற்றலின்- நித்தியாநந்த மயமாகியெனவும்—இக்களங்கங்களைத்து நீங்கித் தானேதானாய்விளங்கலின் மறுவிலா விதேககைவல்லிய மெனவுங்கூறினார்.

இங்ஙனம் விதேககைவல்லியத்தையடையுநிமித்த முதலிய நித்தியகருமானுஷ்டானமுதற் பாசமீறான மாயிருபதின்முன்னையவெட்டும்பாகியசாதனமெனவும், இடையின்மூன்றும் ஆந்திரியசாதனமெனவும், மேலொன்றுஞ் சாத்தியமெனவும், ஏனையவெட்டு நீங்கல் சாதனசாத்திய மெனவுங் கொள்க.

வினா - இவற்றின்வஸ்துநிச்சய முபக்கிரமத்திலாவது உபசங்காரத்திலாவதுகூறாது மத்தியிற் கூறிய தென்னை யெனின்,

விடை - அவ்வஸ்து சர்வதோமுகமாயிருந்தியாவுமாய் விளங்குதலனுபவமாதலினாலுஞ் சுருதிகள் மத்தியகதஸ்வரூபமென விளம்புதலினாலும் விசாரத்தி லொன்றிற்சார்பில்லாது நடுநிலையாய்விளங்குதலினாலுஞ்சாதனத்திலாசிரியருபதேசவனுஷ்டானத்தி லியாவிற்குஞ் சாட்சியாய்க்காண்கையினாலுஞ் சாத்தியத்திலியாவும் பரிபூரணமாய்விளங்குதலினாலும் மாயினுமத்தியகதமே கூறினாரென்க.

வினா - இங்ஙனங்கூறியமாயிற் ஜீவன்முத்தித் தன்மையைக் கூறாதுவிதேககைவல்லிய மாத்திரங்கூறிய தென்னையெனின்,

விடை - ஜீவன்முத்தியேவிதேகமுத்தியாதலினென்க.

வினா - அற்றேல்-அஃதிரண்டாகக்கூறுவதென்னையெனின்,

விடை - தக்தபடமென்று மிடத்திற்படத்திற்கு நாமரூப மிருப்பது போலத் தோற்றமாத்திரமே யன்றியஃதின்மைபோலஞானத்தினாற்றேகபாவநீங்கியு மிருப்பதுபோலத்தோற்ற மாத்திரமேயன்றி யஃதில்லாமையா லதன்றோற்றத்தைச்சீவன் முத்தியெனவும், அஃதுநீங்கின தேவிதேகமுத்தியெனவும், நானைவநாவென்றதுபோலக்கூறினாரென்க.

(இம்மூன்றுகவியினதுதாற்பரியம்.)

அதிதீவிரபக்குவவான்கள் விதேகமுத்தியையடையுஞ் சோபானமாயிங்ஙனமெனவுமிங்ஙனமஃதையடைந்தஸ்வானுபவவுல்லாசத்தையுமுணர்த்தியதாம். (௩௮௬)

(அவதாரிகை.)

இச்செய்யுளினிந்நூற் பெருமையையு மிஃதையடையத்தக்கவதிகாரியினியல்பையுமுணர்த்துகின்றது.

(கவி.)

வேதமுதலாகியநூலனைத்தினுஞ்சொற்பொருளை ..... *
விளங்கியிடக்கரதலாமலகமெனக்காட்டிப் ............ *
போதமயமாகியபேரானந்தத்தழுத்தும்.................. *
பொருவிகந்தவிந்நூலைமுத்திபெறற்குரிய.............. *
சாதனநான்கினையுமடைந்தெவரானுமென்றுந்... ... ...*
தடுப்பரியபிறவிநோய்தணிப்பதனுக்கெண்ணி..........*
யாதரவினருட்குரவன்றனைத்தேடியுருகு ... ............*
மன்புடையோர்தமைக்காணினளித்திடுகவுவந்தே......*

(இதனதுபதப்பொருள்.)

வேதமுதலாகிய - சுருதியாதியான - நூலனைத்தினும்-சாஸ்திரங்களனைத்தினுள்ளும் - சொற்பொருளை - சொல்லாநின்ற வர்த்தங்களை - கரதலாமலகமென - உள்ளங்கைநெல்லிக்கனிபோல - விளங்கியிட -விளங்கும்படி- காட்டி-காண்பித்து - போதமயமாகிய - சின்மாத்திரமாகிய - பேரானந்தத்து - பேரானந்தத்தில் - அழுத்தும் - மூழ்கச்செய்யும் - பொருவிகந்த - சமானமின்றிய - இந்நூலை-இந்தஞானசாஸ்திரத்தை - முத்திபெறற்கு- வீடடைதற்கு-உரிய- உரித்தாகிய - சாதனநான்கினையும் - சாதனசதுஷ்டயங்களையும்- அடைந்து- பெற்று - எவரானும்-யாவராலும்- என்றும்-எப்போதும் - தடுப்பரிய- தடுத்தற்கரிய - பிறவிநோய்-பவத்துன்பத்தை - தணிப்பதனுக்கு - நீங்குவதற்கு- எண்ணி-நினைத்து - ஆதரவின்- ஆசையினால் - அருட்குரவன்றனை- அ

ருளிறையை-தேடி-அவரெழுந்தருளியிருக்கின்றவிடத்தை த்தேடி-உருகும்-மனமுருருகின்ற-அன்புடையோர்தமை-அன்புடையோர்களை-காணின்-காண்கில்-உவந்து-சந்தோஷித்துடன்-அளித்திடுக-கொடுப்பாயாக —எ—று.

(இதனுதாற்பரியம்.)

இவிரதரபக்குவமுள்ளசாதனசதுஷ்டய சம்பன்னனுகையவதிகாரிக்கே யிச்சுவானுபவநூற்பிறந்தமையி னவர்கட்கே யிந்நூலுரித்தென்பதையுணர்த்தியதாம். (௩அ௫)

வேதாந்தசூளாமணி.

மூலமுரையு முற்றுப்பெற்றது.

ஸ்ரீசற்குருவேதமா.

இஃது

புத்தகம்.

# செய்யுளகராதி.


| | பக்கம் |
|---|---|
| அகிலகாரண... ... | ௯௯ |
| அங்கிமக... ... ... | ௱௩௪ |
| அண்ணனிரு...... | ௱௫௧ |
| அதனது ... ... | ௨௬௨ |
| அத்திபா... .... ... | ௬௮ |
| அந்தவவி......... | ௱௬௯ |
| அப்பாரத்......... | ௱௨௬ |
| அப்பிரம............ | ௰௫ |
| அப்பெரும்... ... | ௱௩௧ |
| அப்பொரு... ... | ௱௪௯ |
| அருமறை... ... ... | ௰௮ |
| அருமையெனு | ௨௱௰௭ |
| அருவிரா... ... ... | ௯௬ |
| அவித்தை......... | ௱௨௭ |
| அவையுப...... .... | ௨௨௧ |
| அவ்வகிலங்...... | ௨௱௰௫ |
| அறியவுண... .. ... | ௪௨ |
| அறிவுடையோ ... | ௨௫௯ |
| அறைதலுறு ..... | ௱௯௪ |
| அறைந்தநகர் ... | ௨௬௬ |
| அனுபவித்தல் ... | ௱௬௪ |
| அனைபதொரு ... | ௱௰௮ |
| அனையவன் ... ... .. | ௪௰ |
| அன்றி............ | ௨௨௯ |
| அன்னமொடு ... ... | ௱௭௨ |
| ஆமுதலன........... | ௯௰ |
| ஆங்காரான்மா ... | ௱௫௮ |
| ஆதலிறல்... ... ... | ௭௫ |
| ஆத்தமுடன... ...... | ௨௬ |
| இகலிலா......... | ௨௱௧ |
| இக்காரண... ...... | ௱௩௨ |
| இசைப்பிலது ..... | ௱௮௩ |
| இச்சையுட..... ..... | ௨௮௧ |
| இந்திறத்தி ... ....... | ௱௩ |
| இந்திரபமிங் ... ..... | ௱௮௰ |
| இந்தவுட... .... | ௨௨௫ |
| இந்துவினை......... | ௱௰௪ |
| இப்பரிசு...... ... | ௨௮௨ |
| இருந்தவு...... ..... | ௱௭௩ |
| இருமகதத்......... | ௱௨௮ |
| இறைவனு......... | ௱௪௮ |
| இன்னிலனிற்......... | ௪௫ |
| ஈங்குமன .. .. .. | ௱௪௰ |
| ஈசனிருமித... ... ... | ௱௪௯ |
| ஈசனென்றிடு...... | ௱௰௧ |
| உடப்பினை... ... ... | ௨௮ |
| உன்னடிலை......... | ௨௪௩ |
| உரைத்தவிரன் ...... | ௰௬ |
| உரைத்தவைதா... ... | ௮௭ |
| உரைத்தவையுட்... | ௱௯௨ |
| உரைப்பரும்...... | ௱௩௰ |
| உலகநிலை .... .... | ௩௧ |
| உலகபூக் ....... | ௨௭௯ |
| உலகிறந்த ... ..... | ௨௯௰ |
| எல்லாவற்றும்... ... | ௨௫௬ |
| என்றுமெடவ் .. ... | ௨௯௧ |
| எனையவோ ..... | ௨௱௰௯ |
| ஒருமலர்க்கு... ... | ௨௱௬ |
| ஓங்காராதி......... | ௨௨௮ |
| ஓர்வடிவாகி... ....... | ௱௧ |
| கங்கையினில்... ... | ௱௯௭ |
| கடத்திலுக்கு... ... | ௨௨௩ |
| கடத்தொடு ... ... | ௨௱௰௨ |
| கடந்துநதி... ... | ௱௮௮ |
| கடமுதலா... ...... | ௪௩ |
| கடாதி...... ... | ௨௪௫ |

பக்கம்

குந்தரூதலா..... ... ௱௩௯
கருத்தனுமொ... ௱௮௫
காய்ந்துள........ ... ௯௩
குதிகளோர் .... ..... ௨௭௪
குறையகலு... ... ௨௩௯
கூடுமபிவை.... ௨௨௨
கொண்மக....... ௱௨௯
சங்கமறு ...... ௨௪௭
சங்கைநவ .... ... ௱௮௯
சச்சிதானந்த. ... ௨௪௬
சத்துவகுண .... ௱௩௰
சமைதமை.... ... ௨௪
சாதகர்களா....... ௯௪
சாற்றரியசிவ ... .. ௯௰
சாற்றரியசுபே ... ௨௪௰
சாற்றியகச்... ... ௰௩
சாற்றின்வயி ...... ௱௩௮
சித்திரப்பட........ ௯௮
சீர்கொண்ட.... ... ..... ௩
சிவசேதன.. ... ... ௱௨௧
சிவனென்றிடு... ... ௱௰
சிவஞானச........ ௭௬
சிவன்முத்தர்க் ...... ௨௭௧
சிவபரவிசாரணை... ௱௫௨
சுருதிசித்தமா .... ௱௪௪
சுருதியினுமேல...... ௬௪
சூசகனு ...... ௩௫
சூதகாதிக... ... ௨௱௰௮
சூத்திராங்கபிக .... ௯௭
செஞ்ஞானி ... .... ௨௬௩
செப்பரிய ... ... ௨௨௬
சொற்பன .... ௱௭௯
சொற்றவ ...... ௱௬௮
ஞானநிலை........ ௨௫௨

ஞானவொக் ......... ௨௭௨
தக்கும்தகான் ... ௨௩௮
தக்கமா... ... ... ௨௪௯
தடத்தினுயர் ..... ௨௬௯
தத்துவஞானத்திற் ௨௫௬
தத்துவஞானத்திரு ௨௮௪
தருக்கவனுமா ... ௨௨௭
தருணமாது .... ... ௨
தற்பதத்தினு..... ௱௯௫
தற்பதவாச்........ ௨௱
திருந்திய... ... ..... ௬௨
தீவிரமத்த........ ௱௫௪
தும்மலு ... ... ௱௩௭
துரியநிலை ... ... ௱௮௭
தூயதத்துவ..... ௨௱௯
தெரித்தகாரி...... ௱௬௩
தெரிவரிய.... .... ௨௭௫
நடுக்கமறு ... ... ௱௭௮
நானிலப்பல... ... ௩௮
நித்தியமான் ... ... ௨௩
நியமசத்தி ... ...... ௱௬
நிரவய ... ....... ௬௩
நின்றியந்த ...... ௱௩௬
நீங்கியவிகார ..... ௱௫
நீர்விழுந்தொ .... ௬௪
நீலகுணவிசே .... ௱௭௫
நெருப்பினை..... ௱௫௬
பகர்ந்தவுயிரு...... ௨௩௨
பகற்பொழு ..... ... ௪௪
பஞ்சபூதமு..... ... ௱௬௧
பத்தமவை .. ... ௨௩௫
பரமமாஞா... .. ௨௬௧
பற்றியவா ... .... ௱௫௫
பின்னமொழி ... ... ௱௰

| | பக்கம் |
|---|---|
| புகலுல்காபுத ... ... | ௫௪ |
| புத்தியிந்திரியங்... | ௩௬ |
| புலனிலகளு ... ... | ௱௨௪ |
| புன்னெறி ... ... | ௱௮௪ |
| பெருந்தால் ... | ௱௬௰ |
| பெற்றவுயர் ... | ௨௬௫ |
| பெற்றவொரு ... | ௯௧ |
| பொய்பபொருள் | ௱௪௬ |
| பொய்யாகி... ... | ௱௨௩ |
| போற்றிறை ... ... | ௱௬ |
| மடிவிடயா ... ... | ௨௩௩ |
| மண்ணுலகில் ... ... | ௨௮௩ |
| மதித்தன் ... ... ... | ௭௧ |
| மருவலுறு ... ... | ௨௪௧ |
| மறைப்பகலு ... | ௨௭௭ |
| மன்றசுழுத்தி ... | ௱௭௧ |
| மாதுமுதல் ... ... | ௭௯ |
| மாலையவரு ... ... | ௱௨௫ |
| மிகுமராய்... ... .. | ௱௯ |
| மித்தைதெயனு ... | ௨௫௧ |
| முத்திவிரு... ... ... | ௨௯௪ |
| முற்றலுறு ... ... | ௨௫௮ |
| மூன்னமொழி ... | ௱௯௮ |
| மூட்டொடு ... ... | ௨௧ |
| மெய்ந்துதிரி ... | ௱௬௩ |
| மைந்தர்முத ... | ௱௫௯ |

| | பக்கம் |
|---|---|
| வடிவொடு ... ... | ௱௰௨ |
| வந்தனை ... ... | ௨௭௮ |
| வந்தமய ... ... | ௨௬௮ |
| வந்துசிறு ... | ௨௫௩ |
| வாதரா ... ... ... | ௨௮௬ |
| வாய்த்த ... ... ... | ௨௰ |
| விடயங்க ... ... | ௨௬௭ |
| விடயமது ... ... ... | ௨௨ |
| விண்ணின்மலர் ... | ௱௨௰ |
| விரிஞ்சனே ... ... ... | ௱ |
| விரித்தபட ... ... | ௱௨௩ |
| விரிந்தவிழி ... ... | ௱௯௩ |
| விரியமுலக ... ... | ௮௰ |
| விருத்தமரு ... | ௱௯௯ |
| விருத்திபரி ... | ௱௪௫ |
| விளங்கு ... ... | ௱௬௬ |
| விளங்குறு ... ... | ௱௰௪ |
| வினையிரண் ... ... | ௱௯௫ |
| வெப்பினென் ... ... | ௱௮௨ |
| வெண்மை ... ... | ௱௩ |
| வெயிலினி ... ... ... | ௱௭௭ |
| வேண்டு ... ... ... | ௨௩௬ |
| வேதமுத ... ... | ௨௯௯ |
| வேதமொரு ... ... | ௭ |
| வேதவியா ... ... | ௨௮௮ |


செய்யுளகராதி - முற்றிற்று.

# சோதனைபத்திரிகை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௰௬ | ௨௪ | பன்னின்டு. | பன்னிரண்டு. |
| ௨௧ | ௰௬ | நூலசிடயர் | நூலாசிரியர் |
| ௩௧ | ௨௬ | திசழ | திகழ் |
| ௩௩ | ௬ | நிஷ்காம் | நிஷ்காம |
| ௫௧ | ௰௨ | மாயக் | மாய்க் |
| ௬௨ | ௰௮ | அணிவர | அணிமர |
| ௬௬ | ௰௬ | பிராபா | பிராதிபா |
| ௭௬ | ௭ | பாசிகம் | பாதிகம் |
| ௮௬ | ௩௧ | லாநத்சமும் | லாநதமும் |
| ௱௩ | ௰௨ | யெனவாம் | யனவாம் |
| ௱௰௫ | ௯ | காரிங்க | காரியங்க |
| ஞெ. | ௨௩ | சமாவ | சுபாவ |
| ௱௰௮ | ௩ | சு | சு |
| ௱௰௪ | ௫ | தநந்தியத் | தநந்தியத் |
| ௱௩௩ | ௩௨ | பரிசனங் | பரிசங் |
| ௱௫௰ | ௩௨ | ட்சாத்திர | ளசாத்திர |
| ௱௫௮ | ௩ | உணர்த்துகின் | உணர்த்தியதாம் |
| ௱௭௯ | ௨௯ | கவனிப் | கமனிப் |
| ௱௯௮ | ௩௰ | வயுசு | வயச |
| ௱௪௪ | ௧ | யில் | யினல் |
| ௨௱௰௮ | ௭ | சூதகாதி | சூதகாதி |
| ௨௱௫௮ | ௨௪ | செய்தலை | செயத்தை |
| ௨௱௪௪ | ௨௪ | நீங்குவ | நீக்குவ |
| ௩௱ | ௬ | திவிர | தீவிர |

௨௱-ம் - பக்கத்தில் - ௰௫-ம் - வரியில் - தாற்பரியமெ ன்றும் - ௨௱௧ - ம் - பக்கத்தில் - ௨௭-ம் - வரியில் பதசார மென்றும் - ஞெ பக்கத்தில் - ௨௭-ம் - வரியில் - தாற்பரிய மென்றுங்கொள்க.